இமைநாக 1997

ஏப்ரல் – ஜூன்

1997

# புதிய சுற்றுலா மையங்கள்

தமிழரசு

1-4-1997

உள்ளே...





படம் : திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.

## இந்த இதழில் ...


★ இண்டர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம் .......... 2

★ கல்யாண்ஜி கவிதைகள் ...... 3

★ தமிழகச் சுற்றுலாத் தலங்கள் - கே. இளங்கோ, இ.ஆ.ப. ...... 4

★ சோறு - விழி. ப. இதயவேந்தன் ..... 15

★ தமிழில் மருத்துவச் சீட்டு முதல்வரின் வாழ்த்துச் செய்தி 17

★ நல்ல திரைப்படம் - ஞான ராஜசேகரன் ...... 20

★ மாட்டுப்பற்று - கி. ராஜநாராயணன் .... 23

★ ஜென் கதைகள் ......... 25

★ எங்கள் ஊர் பிரச்சினை ... 30

★ உணவே மருந்து - மருந்தே உணவு - டாக்டர் சு. கோபாலகிருஷ்ணன் . 36

★ வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள்... 41

★ ஆசிரியர் மடல் .......... 48



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028
பங்குனித் திங்கள் : 19
மலர்: 27 இதழ்: 19
1.4.1997
விலை: ரூ.3

# இன்டர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம்

'இன்டர்நெட் தொழில்நுட்பத்தைக் கொண்டு, தமிழில் அனைத்துலக ரீதியில் மின் அஞ்சலிலும் (e-mail), World Wide Web-லும் செய்திப் பரிமாற்றம் நிகழ்வதை, 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம், தற்போது முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் இலக்கியப் பக்கம் அரங்கேறு வதற்கு ஆதரவு கொடுக்கிறது.

சிங்கப்பூரின் மாண்புமிகு அதிபர் திரு. ஓங் தெங் சியோங்-ஆங்கில, சீன, மலாய், தமிழ்க் கவிதைகள் இன்டர்நெட்டில் 1995 அக்டோபரில் அரங்கேற்றி (http://www.irdu.nus.sg/poem) இன்டர்நெட் தொழில்நுட்பத் தைத் தமிழில் தொடக்கிவைத்தார். அதன் மூலம் இன்டர்நெட்டில் இடம்பெறும் முதல் இந்திய மொழி என்ற தகுதியைத் தமிழ் பெற்றது.

தொடர்ந்து, சங்க இலக்கியம், தமிழ்க் கணினி ஆய்வு, தமிழ் கற்றல்- கற்பித்தல் தொடர்பான ஒரு பக்கத்தை 1996ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்நிறுவனம் அறிமுகம் செய்தது. PC, Mac, Unix ஆகிய மூன்று கணினிகளிலும் தமிழ்ச் செய்திப் புரிமாற்றம் நிகழ்வதை முதன்முதலில் சாத்தியமாக்கிய சிங்கப்பூரின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம் (Internet Research& Development Unit/National University of Singapore) ஒரு சிறந்த இலக்கியவாதியின் பக்கம் உருவாகத் துணை நிற்பதில் பெருமை கொள்கிறது.

அரசியல் கலப்பில்லாத இந்தப் பக்கத்தில் கலைஞர் மு. கருணாநிதியின் இலக்கியப் படைப்புகள் மட்டுமே இடம் பெறும். இந்தப் பக்கத்தை http://www.irdu.nus.sg/~kalaimk என்ற இன்டர்நெட் முகவரியில் காணலாம்.

கலைஞரின் வாழ்க்கை வரலாறு, இலக்கியம சார்ந்த அவருடைய விமர்சனப் படைப்புகள், நான்கு வாரங்களுக்கு ஒரு முறை கலைஞர் எழுதும் புதிய படைப்பு, அவருடைய படைப்புகள் பற்றிய கருத்துரைகள் போன்ற பல்வேறு கூறுகள் இவ்விலக்கியப் பக்கத்தை அலங்கரிக்கும்.

தொடக்கமாக அவர் எழுதிய 'குறளோவிய'த்தின் முதல் அதிகாரம், சங்கத் தமிழின் முதல் அதிகாரம், குறளோவியத்திற்குக் கலைஞர் எழுதிய முன்னுரை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இனி ஒவ்வொரு வாரமும் இந்தப் பக்கத்தில் கலைஞரின் இலக்கிய- விமாசனப் படைப்புகள் இடம் பெறும்.

இன்டர்நெட்டில் தமிழ்த் தொழில்நுட்பத்தை 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய திரு. நா.கோவிந்தசாமி, இப்பக்கத்தின் பொறுப்பாளராக உள்ளார். 'குமுதம்' வார இதழின் பொறுப்பாசிரியர்- எழுத்தாளர் மாலன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

-தேசியப் பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்.







நீ வருவதற்காகக்
காத்திருந்த நேரத்தில் தான்
பளிங்குபோல்
அசையாதிருந்த தெப்பக்குளம்
பார்க்க ஆரம்பித்தேன்.
தலைகீழாய் வரைந்துகொண்ட
பிம்பங்களுடன்
தண்ணீர் என் பார்வையை
வாங்கிக்கொண்டது முற்றிலும்!
உன்னை எதிர்பார்ப்பதையே
மறந்துவிட்ட ஒரு கனத்தில்
உன்னுடைய கைக் கல்பட்டு
உடைந்தது
கண்ணாடிக் குளம்;
நீ வந்திருக்க வேண்டாம்
இப்போது!

## கல்யாண்ஜி கவிதைகள்



எங்கோ சென்றுகொண்டிருக்கிற
பறவையைத்தான் நாம்
இங்கே பார்க்கிறோம்.
பேரியக்கத்தின் சிறுவிள்ளவாக
ஆறு நம் முன் ஓடி
அலையடிக்கிறது.
ஒரு சிறு கடிப்பை முன்வைத்தே
முழுத் தின்பண்டத்தின் மிருதுவையும்
நாம் ருசிக்க நேர்ந்துவிடுகிறது.
ஒருபோதும் நாம் பார்க்கமுடியாது
உருண்டையாக இந்த வாழ்வை
என்று உணர்கையில்
கையில் இருக்கிற ரொட்டித் துணுக்கில்
காணமுடிகிற நுரைப்புப் பள்ளங்களில்
நிம்பிவழிகின்றன,
ஆனந்தத்தின் திவலைகள்!



V211m N701A 11.98

அட்டைப்படக் கட்டுரை



**த**மிழ்நாடு - தமிழர்களின் தாயகம்.

தமிழ் - மிகப் பழமையான, மிக வளர்ச்சி பெற்ற இந்திய மூத்த மொழிகளுள் ஒன்று.

தனித்தன்மை வாய்ந்த இனப் பெருமை கொண்டதே இந்த மண். எனினும் இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்துநிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச் சோலையாக இம் மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்

தமிழ்நாடு - கோவில்கள் மலிந்த கலைக்கோட்டம், இங்கே ஆயிரக் கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தமிழ்நாட்டின் வடக்கே பல்லவர்களும், தெற்கிலும் தென்மேற்கிலும் பாண்டியர் சேரர்களும், கிழக்கே சோழர்களுமாகத் தனித் தனியே கோலோச்சினாலும் பெரும்பாலும் ஒப்புரவு கொண்டவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலாச்சாரம் ஏசுநாதர் பிறந்த முதல் சில நூற்றாண்டுகளிலேயே சீன நாட்டின் எல்லைவரை பரவியிருந்திருக்கிறது. அதற்குரிய அடையாளச் சின்னங்கள் கம்போடியா, வியட்நாம், மலேசியா முதலான கீழை நாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. கம்போடியாவிலும், வியட்நாமிலும் உள்ள தெருக்கள் வீதிகள் என்னும் தமிழ்ச் சொல்லினால் இன்றைக்கும் வழங்கப்படுகின்றன.

**சென்னை**

வானளாவும் கட்டிடங்கள், பரந்து நீண்ட கடற்கரைகள், பசுமை கொழிக்கும் பூங்காக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் தன்னகத்தே கொண்ட சென்னைமாநகர், தமிழகத்தின் தலைநகர்.

கோட்டைக்குள் உள்ள புனித மேரி மாதாகோவில் கி.பி.1680ல் கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதுதான் இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பெற்ற பிராட்டஸ்டண்ட் கிறித்துவ ஆலயமும், ஆசியாவிலேயே மிகப் பழமையானதும் ஆகும்.

நான்காம் அட்டைப்பட உதவி
**திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.,**





**கோட்டை அருங்காட்சியகம்**

கோட்டைக்குள் இருக்கும் அருங்காட்சியகம் வரலாற்றுக் கருவூலமாகும். தென்னாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கும் கண்கவர் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. படைக்கலன்கள், உடை வகைகள், நாணயங்கள் பதக்கங்கள், பீங்கான் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.

**அண்ணாசதுக்கம், எம்.ஜி.ஆர் சமாதி**

கோடிக்கணக்கான மக்களின் இதயக் கோவிலிலே குடியேறி தங்களது மூத்த அண்ணனாகவே இலட்சோப லட்சம் மக்களால் அண்ணா என்று பாசம் பொங்க அழைக்கப் பெற்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஒப்புவமை இல்லாத மக்கள் செல்வாக்குடன் ஒளி வீசிய அவர், தலைசிறந்த அரசியல் சிற்பி, முன்னாள் தமிழக முதல்வர்.

மெரினா கடற்கரையின் வடகோடியில் அண்ணா அடக்க மேடை அமைந்துள்ளது. இதன் நுழைவாயிலில் யானைத் தந்தங்கள் போன்று கவர்ச்சியான முறையில் இருபுறமும் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. அடக்க மேடையை ஒட்டியே நெடிதுயர்ந்து நிற்கும் நினைவுத் தூண் நம் நெஞ்சம் கவரத்தக்கது.

அண்ணாவின் எண்ணக் கருவூலங்களைப் போன்றே அணையா விளக்கொன்று இங்கே எரிந்து கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் அழகுமிகு பூங்கா அமைதி தவழுவதாக அமைந்துள்ளது.

அதன் அருகிலேயே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் சமாதி அழகுற நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சமாதிக்கும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வந்துபோவதை நாம் காணலாம்.

மெரினா கடற்கரையின் தென்கோடியில் சாந்தோம் கதீட்ரல் பாசிலிகா என்னும் கிறித்துவத் தேவாலயம் அமைந்துள்ளது. 1896ல் கட்டி முடிக்கப்பெற்றுப் புனிதம் செய்யப்பட்ட இக்கோவில் ஜெர்மானிய கோத்திக் கட்டிடக் கலையெழிலைக் கொண்டதாகும்.

**செயிண்ட் தாமஸ் மவுண்ட்**

புனித தோமையர் மலை என்பது அந்த யேசுபக்தர் வாழ்ந்ததும் மறைந்த இடமுமாகும். பழம் பெருமைமிக்க இக்குன்றின் உச்சியில் உள்ள மாதா கோவிலில் சிலுவை ஒன்று இருக்கிறது.

**காந்தி, இராஜாஜி, காமராசர் நினைவாலயங்கள்**

கிண்டியில் ஆளுநரின் மாளிகையான ராஜபவனத்தை அடுத்து மாபெரும் தலைவர்கள் மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, காமராசர் மூவருக்கும் நினைவகங்கள் எழுப்பப்பெற்று உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் முன்னணித் தளபதிகள் இவர்கள்; நாட்டுக்கு நல்வழி காட்டிய சிற்பிகள்.

**- கே. இளங்கோ, இ.ஆ.ப.,**



**கபாலீசுவரர் கோவில்**

மயிலார்ப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோவில் கம்பீரமானது; காட்சிக்கு இனியது. புராணக் கதையின்படி, சிவபெருமானின்



வரம் வேண்டி முக்தி பெறுவதற்காகப் பார்வதிதேவி மயிலாக உருவெடுத்து இங்கேதான் அவரை வழிபட்டாராம்.

**பார்த்தசாரதி கோவில்**

திருவல்லிக்கேணியில் எழுந்துள்ள வைணவக் கோவில் மிகவும் அழகானது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஒருவரால் கட்டப்பெற்றது. விசயநகர அரசர்களாலும் ஏனைய வேந்தர்களாலும் பலமுறை புதுப்பிக்கப்பெற்றது.

**தேசியக் கலைக்கூடம்**

எழும்பூர் பாந்தியன் சாலையில், எழில் கொஞ்சும் எடுப்பான பெரும் மாளிகையின் தேசியக் கலைக்கூடம் அமைந்துள்ளது.

இக்கட்டிடம் இந்துஅராபியக் கட்டிடக் கலையெழிலுக்கு நேர்த்தியான ஒரு சாட்சியாக நெஞ்சைக் கவர்கிறது. 'மாடர்ன் ஆர்ட்' எனப்படும் நவீன ஓவியமும், பழைய வண்ண ஓவியங்களும் கொண்ட கலைச் சோலையாக இது காட்சி தருகிறது. இராசபுதன, முகலாய தென்னிந்திய வகைகளைச் சார்ந்த சில அருமையான வண்ண ஓவியங்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

**அரசு அருங்காட்சியகம்**

தேசியக் கலைக்கூடத்தை ஒட்டியே அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பெற்றது இது. இங்குள்ள அருங்காட்சிப் பொருள்களில் அமராவதியில் உள்ள புத்த தூபிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திய அருமையான சிற்பப் பொருட்கள் அடங்கிய பிரிவு குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர, சிறுவர் அருங்காட்சியகமும் இப்போது தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

**வள்ளுவர் கோட்டம்**

மனித குலச் சிந்தனைகளின் மலையுச்சியான தமிழ்மறையாம் திருக்குறளை, உலகுக்கு அளித்த செந்நாப்புலவர் திருவள்ளுவரின் நினைவாக எழுப்பப்பட்ட கலைச் சின்னமே வள்ளுவர் கோட்டம். சென்னை நுங்கம்பாக்கத்தில் எழில் கொஞ்ச இது எழுந்துள்ளது.

இதன் ஒரு பிரிவு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள தேர்ப்பகுதி, இன்னொன்று பரந்த கலைக்கூடம். தேர்ப்பகுதி, பாதி கருங்கல்லாலும், மீதி கான்கிரிட்டாலும் கட்டப்பட்டது. திருவாரூர் தேரின் வார்ப்படம் போல் இது சிற்பச் சித்திரங்களுடன் அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 106 அடி (29 மீட்டர்) கலை அரங்கம் நீண்ட இரும்பு உத்திரங்களைக் கொண்டு கட்டப்பட்டது. 220 அடி (64 மீட்டர்) நீளமும் 100 அடி (30 மீட்டர்) அகலமும் கொண்ட இந்தப் பரந்த அரங்கில் ஒரு தூண் கூட இடையில் இல்லை.

ஒரே நேரத்தில் 4000 பேர்





உட்கார வசதியுள்ள இந்த வள்ளுவர் கோட்டம் ஆசியாக் கண்டத்திலேயே மிகமிகப் பெரிய கலை அரங்கமாகக் கருதப்படுகிறது. தொன்று தொட்ட கலைத்திறன் வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் இக்காலத்திய மிக நவீன பொறியியல் நுட்பங்களும் கலந்து கனிந்த கலைக் கோவிலே வள்ளுவர் கோட்டம்.



**கலாச்சேத்திரம்**

சென்னையின் தென்பகுதியான திருவான்மியூருக்கு அருகில் கிராமிய சூழ்நிலையில் அமைந்துள்ளது கலாச்சேத்திரம். தென்னிந்திய நாட்டிய இசைக் கலைகளுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் மாபெரும் பணியைக் கடந்த முப்பது ஆண்டுகளாகப் புரிந்துவரும் உலகப் புகழ்பெற்ற கலை நிறுவனம் இது.

**மெரினா கடற்கரை**

உலகிலேயே மிக நீண்ட கடற்கரைகளில் இது இரண்டாவது. ஏறத்தாழ 15 கிலோமீட்டர் நீளமுள்ள வண்ணப் பூங்காக்கள் அமைந்த வெண்மணற் பரப்பில் அமர்ந்து, வீசிடும் தென்றலில் திளைத்து சென்னை வாழ் மக்கள் ஆசையோடு பொழுது போக்கி மகிழும் அருமையான திறந்தவெளி மெரினா.

**காஞ்சிபுரம்**

இந்தியாவின் ஏழுபுனித நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. பன்னெடுங்காலமாகக் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் தலை சிறந்த பீடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்து மதத்தோடு சமண சமயமும் பவுத்த நெறியும் இங்கே செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன. ஆதி சங்கரர் காமகோடிபீடம் என்னும் சமய அமைப்பை இங்கே நிறுவியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த கட்டிடக்கலை யெழிலுக்குக் கட்டியம் கூறும் கம்பீரமான கோவில்கள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் கோவில், ஏகாம்பரேசுவரர் கோவில், வரதராஜர் கோவில், கைலாசநாதர் கோவில், காமாட்சியம்மன் கோவில், சக்தீஸ்வரர் கோவில் முதலானவை தென்னிந்தியக் கோவில் சிற்பக்கலை வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி மாணவர்க்கு அருமையான வாய்ப்புக்களை வழங்கக் கூடிய பாடப் பநுவல்களாகும். நேர்த்திமிகு பட்டுப் புடவைகளுக்கு உலகப் புகழ் பெற்ற காஞ்சிபுரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஆயிரக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் தங்கள் தறிகளில் வண்ணக்கோல எழில். கொஞ்சும் பட்டுத் துணி நெய்து வாழ்கிறார்கள்.

**ஏலகிரி மலை**

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தனித்து நிற்கும் கவர்ச்சிமிக்க சுற்றுலாக் குன்று. உடல் நலத்துக்கு உகந்த பருவ நிலை, பசுமை கொஞ்சும் இயற்கையெழில், முருகன் கோவில் இந்த இடத்தில் காணக்கூடிய காட்சிகள். இதன் உயரம் சுமார் 1000 மீட்டர்கள்.

**திருவண்ணாமலை**

புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் வடிவமாக சிவன் இங்கே வழிபாடு செய்யப்படுகிறார்.

இரமண முனிவர் ஆசிரமம் இங்கே உள்ளது; இந்தியாவிலிருந்து மட்டுமன்றி உலகம் முழுவதிலுமிருந்தும் பக்தர்களையும், பார்வையாளர்களையும் இது ஈர்க்கிறது.

**செஞ்சிக்கோட்டை**

வரலாற்றுப் பெருமையும் கலையெழிலும் படைத்த செஞ்சிக்கோட்டை நம் நெஞ்சைக் கவர்வதாகும். தேசிங்குராஜன் கொடி கட்டி ஆண்ட சரித்திரச் சிறப்புடையது இந்தக் கோட்டை.

**சிதம்பரம்**

பரதக் கலையின் முழு முதற்பொருளான நடராசர் ஆனந்த நடனமாடும் கோலத்தில் காட்சி தரும் இடம்தான் சிதம்பரம். சோழ மன்னன் குலோத்துங்கனால் பொன் ஓடு வேயப்பட்ட இந்தக் கோவிலில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனம் ஆருத்ராதரிசனம் ஆகியவை இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். சிதம்பரத்தில் 'நாட்டியாஞ்சலி' நாட்டியக் கலைவிழா பிப்ரவரி-மார்ச் மாதத்தில் நடைபெறும் குறிப்பிடத்தக்க நாட்டிய விழாவாகும்.

**பிச்சாவரம்**

சிதம்பரத்திலிருந்து 13 கி.மீ. தூரத்திலேயே பிச்சாவரம் இருக்கிறது. கிழக்குக் கடற்கரையில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு உப்பங்கழிகள் உள்ளடங்கி இருக்கும் இது, அடர்ந்த காடுகளைக் கொண்ட தீவுகளின் கூட்டமாகும். படகுப் பயணத்துக்கும் மீன் பிடிப்புக்கும், நீர் சருக்கு விளையாட்டுக்கும் இங்குள்ள அமைதியான கடல்நீர் ஏற்ற இடம்.



**பூம்புகார்**

சிலப்பதிகாரத்தின் பிறப்பிடமான பூம்புகார் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் இன்று சின்னஞ்சிறு கிராமமாகச் சிறுத்துக்கிடந்தாலும் ஒரு காலத்தில் சோழப் பேரரசர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கீழை நாடுகளோடும், கிரேக்கம், ரோமாபுரி ஆகிய மேலை நாடுகளோடும் அது வணிகத் தொடர்பு வைத்திருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பண்டைய பூம்புகார் சிறப்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இங்குப் புதிதாக எழுந்துள்ள கலைக்கூடம், ஒரு காலத்தில் பெருமையோடு திகழ்ந்த இத் துறைமுகப்பட்டினத்தின் வரலாற்றுச் சிறப்புகளை நினைவுறுத்தி சிலப்பதிகாரக் காட்சிகளை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துவதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.

**தஞ்சாவூர்**

நாற்புறமும் அகழிகள் சூழ்ந்த பெரிய அரண்மனைக்கோட்டையினுள் பிரகதீசுவரர் கோவில் உள்ளது. சிற்பக்கலையின் செழுமை மிகுந்த இப் பெரிய கோவில், பிற்காலச் சோழர்களில் பெரும்புகழ் பெற்ற மாமன்னன்





இராஜ இராஜ சோழனால் கட்டப்பெற்றது. மொத்தம் 66 மீட்டர்கள் உயரமுள்ள மிகப் பெரிய கோபுரம் கொண்ட இந்த ஆலயத்தின் மூலக்கருவறையின் மேலேயுள்ள விமானம் எடுப்பான ஒரு சிறப்பு அம்சம். இது அந்நாளையப் பொறியியல், கட்டிடக் கலையின் நுட்பமான அற்புதம்.

கோவில் வாசலைக் கடந்து சென்றால், உள்ளே நந்தியைக் காணலாம். நம் நாட்டில் ஒரே கல்லில் வடிக்கப்பெற்ற மிகப் பெரிய சிற்பங்களில் இந் நந்தியும் ஒன்று.

தஞ்சையில் சரபோஜி மன்னரால் உருவான சரசுவதி மகால் புகழ்மிக்க பழங்கால நூலகம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகளும் தற்கால நூல்களும் இருக்கின்றன. அவற்றில் சில எங்குமே காணக் கிடைக்காத அருமையானவை.

இங்குள்ள கலைக்கூடம் வெண்கலச்சிலைகளுக்கும் கருங்கல் சிற்பங்களுக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்னும் பெருமையோடு இசை, நடனம், மிக நேர்த்தியான கைவினைப்பொருள்கள் பஞ்சலோகச் சிலைகள், வெண்கலத் தாமிரக் கலைப்பொருள்கள், தஞ்சாவூர்த் தட்டுகள், நெட்டி வேலைகள் முதலானவற்றுக்குப் பெயர் பெற்றது.

தஞ்சாவூருக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாற்றில், ஆண்டுதோறும் சனவரித் திங்களில் நடைபெறும் தியாக பிரம்ம ஆராதனை விழா சிறப்பானதாகும்.



**வேளாங்கன்னி**

இங்குள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம் ஆரோக்கிய மாதா வுக்காகக் கட்டப்பட்டது. இக்கோவிலுக்கு நாடு முழுவதிலிருந்து எல்லா மதத்தினரும் நாள்தோறும் வருகிறார்கள்.

**நாகூர்**

புகழ்பெற்ற இஸ்லாமிய யாத்திரைத் தலம் இது. ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரிவிழா, திரளான மக்களை இங்கே ஈர்க்கிறது. இந்தப் புண்ணியத்தலத்துக்கு எல்லாச் சமயத்தவரும் வருகிறார்கள்.

**திருச்சிராப்பள்ளி**

காவிரிக் கரையில் அமைந்த பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி. இதன் வரலாற்றில் அற்புதமான அழிக்கமுடியாத அத்தியாயங்களைத் தீட்டியவர்கள் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள்.

**மலைக்கோட்டை**

திருச்சியில் கம்பீரமாகக் காணப்படும் எண்பத்து மூன்று மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டையின் உச்சிக்குச் செல்ல 431 படிகளை மலையிலேயே செதுக்கிச் செய்திருக்கிறார்கள். மலைக்கோட்டையின் உச்சியில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்குள்ள வேறு இரண்டு குகைக் கோவில்களில் ஆறாவது ஏழாவது நூற்றாண்டுச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

**திருவரங்கம்**

காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளின் நடுவே காட்சிக்கு இனிய தீவாகத் திகழ்கிறது திருவரங்கம். 13-14 நூற்றாண்டு அளவில் கட்டப்பட்ட இங்குள்ள அரங்கநாதர் கோவில் மிகவும் புகழ்பெற்றது. இங்கே ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் முதல் சனவரி இரண்டாம் வாரம் முடிய 21 நாட்களுக்கு வைகுந்த ஏகாதசி திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

**திருவானைக்காவல்**

ஜம்பு என்பது புனிதமான நாவல் மரத்தின் பெயர். அதன் அடியில் சிவலிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. அதனால் திருவானை க்காவலுக்கு ஜம்புகேசுவரம் என்றும் பெயர். ஒரு காலத்தில் இங்குள்ள சிவலிங்கத்தை யானை ஒன்று வழிபட்டதாகப் புராணக் கதையும் உண்டு.

**கல்லணை**

காவிரியின் குறுக்கே சோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தானால் இது எழுப்பப்பட்டுள்ளது.

அந்நாளையப் பொறியியல் கலை வளத்துக்கு இது இணையற்ற சான்றாகும்.

**சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரை**

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே கீழை நாடுகளின் ஏதன்ஸ் எனக் கிரேக்கத் தலைநகரோடு ஒப்பிடத்தக்க புகழ் கொண்ட பெருநகா மதுரை. மிடுக்காக எழுந்து நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பெயர் பெற்ற மாநகர் இது. வைகை நதிக்கரையில் மதுரை மாநகர் அழகுற அமைந்துள்ளது.

**மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்**

மதுரையின் மையத்தில் கவினுற அமைந்துள்ள இந்தக் கோவில் 263 மீட்டர் நீளமும் 247 மீட்டர் அகலமும் உள்ளது. இதன் நான்கு புறங்களிலும் உள்ள நான்கு உயர்ந்த கோபுரங்களிலும் வண்ணச் சித்திரச் சிற்பங்கள் கண்ணைப்பறிப்பனவாகும்.

இது ஓர் இரட்டைக் கோவில் ; ஒன்று தென்புறத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில் - இன்னொன்று சுந்தரேசுவரர் கோவில். இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கோவில் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது.

**கூடல் அழகர் கோவில்**

மதுரை மாநகரின் மேற்குப்புறத்தில்



அமைந்துள்ளது. இங்கு ஒன்றின் மேல் ஒன்றாக - உட்கார்ந்த நிலையிலும், நிற்கும் நிலையிலும், ஓய்வாகச் சாய்ந்த நிலையிலும் பொருத்தியுள்ள திருமாலின் தோற்றங்கள் கோவிலின் தனிச் சிறப்பாகும்.

**திருமலை நாயக்கர் அரண்மனை**

புகழ்பெற்ற திருமலை நாயக்க மன்னரால் 1636ல் இந்தோ அராபிய பாணியில் எழுப்பப் பெற்றுள்ள பிரமாண்டமான அரண்மனை இது. இங்கு ஒலி–ஒளிக்காட்சி சுற்றுலாத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது.

**திருப்பரங்குன்றம்**

சுப்பிரமணிய சுவாமிக்கும் தெய்வயானைக்கும் இங்குத் திருமணம் நிகழ்ந்ததாகப் புராணக் கதையொன்று வழங்கி வருகிறது.

**திருச்செந்தூர்**

நீலத்திரைக்கடல் ஓரத்திலே அமைந்துள்ள புகழ்மிக்க இங்குள்ள அருள்மிகு முருகக் கடவுளின் புண்ணியத்தலம் அறுபடை வீடுகளில் ஒன்று.

**கோயம்புத்தூர்**

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்பெறும் கோயம்புத்தூரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் - கணக்கிலடங்கா நெசவாலைகளுக்கும், வேளாண்மை மற்றும் நெசவுத் தொழில்களுக்குரிய ஆராய்ச்சிகளுக்கும் கேந்திரப் பகுதிகளாகும். பொறியியல் கருவிகள், நெசவாலைக் கருவிகள் உற்பத்திக்கும் இது முன்னணியில் நிற்கிறது. அருகில் பேரூரில் உள்ள சிவன் கோவிலும் மருதமலையில் உள்ள முருகன் திருக்கோவிலும் கண்டுகளிக்கத்தக்கவை. இம் மாவட்டத்திலுள்ள பவானி அணைக்கட்டு பார்க்கத்தக்க ஓர் அழகிய சுற்றுலா இடம் ஆகும்.

**காட்டு வளம் காண வாரீர்**

தமிழ்நாட்டில் எண்ணற்ற வெப்பமண்டலக் குறுங்காடுகளும் பெரும்புதர்களும் உள்ளன. அவற்றில் வகைவகையான தாவர இனங்களையும், விலங்கினங்களையும் காணலாம்.





**மான்கள் பூங்கா, கிண்டி**

புதர்கள் மண்டிய பசுமை கொஞ்சும் பூங்காவாகும் இது. சென்னை நகர எல்லைக்குள் தெற்கு வெப்ப மண்டலப் பகுதிக்குள் அமைந்துள்ள இதில், முப்பதுக்கும் மேற்பட்ட மரவகைகள் உள்ளன. விரைந்து அழிந்துவரும் இந்தியக் கருப்பு நிறக்கலைமான் இனத்தைச் சார்ந்த கணக்கற்ற மான்களுக்கு இங்கே காப்பு வெளி அமைக்கப்பட்டுள்ளது.

**பாம்புப் பண்ணை, கிண்டி**

விதவிதமான பாம்புகளையெல்லாம் இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

**முதலைப் பண்ணை**

சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில், மாமல்லபுரம் செல்லும் சாலையில், கோவளத்தை அடுத்து இந்த முதலைப் பண்ணையைக் காணலாம். மாநில அரசின் துணையோடும், உலகக் காட்டு விலங்கு நிதி உதவியோடும் இது இயற்கைச் சூழலில் நிறுவப்பட்டுள்ளது.

**வேடந்தாங்கல்**

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர்ப் பறவைப் புகலிடங்களில் வேடந்தாங்கலும் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஏரியில் நெடிய கால்களைக் கொண்ட நாரைகளின் கூட்டத்தைக் காண்பது தென்னிந்தியாவில் வேறு எங்குமே இல்லாத வியக்கத்தக்க காட்சியாகும். அக்டோபர் முதல் மார்ச்சு வரையிலான ஆறு மாதங்களில் பருவ நிலைக்கேற்ப எண்ணற்ற நீர்க்கோழிகள் அங்கே நீந்தித் திளைக்கின்றன. ஆண்டுதோறும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பறவைகள் வரை இங்கே வருகின்றன எனக்



கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

**முதுமலை**

தமிழகத்திலேயே மிகப் பெரிய வனவிலங்குப் புகலிடங்களில் ஒன்றான முதுமலைக்காடு, நீலகிரி மலையில் உள்ளது. உதகமண்டலத்திலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இது இருக்கிறது. இங்கே ஒரே சமயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட புள்ளிமான்கள் கூட்டமும், ஏறத்தாழ 20–30 இந்தியக் காட்டெருமைகள் கூட்டமாகச் செல்வதும் காண்பதற்கரிய காட்சியாகும்.

புலிகள், சிறுத்தைகள், குள்ளநரிகள், கழுதைப்புலிகள், புனுகுப்பூனைகள் முதலானவற்றுக்கும் இது வசதியான உறைவிடம். சாம்பர் என்னும் மான் வகைகள், நான்கு கொம்புகள் உடைய கருப்பு மான்கள், மருண்டோடும் புள்ளி மான்கள், மிகப் பெரிய அணில்கள், குலைக்கும் மான்கள், நீலகிரி ஐபெக்ஸ் எனப்படும் மலை ஆடுகள் அடர்ந்த குரங்குகள் இப்படி விந்தையான விலங்குக் கூட்டத்தையும் இங்கே நாம் காணலாம்.

**ஆனைமலை**

கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைக்காடு வகைவகையான தாவரச் செடி, கொடி, மரங்களுக்குப் பெயர் பெற்ற இடம். காட்டு எருமைகள், யானைகள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப் பன்றிகள், மான்கள், காட்டு நாய்கள், முள்ளம் பன்றிகள், கருமுயல்கள், பறக்கும் அணில்கள், குள்ளநரிகள், புனுகுப் பூனைகள் முதலான கணக்கில் அடங்காத விலங்கினங்களையெல்லாம் இங்கே காணலாம்.

**ஓய்விற்குகந்த குறிஞ்சி நகரங்கள்**

**உதகமண்டலம்**

இயற்கை எழிலின் இன்பமெல்லாம் ஊட்டுவதாலோ என்னவோ ஊட்டி என்று சிறப்பாக



அழைக்கப்படும் உதகமண்டலம் மலைத் தலங்கள் அத்தனைக்கும் பேரரசியாக விளங்குகிறது. இங்குள்ள 2,633 மீட்டர்கள் உயரம் கொண்ட 'தொட்டபெட்டா' மலையேறிகளுக்கு உவகைக் கிளர்ச்சியூட்டும் அருமையான உல்லாசத் தலம். எழில் மலர்கள் கொஞ்சும் தாவரத் தோட்டங்கள், படகுச் சவாரிக்கேற்ற உல்லாச ஏரி, வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பசுமை கொழிக்கும் தேயிலைத் தோட்டங்கள் இவையெல்லாம் - இந்தியாவில் என்றுமே பசுமை எழில் குன்றாத மலைத் தலங்களில் ஒன்றாக உதகமண்டலத்தை ஒளிவீசச் செய்கின்றன.

இந்நகரை அடுத்து இன்னும் இரண்டு சிறிய மலைத்தலங்கள் உள்ளன. ஒன்று குன்னூர், இன்னொன்று கோத்தகிரி. சிம்ஸ் பூங்கா, லேம்ஸ் பாறை, கேனிங் சீமாட்டி மேடை, டால்பின்ஸ்மூக்கு, ராலையா அணை, லாஸ் அருவி இவையெல்லாம் குன்னூரின் அழகுக் கவர்ச்சிக்கு மெருகு சேர்ப்பவை.

கோத்தகிரியில் கொடநாடு காட்சி முனை, செயின்ட் கேதரின் அருவி, அரங்கசாமி கல்தூண் மற்றும் கற்பாறை ஆகியவை காணத் தகுந்த இடங்கள். பொதுவாக, நீலகிரி மலைத் தொடர் காபி, தேயிலை, உருளைக் கிழங்கு தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இங்கே தோதர்கள், கோதர்கள், குரும்பர்கள், படகர்கள், பனியாக்கள் ஆகிய பழங்குடி மக்கள் தொன்மைச் சிறப்புள்ள குடும்பத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

**கொடைக்கானல்**

மயக்கும் அழகு கொஞ்சும் இந்த மலைத்தலம், கடல் மட்டத்திலிருந்து 2,133 மீட்டர் உயரத்தில் உள்ளது. பிணியகற்றும் பெருமருந்தாகப் பருவ நிலையும் பொருந்தியுள்ள (கோடையில் உச்ச வெப்பம் 19.8 டிகிரி சென்டிகிரேடு குறைந்த வெப்பம் 11.3 சென்டிகிரேடு) இந்த மிடுக்கான மலை நகரில் பகற்பொழுதில் அதிக நேரம் கதிரவனின் ஒளிக்கதிர்கள் பொன்முலாம் பூசுகின்றன. படகு விளையாட்டுப் பந்தயக்காரர்கள் சிந்தை மகிழும் வண்ணம், அணி அணியாகப் படகுகள் பாயும் அழகான ஏரியும் நட்சத்திர வடிவில் காட்சி தருகிறது. பிரியன்ட் பூங்கா, பாறைத் தூண்கள், பெருமாள்குன்று, வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச் சோலை அருவி போன்றவையும், செண்பகனூர் புனித இருதயக் கல்லூரியில் உள்ள தாவர மற்றும் விலங்குப் பொருட்காட்சியும் கொடைக்கானலை நோக்கி நம் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச் செல்வனவாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர்கள் இவையெல்லாம் சேர்ந்து கொடைக்கானலை இயற்கை அன்னையின் எழில் கூடமாகவே மாற்றி விட்டிருக்கின்றன.

**ஏர்க்காடு**

அமைதி தவழும் ஓய்வுக்கு உகந்த உல்லாச மலைத்தலம் ஏர்க்காடு.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத் தொடரில் பசுமையும், குளிர்ச்சியும் கொண்டு இது அமைந்துள்ளது.

**மனங்கவர் கடற்கரைகள் கடலோர ஓய்விடங்கள்**

**கோவளம்**

மாமல்லபுரம் செல்லும் வழியில் ஓய்வுக்கு உகந்த ஊர் இது. அழகிய கடற்கரை ஓட்டல் ஒன்று இங்கே உருவெடுத்துள்ளது.

**மாமல்லபுரம்**

தொன்மைச் சிறப்புமிக்க இந்தக் கடற்கரைப் பட்டினம் சென்னைக்குத் தெற்கே 60 கி.மீ. தொலைவிலுள்ளது. கி.பி.600 முதல் 750 வரை தழைத்துச் செழித்த பல்லவர் காலத்து





உளிகள் எவ்வாறெல்லாம் கற்களுக்கு உயிரூட்டிச் சிரிக்கும் சிற்பங்களைச் செதுக்கியுள்ளன என்பதை இங்குள்ள பாறைக் கோவில்கள் பறைசாற்றுகின்றன. மாமல்லபுரம் இன்று கடற்கரை ஓய்விடமாகவும், புகழ்மிக்க சுற்றுலாத் தலமாகவும் பெயர் பெற்று விளங்குகிறது.

**குடவரைக் கோவில்கள்**

மாமல்லபுரத்தில் உள்ள ஒன்பது குடவரைக் கோவில்களில், கிருஷ்ண மண்டபம் காட்சி எழிலுக்குப் பெயர் பெற்றது ஆகும். மகிஷாசுரமர்த்தினிக் குகையின் ஒருபுறத்தில் மகாவிஷ்ணு கம்பீரமான கோலத்துடன் (அனந்த சயனமாகப்) பள்ளி கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மறுபுறத்தில் எருதுத் தலையுள்ள அசுரர்களாடு காளிதேவி போராடுவதைக் காணலாம்.

**கடற்கரைக் கோவில்**

கடல், புயல், வெயில், காலச்சுழல் இவற்றின் தாக்குதல்களுக்கெல்லாம் தப்பித் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்தத் தொன்மையான கற்கோவில்.

**அர்ச்சுனன் தபசு சிற்பப் பாறை**

உலகிலேயே மிக நீளமாக மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்பாறைக் கலைப் பெட்டகம் இது. திமிங்கிலத்தின் முதுகு வடிவில் அமைந்த பாறையில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்கள், இடையிலே பிளவு கொண்டதாகக் கடலை நோக்கி நிற்கிறது.



**ஐந்து ரதங்கள்**

மாமல்லபுரத்தில் குகைக் கோவில்களுக்குத் தெற்கே இந்த ஐந்து இரதங்கள் அமைந்துள்ளன. இவை ஐந்தும் ஒரே பறையில் செதுக்கப்பட்ட சிறப்புக் கொண்டவை. இவை பஞ்ச பாண்டவர் இரதங்கள் என வழங்கப்படுகின்றன.

**இராமேசுவரம்**

இந்தியாவின் மிகப் புனிதமான மிகப் பெரிய யாத்திரைத் தலங்களில் இராமேசுவரம் ஒன்று. இது இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோவிலைக் கொண்டது. இக்கோவிலில் வேறெங்கும் காண முடியாத வியப்புக்குரிய மிக நீளமான உள்மண்டபப் பிரகாரம் உள்ளது.

**கன்னியாகுமரி**

இந்தியாவின் தென்கோடி முனையில் கன்னியாகுமரி இருக்கிறது. முக்கடல் முத்தமிட்டுத் தாலாட்டும் கன்னியாகுமரிக்குள்ள மாபெரும் மாட்சி, அங்கு நாம் காணும் கதிரவன் கடலில் மறையும் காட்சியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முழுநிலவு நாளில் சூரியனின் மறைவும் நிலவின் உதயமும் ஒரே நேரத்தில் நிகழும் அற்புதமான காட்சியைக் காணக்கூடிய ஒரே இடம் கன்னியாகுமரிதான். பனை ஓலைகளால் செய்யப்படும் பொருட்களுக்கும், சங்கு மாலைகளுக்கும் இப்பகுதி பெயர்பெற்றது ஆகும்.

**கன்னியாகுமரி அம்மன்**

கன்னித் தெய்வமான கன்னியாகுமரிக்கு இங்கே அழகிய ஆலயம் ஒன்று உள்ளது. பெரும்பாலோரால் இந்தியாவுக்கே விழிப்பு மிக்க காவல் தெய்வமாகக் கருதப்படுகிறாள் குமரி அன்னை.

**காந்தி நினைவு மண்டபம்**

இந்தியாவின் தந்தை காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னால், எங்கே பொதுமக்களின்

பார்வைக்காக வைக்கப்பட்டிருந்ததோ, அங்கே-அதே இடத்தில் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

**விவேகானந்தர் நினைவுப் பாறை**

கன்னியாகுமரி கோவிலுக்குத் தென்கிழக்காக, கடலில் இரு பாறைகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின்மீது அமர்ந்து, இந்து சமயத்தின் சங்கநாதமாக முழங்கி வந்த விவேகானந்தர், சில நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். 1970-ல் அவரது நினைவாக ஒரு மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ளது. இந்தியாவின் கட்டடக் கலை எழில்கள் அத்தனையின் முழுமையான கலவையாக இது ஒளிர்கிறது.

**இசை பாடும் எழில் அருவிகள்**

**குற்றாலம்**

தீராத நோயெல்லாம் தீர்த்துவைக்கும் மூலிகைகளின் தாயகமாக விளங்கும் குற்றால மலை அருவி உடலுக்கு நலம் தருகிறது. வெள்ளியே உருகி விழுத்தாற்போல் அங்கு விழும் நீர் வீழ்ச்சியில் நீராடுவதே பேரின்பம். ஜூன் முதல் செப்டம்பர் வரை இங்கே பக்குவமான பருவநிலை ஆகும்.

**ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி**

பாய்ந்து விழும் நீர்வீழ்ச்சியால் மேவி எழும் நீர்த்திவலைகள் புகைப்படலம் போன்ற எழில் தோற்றம் தருகின்றன. அதனாலேயே 'ஒகேனக்கல்' என்ற பெயர் இதற்கு வந்துள்ளது. விரைந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அடர்ந்து செறிந்த மரக்காடுகள், பசுமை கொழிக்கும் இயற்கை எழில்கள் ஆகியவற்றின் அழகுச் சோலையான ஒகேனக்கல் விடுமுறையைக் கழிக்க ஏற்ற இடம் இது.



**காண்போர் வியக்கும் கைவினைப் பொருட்கள்**

கலை நுட்பம் வாய்ந்த கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் தனித்தன்மையுடனும், சிறப்பு அம்சங்களுடனும் புத்தம்புது வகைகளில் உருவாகும் தமிழ்நாட்டுக் கைவினைப் பொருட்கள் உலகம் முழுவதும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. தறியிலே நெய்யப்படும் புடவையும் சரி, சக்கரத்தில் வனையப்படும் மண் பானையும் சரி; கலைமுத்திரை பதிந்த கவினழகுச் சின்னங்களாகவே உருவாகின்றன. நெடுங்காலமாகவே தமிழ்நாட்டில் கோவில்கள் சமய, சமுதாய அமைப்பின் மையமாக விளங்கி வந்திருக்கின்றன. வண்ணத் துணிகள், மெல்லிய நெட்டி மாலைகள், நேர்த்திமிக்க உலோகச் சிலைகள் - ஒவ்வொன்றும் கலை எழில்மிக்க கைவினைப் பொருட்களாம். சிவன் - பார்வதி வெண்கல விக்கிரகங்கள், நடராசர் சிலை, திருமால், இலட்சுமி சிலைகள் ஆகியவை நுட்பம் செறிந்த கைவினைத் தொழிலுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கலைஞர்களின் அருமையான அழகுப் படைப்புகளாகும். பனை ஓலைகள், கோரைப் புற்கள், போன்றவற்றால் செய்யப்படும் விளக்குக் குல்லாய்கள், பூக்கூடைகள், கைப்பைகள் முதலான பயன்படு பின்னல் பொருட்களை அழகுறப் படைப்பதிலும் தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை முதலான இடங்களில் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் எழில் வடிவங்களில், பட்டிலும் பஞ்சிலும் பாங்காக நெய்யப்படும் வண்ணப் புடவைகள் கண்ணைப் பறிப்பவையாகும்.

இவ்வாறு இதயம் கவரும் சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாட்டில் இவைமட்டுமல்ல; இன்னும் பல உண்டு; இவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சில!

★★★





# சோறு

**விழி. பா. இதயவேந்தன்**

அம்மா சின்ன வயதில் எங்களை எப்படியெல்லாம் கவனித்தார்கள் என்று நினைத்தால் இன்னமும் அதிர்ச்சியாய்த்தான் இருக்கிறது. ஏழ்மை வாழ்விலும் ஒரு முன்னேற்றம். கேட்கும் பொருளையோ தின்பண்டங்களையோ தவறாமல் வேலையை விட்டு வரும்போது வாங்கிவருவார்கள்.

அம்மாவின் வருகைக்காகவே நானும் தங்கையும் விசேஷமாய் காத்திருப்போம். வரும் சமயத்தை அறிந்து நின்றுகொண்டே தூரத்தில் கண்களால் துழாவுவோம். அம்மாவின் பொட்டு பூவில்லாத தோற்றமும், எண்ணெய் இல்லாத தலையும் மங்கிய நகராட்சிப் புடவையும், மற்றவர்களைக் காட்டிலும் தனித்துக் காட்டிக் கொடுக்கும். மடியில் கனத்து முடுக்காய் இருக்கிறதா எனத் துருவிப் பார்ப்போம்.

அப்படி இருந்தால் என்னைக் காட்டிலும் தங்கைக்கு அதிக மகிழ்ச்சி. பூமியிலிருந்து கைகளைத் தட்டிக் கொண்டு அம்மா கிட்ட நெருங்க நெருங்க எகிறித் தவிப்பாள். கண்களில் ஒருவித ஒளிமின்னல் கீற்றுக்களாய்ப் படரும்.

நோயும் படுக்கையுமாய்க் கிடந்த அப்பாவைக் குணப்படுத்த அம்மா எவ்வளவோ செலவு செய்தும் தீர்க்க முடியவில்லை. அக்கடாவென்று விட்டுவிட்டாள். தன் சக்திக்கு மீறி பெரிய பெரிய ஆஸ்பத்திரிக்கு என்று கூப்பிட்டுப் போக முடியவில்லை. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அம்மா பொட்டு வைத்து பூவைத்துப் பார்த்ததில்லை.

நகரில் கடைவீதியில் சினிமா கொட்டகையில், பஸ் நிலையத்தில், இரயில் நிலையத்தில் இப்படி எங்கும் பெண்கள் எப்படியெல்லாம் சீவி சிங்காரிச்சுப் போகிறார்கள். அம்மாவிற்கு வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாவிட்டாலும் சாதாரணமாய் எண்ணெய் தடவி கூடத் தலையை முடிந்துகொள்ள அக்கறையில்லாமல்போனது. அம்மாவாகவே அப்படியே வளைத்து சுருட்டிக்கொள்வாள். முடிகள் கறுத்தும் பழுத்தும் இருக்கும்.

எனக்கும் தங்கைக்கும் என்று எண்ணெய் வாங்கி வைத்திருப்பாள். தங்கை தடவிவிட்டாலும் மிரட்டி மறுப்பாள். அவளுக்கென்று சொந்த விருப்பங்கள் என்று எதையும் செய்து கொண்டதாய் நான் பார்த்தில்லை.

காலையில் அய்ந்து மணிக்கு எழுந்து ஓடுவாள். ஆறு மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு மேஸ்திரியிடம் வருகைப் பதிவேட்டில் [illegible] வைத்துவிட்டு வேலை செய்யும் தெருவிற்குப் போவாள். சின்னதும் பெரிதுமாய் இரண்டு வாளியில் தட்டு கரண்டியைப் போட்டுக்கொண்டு பீ வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவாள்.

மருதூர் பக்கம்தான் அவள் வேலை செய்யும் தெரு.

புடவையைத் தூக்கி இடுப்பில் சொருகிக் கொண்டு பீ வண்டியைத் தெருவில் நிறுத்திவிட்டு வீட்டுக்குத் தகுந்த மாதிரி வாளி கரண்டியுடன் கக்கூசுக்கு மலம் அள்ளப் போவாள். ஒன்றிரண்டு வீடாய் இருந்தால் சின்னவாளி; அய்ந்தாறு குடித்தனம் இருந்தால் பெரியவாளி. வீட்டுக்கு வீடு வாரி வந்து பீ வண்டியில் கொட்டுவாள். பனியோ, காற்றோ, மழையோ, வெயிலோ சிட்டாய்ப் பறப்பாள்.

மருதூர் பகுதியில் அம்மா வேலை செய்கிறாள் என்றுதான் பெயர். சமயத்தில் அவசர ஆத்திரத்திற்கு அம்மாவைத் தேடிப் பிடிக்க முடியாது.

ஒரு சமயம் அப்படித்தான் தங்கராசு மாமா செத்துப் போய்விட்டாரென்று வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிவந்தேன். அம்மா வேலை செய்யும் இடமெல்லாம் தேடினேன். இரண்டொரு தெருவில் தண்ணி அடித்துக்கொண்டிருந்த பொம்பளையிடம் விசாரித்தேன்.

216 439
JC
V21...N70F A
N98



“ஏங்க 'எங்க அம்மாவைப் பாத்தீங்களா?”

“யாருப்பா உங்கம்மா?”

“பாக்கியம்.”

“பாக்கியமா, எந்த பாக்கியம்?”

“அதாண்டி கக்கூஸ்காரி பாக்கியம்.”

பக்கத்தில் சில்வர் தவலையுடன் நின்றிருந்தவள் உசுப்பினாள். இவள் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ஏன் அப்படிப் பார்க்கிறாள் என்று எனக்குக் கேட்க வேண்டும் போலி ருந்தது. சட்டை கிழிந்திருந்தாலும் தைத்துத் துவைத்துப் போட்டிருந் தேன். தலையில் எண்ணெய் தேய்த்து அப்பா கற்றுக்கொடுத்த மாதிரி இடது பக்கம் வகிடெடுத்து வலது பக்கம் தூக்கி வாரியிருந்தேன்.

“கக்கூஸ்காரி மவனா நீ?”

'ஏன் பாக்கியம் மவனா நீ என்று கேட்கக்கூடாதுா? என் மனம் சஞ்சலப்பட்டது.

“வந்து எடுத்துட்டுப் போயிட்டா, அந்தத் தெருவுல போய்ப்பாரு”

நான் நகர்ந்தேன்.

“படிக்கிறயாடா?”

மரியாதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக ஆகிப் போனது. வந்தபோது 'யாருப்பா' என்றவள் போகும்போது 'டா' என்கிறாள். இது அம்மாவின் அடிமைச் சின்னம். அம்மாவி லிருந்து தலைமுறைக்கும் தொடரும். அப்டிதான் அவுங்க பேசுவாங்க. நான் சு[illegible]ரித்துக் கொண்டேன்.

“ம்”

“[illegible]”

“[illegible]”

நான் தொடர்ந்து பேச்சைத் தொடர்க்காமல் நகர்ந்தேன். திருவள்ளுவர் தெரு, குப்புசாமி தெரு, பாரதியார் தெரு, மாரியம்மன் கோயில் தெரு என்று சுற்றினேன். கடைசியில் கோடித் தெருவில்தான் அம்மாவைப் பிடித்தேன். வெய்யில் உச்சிக்கு எட்டியிருந்தது. அகோரமாய் மண்டையைப் பிளக்கும் அளவிற்கு உஷ்ணம். அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. உதடுகள் காய்ந்திருந்தது. உடல் முழுக்க வியர்வையால் நனைந்து விட்டது. வாளியைப் போட்ட கையோடு இடுப்பிலிருந்த வெற்றிலைப் பாக்குப் பையை எடுத்துப் பிரித்தாள். ஒரு பாக்கை எடுத்து மென்றாள். அரை வெற்றிலையைக் கிழித்தெடுத்து லேசாய் சுண்ணாம்பு தடவி திணித்தாள்.

“ஏம்பா பள்ளிக்கொடம் போவலயா?”

“இல்லம்மா”

“ஏன் போவுல, ங்கொப்பா திட்டியிருப்பாரே?”

“தங்கராசு மாமா செத்துருச்சு; அப்பா கூப்டாரச் சொன்னாரு.”

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

(தொடர்ச்சி பக்கம் 33)



# தமிழில் மருத்துவச் சீட்டு

## முதல்வரின் வாழ்த்துச் செய்தி

**மொ**ழி என்பது வெறும் தகவல் பரிமாற்றுச் சாதனம் மட்டுமல்ல; அதற்கப்பாலும் செல்கிற மென்மையான இழையாக அது விளங்குகிறது. உதடுகளிலிருந்து உற்பத்தியாவது போலத் தோன்றினாலும், இதயங்களை இணைக்கிற கண்ணுக்கு அகப்படாத பாலமாய் அது விளங்குகிறது.

பரிச்சயமான மொழியில்தான் தகவல் பரிமாற்றம் நடக்கவேண்டும் என்று ஒரு சாரார் அயல்மொழியை ஆதரித்து வருகின்றனர். உபயோகம் அதிகரிக்கும்போது பரிச்சயமும் கூடுகிறது என்பதுதான் உண்மை.

தமிழ், உள்ளம் குளிர செவியின் ஊடாகப் பாய்ந்து இன்பம் விளைவிக்கும் இலக்கிய விருந்துக்கு மட்டும் பயன்படுவதாக இல்லாமல், உடலிலும் ஊடுருவிப் பிணி அகற்றும் மருந்துக்கும் பயன்படுவதாக மாற்றிக் காட்டும் மகத்தான பணியை மக்கள் நல்வாழ்வுத் துறை செய்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழிலே நோயின் தன்மை அறியப் பெற்றால் பெரிய நோய்கூட சாதாரணமாகத் தோன்றுகிறது. ஆங்கிலத்திலே வயிற்றுப் போக்கைக்கூட கேட்க நேரிடுகிற போது 'என்ன நோயோ' என்று அச்சம் தோன்றுகிறது. தமிழ் எழுத்துக்களின் அமைப்பு அதை ஆங்கிலத்தைப் போல அதிகமாய்க் கிறுக்கி எழுத முடியாத தனித்தன்மை பெற்றிருக்கிறது. கிறுக்கி எழுத எத்தனைப் பயிற்சி பெற்றாலும் முடியாத அளவிற்கு வடிவமைப்பைப் பெற்றிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை புற நோயாளர் மருத்துவச் சீட்டு, தமிழிலேயே தயாரித்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாய் இருக்கிறது. மருத்துச் சீட்டின் நெற்றியிலே சுகாதாரக் குறிப்புகளையும், அதன் தாடையில் மருத்துவப் பொன்மொழிகளையும் வெளியிட்டு வாசிப்பவர் இதயத்தில் ஆழமாய்ச் சில விதைகளை விதைக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. சில செய்திகள் திரும்பத் திரும்பச் சொன்னால்தான் வசிக்கின்ற வீட்டிற்கு வழித்தடம் போல நினைவில் நிற்கும் என்பது சுகாதாரத் துறைக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவும், காலையிலும் இரவிலும் பல் துலக்கவும், காலம் காலமாகச் சொல்லி வந்தாலும், இந்த எச்சரிக்கை இன்னும் சரியாக உச்சரிக்கப்படாத காரணத்தினால் பலர் நோய்வாய்ப்பட்டுத் தொல்லையுறுகிறார்கள்.

சுகாதாரக் குறிப்புகளை ஏழைகளின் இல்லத்திற்கு எடுத்துச் செல்வதோடு அவர்தம் இதயத்திலும் இடம் பெறச் செய்வது இன்றியமையாதது.

சொட்டு மருந்து குறித்தும், தடுப்பூசி பற்றியும், கர்ப்பிணித் தாய்மார்க்கு இரும்பு மாத்திரை பற்றியும் இன்னும் அதிகமாய் எடுத்துச் சொல்லவேண்டிய கடமை நமக்கிருக்கிறது.

தமிழகத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பூசி அட்டவணைப்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது எனும்



நிலையை அடையும் போதுதான் நாம் முழுமையான மகிழ்ச்சியடைய முடியும்.

அயோடின் உப்பு குறித்தும், சத்து நிறைந்த கீரை உண்பதையும் குடும்ப நலம் பேணுவதையும் இவர்கள் உள்ளத்தின் ஓரத்தில் ஒட்ட வைப்பதோடு நிற்காமல், அவர்கள் கடைப்பிடித்து வளம் பெறவும் செய்ய வேண்டும்.

மருந்துச் சீட்டில் இவற்றையெல்லாம் குறிப்பிடுவது மக்கள் நல்வாழ்வை மலரச் செய்கிற இன்னொரு முயற்சியாய் இருக்கும் என நான் நம்புகிறேன்.

நோய் விவரமும், மருந்து விவரமும் சரியாகத் தெரியாமல், கொடுக்கிற மருந்தையும் சரியாக உட்கொள்ளாத நோயாளிகளும் இருக்கிறார்கள்.

மருத்துவர்கள் தருகிற மருந்தோடு அவர் தம் அன்பும், அனுசரணையான அணுகுமுறையும் கலக்கும்போதுதான் அது துரிதமாக வேலை செய்கிறது. மருந்து என்பது இரசாயனக் கலவை மட்டும் அல்ல; கனிவும் கலந்து நடத்துகிற இரகசியமான இரசவாதம் என்பதையுணர்ந்து, இன்னல் தீர்க்கிற இத்துறையில் இருப்பவர்கள் செயல்பட வேண்டும். புன்னகையால் புண்ணை ஆற்றி விட முடியாது; ஆனால் அது காயத்தின் கடுமையைக் கட்டாயம் மறக்கச் செய்யும்.

தமிழில் மருத்துவச் சீட்டு என்றால் மருந்தின் பெயர்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுவதாகத் தவறாக எண்ண வேண்டியதில்லை; தமிழ் எழுத்துகளில் அந்த மருந்தின் பெயரை அப்படியே எழுதுவதைத் தான் நல்வாழ்வுத் துறை செய்திருக்கிறது; அதுதான் பயன்பாட்டை அதிகரிக்கும். 'Crocin' என்கிற மாத்திரையை ஆங்கிலத்தில் குறிப்பிடுவதோடு 'குரோசின்' எனத் தமிழிலும் குறிப்பிடும்போது ஆங்கிலம் தெரியாதவர்களும் அதை வாசித்தறிய வழிவகுக்கும்.

இந்த மருத்துவச் சீட்டு, அரசு மருத்துவமனைகளையே நம்பி வாழ்கிற வறுமையின் பிடியில் இருப்பவர்களுக்கு ஒரு உயர்ந்த சாதனமாக விளங்குகிறது. அரசுத் துறையில் ஆரம்பிக்கிற இந்த முயற்சி தனியார் மருத்துவமனைகளிலும் விரைவில் பரவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த முயற்சிக்கு முதல் வித்து தூவிய மக்கள் நல்வாழ்வுத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


★ முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு...

★ வெள்ளிவிழா ஆண்டைக்கடந்து, உள்ளம் கொள்ளை கொள்ளும் விதத்தில்...

★ இலக்கியப் பயணம் தொடர்ந்திடும்

தமிழரசு

இலக்கிய மலர்

★ வரும் தமிழ்ப் புத்தாண்டையொட்டி ஏப்ரல் 14-ஆம் நாளன்று, கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் வண்ணமுற மலரவிருக்கிறது!

★ இணையற்ற இலக்கிய மேதைகள், கனிநிகர் கவிதை தரும் கவிஞர்கள், இதயம் தொடும் எழுத்துச் சிற்பிகளாம் எழுத்தாளர்கள், கண்வழி புகுந்து கருத்தினைக் கிளரும் ஓவிய விற்பன்னர்கள்...

★ - எல்லோரும் பங்கேற்பதாக, தமிழ் இலக்கிய வரலாற்றின் தனிச் சாட்சியாக....

★ - இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சிகளையும், இலக்குகளையும் பதிவு செய்வதாகப் புதிய மெருகோடு வெளிவரும்! கற்கண்டுச் சுவைதரும்!

200க்கும் மேலான பக்கங்கள்




# ஜப்பான் நாட்டுக் காதல் கவிதைகள்!

தமிழில்: ந. முத்துக்குமார்



# நல்ல திரைப்ப



- ஞான ராஜசேகரன், இ.ஆ.ப.

திரைப்படம் என்பது ஒரு பொழுது போக்கு மட்டுமல்ல; பொழுதுபோக்கிற்குப் பெரிதாக ரசனை ஒன்றும் தேவையில்லை - திரைப்படம் ஒரு கலை வடிவம். அதை வியாபாரிகள் எவ்வளவு மலினப்படுத்தி விற்றுக் கொண்டிருந்தாலும், அடிப்படையில் திரைப்படம் ஒரு கலை வடிவம்தான்.

ஒரு சராசரி தமிழனின் வாழ்க்கையில் சினிமா எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பது, நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. என்னுடைய வெளிமாநில நண்பர் ஒருவர் சொல்வார்: "உங்கள் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில் பிரதான மாகச் செய்கிற ஒரே வேலை சினிமா பார்ப்பதுதான்; மீதி இருக்கும் ஓய்வான நேரத்தில்தான் அலுவலகப் பணி, குடும்பம், குழந்தை இவற்றைக் கவனிக்கிறார்கள்!"

இப்படி, வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கிற சினிமாவில் நாம் ஏன் ரசனையை வளர்த்துக் கொள்ளவில்லை?

சிற்றுண்டி சாப்பிட ஓட்டலுக்குப் போகிறோம். தோசை கொஞ்சம் வேகாமல் போய்விட்டால் நம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

தையல்காரனிடம் சட்டையைத் தைக்கக் கொடுக்கிறோம், கொஞ்சம் இறுக்கமாகத் தைத்துவிட்டிருந்தால் உடனே கண்டுபிடித்து விடுகிறோம்.

ஆனால் நம் சினிமாவைப் பொறுத்த வரை ஏன் இவ்வாறெல்லாம் நடைபெறுவ தில்லை? எதைக் கொடுத்தாலும் ஜீரணித்து விடுகிற - எதைப் பார்த்தாலும் அணிந்து கொள்கிற நிலைக்கு நாம் எப்படி தள்ளப்



பட்டுவிட்டோம்? சினிமா ரசனை ஏன் நமக்குத் தாழ்ந்துபோனது?

சினிமாவைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் எப்போதும் நடைபெறும் ஒரு விசித்திரத்தைச் சொல்லியே தீரவேண்டும். புதிய தமிழ் சினிமா வெளிவருகிற தினத்தில் முதல் காட்சி முடிந்து தியேட்டரிலிருந்து மக்கள் வெளியே வரும்போது, வாசலில் நிற்பவர்கள் படம் பார்த்துவிட்டு வருப வர்களை "படம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டால், பதில் என்னவாக இருக்கும்?

'படம் நன்றாக இல்லை' என்று சொன்னால் பரவாயில்லை. படம் பார்த்து விட்டு வருகிற சராசரி தமிழன் அப்படிச் சொல்வதில்லை. அவன் சொல்வதே வேறு! 'படம் ஐம்பது நாள் ஓடாது சார்... எனக் கென்னவோ நூறு நாள் ஓடும்னு தோணலை' என்றுதான் அவன் சொல்வான்.

பார்த்துவிட்டு வரும் படத்தைப் பற்றிக் கேட்டால் நன்றாக இருக்கிறதா இல்லையா



என்று சொல்ல வேண்டுமேதவிர, அந்தப் படத்தைப் பற்றிய வியாபார அக்கறை நமக்குத் தேவையில்லை.

ஒரு புத்தகத்தைப் படிக்கக் கொடுத்து, படித்து முடித்தவுடன் நன்றாக இருக்கிறதா என்று கேட்டால் 'ஆயிரம் பிரதி விற்குமா என்று சந்தேகமாக இருக்கிறது என்று யாரும் சொல்வதில்லை. ஆனால் சினிமா பார்க்கப் போகும் போது மட்டும் ஏன் வியாபாரி ஆகிவிடுகிறோம்? நம் ரசிகர்களிடையே இருக்கும் இந்த வியாபாரத்தனம்தான், நம் சினிமா ரசனையை வெகுவாகக் குறைத்து விடுகிறது என்று நான் நினைக்கிறேன்.

அடுத்ததாக, சினிமாவைப் பொறுத்த வரை நமக்குப் பொறுமை இல்லாதிருப்பது. தியேட்டரில் சென்று அமர்ந்தவுடனே திரைப் படத்தில் வேகவேகமாகத் திருப்பங்கள் நமக்கு வேண்டும். பத்து நிமிடத்துக்கு ஒருமுறை அதிர்ச்சியாகவோ, ஆர்ப்பாட்டமாகவோ ஏதாவது நடந்துகொண்டேயிருக்க வேண்டும். ஒரு நடனமோ, ஒரு பாட்டோ, ஒரு சண்டையோ ஏதாவது ஒன்று வேண்டும், இல்லை யென்றால் சிகரெட் அல்லது டீ குடிக்க வெளியே சென்றுவிடுவார்கள்.

சினிமா இயக்குநரும், தயாரிப்பாளரும் எங்கே உடனுக்குடன் திருப்பம் கொடுக்கா விட்டால் சினிமா பார்க்கிறவன் எழுந்து விடுவானோ என்று பயந்துகொண்டே படம் எடுக்கிறார்கள். 'மலையாள ரசிகர்களோ, வங்காள ரசிகர்களோ இப்படி இல்லை; அவர்களுக்கு ரசனை வளர்ந்திருக்கிறது' என்று பலர் சொல்வதுண்டு. என்னைப் பொறுத்தவரை அடிப்படையில் மலையாளம், வங்காளம், தமிழ் எல்லோருடைய ரசனையும் ஒன்றுதான்.

ஆனால், மலையாள, வங்காள ரசிகர் களை அவர்களுடைய மொழிப் படங்கள் நன்றாகப் பயிற்றுவித்துள்ளன. அதுதான் வித்தியாசம். மலையாளத்தில் தொடக்க காலம் முதலாகவே நாவல்களின் அடிப் படையில்தான் பெரும்பாலான திரைப் படங்கள் வெளிவந்திருக்கின்றன. நாவல் களில் அதிரடித் திருப்பங்களும், சம்பவங் களும் இல்லாதனாலும், யதார்த்தமான வாழ்க்கை முறையே கதையாகச் சொல்லப் படுவதாலும், மலையாள ரசிகர்களுக்குப் பொறுமை அதிகம் வளர்ந்திருக்கிறது. அதனால்தான் இன்றைக்கும் மலையாள



சினிமா ரசிகன் தியேட்டருக்குச் சென்று இரண்டரை மணி நேரம் பொறுமையாகப் படம் பார்த்துவிட்டு வெளியே வந்து 'படம் நன்றாக இல்லை' என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுச் செல்கிறான்.

இயக்குநருக்கு, மலையாள சினிமா ரசிகன் தனது இரண்டரை மணி நேரத்தைப் பொறு மையாகத் தருவதனால் மலையாளத்தில் புதுமையாகவும் வித்தியாசமாகவும் திரைப் படங்கள் வெளிவர ஏதுவாகிறது. ஆனால் தமிழ் சினிமா இயக்குநருக்குத் தமிழ் ரசிகன் கொடுக்கும் பத்து நிமிடத்தில் ஒன்றையும் நேர்த்தியாகச் சொல்ல முடிவதில்லை. எனவே, ரசனை வளர வேண்டுமென்றால், நமக்குப் பொறுமை தேவை. இந்தப் பொறுமை இருந்தால்தான் நாம் சினிமாவில் வித்தியாசமான அணுகுமுறையையும் கதை யையும் கொண்டுவர முடியும்.

'சினிமாவில் நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும்?' என்பதைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து திரைப்பட ரசிகனுக்கு மிகவும் அவசியம். இரண்டரை மணி நேரத்தில் உல கத்திலுள்ள எல்லா விஷயங்களும் திரைப்ப டத்தில் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது பேராசை அல்லவா?

காதல், சோகம், பாசம், சண்டை, நகைச் சுவை எல்லாம் இந்த இரண்டரை மணி நேரத்தில் வந்தாக வேண்டும். ஒரு திரைப் படத்தில் ஆணும் பெண்ணும் கதாபாத்திரங் களாக வந்து அவர்களுக்கிடையில் காதல் அரும்பவே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ரசிகர்கள் என்ன ஆவார்கள் என்று நினைத்துப்பாருங்கள்!



வாழ்க்கையில் காதல் ஏற்படாத ஆண் பெண் உறவுகள் இருக்கலாம். ஆனால் சினிமாவில் - ஒவ்வொரு சினிமாவிலும் காதல் வந்துதான் தீரவேண்டும் என்ற கட்டாயம் உண்டு. அதற்காகக் 'காதல்' திரைப்படங்களில் சொல்லப்படக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. சுமார் 100 அல்லது 150 விஷயங்களை ஒரே திரைப்படத்தில் வலிந்துசொல்வதால், விஷயங்கள் மலினப்படுத்தப்படுவதுடன் திரைப்படமும் தரத்தை இழக்கின்றது. மாறாக, ஓரிரு விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, அவற்றை மென்மையுடனும், நுட்பத்துடனும் சொல்லும்போது தரம் உயருகிறது. சொல்லப்படுகிற விஷயத்துக்குக் கம்பீரமும் கிடைக்கிறது. இப்படிப்பட்ட சௌகரியத்தை நாம் தமிழ் இயக்குநர்களுக்கு உருவாக்கித் தருவதில்லை.

அதனால், தமிழ் சினிமா ரசிகர்களுக்கு எனது வேண்டுகோள் என்னவென்றால், சினிமாவுக்குச் செல்லும்போது ஒரு வியாபாரியாக இல்லாமல்- அதிரடித் திருப்பங்களை எதிர்பார்ப்பவராக இல்லாமல் - குழந்தைப் பிறப்பு முதல் காதல் திருமணம் வரை, உலகில் நிகழ்கிற சகல சம்பவங்களையும் பார்த்துத்தான் தீரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காமல் சினிமா அரங்கிற்குள் சென்று அமருவோமானால் நாம் நல்ல ரசிகனாக மாற முடியும். ஒரு நல்ல சினிமாவை ரசிக்கும் பக்குவத்தை நாம் பெறமுடியும்.

சரி, நல்ல சினிமா என்றால் என்ன? இது ஒரு நியாயமான - ஆனால், சிக்கலான கேள்வி. இதற்குப் பலவிதமான பதில்கள் நாட்டில் உலவுகின்றன.

பல் துலக்குவதைப் பத்து நிமிடம் காட்டுவதும் வீதியில் நடந்துபோவதைப் பதினைந்து நிமிடம் காட்டுவதும், வசனமே இல்லாமல் மயான அமைதியுடன் மெதுவாக நகர்வதும் ஒரு கலைப்படத்தின் (ART Film) அடையாளங்கள். அதுவே நல்ல சினிமா என்று ஒரு சிலர் கூறுகிறார்கள்.

வேறு சிலர் (சிலர் என்பதைவிட பலர் என்றே கூறவேண்டும்) 'சினிமா தியேட்டருக்குள் சென்றமர்ந்தவுடனேயே நிமிடத்துக்கு நிமிடம் அதிரடித் திருப்பங்கள், பாட்டு, நடனம், சண்டை... இப்படி நேரம்போவதே தெரியாமல் ஜாலியாக ஓடுவதுதான் நல்ல சினிமா' என்று கூறுகிறார்கள்.

கலைப்படம், வர்த்தகப்படம் என்று பிரித்துப்பார்த்து நல்ல சினிமாவை வரையறுப்பது மிகக்கடினம்.

நல்ல சினிமாவிற்கு, ஜீவனுள்ள ஒரு கதைக் கரு வேண்டும். அதனுடைய கதா பாத்திரங்கள் தங்களுடைய மனநிலைப்படி இயல்பாக இயங்குவதற்குச் சௌகரியமான ஒரு திரைக்கதை வேண்டும். அந்தத் திரைக்கதையைச் சினிமாவாகப் பரிமாற்றம் செய்யத் திறமை மிகுந்த இயக்குநர் வேண்டும்.

கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிக்கொணர்வதற்கு நடிகர் நடிகைகளுக்கு நடிப்புத்திறன் வேண்டும்.

இவை மட்டுமின்றி - ஒளிப்பதிவு, இசை, படத்தொகுப்பு, அரங்க அமைப்பு முதலான பல அம்சங்கள் சரியான விகிதத்தில் அமைந்து மெருகூட்டுமானால் - ஒரு நல்ல சினிமா உருவாகும்.



# மாட்டுப் பற்று

_ கி. ராஜநாராயணன்



மனிதர்களினால் அபூர்வமானவர்களைப் பற்றி, வீரர்களைப் பற்றி எப்படி மக்கள் கதை கதையாகச் சொல்லி வியக்கிறார்களோ அதே போல மாடுகளைப் பற்றியும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள்.

எண்பது வயசாகிவிட்ட முதியவர் எங்களூர் நடுத்தெருக் கந்தசாமி நாயக்கர் இப்பவும் சொல்லுவார் "ராஜூ" நா ஒரு செம்பரை வச்சிருந்தேன் என்று ஆரம்பிக்கும்போதே பரவசத்தால் முகம் மலரும். அந்த மாட்டை மட்டும் அவரால் மறக்கவே முடியவில்லை.

அந்த செம்பரைக் காளையைப் பற்றி அவர் என்னிடம் கதைகதையாய்ச் சொல்லியிருக்கிறார். கேட்டுக்கொண்டே இருக்கலாம். பொழுது நகராத நேரங்களில் அவரைத் தேடிப் போவேன். தனது குடும்பம் சொந்த பந்தம் இவைகளைப் பற்றிப் பேசுவதையும்விட மாடுகளைப் பற்றிப் பேசுவதில் தான் அவருக்குப் பெருவிருப்பம். அவரிடம் நான் கேட்ட தகவல்கள் ஏராளம். (கால்நடைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அவரைப் பேசச் சொல்லனும்!)

"மண்புழுக்கள்" ஆன விவசாயிகளுக்கு மாடுகள் பேரில் உள்ள பற்றும் பாசமும் அறிவேன் நான். அவர்களுக்குக் காலையில் கண் விழித்ததும் மாட்டின் முகத்தைத் தான் பார்க்கணும். அதுக்காகவே பலர் வீட்டிற்கு முன்னால் மாட்டுத் தொழுவை அமைத்திருப்பார்கள்.

மாடுகளைப் பற்றிய ஒவ்வொரு விஷயங்களும் அவர்களுக்குத் தளபாடம். மாடுகளைப் பற்றிய தொன்மங்கள் (மித்) கதைகள், மாட்டு வைத்தியமுறை (வாகடம்) இவை பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருப்பார்கள்.

எனது வட்டார வழக்குச் சொல்லகராதி நூலின் பிற்சேர்க்கையில் மாடுகளைப் பற்றியும் ஆடுகளைப் பற்றியும் உள்ள தகவல்களில் பெரும்பான்மை எனக்குச் சொன்னவர் இந்த நடுத்தெருக் கந்தசாமி நாயக்கர்தான். தென் தமிழ்நாட்டில் இவர் போகாத மாட்டுச் சந்தையே கிடையாது. அவர் கல்யாணமாகி, குடும்பஸ்தராக ஆவதற்கு முன்னால் இதையே ஒரு ராப்தாவாக வைத்துக் கொண்டிருந்தார்.

நவரத்தினங்களைப் பார்த்துத் தேர்ந்தெடுக்க நிபுணர்கள் என்று எப்படி இருக்கிறார்களோ அதே போல் மாடுகளைப் பார்த்துத் தேர்ந்தெடுக்க நிபுணர்களும் இருக்கிறார்கள். அதில் ஒருவர்தான் சஷயார. ஒரு மாடு, பார்வை தூரத்தில் நின்று கொண்டிருக்கும் போதே "ஆ அழகான மாடு" என்று சொல்லுவார். இது எப்படி சாத்தியம் என்று ஒரு நாள் அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார்.

பார்வை லட்சணங்களில் ஒரு காளைக்கு இருக்க வேண்டியது மொத்தம் பத்து.

சிறியவை ஐந்து.

பெரியவை ஐந்து.

சிறியவை தலை, கொம்புகள், தாடி, கோசம், வால்.

பெரியவை கண்கள், மார்பு, கழுத்து, எலும்புகள், கால்கள்.

கொம்புகளைப் பற்றிப் பேச்சு வந்தபோது, கை விரல்களால் அபிநயம் பிடித்துக் காட்டுவது போல மாட்டுக் கொம்புகளின் வகைப் பெயர்களைச் சொன்னார்.

விரி கொம்பு, முன் கொம்பு, மாடக் கொம்பு, மட்டிக் கொம்பு, பொத்தைக் கொம்பு, சுருட்டைக் கொம்பு, கொக்கரக் கொம்பு, கொள்ளிக் கொம்பு, கூடு கொம்பு, குத்துக் கொம்பு, கிளிக்கொம்பு, காடு பார்த்த கொம்பு, ஆட்டுக் கொம்பு, அலைக்கொம்பு என்று அப்போது ஞாபகத்துக்கு வந்தவைகளைப் பற்றிச் சொன்னார்.

மாடுகளின் நிறங்களைப் பற்றிச் சொன்னபோதுதான் பிரமிப்பு ஏற்பட்டது. நிறங்களும், ஸ்வரங்களும் ஏழுதான்; அவை கலக்கும் போது எத்தனையோ நிறங்களும், ராகங்களும் வருவது போல இருந்தது அவர் சொன்ன மாட்டின் நிறங்கள்.

வெள்ளை, மயிலை, புளியம், போர்ச் செம்பரை (புளியம்பூச் செம்பரை) புல்லை, பஞ்சகல்யாணி, நூவெள்ளை, செவலை, செவலை செம்பரை, செம்பரை, செந்தாரை மயிலை, கருங்குரால், கண்ணாடி மயிலை, செந்தாரை. கத்தவெள்ளை, சந்தனப்புல்லைக்குரால், காரி, கருவெள்ளை, கருமயிலை, கருப்பு கருத்தச் செம்பரை, கருஞ்சிவலை, கரிசமால், அத்திக்காப்புல்லை, மாட்டின் நிறம், அவரவர் ராசிக்குப் பிடித்த நிறம் என்றெல்லாம் உண்டாம்; மனைக்குப் பிடித்த நிறம் என்றும் உண்டாம்!

சுழிகளைப் பற்றிய பேச்சு வந்தபோது ஏற்பட்டு- இருக்க வேண்டிய- சுழிகள் என்றும் அதிகப் படியாக 'இருக்கும் சுழிகளைப் பற்றியும் சொன்னார்.

நல்ல பலன் தரும் சுழிகள், அபூர்வமான சுழிகள், தீமை செய்யும் சுழிகள் என்றெல்லாம் உண்டு என்றார். சுழிகளை வைத்தே மாட்டின் குணங்களையும் சொல்லி விட முடியும் என்றார்.

சங்குகளில் வலம்புரிச்சங்கு இடம்புரிச்சங்கு என்று இருப்பது போலச் சுழிகளில் இடதுபக்கம் சுழித்திருக்கும் சுழி வலதுபுறம் பார்த்து சுழித்திருக்கும் சுழி என்று இருக்கிறது. இந்த மாட்டின் உடம்பில் இருக்கும் இடத்தைப் பொறுத்து பலன் சொல்கிறார்கள்.

மாட்டின் ஆசன வாய்ப் பக்கத்தில் ஒரு சுழி இருக்கும். மாடு சாணி போட வாலைத் தூக்கும் போது தான் தெரியும். (வாலைத் தூக்கிப் பார்க்கலாம் என்றால் வேகமான மாடு என்றால் வாலைத் தொடவே விடாது!) இந்தச் சுழிக்குப் பெண்டிழந்தான் சுழி என்பார்கள். திருமணமானவர்கள்– 'அப்பாடி யோவ் இந்த மாடு நமக்கு வேணாம்' என்று ஓட்டம் பிடிப்பார்கள். தாரம் இழந்த விதவையாடவர் மட்டுமே இந்த மாட்டை விலை கொடுத்து வாங்குவார்கள்.

மாட்டிலுள்ள சுழிகளை எல் லோராலும் கண்டுபிடித்துவிட முடியாது, வைரத்தில் நீரோட்டம் பார்க்கத் தெரிந்தவர்களைப் போலத்தான் இதிலும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுழிகளின் பெயர்கள் வருமாறு:

(இவை வட்டாரம் தோறும் பெயர்கள் மாறும்.)

நெத்திச்சுழி, நீர்க்குத்துச்சுழி, மேக்கா அல்லது நோக்காச்சுழி, மூளை பிடுங்கிச் சுழி, மண்டை விலங்குச் சுழி, மடக்குவால்சுழி. பெண்டிழந்தான் சுழி, புரான் சுழி, செவிப்பாம்புச்சுழி, செவிச்சுழி, கொம்புச் சுழி, பின்னாகசுழி, பூரான்சுழி, பூரான்சுழி 11, பிடரி விலங்குச்சுழி, பிடரிச்சுழி, பாடைச் சுழி, பாசிபந்துச்சுழி, பறவைச்சுழி, பட்டரைச்சுழி, நல்சுழி, டமானச்சுழி, கால்விலங்குச்சுழி, இடிமேல் இடி கொடைமேல் கொடைச்சுழி, அஞ்சுசுழி (ஐந்துசுழி!) அசைவுச்சுழி.

இவைகளின் விவரங்கள் பலன்கள் பற்றித் தெரிந்துகொள்ளப் பெரு விருப்பம் உடையவர்கள் எனது "வட்டார வழக்குச் சொல்லகராதி" பக்கம் 315ல் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

இவை தவிர, மாட்டின் வயசைத் தெரிந்துகொள்ளும் பல்ப்பாடு (பல்லைப் பிடித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் விசயங்கள்) கை போட்டு மாட்டுக்காரனோடு பகிரங்க ரகசியமாகத் துணி மறை வில், வில்கள் தொட்டு பேசப்படும் பரிபாஷைகள் இவையெல்லாம் வட்டாரத்துக்கு வட்டாரம் சொற்கள் மாறுபடும்! இந்த "மொழி" தெரிந்த வர்கள்தான் சந்தைகளில் மாட்டின் விலை பேச முடியும்.

சம்சாரிகள் ஆணும் பெண்ணும் குழந்தைகள் அடங்கலாக மாட்டை எப்படி நேசிக்கிறார்கள் என்பது மற்றவர்களால் நம்ப முடியாது. மாடு இல்லாதது வாழ்க்கை இல்லை என்பது எங்களில் எழுதிவைக்காத கோட்பாடு.

தங்கர்பச்சானின் வெள்ளை மாடுகள் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரை

**நன்றி: 'தாமரை', டிசம்பர், 1996.**

## தெரிந்து கொள்வோம்

**ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)**

இது 1966-ஆம் ஆண்டு செயல்படத் துவங்கியது. ஜப்பான் நாட்டு நிதியுதவியினால் நடைபெறும் வங்கி இது. ஆசியாவிலுள்ள இதன் உறுப்பு நாடுகளுக்குக் கடனுதவி சலுகை முறையில் வழங்குவதே இதன் நோக்கமாகும்.

**நேட்டோ (NATO)**

இது 1949-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தம் என்னும் இதன் உறுப்பு நாடுகள் தாக்கப்பட்டால் மற்ற நாடுகள் உதவிக்கு வரும். இதன் உறுப்பு நாடுகள் இத்தாலி, ஐஸ்லாந்து, நார்வே, ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம், துருக்கி, அமெரிக்கா, கிரீஸ், மேற்கு ஜெர்மனி, கனடா, பிரிட்டன், லக்ஸம்பர்க், டென்மார்க், இத்தாலி ஆகும்.

**ஐரோப்பியப்பொருளாதாரக் கூட்டமைப்பு (EEC)**

இது 1957-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் நாள் துவக்கப்பட்டது. இதில் தற்போது 12 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இவ்வமைப்பிற்கு ஐரோப்பியப்பொதுச் சந்தை (ECM) என்ற பெயரும் உண்டு. இதில் உலகின் செல்வம் கொழிக்கும் பல நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.



# ஜென் கதைகள்

மாணவர் பக்கம்

## இன்னுமா சுமக்கிறாய்?

குருவும், சீடனுமாய் நெடுவழிப் பயணம் போய்க்கொண்டிருந்தார்கள்.

காடு, மலைகளையெல்லாம் கடந்து சென்று கொண்டிருக்கும் போது, வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது.

ஆற்றங்கரையில் ஓர் இளம் பெண் நின்றுகொண்டிருந்தாள். ஆற்றையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

குருவும், சீடனும் அவளை நெருங்கினார்கள். அவள் முகத்தில் கவலையின் சாயல்.

இவ்வளவு அழகான இளம் பெண் ஏன் இவ்வாறு ஆற்றையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கிறாள்? எதையாவது ஆற்றில் தவற விட்டுவிட்டாளோ? என்று நினைத்தான் சீடன்.

"பெண்ணே! ஏன் இப்படி, இங்கே தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் குரு.

"சுவாமி! ஆற்றைக்கடந்து செல்லவேண்டும், பயமாக இருக்கிறது." என்றாள் அவள்.

"கவலைப்படாதே அம்மா. நான் உதவுகிறேன்." என்று சொல்லிவிட்டு அவளை அப்படியே தூக்கிக் கொண்டு ஆற்றில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

சீடன் திகைத்துப் போனான்!

ஆழமில்லா ஆறு. குரு அவளைச்சுமந்தபடியே நீரில் இறங்கி நடந்தார். சீடன் திகைப்புடன் குருவின் பின்னால் நடந்தான்.

மறுகரை வந்ததும் அவளைக் கீழே இறக்கிவிட்டார் குரு.

"நன்றி சுவாமி!" என்று சொல்லிவிட்டு அவள் நடந்துபோனாள்.

சீடனின் குழப்பம் தீரவில்லை. பேசாமல் குருவின் பின்னே தொடர்ந்து நடந்தான்.



அன்று மாலை சீடன் பொறுமையிழந்தான். அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"சுவாமி!"

"என்ன?"

"தங்களைப் போன்ற குருமார்கள் பெண்ணைத் தொடக்கூடாதே?"

"ஆமாம். அதற்கென்ன இப்போது?"

"தாங்கள் இன்று காலை, அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கினீர்களே! அது எப்படி?"

"அட, அவளை நான் அப்பொழுதே இறக்கி வைத்துவிட்டேனே. நீ இன்னுமா அவளைச் சுமந்து கொண்டு வருகிறாய்?" என்று கேட்டார் குரு.

–புறத்தே சுமக்கிறேன்; அகத்தினுள்ளே
இன்னுமொரு பழங்குப்பை சுமக்கிறாய்நீ..."

–பாரதியார்.

## நீ, நான்தான்!

ஐயோ, நான் எவ்வளவு அற்பமானவன், என்னை அந்தப் பெரிய அலைகள் பாய்ந்து



வந்து, அமுக்கி அழித்து விடுகின்றனவே' என்று மிகவும் வருத்தப்பட்டது ஒரு சிற்றலை.

அப்போது ஒரு பெரிய அலை பாய்ந்து வந்தது.

ஐயோ! என்று அலறியது சிற்றலை.

"உன் முகத்தை நீ பார்த்ததில்லையா; உண்மையான உன் முகத்தை?" என்று கேட்டது பேரலை.

"இல்லை. நான் யார்? நான் ஒரு அலைதானே?" என்று கேட்டது சிற்றலை.

'நீ அலைதான். ஆனால், அவை உன் வடிவமல்ல; அது ஒரு தற்காலிக வடிவம். நீ தண்ணீர்."

"தண்ணீரா?"

"ஆம் தண்ணீர். என்னைப்போல என் வடிவமும் - தற்காலிக வடிவம்தான். அடிப்படையில் நானும் தண்ணீர்தான். உன்னைப்போல, வீணாக நீ கவலைப்படுகிறாய், குழப்பமடைகிறாய். உன் உண்மையான நிலையை, அடிப்படையை உணர்ந்தால் அச்சம் இல்லை; அவலம் இல்லை."

"அப்படியா? நீயும் நானும் ஒன்றா?"

"ஆம்! மாபெரும் இயற்கையின் வெவ்வேறு தற்காலிக வடிவங்கள். அடிப்படையில் எல்லாம் ஒன்றே கவலை விடு" என்றது பேரலை.

உலகின் அனைத்துப் பொருள்களும், உயிர்களும் ஆதி இயற்கையின் மூல அடிப்படையின் வெவ்வேறு வடிவங்களே. பிரிவினை எண்ணமே நாம் ஆசாபாசங்களுக்கும், அச்சம் கவலைகளுக்கும் காரணம்.

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது."

—தாயுமானவர்.

## அவசரமே தாமதம்!

ஓர் இளைஞன் சிறந்த வாள் பயிற்சி பெறுவதற்காகக் குருவைத் தேடிப் புறப்பட்டான். வல்லமை வாய்ந்த குரு ஒருவர் மலைமீது இருப்பதாகச் சொன்னார்கள்.

இளைஞன் ஆவலோடு மலையேறிச் சென்று குருவைக் கண்டான். வணங்கினான். தன் வேண்டுகோளைத் தெரிவித்தான்.

"குருவே, நான் கடினமாக உழைத்து தீவிரமாகப் பயிற்சி எடுத்தால் எவ்வளவு காலத்தில் வல்லமை பெறமுடியும்?" என்று கேட்டான்.

"பத்து ஆண்டுகள் பிடிக்கும்" என்றார் ஆசான்.

"என் தந்தை தள்ளாத வயதில் இருக்கிறார். நான் அவ்வளவு காலம் இங்கே தங்கியிருக்க



முடியாது. நான் சீக்கிரம் ஊர் திரும்பி அவரைக் கவனிக்க வேண்டும். மிகக் கடுமையாகப் பயிற்சி எடுத்தால் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியும்?" என்று கேட்டான் இளைஞன்.

"அநேகமாக முப்பது ஆண்டுகள் பிடிக்கலாம்" என்றார் அவர்.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? முதலில் பத்து ஆண்டுகள் என்றுதானே சொன்னீர்கள்! கடுமையாகப் பயிற்சி எடுத்தால் சீக்கிரம் முடிக்க முடியுமல்லவா?" என்றான் அவன்.

"அப்படியா? அப்படிச் சீக்கிரம் கற்க வேண்டுமானால், சுமார் எழுபது வருடங்கள் என்கூட நீ இருக்க வேண்டி வரும்." என்றார் குரு.

அவசரப்பட்டால் அகந்தையில், பதற்றத்தில், எந்தக் காரியமும் உரிய காலத்தில் ஒழுங்காக முடியாது.

"நான் என்னும் ஓர் அகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் இகபரமும் நாளா ஆகித்
தான் வந்து தொடரும். இத்தால் வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமை யார் சாற்ற வல்லார்"

—தாயுமானவர்.

## அச்சம் தவிர்!

தளபதி ஒருவருக்கு அழகான கோப்பை ஒன்று அன்பளிப்பாகக் கிடைத்தது.

அவர் அதைத் தம் மேசைமேல் வைத்து அழகு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்.

பிறகு அதைக் கையில் எடுத்துத் தடவிப் பார்த்தார். கைகளில் உருட்டிப் பார்த்தார்.



பிறகு மெல்லத் தூக்கிப் போட்டுப் பிடித்துப் பார்த்தார்.

அப்போது அது சட்டெனக் கைநழுவிக் கீழே விழுந்துவிடும் போலிருந்தது.

அவர் கதிகலங்கிப்போய் சட்டெனப் பிடித்துக் கீழே விழாமல் மேசைமேல் வைத்துவிட்டார்.

"குப்" பென்று வியர்த்துவிட்டது!

அது அவருக்கே வியப்பாக இருந்தது.

"எத்தனை போர்க்களங்களில் பகைவர் படை நடுவே அஞ்சாமல் பாய்ந்திருக்கிறோம். பாய்ந்து வரும் வாள்கண்டு நடுங்காமல் எதிர்த்துத் தாக்கியிருக்கிறோம். அப்போதெல்லாம் திடுக்கிடாத என் மனம் இந்த சின்னக் கோப்பை கை நழுவும்போது தடுக்கிவிட்டதே! என்ன அதிசயம் இது!" என்று வியந்தார் தளபதி.

சற்று ஆற அமர சிந்தித்துப் பார்த்தபோது, உண்மை புலனாயிற்று.

அந்தப் பொருளின் மீது கொண்ட பற்றுத்தான் அந்த அச்சத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தார்.

உடனே அந்தக் கோப்பையைத் தூக்கி எறிந்து உடைத்து நிம்மதியடைந்தார்!

"அஞ்சுவ தோரும் அறனே! ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா."

—வள்ளுவர்.

## மனக்குரங்கு...

ஓர் உழவன்; தன் தோட்டத்தை உழும்போது ஒரு தங்கச் சிலை கண்டெடுத்தான். அது புத்தர் சிலை. மண்ணில் புதைந்து காணாமற்போன பதினெட்டு புத்தர் சிலைகளில் ஒன்றுதான் அது! நல்ல கனம்!

ஏராளமான விலைக்குப் போகும் என்று தெரிந்தது. எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அதை மறைத்து வீட்டிற்குக் கொண்டு வந்தான் அவன்.

குடும்பத்தார்க்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி. செல்வத்தில் மிதக்கலாம் என்று கனவு காண ஆரம்பித்து விட்டார்கள்...

ஒவ்வொருவரும் என்னென்ன வாங்கலாம் என்று கற்பனையில் மிதந்து கொண்டிருந்தார்கள்...

ஆனால், அந்த உழவன் மட்டும் சோகமே உருவமாக ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அதைக் கண்டு அவன் மனைவி ஆச்சரியப்பட்டாள். அவன் அருகில் வந்தாள்.

''என்ன இது! கன்னத்தில் கைவைத்து இப்படிக் கவலையுடன் அமர்ந்திருக்கிறீர்களே? எவ்வளவு பெரிய செல்வம் கிடைத்திருக்கிறது, என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''மற்ற பதினெழு சிலைகளும் எங்கே புதையுண்டு கிடக்கின்றன என்பது தெரியவில்லையே" என்றான் அவன். கவலையுடன்.



“ஆசை எனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு எனவும் மனது அலையும் காலம் மோசம்வரும்....”
—தாயுமானவர்.

## தலையும் வாலும்!

காட்டில் ஒரு பாம்பு நிம்மதியாக வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் அதன் வால், உயர்ந்து நின்று தலையைப் பார்த்து “அது என்ன எப்பொழுதும் நீயே முன்னால் போய்க் கொண்டிருக்கிறாய்? நான் என்ன பின்னால் வந்து கொண்டே இருக்க வேண்டுமா என்ன? இது என்ன நியாயம்?” என்று கேட்டது.

“மரியாதைக்குரிய வால் அவர்களே, எனக்குக் கண்கள் இருப்பதால், நான் முழு உடம்பையும் வழிநடத்திச் செல்கிறேன். உமக்குக் கண்கள் இல்லையே! எப்படி முன்னால் போக முடியும்?” என்று கேட்டது தலை.

“நான் பின்னாலிருந்து உந்திக் கொடுக்காவிட்டால் நீ எப்படி முன்னால் போக முடியும்?” என்றது வால்.

“அதென்னவோ, நான்தான் முன்னால் இருப்பேன். முன்னால் போவேன். அதுதான் இயற்கை, அதுதான் வழக்கம். அதை மாற்ற முடியாது. நீ செய்ய வேண்டியதைச் செய்து கொள்!” என்று தலை முன்னால் போக ஆரம்பித்தது.

வாலுக்குக் கோபம்! “நான் யாரென்று காட்டுகிறேன் பார்!” என்று உள்ளுக்குள் கருவிக் கொண்டது.

பாம்பு நகர்ந்து போய்க் கொண்டிருந்த போது வழியில் குறுக்கிட்ட ஒரு மரத்தைச் சுற்றிப் பிடித்துக் கொண்டது வால். உடலையும் சேர்த்து இழுத்துச் சுற்றிக்கொண்டது.

“இனி, மேலே போ பார்க்கலாம்!” என்று தலையைப் பார்த்து ஏளனமாகக் கூறியது வால்.

பாம்பினால் நகர முடியவில்லை.

இழுத்து இழுத்துப் பார்த்தது. மரத்தைச் சுற்றியிருந்த உடலை வெளியே இழுக்க முடியவில்லை. வலித்தது.

நீண்ட நேரம் முயன்று பார்த்தபின், தலை தன் தோல்வியை ஒப்புக்கொண்டது.

“சரி, நான் தோற்றுவிட்டேன். இனி நீ விருப்பப்படியே செல்லலாம். நீ முன்னால் போ! நான் உன்னைப் பின்பற்றி வருகிறேன்” என்றது தலை.

உடனே வால் நகர ஆரம்பித்தது.





முழு உடலையும் தலையையும் இழுத்துக்கொண்டு நகர்ந்தது.

எப்படியோ போகட்டும் என்று தலை, கண்களை மூடிக்கொண்டது.

ஆனால், வாலினால் சரியான பாதையில் போக முடியவில்லை. அங்குமிங்கும் முட்டி மோதியது. வாலுக்குக் கண்கள் இல்லாததால் பள்ளத்தில் விழுந்து உருண்டது. காயம்பட்டது. கடைசியில் இறந்தேவிட்டது.

உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் உண்டு. அடிப்படையில் எல்லாம் சமம் என்றாலும் ஒவ்வொன்றிற்கும் ஓர் இடம் ஓர் பொறுப்பு உண்டு; அதன் எல்லை கடத்தல் அகங்காரம். அதனால் விளைவது அழிவு!

-“சாரிட்ட ஆணவக் கருவறையில்
அறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போல்...”
- தாயுமானவர்

- “மீண்டும் ஜென் கதைகள்”
தொகுப்பிலிருந்து.

வெளியீடு: கண்ணதாசன் பதிப்பகம்,
12, கண்ணதாசன் சாலை,
தி.நகர்., சென்னை 17.

# தெரிந்து கொள்வோம்

### அரபு லீக் (AL)

இது 1945-ஆம் ஆண்டு மார்ச் 22-ல் தோற்றுவிக்கப்பட்டது. இதன் உறுப்பு நாடுகள் ஓமன், லிபியா, அரேபியா, சோமாலியா, டுனீஷியா, அரபுக் குடியரசு, பஹ்ரைன், குவைத், லெபனான், சவுதி அரேபியா, பாலஸ்தீனம், அல்ஜீரியா, சிரியா, சூடான், ஏமன், மொராக்கோ, மாரிடோனியா முதலியவையாகும்.

### ஒபெக் (OPEC)

இது பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகள் நிறுவனமாகும். 1960-ல் இக் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அதிகமான விலைக்கு எண்ணெய் விற்பதைத் தடுத்து நிறுத்த ஈரான், ஈராக், குவைத், வெனிசுவேலா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் ஒன்றுகூடி இந்நிறுவனத்தை ஆரம்பித்தன. தற்போது 80 சதவிகிதம் எண்ணெய் இதன் மூலம் ஏற்றுமதியாகின்றது. ஓரளவு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளும் இதில் உறுப்பு நாடுகளாகச் சேர அனுமதி உண்டு.

### செஞ்சிலுவைச் சங்கம் (ICRC)

இது 1863-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. போர் மற்றும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அல்லல்களைக் களைய இச்சங்கம் உதவுகிறது. இது 100 நாடுகளில் இயங்கி வருகிறது. மூன்று முறை நோபல் பரிசுகள் பெற்றுள்ளது.

### இன்டர்போல் (INTERPOL)

இது 1923-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதில் 147 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இதன் நோக்கம் அனைத்து நாடுகளின் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் [illegible] [illegible]வதேயாகும்.



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை :**

எங்கள் ஊர் ராமாவரம் தோட்டம் எதிர்ப்புறம் மணப்பாக்கம் செல்லும் சாலை. இதன் வழியாக மணப்பாக்கம், கொளப் பாக்கம், கெருகம்பாக்கம் என்று குன்றத்தூர் மற்றும் போரூர் இணைப்புச்சாலை அமைந்துள்ளது, இந்தச்சாலை ராமாவரம் தோட்டம் நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரம் செல்லும் மேற்படி கிராமங்களுக்குச் சென்னைக்கு கிராமத்தில் இருந்து பொது மக்கள் மற்றும் பள்ளி சிறுவர், சிறுமிகள், அலுவலகப் பணியாளர்கள், தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், அங்காடிகளுக்குச் செல்பவர்கள், மருத்துவ வசதி தேடிச் செல்பவர்கள் என நாள் ஒன்றுக்குச் சுமார் 1000 முதல் 5000 வரை ம்க்கள் பஸ் பயனம் மேற்கொள்கிறார்கள். மேற்படி கிராமங்களுக்குப் பல்லவன் பஸ் தி.நகர் முதல் அய்யப்பன்தாங்கல் வரை சென்று வர 1/2 மணி நேரத்திற்கு அல்லது 1 மணி நேரத்திற்கு ஒன்று என (குறித்த காலம் இல்லை) 2 பஸ்களும், 21இ, 9எ, 54என் ஆகிய மூன்று பஸ்களும் பிராட்வே முதல் கெருகம்பாக்கம் வரை காலை ஒரு முறையும் மாலை ஒரு முறையும் வந்து செல்கிறது. மேற்படி தடம் எண்கள் கொண்ட பஸ்,குறித்த காலத்தில் எந்த ஒரு நாளிலும் வருவது கிடையாது. மேலும் சில தினங்களில் பல்லவன் பஸ் 54 குறித்த காலத்தில் வந்தால் பிரேக் டவுன் என்ற பேரில் ஓரம் கட்டி நிறுத்திவிடுவார்கள். சுத்தமாக பஸ் வருவதே கிடையாது. பல்லவன் நிறுவனம் மாற்று ஏற்பாடு செய்வதே கிடையாது. எனவே, எங்கள் ஊர் பஸ் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும், கூடுதல் பஸ் விட்டு எங்கள் குறையினைத் தீர்த்து வைக்கும்படியும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ரூபினி ஸ்டெல்லா
மணப்பாக்கம்

**தீர்வு :**

மணப்பாக்கத்திற்கு, மணப்பாக்கம் வழியாக இயக்கப்படும் 4 தடங்களில் மொத்தம் 40 பயணநடைகள் பயணிகள் நலனுக்காக இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். பேருந்துகளைச் சரிவரவும் குறித்த நேரத்திலும் இயக்க ஆவன செய்யப் பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தடம் எண். 54பி - 2 நடைகள்
தடம் எண். 54என்
எல்எஸ்எஸ் - 6 நடைகள்
தடம் எண். 9 எ - 4 நடைகள்.
தடம் எண். 21இ விரிவு

பொதுமேலாளர் (இயக்கம்) பல்லவன்
போக்குவரத்துக் கழகம்.







**பிரச்சினை :**

எங்கள் ஊர் குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட 'தரப்பாக்கம்' கிராமம் இவ்வூரைச் சுற்றி - தண்டலம், இரண்டாங்கட்டளை, மேல் மாநகர், பாரதி நகர், சதாநந்தபுரம் ஆகிய கிராமங்களைக் கொண்டதும் இங்கு மூன்றாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் வசிக்கின்றனர். நாங்களும் எங்களைச் சுற்றியுள்ள கிராம மக்கள் அனைவரும் கடைக்கோ அல்லது கல்லூரி, பள்ளி மற்றும் வேலைக்கோ செல்லவேண்டும் என்றால், ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். சிறிது மழை பொழிந்தாலும் நாங்கள் அனைவரும் கிராமத்தை விட்டுச் செல்ல முடியாத சூழ் நிலையால் தவித்துவருகின்றோம். அவ்வாற்றில் நீர் வற்றியபின்புதான் அவரவர் பணியைச் செய்ய ஏதுவாகிறது. கடந்த ஆட்சியில் பல கடிதங்கள் அனுப்பியும் பயன் ஏதுமில்லை. ஆனால், இப்போதுள்ள ஆட்சியானது உடனுக் குடன் மக்களின் குறைகளைத் தீர்த்துவைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, 'அனகாபுதூர் - தரப்பாக்கம்' இடையே நடை பாலம் கட்டி கொடுத்து எங்கள் குறையைத் தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொன். பாலு,
தரப்பாக்கம், சென்னை - 602 101.

**தீர்வு :**

அனகாபுதூர் பகுதி அனகாபுதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். தரப் பாக்கம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிப் பகுதியாகும். இந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கும் இடத்தில் அடையாறு ஆறு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்களவு சுமார் 100 மீட்டர் நீளமாகும். இந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ஊராட்சி நிதியிலோ பேரூராட்சி நிதியிலோ போதிய வசதி இல்லை. ஆகவே இந்தப் பாலம் கட்டும் திட்டத்தை அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு மூலம் அரசுத்துறை செய்து முடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நா.கண்ணன்
ஆணையாளர்
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை



**பிரச்சினை :**

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் கடலூர் வட்டம் கல்குளம் கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்கிறார்கள். ஊர் மக்கள் முயற்சி செய்தும் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனால், தங்கள் மூலமாக இந்த கள்ளச்சாராயத்தைக் கல்குளத்தில் விற் காமல் தடுக்க முயற்சி எடுக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

ஊர்ப் பொதுமக்கள்,
கல்குளம்.

**தீர்வு :**

மேற்படி கிராமத்தில், குறிஞ்சிப்பாடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதுவிலக்கு வேட்டை நடத்தி குறிஞ்சிப்பாடி காவல் நிலைய குற்ற எண். 465/96 மற்றும் 535/96 பிரிவு 4(1) (ஏ) தமிழ்நாடு மதுவிலக்கு அமல்பிரிவு சட்டப்படி சாராயம் விற்பனை செய்பவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து சாராய விற்பனை நடைபெறா வண்ணம் கண்காணிக்கப்பட்டுவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி.வி. ரவிச்சந்திரன், இ.கா.ப.
காவல்துறை (கண்காணிப்பாளர்)
தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.

**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊரான பாலூர் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அண்ணா கிராமம் ஒன்றியத்தில் அமைந்துள்ளது. எங்கள் ஊரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சுமார் 2500 பேர் உள்ளனர். இதர முற்பட்ட, பிற்பட்ட வகுப்பினர் 2500 பேர் உள்ளனர். மொத்தம் மக்கள் தொகை 5000க்கு உள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள காலனி பகுதியானது, தனியாக வெகு தூரத்தில் உள்ளது.

எங்கள் ஊரின் சத்துணவுக் கூடம் ஊரின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. இதனால் தற்பொழுது பல குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றார்கள். மேலும் காலனி குழந்தைகளும் பயன்பெற்று வந்தாலும் எங்கள் ஊரில் அடிக்கடி சாதிச்சண்டை நடந்துவருவது தவிர்க்க இயலாததாக உள்ளது.

ஊரின் நடுப்பகுதியில் சத்துணவுக்கூடம் அமைந்துவிட்டதால், காலனி பகுதி குழந்தைகளும் கர்ப்பிணிகளும் வருவதற்குச் சிரமப் பட்டு வருகின்றார்கள். எனவே, எங்களுக்கு உடனடியாகக் காலனி பகுதிக்கு எனத் தனியாகச் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

**–கிராமவாசிகள்,** பாலூர்
மற்றும் **சி. மண்ணாங்கட்டி**
ஊராட்சி மன்றத் தலைவர்.

**தீர்வு :**

மேற்படி பாலூரில் ஏற்கெனவே ஒரு சத்துணவுக் கூடம் இயங்கி வருகின்றது. மேலும் காலனிப் பகுதிக்கெனத் தனியாக மையம் துவங்குவதற்குத் திட்ட ஒருங்கிணைப்பாளர், சென்னை மூலம் அரசுக்குப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டவுடன் பாலூர் காலனியில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- கோ. அன்பழகன்,**
மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்
(பொ) கடலூர்.

**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊர் ஏரி சுமார் 300 ஏக்கர் சாகுபடி கொண்ட ஏரியாகும். கடந்த 10 ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக, ஏரி கால்வாய் அனைத்தும் தூர்ந்துவிட்டது. ஆக்கிரமிப்புகளால் அடைத்துவிட்டது. இதனால், தற்போது பெய்த மழையிலும் எங்கள் ஊர் ஏரியில் 10 நாள் கூட நீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. இதை அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரிடம் தெரிவித்தும் பலன் இல்லை. எனவே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பார்வதி இராமநாதன்**
மேல் வணக்கம்பாடி, செங்கம் ஒன்றியம்
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

**தீர்வு :**

திருமதி பார்வதி ராமனாதன் குறிப்பிடும் ஏரிக்கான நீர்வரத்து, மேல்செங்கம் மத்திய மாநிலப் பண்ண்ணை அமைக்கப்பட்டுள்ள எல்லைவழியாக, சம்பந்தப்பட்ட ஏரிக்கு வர வேண்டியதாகும். கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் 24.1.97 சம்பந்தப்பட்ட ஏரிகளைப் பார்வையிட்டு, பண்ணை நிர்வாகத்தின் மற்றும் கிராமத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து, பண்ணை நிர்வாகத்தினரால் தடைசெய்யப்பட்டுள்ள நீர்வரத்தினைக் கிராமத்தினர் பயன் பெறுமாறு திறந்துவிட உத்திரவிட்டுள்ளார் என்பதைத் தெரிவித்தக் கொள்கிறேன்.

மேலும்; ஏரியினை ஒன்றியம் மூலம் தலபாசனத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் சீர்செய்யவும் உத்திரவிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**–ப. ருத்ரமூர்த்தி,**
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்,
செங்கம்.

16ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தெருவுல சண்டை வந்திச்சு. அவரு குடிச்சிட்டு இருந்தாரு. பேச்சுவாக்குல அவர நெட்டித் தள்ளிட்டாரு. அந்த நொள்ள செங் கேணி பாராங்கல்லு மேல உழுந்து மார வலிக்குது மார வலிக்கு துன்னாரு! அதுக்குள்ள போயிடுச்சு."

அவள் சற்று நேரம் திகைத் தாள்.

"வாம்மா போகலாம.

"தே இரும், நாலு உஉடுதாம். எடுத்துட்டு வந்துடறன்.

"நாளைக்குச் செய்யலாம் வாம்மா."

"அட அவ மோசமானவப்பா. அதிகாரிக்கு சும்மாவாச்சும் எழுதிப் போடுவா; தே வந்துடறேன். நீ சாப்டாயா... இந்தா, இத அட்டீ திண்ணமேல உக்காந்து சாப்டு."

நான் பசித்து அழுதால், அம்மா ஏதாவது தின்பதற்கு வாங்கிக் கொடுத்து அழுவாள். சின்ன வயுதிலேர்ந்து அம்மாவுக்கு அப்படி ஒரு சுபாவம்.

அவள் மடியை அவிழ்த்து இலையோடு இழுத்து திண்ணை மேல் வைத்தாள். பழய சோற்றைப் பிரித்து வைத்து காரக்குழம்பு ஊற்றி இருந்தார்கள். அம்மாவின் மடி [illegible].

"அம்மா இன்னிக்கு அம்மாவாச ஆச்சே, மதியானம் எப்டீம்மா?"

"அதான்மா புரியல. பேசாம விமலாவை உட்டு தெருவுல சோறு வாங்கச் சொல்ல வேண்டியது தான்."

அவனுக்கு சாவு ஒரு பக்கம் இருந்தாலும் மனதுக்குள் பெருத்த சந்தோசம் ஏற்பட்டது. அமாவாசை கிருத்திகைன்னா பொதுவாக வீட்டில் எல்லோருக்கும் கொண்டாட் டந்தான். மதிய வேலைக்குப் போகும்போது அலுமினிய தாளாவை எடுத்து அதனுள் கிண்ணம், தேக்சாவை போட்டுக் கொண்டு மூடுவதற்காக துணி ஒன்றையும் எடுத்துக் கொள்வாள். மதிய வேலை செய்துவிட்டு மேஸ்திரியிடம் சொல்லிவிட்டு ஆவ சுவர் மலமெடுக்கும் தெருவிற்குப் போவது போல் அம்மாவும் அம்மா வாசை கிருத்திகைக்கு வீடு வீடாகச் சோறுவாங்க வந்துவிடுவாள். பொழுது நேரம் சாய்ந்து இருட்டத் தொடங்கியதும் நாங்கள் சோற்றுக் காக உட்கார்ந்திருப்போம். அன் றைக்கு அம்மா அரிசி கடன் வாங்கி வந்து ஆக்கமாட்டாள். மறுநாள் குழம்பும் வைக்கமாட்டாள். மீந்த குழம்பைச் சுடவைத்து வைப்பாள். வேண்டும் மட்டும் பரிமாறுவாள். சோற்றில் மீந்ததைத் தண்ணீர் ஊற்றி வைப்பாள்.

தீபாவளி பொங்கல் என்றால் படுகுஷி. தீபாவளிக்கு வேலை செய்யும் இடங்களில் பட்டாசு சத்தம், புதுச் சட்டையும்






சந்தோசமும் நிறைந்து இருக்கும். எனக்கு அவற்றின் மேலெல்லாம் ஆசை கிடையாது. தங்கை கூட அம்மா எப்ப வருவாங்க என்று காத்திருந்து என்னை நச்சரிப்பாள். தெருவில் 'இட்லிகாரம்மா' கிழவியிடம் வாங்கித் தின்று காலமெல்லாம் வயிறுக்கு மாளாது.

தீபாவளி அன்று அம்மா தெருவில் வாங்கி வரும் இட்லி பூப்பூவாய், பெரியதாய், சில கனத்தும், தடித்தும் விதவிதமாய் இருக்கும். ஜவ் தாளொன்றில் முறுக்கு, அதிரசம், இனிப்பு பலகாரம் என்று ஒரு பக்கம். வடை, குழம்பு, சீசாவில் எண்ணெய், சீயக்காய் பொட்டலம் என்று ஒரு சேர வாங்கி வருவாள்.

கொடுக்க மனம் வராத ஒரு சிலர் புலம்புவார்கள். ஒரு முறை குழம்பு தேக்சாவைத் தூக்கிக் கொண்டு அம்மாவுடன் உதவிக்காக வீடு வீடாக வந்து கொண்டிருந்தேன்.

"ஏண்டி, கெவர்மெண்ட்டுல உனக்கு சம்பளம் குடுக்கல?"

அந்தப் பொம்பளை அவளை மாதிரியே தடிப்பாய்க் கேட்டாள்.

"குடுக்கறாங்கதான்".

"பின்ன சும்மா எனாம் கேக்க வந்துட்டா?"

"விக்கற வெலவாசி தெரிமா; நாங்க எப்படி பொழைக்க முடியும்?"

அதுக்கு சம்பளம் அதிகமா வேணும்னு அரசாங்கத்துல போராடுங்க."

"நாங்க போராடனா குடுக்கவாப் போறாங்க. போராடிப் பாத்துட்டம். இன்னும் போராடிக் கிட்டுதான் இருக்கிறோம்."

"அங்க உட்டுட்டு, பின்ன இங்க வந்துடற, அமாவாசைக்கு சோறு, கிருத்திகைக்கு சோறு, தீபாவளிக்கு, பொங்கலுக்கு இன்னாதான்...".

"தேம்மா, கஷ்டப்பட்டு உம் பீய காலம் பூறா வார்றமே, நெஞ்சில் எங்கனா ஈரம் இருக்கா உனுக்கு. எங்க வறுமைக்கு உன் கிட்ட பிச்ச எடுக்கறம். இஷ்டம் இருந்தா குடு இல்லாட்டி உடுமா."

"குடுக்கலைன்னா இன்னாடி செய்வ? நாலு நாள் கக்கூஸ் எடுக்க வரமாட்ட; நாறிப் போயிடும்னு பாக்குறியா; எங்க வூட்டுக்காரரு யாரு தெரிமா, அதிகாரிகிட்ட சொல்லி உன் வேலைக்கு ஒலவெச்சுடுவேன் சாக்கிரத."

"தேம்மா, ரொம்பதான் சில்த்துக்காதே.. உம் புத்தி உன்னோட வெச்சுக்கோ - காசுக்கு பீத்தின்ற ஆளில்ல நாங்க. எங்க வேலைய நாங்க செய்வோம். அதிகாரி கிதிகாரின்னு மெரட்டாத, எங்களுக்கும் சங்கம் இருக்கு."

அம்மாவும் விடாமல் உரிமையாய்ப் பேசுவாள்.

தீபாவுளிப் பலகாரங்களைக் கொண்டு வந்ததும் எனக்கு பஞ்சு பஞ்சாய் உள்ள இட்லியை அழுத்திப் பார்த்து வைப்பாள். கறிக் குழம்பு தனியாய் வாங்கி வந்ததை ஊற்றுவாள். வடை, சாம்பாரோடு வேண்டு மட்டும் பரிமாறுவாள், முறுக்கு பலகாரங்களை அடுக்குப் பானையில் ஜவ்தாள் உறையோடு வைத்து அவ்வப்போது ஒவ்வொன்றாய் எடுத்துத்தருவாள்.

பொங்கலுக்கும் அப்படித்தான். விதவிதமாய்ப் பொங்கல் சோறு வாங்கி வருவாள். எனக்கு இனிப்புப் பொங்கல் பிடிக்காது. தங்கை பிரியமாய் சாப்பிடுவாள். பால் நிறம் போன்ற வெண்பொங்கலை வைத்து சாம்பார் ஊற்றுவாள். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல் லாவகமாய் இறங்கும். ஊரெல்லாம் தீபாவளி, பொங்கல்னா எங்களுக்கும் இந்தவிதமாய் ஒருவித சந்தோசம்.

நான் அம்மாவை உட்கார வைத்துக் கொண்டு தெருவிற்கு வந்தேன். சைக்கிளை விட்டு இறங்கியதும் சொல்லாமல் கொள்ளாமல் அழுகை பீறிட்டு வந்தது அம்மாவுக்கு. பறையொலி ரொம்ப தூரம் கேட்கும் அளவிற்குக் காதைக் கிழித்தது. அழுது முடிந்து கொஞ்ச நேரத்தில் அம்மா எழுந்து வந்து விமலாவின் காதில் கிசுகிசுத்தாள்.

மாலை முழுவதும் டன் டன்னக்கா. டன் டன்னக்கா பறையொலி ஆட்டம் பாட்டத்துடன் ஒலித்தது. மாமாவின் சாவிற்கு உறவினர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். மறுநாள் தான் எடுப்பதாய் இருந்தது. அம்மா மட்டுமில்லை, தெருவில் பலர் வேலைக்கு விடுமுறை சொல்லியிருந்தார்கள்.

பொழுது சாய்ந்து செங்கல் மங்கலாய் இருந்தது. விமலா சோற்றுக் கூடையுடன் வந்ததும் அம்மா அவள் வீட்டிற்குப் போய்ப் பார்த்தாள்.

"இன்னாடீ, சோறு ரவதான் கீது."

'ஏன்கா, நீ இல்லாம சோறே எவளும் தர்ல; இன்னா பேசுறாங்க தெரியுமா, வாயில வந்தத திட்டீட்டு



கெடைச்சத வாங்கியாந்தன்."

அம்மாவுக்குப் பார்க்க பகீர் என்றது. விமலாவைப் பாதி சோறு குழம்பு எடுத்துக் கொண்டு, மீதியை எங்கள் வீட்டில் வைக்கச் சொன்னாள். எனக்கும் தங்கைக்கும் உள்ளுக்குள் ஏராளமான சந்தோசம்.

லோல்பட்டு லொங்கழிஞ்சி அம்மா எங்களைக் காப்பாற்றியதை நினைத்தால் இன்னமும் அதிர்ச்சியாய் இருக்கிறது. அதிர்ச்சிகள் சில வரலாறு தருவது.

**'தாய்மண்' சிறுகதைத்..**
**தொகுப்பிலிருந்து...**

**வெளியீடு:**
**விளிம்பு டிரஸ்ட்,**
**கோவை - 641 015**




# தமிழரசு

**அரசு வெளியீடு**

**அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.**

## விளம்பரக் கட்டண விவரங்கள்

| | தமிழ் மாதம் இருமுறை ரூ. | ஆங்கிலம் மாதம் ஒருமுறை ரூ. |
|---|---|---|
| 4வது அட்டை ... | 8000.00 | 4000.00 |
| 3வது அட்டை ... | 4000.00 | 2000.00 |
| 2வது அட்டை ... | 6000.00 | 3000.00 |
| முழுப்பக்கம் (கருப்பு-வெள்ளை) ... | 2000.00 | 1000.00 |
| அரைப்பக்கம் (கருப்பு-வெள்ளை) ... | 1000.00 | 500.00 |

தமிழரசு - தமிழ் இதழ் ஆண்டுச்சந்தா ... ரூ. 72.00

தமிழரசு - ஆங்கிலம் இதழ் ஆண்டுச்சந்தா ... ரூ. 36.00

தொடர்ந்து 12 இதழ்களுக்கோ அல்லது அதற்கு மேற்கொண்டோ தமிழரசு இதழ்களில் விளம்பரம் தருபவர்களுக்கு 10% சிறப்புச் சலுகை உண்டு.

விளம்பர பக்க அளவு . . . . . . . . . . . . . . 25 x 20 செ.மீ.

விளம்பர செய்தி அளவு. . . . . . . . . . . . . . 23 x 17 செ.மீ.

அரசு ஒப்புதல் பெற்ற விளம்பர நிறுவனங்களுக்கும், தமிழரசு முகவர்களுக்கும் 15% விளம்பரக் கழிவு உண்டு.

மேலும் விவரங்களுக்கு:

**உதவி இயக்குநர்**
தமிழரசு,
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002.

தொலைபேசி: 568926
568927

# உணவே மருந்து-மருந்தே உணவு

டாக்டர் சு.கோபலகிருஷ்ணன்

மனிதர்கள் தொழில் புரிவதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கவும், உடலை நிலைபெறச் செய்யவும், உடலை வளர்க்கவும் புசிப்பதே உணவு. இம்மூன்று குணங் களையும் பெற்றிருக்கும் சத்துகள் உணவில் நிறைந்திருக்க வேண்டியதுமின்றி, அவை சீரணமாகி, உடலில் பொருந்தக் கூடியவைகளாயும் இருக்க வேண்டும்.

நம் பெரியோர்கள் அமைத்த உணவுத் திட்டம் மிகச் சிறப்பானதாகும். அவர்கள் சத்துவக்குணத்தை அளிக்கும் பொருள்களையே பெரும்பாலும் இவைகளை மத்தியானத்திலும், எளிதில் செரித்து உடலில் பொருந்தக்கூடிய விலங்கு புரோட்டின் முதலிய பலவகைச் சத்துக்களைப் பெற்றுள்ள மந்தமில்லாப் பொருள்களாகிய பசும்பால், அன்னம், இளங் காய்கறிகள் இவைகள் இரவிலும் உண்ணும் படியான நியதிகளை முன்னோர்கள் வகுத்து, கடைப்பிடித்து வந்துள்ளனர்.

இப்படி சிறுபொழுதுக்கு ஏற்றபடி உண்பது உடலுக்கு உகந்த முறையாகும்; விஞ்ஞானப்படியும் சிறந்ததாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

இயற்கை அடையாளமாகும். சுவையில் அறு சுவைகள் உண்டு. நாம் உண்ணும் உணவின் அறு சுவைகளும் கலந்து இருக்குமாறு பார்த்துப் பாகம் செய்யப் படுகிறது.

இவ்வாறு அறுசுவை உணவு உண்பதுதான் உடலுக்கு ஏற்றதாகும். உடலின் வளர்ச்சிக்கும், சக்திக்கும் ஏற்றவகையில் துணை செய்வது சுவைகளே.

ஒவ்வொரு - சுவைக்கும் தனித்தனிக் குணங்கள் உண்டு.

துவர்ப்புச் சுவை -
ஆற்றலைத் தரும்

உணவாகக் கொண்டார்கள். வைட்டமின்கள், புரோட்டின் கார்போஹைட்ரேட் ஆகிய பல உணவுச்சத்துகளைப் பற்றி அவர்கள் கூறாவிடினும் "நெய்கலந்த பருப்பு அன்னத்தை ஒரு பிடி உண்ண ஒருபிடி சதை வளரும்" என்று அறிந்து கூறினார்கள்.

சீரணிப்பதற்குக் கடினமாக புரோட்டின் சத்தை அதிகமாகப் பெற்றிருக்கும் வாயுப் பொருள்களாகிய பருப்பு வகைகளைக் காலையிலும் கார்போ ஹைட்ரேட் வைட்டமின் இவைகளை அதிகமாகப் பெற்றிருக்கும் மந்தப் பொருள் களாகிய அரிசி, தயிர், கிழங்கு, கீரை, பழம்

ஒவ்வொரு உணவுப் பொருளிலும், உணவுத்தன்மை மட்டுமின்றி வேறு குணங்களும் - நோயை உண்டாக்கும் தீக்குணங்களும், நோயைப் போக்கும் நற்குணங்களும், அமைந்திருக்கின்றன. உதாரணமாகப் புது அரிசி அன்னம், அசீரணம், பேதி இவைகளை உண்டாக்குகிறது. எனவே, பொருள்களின் குணங்களை உணர்ந்து அவைகளின் தீக்குணங்களை நீக்குவது அவசியம், என்பதோடு அப்படி நீக்குவதற்கான சில வழிகளையும் காட்டியுள்ளனர். உணவுப் பொருட்களில் சுவை உண்டு. உணவில் சுவை என்பது ஊட்டந்தரும் பகுதியின்

கார்ப்புச் சுவை - வீரத்தைத் தரும்.

இனிப்புச் சுவை - வளத்தைத் தரும்.

உவர்ப்புச் சுவை- தெளிவைத் தரும்

கைப்புச் சுவை -
மென்மையைச் சேர்க்கும்

புளிப்புச் சுவை -
இனிமையைத் தந்து உடலை அழகுறச் செய்யும்.

பசி ஏற்படுவது என்பது முன் உண்ட உணவு, முற்றும் செரிமானமாகிவிட்டது என்பதை உணர்த்தும் நிலையாகும். இரு மலங்கள் (மலம், சிறுநீர்) கழிந்து குடலிலுள்ள வாயு முற்றும் வெளிப்பட்டு, உள்ளந்தெளிந்து, ஐம்பொறிகள் தூயநிலையடைந்து, முக்குற்றங்கள் தன்னிலையில் பொருந்தி, உடல் இலேசத்துவம் பெற்றிருந்தால், முன்உண்ட உணவு, முற்றும் செரிமானமாகிவிட்டது என்பதை அறியலாம். அப்பொழுது பசி தோன்றும்.

இங்ஙனம் முன் உண்ட உணவு, முற்றும் சீரணித்ததை அறிந்து, பின் உணவு கொள்பவர்க்கு மருந்துண்ண வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை-

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய**
**தற்றது போற்றி யுணின்"**

- என்னும் குறட்பாவால் அறியலாம்,இன்னும் திருவள்ளுவர் –

**"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து"**

- எனக் கூறியபடி நல்ல பசி தோன்றியபின்தான், உணவு கொள்ள வேண்டும். உடலிற்கும் காலத்திற்கும் ஏற்ற அறுசுவைகளுடன் நன்றாகப் பாகம் செய்த உணவை அளவுடன் அருந்த 6 மணி நேரத்தில் முற்றிலும் சீரணமாகும். செரிமானக்காலத்தில் வேறு ஏதேனும் உட்கொண்டாலும் பானம் பருகினாலும் அசீரணம் ஏற்படும். தினம் மூன்று வேளை உணவு உட்கொள்ளலாம் என இருப்பினும், முன்னோர் கூற்றுப்படி இரு வேளைதான் உட்கொள்ள வேண்டும், என்பதை

**"உண்பதிரு பொழுதொழிய மூன்று பொழுதுண்ணா"**

என்பதால் அறியலாம்.

வயோதிகர்களுக்குச் சீரண சக்தி குறைவாக இருக்குமாதலால் இவர்கள் ஒருபொழுது உண்ணப்பயிற்சி செய்து கொள்வது நலம். யோகிகளும் சத்துவக்குணத்தை அடையும் பொருட்டு, ஒரு பொழுதுதான் உண்ணவேண்டும்.

உணவை அளவுடன் உண்ணுதல் வேண்டும். இதனால் நெடுநாள் வாழ இயலுமா; இதை-

**"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு**
**பெற்றா னெடிதுய்க்கு மாறு"**

-என்ற குறட்பாவால் அறியலாம்.

உணவு, பசிக்கு ஏற்றவாறு கொள்ளுதல் வேண்டும்.

நாம் உணவாகக் கொள்ளக் கூடிய பொருட்கள் அனைத்தும், தாது, தாவர, சீவப் பொருட்கள் என்ற மூன்று வகையினுள் அடங்கும்.

**தாதுப் பொருட்கள்**

உடலுக்குத் தேவையான உலோக உபரச காரசாரப் பொருள்களாகிய தாதுப் பொருள்களுடைய சத்துகள், நாம் உண்ணும் தாவர விலங்கு உணவுகளில் போதுமான அளவு இருப்பதால், தாது பொருட்களை பாகம் செய்து உணவாகக் கொள்வது அவசியமில்லை.

**தாவரப் பொருள்கள்**

தாவரப் பொருள்களே நமது உணவிற்கு அதிகமாகப் பயன் படுத்தப்படுகின்றன. இவை மரம், செடி, கொடி, புல் என நான்கு வகைப்படும். இவைகளின் கிழங்கு, தண்டு, கீரை, பூ, காய், பழம், வித்து முதலிய பல உறுப்புகளும் உணவாகின்றன. இவைகளுள் புல் இனத்தைச் சேர்ந்த பயிர் தானியங்களே பிரதான உணவாக இருந்துவருகின்றன.

இவை, சிரமமின்றி எளிதில் செரிக்கக் கூடியதாக உள்ளன. இவற்றில் நெல், கோதுமை, கம்பு, கேழ்வரகு, சோளம் வரகு, தினை ஆகியவை முக்கியப் பயிர் தானியங்களாகும். தென்னிந்தியாவில் அரிசியும், வட இந்தியாவில் கோதுமையும் பிரதான உணவுதானியங்களாக உள்ளன.

**விலங்குப் பொருள்கள்**

விலங்குப் பொருள்களில் நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன என்ற மூன்று செயலைக் கொண்டவற்றை மட்டும் உணவிற்காகப் பயன்படுத்துகிறோம்.

இவைகளின் பால், இறைச்சி ஆகியவற்றினை மட்டுமே உணவாகக் கொள்கிறோம்.

பண்டையத் தமிழ் மக்கள் அன்றாட உணவு முறைகளில் கடைப்பிடித்து வந்த பழக்கங்களே அவர்கள் திடமாக நீடித்த ஆயுளுடன் வாழ்ந்ததற்குக் காரணம் என்பர். இயற்கையாகக் கிடைக்கக் கூடிய கீரை, காய், கனி மற்றும் சில தாவரப் பொருட்களைத் தேவையான அளவிற்கு உண்டு வாழ்கின்றபோது, நோய் நம்மை நெருங்குவதில்லை. மனித சமுதாயம், உய்வதற்கு வழி தேடும் வகையில் பண்டைய சித்தர்கள், மூலிகைகளின் வகைகளைக் கூறி, அதன் நோய் தீர்க்கும் தன்மைகளை விளக்கமாகக் கூறியுள்ளார். அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் தாவரப் பொருட்களில்

சிலவற்றின் வகை, குணம், பயன்களைப்பற்றி இனி ஆராயலாம்.

**மிளகு**

மிளகு - வாத, பித்த, கர்பக் குற்றங்கள் ஆகிய அனைத்தையும் நீக்கும். அன்றியும், திமிர், வாதம் முதலியவைகளை அகற்றும். மிளகுத் தூளை 260 முதல் 390 மி.கி. கொடுக்க பசியைத் தூண்டும். வெப்பத்தை உண்டு பண்ணி மனவெழுச்சியை உண்டாக்கும்.

**சீரகம்**

இதனால் பித்தம் தீரும். வயிற்றுவலி, ஈரல் நோய், குருதிக் கழிச்சல், இரைப்பு, வாதநோய்கள் தீரும். உடலுக்கு வலிமை தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். சீரகத்துடன் நாட்டுச் சர்க்கரையுடன் விடாது உண்டுவர, தேகம் வன்மை பெறும்.

**சுக்கு**



சுக்கினால் செரியாமை, புளியேப்பம், வயிற்றுப்புசம், குன்மம், கழிச்சல், இருமல் தீரும். சுக்கு, கற்கண்டு சம அளவு எடுத்து, இரண்டையும் பொடிசெய்து, சிட்டிகையளவு காலை, மாலை இருவேளை இளநீரில் கொடுத்தால் நெஞ்சு வலியும், மேல் மூச்சும் நீங்கும்.

**பெருங்காயம்**

இதனால் வயிற்று நோய்கள், மாந்தம், குன்மம், பெருவயிறு நோய்கள் நீங்கும். தேக நோய்கள், பல்நோய், கப நோய்கள் தீரும். பிள்ளை பெற்றபின் அழுக்கு வெளியேற காயத்தைப் பொரித்து வெள்ளைப்பூண்டு, பனை வெல்லத்துடன் சேர்த்துக் காலை வேளை தோறும் கொடுக்கலாம்.

**இலவங்கம்**



இது மயக்கம், பேதி, வாந்தி, குருதிக் கழிச்சல், செவிநோய், கண்ணில் பூ ஆகியவற்றை நீக்கும். கிராம்பை நீர்விட்டரைத்து, நெற்றியிலும், மூக்குத் தண்டின் மீதும் பற்றிடத் தலைபாரம், நீரேற்றம் குணமாகும்.

**இலவங்கப்பட்டை**

இது இரைப்பு, இருமல், வயிற்றுநோய்களைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். சிலந்தி, பாம்புக்கடி நஞ்சினைப் போக்கும். சீதக் கழிச்சலுக்குக் கொடுக்க நல்ல பலனைத் தரும்.



**மஞ்சள்**

உடலில் பூசிக்குளிக்க உடலுக்குப் பொன்னிறம் தரும்.



புலால் நாற்றத்தை நீக்கும். பசியை உண்டாக்கும். வாத பித்த, கப குற்றங்களை நீக்கும். தலைவலி, நீரேற்றம், மூக்கு நீர் பாய்தல் இவை போகும். வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து, அம்மைக் கொப்பளத்தின் மீது பூச - அவை பழுத்துடைவதன்றி, வெகு எளிதில் ஆறிப்போகும்.

**வெந்தயம்**

சீதக் கழிச்சல், வெள்ளை, குருதியழல் நோய், வெள்ளை, கணக்காய்ச்சல், எலும்பைப் பற்றிய சுரம், நீர்வேட்கை





இவைதீரும். கஞ்சியில் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கப் பால் சுரக்கும். இதனை அரைத்துத் தலையில் தேய்த்து ஊற வைத்துத் தலை முழுகிவர, மயிர்வளரும். தவிர மயிர் உதிர்ந்து போவதைத் தடுக்கும்.

**சோம்பு**

செரியாமை, வயிற்றுப்புசம், வயிற்றுவலி, சுரம், இருமல், இரைப்பு, மூக்குநீர் பாய்தல் ஆகியவை நீங்கும். வாலையிலிட்டு வடித்து எடுக்கப்படும் சோம்பு நீர் மேற்கூறிய நோய்களைப் போக்கும்.

**கறிவேப்பிலை**

இலையை நிழலிலுலர்த்தி, இத்துடன் மிளகு, உப்பு, சுக்கு, சீரகம் முதலியவற்றைப் பொடியாக்கிச் சோற்றில் கூட்டி கொஞ்சம் நெய்விட்டுக் கலந்து உண்ண, மாந்தம், போன்றவை நீங்கும்.

**எலுமிச்சை**

இதனால் தீக்குற்றத்தால் உண்டான நோய்களும், வாந்தி, வாய்க்குமட்டல், நீர்வேட்கை, மயக்கம், வெறிநோய்களும் தீரும். இப் பழரசத்தோடு குளிர்ச்சியையும் கொடுக்கும். இதன் இலையைக் காடியிலிட்டு நீராகாரமாகப் பருகுவது நமது நாட்டுப் பழக்கம்.

**ஏலம்**

இது இருமல், கழிச்சல் கோழை, நீர்ச்சுருக்குப் போன்ற நோய்களை நீக்குவதோடு தொண்டை, வாய், கீழ்வாய் இவைகளில் உண்டாகும் பிற நோய்களையும் நீக்கும். ஏலக்காய், பனைவெல்லம் சேர்த்து, நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சிக் கொடுத்தால் பித்தத்தால் உண்டாகும் தலைமயக்கம் நீங்கும்.



**ஓமம்**

இதனால் செரியாமாந்தம், பொருமல், கழிச்சல், இருமல் இரைப்பு, கபசுரம், பல்நோய் இவைகள் நீங்கும். ஓமம் , சுக்கு, சித்திரமூலவேர்ப்பட்டை இம் மூன்றும் சமஅளவு எடுத்து, பொடித்து, ஒன்றாகக் கலந்து, மொத்த எடைக்குக் கடுக்காய்ப்பொடி சேர்த்து மூன்று வேளை மோரில் கலக்கிக் கொடுக்க மந்தம் தீரும்.

**கடுக்காய்**

இது பசித்தீயைத் தூண்டி, செரிப்பிக்கச் செய்து உடற்கட்டுகளுக்கு வன்மை தந்து, முதுமை வரவிடாமல் தடுக்கும். அறிவையும், ஆற்றலையும் பெருக்கும். எனவே இது காயகற்பப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. தோடங்கள் தங்கிய இடங்களிலிருந்து அவைகளை வெளிப்படுத்துதல், குடலிலுள்ள இயற்கைச் சக்தியைத் தூண்டி பலத்தை வெளிப்படுத்துதல், இவற்றைச் செய்யும். இவைகளன்றி, கன்னம், கழுத்து, நா, ஆண்குறி இவ்விடங்களில் தோன்றும் நோய்கள், காலடிப் புற்றுநோய், காமாலை, தாது, தாவர சங்கம்விடங்கள் இவை நீங்கும். கடுக்காயைத் துவையல் செய்து சாப்பிட மலத்தைக் கட்டும். ஒவ்வொரு நாளும் காலைதோறும் கடுக்காயை ஓராண்டு சாப்பிட்டுவர, நரை திரை மாறும். பச்சைக் கடுக்காயைப் பாலில் அரைத்துச் சாப்பிட இருமல் நீங்கும்.

**நெல்லிக்காய்**

நெல்லிக்காயைப் பகலில் உண்ண கபநோய், வாந்தி,



வெறிநோய், மயக்கம், மலக்கட்டு, தலைச்சுற்று இவை தீரும். இதைத் துவையல் செய்து சாப்பிட சுவையின்மை, வாந்தி ஆகியன போக்கும். இதைக் கொண்டு செய்யப்படும் லேகியம் உடல்வன்மைக்கு மிகச் சிறந்தது.

**துளசி**

துளசியால் கபநோய், சுரநோய் என்பன நீங்கும். பித்தத்தால் ஏற்படும் வெறிநோய் தணியும். கருந்துளசியால் இருமல், இரைப்பு, நெஞ்சில் ஏற்படும் கபம், மார்புச் சளி, வயிற்றுப்

புழு, தலை நஞ்சு முப்பிணி இவை அகலும். இதைப்



பாலிலிட்டுக் காய்ச்சிப் பருக, உடலிலுண்டாகும் குற்றங்கள் விலகும். கபத்தை விலக்கும். இதை நீரில் போட்டுக் காய்ச்சி ஆவி பிடித்தால் கபநோய்கள் தீரும்.

**வல்லாரை**

வாய்ப்புண், குருதிக்கழிச்சல், குருதிக்கழிச்சலால் உண்டாகும்,



வயிற்றுக் கடுப்பு, தொண்டைக்கமரல், சுரம், வீக்கம், யானைக்கால், நெரிக்கட்டி, மேகப்புண், கண்டமாலை, தூதகக் கட்டு, விரைவீக்கம் ஆகியன தீரும். வல்லாரையிலைச் சாற்றில், சிறிது உப்பு, சாதிப்பத்திரி சேர்த்துக் கொடுக்க வல்லைநோய், பெருவயிறு முதலிய நோய்கள் நீங்கும்.

**கீழ்க்காய் நெல்லி**

கீழா நெல்லியால், வயிற்று மந்தம், காமாலை, குருக் கழிச்சல், தாதுவெப்பம், நாட்பட்ட மேகப்புண், பித்த மிகுதியால தோன்றும் நோய்கள், கணணில் காணும் நோய்கள், நாவறட்சி என்பன தீரும். இலையை உப்பு சேர்த்தரைத்துப் பூச சொறி, சிரங்கு போகும். கீழாநெல்லியை அரைத்து, நல்ல பசுவின் தயிரில் கலந்து உண்ணக் காமாலை நோய்கள்



குணமாகும்.

**ஆடாதோடை**

வாத, கபக்குற்றங்களின் பெருக்கைக் குறைக்கும். பலவிதமான சுரம், இருமல், இரைப்பு, விக்கல், குருதியழல், முப்பிணி, வயிற்று நோய், தூலை, இவைகளைப் போக்கும். நல்ல குரலொலியைத் தரும். இலையை உலர்த்தி, சுருட்டாகச் சுருட்டி புகை பிடிக்க இரைப்புநோய்தீரும். பூவை வதக்கி இரு கண்களின்மீதும் வைத்துக்கட்ட கண்நோய்கள் தீரும்.

**முருங்கை**

முருங்கை இலையினால் மந்தம், தலைவலி, கண்நோய், வெறிநோய், மூர்ச்சை முதலிய நோய்கள் குணமாகும். முருங்கையிலைச் சாற்றை இரு துளிகள் கண்ணில் விட்டுவர கண்வலி நீங்கும். இதனையே தேனுடன் சேர்த்து கண்மை போன்று கண்ணிமைகளில் போடலாம். இலையும், மிளகும் சேர்த்து நசுக்கி, சாறெடுத்துத் தலைவலிக்கு நெற்றியில் தடவலாம். இலையை அரைத்து வீக்கங்களின் மீது பற்றிடலாம். பட்டையைச் சிதைத்து, வீக்கங்கள், கட்டிகள் இவற்றின் மீது வைத்துக் கட்டலாம், வேரை அரைத்து கடுகுத்தூள் சேர்த்து நீர்விட்டரைத்து கீல்வாயு, வீக்கங்களுக்குப் பற்றிட வீக்கம் குறையும்.

மேற்கூறியவற்றில் இருந்து உலகின் மூத்த முதல் மருத்துவ முறையாகத் தோற்றம் பெற்றிருக்கும் **"தமிழ் மருத்துவம்"** தனக்கெனக் கொண்டிருக்கும் தனி பாணி **"உணவே மருந்து மருந்தே உணவு"** என்பது தெளிவாகிறது. ஆகவே, நாம்

**"அளவுக்கு மிஞ்சினால்**
**அமிர்தமும் நஞ்சு"**

-என்ற பழமொழியைக் கருத்தில் கொண்டு

**"அற்றால் அளவறிந்து உண்க**
**அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு"**

- என்ற குறளின் வழிநின்று,

உணவு முறைகளைக் கொண்டு நோயின்றிப் பல்லாண்டு வாழலாம், என்பதனையும், தேவைப்படின் அந்த உணவுப் பொருட்களையே, மருந்தாக அளவில் மாற்றம் செய்து உண்டு-நோய் நீங்கி நல்வாழ்வு வாழலாம் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.



# வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்கள்

**ஊ**ராட்சி ஒன்றியங்கள்- ஊரக வேலைத் திட்டங்கள், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சாலை வசதி செய்தல், குடிநீர் வசதி. செய்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தன. ஊராட்சி ஒன்றியத்தின் அன்றாட நிர்வாகப் பணிகள் ஆணையரால் கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் அவ்வப்போது பல புதிய வளர்ச்சித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு ஊராட்சி ஒன்றி யங்கள் மூலமாகச் செயற்படுத்தப் பட்டன. 1980ஆம் ஆண்டு முதல் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன. இந்தப் புதியதிட்டங்களை முனைப்புடனும் உரிய கவனத்துடனும் செயல் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டங்கள் கூடுதல் ஆணையர்கள் மூல மாகச் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திலும் ஆணையாளர் பொது நிர்வாகத்தையும், கூடுதல் ஆணையாளர் வளர்ச்சிப் பணி களையும் கவனித்து வந்தனர். கவனிக்கும் பணிகள் விவரம் வருமாறு:

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறு திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.), கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குழந்தை நலப் பாதுகாப்புத் திட்டம், மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தகவல் கல்வி தொடர்பு திட்டப்பணிகள், தேசிய கரிம வாயு மேம்பாட்டுத் திட்டம், தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா (அடுப்பு) திட்டம் ஆகியவைகளே அப்பணிகள்.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1989ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவை களை இணைத்து, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப் படுகின்றன.

### திட்டத்தின் நோக்கம்

கிராமப்புறத்தில் வேலைவாய்ப் பற்றவர்கள் மற்றும் போதிய

வேலை இல்லாதவர்களுக்குக் கூடுதலாகப் பயனுள்ள வேலை வாய்ப்பை உருவாக்கவும், கிராமங்களில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்கவும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### நிதி

இதற்கான நிதியை மைய அரசு 80 சதவிகிதம், மாநில அரசு 20 சதவிகிதம் என்ற அடிப்படையில் வழங்குகின்றது.

### திட்டங்கள்

1995-96 வரை இத்திட்டத்தில் இந்திரா நினைவுக் குடியிருப்புகள், ஜவகர் வேலைத் திட்டப் பணிகள், மில்லியன் கிணறு திட்டம் இவைகளைச் சேர்த்து ஒரே திட்டமாகச் செயல்பட்டு வந்தது. 1996-97 முதல் இவை மூன்றும் தனித்தனித் திட்டங்களாகச் செயல்பட்டுவருகின்றன.

ஜவகர் வேலைத் திட்டம்
ரூ.157.05 கோடி.

இந்திரா நினைவுக்
குடியிருப்புகள் ரூ.100.23 கோடி.

மில்லியன் கிணறு திட்டம்
ரூ.39.25 கோடி.

### இந்திரா நினைவுக் குடியிருப்புகள்

இத்திட்டத்தில் 1996-97ல் ஆதிதிராவிடர்களுக்கு 60,000 வீடுகளும் மற்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 11,598 வீடுகளும் கட்டப்படுகின்றன. சென்ற ஆண்டு வரை ஒரு வீட்டிற்கு ரூ.14,000 என மத்திய அரசு நிர்ணயித்ததை இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ரூ.20,000 என உயர்த்தியுள்ளனர். கரிசல் மண் மற்றும் மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ.22,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு 20% பங்குத் தொகையுடன் சிமெண்ட் கான்கிரிட் கூரை அமைக்க ரூ.7,000 வீதம் கூடுதலாக வழங்குகின்றது. இத வீடு கட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பயனாளிகளுக்கு அவர்கள் பெயரில் பட்டா அல்லது அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டுமனை இருக்க வேண்டும். கூரை செலவினம் நீங்கலாகப் பிற பணிகளுக்கு இந்த ஆண்டு ரூ.100.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் பொதுச் சொத்து உருவாகும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும் பணிகள்:

ஆரம்பப் பள்ளிக்கட்டிடம், ஊராட்சி மன்றக் கட்டிடம், சத்துணவு மையக்கூடம். சீரமைக்கப்பட்ட பொது விநியோகக் கட்டிடம், பால் நுகர்வோர் உற்பத்தியாளர் சங்கக்கட்டிடம், தொலைக்காட்சி அறை, இணைப்புச் சாலைகள், மயானச் சாலைகள், ஆதிதிராவிடர் குடியிருப்பு இணைப்புச் சாலைகள்.

இதுவரை இத்திட்டத்தில் வழங்கும் நிதியில் 80% ஊராட்சிகளுக்கும் 20% மாவட்ட ஊரக முகமைக்கும் பிரித்து வழங்கப்பட்டதை இந்த ஆண்டு 1996-97 முதல் ஊராட்சிகள் 65%, ஊராட்சி ஒன்றியம் 15%,மாவட்டம் 20%என பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்குப் பயன் படக்கூடிய வகையில் 22 1/2% ஒதுக்கப்பட வேண்டும்.

### மில்லியன் கிணறு திட்டம்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மலைவாழ் மக்கள் மற்றும் இதர நலிந்த பிரிவினரில் சிறு/குறு விவசாயிகளுக்கு அவர்களின் தனிப்பட்ட பெயரிலோ அல்லது இரண்டு அல்லது மூன்று பயனாளிகளின் பெயரில் கூட்டாகவோ, குறைந்தது ஒரு எக்டேர் நிலம் இருந்தால் ஒரு பாசனக்கிணறு வெட்ட அதிகபட்சம் ரூ.48,000 வரை நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வெட்டப்படும் கிணறுகளுக்குப் பம்புசெட் பொருத்த மான்யத்துடன் கூடிய கடனும், மின் இணைப்பும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ.39.25 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

1.10.1996 முதல் கிணறுகள் வெட்ட முடியாத இடங்களில் மொத்தக் கிணறுகளில் 50 வரை ஒரு கிணற்றிற்கு அதிகபட்சம் ரூ.35,000 வரை மானியம் அளிக்கும் வகையில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.



தனிப்பட்டவர்களுக்கு மேலே கூறப்பட்ட விவசாய மேம்பாட்டுத் திட்டம் தவிர - சிறுபாசன ஏரிகள், நிலவள மேம்பாடு, ஊரகக்குளம், ஊரணி, குட்டை கோவில் குளங்கள், கசிவு நீர்க்குட்டை போன்ற பணிகளை மேம்படுத்தி அடிமட்ட நீர் ஆதாரங்களைப் பெருக்கவும் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

### வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

திட்டத்தின் நோக்கம்:

கிராமங்களில் வேலை செய்யக்கூடிய நிலையிலுள்ள விவசாயப் பணியாளர்களுக்கு விவசாயப் பணிகள் இல்லாத நாட்களில் ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்காவது ஆண்டுக்கு 100 நாட்கள் ஆதாயம் உள்ள வேலை வாய்ப்பினை அளிக்கவும், பயனுள்ள உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சமுதாயச் சொத்துக்கள் ஏற்படுத்தவும் செயல்படுத்தப்படுகின்றது.

### நிதி

இத்திட்டத்திற்கு மைய அரசும் மாநில அரசும் 80:20 விகிதத்தில் நிதி அளிக்கின்றன.

### திட்டங்கள்

இத்திட்டம் தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில் 198 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தில், நீர் மற்றும் நிலவள மேம்பாடு 40% சிறுபாசன ஏரி, குளங்கள் பணிகள் 20%, சாலைப் பணிகள் 20%, பள்ளிக் கட்டிடம் குழந்தைகள் காப்பகம் 20% எனப் பிரிக்கப்படும்.

இத்திட்டத்தில் வேலை தேவையென்று கோரும் கிராம மக்கள் (18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டவர்) குடியிருக்கும் ஊராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கப்படும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.11,000-க்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் வருமானத்தைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சொத்துக்களை உருவாக்க, அரசு மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால், கிராமங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோர் பயனடைகின்றனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு 50% அரசு மான்யமும் குறு விவசாயிகள், விவாசாயக் கூலிகள் மற்றும் கிராமக் கைவினைஞர்ளுக்கு 33 1/3 விழுக்காடு மான்யமும், சிறு விவசாயிகளுக்கு 25%மான்யமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்கு அதிகபட்சமாக ரூ.6,000 அரசு மானியம் வழங்கப்படுகிறது. ஏனையோருக்கு வறட்சிப்பகுதியில் ரூ.5,000மும், பிற பகுதிகளில் ரூ.4000மும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 50 விழுக்காடும், பெண்கள் 40 விழுக்காடும், உடல்



ஊனமுற்றவர்கள் 3 விழுக்காடும் பயனடைகின்றனர். மாவட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 25 விழுக்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு, வண்டி மாடுகள், உழவு மாடுகள், மளிகைக்கடை, டீ கடை, பொம்மை செய்தல், மண்பாண்டம் செய்தல், தச்சுத் தொழில், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல் ஆகிய இனங்களுக்கு மானியம் மற்றும் கடன் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்குரிய மானியம் 31.3.96 வரை வங்கிகளுக்கு நோடல் வங்கிகள் மூலம்முதலிலேயே கொடுக்கப்பட்டன. இவ்வாறு செய்வதன் மூலம் சில வங்கிகளில் மானியத்தை மட்டும் கடனாகக் கொடுத்துவிட்டு, வங்கிக் கடனைக் கொடுக்காமல் உள்ளனர். இதைத் தவிர்க்கும் பொருட்டு 1.4.96 முதல் பயனாளிக்குரிய மானியம் பின்முனை மான்யமாக வழங்கப்படுகிறது. இதன்படி, வங்கியில் பயனாளிகள் பெயரில் மானியம் சேமித்து வைக்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டு இம் மாநிலத்தில் இத்திட்டம் ரூ.75.37 கோடி மான்யத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

**கிராமப் புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சி அளித்து அவர்களின் தொழில்நுட்பத் திறமையை வளர்த்து, சுய வேலைவாய்ப்பு அளிக்கச் செய்வதேயாகும். இத்திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தில் இருந்து 18 வயது முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, ஆர்வமுள்ள தொழில்களில் பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்கள் மூலமாகவும், தொழில் நுட்ப வல்லுநர் மூலமும், வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 3 மாதம் முதல் ஓர் ஆண்டுக் காலம்வரை ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சியின் போது மாதம் ஒன்றுக்கு ரூ.350 பயிற்சித் தொகையாகவும் மற்றும் ரூ.800 பெறுமான இலவச உபகரணங்களும் வழங்கப்படுகிறது. தொழில் வல்லுநரிடம் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.200 பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், தொலைக்காட்சி மற்றும் ரேடியோ பழுதுபார்த்தல், கம்ப்யூட்டர், இருசக்கர வாகனம், மின்சார ஒயரிங் மற்றும் மோட்டார் பழுதுபார்த்தல், தையல் மற்றும் எம்பிராய்டரி தொழில்கள், பாய் பின்னுதல், ஓலைப்பெட்டி முடைதல், மோட்டார் ரீவைண்டிங், கயிறு திரித்தல், காளான் தயாரித்தல், கைப்பை தயார் செய்தல் போன்ற தொழில்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஊரகப் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஓர் உட்பிரிவாக இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புறப் பெண்களின் பொருளாதார நிலைமை உயர, நிலையான சுயவேலைவாய்ப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு குழு அமைப்பாளரைக் கொண்டு ஒன்றுபட்ட அக்கறையுடைய 10 முதல் 15 பெண்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒட்டுமொத்த நிதியாக ரூ.25,200 வழங்கப்படுகிறது. இத்தொகையை மைய அரசும், மாநில அரசும் சம விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன.

சாத்தியக்கூறுள்ள அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளை இக்குழுக்கள் மேற்கொள்ளலாம். இக்குழு கிராமப்புறப் பெண்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளத் தடையாக இருப்பவற்றை நீக்கி எளிமைப்படுத்தும்.

**குழந்தைகள் பராமரிப்பு நடவடிக்கைகள்**

இத்திட்டம் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்





திட்டத்தின் ஓர் உட்பிரிவாக 1995-96 ஆம் நிதியாண்டில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் நலனுக்காக மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்கள்.

டோக்ரா பெண்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளக் காப்பகங்கள் அமைத்தல்.

டோக்ரா குழுக்களின் கல்வியறிவற்ற பெண்களுக்குப் படிப்பறிவையூட்டுதல், டோக்ராவின் கீழ் பணிபுரியும் மகளிரின் பெண் குழந்தைகளுக்குக் கல்வியறிவூட்டும் மையங்களை அமைத்தல்.

டோக்ரா அங்கத்தினர்களின் பெண் குழந்தைகளைக் கவனிப்பதில் பாலினப் பாகுபாடின்றி அவர்களுக்குச் சத்துணவுத் தடுப்பூசி போடுதல் ஆகியவற்றுக்குத் தனிக்கவனம் செலுத்துதல்.

டோக்ரா அங்கத்தினர்களின் உடல்ஊனமுற்ற சிறார்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குதல்.

பெண் குழந்தைகளை, உடல் ரீதியாகத் தவறாகப் பயன்படுத்துவதைக் களைவதில் சட்ட உதவி மற்றும் உடனடி நிவாரணம் வழங்குதல்.

இத்திட்டத்திற்காகும் செலவினை மைய மற்றும் மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. ஒரே தவணை உதவியாக ஒரு குழு ரூ.15,000 உதவி பெறத் தகுதி உடையதாகும்.

**செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு**

1995-96 ஆம் நிதியாண்டில் மைய அரசு ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கம், வறுமைக்கோட்டின்கீழ் உள்ள கிராமப்புறப் பெண்களிடம் அவர்களது மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்து விழிப்புணர்ச்சியை உருவாக்கி அவர்களிடத்தில் சேமிப்பு மற்றும்



கடன் வசதி நடவடிக்கைகள் மூலம் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவதே ஆகும். மேலும், இத்திட்டம் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ள பெண்களிடத்தில், பல துறைகளில் பெண்களின் நலனுக்காக அமல் படுத்தப்படும் திட்டத்தினை எடுத்துக் கூறுவதாகும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புறப் பெண்களில் குறிப்பாக, 'டோக்ரா' திட்டத்தில் குழுக்களாகச் செயல்படும் பெண்களே இத்திட்டத்தில் பயனாளிகளாக இருக்கின்றார்கள். இத்திட்டத்தின் செலவினம் மைய மற்றும் மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. மேலும் 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.11 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### தேசிய கரிம எரிவாயுத் திட்டம்

தேசிய கரிம எரிவாயுத் திட்டம், தமிழ்நாட்டில் 1981-82 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், குறைந்த செலவினத்தில் சிக்கனமாக எரிபொருள் பயன்படுத்தப் படுவதாகும்.

### மானியம்

1996-97 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அனுமதிக்கப் பட்ட மானிய விவரம் வருமாறு:

**மானியம்**

| கலனின் அளவு | இதரர்களுக்கு | பிற்படுத்தப்பட்ட/ தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு |
|---|---|---|
| 1. க.செ.மீ. | ரூ.1,500 | ரூ.2,000 |
| 2. க.செ.மீ. | ரூ.1,800 | ரூ.2,400 |
| 3. க.செ.மீ. | ரூ.2,000 | ரூ.2,600 |
| 4. க.செ.மீ. | | |
| 8 க.செ.மீ. | | |
| 10 க.செ.மீ. | | |

மேலும், கழிப்பறையுடன் வடியும் கரிம எரிவாயுக் கலன்களுக்குக் கூடுதல் மானியமாக ரூ.300 அனுமதிக்கப்படுகிறது.

**வங்கிக் கடன்**

கரிம எரிவாயுக் கலன் அமைக்க வங்கிக் கடன் அனுமதிக்கப்படுகிறது.





### தொழில் நுட்ப உதவி

ஊராட்சிகளில் அமைக்கப் படும் கலன்களைப் பார்வையிட்டு, தொழில்நுட்ப உதவி அளிக்க வட்டார அளவில் ஊர்நல அலுவலர்/ஒன்றியப் பொறியாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளனர். மாவட்ட அளவில் திட்ட அலுவலர் கட்டுப்பாட்டில் பணிபுரியும் தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் மாவட்ட அளவில் பயிற்சி பெற்ற கொத்தனார்கள் இத்திட்டத்தின் முன்னேற்றப் பணிக்கு உதவுகின்றனர்.

### பயன்களும் நோக்கங்களும்

1. எரிபொருள் சிக்கனம்.

2. வனத்தைப் பாதுகாத்தல்.

3. பயிருக்குத் தேவையான நல்ல உரம் பெறுதல்.

4. மகளிர் மற்றும் குழந்தைகளின் நலம் பேணுதல்.

### தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா திட்டம்

மத்திய எரிசக்தி நிறுவனம் தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா திட்டம், 1983 முதல் செயல்படுத் தப்படுகிறது. இத்திட்டம், மாவட்



டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மத்திய அரசின் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

### இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

மாற்று எரிசக்தி, காட்டுவனத்தைப் பாதுகாத்தல், மகளிர் மற்றும் குழந்தைகள் நலம், கண் மற்றும் இருதய நோயைக் கட்டுப்படுத்துதல், பயிற்சிபெற்ற சுயவேலைவாய்ப்புப் பணியாளர் மூலம், சூளா அடுப்பு நிறுவுதலும், பழுதுபார்த்தலும்.

தமிழ்நாட்டில் உள்ள 33,02,958 ஊரகக் குடும்பங்களில் 31.3.96 முடிய 17,36,002 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

### நிலையான அடுப்பு

நிலையான சூளா அமைப்பதற்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அல்லது ரூ.40 சதவீதத்திற்கு மிகாமல் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

### எடுத்துச் செல்லத்தக்க அடுப்பு மானிய விவரம்:

பொதுப் பிரிவு 33 சதவீதம் அதிகபட்ச பங்குத்தொகை ரூ.40.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், மலைப்பகுதி 50 சதவீதம் அதிகப்பட்ச பங்குத் தொகை ரூ.50.

1996-97 ஆம் ஆண்டில் அடியிற்கண்டவாறு மேம்படுத்தப் பட்ட 'சூளா' நிறுவத் திட்ட மிடப்பட்டுள்ளது.

நிலையானது 50,000, எடுத்துச் செல்லக்கூடியது 1,75,000. ஆக மொத்தம் 2,25,000 ஆகும்.

வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள், இவ்வாறாகத் தமிழக அரசால் சிறப்புற நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இணை இயக்குநர்: பா. செயப்பிரகாசம், துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன்,
பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி:எண்: 568926, 568927



# ஆசிரியர் மடல்:

## கோடையிலே இளைப்பாறும்.....

தேர்வுகள் முடிகின்ற நேரம் நெருங்கிக்
கொண்டிருக்கிறது.
மாணவர்கள் முகங்களில் பதட்டமும், பயமும்;
தேர்வுகளுக்காகவே வாசிக்கிற பழக்கம்
ஏற்பட்டுவிட்டது.
இன்னும் சில நாட்களில்
விடுமுறை என்கிற இலக்கு;
விடுமுறை மட்டுமா அது?
ஒரு வகையில் விடுதலையும் கூட.
இந்த விடுமுறை நாட்களை எப்படிக் கழிப்பது?
நாட்கள், கழிப்பதற்காக அல்ல, களிப்பதற்காக.
நம்மில் புதிய இதழ்கள் சில விரிந்து
நறுமணத்தை நாம் பூசிக்கொள்வதற்காக.
இந்த விடுமுறை நாட்களிலும் 'அடுத்த வருடப்
படிப்பிற்குத் தயார் செய்துகொள்'
என்று மாணவர்களை மறுபடியும்
பள்ளிநாட்களின் நீட்டிப்புக்கு உட்படுத்த
வேண்டுமா?
பெற்றவர்கள் சிந்திக்கவேண்டும்.
அந்தப் பாடத்திற்கும் இந்தப் பாடத்திற்கும் தனி
வகுப்புகளுக்கு அனுப்புகிற
பெற்றோர்களைப் பார்க்க முடிகிறது.
இந்த நாட்களில் குழந்தைகளை மிகுந்த
சிந்தனைக்கு உட்படுத்தவேண்டும்.
அவற்றோடு நிறையப் பகிர்ந்து கொள்ள
வேண்டும். அவை பேசட்டும்;
அவற்றைப் பெற்றோர்கள் உற்றுக் கேட்கட்டும்.
அவற்றின் உலகத்தைக் கொஞ்சம்
புரிந்து கொள்ள முயலட்டும்.
அந்த உலகம் எவ்வளவு அழகானது
என்பதை அறிந்துகொள்ள
மனதைத் திறந்துவைத்துக் கொள்ள வேண்டிய
அவசியம் பெற்றோர்களுக்கு எப்போதும் உண்டு.
நம் உலகத்தையே அவர்கள்மீது
திணித்தது போதும்!
அவர்களை அழைத்துச்சென்று
கடலுக்கும், மலைகளுக்கும்,
அழகான இசைக்கும், நடனத்திற்கும்,
சிற்பததிறகும் பாடத்தோடு தொடர்பில்லாத
இனிய புததகஙகளுக்கும் அறிமுகப்படுத்தி
வைக்கிற கடமை நமக்கு உண்டு!
இந்த நாட்டிற்காக, மொழிக்காக
அயராது பாடுபட்ட
தலைவர்களைப் பற்றி அவர்களிடம்
பரிமாற வேண்டும்.
எதுவும் இயல்பாக;
மலரிலிருந்து தேனீ மகரந்தம் சேர்ப்பதைப் போல
1 கிலோ தேனைச் சேகரிக்க 5 லட்சம்
மலர்களைத் தேனீக்கள்
புலன் விசாரணை செய்ய வேண்டியதாக
இருக்கிறது.
நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமான
மாற்றத்திற்குட்படுத்துதல்
அதிகப் பயனை விளைவிக்கும்;
சொல்ல வேண்டியதை ஒரு கதையாக
உருவகக் கவிதையாக
பண்பட்ட பழமொழியாகச் சொல்கிறபோது
அதிகப் பலன் உண்டு.
இருப்பதைக் காட்டிக்கொள்ளாமல்
இதயம் துடித்து இயங்க வைப்பதுபோல்
அந்தச் செய்தி அவர்களை அமைதியாக அடையும்.
விடுமுறை என்பது மனதையும்,
எண்ணங்களையும் புதுப்பித்துக் கொள்கிற
நிகழ்வாக மாறவேண்டும்.
இரண்டு சொற்களுக்கு இடையே இருக்கிற
இடைவெளி போல்,
இரண்டு எழுத்துக்களுக்கு நடுவே உள்ள
வெற்றிடம் போல்,
கோடை விடுமுறை என்பது இரண்டு
கல்வியாண்டுகளுக்கு இடையே மிகுந்த
முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்
பெற்றவர்களே உணர வேண்டும்!












ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



தூய
பட்டு

தூய
சரிகை


தமிழரசு
Licence No, TN/MS(C).
தமிழரசு
குறைந்த முதலீட்டில்
கட்டடங்கள்



## இந்த இதழில்...


★ இளமையில் அம்பேத்கர் ... 2

★ மேற்படிப்பும் வேலை வாய்ப்பும் ... 5
- டாக்டர் கா.மு. பாதுசா

★ குறைந்த முதலீட்டில் கட்டடங்கள். .. 9

★ தமிழ் - முதல் நாவல் - - 14
- சு. நா. சுப்பிரமணியம்

★ சிறுதொழில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்வடிவம் - 17
- திருமதி. ஓ.பி. சோசம்மா இ.ஆ.ப.

★ கலிபோர்னிய மலைகளில் உன் பிறந்த நாள்! - 19

★ வளர்ப்பு - ம. ராஜேந்திரன் - 20

★ காலமெல்லாம் காளான் வாழ்க - 25

★ உயிர் திரவம் இரத்தம் - 29
- டாக்டர் சு. கணேசன்
- டாக்டர் கி. சுவாமிநாதன்

★ கீரையோ கீரை - 33
- சிவசூரியன், இ.ஆ.ப.

★ எங்கள் ஊர் பிரச்சினை - 35



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2028

சித்திரைத் திங்கள் - 3

மலர் : 27 16.4.97 இதழ் : 20


**அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகளை வழங்கும் 'தமிழரசு' வெளியீடான 'அரசு செய்தி' வார சுவர் செய்தித்தாளின் முதல் பிரதியினை, 15.4.1997 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை அரசு தலைமைச் செயலாளர் திரு.கே.ஏ.நம்பியார், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார்.**



# இளமையில் அம்பேத்கர்

முருகப்பெருமான், வள்ளி தெய்வானையோடு உற்சவக் கோலம் பூண்டிருந்தார்.

பல்லக்கில் ஏற, பயபக்தியோடு வந்தார் குருக்கள்.

பல்லக்கின் அருகே விளக்கேந்தி நின்றிருந்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினன் ஒருவன். அந்த இளைஞனின் துணி, காற்றில் அசைந்து குருக்களின் மேல் பட்டுவிட்டது.

அவ்வளவுதான்; எரிமலையானார் குருக்கள். "அடேய் அபிஷ்டு, என்னைத் தொட்டுத் தொலைச்சுட்டியேடா. இன்னொரு தட்வையில்லே நான் போய் ஸ்நானம் பண்ணியாகனும்!" என்று கூறித் தலையில் அடித்துக்கொண்டார். எரிச்சலோடு முகஞ்சுளித்து, எரித்துவிடுவது போல அவனைப் பார்த்தார்.

பல்லக்கின் மேல், முருகக் கடவுளோடு நின்றிருந்த குறமகள் வள்ளி, அதை ஓரக்கண்ணால் பார்த்துக் கலகல வென்று சிரித்தாள்! முருகனும் முறுவலித்தான்!

- புகழ்மிக்க எழுத்தாளர் ஒருவரின் கைவண்ணம் இது.

இப்படிக் கடவுளரே கைகொட்டிச் சிரிக்குமளவுக்கு, மனிதன் சாதிமத பேதங்களுக்கு ஆட்பட்டுவிட்டான். இந்த நிலை, மனித சமுதாயத்தையே பிடித்துள்ள பெரும் நோயல்லவா?

உயிருக்கோ உடம்புக்கோ எந்தச் சாதியும் கிடையவே கிடையாது. இந்தக் கருத்தை வலியுறுத்திப் பெருமை கொண்டவர் தான் டாக்டர் அம்பேத்கர்.

ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை! ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்கவதாக ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப்பட்டது அக்குழந்தைக்கு.



அந்தக் குழந்தைதான் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர்.

மக்கட் செல்வம் நிறைந்த அக்குடும்பத்தில், ஏனோ அந்தச் செல்வம் அனைத்தும் அப்படியே நிலைத்திருக்கவில்லை. பலராமன், அனந்தராவ் ஆகிய ஆண்பிள்ளைகளும்-மஞ்களா, துளசி ஆகிய பெண்களும், கடைசியாகப் பிறந்த நம் அம்பேத்கரும் மட்டுமே எஞ்சினார்கள். இந்த ஐவர் போக மற்றவர்களெல்லாம் பல்வேறு கால கட்டங்களில் இளமையிலேயே மாண்டு போனார்கள்.

அம்பேத்கர், இரண்டு வயது சிறுவனாக இருந்தபோது, அவருடைய தந்தை, ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அரிச்சுவடி முதலான பாடங்களைத் தம் இளைய மகனுக்குக் கற்பிப்பதே அவரது ஓய்வு காலப் பணியாயிற்று.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார். தேடினார்; கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில் தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர்தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில், அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்துபோவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றித் தந்தைக்குத் தகவல் தெரிவித்துவிடுவார்கள். புகை வண்டி நிலையத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப்போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக்



**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.**

குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகை வண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப்போய் நின்றார்கள்.

விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான், வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப்போய், வசைபாடியபடி வண்டியைவிட்டுக் கீழே குதித்தான் வண்டியோட்டி, திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டி விட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது; இருந்தாலும் பாதி வழிக்குமேல் பயணம் போவது தான் எப்படி? அவனுடைய கோபம் தீரும்வரை பொறுத்துக் கொண்டிருந்தார், அனந்தராவ். பிறகு மெலிதான குரலில், வண்டிக்கூலி பேசியதைப்போல் இரண்டு பங்கு தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறிவிட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே வண்டி ஓட்டிப்போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்!

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் அங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், அனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்து விட்டார்கள். கடுமையான நா வறட்சியுடனேயே கடைசிவரை தாகத்தோடு ஊர்போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.

விஷயமறிந்த ராம்ஜி சக்பால், வேதனையால் துடித்துப்போனார். இருந்தாலும், வண்டியோட்டியையோ, தாகத்திற்குத் தண்ணீர் தராதவர்களையோ கண்டிக்க அவருக்குத் தைரியம் இல்லை.

ஆனாலும் அவர் ஒரு காரியம் செய்தார். கூடிய சீக்கிரத்தில் தன்னுடைய குடும்பத்தையே சதாராவுக்குக் கொண்டுவந்துவிட்டார். ஓய்வூதியத்தோடு, புதியதாகக் கிடைத்த வேலை மூலம் வந்த வருமானமுமாகச் சேர்ந்து, மகிழ்ச்சிகரமாகக் குடும்பம் நடத்தப் போதுமானதாக இருந்தது.

பெண்பிள்ளைகளான மஞ்சுளாவுக்கும் துளசிக்கும் திருமணம் முடிந்தது.

*1896-ல்*, அம்பேத்கருக்கு ஆறு வயதாகும்போது, அவருடைய அன்புத்தாயார் பீமாபாய் இறந்து போனார்.

*1900-ல்* சதாராவில் இருந்த தொடக்கப்பள்ளியில் சேர்க்கப் பட்டார் அம்பேத்கர். திருமணமாகி விட்ட போதிலும் சகோதரிகள் இருவரும் கண்ணும் கருத்துமாகத் தமது தம்பியைப் பார்த்துக் கொண்டார்கள்; அத்தை மீரா பாய் அரவணைப்பு வேறு!

இதெல்லாம் சேர்ந்து, சிறுவன் அம்பேத்கரைச் சிறப்பாகக் கல்விபயிலச் செய்தன. தொய் வின்றித் தொடக்கப்பள்ளிக் கல்வி முடிந்தது.

சதாராவில் இருந்த உயர் நிலைப்பள்ளியில் சேர்க்கப் பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது. 'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல்வித்து அங்கே தான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது. 'அனைவரும் சமம்' என்ற உணர் வுக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர் களாலும் உதாசீனப்படுத்தப் பட்ட துண்டு.

தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந் தார்கள். அதுவும் வெறுந் தரையில்! வகுப்பறையில் இருந்த தண்ணீர்ப் பானையில் அவர் தண்ணீர் குடிக்கக்கூடாது; யாரா வது தூர நின்று ஊற்றுவார்கள் - அவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற் போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது.

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படியொரு பேதம் கொண் டிருப்பது தேவைதானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்புக்கை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால், அவர் மனநிலை எப்படி யிருந்திருக்கும்!

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர் முத்தம் விளையும் என்பதுபோல சாதிவெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருப்பதுண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர்நிலைப்பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நம்முடைய அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் படிப்பே குறியாக இருந் தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.

சதாரா பள்ளியில் அவர் சமஸ்கிருதம்' படிக்க முடியாது என்று தடை விதிக்கப்பட்டது. அது தெய்வமொழி என்பதால் அப்படி யாம்; இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத்கர், ஆனால், வெளியே தனியாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம், ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறையில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத் தோடு படித்து வரலானார் நம அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம், அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம்பேதகர்.

தெபபலாக நனைநதபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு, சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டிவிட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார். இது மட்டு மல்ல; தனக்காக எடுத்துவந்திருந்த சாப்பாட்டை அவருக்குமாகப் பங் கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒரு நாள் மட்டுமல்ல பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட் டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத் துடன் நின்றுவிடவில்லை, பீமா ராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரையும் இணைத்து 'பீமாராவ் அம்பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக் கூட வருகைப்பதிவேடு முதலிய ஆவணங்களிலெல்லாம்கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத் கர் என்ற அந்தப் பெயருடை யவரே, பிற்காலத்தில், இந்தியா வின் சட்டச் சிற்பியாகி வர லாற்றில் இடம் பெறப்போகிறார் என்பது அப்போதெல்லாம் அந்த ஆசிரியருக்கே தெரிந்திருக்காது!

**- பி.எல்.ஆர்**

□ □ □



# மேற்படிப்பும் வேலைவாய்ப்பும்

- பேராசிரியர் **டாக்டர் கா. மு. பாதுசா**

வளமான வாழ்வுக்கு அடித் தளமாக - பெற்ற கல்வியும், வேலையுமே அமைகின்றன. காலத்தில், இளைஞர்களை அவர்தம் ஆற்றல், ஆளுமை, நாட்டம், ஈடுபாடு இவற்றிற்கு ஏற்ப வழி காட்டப்பட்டால் நாட்டின் வளர்ச்சி - குறிப்பாக மனித வள மேம்பாடு மிகும் என்பதில் ஐயமில்லை. இளைய சமுதாயத்திடையே குவிந்தி ருக்கும் ஆற்றலை இனங்கண்டு ஆற்றுப்படுத்துகின்ற போதுதான், அவர்கள் படிப்புத் துறைகளை முறையாகத் தேர்ந்தெடுப் பார்கள். ஆற்றல்களை ஒழுங்குறப் பெறுவார்கள், 'எண்ணித் துணிக கருமம்' என்பது முதுமொழி. எனவே மாணவர்கள் நெறிப்படுத்தப் பட்டால் அவர்கள் வாழ்வில் சலிப்பு இருக்காது; அதிருப்தி இருக்காது; நம்பிக்கை இழக்க மாட்டார்கள்; மாறாக, மகிழ்ச்சி யுறுவார்கள். ஆனால், நமது நாட்டில் மாணவர்களை ஆற்றுப் படுத்துதல்' என்ற முறை இன்னும் சிறப்பாக அமையவில்லை.

பெற்றோர்கள், அண்டை வீட்டார், நண்பர்கள் _ இவர்க ளுடைய தாக்கங்களே படிப்புத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், வேலை வாய்ப்பினைத் தேர்ந் தெடுப்பதிலும் மேலோங்கி நிற்கின்றன. எனவேதான் இளைய சமுதாயம் எண்ணிய வளர்ச்சி யினை, குறிக்கோளினை எட்ட இயலுவதில்லை. கல்விக் கூடங் களில், குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளில் அல்லது இடைநிலைப் பள்ளிகளில் *(Primary and Middle Schools)* மாணவர்களுடைய திறமைகளை இனங்காணத்தக்க முறையான ஏற்பாடுகள் இல்லை என்று துணிந்து கூறலாம். மனிதவள மேம்பாட்டுச் சிந்தனை



யாளர்கள் இத்துறையில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

## +2க்கு அப்பால்...

உயர்கல்வி பெற ஆசைப் படுவோரில் நூற்றுக்கு ஆறு பேருக்குத்தான் இடம் கிடைக்கிறது. ஏனையோர் உயர்கல்வியினைத் தொடர முடியாது நின்று விடு கின்றனர். இவர்களுள் பலர் பல்வகை ஆற்றல்களில் திறமை பெற்றிருக்கக்கூடும். முறையான வழிகாட்டுதல் இல்லாமையால் விரக்தி அடைகின்றனர். மனச் சோர்வினால் வன்முறைகளில் கூட ஈடுபடுகின்றனர். இருக்கின்ற படிப்பு சார்ந்த செய்திகளைக் கூட இவர்களில் பலர் அறியாதிருப்பது வேதனைக்குரியது. செய்திகளை அறிந்த பலர் குறிப்பாகக் கிரா மங்களில் உள்ளோர் இத்தகைய வசதிகளை அறிந்திருந்தும் பயன் படுத்திக்கொள்ள வழி தெரியாது இருக்கின்றனர். வளர்ந்து வரும் மக்கள் தொடர்பு சாதனங்கள் வெளியிடுகின்ற அறிவிப்புகள் இன்னும் விளிம்பு நிலையில் தான் உள்ளது. இதனைப் போக்கும் பொருட்டு 10-ஆம் வகுப்பு படித்தோருக்கும் மேநிலை இரண் டாம் ஆண்டு (+2) படித் தோருக்கும் உரிய படிப்புத் துறைகளைப் பகிர்ந்து கொள்வது தான் இக்கட்டுரையின் நோக்கு.

பெரும்பாலான பெற்றோர்கள் மருத்துவம், பொறியியல் துறை களுக்கே சிறப்பளிக்கும் போக்கைக் கொண்டுள்ளனர். தகுதியும், திறமையும் வாய்ந் தோரில் பலருக்கு ஒரு குறிப்பிட்ட அளவில்தான் இடம் கிடைக்கிறது. இடம் கிடைக்காது இருப்போருக்கு முறையாக வழி காட்டி அவர்கள் கல்வியினைத் தொடரச் செய்தால் நாடு வளம் பெறும். ஆர்வமும், ஈடுபாடும் எந்தெந்தத் துறையில் மாணவர் களிடம் புதைந்திருக்கிறது என்பதை அறிந்து, அதன் வழி அவர்களை நெறிப்படுத்த வேண்டும். ஓவியம் வரைதலில் நாட்டம் உடைய மாண வர்களுக்கு ஓவியக் கல்லூரியில் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றது.

மருத்துவ அறிவினைப் பெறத் துடிக்கும் மாணவர்களை *D.Pharm, Lab Technician* படிப்புத் துறைகளுக்கு ஆற்றுப்படுத்த வேண்டும்.

பொறியியல் துறையில் நாட்ட முடைய மாணவர்கள் பொறியியல் பட்டயப் படிப்புகள், அச்சுக்கலை பட்டயப்படிப்பு போன்றவற்றில் சேருவதற்கு ஆற்றுப் படுத்த வேண்டும்.

படைப்பாற்றல் பெற்ற மாணவர்கள் திரைப் படத்துறை, இதழியல் துறைகளில் இடம்பெற முயற்சிக்க வேண்டும். வண்ணம் பூசுவதில் வல்லமை பெற்றவர்கள் அத் துறையில் பட்டயப் படிப்பில் சேர வேண்டும். வாய்வீச்சில் வல்லமை பெற்றோர் விற்பனையாளராகப் பயிற்சி பெற வேண்டும். உடற்கட்டும், அழகிய தோற்றமும் பெற்ற இளைஞர்கள் "மாதிரிகளாக" *(Models)* மாற வேண்டும். விளம்பரத் துறையில் விரைவாக முன்னேற இப்பொழுது வாய்ப்புகள் மலிந்து இருக்கின்றன. சமுதாயத்தில் முன்னேறத் துடிக்கும் இளைஞர் களுக்கு எல்லாவித வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவர்களை ஆற்றுப் படுத்துவதுதான் முக்கியம்.

## மருத்துவத்துறையில்...
*(MEDICAL)*

*MBBS, BDS, B.Pharmacy, B.Sc.Nursing, Bachelor of Physiotherapy, B.V.Sc.,* போன்ற படிப்புத் துறைகளுக்குத் தமிழக அரசின் நுழைவுத் தேர்வின் மூலம், +2 மதிப்பெண்களின் அடிப் படையிலும் தேர்வுக்குழு தேர்ந்தெடுக்கும்.

மருந்தகவியல் பட்டயப் படிப்பின் *(D.Pharm)* +2 தேர்வில் கணிதம், வேதியியல், விலங்கியல், தாவர வியல், இயற்பியல், உயிரியல் பாடங்கள் படித்தோர் படிக்க முடியும். இப் பட்டயப் படிப்பின் படிப்புக்காலம் ஓராண்டாகும். தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி களிலும், சுயநிதி கல்லூரி களிலும் இப் பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. ஏறக் குறைய 25 கல்லூரிகள் தமிழகத்தில் இப் பட்டயப் படிப்பினைப் பயிற்றுவிக்கின்றன.

**ஆய்வுக்கூட தொழில் நுட்பர்:**
LAB TECHNICIAN :

மருந்தகவியல் கல்வித் தகுதிகள் இதற்கும் பொருந்தும். படிப்புக் காலம் ஓராண்டு.

**துப்புரவு ஆய்வாளர் படிப்பு:**
SANITARY INSPECTOR COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதிகளே இதற்கும் பொருந்தும். படிப்புக் காலம் ஓராண்டு.

**பொது செவிலியர் பயிற்சி:**
(GENERAL NURSING TRAINING)

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் மூன்றரை ஆண்டாகும்.



அரசு மருத்துவக் கல்லூரிகள் நீங்கலாக சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனை, திருவல்லிக் கேணியிலுள்ள கஸ்தூரிபாய் காந்தி அரசு மருத்துவமனை, திருச்சி, சேலம் அரசுப் பொது மருத்துவ மனைகளிலும், இப்பயிற்சி வழங்கப் படுகிறது.

**மாறுகண் சிகிச்சை மருத்துவப்படிப்பு:**
(ORTHOPIST COURSE)
(மகளிருக்கு மட்டும்)

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். மதுரை மருத்துவக் கல்லூரி இப்பயிற்சியினை அளிக்கின்றது.

**பல் மருத்துவப் படிப்பு :**
DENTAL MECHANIC COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் ஈராண்டுகள். சென்னை மருத்துவக் கல்லூரி இப் பயிற்சியினை அளிக்கின்றது.

**பல் தூய்மைப் படிப்பு :**
DENTAL HYGIENIST COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் ஈராண்டுகள். சென்னை பல் மருத்துவக் கல்லூரி இப் படிப்பினை வழங்குகின்றது.

**விழி ஒளி பரிசோதகர் படிப்பு :**
COURSE IN OPTOMETRY:

தகுதி இயற்பியல் உள்ளிட்ட +2 அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெற்றோர் இப்படிப்பில் சேரலாம். வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி இப்படிப்பினை ஈராண்டுகள் நடத்துகின்றது. சென்னை அரசு கண் மருத்துவமனை இப்பயிற்சியினை ஓராண்டில் வழங்குகிறது.

**கண் மருத்துவ உதவியாளர் படிப்பு :**
OPTHALMIC ASSISTANT COURSE :

கல்வித்தகுதி அறிவியல் பாடங்களில் தேர்ச்சி (+2வில்).

பயிற்சிக்காலம் இரண்டு ஆண்டுகள்.

மதுரை, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரிகள் இப் பயிற்சியினை அளிக்கின்றன.

**நுண் திசுக்கள் நோய்க்குறியியல் படிப்பு -ஆய்வுக்கூட தொழில் நுட்பம் :**
COURSE IN HISTOPATHO - LOGICAL LAB.TECHNOLOGY:

தகுதி: +2வில் உயிரியல் அடங்கிய அறிவியல் பாடங்கள்.

பயிற்சிக்காலம் ஒரு ஆண்டு.

வேலூரின் கிறித்தவ மருத்துவக் கல்லூரி இப்படிப்பினை வழங்குகிறது.

**தொழில் சார்ந்த நோய் சிகிச்சை - இளையர்:**
BACHELOR OF OCCUPATIONAL THEROPY (BOT)

தகுதி இயற்பியல், வேதியியல், உயிரியல்/விலங்கியல், தாவரவியல் பாடங்களில் 50% தேர்ச்சி.

பயிற்சிக் காலம்: மூன்றாண்டுகள்.

வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக்கல்லூரி, இதனை அளிக்கிறது.

**கதிர் வீச்சியலில் உதவியாளர் சான்றிதழ் படிப்பு :**
CERTIFICATE COURSE IN RADIOLOGICAL ASSITANT:

தகுதி அறிவியல் பாடங்களில் +2 படிப்பு.

சென்னை மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரிகள் ஓராண்டு காலம் இப்படிப்பினை அளிக்கின்றன.

**கதிர் வீச்சியல் (நோய் அறிதல்) படிப்பு மற்றும் கதிர் வீச்சியல் (நோய் சிகிச்சை) படிப்பு**
COURSE IN RADIOGRAPHY (DIAGNOSIS) AND COURSE IN RADIOGRAPHY (THERAPY) :

+2வில் இயற்பியல் பாடங்களுடன் கூடிய அறிவியல் பாடங்கள்.

பயிற்சிக் காலம்: ஈராண்டுகள்

வழங்குவோர்: வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி அளிக்கிறது.

**அணுத்திறன் மருந்துத் தயாரிப்பு தொழில்நுட்பவியல் படிப்பு :**
Course in nuclear Medicine Tech :

மேற்கூறிய கல்வித் தகுதி இதற்கும் பொருந்தும். ஈராண்டு கால இப்பயிற்சியினை வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவமனை அளிக் கிறது.

**மருத்துவப் பதிவேடு தொழில்நுட்பப் பணியாளர் பயிற்சி மையம் :**
MEDICAL RECORD TECHNICIAN TRAINING CENTRE:

6 மாத கால இப்பயிற்சியினை அளிப்பது.

**சிறார்களுக்கான சிறார்நல நிறுவனம் - குழந்தைகளுக்கான மருத்துவமனை, எழும்பூர், சென்னை.**
INSTITUTE OF CHILD HEALTH & HOSPITAL FOR CHILDREN, EGMORE, CHENNAI.

**கை-தொழுநோய் தொழில்நுட்ப பயிற்சிப் படிப்பு :**
COURSE IN HAND AND LEPROSY TECH.TRAINING :

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த ஓராண்டு கால படிப்பினை



வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகிறது.

**தொழில் சார் நோய் சிகிச்சை பெருஞ்சான்றிதழ் படிப்பு:**
DIPLOMA IN OCCUPATIONAL THERAPY:

இந்த மூவாண்டுகாலப் படிப்பினை வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகிறது.

**தொடு உணர்வு நோயறி தொழில்நுட்பவியல் :**
PERGUSION TECHNOLOGY:

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த இரண்டு ஆண்டு கால படிப்பினை அளிப்பது வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி.

**மயக்க மருந்து தொழில்நுட்பப் பணியாளர் பயிற்சி மையம் :**
ANAESTHESIA TECHNICIAN TRAINING CENTRE

மேற்கூறிய தகவல்கள் இதற்கும் பொருந்தும்.

**செயற்கை உறுப்புப் பொருத்துதல் - மூட்டு செயற்கை உறுப்பு பொருத்துதல் பெருஞ்சான்றிதழ் படிப்பு :**
DIPLOMA IN PROSTHETICS AND ORTHOTICS:

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த ஈராண்டு கால படிப்பினை வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகின்றது.

**ஓமியோபதி மருத்துவ இளயல் :**
BACHELOR OF HOMEOPATHIC MEDICINE: (BHMS)

இந்த ஐந்தாண்டு காலப் படிப்பினை - சென்னை மற்றும் மதுரையிலுள்ள அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியும், நாகர்கோவிலிலுள்ள *White Memorial* ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியும், சேலத்தில் உள்ள வினாயகா மிஷன் ஹோமியோபதி கல்லூரியும் அளிக்கின்றன.

**யுனானி மருத்துவ இளயல் :**
BACHELOR OF UNANI MEDICINE : (BUMS)

பயிற்சி காலம் 7½ ஆண்டுகள்.

சென்னையிலுள்ள அரசு யூனானி மருத்துவக்கல்லூரி, அரும்பாக்கம், பயிற்சியளிக்கிறது.

**ஆயுர்வேத மருத்துவ இளயல் :**
BACHELOR OF AYURVEDIC MEDICINE: (BAMS)

1. ஆயுர்வேதக் கல்லூரி, பதன் ஜலிபுரம், தொடகம், கோயம்புத்தூர்.

பயிற்சிக்காலம் 7½ ஆண்டுகள்.

2. வெங்கட்ரமனா ஆயுர்வேதக் கல்லூரி, சென்னை, 6½ ஆண்டுகள் இப்பயிற்யினை அளிக்கின்றது.

அரசு மருத்துவமனைகள், மாநகராட்சி தொடங்கி ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்டு விரிவடைந்து வருகின்றன.

தனியார் மருத்துவமனைகள் நாளொரு வளர்ச்சியும், பொழுதொரு மேன்மையும் பெற்று வருகின்றன. மருத்துவச் சோதனை ஆய்வுக் கூடங்கள் வீதிகள் தோறும் தொடங்கப்பட்டு வருகின்றன. மருத்துவத்துறை சார்ந்த பயிற்சி பெற்றவர்கள் தொடர்ந்து பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். அரைகுறை மருத்துவ அறிவுபெற்றவர்கள் கூட இத்துறையில் பணியாற்றுகின்றனர். மேலும் வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், ஏன் - வளர்ந்த நாடுகளிலும் கூட இந்திய மருத்துவத் துறை சார்ந்த பயிற்சியாளர்கள் தொடர்ந்து பணிக்கு அமர்த்தப் படுகின்றனர். மருத்துவமனை நிர்வாகம் *(Hospital Management)* விரைந்து வளர்ச்சி பெற்று வருகின்றது. எனவே மருத்துவத் துறை சார்ந்த படிப்புகளை மாணவர்கள் தங்களின் ஈடு பாட்டிற்கும் நாட்டத்திற்கும் ஏற்ப தேர்ந்து பயிற்சி பெறுதல் வேலை வாய்ப்பினைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

## பொறியியல் துறையில்...

இத்துறை, தொடர்ந்து விரிவடைந்து வருவதை நாமறிவோம். கட்டுமானம், இயந்திரவியல், மின்னணுவியல், தகவல் பொறியியல், மின்னியல், கணிணியியல், அச்சுக்கலையியல், சுரங்கவியல், இரசாயனப் பொறியியல், கட்டிடக் கலையியல், ஜவுளி பொறியியல், தோல் தொழில் நுட்பவியல், இன்ஸ்ட்ருமென்டேஷன், மரைன் இன்ஜினியரிங், உலோகவியல் போன்ற இளநிலை பொறியியல் பட்டதாரிகளை தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள் உருவாக்கி வருகின்றன. ஆண்டு தோறும் ஏறக் குறைய 22,000 பேர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு பொறியியல் கல்லூரியில் சேருகின்றனர். பயிற்சிக்காலம் நான்கு ஆண்டுகள்.

**அறிவியல் இளயர் செயல்முறை புவியியல் :**

B.Sc.APPLIED GEOLOGY:

+2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பயின்றவர்கள். இப் படிப்பில் சேரத் தகுதி பெற்றவர்கள். பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். சென்னை அண்ணா பல்கலைக் கழகம் இதனைக் கற்பிக்கின்றது.

**அறிவியல் இளயர் செயல்முறை அறிவியல் :**

B.Sc.APPLIED SCIENCE

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள்.



கோவையில் உள்ள *PSG College of Technology, CIT,* இப்பயிற்சியினைத் தருகின்றது.

**அறிவியல் இளயர் செயல்முறை அறிவியல் கணிணி தொழில்நுட்பவியல் :**

B.Sc.APPLIED SCIENCES -COMPUTER TECHNOLOGY :

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். கோவையிலுள்ள *PSG College of Technology* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**விண்வெளி ஆராய்ச்சி பொறியியல் :**

AEROSPACE ENGINEERING :

பயிற்சிக்காலம் 4 ஆண்டுகள். IIT சென்னை இதனைப் பயிற்றுவிக்கிறது.

**இயக்க ஊர்திப் பொறியியல் :**

AUTOMOBILE ENGINEERING

பயிற்சிக் காலம் 4 ஆண்டுகள். ஈரோட்டில் உள்ள *IRDT* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**போக்குவரத்துப் பொறியியல் :**

TRANSPORT ENGINEERING :

இதன் பயிற்சிக் காலம் 4 ஆண்டுகள். ஈரோட்டில் உள்ள *IRDT* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**பொறியியல் பட்டயப் படிப்புகள்:**

தமிழகத்தில் உள்ள தொழிற் கல்லூரிகளில் *(Poly Technics)* பொறியியல் பட்டயப் படிப்புகள் மூன்று ஆண்டுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றில் சேர, பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியே போதுமானது.

**வணிகவியல் நடைமுறைப் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COMMERCIAL PRACTICE:

பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியே போதுமானது. பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். குறிப்பாக, தமிழகத்தில் உள்ள 20க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பெரும்பாலும் மகளிர் இப்பயிற்சியில் அதிகம் சேருகின்றனர்.

**உடைவடிவமைப்பு-ஆடைத் தயாரிப்பு பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COSTUME DESIGN AND DRESS MAKING :

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். மதுரை, கோவை, சென்னை, எட்டையபுரம், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள மகளிர் தொழிற் கல்லூரிகளில் இப்பயிற்சி வழங்கப் படுகின்றது.

**ஒப்பனையியல் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COSMOTOLOGY:

பயிற்சிக் காலம் ஓராண்டு. சென்னையிலுள்ள அரசு மகளிர் தொழிற்கல்லூரிகளில் இப்பாடம் போதிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)






கல்வி அறிவில்லா மனிதன் கற்காலத்தில் குகைகளில் வாழ்ந்தான். இந்த நவீன புதுயுகத்திலும் பலர் கற்காலத்தில் இருந்ததைவிட மோசமான இருப்பிடங்களில் வசிப்பதைக் காண்கின்றோம்.

கட்டடங்கள் மனித வாழ்வில் இன்றியமையாத தேவை. வாழ வீடுகள் மட்டும் அல்லாமல், அலுவலகங்கள் தொழிற்கூடங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் கட்டடங்கள் தேவைப் படுகின்றன. கட்டுமான செலவினங்கள் அதிகமாக இருப்பதால் பலரால் கட்டடங்கள் பற்றி கனவு கூட காண இயலவில்லை. ஆகவே கட்டுமானப் பணியில் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து, குறைந்த முதலீட்டில் தரமான கட்டடங்கள், வீடுகள் அமைத்திடலாம் என்பதை வேலூர் கட்டிட மையம் செயல்படுத்திக் காட்டியுள்ளது. அந்தக்கட்டடத் தொழில் நுட்ப உத்திகள் சில இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.




### கடைக்கால்

கட்டிடத்திற்குக் கடைக்கால் மிகக் கவனமாக அமைக்க வேண்டும். கடைக்கால் போட மண்ணை வெட்டி எடுக்கும்போது கடினமான மண், முறம்பு, பாறை போன்றவைகள் வந்தால் மேலும் அஸ்திவாரத்திற்கு மண்ணை வெட்டத் தேவையில்லை, அதன்பின் நமக்கு இயற்கையில் கிடைக்கும் கருங்கற்களைச்சீர்செய்து, சேற்றினால் ஆன கலவையைக் கொண்டு அஸ்திவாரம் அமைக்கலாம். இவ்வாறு அமைக்கப்படும் அஸ்திவாரத்திற்கு இரண்டு ஓரங்களிலும் சிமெண்ட் அல்லது சுண்ணாம்பால் பாயின்டிங் வேலை செய்யலாம். அஸ்திவாரம் போடும்போது அதிகமான மணல் வந்தால், அவ்விடத்தில் மட்டும் செங்கற்கலார் வளைவுகள் அமைத்து மட்டத்திற்குக் கொண்டு வரலாம். இவ்வாறு அஸ்திவாரம் அமைப்பது சிக்கனமானது.

அஸ்திவாரத்தில் ஈரக்கசிவு ஏற்பட்டால், அடிப்பீடத்திற்குமேல் செங்கல்லைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி குறைந்த விலையில் கிடைக்கும் வேஸ்ட் ஆயிலைக் கலந்து சிமெண்ட் கலவையை

பயன்படுத்தினால் ஈரக்கசிவை முழுவதுமாகத் தவிர்க்கலாம்.



### 1. ரேட் டிராப் செங்கல் இணைப்பு (RAT TRAP BOND)

ரேட் டிராப் செங்கல் இணைப்பு என்பது சாதாரணமாக அமைக்கும் செங்கல் இணைப்பைச் சற்று மாற்றி அமைக்கும் முறையாகும்.

சரியான முறைப்படி கலவையைக் கலந்து கொண்டு பின்பு செங்கல்லை குத்துக்கல் வரிசையில் அடுக்கி சுவர் அமைக்கவேண்டும். இரண்டு செங்கற்களை அதற்கு எதிர்பக்கமாகச் சற்று இடைவெளி விட்டுவைக்க வேண்டும். மொத்த சுவரின் அளவு (3/4அடி (அ) 23செ.மீ.). அதற்கு அடுத்தாற்போல் கலவையை இடவேண்டும். அந்தக் கலவையை சுவரின் மேல் ஓட்டையில் விழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கட்டினால் நமக்கு 20% முதல் 25% வரை செங்கல் மற்றும் சிமெண்ட் மீதமாகும். சுவர் கட்டும்போது மூன்று அடி கட்டிய பிறகு குத்துக்கல் வரிசைப்பிடிக்கவேண்டும். இவ்வாறு கட்டும் சுவர் உறுதியாகவும் வெப்பக்கசிவு குறைவாகவும் இருக்கும். இச்சுவரில் குழாய் மற்றும் மின்சார கம்பிகளை உட்புறமாக எளிதாகப் பொருத்தலாம்.




### சீர்செய்யப்படாத கல்லை நிரப்பி உருவாக்கப்பட்ட கான்கிரீட் கட்டைகள்: (ரபுள் பில்லர் பிளாக்ஸ்)

இது பொதுவாக சிமெண்ட் கலவையை உபயோகித்துக் கட்டப்படும் கருங்கல் சுவர்களை விட உயர்ந்த கட்டிடத் தொழில் நுட்பமாகும். இக் கான்கிரீட் கட்டைகளை, கட்டிடம் அமைக்கும் இடத்திலேயே எளிதில் தனிப்பட்ட இயந்திரம் இல்லாமலேயே தயாரிக்கலாம்.

பொதுவாக இவற்றின் நீளம் 30 செ.மீ. அகலம் 15 செ.மீ.ஆகும். இவற்றின் கனம் 20 செ.மீ. 15 செ.மீ. அல்லது 10 செ.மீ.ஆக இருக்கலாம். இக் கான்கிரீட் கட்டைகளின் எடை 9 கிலோ கிராமிலிருந்து 8 கிலோ கிராம்வரை இருக்கலாம்.

கான்கிரீட் கட்டைகளைத் தயார் செய்வதற்கு இரும்புத் தகடுகளைக் கொண்டு தேவையான அளவில் அச்சைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். பின்பு 5 செ.மீ.லிருந்து 26 செ.மீ. அளவுள்ள கருங்கற்களை 1 : 5 : 8 சிமெண்ட் கான்கிரீட்டில் கலந்து அச்சில் வார்க்கவேண்டும். இவ்வாறு தயாரித்த கான்கிரீட் கட்டைகளைத் தண்ணீரில் முழுகவிட்டு உறுதிப்படுத்தியபின்னே உபயோகிக்க வேண்டும்.

கருங்கல் கான்கிரீட் கட்டை தயாரிப்பில் சிறிய மாற்றம் செய்து உடைந்த செங்களை, கருங் கற்களுக்கு மாற்றாக 1 : 5 : 6 (ஒரு பங்கு சிமெண்ட், 5 பங்கு மணல், 6 பங்கு செங்கல் கப்பி, என்ற விகிதத்தில் பயன்படுத்தி கட்டைகள் தயார் செய்யவேண்டும். இக்கட்டைகள் அறுகோண வடிவத்தில் அமைக்கப்படுகின்றன.

சாதாரணமாகக் கட்டும் கருங்கல் சுவர் களைவிட, கருங்கல் கான்கிரீட் கட்டைகளைப் பயன்படுத்தி கட்டும் சுவர்களால் 10லிருந்து 20% வரை செலவு குறைகிறது.

### உறுதிபடுத்தப்பட்ட மண் கட்டைகள்:

உறுதிபடுத்தப்பட்ட மண்கட்டைகள் சாதாரண செங்கல்லைவிட அதிக உறுதி வாய்ந்ததாக இருக்கும். செங்கல் தயாரிக்க விறகுகள் அதிக மாகத் தேவைப்படுவதால், நம் நாட்டில் காடுகள் மிகவும் வேகமாக அழிக்கப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் உறுதிப் படுத்தப்பட்ட மண்கட்டைகள்.

20% முதல் 30% வரை உள்ள களிமண் மற்றும் 70% முதல் 80% வரை உள்ள மணற்பாங்கான சிவப்பு மண்ணைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள





வேண்டும். இத்துடன் 5% சிமெண்டையும் சிறிது நீரையும் எடுத்துக்கொண்டு நன்றாகக் கலந்து கொள்ளவேண்டும், பிறகு இக்கலவையை இதற்கான கருவியில் இட்டு அழுத்தினால் தரமான ஒரே அளவான உறுதிப்படுத்தப்பட்ட மண் கட்டைகள் கிடைக்கும். இவ்வாறு தயார் செய்த மண்கட்டைகளை ஒருவாரம் அல்லது 10 நாட்களுக்கு நிழலில் வைத்துத் தண்ணீர் தெளித்து உறுதிப்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்தப்பட்ட மண்கட்டைகளைத் தயாரிப்பதால் நமக்கு எரிபொருள் சிக்கனமாவதுடன் செலவும் குறைகிறது. மேல்கூரையைச் சற்று வளர்த்தி, மழைநீர் சாரல் சுவற்றின் மீது விழாமல் பாதுகாத்தால், இச்சுவர்களுக்குப்பூச்சுவேலை அவசியம் இல்லை.

### ஜன்னல் அல்லது வாயிற்படியின்மேல் உத்திரம் (லிண்டல்)

பொதுவாக ஜன்னல், கதவு போன்ற இடைவெளிகளில் கான்கிரீட் லிண்டர்கள்



அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. லிண்டல் ஒரு சிறிய முக்கோண வடிவிலான செங்கல் சுவரைத் தாங்க மட்டுமே பயன்படுகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்வதில்லை. எனவே அதிக செலவினத்தைக்கொண்ட லிண்டல் அமைப்பதைத் தவிர்க்கலாம். அதற்கு மாறாக இடைவெளிகளின்மேல் அரைவட்ட வடிவம் அமைந்த செங்கல் வளைவுகளை அல்லது படிபோன்ற செங்கல் வளைவுகளை அமைக்கலாம்.

பொதுவாக 4 அடிக்குக் குறைவான இடைவெளி இருப்பின் அவ்விடங்களில் லிண்டல் அமைப்பதற்குப் பதிலாகச் செங்கற்களைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி அமைக்கலாம்.

இடைவெளி அதிகமாக உள்ள இடங்களில் லிண்டல் அமைக்கவேண்டியிருப்பின் குறைவான கான்கிரீட்டைக் கொண்டு அமைக்கலாம்.

### மேற்கூரை (சிலாப்) அமைத்தல்: (FILLER SLAB)

ஒரு சிரப்பிய கான்கிரீட் கூரை (பில்லர் சிலாப்) ஆகும்.



ஓடு பரப்பிய கான்கிரீட் கூரை - (பில்லர் ஸ்லாப்)

வீடு கட்டுவதில் அதிகமாகச் செலவாகும் பகுதி மேற்கூரை போடுவது ஆகும். தற்போது கட்டப்பட்டுவரும் கான்கிரீட் கூரை அமைப்பதில் இரும்புக் கம்பியும், சிமெண்டும் அதிகமாகச் செலவாகின்றது. எனவே, நாம் கட்டப்பட்டு வரும் கான்கிரீட் கூரையில் ஒரு சில இடங்களில் கான்கிரீட் தேவையில்லை. அந்த இடங்களில் குறைந்த எடையுள்ள மற்றும் விலை குறைவான ஓடுகள் (அல்லது) செங்கற்களை வைத்து கான்கிரீட் கூரையை அமைக்கலாம். இம்முறையில் சாதாரணமாகக் கட்டப்படும் கான்கிரீட் கூரை அமைப்பது போல் பலகையை அடித்து, கம்பிகளைக் கட்டவேண்டும். இரண்டு மங்களூர் ஓடுகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, அந்த இரும்புக் கம்பிகளுக்கிடையே வைக்கவேண்டும். அதன் பின்னர், கான்கிரீட் போட வேண்டும். இதனால் விலை குறைந்த ஓடுகள் இருக்கும் பகுதியில் உள்ள விலை அதிகமான கான்கிரீட்டை மிச்சப்படுத்த முடியும். மற்றும் கான்கிரீட்டின்

கனத்தைக் குறைப்பதால் அதனைத் தாங்கி நிற்கும் இரும்புக் கம்பியானது மிச்சப்படுத்தப்படுகிறது. ஒடுகளுக்கு இடையில் வெற்றிடம் இருப்பதால் கோடை காலத்தில் மிதமான சீதோஷணத்தை உணரலாம்.

**உட்குழிந்த கான்கிரீட் ஒடுகள்**
**(பியூனிக்களர் செல்ஸ்)**

குறைந்த செலவில் வீடு கட்டுவதில் ஒரு நவீன அமைப்பே "உட்குழிந்த கான்கிரீட் ஒடுகள்".



பொதுவாக இவ்வோடுகள் 90செ.மீ. x 90 செ.மீ.அளவில் அமைக்கப்படுகிறது. நான்கு புறங்களிலும் 6 எம்.எம்.கம்பிகளைக் கொண்ட இவ்வோடுகள் 1:2:4 (சிமெண்ட் 1 பங்கு, 2 பங்கு மணல், 4 பங்கு ஜல்லி, சிமெண்ட் கான்கிரீட்டினால் தயார் செய்யப்படுகிறது. இவ்வோடு 2.5 செ.மீ.கனம் கொண்டிருக்கும். முன்பே தயார் செய்த கான்கிரீட் பீம்களின்மீது உட்குழிந்த ஒடுகளை அமரவைத்து அதன்மீது வெதரிங் கோரீசைப் பயன்படுத்தி கூரையை அமைக்கலாம். இவ்வகைக் கூரை அமைப்பதன் மூலம் கான்கிரீட் செலவு 15% மற்றும் இரும்பு செலவு 30% அளவில் குறைத்திட இயலும். ஒடுகள் குறைவான எடை கொண்டவை. முன்பே தயார் செய்த இவ்வோடுகளைக் கொண்டு எளிமையாகவும், விரைவாகவும் கூரையை அமைக்கலாம்.

**செங்கல் தூண் முறை:**
**(பிரிக்பேனல் முறை)**

முன்னதாகத் தயார்செய்யப்பட்ட செங்கல் தூண் முறையில் மேற்கூரையும், தரையும் அமைக்கலாம். இத்தூண் முறையைக் கொண்டு சுவரும் கட்டமுடியும். இம்முறையில் மேற்கூரையை அமைக்கும்பொழுது கம்பிகளைத் தூண்களுக்கு உபயோகப்படுத்தலாம். சுவர் தூண்களை அமைக்கக் கம்பிகள் தேவையில்லை.

இந்தத் தூண் முறையை அமைப்பதற்குத்







திறமையான வேலையாட்கள் தேவை இல்லை. தூண் அமைக்க பீடம், மர அச்சுகளை எடுத்துக்கொண்டு செங்கல்லை நமக்கு எந்த அளவில் தூண் தேவையோ அவ்வடிவத்தில் அடுக்கி அதன் நடுவில் சிமெண்ட் கலவை 1.5 அத்துடன் எம் 15 கான்கீரிட்டை பயன்படுத்தி தூணை அமைக்கலாம். இவ்வாறு தயார் செய்த தூண்களை நீரில் மூழ்கி உறுதிபடுத்தியபின் நன்றாக உலரவிட்டு தூண்களை முன்னதாகதயார் செய்த பீம்களில் சரியாகப் பொருத்தி சாதாரண முறையில் கான்கிரீட் போடவேண்டும்:

இம்முறையில் அமைப்பதால் சிமெண்ட் கம்பி போன்றவை குறைவாக உபயோகித்த செங்கல் மற்றும் சீலிங் பூச்சு வேலை அவசியம் இல்லை. இம்முறையில் மேற்கூரை, தரை, சுவர் போன்றவை எளிமையாகவும் விரைவாகவும் அமைக்கமுடியும்.

**இரும்பாலான சிமெண்ட்**
**தண்ணீர் தொட்டி:**
**(ஃபெர்ரோ சிமெண்ட் தண்ணீர் தொட்டி)**

இரும்பாலான சிமெண்ட் தண்ணீர் தொட்டியை மிகவும் குறைவான விலையிலும் சுலபமாகவும் தயாரிக்கலாம். இத்தொட்டியைச் செய்ய இரண்டு





அடுக்கு 22 கேஜ் கோழிவலையும், 20 கேஜ் டைமண்ட் வலையும் எடுத்துக்கொண்டு எந்த வடிவத்தில் தொட்டியை அமைக்கிறோமோ அந்த வடிவத்தில் வலையை வெட்டிக்கொள்ளவும். பிறகு அச்சு அமைத்து அதன்மீது ஆயிலைத் தடவி விடவேண்டும். அதன்பின் வலைகளை வைத்து கட்டு கம்பியில் நன்றாகக் கட்டியபின் சிமெண்ட் கலவை 1:2 என்ற விகிதத்தில் கலந்து மெத்திட வேண்டும். ஒரு நாள் கழித்து அச்சில் வார்க்கப்பட்ட தொட்டியை எடுத்து நீரில் மூழ்கி உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு தயார்செய்த தொட்டியானது 1000 லிட்டருக்கு ரூ.1500/- வரை கட்டுமானச் செலவாகிறது. மற்ற கான்கிரீட் தொட்டி, பிளாஸ்டிக் தொட்டி அமைத்தால் 1000 லிட்டருக்கு ரூ.3000/- க்கு மேல் செலவாகிறது.

பெர்ரோ சிமெண்ட் தொட்டியைத் தயாரிக்க மற்றொரு முறையையும் பின்பற்றலாம். இம்முறையில் 20 கேஜ் வெல்டு வலையையும் இரண்டு அடுக்கு 22கேஜ் கோழி வலையை எடுத்துக்கொண்டு வேண்டிய வடிவத்தில் அமைத்து, சிமெண்ட் கலவை 1:2 விகிதத்தில் மெத்தி தொட்டியை அமைக்கலாம்.

**இரும்பாலான சிமெண்ட் கதவு:**
**(ஃபெர்ரோ சிமெண்ட் கதவு)**

மரத்தின் விலை அதிகரிக்கும் இக்காலத்தில் மரத்திற்குப் பதிலாக இரும்பாலாகிய சிமெண்ட் கலவை கொண்டு கதவு தயாரிக்கலாம். இவ்வாறு செய்யும் கதவில் சிமெண்ட் கலவை 1:2, சிமெண்ட் ஒரு பங்கு, மணல் இரண்டு பங்கு, விகிதத்தில் கலவையை எடுத்துக்கொள்ளவும். 22 கேஜ் கோழி வலையை வேண்டிய அளவுக்கு வெட்டி நான்கு அடுக்காக வைத்து, சிமெண்ட் கலவையை மெத்திவிட வேண்டும். பிறகு, கதவை ஒருநாள் உலரவிட்டு ஒரு வாரத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கவிட்டு உறுதிப்படுத்தியபின் வேண்டிய இடங்களில், துளைபோடும் இயந்திரத்தைக் கொண்டு துளைபோட்டு, தாழ்ப்பாள் கீல் சட்டம் போன்றவற்றைப் பொருத்தலாம்.

இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளை விட செலவு குறைவாகவும், அதிக நாட்கள் நீடித்தும் இருக்கும்.

**ஃப்ரோ சிமெண்ட் வாசற்கதவு மற்றும் ஜன்னல்:**

மரத்தின் விலை அதிகரிக்கும் இக்காலத்தில் மரத்திற்குப் பதில் இரும்பாலான ஃப்ரோ சிமெண்ட் வாசற்கதவு மற்றும் ஜன்னல் குறைந்த செலவில் செய்யலாம்.

8mm கம்பிகள் 3.6mm கம்பிகள் அதனைச் சுற்றிக் கொண்டு இவைகளோடு 1:2:4 (1 சிமெண்ட்



ஃப்ரோ சிமெண்ட் ஜன்னல்

2 பங்கு மணல் 4 பங்கு பேபி ஜல்லி) சிமெண்ட் கான்கிரீட்டினால் தயார் செய்யப்படுகிறது. இக்கான்கிரீட் சட்டங்களில் ஸ்குரு போடுவதற்கு மரத்துண்டுகள் வைக்கவேண்டும்.இவ்வாறு தயார் செய்யப்பட்ட கான்கிரீட் சட்டங்கள் உலர்ந்த பின்பு 7 நாட்கள் தண்ணீர் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். பின்னர் வேண்டிய இடங்களில், துளைபோடும் இயந்திரத்தைக் கொண்டு துளை போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளை விட செலவு மிகக் குறைவானது. நீண்டநாட்கள் நீடித்தும் இருக்கக்கூடியவை.

**ஃப்ரோ சிமெண்ட் சேனல் கூரை:**

பொதுவாக இக்கூரைகளின் அமைப்பு 0.75 M x 3.50 M அளவில் அமைக்கலாம். இக்கூரையை அமைக்க முதலில் பொய் செங்கற்கள் மூலம் வளைவு (சேனல்) வடிவத்தில் அச்சு தயாரித்துக் கொள்ள வேண்டும். தயாரித்துக் கொண்ட அச்சின் மேல் சிமெண்ட் கலவை 1:2 என்ற விகிதத்தில் கலந்து அவ் வளைவின் மேல் பூச வேண்டும். அதன் பின் வேஸ்ட் ஆயிலைப் பயன்படுத்தி பின்னர் கீழ் இரண்டு முனைகளிலும் 8mm கம்பிகளைக் கட்டி மேலே நடுமையத்தில் 6mm கம்பிகளைக் கட்டியவுடன் கோழி வலைகளை மெத்தி அதன் மீது சிமெண்ட் கலவையை 1:2 விகிதம் பூசவேண்டும், பின்னர் இந்த ப்ரோ சிமெண்ட் கூரை உலர்ந்தவுடன் தண்ணீரில் 10 நாட்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும்பின்னர் நாம் தேவையான வீடுகள் மற்றும்கழிப்பிடங்களில் பயன்படுத்தலாம்.

எனவே மேற்கண்ட முறைகளைக் கொண்டு குறைந்த செலவில் தரமான கட்டடங்கள் அமைத்து, பயன்பெறலாம். ★

# தமிழ் முதல் நாவல்

க.நா. சுப்பிரமணியம்

**பி**ரதாப முதலியார் சரித்திரம் என்கிற இந்த நாவலைத் தங்கள் முதல் நாவலாகப் படைத்த தமிழர்களைப் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாவலை முதல் தடவையாகப் படிக்கும்போதுதான் அது ஒரு நூதன அனுபவமாக அமைகிறது என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு தடவை படிக்கும்போதும் அது ஒரு நூதனமான அனுபவமாகவே படுகிறது. படிக்கும்தோறும் படிக்கும்தோறும் நவநவமான ருசிகளைத் தரக்கூடிய இந்த நாவலில் விமரிசகன் எவ்வளவு குற்றங்குறைகள் கண்டால்தான் என்ன? வாசகன் எப்போதும் விரும்பிப் படிப்பான்.

நாவலாக இதில் உருவம் கட்டுக்கு அடங்கவில்லை. தமிழில் நாவலுக்கு என்று ஒரு மரபு ஏற்படாத காலத்தில் எழுதப்பட்ட இந்த நாவலில் உருவம் வழிந்தோடுகிறது என்பது ஒரு குறையாகாது. அளந்து பார்த்து வெட்டி நீட்டி இப்படித்தான் ஓர் உருவம் சமைக்க வேண்டும் என்று நாம் பிரம்ம தேவனுக்குக் கட்டளை பிறப்பிக்க முடியுமா என்ன? அதே போல வேதநாயகம் பிள்ளை எழுதி நமக்களித்திருக்கும் இந்நாவலில் வளர்த்தல், தொக்கி நிற்றல், அதிகப் பிரசங்கித்தனம் எல்லாம் இருக்கின்றன என்று சொல்லிப் பயனில்லை. அவற்றுடன் சேர்த்துத்தான் நமக்கு இதை ஆக்கித் தந்திருக்கிறார் அவர். நம் நினைப்பில் நாம் ஏற்படுத்திக் கொண்ட நாவல் என்கிற கஜக்கோல் சரியோ, தப்போ- யார் சொல்ல முடியும்? சுவாரசியமான கதை- பலவிதமான சுழிப்புகளுடனும் நுங்கு நுரைகளுடனும் புது வெள்ளம்போல ஓடுகிறது இது. திளைத்து முழுகிக் களிக்க அறிந்தவர்கள் அதிருஷ்டசாலிகள்தான். கரை புரண்டு ஓடுகிறதே, இல்லை, கரைகள் இடிந்துவிட்டனவே என்றும் முறையிடுவது இலக்கிய வளத்துக்கு அடிகோலுவதாகாது.

"என்னுடைய ஹிந்து வாசகர்களுக்கு ராஜாக்களையும் ராணிகளையும் பற்றிய செய்திகளைக் கேட்கப் பிடிக்குமே என்றுதான் 'ஞானாம்பாளை மாறு வேஷத்தில் அரசனாக்கிப் பார்த்தேன்" என்று முகவுரையில் எழுதுகிறார் வேதநாயகம் பிள்ளை. வேட்டைக்குப் போன புருஷனிடமிருந்து பிரிந்து போன ஞானாம்பாளை ஒரு யானை மாலையிட்டுத் தூக்கிப் போய்விடுகிறது. "குடியரசென்னும் கொடிய அரசுபற்றி" அந்தக் காலத்துக்கும் அவர் அறிவுக்கும் எட்டிய வரையில் விவரிக்கிறார் ஆசிரியர். ஓர் அரசியல் பிரசங்கத்தையே புகுத்திவிடுகிறார். ஜனங்களுடைய சௌக்கியத்துக்காக இராஜாங்கம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, தன்னுடைய சௌக்கியத்துக்காக ஏற்பட்டிருக்கவில்லை என்பதை, அரசன் எப்போதும் தன்னுடைய கருத்தில் வைக்க வேண்டும்... ஒரு அன்புள்ள தகப்பன், தன் பிள்ளைகளுடைய நன்மைகளை எப்போதும் தேட வேண்டும்... கடவுளைப்போல, அரசனுக்குச் சர்வலோக சஞ்சாரமும் சர்வ சக்தியும் இல்லாததால், உத்தியோகஸ்தர்கள் மூலமாகவே அரசன் அநேக காரியங்களை நடத்த வேண்டியதாயிருக்கும். அந்த உத்தியோகஸ்தர்கள் இராஜப் பிரதிநிதிகளாகையால், அவர்கள் சர்வோத்தமர்களாய் இருக்க வேண்டும்... அரசன் யோக்கியர்களையே நாடுகிறான் என்று யாவருக்கும் தெரிந்தால், உலகத்தில் யோக்கியதை அதிகரிக்கவும், அயோக்கியதை வலசை வாங்கிப் போகவும் இடமாகுமல்லவா? சில இராஜாங்கத்தார் யோக்கியதையைக் குறித்து யாதொரு பரீக்ஷையும் செய்யாமல் கல்விப் பரீக்ஷை மட்டும் செய்து கொண்டு, அதில் யார் தேர்ந்து வருகிறார்களோ, அவர்களுக்கே எந்த உத்தியோகங்களையும் கொடுக்கிறார்கள்... இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிற பாடசாலைகளில், ஈசுவர நிச்சயம், சன்மார்க்கம் முதலிய ஆத்மார்த்தமான விஷயங்கள் கற்பிக்கப்படாமல், லௌகீக சம்பந்தமான சில காரியங்கள் மட்டும் கற்பிக்கப்படுகிறபடியால், அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கிற பிள்ளைகள், உலகாயதர்களாயும், நாஸ்திகர்களாயும் பரிணமிக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோகமான உடனே பணமே தெய்வமென்று நினைத்து, அதைச் சம்பாதிக்கிறதற்காக சகல அக்கிரமங்களையும் செய்கிறார்கள்". இதைத் தொடர்ந்து லஞ்சம் வாங்குகிற உத்தியோகஸ்தர்களைப்பற்றி ஆத்திரம் தீர இரண்டு பக்கங்கள் எழுதியிருக்கிறார் வேதநாயகம் பிள்ளை, ஞானாம்பாள் என்கிற ஆண் வேஷ அரசன் வாயிலாக. "...தேன் மழை பொழிவது போல ஞானாம்பாள் பிரசங்கித்தாள். நான் அளவற்ற ஆக்லாதமடைந்து அவளைப் பார்த்து 'நீ இவ்வளவு கையிருப்பு வைத்துக்கொண்டு அரசாளத் தெரியாதென்று சொன்னாயே! இப்போது உலகத்தில் அரசு செய்கிறவர்களுக்கு, உனக்குத்





தெரிகிற காரியங்களில், நூற்றில் ஒரு பங்குகூடத் தெரியுமா?' என்றேன். அவள் என்னைப் பார்த்து, 'வார்த்தைக்குத் தரித்திர முண்டோ? வாய்ப் பந்தல் போட யாராலே கூடாது?... பேசினபடி நடப்பதல்லவோ கஷ்டம்?' என்றாள்".

ஆண் வேஷத்திலே ஞானாம்பாள் அரசாண்ட நாட்டிலே பல சீர்திருத்தங்களைச் செய்தாள் அவள். உத்தியோகஸ்தர்கள், நிர்வாகஸ்தர்கள் இவர்களுடைய அமுலை அடக்கிக் கட்டுப்படுத்தினாள். வியாதிகள் வருமுன்னரே அணை போட்டுத் தடுக்க முனைந்தாள். ராஜபக்தியின் அவசியத்தை வலியுறுத்தினாள். அரசியற் செலவுகளைக் குறைத்தாள். நியாயமல்லாதது நடவாதபடி அறவே ஒழிக்க முயன்றாள். அஞ்சாமல் நியாயம் வழங்குவதை நிலைநிறுத்தினாள். முனிசீப்பான தன் அனுபவத்தையெல்லாம் வைத்துச் சில முடிவுகளை வேதநாயகம் பிள்ளை கதைப் போக்கு தடைப்படாமல் கூறியிருக்கிறார். சுதேச பாஷாபிவிருத்தியைப் பற்றி ஓர், அத்தியாயமே எழுதிவிட்டார். "இங்கிலீஷ் வார்த்தைகளுக்குச் சரியான பிரதிபதங்கள் தமிழில் இல்லை என்று சொல்வது, தெரியாமையே அல்லாமல் உண்மையல்ல. தமிழ் நூற்களைத் தக்கபடி ஆராய்ந்தால், பிரதிபதங்கள் அகப்படுவது பிரயாசமா? அப்படித்தான் இரண்டொரு சங்கேத வார்த்தைகளுக்குத் தமிழிலாவது சமஸ்கிருதத்திலாவது பிரதிபதங்கள் அகப்படாத பக்ஷத்தில் அந்த வார்த்தைகளை மட்டும் இங்கிலீஷிலே பிரயோகித்தால் அவர்களை யார் கோபிக்கப் போகிறார்கள்?" மொழி வளர்ச்சிபற்றி இப்படி வேதநாயகம் பிள்ளை எழுதியது 1879ல் என்று ஞாபகம் வைத்துக் கொண்டு பார்க்கும்போது நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. "இந்தத் தேசத்தார் சொந்தப் பாஷைகளை யாவது, அல்லது எந்தப் பாஷைகளையாவது படிக்கலாமென்று இங்கிலீஷ் துரைத்தனத்தார் உத்தரவு செய்திருப்பதும், அந்த உத்தரவைச் சுதேச கனவான்கள் ஆக்ஷேபிக்காமல் சும்மா இருப்பதும் நியாயமா?... சமஸ்கிருதமும் லத்தீனும் அதிக சிறப்பும் அழகும் அலங்காரமும் பொருந்திய பாஷைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவகாசமுள்ளவர்கள் சொந்தப் பாஷைகளோடுகூட அந்தப் பாஷைகளையும் படிப்பது அதிக விசேஷம்தான். ஆனால், சொந்தப் பாஷைகளை நன்றாகப் படிக்காமல் அந்த அந்நிய பாஷைகளிலே காலமெல்லாம் போக்குவது அகாரியம் என்றுதான் ஆக்ஷேபிக்கிறோம்... மாதா வயிறெரிய மகேசுவர பூஜை செய்வது போல இருக்கிறது இது... தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங் குறை. ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரீகமும் நற்பாங்கும் அடைந்திருக்கக் கூடுமா? அப்படியே நம்முடைய சுய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில், இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்... இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷைகளைப் படிக்கிறவர்கள் தேச பாஷைகளைத் தீர்க்கமாக உணர்ந்து, இந்தத் தேசத்தைச் சூழ்ந்திருக்கிற அறியாமை என்னும் அந்தகாரம் நீங்கும்படி வசன காவியங்களென்னும் ஞான தீபங்களை ஏற்றுவார்களென நம்புகிறோம். தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியர்கள் அல்ல. அவர்கள் எந்த ஊர்ப் பாஷைகளைப் படிக்கிறார்களோ, அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால், சுயபாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்பிவிடுவோம். பிரெஞ்சு மட்டும் படிப்பவர்களைப் பாரீஸைப் பட்டணத்துக்கு அனுப்பிவிடுவோம். இலத்தீனுக்கும் சமஸ்கிருதத்துக்கும் சொந்த ஊர் இல்லாதபடியால், அந்தப் பாஷைகளைப் படிப்பவர்களை அநாமகரணத் தீவுகளுக்கு அனுப்புவோம்".

இவ்வளவும் தான் செய்த பிர

216 44P

சங்கம் என்று யாராவது எண்ணி விடப் போகிறார்களே என்று, கடைசியில் "என்றாள் ஞானாம்பாள்" என்று அத்தியாய இறுதியில் சேர்த்திருக்கிறார் ஆசிரியர்.

ராஜாங்கம் இப்படியாக நடந்து வரும் நாளையிலே பழைய அரசனின் குமாரி ஆனந்தவல்லி இன்னமும் ஆண் வேஷத்திலிருந்த ஞானாம்பாளிடம் காதல் கொண்டு விட்டாள். இந்தச் சிக்கல் ஒன்று வருமுன்னரே ஞானாம்பாளுக்கு அரச பதவி வெறுத்துவிட்டது. "நம்முடைய ஊரில் நமக்கென்ன பாக்கியம் குறைவாயிருக்கிறது? இந்த ஊர்க் குடிகளுடைய சௌக்கியத்துக்காக நாம் இந்த அரசாட்சியை ஏற்றுக்கொண்டதேயல்லாது, நமக்கு ஏதேனும் இலாபம் உண்டா? குடிகளுக்கு வேண்டிய சௌக்கியங்களையும், சட்டதிட்டங்களையும் நாம் ஏற்படுத்திவிட்டபடியால், இனிமேல் இந்த ஊரை ஆளுகிறவர்களுக்கு அதிகப் பிரயாசை இராது' என்றாள் ஞானாம்பாள்". அரசை ஆனந்தவல்லியிடம் ஒப்படைத்துவிட்டு ஞானாம்பாளும் பிரதாப முதலியாரும் வெளியேறத் தயாரானார்கள். இதற்குள் மந்திரி பிரதானிகள் கூடித் தங்கள் அரசன் ஆனந்தவல்லியை மணந்து கொள்ளவே வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியும் விட்டார்கள். திருமணத்துக்கு நாள்கூடக் குறிப்பிட்டு விட்டார்கள்.

இருந்தால் இனிச் சங்கடம்தான் என்று இருவரும் வெளியேறி விட்டார்கள் யாருடனும் சொல்லிக் கொள்ளாமல். பின்னர், ஞானாம்பாள் ஆனந்தவல்லிக்கு உண்மை எல்லாவற்றையும் வெளியிட்டு ஒரு லிகிதம் எழுதியனுப்பினாள். ஊர் திரும்புகிற வழியிலே ஞானாம்பாளுக்கு அம்மை கண்டது. அவள் இறந்துவிட்டதாக எண்ணிய பிரதாப முதலியாருக்கு, பின்னர் தான் அவள் உயிருடன் இருந்தது தெரிந்தது. "துக்கப்படுகிறவர்கள் முடிவில் சுகம் அடைவார்கள்" என்று தன் துயரத்தை முடித்துக் கொள்கிறார் பிரதாப முதலியார்.

"பல நாளாயின. பின், ஞானாம்பாள் ஆண் வேஷம் பூண்டு அரசாண்ட பாவனையாக இப்போது காட்ட வேண்டுமென்று ஞானாம்பாளை என் பாட்டியார் முதலானவர்கள் வேண்டினார்கள். ஞானாம்பாளுக்கு அவ்வளவு இஷ்டமில்லாவிடிலும், பல பெயர்களுடைய நிர்ப்பந்தத்தினால் ஒரு நாள் ஞானாம்பாள் அரசனைப் போல வேஷம் பூண்டு கொண்டாள். சாக்ஷாத் இராஜ வடிவாகவே தோன்றின ஞானாம்பாளைப் பார்த்து எல்லோரும அதிசயித்துக் கொண்டிருக்கும்போது ஆனந்தவல்லி அகக் களிப்புடனே, 'என்னை வேண்டி நீங்கள் ஆணாகவே இருந்து விடுங்கள்' என்றாள். உடனே சம்பந்தி முதலியார் வந்து, மகளைப் பார்த்து, 'ஆம் அம்மா! ஆண் பிள்ளை இல்லையென்று உன் தாயாருக்கும் எனக்கும் உண்டாயிருக்கிற வருத்தம் தீரும் பொருட்டு நீ ஆணாகவே இருந்து விடு' என்றார். அப்போது நான் ஞானாம்பாளை நோக்கி, 'இவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னைத் தெருவில் விடாதே, ஞானாம்பாள்' என்றேன்".

இப்படி முடிகிறது வேதநாயகம் பிள்ளை எழுதிய "வசன காவியம்". எந்த மொழியிலுமே முதல் நாவல் என்கிற கிரந்தம் ஒரு நல்ல அர்த்தத்தில் தான்தோன்றியாகத் தான் இருக்க முடியும். இப்படித் தான்தோன்றியாக உலகில் பல பாஷைகளிலும் வந்து வழக்கிலுள்ள எந்த நாவலுக்கும் சளைத்த தல்ல பிரதாப முதலியார் சரித்திரம்.



கடைசியாக வேதநாயகம் பிள்ளையின் வசன நடையைப் பற்றி ஒரு வார்த்தை. கொடுத்திருக்கிற உதாரணங்களிலிருந்து அவர் கூடியவரையில் பேச்சு. நடையையே உபயோகிக்க முயன்றார் என்பதும், வசனம் என்றால் ஆயாசம் த்ராததாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர் என்பதும் தெளிவாகியிருக்கும் என்றே நம்புகிறேன். நாவலில் பல இடங்களில் அவர் நடையே அவர் விஷயத்துக்கு அற்புதமான மெருகேற்றி இருக்கிறது என்று சொல்லவேண்டும். சில சமயங்களில் வார்த்தைகள் தங்கு தடையின்றி வராமல் தட்டுத்தடுமாறி வந்தாலும்கூட, அதுவும் பேசக் கற்றுக்கொள்ளும் ஒரு குழந்தையின் மழலைபோல இன்பம் தருவதாக இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். தெளிவு தர மொழிவதில், வளமான வர்ணம் நிறைந்த பேச்சு வார்த்தைகளை எழுத்தில், கலப்பதில் வேகம் கெடாமல் நடை பயிலுவதில், அழுத்தம் குன்றாமல் வாக்கியங்களைப் பிணைப்பதில் வேதநாயகம் பிள்ளை தமிழ் வசன நடையைச் சரியான பாதையில் நடக்க வைத்தார் என்று எனக்குத் தோன்றியது.

***-"முதல் ஐந்து தமிழ் நாவல்கள் - 1957"***



# சிறு தொழில்

# ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின்

# முன்வடிவம்

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தை வகுப்பதற்குத் தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தில் சிறிய தொழிற்சாலைகளின் பொருத்தத்தையும் தவிர்க்க முடியாத தன்மையையும் மிகைப்படுத்தி வலியுறுத்த இயலாது. நான் சிறுதொழில்களின் முக்கியமான பண்புகளை விரைவாக எடுத்துச் சொல்லிவிடுகிறேன். இவை பல்வேறு பணிக்குழுவின் ஆய்வுக்கான கருத்துக்களாக அமையும்.

இந்தத் துறைக்கான திட்டங்கள் யாவும் பல்வகை தொழில் வளர்ச்சி மற்றும் வருமான விநியோகத்தை வைத்துத் தீட்டப்பட்டவையாகும். பெருந்தொழில்கள் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும். ஆனால் ஒரு குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி அளவில், சிறு தொழில்கள் பிரிவு வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதோடு வருமான விநியோகத்தையும் பரவலாக்குகிறது. நம்மைப் போன்ற வளரும் நாட்டிற்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும். நம் நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் நம் தொழில் கொள்கையைத் தயாரிப்பின்போது இதுவே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

எட்டு ஐந்தாண்டு திட்டங்களுக்குப்பின் இப்பொழுது நாம் தொழில் வளர்ச்சியில் கடந்த காலத்தின் செயல்பாடுகளை ஆராய்ந்து, எதிர் காலத்திற்குத் திட்டங்கள் தீட்டும் முக்கிய நேரத்தில் உள்ளோம். ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் அணுகுமுறை பத்திரம் தொழில் துறையில் தாராளமயமாக்கப்படும். வெளிநாட்டினரை நம் நாட்டில் தொழில் தொடங்க வழி வகுத்தமையால், மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

ஆகவே, பணிக்குழுக்கள் 2 அடிப்படை கருத்துக்களில் கவனம் செலுத்தலாம்.

1. இந்தப் பிரிவின் துணைக் கோட்பாடுகளின் வலிமை மற்றும் வலிமையின்மை என்ன; இதில் எவற்றையெல்லாம் பின்பற்றலாம், வலிமைப் படுத்தலாம் மற்றும் எவற்றைத் திருத்தியமைக்க வேண்டும்.
2. இந்தப் பிரிவில் புதிய கோட்பாடுகள் என்ன?

பணிக்குழுக்களால் கலந்தாலோசிக்கப் பின்வரும் குறிப்புகள் வழிவகை செய்யும்.

1. சில பொருட்கள் சிறுதொழில் பிரிவில் மட்டுமே பொருளாதார முன்னேற்றத்துடன் தயாரிக்க முடியும். இவை கண்டறியப்பட்டு, சிறுதொழில்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பொருட்களின் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.
2. சமீப காலமாகப் பல சிறு தொழில் பொருட்கள் பொருளாதார அளவைச் சுட்டிக் காட்டி, அவை தயாரிப்பதில் சிறு தொழில் பட்டியலிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது. பொருளாதார அளவை எட்டிப் பிடித்தாலும் சமூகத்தையும் நாம் பார்க்கவேண்டும். அதிக அளவு உற்பத்தியாகும்போது ஒரு பொருளின் விலை குறையலாம். ஆனால் உற்பத்தி செய்யும் விதம் இயந்திரமயமாக்கப்படும். ஆகையால் மனித வேலை வாய்ப்புக் குறையும். ஆகையால், வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற சமூக கருத்தையும் மனதில் வைத்துக்கொண்டு தான் நாம் பொருளாதார வளர்ச்சி குறித்துப் பேச வேண்டும்.

***திருமதி ஓ.பி. சோசம்மா,*** இ.ஆ.ப.

3. இதைப் போலவேதான் தொழில்நுட்பம் மேன்மைப்படுத்துபவையும். பொருட்கள் தயாரிப்பில் தொழில் நுட்பத்தின் யுக்தியைப் பயன்படுத்துவதில் கேள்விக்கே இடமில்லை என்றாலும், சிறுதொழில் பிரிவில் நம் முன்னேற்றக் கோட்பாடுகளினால் விளையும் பயனையும் மறந்துவிடக்கூடாது. பொருள் தொழில் நுட்பம் மேம்படுத்தப்படும்போது தேவைக்கேற்ற புதிய மேம் படுத்தப்பட்ட பொருட்கள் கிடைக்கப்பெறுகின்றன. செயல்முறை தொழில்நுட்பம், பொருட்கள் தயாரிக்கும் முறையை மேம்படுத்துகின்றது. பொருட்கள் தயாரிப்பை அதிகப்படுத்தும் செயல்முறை தொழில்நுட்பம் ஊக்குவிக்கப் படவேண்டும். அதே சமயம் முதலீடும், பணியாளர் அளவு ஆகியவை சிறுதொழில்கள் பிரிவுக்குள் வருமாறு அமையவேண்டும்.

பொருள் தொழில்நுட்பம், சிறுதொழில் பிரிவில் தயாரிக்கும் பொருட்கள் தயாரிக்க ஊக்கு விக்கப்படவேண்டும். தொழில்நுட்ப மாறுதல் என்ற பெயரில் சிறுதொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள், நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

4. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தை வடிவமைக்கும் வேலையில் சிறுதொழில்களைக் கவனித்துக் கொள்ளும் அரசுத்துறை மற்றும் சார்ந்த துறைகளை எதிர்வரவிருக்கும் புதிய சவால்களைச் சமாளிக்கும் வகையில் திருந்தியமைக்கப்பட வேண்டும். இந்த அளவு நம் திட்டங்களாலும், கோட்பாடுகளினாலும் இந்தத் துறை வளர்ந்தபின், இதை ஒழுங்காகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தாவிட்டால், இதற்கு மேல் வளர்ச்சியடைவதில் பயன் இல்லை. மூடப்பட்ட (தொழிற்கூடங்கள்) அலகு, நலிவடைந்த அலகு, அடைக்கப்படாத கடன், வழக்குகள், பலவகையான சரிசெய்யும் திட்டங்கள், கடன் அடைக்க திருத்தியமைக்கப்பட்ட திட்டங்கள், இவை எல்லாம் ஒரு கேள்வியை நினைவூட்டுகிறது. நாம் சரியான வழியைப், பின்பற்றுகிறோமா, பணிக்குழுக்கள் இதுகுறித்து, DIC, சிட்கோ, TIIC ஆகியவற்றின் பங்கேற்பாளர்களோடு கலந்து முடிவெடுக்க வேண்டுகிறேன்.

எந்த ஒரு தொழில் நடவடிக்கையென்றாலும் ஆராய்ச்சிப்பணிகள் மிக அவசியம். உலகில் முன்னேறிய மற்றும் முன்னேறும் நாடுகளுக்கிடையே உள்ள தொழில் பொருளாதாரக் கோடு ஆராய்ச்சியின் மூலம் வந்தவையேயாகும்.

இந்தப் பணி மிகப்பெரிய செலவினை ஏற்படுத்தும். இதனாலேயே வளரும் நாடுகளினால் இப்பணியை மேற்கொள்ள இயலவில்லை. பணிக்குழுக்கள் இது குறித்துப் பேசுகையில் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள இயலுமா என்று ஆலோசிக்க வேண்டும்.

தனிநபர் ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டு பிடிப்புகள் நிகழ்த்தியிருந்தால், அதை அரசு நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டு அதைத் தொழில் நுட்பமாக ஏற்றுக் கொள்ளுமா? அப்படி என்றால் அதற்கான அடிப்படை சட்டம் என்ன? வழிகள் என்ன?

மேலும் பணிக்குழுக்கள் தொழில் தொடர்பு பேராசியர்களோடு கலந்து சிறுதொழில்களுக்கான ஒரு டேட்டா பேஸ் (Data Base )அமைத்தல், இன்டர்நெட் ஒரு புதிய சகாப்தத்தையே படைத்துவருகின்ற வேலையில் நம்மிடையே ஏதாவது டேட்டா தொழில்முனைவோர்கள் பயனடையும் விதத்தில் உள்ளதா? அரசு ஆண்டுதோறும் வெளியிடும் பெரிய அளவு புள்ளி விவரங்களிலிருந்து சிறு தொழில்களுக்குப் பயன்படும் புள்ளி விவரங்களைத்தனியாக எடுக்க முடியுமா? மக்கள் தொகை கணக்கெடுப்போடு இதையும் சேர்த்து எடுக்க முடியுமா? இந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

6. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு முக்கியமான கேள்வி பணிக்குழுவுக்கு நம்முடைய முன்னேற்றத் திட்டங்களில் பொதுவாகக் கடைபிடிக்கும் வழியிலிருந்து விலகி வேறு வழியைப் பின்பற்ற வேண்டுமா? தற்பொழுது நடைமுறையில் இருக்கும் பணிகள் மீது மட்டும் சிந்திக்கும் விதத்தைத்தடுக்க வேண்டும். சிறுதொழில்கள் தன்னைத் தானே சார்ந்திருக்க வழி உள்ளதா? தற்பொழுது நடைமுறையில் உள்ள கோட்பாடுகள் அவர்களை ஊக்குவித்து வருகின்றது. தாராளமயக் கொள்கை என்ற கொள்கை மூலம் ஏற்படும் வியாபார அதிர்வுகளிடமிருந்து காப்பாற்றும் பணி அரசி னுடையது. எந்த ஒரு தாராளமயமாக்கப்பட்ட தொழிலும் சிறுதொழில்களுக்கு இணையாகாது. ★







# கலிபோர்னிய மலைகளில் உன் பிறந்தநாள்

குளிர்ந்த நீரில் உடைந்த நிலா
உச்சி முகட்டில் காட்டு வாத்தின் கூவல்
குளிர்காய ஒரு தீமூட்டம், அதன் புகை
வானத்தின் கோணங்களை நோக்கி எழும்
நீ இங்குமங்கும் நடப்பதை
தீ நாக்குகளின் இடைவெளியில் நான் காண்கிறேன்.
இரவினைப் போர்த்திய ஏரியின் கரையில்
மீன்கொத்தியின் கிறிச்சல்.
பனிக்காலத்தை வரவேற்கும் கார்காலத்தின்
அமைதியில் உலகின் மௌனம்!
இரவு விருந்துக்குக் கொத்து மீன்களுடன்
நான் தீமூட்ட ஒளிவட்டத்தில்,
காதோடு பேசும் ஏரியின் சிற்றலை
அருகே அமர்ந்து உண்கிறோம்.
நான் சொல்கிறேன், இன்னும் பல
வருடங்கள் இந்த இரவை
நினைத்து நினைத்து நாம் பேசப் போகிறோம்.
பல வருடங்கள் சென்றன...
இன்னும் பல வருடங்கள் செல்லப் போகின்றன.
அந்த இரவை நான் நினைவு கொள்கிறேன்,
நேற்றைய இரவைப் போல.
ஆனால் நீயோ....
மரித்து முப்பதாண்டுகள் ஆகிவிட்டன!

நன்றி: 'சுபமங்களா'



ஆங்கிலம்:
கென்னத்
ரெக்ஸராத்

தமிழில்:
சீராளன்

# வளர்ப்பு

- ம. ராஜேந்திரன்

கடற்கரை கிராமம் காயம்பட்டது.. மணல் போர்வைகளை விலக்கி ராட்சச எந்திரங்கள் கிராமத்தின் ஆன்மாவைக் கிழித்துப் போட்டன.

பெரிய பெரிய தொட்டிகள். பெரிய பெரிய மிஷின்கள். சிமெண்ட், ஜல்லி, செங்கல் என்று லாரிகள் குவிந்தன. ஊரே கூடி கல்லறை கட்டிக்கொண்டிருந்தது.

சுற்றிலும் இறால் பண்ணைகள், குப்பானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு ஏக்கர் துண்டு நிலத்தில் ஒண்டுக்குடித்தனம் நடத்த வேண்டியதாயிற்று. விற்றுவிட்டு வெளியேற மனசில்லை. உணர்வுகள் நிலத்தோடும் ஊரோடும் கட்டிப்போட்டிருந்தன.

விவசாயம் போச்சு. சுற்றிலும் உப்பு நீர்த் தேக்கம், நிலத்தை அரித்தது. வயித்துப்பாடு பயமுறுத்தியது. ஆரம்பத்தில் எதிர்ப்புக் காட்டியவர்கள் கூட கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப் போனார்கள். குப்பானும் முடி வெடுத்துப் பண்ணைக்குப் போனான். பெரிய கேட் கம்பி வேலி. உள்ளே போகவே பயமாக இருந்தாலும் போனான்.

"ஐயா மொதலாளியைப் பார்க்கனும்".

குப்பான் திரும்பத் திரும்பச் சொன்னாலும் கூர்க்கா விடவில்லை. கை வைத்து வெளியே தள்ளிக்கொண்டு வந்தான். குப்பானுக்குத் தன் கிராமத்தில் தனக்கே இப்படி நிகழ்வதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"யோவ், என்னய்யா நெனச்சிகிட்டிருக்கே? மொதலாளியைப் பார்க்கணும்னா... மேலே கைவெச்சுத் தள்றே".

கூர்க்காவுக்குத் தமிழ் தெரியாது. ஆனால் ஏதோ கோபமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு அவனும் கத்தினான். சத்தம் கேட்டுப் பண்ணையில் வேலை செய்கிற ஊர்க்காரர்கள் எட்டிப் பார்த்தனர். குப்பானுக்கு அவமானம் பிடுங்கித்தின்றது. நல்லவேளை, முதலாளி வெளியே வந்தார்.

"ஐயா மொதலாளி, ஒங்களத்தான் பார்க்கணும்".

குப்பான் அவரைப் பலமுறை வெளிநாட்டுக் கார்களில் வெளிநாட்டவர்களோடு பண்ணைக்கு வரும்போது ரெயில்வே கிராசிங்கில் பார்த் திருக்கிறான். இல்லையென்றாலும் அடையாளம் தெரிகிற தோற்றம். முதலாளி கையசைப்பில் கூர்க்கா பவ்யமாகக் குப்பானுக்கு வழிவிட்டான்.

"ஐயா, எனக்கும் பண்ணையிலே வேலை குடுங்கய்யா".

"ஏன் ஒனக்கு நெலம் இருக்கில்ல?"

"இருக்குய்யா. ஆனா இப்போ வெவசாயம் சரிப்பட்டு வல்லீங்க".

''சரிப்பட்டு வல்லன்னா குடுத்திட வேண்டியது தானே?

"நெலத்தை விக்க மனசு வல்லீங்க".

"இங்கபாரு. ஒங்க ஊருகாரங்க எல்லாம் நெலத்தை வித்திருக்காங்கல்லே?

"ஆமாங்கய்யா... இப்ப இறால் பண்ணைக்கே கூலியா வந்துட்டானுங்கய்யா?"

சொல்லிவிட்டுக் குப்பான் முதலாளியின் முகத்தைப் பார்த்தான். லேசாக முதலாளி சிரித்துக்கொண்டார். குப்பானுக்கு நம்பிக்கை துளிர்விட்டது.

"என்ன வேலை தெரியும்?"

"இதுவரைக்கும் வெவசாய வேலைதாங்க தெரியும்... ஐயா என்ன வேலை குடுத்தாலும் செய்றேங்கய்யா".

சிறிது நேரம் முதலாளி யோசித்தார்.

"டேய் கணேசா, அந்த சூப்பர்வைசர்கிட்டே அளைச்சிட்டுப் போ".

நன்றி உணர்வில் குப்பான் முதலாளிக்குக் கும்பிடு போட்டான். "வேலையிலே சுத்தமா இருக்கணும்?"



"சரிங்கய்யா".

"இது வெவசாய வேலை மாதிரி இல்லை. கைச்சுத்தம், வாய்ச்சுத்தம், மனசு சுத்தம் இருக்கணும்".

"சரிங்கய்யா".

"நான் ஏதோ தர்மஸ்தாபனம் வச்சிகிட்டு இல்லே, ஒளுங்கா வேலை செஞ்சா எனக்கும் காசு வரும், ஒனக்கும் கூலி வரும்".

"சரிங்கய்யா".

முதலாளி ஷெட்டுக்குள் போனார். கணேசன் குப்பானை அழைத்துக்கொண்டு போனான். கணேசன் தான் விபரம் தெரிந்தவன் என்பதைக் காட்ட சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருந்தான்.

"நில்லு...இந்த எடத்துக்கு மேலே உள்ள போவணும்னா மொதல்ல ஒன் கை கால் எல்லாத்தையும் இந்த மருந்துத் தண்ணியில கழுவிக்க".

குப்பான் எதற்கு என்பதுபோல் பார்த்தான்.

"எறால்னா சும்மாவா? நீ எங்கெங்கேயோ சுத்திட்டு வந்திருப்ப. அதோட உள்ளப் போனா இறாலுக்குச் சீக்கு வந்திடாது?"

குப்பான் மௌனமாய்க் கால்கைகளை மருந்துத் தண்ணியில் கழுவிக்கொண்டு நடந்தான்.

வரிசை வரிசையாய்த் தொட்டிகள். தொட்டி களில் விதம் விதமாய்ப் பைப்புகள். அவன் ஏதோ அந்நிய தேசத்தில் நுழைந்ததாய் உணர்ந்தான். அங்கங்கே ட்யூப்கள் வலைகளாய்ப் பின்னிக் கிடந்தன.

''ஜாக்கிரதையா . வா. எதையாவது மிதிச் சிட்டியோ அவ்வளவுதான்".

குப்பானுக்குப் பயத்தில் வியர்த்தது. ஒவ்வொரு தொட்டியையும் கடக்கும்போது எட்டிப் பார்த்தான். இறால் குஞ்சுகள் மயிரிழையாய், நூலாய், ஊசியாய், குச்சியாய்த் திரிந்தன. தொட்டிக்குள் அங்கங்கு குமிழ்கள், வேடிக்கை காட்டின.

"அது ஆக்ஸிஜன். அதான் உயிர்க்காத்து தண்ணீரிலே எறாலுக்கு உயிர்க்காத்து கொறஞ்சா என்னா ஆவும்? நீ ஆஸ்பத்திரியில பாத்திருக்கல்ல மூக்குல ட்யூப் வைப்பாங்களே அதே மாதிரிதான் இறால் மூச்சுவிட முடியாமத் திணறுச்சுனா-அதான் சிலிண்டர்ல உயிர்காத்தைக் கொண்டுவந்து ட்யூப்ல தொட்டிக்கு அனுப்புறாங்க".



கணேசன் பேசிக்கொண்டே நடந்தான். குப்பானுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வெளிநாட்டு ஆள் ஒரு தொட்டி அருகே கையிலே ஒரு மிஷினை வைத்துக்கொண்டு தொட்டி நீரில் ஒரு துளியை எடுத்து அதில் வைத்துக் கண்ணில் வைத்துப் பார்த்தான். குப்பான் வைத்த கண் எடுக்காமல் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"தொட்டித் தண்ணியிலே எவ்வளவு உப்பு இருக்குதுன்னு பார்க்கிறாரு. ஏன்னா உப்பு அளவு கூடினாலும் கொறஞ்சாலும் எறாலுக்குப் புடிக்காது. அதனால அதுக்கேத்தாப்புல கடல் தண்ணியையும் கிணத்துத்துத் தண்ணியையும் கலக்கணும். அதான்..."



மேலும் நடந்தனர். அங்கங்கே தொட்டிக்குள் ஏதோ பவுடரைத் தூவிக்கொண்டிருந்தார்கள்.

"அதான் எறாலுக்கு சாப்பாடு. மேல்நாட்டிலேருந்து வருது. டின்டின்னா இருக்கும். எறாலுக்கு ரொம்பப் புடிக்கும். நமக்குப் பிரியாணி மாதிரின்னு வச்சுக் கயேன்".

"ஆனா நமக்குப் பிரியாணி ஒரு வேளை ரெண்டு வேலைக்கு மேலே சாப்பிட முடியாதுல்ல?"

குப்பானுக்கு ஏதாவது சொல்லணும் என்று துடித்தது.

"அதேதான் எறாலுக்கும். அப்பப்ப நம்ம ஊருக் கடல் நண்டைப் புடிச்சி துண்டு துண்டா வெட்டிப் போடுவாங்க".

"அப்படியா?"

"ஆமா...இல்லாட்டி அதுக்கும் வெளிநாட்டுச் சாப்பாடு அலுத்துப் போவுமில்லே?".

ஒருவழியாய்த் தொட்டிகள் முடிந்தன. பக்கத்தில் டூரிங் சினிமாக் கொட்டகை மாதிரி தெரிந்தது. அதற்குள் செல்ல ஒரு சின்ன கேட் அங்கேயும் மருந்துத் தண்ணீர்.

"இங்கயும் ஒரு தபா கைகால் களுவிக்கணும். ஏன்னா உள்றதான் எறால் குஞ்சு பொறிக்கிற எடம். ரொம்பச் சுத்தமா இருக்கணும்".

கைகால்களைக் கழுவிக்கொண்டு கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தனர்.

"என்னங்க இப்படி சூடா இருக்கு, செங்கல் சூளையில நெருப்புவெச்சிட்டு நிக்கிற மாதிரி?"

"ஆமா...பின்னே இருக்காதா? எறால் குஞ்சு பொறிக்க இந்தச் சூடு வேணும். சூடு கொறையாம வச்சிக்க சூடு மிசின் ஓடுது பார்த்தியா?"

"சூடு மிசினா?"

"ஆமா அதெல்லாம் வெளிநாட்டு மிஷின். ஒண்ணுக்கு ரெண்டு இருக்கு. ஒண்ணு கெட்டுப்போச்சுன்னா இன்னொண்ணு ஒடனே ஓடும்".

சூப்பர்வைசரைத் தேடிப்போனார்கள். அந்தச் சூட்டுக் கொட்டகையின் ஓரத்தில் ஒரு அறை. கதவுப்பக்கம் போனார்கள்.

"இது என்னாங்க இங்க குளிரடிக்குது?".

"இது குளிரு மிசின். வெளிநாட்டுக்காரங்க தங்கணும்னா நம்மூரு சூடு தாங்குமா! அதான்?".

"இங்க வெளிநாட்டுக்காரங்க தங்கியிருக்காங்களா?"

"அப்படி சொல்லு. எறால்னா என்னா குறுவை, சம்பா மாதிரி நட்டுவெச்சிட்டுப் போற வெவசாயம்னு நெனைச்சியா? அதுக்கே இப்போ வெதை மருந்து உரம் எல்லாம் வெளிநாட்லேர்ந்துதான் வருது. தெரியுமில்லே?"

"ஆமாமா".

"அப்புறம் எறால் என்னா நம்ம சொல்றதைக் கேட்டுடுமா? இல்லை அது சொல்றதுதான் நமக்குப் புரியுமா?"

"அப்படியா?"

"ஆமா. அதுக்குன்னே படிச்சிட்டு வந்திருக்காங்க".

"நம்ம ஊரு எறாலைப் பத்தியா...?"

"ஆமான்னா...ஒவ்வொருத்தனுக்கும் என்னா



சம்பளம் தெரியுமா?...ஆளுக்கு ரெண்டு லட்சம் மாசச் சம்பளம்.

"அடே யப்பா!..."

"வாயைப் பொளக்காத. அவுங்க இல்லாட்டி நாம இல்லை".

கதவைத் திறந்து எட்டிப்பார்த்தார்கள். உள்ளே வெளிநாட்டுக்காரர்கள் சூப்பர்வைசருக்கு வேலை சொல்லிக் கொண்டிருந்தனர். இவர்களைப் பார்த்ததும் அவர்களிடம் சொல்லிக் கொண்டு சூப்பர்வைசர் வெளியில் வந்தார்.

"சார், மொதலாளி இவரை அனுப்பிட்டு வரச் சொன்னாரு. ஏதோ வேலை வேணும்னு வந்தாரு".

"ஒம்பேரு என்னா?"

"குப்பான்".

"என்ன வேலை தெரியும்?"

"வெவசாய வேலை பார்த்துகிட்டு இருந்தேன். இப்போ வேலை இல்லை. அதான்..."



குப்பானுக்கு முடிக்க முடியவில்லை.

"சரி, வா..."

சூப்பர்வைசரைப் பின் தொடர்ந்தான்.

"அதோ, அந்தத் தொட்டியிலிருந்து கழிவுநீர் போவுதுபாரு, அதுக்கு ஒரு சின்ன வாய்க்கால் வெட்டணும். ஆரம்பத்தில அந்தத் தண்ணிப்பட்டா கொஞ்சம் அரிக்கும், உடம்பு தடிக்கும். போவப் போவப் பளகிடும்.

"சரிங்க".

கழிவு நீர் வாய்க்காலை நோக்கி நடந்தனர்.

"ஏய், ஏய், பார்த்து. ஒரு இறால் என்ன வெலை தெரியுமா? ஆயிரம் ரூபா...ஜாக்கிரதை".

சூப்பர்வைசர் சத்தம் கேட்டு வேலை செய்தவர்கள் திடுக்கிட்டனர். வெளிநாட்டுக்காரர் மேற்பார்வையில் வேலை நடந்துகொண்டிருந்தது.

குப்பான் என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்தான்.

பெரிய பெரிய இறால்கள். தாய் இறால, கடலில் பிடிக்கப்பட்ட இறால்.

"பேய், பெண் இறால் எல்லாத்தையும் தனியாப் பிரிச்சிட்டீங்களா?"

"தனியா இருக்கு பாருங்க சார்".

வெளிநாட்டுக்காரர் ஒவ்வொரு பெண் இறாலையும் பிடித்துத் தண்ணீருக்குள்ளேயே அது கண் இரண்டையும் எடுத்துக்கொண்டிருந்தார்.

வேலைக்காரர்கள் புரியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். குப்பானுக்கும் புரியவில்லை. கணேசன் கேட்டான்;

"சூப்பர்வைசர் சார், இவரு எதுக்கு இதுங்கக் கண்ணை எடுக்குறாரு?"

"அதாண்டா வெளிநாட்டுக்காரன் மூளை. பெண் இறாலுக்குக் கண் இருந்துச்சுன்னு வச்சுக்க. ஆண் இறால் கிட்ட வந்தா பெண் இறால் ஓடும். நாம என்ன இதுங்க ஓடிப்புடிச்சி வெளையாடுறதுக்கா கோடிக்கணக்கா செலவுபண்ணிகிட்டு உக்காந்திருக்கோம். சீக்கிரமா சேர்ந்துச்சா குஞ்சு வந்துச்சா வளர்த்தமா வித்தமான்னு இருக்க வேணாம்?. இப்பப்பாரு இதுக்குக் கண்ணு தெரியாது. ஆண் இறால் வந்து சேந்திடும். ஆண் இறாலுக்கு அலைச்சல் இல்ல. இல்லாட்டி அலைச்சல்லேயே அது சக்தியெல்லாம் போயிடும். சக்தி இல்லேன்னா குஞ்சு எப்படி கெடைக்கும்?... வெளிநாட்டான் மூளைன்னா மூளைதாண்டா".

சொல்லிக்கொண்டே கழிவுநீர்ப்பகுதி நோக்கி சூப்பர்வைசர் நடந்தார். குப்பான் மண்வெட்டியுடன் நடந்தான். கழிவுநீர் ஓரத்தில் பசும்புல் தலை கருகிக்கிடந்தது.

திரு. ம. ராஜேந்திரன் அவர்களது
'வளர்ப்பு' சிறுகதை தொகுப்பிலிருந்து.
- வெளியீடு: ருத்ரா பதிப்பகம்
14-ஏ, முதல் தெரு,
அருளானந்த அம்மாள் நகர்,
தஞ்சாவூர் - 613 007.

# வாசகர் இதயம்

**அ**ரசு-அரசியல் இதழாக இருந்த இந்த இதழ் மருத்துவம், அறிவியல், கதை, கவிதை எல்லாம் உடையதாக மாற்றப்பெற்றிருப்பது மகிழ்ச்சிகரமான விஷயம், பாராட்டுக்கள்.

**- கே.கோட்டீஸ்வரன்**
தக்களூர்.

---

**'தெ**ளிவு' சிறுகதை, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற கருத்தைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் சிறப்பாக இருந்தது.

**- டி.செல்வன்**
நெல்லையப்பபுரம்.

---

**த**மிழ் இலக்கியங்களின் சிறப்பும், உயிர்ப்பும் மிக எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது 'தமிழரசில்'. வளர்க; வாழ்க.

**-ம.நாராயணன்**
வேலூர்-9.

---

**ஆ**ளும் கட்சியினர்க்கு மட்டுமே உதவும் என்ற நிலை மாற்றித் 'தமிழரசை' எல்லா வாசகர்களும் போற்றும் புதையலாக்கிவிட்டீர்கள். போற்றுகிறோம்.

**- முருகேசன்**
மூலக்கரை.

---

**தா**ய்மார்களுக்கு மட்டுமல்ல; தந்தைமார்களுக்கும் ஏற்ற ஆலோசனைகளை வழங்கியது 'பிள்ளைப்பேறு' மருத்துவக் கட்டுரை.

**- சிவா.பாலாஜி**
மயிலாடுதுறை.

(இவ்வாறு பலகடிதங்கள் வந்துள்ளன)

---

**தே**ர்வு நேரத்தில் மாணவ-மாணவியருக்கு மிக நல்ல யோசனைகளைத் தெரிவித்தமைக்கு நன்றி.

**-கே.ஆர்.உதயகுமார்,**
சென்னை-1.

(இதேபோல் பலரும் எழுதியுள்ளனர்)

---

**அ**ட்டையிலிருந்த வேடந்தாங்கல் பறவைகள் மட்டுமல்ல, உள்ளே காணப்பட்ட திரு .வி. க பொன் மொழிகளும் பெரும் மகிழ்வளித்தன.

**-ரா.ராகவன்**
ஸ்ரீரங்கம்.

---

'வாழ்வுக்குத் தமிழ், செதிக்கு ஆங்கிலம்' என்ற கலைஞரின் உரைவீச்சு, தமிழின் முதன்மைக்கு அறிகுறி.

**-வைரி.தரளம்**
வை.செ.பாளையம்

---

**இ**தழுக்கு இதழ் 'தமிழரசு' ஜொலிப்படைகிறது.

**-தமிழ்ப்பரிதி,**
நெல்லிக்குப்பம்.

---

**ச**ட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர் பதில் உரை இணைப்பு இதயம் தொடுவதாக இருந்தது.

**-எஸ்.பி.வேலுசாமி**
கே.பி.சத்திரம்.

---

**'பெ**ரியாரின் விருந்தோம்பல் துணுக்கு, பெரியோர் என்றும் பெரியோரே என்பதைத் தெளிவுபடுத்தியது.

**-கே.ஜே.நாதன்,**
சேலம்-15.

---

**க**லீல் கிப்ரானின் 'மணலும் நுரையும்' கவிதை அருமையிலும் அருமை.

**-எஸ்.பாஸ்கரன்,**
கூகுடி.

---

**எ**ங்களைப் போன்ற இளைஞர்கள் முன்னேற வழிகாட்டுவதாக-அறிவுக் கண் திறக்கும் திறவு கோலாகத் 'தமிழரசு' திகழ்கிறது.

**-தி.சே.அறிவழகன்,**
திருப்புலிவனம்.

---

**அ**ரசு நிதிநிலை அறிக்கையைத் தனியே எடுக்கும் வகையில் செய்திருந்தீர்கள், எடுத்துப் பாதுகாத்துவிட்டேன்.

**-தமிழ்ப்பரிதி,**
நெல்லிக்குப்பம்.



# காலமெல்லாம் காளான் வாழ்க!

"நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான் நீ" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்படி யாரைப் பார்த்துச் சொல்வது வழக்கம் என்று கேட்டால்? எந்த அனுபவமும் இல்லாத, எந்த விபரமும் இல்லாத, குறிப்பாக எதற்கும் பயன்படாத ஒரு அப்பாவியை பார்த்துத்தான் இப்படி சொல்வார்கள். எதற்கும் பயன்படாத ஒருவரை காளானுக்கு ஒப்பிட்ட காலம் மாறி, காளானுக்குப் புது மவுசும், முக்கியத்துவமும் பெருகி, மக்களிடையே சமீபகாலமாகச் சிறந்த உணவு வகையாக கருதப்படுகிறது. இந்தக் காளான் வகைகள்.

காளான் வகைகளில் உண்ணும் காளான்களில் மட்டும் சுமார் இரண்டாயிரம் வகைகள் இருக்கின்றன என்றால் ஆச்சரியமாக இல்லை? எனினும் இவைகளில் சுமார் இருபது வகை காளான்கள் மட்டுமே செயற்கையாக வளர்க்க ஏற்றது. இதிலும் முக்கிய மூன்றுவகை காளான்களையே வியாபார ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

காளான் அதிகப்படியான புரதச்சத்து, உயிர்ச்சத்து அதாவது வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருள்கள் நிரம்பிய முழு உணவு என்று சொல்லலாம். காளானில் புரதச்சத்து 2.9 சதம் உள்ளது.

இது மற்ற பழவகைகளையும், காய்கறிகளையும் ஒப்பிடும்போது கூடுதலான புரதச்சத்து என்று தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக ஆப்பிள் பழத்தை எடுத்துக்கொண்டால் அதில் 0.3 சதம் தான் புரதச்சத்து உள்ளது. முட்டைக்கோசை எடுத்துக்கொண்டால் 1.5 சதம் தான் புரதம் உள்ளது.

காளானில் புரதத்துடன், நம் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான அமினோ அமிலங்கள், வைட்டமின் பி, சி, டி மற்றும் கே.யும், தாது உப்புகளான பாஸ்பரஸ், பொட்டாசியம், மற்றும் நார்ப்பொருள்களும் மிகுதியாக உள்ளன.

காளானில் கொழுப்புச்சத்தே இல்லை என்று சொல்லலாம். எனவே காளான் உணவு எளிதில் சீரணிக்கக் கூடியது. மாவுப்பொருள் காளானில் மிகக் குறைந்த அளவே உள்ளது. எனவே சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து வயது மக்களும் தாராளமாக உட்கொள்ளலாம்.

காளான்களில் உள்ள சத்து சிறப்புக்களையும், கொழுப்பு மற்றும் மாவுப்பொருள் அற்ற தன்மையையும் கருத்தில் கொண்டு, இரத்தக் கொழுப்பு, நீரீழிவு மற்றும் வயிற்றுப்புண் உள்ளவர்களுக்குக் கூட மருத்துவர்களால் காளான் உணவு சிபாரிசு செய்யப்படுகிறது.

வியாபார ரீதியாக செயற்கையாக மூன்று வகைக் காளான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1. குடைக்காளான், 2. சிப்பிக்காளான், 3. மொட்டுக் காளான். இந்த மூன்று வகைகளில் கூட சிப்பிக்காளானும், மொட்டுக் காளானும்தான் நம் மாநிலத்தில் பிரபலமானது. இதிலும் சிப்பிக்காளான் எளிதில் செயற்கையாக உற்பத்தி செய்யலாம் என்பதாலும், உற்பத்தி செய்யும் செலவும் மொட்டு இரகத்தை காட்டிலும் சற்றுக் குறைவு என்பதாலும் அதிக பிரபலமாக உள்ளது என்று சொல்லலாம்.

சிப்பிக்காளான் வளர்ப்பு முறைகளைப் பற்றி சற்று விரிவாக, தெரிந்து கொள்வது அவசியம்.

சிப்பிக்காளான் வளர்க்கத் தேவையான முக்கிய மூலப்பொருள்கள் மூன்று. ஒன்று வைக்கோல், இரண்டாவது காளான் வித்துக் குடுவைகள், மூன்றாவது பாலித்தீன் பைகள். தேவைப்படும் மற்ற பொருட்களை வீட்டில்/பண்ணைகளில் உள்ளவைகளைக் கொண்டே பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வைக்கோல்**

வைக்கோல் எடுத்துக்கொண்டால் இரண்டு அடி நீளமும், ஒரு அடி அகலமும் கொண்ட (60 செ.மீ. 30 செ.மீ., ஒரு பாலித்தின் பையில் நிரப்பும் அளவுக்கு சுமார் 500 கிராம் வைக்கோல் தேவைப்படும். வைக்கோலை சுமார் 5 செ.மீ.நீளத்திற்குச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி சுமார் 6 முதல் 8 மணி நேரம் தண்ணீர் நன்கு ஊறவைக்கவேண்டும். அதன்பின் இதனை நன்கு கொதித்த சுடுநீரில் சுமார் அரை மணி நேரம் மீண்டும் ஊறவைத்து, நீரை வடித்து ஈரம் போகும்வரை காயவைக்க வேண்டும். இதை ஒரு வகையான சுத்திகரிப்பு முறை (Sterlising) என்று சொல்லலாம். இப்படிச் செய்வதால் வைக்கோல் சுத்திகரிக்கப்பட்டு, இதன்மூலம் ஆரோக்கியமான நோயற்ற காளான் தயார் செய்யமுடியும்.

**காளான் வித்து**

காளான் வித்துக்கள் குடுவைகளில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. கோவை, மதுரை வேளாண் கல்லூரிகளில் முக்கியமாக விற்கப்படுகின்றன. ஒரு காளான் வித்து குடுவை சுமார் ரூ.10/-க்குக் கிடைக்கும். இந்தக்காளான் வித்துக் குடுவைகளை வாங்கிய சுமார் 10 தினங்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும். காளான் வித்து குடுவைகளை குளிர்ந்த இடத்தில் இருப்பு வைக்க வேண்டும். வெயில்பட்டு காய்ந்து, உயிர்வித்து செயலற்ற நிலைக்குப் போகாவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

**பாலித்தின் பைகள்**

பாலித்தின் பைகள் வாங்கும்போது 80 காஜ் திறன்கொண்ட 60 செ.மீ.நீளமும், 30 செ.மீ. அகலமும் கொண்ட பைகள் வாங்கவேண்டும். பாலித்தின் பைகளின் நடுவில் ஒரு செ.மீ. அளவில் இருதுவாரங்கள் செய்து அடிப்பகுதியைச் சுருக்கி நூலால்கட்டி அல்லது நெருப்பிலிட்டு இளக்கியோ வட்டமான அடித்தளமுள்ள பைகளாக உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

**தேவையான தட்பவெப்பநிலை**

காளான் வளர்ப்பிற்கு சரியான தட்பவெப்பநிலை மிகமிக அவசியம். செயற்கையான காளான் வளர்க்கும் அரைக்குள் சுமார் 24° - 26°சி வெப்பநிலையும், 85 முதல் 95 சதம் ஈரப்பதமும் இருக்கும்படி செய்தால், காளான் நல்லமுறையில்



வளரும். தரமும் சிறந்ததாக இருக்கும். இந்த சாதகமான சூழ்நிலையைக் காளான் வளர்ப்பு அறையில் ஏற்படுத்த, தரையில் ஆற்று மணலை நன்கு பரப்பி அதில் அடிக்கடி நீர் தெளித்து ஈரமாக்கிக் கொண்டேயிருக்க வேண்டும்.

இதேபோல், காளான் வளர்ப்பு அறையைச் சுற்றிலும், சாக்குகள் தொங்கவிட்டு, அதிலும் நீர் தெளித்து சாக்குகளை ஈரமாக்கி, அறையின் வெப்பத்தைக் குறைத்து, ஈரப்பதத்தை அதிகப்படுத்த வேண்டும். இப்படி செய்வதன் மூலம், செயற்கை முறையில் வளர்க்கப்படும் காளான்கள் நன்கு வளர்ந்து எதிர்பார்க்கும் மகசூலைக் கொடுக்கும்.

**அடுக்குத் தட்டுகள்:**

காளான் வளர்ப்பு அறையில் மேற்சொன்ன சூழ்நிலையை உருவாக்குவதுடன், காளான் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் வைக்கோல் அடைக்கப்பட்ட வட்ட வடிவாக்கப்பட்ட பாலித்தீன் பைகளை அடுக்கிவைக்க அறையின் சுவர் ஓரங்களில் அடுக்கு தட்டுகள் - அதாவது ராக்குகள் அமைப்பது அவசியம். இந்த ராக்குகளில் வைக்கோல் அடைக்கப்பட்ட வட்ட வடிவான பாலித்தின் பைகளை அடுக்கிவைக்க வசதியாக இருக்கும். அடுக்குகளில் தேதி விவரம் எழுதி, தேதிவாரியாக, பாலித்தின் பைகளை அடுக்கலாம்.

**செய்முறை**

வட்ட வடிவாக்கப்பட்ட பாலித்தின் பைகளில் 5 செ.மீ. உயரத்திற்கு, மேற்சொன்ன அளவில் சிறிதாக நொறுக்கப்பட்ட, சுத்தப்படுத்தப்பட்ட வைக்கோலை போடவேண்டும். பிறகு காளான் வித்துக் குடுவையிலிருக்கும் காளான் வித்துக்களைத் தனியாக எடுத்து, மூன்றில் ஒரு பங்கைப் பிரித்து எடுத்து, இதை மீண்டும் நான்கு சமபாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை, பாலித்தின் பையில் முதலில் 5 செ.மீ.உயரத்திற்குப் போடப்பட்டுள்ள வைக்கோல் மீது சமமாக மேலாகப் பரப்பவேண்டும். பிறகு மீண்டும் 5 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் போட்டு, காளான் விதையைப் பரப்பவேண்டும். இதுபோல், நான்கு அடுக்குகளில் வைக்கோலையும், காளான் வித்துக்களையும் மாற்றி மாற்றி பரப்பி,



பாலித்தின் பையின் வாய்ப்பகுதியைக் கெட்டியான நூல் கொண்டு கட்டிவிடவேண்டும். இதுவரை காளான் வித்து பாட்டிலில் இருந்து எடுக்கப்பட்ட மூன்றில் ஒரு பங்கு காளான் வித்தைத்தான் ஒரு பாலித்தின் பையில் 4 அடுக்குகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு பங்கு காளான் வித்துக்களை அடுத்து இரண்டு பாலித்தின் பைகளில், வைக்கோலுடன் சேர்த்து முன்பு சொன்னதுபோல் அடுக்குகளாக நிரப்பலாம். ஆக ஒரு காளான் குடுவையில் உள்ள வித்தை மூன்று பாலித்தின் பைகளுக்குப் பயன்படுத்தலாம். இதேபோல் பல வித்துக் குடுவைகளை வாங்கி தேவையான அளவு காளான் உருளைகள் தயார்செய்யலாம்.

இவ்வாறு தயார்செய்த காளான் வித்திட்ட பாலித்தின் பைகளைக் காளான் அறையில் அமைக்கப்பட்டுள்ள ராக்குகளில் வரிசையாக-தேதிவாரியாக அடுக்கி வைக்க வேண்டும்.

வித்திட்ட சுமார் 20 நாட்கள் கழித்து பார்த்தபின், காளான் வெண்மையாக வளர்ந்திருப்பது பாலித்தின் பை வழியாக தெரியும். இந்த நிலையில் பாலித்தின் பைகளை கிழித்து அகற்றிவிட வேண்டும். காளான் வளர்ந்த வைக்கோல் உருளைகளைக் காயவிடாது அவ்வப்போது, குறிப்பாக - காலை மாலை வேளைகளில் சிறிது நீர் தெளித்து ஈரப்படுத்த வேண்டும். காளான் அறையில் சுற்றித் தொங்கவிட்டுள்ள சாக்குகளையும் அவ்வப்போது நீர் ஊற்றி ஈரமாக்கிக்கொண்டேயிருக்க வேண்டும். தரையில் பரப்பப்பட்ட மணலிலும் நீர் தெளித்து ஈரப்பதமாகத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு காளான் அறையில் உள்ள காற்றின் ஈரப்பதத்தையும், வெப்பத்தையும் சீர் செய்வது தொடர்கையில், 4 அல்லது 5 தினங்கள் கழித்து பார்த்தால், அதாவது வித்திட்ட 24 அல்லது 25வது தினத்தில் வைக்கோல் உருளைகளில் காளான் சிறுசிறு முளைகளாகத் தோன்றி சிப்பி போன்ற வடிவத்தை முழுவளர்ச்சி அடையும்போது பெறும்.

ஒரு காளான் உருளையிலிருந்து முதல் தடவை சுமார் 150 முதல் 200 கிராம் வரை முழுவளர்ச்சியடைந்த காளான் அறுவடை செய்யலாம். முதல் அறுவடை முடிந்ததும், காளான் உருளைகளின் மேல் பாகத்தை, சற்று லேசாக சுமார் 1 செ.மீ. அளவிற்கு சுரண்டிவிட்டு, மீண்டும் மேற்கூறிய வழிகளில் நீர் தெளித்து காளான் அறையில் காற்றின் ஈரப்பதத்தையும், வெப்பத்தையும்



சீர் செய்து இரண்டாம் முறையாக ஒருவாரம் கழித்து சுமார் 100 கிராம் காளான் அறுவடை செய்யலாம். இதுபோல் வாரம் ஒரு முறையாக 3 அல்லது 4 தடவை காளான் அறுவடை செய்யலாம். இப்படியாக ஒரு காளான் உருளையில் மொத்தம் சுமார் 400 கிராம் வரை காளான் அறுவடை செய்யலாம்.

காளான் உற்பத்தி செய்து, அதை வியாபார ரீதியாக விற்பதில் உள்ள முக்கியப் பிரச்சினை என்னவென்றால், காளான் அறுவடை செய்த சுமார் 16 மணி நேரத்திற்குள் பயன்படுத்தி விடவேண்டும். அதாவது சமைத்துவிடவேண்டும். அப்படி செய்யவிட்டால் காளான் கெட்டுவிடும். ஒருவிதமான மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறிவிடும். காளானைத் தொட்டுப்பார்த்தால் மேல்பாகம் பிசுபிசுப்பாக இருக்கும். நீர்விட்டுவிடும். காளான் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும். அழுகிய வாசனையும் வரும். இந்நிலையில் இந்த காளான்களை உணவுக்கு பயன்படுத்தக்கூடாது. ஆனால் முறையாக - குளிர்சாதன அறைகளில் பாதுகாக்கப்பட்ட காளான்களை 6 மாதம் வரை கெடாமல் பாதுகாக்கலாம்.

ஒரு கிலோ காளான் உற்பத்தி செய்ய சுமார் ரூ.15 முதல் ரூ.20 வரை செலவாகும். சாதாரணமாக ஒரு கிலோ காளான் 30 முதல் 50 ரூபாய் வரை விலைபோகும்.

காளான் உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் தேவையான இயற்கைச் சூழ்நிலையும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் காளான் சேவையும் இருந்தும், கோவை, ஈரோடு இந்த இரண்டு மாவட்டங்களில்தான் காளான் வளர்ப்பு வியாபார ரீதியாகச் சில பகுதிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் காளான் வளர்ப்பு மிகுதியாக இல்லை.

**காளான் உற்பத்தியில் ஏன் இன்னும் பின்தங்கிய நிலை ?**

காளான் உற்பத்தி பெருகவேண்டும் என்றால், மக்களின் உணவுப் பழக்கத்தில் உடனடி மாற்றம் ஏற்படவேண்டும். அடிக்கடி காளான் உணவு சமைத்துச் சாப்பிடும் பழக்கம் நம்மில் வளர்ந்ததால்தான், காளான் உற்பத்தியை அதிகரிக்க அரசு மேல்நடவடிக்கை எடுக்கமுடியும். வருடத்திற்கு ஒருமுறை கூட காளான் உணவு சாப்பிடாத மக்கள், குடும்பங்கள் உள்ளன என்று சொல்லலாம். ஏன் பிறந்ததிலிருந்து இன்னும் ஒரு தடவைகூட காளான் உணவை சுவைக்காதவர்கள் நம்மில் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கடந்த காலங்களை ஒப்பிடும்போது, தற்போது காளான் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே சற்று அதிகரித்திருக்கிறது என்று சொல்லலாம். இப்போதும் கூட காளான் உணவு நட்சத்திர ஓட்டல்களிலும், ஒரு சில வசதியற்ற குடும்பங்களிலும் மட்டும் ஒரு மாறுதலுக்காகவும், நாகரீகம் என்ற பெயரில்தான் உட் கொள்ளப்படுகிறதே தவிர, காளான் பற்றி அனைத்து முக்கியத்துவங்களையும் தெரிந்து உட் கொள்ளுவதாகத் தெரியவில்லை.

தற்போது நாம் கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளைப் பெரும்பாலும் தினமுமே பயன்படுத்துவதுபோல், காளான் உணவும் நாம் அடிக்கடி சேர்த்துக்கொள்ளும் பழக்கத்திற்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கிராமத்திலோ ஒரு தெருவிலோ, பல குடும்பங்கள் உள்ள அடுக்குமாடி கட்டிடங்களிலோ, பாதிக்குப்பாதி வீடுகளில் இன்று கத்தரிக்காய் சாம்பார் அல்லது வெண்டைக்காய் பொரியல் என்று சொல்லிவிடலாம். இதுபோல் இன்று இந்த ஊரில், அல்லது ஒரு தெருவில் அல்லது இந்த அடுக்குமாடி கட்டிடத்தில் நிச்சயம் இரண்டு வீடுகளில் காளான் உணவு இன்று சமைத்திருப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

மற்ற காய்கறிகள் போல் காளான் உணவும் நம் குடும்பத்தில் அதிகம் இடம்பெறவேண்டும். அப்போதுதான் காளான் உற்பத்தி பெருகும்.

மேலும் காளான் என்றால் வசதியில்லாத ஏழைகள் சாப்பிடும் ஒரு பதார்த்தம் என்ற எண்ணம் மக்களிடையே இருப்பது மாறவேண்டும்.

காளான் உணவு ஒரு அசைவ உணவு என்ற எண்ணமும் நம்மில் சிலரிடம் உள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கது. இந்த மனப்பான்மையும் மாறவேண்டும்.

இப்படிப்பட்ட மனமாற்றங்கள் தோன்றி, காளான் உணவின் முக்கியவத்துவத்தையும், சத்து விவரங்களையும், உடல்நலத்திற்கேற்றது என்ற உணர்வும் இருந்தால் ஒழிய காளான் உற்பத்தியில் வெற்றி காண்பது சிரமம்.

மேலை நாடுகளில் காளான் வளத்தைப் புரிந்து, காளான் உணவை ஒரு முக்கிய உணவாகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வருகிறார்கள். அந்த நிலை நமக்கும் வரவேண்டும்.

காளான் உற்பத்தி செய்ய, தமிழ்நாட்டில் தேவையான இயற்கை சூழ்நிலையும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் காளான் சேவையும் இருந்தும், கோவை, ஈரோடு இந்த இரண்டு மாவட்டங்களில்தான் காளான் வளர்ப்பு வியாபார ரீதியாகச் சில பகுதிகளில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் காளான் வளர்ப்பு மிகுதியாக இல்லை.

காளான் உற்பத்தியைப் பெருக்குவோம், காளான் உணவை விரும்பிச் சமைப்போம்.

- கூடுதல் இயக்குநர், வேளாண்துறை.

★







# உயிர் திரவம் இரத்தம்

டாக்டர் சு.கணேசன்
டாக்டர் கி.சுவாமிநாதன்

ஒவ்வொரு ஜீவராசிக்கும் உயிர் முக்கியம்; அசையாதவற்றுக்குத் தண்ணீர் போதும்; நடமாடும் ஜீவராசிகளுக்கோ அதே போல் உயிர்வாழ இரத்தம் முக்கியம்!

ஆனால் – மனித இரத்தத்திற்குத் தனி மகத்துவம் உண்டு. இந்த இரத்தம்தான் நம் இதயத்திலிருந்து- அடி முதல் நுனி வரையிலான அங்கங்களுக்கெல்லாம் ஒரே நேரத்தில்- ஒரே சீராகப் பயணம் தொடங்கி, தேவையான சத்துப் பொருட்களை வழங்கி நாம் உயிர் வாழச் செய்கிறது.

நம்மை உயிர் வாழச் செய்யும் இந்த இரத்தத்தின் சக்தியே அலாதியானதாகும். எனவே இதை உயிரின் உயிர் என்றே போற்றலாம்!

சிவப்பு நிறங்கொண்ட இந்த அதிசயத் திரவத்தில், நம் கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு அணுக்கள் உள்ளன. குளுகோஸ் போன்றவை கலந்த தண்ணீர்- அதாவது திரவமாகிய பிளாஸ்மா (Plasma), இரத்தத்திற்குச் சிவப்பு நிறமேற்றும் சிவப்பு அணுக்கள் (Red Blood Corpuscles), நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடும் சக்திமிக்க வெள்ளை அணுக்கள் (White Blood Corpuscles), இவை தவிர நுண்அணுக்கள் (Platelets), வேறு சில புரதங்கள் (Protiens) இரத்த உரைதலுக்குத் தேவையான பொருட்கள் (Clotting Factors) ஆகிய யாவும் அடங்கியதே நமது இரத்தம்.

## முக்கியப் பணிகள்

மனித உடலைப் பொறுத்தவரை இரத்தத்தின் முக்கியப் பணிகள் என்னென்ன தெரியுமா?

நம் உடலின் எலும்புக் கூட்டைப் போர்வைபோல் மூடியுள்ள பலவகைத் தசைகள் உயிரோடிருக்கப் போதுமான பிராண வாயுவை (Oxygen) இரத்தமே கொண்டு செல்கிறது. இரத்தம் இந்த வேலையைக் குறைவின்றிச் செய்திடச் சிவப்பு அணுக்களில் உள்ள இமோகுளோபின் (Hemoglobin) என்ற முக்கியப் பொருளே பெரிதும் உதவுகிறது.

நமது உடல்நலத்தைக் கெடுக்கின்ற பலவகைக் கிருமிகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கும் பணியை வெள்ளை அணுக்கள் தாம் செய்கின்றன. நம் இரத்தத்தில் உள்ள இதில்- நியுட்ரோபில், ஈசனோபில், லிம்பொசைட் போன்றவை கலந்துள்ளன.

இவையெல்லாமே நோய்க் கிருமிகள் தாக்குதலில் இருந்து நம் உடலை- உயிரைக் காக்கின்றன.

## இரத்த ஓட்டம்

உறுப்புகளுக்குத் தேவையான பிராண வாயுவைக் (Oxygen) கொடுத்தபின்பு இரத்தம் அசுத்தமாகி விடுகிறது. பின்பு அது இரத்த நாளம் (Vein) மூலமாக இதயத்தைச் சென்றடைகிறது. கைகளை இறுக்கி மூடினால் இரத்த நாளம் நன்றாகத் தெரிவதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

அதுவே 'வெய்ன்' எனப்படும். நுரையீரல் இருதயத்திலிருந்து அசுத்த இரத்தத்தைச் சுத்தப்படுத்தி 'ஆர்ட்டரி' என்ற நாளத்தின் மூலம் உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும்

அனுப்பும் நம் உடலில் 5 - 6 லிட்டர் இரத்தம் உள்ளது.

**இரத்த தானம்**

இந்த இரத்தமானது, கருவில் குழந்தை இருக்கும் போதே உற்பத்தியாகத் தொடங்கி விடுகிறது. 6 மாத வளர்ச்சிக்குப் பிறகுதான் கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றிலும், அதன்பின் தொடை எலும்பு போன்றவற்றின் உட்பகுதியான மஜ்ஜையிலிருந்தும் (Bone Marrow) உற்பத்தியாகிறது.

எப்போதாவது இரத்ததானம் கொடுத்திருக்கிறீர்களா? இரத்ததானம் பற்றி இப்போது நிறைய தவறான கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் சில-இரத்தம் கொடுப்பதால் உடல் இளைத்துவிடும் என்றும் உயிருக்கு ஆபத்து என்பதுமாகும். முன்சொன்னதைப்போல் இரத்தம் எப்போதும் எலும்பிலிருந்து (மஜ்ஜை) ஊற்றுப்போல் ஊறிக்கொண்டே இருக்கும்.

அதனால் இரத்தம் கொடுத்த சில நாட்களுக்குள் கொடுத்த அளவு இரத்தம் எலும்பிலிருந்து ஊறிவிடும். மேலும் $5^{1}/_{2}$ லிட்டர் இரத்தத்திலிருந்து எடுப்பதோ 300-350 மில்லிதான். இது எப்படிஎன்றால், நிறைய நீர் ஊறும் கிணற்றிலிருந்து ஒரு வாளி தண்ணீர் எடுப்பதுபோலாகும். எனவே நண்பர்களே! இரத்தம் கொடுப்பதால் உடலுக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஓர் உயிரைக் காப்பாற்றிய



புண்ணியம் உங்களை வந்து சேரும். இவையன்றி இரத்ததானம் கொடுக்கும்போது இரத்த அழுத்தம், மலேரியா, மஞ்சள் காமாலை, எய்ட்ஸ் முதலியன இருக்கிறதா என்று இரத்தம் கொடுப்பவருக்குப் பரிசோதனை பண்ணப்படுகிறது. இதன் மூலம் நமக்கு அந்த நோய்கள் உள்ளதா என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

இரத்தச் சிவப்பணு வட்ட வடிவில் இருக்கும், இதன் வாழ் நாள் 120 நாட்களே, பிறகு அவை அழிகிறபோதே வேறு சிவப்பணுக்கள் உண்டாகும்.

ஆனால், வெள்ளையணுக்களோ, பகை வரும்போது படை எழுவதுபோல ஏதாவது நோய்க்கிருமி இரத்தத்தில் ஊடுருவுகிற போது வரும். அந்தக் கிருமிகளை அழிக்கிற தமது வேலை முடிந்ததுடன் விலகிக்கொள்ளும்.

**இரத்த 'குருப்பு'கள் என்றால் என்ன?**

முதல் உலகப் போரின்போது அடிபட்ட படை வீரர்களுக்கு இரத்தம் மற்றவர்களிடமிருந்து ஏற்றப்பட்டது. ஆச்சரியப்படத்தக்கவகையில் நிறைய வீரர்கள் இரத்தம் ஏற்றப்பட்டதாலேயே இறந்துவிட்டனர்! பிறகுதான், இரத்தத்தில் நிறைய குருப்புகள் இருப்பதும் ஒரு குருப் இரத்தத்தை இன்னொருவருக்கு ஏற்றினால் எதிர்விளைவுகள் ஏற்படும் என்பதும் தெரிய வந்தது. நிறைய இரத்த குருப்புகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை A, B, O, AB எனப்படுவன ஆகும். மற்றும் ரீஸஸ் (Rhesus) என்றோர் பொருள் சிவப்பு அணுவின் மேல் இருக்கலாம்; இதைப் பொறுத்து ரீஸஸ் பாஸிடிவ், நெகடிவ் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெண்களுக்குப்பிரசவ காலங்களில் இவை மிகவும் முக்கியமாகும்.

தந்தைக்கு ஒருவகை இரத்தமும், தாய்க்கு ஒரு வகை ஈரத்தமும் இருக்கலாம். பிறக்கிற குழந்தைக்கு அதில் ஒரு 'குருப்'தான் இருக்கவேண்டும் என்பதில்லை. குழந்தைக்கு வேறு குருப் இரத்தம் இருக்கலாம்; தவறில்லை. ஆனால்-

கணவர் RH பாஸிடிவ் ஆகவும், மனைவி RH நெகடிவ் ஆகவும் இருந்து குழந்தை RH பாஸிடிவ் ஆக இருந்தால், பிறக்கும் குழந்தைக்கு மஞ்சள் காமாலை நோய் வருவதற்கு வாய்ப்புண்டு. அதனால் கர்ப்பமாயிருக்கும் பெண்கள் எல்லோரும் தமது இரத்தத்தில் RH அணு உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்துகொள்வது அவசியம். குழந்தைக்கு வரும் மஞ்சள் காமாலை நோயைத் தடுக்க ஊசி மருந்துகள் உள்ளன.

முன் கூட்டியே இதைக் கவனிக்காமல் இருந்துவிட்டால் கருவிலேயே காமாலை நோய்க்கு ஆளாகி குழந்தை இறந்தே பிறக்கும்.

இரத்த வகைகளில் 'O' குருப் இரத்தம் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதுவும் அவசரத் தேவைக்கு அந்த வகை இரத்தம் இல்லாவிடில் 'O' குருப் இரத்தம் கொடுக்கலாம். அவசரத்திற்கு உதவுவதால் இதனை 'யூனிவர்சல் டோனார்' (Universal Donor) என்பர். AB வகை இரத்தம் குருப் உள்ளவர்கள் மற்ற குருப்காரர்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளலாம். பின் விளைவுகள் வராது. எனவே இதனை Universal Reuplent என்பர்.

**உற்பத்திக் குறைவு**

இரத்தத்தில் பிராணவாயு குறைகிறபோது அது தனது செம்மை நிறத்திலிருந்து கருநீல நிறமுடையதாக மாறக்கூடும்.

புகை மண்டலத்தின் நடுவே பணி புரிவோர், மலை உச்சிக்குச் செல்வோர், விஷம் அருந்துவோர் ஆகியோருக்கும்- வலது வெண்டிரிகள், இடது வெண்ட்ரிகள் இரண்டிற்கும் இடையே உள்ள குறுக்குச் சுவர் பழுதுபட்டு, பிராணவாயுவும் கரியமில வாயுவும் கலந்து இரத்தம் அவ்வாறு கருநீல நிறமாகிவிடுவதும் உண்டு.

இரத்த உற்பத்தி, சில நோய்களுக்காக நாம் உட்கொள்ளும் மருந்துகள் மூலமும் குறையக் கூடும். ஆகவே, எந்த நோயானாலும் சரி, நோயாளி தகுந்த மருத்துவரிடம் பரிசோதித்துக் கொண்டு, அவர் பரிந்துரை செய்கின்ற மருந்தையே உட்கொள்ள வேண்டும்.

உடல் உறுப்புகளில் காயம்பட்டால் வருகிற இரத்தம் சிறிது நேரத்தில் உறைந்து போகிறது அல்லவா? இரத்தத்தில் உள்ள பிளேட்லெட் (Platelets) மற்றும் உறைதலுக்குத் தேவையானதாக இரத்தத்தில் கலந்திருக்கும் பொருட்களாலேயே அது சாத்தியமாகிறது.

**மாதவிலக்கு**

பெண்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் மாதவிலக்கு உபாதையால் 30 மில்லிகிராம் இரத்தம் சேதாரமாகும்.

ஒரு நாளைக்கு 2.5 மில்லி கிராம் இரும்புச்சத்து உடலில் சேரும் வகையான சத்துள்ள உணவை உட்கொள்வதன் மூலம் அந்த இழப்பை எளிதில் சரிக்கட்டிவிடலாம். குறிப்பாக Red Meat, சோயா பீன்ஸ் போன்றவை இரத்த விருத்திக்கு ஏற்றவைகளாகும்.

அப்படிப்பட்ட சமயத்தில் உடலுறவு கொள்ளும் வழக்கம் சிலரிடம் காணப்படுகிறது. உடல் ரீதியாகத் தம்பதியர் பரிசுத்தமாக இருந்தால், அதன் காரணமாக எந்தவித விபரீதமும் ஏற்படாது.

சில பெண்களுக்கு 3 நாட்களுக்கு மேலும் இரத்தப்போக்கு இருப்பதுண்டு; இன்னும் சிலருக்கு ஒரே மாதத்தில் குறிப்பிட்ட காலக் கணக்கின்றி ஒரு தடவைக்கு மேல் ஏற்படுவதும் உண்டு.

இவ்வாறான சங்கடங்களுக்கு ஆட்படும்



பெண்கள், உடனடியாகத் தக்க மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றாக வேண்டும். இதில் கூச்சப்பட்டால் விபரீதமாகிவிடும்.

**இரத்தச் சோகை**

சிலருக்கு 'இரத்தச்சோகை' என்றோர் வியாதி ஏற்பட்டு இன்னல்படுத்துவது உண்டு.

மூல நோய், உயர் இரத்த அழுத்தம், சைனஸ், பெண்களானால் மாதவிலக்கு காலத்தில் அதிக இரத்தப் போக்கு, நாளமில்லாச்சுரப்பி, தைராய்டு, அட்ரினல் ஆகியவற்றில் உண்டாகும் சீர்கேடு, குடல் வயிற்றுப்புண் போன்ற குறைபாடுகளே இந்த நோய்க்கு மூலகாரணமாகும்.

சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் சீர்கேடு, முக்கிய எலும்புகளின் உட்புறமுள்ள மஜ்ஜையில் உண்டாகும் குறை இரத்த வாந்தி ஆகியவற்றால் இரத்த உற்பத்தி குறையும்; அதன் காரணமாகவும் இரத்தச்சோகை வரும்.

இந்த நோய்க்கு என்ன அறிகுறி தெரியுமா? உடல் வெளுக்கும், வீண் சோர்வு ஏற்படும், ஒருவிதப் படபடப்பு இருந்து கொண்டே இருக்கும்; அடிக்கடி மூச்சு வாங்கும்; பசி இருக்காது; உணவு எளிதில் செரிக்காது; ஒருவித மயக்கம் இருக்கும்; பார்வை மங்கும்; வாய்ப்புண், நாக்கில் புண் வரும்; நெஞ்சு வலி உண்டாகும்; கல்,மண், பேப்பர், ரப்பர் என்று கண்டதையும் தின்னும் பழக்கம் இருக்கும்.

இந்நோய்க்கு ஆளானவர்கள், இரும்புச் சத்துள்ள உணவை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பரவும் சில நோய்கள்**

இரத்தத்தினால் பரவும் வியாதிகள் மலேரியா, மஞ்சள்காமாலை, யானைக்கால் வியாதி போன்றவை மட்டுமல்ல; இப்போது எங்குபார்த்தாலும் 'எய்ட்ஸ்' என்ற உயிர்க்கொல்லிநோய் பரவியிருக்கிறது. இது பெரிதும் இரத்தத்தின் மூலமாகவே பரவும்.

உதாரணத்திற்கு- ஒருவருக்கு இருதய அறுவை சிகிச்சைக்கு உடனடியாக இரத்தம் தேவை என்று வைத்துக்கொள்வோம். ஏறத்தாழ 10 பாட்டில் இரத்தம் தேவைப்படும்.

இந்த இரத்தத்தைக் கொடுப்பதற்கு முன்பு கொடுப்பவரின் இரத்தத்தில் எய்ட்ஸ் கிருமி உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்து தர வேண்டும். இல்லையேல் மற்றவர்களிடமிருந்து இரத்தம் ஏற்றப்படும்போது 'ஹெச்.ஐ.வி.' (H.I.V.) கிருமிக்கு டெஸ்ட் செய்து கொள்வது அவசியம்.

**உயிருக்கே ஆபத்து**

இரத்த ஓட்டம் தடைபட்டால் மனிதனுக்கு வரும்மிகப்பெரிய ஆபத்து மாரடைப்பு ஆகும். உடல் முழுமைக்கும் இரத்தம் அனுப்பும் இதய இரத்தப்போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டால் எப்படி?

இதைத் தக்க நேரத்தில் கண்டுபிடித்துச் சிகிச்சை தராவிட்டால் உயிருக்கே உலை வைத்துவிடும்.

இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படுவது இரத்தம் உறைவது போன்ற குறைபாடே இந்த வியாதிக்கு முக்கியக் காரணமாகும்.

இரத்தத்தில் கொழுப்புச்சத்து அதிகரித்தல், அதிகமாகப் புகைபிடித்தல், இரத்த நாளம் பழுதடைதல், பாரிச வாயு, இரத்தப் புற்று நோய் போன்ற காரணங்களினால் இரத்தம் கெட்டிப்படுகிறது, அல்லது உறைந்து போகிறது.

இரத்தத்தின் கெட்டித்தன்மையைக் குறைத்து, மெலிதான தன்மையுடையதாக் வைத்திருக்கவே இதய நோய்க்கு ஆட்பட்டவர்களுக்கு 'ஆஸ்பிரின்' தரப்படுகிறது.

நாள்தோறும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டு வந்தாலேகூட இரத்தம் கடினத்தன்மைஅற்று மென்மையோடிருக்கும்.

**இரத்தக் கசிவு**

சிலபேருக்கு மூக்கில், எச்சிலில், சிறுநீரில், மலத்தில் தொடர்ந்தோ சில சமயங்களிலோ இரத்தம் வரக்கூடும்.

உயர் இரத்த அழுத்தம், மஞ்சள் காமாலை போன்ற நோயால் கல்லீரல் பாதித்தல், காச நோய், சிறுநீரகத்தில் கல் உண்டாதல், சிறுநீரகப் புற்றுநோய், குடலில் அல்சர், குடல் புற்று நோய் போன்ற ஏதாவது ஒரு காரணமே அவ்வாறு இரத்தம் வரச் செய்வதாக இருக்கும்.

தலையில் பலத்த அடிபட்டால் காது வழியாகவும் இரத்தக் கசிவு ஏற்படும்.

தகுந்த மருத்துவச் சிகிச்சை மூலம், இவ்வாறான பாதிப்புகளிலிருந்து எளிதில் தப்பமுடியும்.



# கீரையோ கீரை

**சிவ. சூரியன், இ.ஆ.ப.**
**இயக்குநர் (பொறுப்பு)**
**வேளாண்மைத்துறை**

"இந்தியாவில் ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒருவர் பார்வையற்ற தன்மையை அடைகிறார்கள்" என இந்திய மருத்துவக் கழகமும், "இந்தியாவிலுள்ள பத்து மில்லியன் குழந்தைகளில் 25% குழந்தைகள் உயிர்ச்சத்துப் பற்றாக் குறையால் பார்வையற்ற தன்மையை அடைகிறார்கள்" என உலக சுகாதார நிறுவனமும் அறிக்கைகள் தந்துள்ளன.

ஆரம்ப காலத்தில் தமிழக மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தார்கள். அவர்கள் உணவில் காய்கறிகளும் கீரைகளும் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆனால் தற்போது உணவில் கீரையை சேர்ப்பது மிகவும் அபூர்வமாகி விட்டது.

ஒவ்வொரு மனிதனும் சராசரியாக ஒரு நாளைக்கு உண்ண வேண்டிய கீரையின் அளவு 125 கிராம். ஆனால் தமிழகத்தில் தற்போது சுமார் 15 கிராம் கீரையையே அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். இதிலிருந்து தமிழகத்தில் கீரைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருப்பது தெரியவருகிறது.

நகர பழக்க வழக்கத்தால், கீரையைச்சேர்த்தல் என்பது தமிழக மக்கள் மத்தியில் மிகவும் குறைந்து விட்டது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான உயிர்ச்சத்து - 'ஏ' எளிதாகக் கீரைகளிலிருந்து கிடைக்கிறது. நாள்தோறும் 300 கிராம் காய்கறிகளைச் சராசரியாக உணவில் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதில் 125 கிராம், சுமார் பாதி அளவு சத்தை, கீரைக்கே ஒதுக்கி இருப்பதிலிருந்து கீரையின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

**கீரையின் முக்கியத்துவம்**

ஒரு செடியின் இலை நமது உடலுக்குத் தேவையான சத்துக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையாக இருப்பதோடு அவற்றைச் சேர்த்து வைக்கும் சேமிப்புக் கிடங்காகவும் பயன்படுகிறது. இந்த இலைகளில்தான் முக்கியப் பொருட்களான புரதம், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, உயிர்ச்சத்து, தாதுப்பொருட்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

இலைகளின் செல்களில்தான் பொதுவாக இரும்பு, சுண்ணாம்பு, பாஸ்பரஸ் பொட்டாசியம் போன்ற தாதுப்பொருட்கள் மிக அதிகமாக சேகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே கீரையை உட்கொண்டால் மேற்கூறிய அனைத்துச் சத்துக்களும் உடலில் சேரும். இதுதவிர கீரையானது வயிறு நிரம்பு பொருளாத (roughage) பயன்படுகிறது. இதில் உள்ள நார்ச் சத்தானது குடலுக்கு புத்துணர்ச்சியைக் கூட்டி எளிதில் செரிக்க உதவுகிறது.

பொதுவாக, கீரைகளில் அதிக நார்ச்சத்து இருப்பதால் மலச்சிக்கலை நீக்க உதவுகிறது. மலச்சிக்கல் நீங்கினாலே மனிதனுக்கு வருகின்ற வியாதிகளில் பெரும்பங்கு நீங்கிவிடும். கீரைகளில், உயிர்ச்சத்து- 'ஏ'வைத் தவிர இதர உயிர்ச் சத்துக்களான பி1, பி2, பி12, சி, கே, ஈ போன்றவைகளும் கிடைப்பதாக அறியப்படுகின்றது.

ஏனைய காய்கறிகளைக் காட்டிலும் கீரை மிகவும் மலிவானது. எளிதில் வாங்க இயலும். இந்தியாவில் சைவ உணவு உண்போர் அதிகம். அவர்களில், இளையோர், முதியோர் அனைவருக்கும் முக்கிய சத்துக்களை அளிக்க வல்லது கீரைகள் என்பதால், நாள்தோறும் கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கீரையில் மருத்துவக் குணம் அதிகமாக இருப்பதால் கீரையை உண்ணும்போது நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மஞ்சள்காமாலை நோய்க்கு ஆங்கில மருத்துவத்தில் சரியான மருந்துகள் இல்லை. இந்த நிலையில் மஞ்சள் கரிசலாங்கன்னிக் கீரையைப் பயன்படுத்தி இந்த நோயிலிருந்து பாதுகாப்பைத் தரமுடியும்.

மேலும் பச்சையாகக் காய்கறிகளை உண்ணும் பழக்கத்தை (சாலட்) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஊட்டச்சத்து



வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

கீரையை விலைக்கு வாங்கி உண்பதைவிட வீட்டிலேயே வளர்த்து உண்பது சாலச் சிறந்ததாகும். இடம் இல்லையே என்று சென்னை போன்ற · நகரங்களில் வசிக்கும் மக்கள் வருத்தப்பட வேண்டிய தில்லை. ஒவ்வொரு வீட்டின் பின்புறமும் இருக்கும் இடத்தில் ஒரு முருங்கையை வளர்க்கலாம். முருங் கையின் அடியில் ஒரு பசலைக் கொடி நட்டு வளர்க்கலாம்.



கரிசலாங்கன்னி

தவசி முருங்கை (Multi Vitamin Greens) என்று சொல்லப்படுகின்ற செடியை வீட்டில் வளர்த்தால், நாள்தோறும் காலையில் பல் தேய்த்தவுடன் ஓரிரு இலைகளைப் பச்சையாகத் தின்னும் பழக்கத்தை குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் மிகுந்த பயன் அடைய லாம்.

இது தவிர வீட்டிலுள்ள கடுகு, வெந்தயம் போன்றவற்றைச் சிறு அளவில் சாகுபடி செய்து பயன் படுத்தலாம். நமக்கு ஏற்கெனவே தெரிந்த சீமை பொன்னாங்கன்னி, தண்டுக்கீரை இவற்றை வீட்டைச் சுற்றி சிறு சிறு இடத்தில வளர்த்துப் பயன் அடையலாம்.

இடவசதியே இல்லையென்றால் கள்ளிப்பெட்டி, மண் தொட்டி களில் கீரைகளை வளர்த்துப் பயன் அடையலாம். பச்சைக் கீரைகளை நாள்தோறும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். கிராமத் தில் இருப்பவர்கள் களையாக களைந்து எறியும் சாரணை, வேளை, பண்ணைக்கீரை போன்ற வற்றை உணவுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

"பொன்னாம் காண் நீ" என்று பொன்னாங்கன்னியின் சிறப்பை வள்ளலார் கூறியுள்ளார். 'பஞ்ச பூதங்களின் சக்திகளை உள்ளடக்கி 'ஒளிச்சேர்க்கை' என்னும் செயற் பாடு இலைகளில் நடைபெறுவ தால் பச்சயம் உள்ள இலைகள் உடலுக்கு அதிக பாதுகாப்பைத் தருகின்றன.



துளசி

சிவக்கொழுந்து என்று சொல்லப்படும் 'வில்வமும்', அரிக்கொழுந்து என்று சொல்லப் படும் துளசியும் இதயம் சம்பந்த மான பல நோய்களைத் தீர்ப்பதால் தான் அவை ஆண்டவன் சந்நி தானம் மூலம் அன்பர்களைத் தூய்மைப்படுத்துகிறது.

இன்றும் அம்மை நோய் கண்டால் 'வேப்பிலை' தானே நமக்கு மருந்து. அதுபோலத்தான் பூ, காய், கனி இப்படி எதுவுமின்றி கொடியில் வெற்று இலையாக வளரும் 'வெற்றிலை'.

இப்படி இலையைச் சார்ந்த கீரை வகைகள், காய்கறிகள் எத் தனையோ நம் சித்த மருத்துவத் தில் உள்ளன.

நாள்தோறும் கீரையை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண் டால் வலிவோடும், பொலிவோடும் வளமோடும் வாழலாம்.





# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

எங்கள் கிராமம் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் அடங்கிய குருகூர் கிராமம். எங்கள் கிராமத்தில் மட்டும் சுமார் 1000 பேர் வசிக்கின்றனர். மற்றும் எங்கள் கிராமத்திற்கு அருகில் அத்தியூர், ஆனூர், மேலான மேடு, காவல்கூடம் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. எங்கள் கிராமத் திற்கு என்று பேருந்து வசதி கிடையாது. நாங்கள் நகர்ப்புறமான கும்பகோணத்திற்கோ மற்ற வெளியூர்களுக்கோ செல்ல வேண்டும் என்றாலும் மற்றபடி குடும்பத்திற்குத் தேவை யான அடிப்படைப் பொருள்கள் வாங்க வேண்டும் என்றாலும் எங்கள் கிராமத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள சோழபுரம் என்ற பேருருக்குத்தான் செல்ல வேண்டும். சோழபுரம் பேரூருக்குச் செல்லும் வழியில் சாலையின் குறுக்கே மண்ணியாறு என்று ஒரு பாசன ஆறு ஓடுகிறது. அந்த மண்ணியாற்றில் உள்ள பாலம் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் (கைப்பிடி இல்லாமல்) இருக்கிறது. சுமார் இரண்டு அல்லது மூன்று தடவை அந்த பாலத்தில் மாட்டு வண்டி பாதுகாப்பு கைப்பிடி இல்லாததால் தவறி விழுந்து மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பல கால்நடைகள் தவறி விழுந்து இறந்திருக் கிறது. இதே நிலை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. ஆகவே எங்கள் பகுதி மக்களின் இந்த அவல நிலையை பொதுப்பணித்துறை மூலமாகவோ அல்லது உள்ளாட்சி அமைப்பின் மூல மாகவோ சீர் செய்து தர ஆவன செய்து தரும்படி எங்கள் பகுதி கிராமப் பொது மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அ. அன்பழகன்
குருகூர்.

**தீர்வு:**

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மகாராஜபுரம் ஊராட்சிக்கு, மணல்மேடு வழியாக சோழபுரம் ஊராட்சிக்கு ஒரு சாலை செல்கிறது. இதன் நடுவில் மண்ணியாறு குறுக்கே செல்கிறது. இந்த ஆற்றின் நடுவே ஒரு குறுகிய பாலம் உள்ளது. இந்தப் பாலத்தின் நீளம் 36.5 மீட்டர் நீளமாகும். இந்தப் பாலத்தின் வழியாக கார், மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரிகள் மட்டுமே செல்ல முடியும். ஆனால் அதிகாரிகளின் அறிவுரைகளைப் பொருட்படுத்தாமல் கரும்பு ஏற்றிய டிராக்டர்களை இதன் வழியாக ஓட்டிச் செல்கின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, அனைத்து கனரக வாகனங்களும் செல்லும் வகையில் புதிய பாலம் கட்ட வேண்டியுள்ளது. புதிய பாலம் கட்டுவதற்குச் சுமார் ரூ.73 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தால் இப்புதிய பாலத்தினைக் கட்டி, கிராம மக்களுக்கு வசதி செய்து தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.

**பிரச்சினை:**

நல்லாட்சி நடைபெறும் இத்தருணத்தில், எங்கள் பகுதியில் உள்ள 'அரண்மனைக் குறிச்சி மேம்பாலம்' நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதைத் தெரியப்படுத்து



கிறேன். இது திருச்சி- அரியலூர், திருச்சி- தஞ்சை ஆகிய முக்கிய நகரங்களை இணைக்கும் சாலையில் உள்ளது. இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் கரும்பை இப்பாலத்தின் வழியாகத்தான் காட்டூர் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அரண்மனைக் குறிச்சி திருமானூர் ஒன்றியம், அன்னி மங்கலம் ஊராட்சியில் உள்ளது. இப் பாலத்தை முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெள்ள நிவாரணத்தின்போது பார்வையிட்டு, உடனே மேம்பாலம் கட்ட ஆணையிட்டார்கள். அன்றைய நாளி லிருந்து இன்றுவரை எவ்வித முன்னேற்ற மும் இல்லாமல் உள்ளது. எனவே இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்து உதவக் கேட்டுக்கொள்கிறேன்.

பாளை திருநாவுக்கரசு,
பாளையப்பாடி,
அரண்மனைக்குறிச்சி
திருவள்ளுவர் மாவட்டம் - 621 851



## தீர்வு:

திருமானூர் ஒன்றியம் அரண்மனைக் குறிச்சி மேம்பாலம் கட்டுதல்:

கீழப்பழூர் திருமழப்பாடி சாலை இக்கோட்ட பராமரிப்பில் உள்ள ஒரு அரசு இதர மாவட்டச் சாலையாகும். இதன் நீளம் 16.4 கி.மீ. ஆகும். இச்சாலையில் மி.மீ. 12/8ல் நந்தியாறு குறுக்கிடுகிறது. மேற்படி பாலம் கட்டப்பட 24 வரிசைகள் கொண்ட 900 கி.மீ. விட்டமுள்ள குழாய் தாம்போகி தற்போது உள்ளது. இது மிகவும் தாழ்வாக அமைந்துள்ளது. இதன் வழியாக செல்லும் வெள்ள நீரின் உயரம் அதிகமாக உள்ளது. இத்தாம்போகியிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் கொள்ளிடம் ஆறு கலக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வரும்போது கொள்ளிடம் வெள்ள நீர் நந்தியாற்றின் குழாய் தாம்போகிக்கு மேல் நீர் தேங்கி விடுகிறது. கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வடியும் வரை இத்தாம்போகியின் மேல் நீர் உயரமாகத் தேங்கி நிற்கிறது. இதனால் போக்குவரத்து பெரிதும் தடை படுகிறது.

மழைக் காலங்களில் போக்குவரத்து தடைபடுவ தாலும், கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வரும்போது நந்தியாற்றில் நீர்தேங்கி விடுவதாலும், தடையற்ற போக்குவரத்திற்கும் இவ்விடத்தில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டுதல் மிகவும் அவசியமானதாகும். இவ்வுயர்மட்ட பாலம் அமைக்கப் பெற்றால் கீழப்பழூர் வண்ணம், கீழ வட்டாங்குறிச்சி, அரண்மனைக்குறிச்சி, திருமழபாடி மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் தங்கள் விளைப்பொருட்களை அருகிலுள்ள அங்காடிகள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு மழைக் காலங்களிலும் எடுத்துச்செல்ல ஏதுவாக இருக்கும்.

இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்க 1997-98ஆம் ஆண்டிற்கு பகுதி-2 திட்டத்தில் ரூ.270 இலட்சத்திற்குச் சேர்க்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் (நெஊப) திருச்சிராப்பள்ளிக்குச் சிபாரிசு செய்து அனுப்பப்பட்டுள்ளதாக, திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்) தெரிவித்துள்ளார்.

கே. நந்தகிஷோர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்
பெரம்பலூர்.

## பிரச்சினை:

தமிழகத்தின் காவல்துறைக்கு, உதவி ஆய்வாளர் பணி நியமனத்திற்குக் கடந்த 1.1.94 அன்று அன்றைய தமிழக அரசால் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர் வாணையம் மூலம் மனுக்கள் கோரப்பட்டு உடல்திறன் தேர்வு, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு, மருத்துவத் தேர்வு மற்றும் போலீஸ் வெரிபிகேசன் உள்ளிட்ட அனைத்துத் தேர்வுகளும் முடிவடைந்து, 1100 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இரண்டு கட்டங்களாகப் பயிற்சியளிக்க அரசு முடிவு செய்து, முதல் கட்டமாக 500 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, ஆவடி யில் 300 பேருக்கும், வீராபுரத்தில் 200 பேருக்கும் கடந்த 1.3.96 அன்று பயிற்சி



தொடங்கப்பட்டது. அடுத்தகட்டமாக 14.3.96 அன்று மீதமுள்ள 600 பேருக்கும் பயிற்சி வழங்க கோவை காவலர் பயிற்சிக் கல்லூரி தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் தேர்தல் ஆணையத்தால் நிறுத்தி வைக்கப் பட்டது.

இது பற்றி, கடந்த 30.7.96 அன்று தமிழ் மாநில காங்கிரஸின் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களின் கேள்விக்குப் பதிலளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், "கடந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்ட 10,000 காவலர்கள், 600 சப்-இன்ஸ்பெக்டர்கள், 1069 தீயணைப்பு வீரர்கள் ஆகியோரையும் பணியிலமர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது" என்றார்கள்.

ஆனால், தீயணைப்புத் துறைக்கு மட்டும் கடந்த 9.9.96 அன்று 1069 பேரையும் பணியிலமர்த்தி அரசு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.. மீதமுள்ள உதவி ஆய்வாளர் களுக்கும் காவலர்களுக்கும் இன்னும் பணி நியமனம் பற்றிய உத்தரவு வரவில்லை.

மேலும் 21.8.96 அன்று "சொன்னதைச் செய்வோம்! செய்வதையே சொல்லு வோம்!" என்ற தலைப்பின் கீழ் வெளி யிடப்பட்ட 100 நாள் சாதனையின்கீழ் "கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 காவலர்கள் 600 காவல்துறை உதவி ஆய்வாளர்கள், 1069 தீயணைப்புப் பணியாளர்கள் பணியமர்த்தல்'' என அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் வெளியான 6 மாத சாதனையிலும் "தமிழரசு" பத்திரிகையிலும் இதே செய்தி வெளியிடப்பட்டிருந்தது.




இதுபற்றிக்காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் கேட்டதற்கு "எங்களுக்கு இதுபற்றிய அரசு ஆணை எதுவும் வரவில்லை. வந்தால், வந்தவுடன் அனுப்புவோம்" என்று கூறியிருந்தனர்.

தேர்வு பெற்றவர்களும் வழி மேல் விழி வைத்து, இன்று வரும், நாளை வரும் என்று எண்ணி, வேறு எந்த வேலைக்கும் செல்லாமல் இதேயே எதிர்பார்த்து ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் 7.10.96 அன்று அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் முன் தேர்வு பெற்ற காவலர்கள், அறிக்கை செய்யப் பணித்து 7 நாட்கள் உள்ளாட்சித் தேர்தல் பணிக்குப் பயன்படுத்தப்பட்டு, 315 ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்பட்டது.

மேலும் 6.12.96 அன்று சென்னையில் தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர் களுக்கு அளித்த பேட்டியின்போது, "கடந்த ஆட்சியின் போது தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களைப் பணிநியமனம் செய்வதாக சட்டசபையில் 'அறிவித்திருந் தீர்களே இன்னும் ஏன் பணியமர்த்தவில்லை' என்ற வினாவிற்கு, ''அதுபற்றி என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலிப் பேன், நீங்கள் சொல்லுவது தான் செய்தி, இது இன்னும் என் கவனத்துக்கு வர வில்லை. வந்தால் நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறியதாக அனைத்து தினசரி களிலும் செய்தி வெளியாகியிருந்தது.

''சிவப்பு நாடாவால் கட்டப்பட்டு கோப்புகள் தேங்குவது ஊழல் எழுந்து, ஊர் சுற்றக் கிளம்புவதற்கு, சிவப்புக் கம்பளம் விரித்தது போன்று அமைந்து விடுகிறது" என்று அறிவுறுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், எவ்விதத் தாமதமுமின்றி, தேர்வு

செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களையும், காவலர்களையும் உடனடியாகப் பணியிலமர்த்தி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகிறோம்.

காவல் பணிக்குத் தேர்வு
செய்யப்பட்டவர்கள்

## தீர்வு:

1. 1994-95ஆம் ஆண்டில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவல் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக, தேர்வு நடத்தி 1100 நபர்களைப் பொது சந்தையிலிருந்து தெரிவு செய்து பட்டியல் அளித்தது.

2. அதிலிருந்து, முதல் 500 நபர்களுக்குப் பணி நியமனம் உத்தரவுகள் வழங்கப்பட்டு, சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியிலும், வீராபுரம், தற்காலிகக் காவல் பயிற்சிக் கல்லூரியிலும் ஒரு வருட காலம் அடிப்படைப் பயிற்சி 1.3.96 முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

3. தெரிவு பட்டியலில் உள்ள மீதி 600 நபர்களுக்கும் பணி நியமனம் செய்து கோயம்புத்தூர், தற்காலிக காவல் பயிற்சிக் கல்லூரியில் அடிப்படை பயிற்சி அளிக்க அரசு அனுமதித்த போதிலும், அப்போது தேர்தல் சமயம் ஆனதால், அவர்கள் பணி நியமனம் செய்யப்படவில்லை.

4. காவல்துறையில், காவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட 10,000 பேர்களும் காவல் சார் ஆய்வாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட மீதியுள்ள 600 பேர்களும் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் அவர்களும் சட்டமன்றத்தில் உறுதி அளித்து உள்ளார்கள்.

5. சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலின் போது, காவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர் தேர்தல் பந்தோபஸ்து பணிக்காகத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டு, அவர்கள் ஆற்றிய அந்தப் பணிக்காகத் தொகுப்பூதியம் வழங்கப்பட்டது.

6. காவல் சார் ஆய்வாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மீதியுள்ள 600 பேர்களைப் பணியில் அமர்த்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விரைவில் பணி அமர்த்தப்பட்டு, அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

7. காவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 10,000 பேர்களில் இனவாரியாகத் தொகுக்கப்பட்ட பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. அது பெறப்பட்டதும் பதவி காலியிட எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு கட்டங்களாகப் பணியமர்த்தப்பட்டு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ள பன்னிரண்டு தற்காலிகக் காவல் பயிற்சிப் பள்ளிகளில் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

காவல்துறை இயக்குநர்
அரசினர் தோட்டம், சென்னை





## பிரச்சினை:

எங்கள் ஊர் பிரச்சினை என்ற தலைப்பில் எங்களது ஊராட்சியில் நீண்டகாலத் தீர்வுகாண இயலா 19 ஆண்டுகால கோரிக்கை பற்றி எழுதுகிறேன். இந்திய சுதந்திரத்திற்குப் பின் இன்று வரை எங்களுக்குக் குடிநீர் வசதி இல்லை. எங்களது ஊராட்சியில் நான்கு கிராமங்களில் மேல்நிலை நீர்த்தொட்டி உள்ளது. ஆனால் மழைநீரை மட்டுமே நீர்த்தொட்டி கண்டிருக்க முடியும். இவை இப்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளன. கூட்டுக் குடிநீர் திட்டம் இங்கு இருப்பது உண்மை. ஆனால் சுமார் 10 மைல் சுற்றளவில் எங்கள் பகுதிக்கு மட்டும் இணைப்புக் குழாய்கள் இருந்தும் இணைப்பு இல்லை. எங்களுக்கு நன்மை செய்யும் வகையில் கோரிக்கையினை நிறைவேற்றவும்.

எஸ்.எம். சன்முகசுந்தரம்சேர்வை
செல்வனேந்தல்
ஆவுடையார்கோயில் ஒன்றியம்

## தீர்வு:

ஆவுடையார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் பாண்டிபத்திரம் கூட்டுக் குடிநீர் திட்டம் சீர் செய்யப்பட்டு 10.1.97க்கு பின்னர் இயக்கப்பட்டு தற்போது மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. சன்முகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
புதுக்கோட்டை

## பிரச்சினை:

சிதம்பரம் நகரில் கடந்த 6 மாத காலமாக ரௌடிகள் அட்டகாசம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. முக்கிய வீதிகளிலும், 4 தெருக்கள் கூடும் இடங்களிலும் ரௌடிகள் கும்பலாக நின்று கொண்டு, பெண்களையும், மாணவ, மாணவிகளையும் ஆபாசமான வார்த்தைகளால் கேலி செய்யும் நிகழ்ச்சி தினசரி நடைபெறும் நிகழ்ச்சியாகி விட்டது. மேலும், இங்கு ரௌடிகள் மூன்று குருப்புகளாக இருந்து கொண்டு சின்னகடைத்தெரு, தோப்பு, கஞ்சித் தொட்டி முனை ஆகிய இடங்களில் பயங்கர ஆயுதங்களுடன் மோதிக்கொள்வது, பொதுமக்களுக்கு மிகுந்த இன்னல்களை ஏற்படுத்துகிறது. கருணை கூர்ந்து தமிழக முதல்வர் சிதம்பரம் நகரில் உள்ள ரௌடிகளைக் களையெடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப்பொதுமக்கள்
சிதம்பரம்

## தீர்வு:

இம்மனு சம்மந்தமாக விசாரணையில் 1995ம் ஆண்டு வரையில் சின்ன கடைத்தெருவில் பழனியும் எதிர் கோஷ்டியாக காமராஜ் என்பவரும் செயல்பட்டு வந்தனர் என்றும் சிதம்பரம் நகர் காவல்நிலைய குற்ற எண்.36/90, 263/91, 352/92 மற்றும் 187/91 ஆகிய வழக்குகளில் தேடியதில் கடந்த மூன்று ஆண்டு காலமாகத் தலைமறைவாக இருந்தார் என்றும் மேலும் இரு கோஷ்டி தரப்பினரும் 1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் சிறையில் இருந்ததால் பிரச்சினைகள் இல்லாமல் இருந்தது எனவும் 1996ம் ஆண்டில் காவல் துறையினர் தீவிர கண்காணிப்பினால் ரௌடித்தனம் குறைந்து கூலி வேலைக்குச் சென்று வந்தனர் என்றும் செந்தில் கோஷ்டியினர் ஆட்கள் சிறு சிறு சம்பவம் தொடர்பாக 24.7.96ல் குற்ற எண்.343/96 பிரிவு 294, 323 இதர மற்றும் பல குற்ற எண்களில் வழக்குப் பதிவு செய்து புருஷோத்தமன் மற்றும் அவரது ஆட்களும் கைது செய்யப்பட்டு காவல் அடைப்பில் இருந்து வருகின்றனர். மற்றும் செந்தில் நடராஜன் ஆகியோர் தொடர்ந்து காவல் அடைப்பில் உள்ளனர். பாஸ்கரன் தலைமறைவாகி உள்ளான்.



இதுதவிர, பொதுமக்களுக்கு இடையூறாக சாலையில் தேவையற்ற நிலையில் நிற்பவர்கள், கிண்டல் செய்யலாம் என்ற சந்தேகத்தில் இருப்பவர்கள் பல கோணங்களில் * தீவிரமாகக் கண்காணித்து 1996ம் ஆண்டில் 182 பேர் மீது 75 எம்சிபி ஆக்ட் படி வழக்கு பதிவு செய்தும் 1997ம் ஆண்டில் ஜனவரி மாதம் 32 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு அனைவருமே அபராதம் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளனர்.

இதுதவிர சிதம்பரம் நகரில் கடந்த 6 மாத காலமாக இரவு பகல் ரோந்து செய்து நகரைச் சுற்றி எந்த அசம்பாவிதமும் நிகழாமல் கண்காணித்து வரப்படுகிறது.

டி.வி. ரவிச்சந்திரன், இ.கா.ப.,
காவல்துறை கண்காணிப்பாளர், கடலூர்.

## பிரச்சினை:

சேலம் மாவட்டம் பழைய பஸ் நிலையம் அருகில், திருமணிமுத்தாறு பாலத்தின் கீழ் பகுதியில் பழைய டயர்களை வியாபாரம் செய்பவர்கள் டயரில் உள்ள கம்பிகளை எடுப்பதற்காக பாலத்தின் அடியில் எரிக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியைச் சுற்றி அதிக புகை மண்டலம் ஏற்படுகிறது. மேலும் காற்றுடன் கலந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் காற்று மாசுபடுகிறது. சுகாதாரக் கேடு உண்டாகிறது. இதனைப்பலரிடம் கூறியும் எந்தப் பயனும் இல்லை. உங்கள் மூலமாவது எங்கள் பிரச்சினை தீர வழி செய்ய வேண்டும்.

பொதுமக்கள்
அம்மாபேட்டை, சேலம் மாவட்டம்

## தீர்வு:

சேலம் பழைய பஸ் நிலையம் அருகே உள்ள திருமணிமுத்தாற்றின் அடியில் அதன் ஓரங்களில் பழைய டயர் வியாபாரம் செய்யும் ஒரு சிலர் அவைகளைக் கருக்கிக் கொண்டிருந்தது உண்மை. நெருப்பின் அபாயம் கருதி அவர்கள் திருமணிமுத்தாறு சாக்கடை ஓரம் இந்த செயலில் ஈடுபட்டுள்ளார்கள். இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு பொதுச் சுகாதாரம் கெடும்

வகையாக ஈடுபடக்கூடாது என அவர்கள் அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

பிரமோத் குமார், இ.கா.ப.,
காவல் கண்காணிப்பாளர், சேலம்.

**பிரச்சினை:**

விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கோட்டத்தில் உள்ள மின்துறை அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை (மின் கட்டண கணக் காளர்களைத் தவிர) தங்களுக்குள் ஒற்றுமை யாக மின்சார நுகர்வோர்களிடம் "கமிசன்" வாங்கிக்கொண்டுதான் மின் இணைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியைச் செய்வார்கள். விவசாய மின்சார மோட்டார் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றால் போதும் "இலவச மின்சாரம்" தானே? இதற்கு முன்பு டீசல் வாங்கிதானே டீசல் எஞ்சினுக்கு இறைத் தாய்? நீ ஒரு வருட டீசல் வாங்குகின்ற பணத்தை எங்களுக்குக் கொடுத்தால் என்ன குறைந்தா போவீர்கள் எனக் கூறும் போது விவசாயிகளுக்கு இலவச மின்சாரமே வேண்டாம் என்று கூடத் தோன்றும்படி நடந்து கொள்கிறார்கள். பிறகு அலுவலகத் திற்கு பிற்பகலில் சென்றால் அங்கு கணக்காளர்களைத் தவிர மற்ற அதிகாரி களில் ஒருவர் மட்டுமே இருப்பார். இந்த நிலையை எதிர்த்துக் கேட்பவர்களின் நிலைமை பரிதாபம் தான். ஏனெனில் வேண்டும் என்றே சில தனி விதி முறை களையும், நடைமுறைகளையும் முகத்தில் அடித்தாற் போல் சொல்லுவார்கள். நீங்கள் என்ன சொன்னாலும் யாரிடம் போய் என்ன சொன்னாலும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது என்றும் மின் உபயோகிப்பாளர்களைப் பயமுறுத்து கிறார்கள். அந்த அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், எங்கள் மாவட்ட அமைச்சர்களுக்கு மக்கள் மத்தியில் அவப்பெயரை ஏற்படுத்துகின் றனர். குறிப்பாகக் கள்ளக்குறிச்சி கோட்டம், நாகலூர் இளநிலைப் மின்பொறியாளர் (இயக்கமும் பராமரிப்பும்) அலுவலகத்தில் தான் முறைகேடு நடை பெறுகிறது. மற்ற



இளநிலை மின் பொறியாளர் (இயக்கமும் பராமரிப்பும்) இதைவிட நன்றாகவே முறைகேடு நடைபெறுகிறது.

கள்ளக்குறிச்சி கோட்ட மின்
உபயோகிப்பாளர்கள்
கண்டாச்சிமங்கலம்

**தீர்வு:**

நாகலூர் மின்வாரியப் பிரிவு அலுவலகப் பகுதியைச் சார்ந்த கண்டாச்சிமங்கலம் ஊராட்சியில் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், விவசாய மின் இணைப்புப் பெறுவதற்கு ஒருவரும் பணம் லஞ்சமாகக் கொடுப்பதில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். மேலும் இளமின்பொறியாளர், நாகலூர் அவர்கள் ஆலத்தூர் பிரிவு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வகிப்பதால், வாரத்தில் எல்லா நாட்களும் நாகலூரில் இருப்பது முடியாமல் போய்விடுகிறது. குறிப்பாகத் தகுந்த ஆதாரங்களுடன் லஞ்சம் வாங்கும் ஊழியர், அதிகாரிகள்பற்றிப் புகார் கொடுத்தால் அதன் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. சுந்தரம்,
மேற்பார்வைப் பொறியாளர்
விழுப்புரம் இராமசாமி படையாட்சியார்
மின்பகிர்மான வட்டம்
விழுப்புரம்



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தோல் தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**
DIPLOMA IN LEATHER TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Leather Technology* இந்த பட்டயப் படிப்பினை மூன்று ஆண்டுகளில் பயிற்றுவிக்கிறது.

**அச்சுக்கலை தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**
DIPLOMA IN PRINTING TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Printing Technology, Institute of Graphic Arts* இப் பட்டயப் படிப்பினை நடத்துகிறது.

**இரசாயனத் தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**
DIPLOMA IN CHEMICAL TECHNOLOGY :

சென்னையிலுள்ள *Institute of Chemical Technology*, ஈரோட்டில் உள்ள *Institute of Chemical Technology* இப் பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகளில் பயிற்று விக்கிறது.

**பெட்ரோலிய இரசாயனவியல் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN PETROCHEMICAL:

ஈரோட்டில் உள்ள *Institute of Chemical Technology* 3 ஆண்டுகளில் பயிற்றுவிக் கின்றது.

**மீச்சேர்மம் தொழில்நுட்பவியல் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN POLYMER TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Chemical Technology* 3 ஆண்டுகளில் பயிற்றுவிக்கின்றது.

**கணிணி அறிவியல் மற்றும் பொறியியல் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN COMPUTER SCIENCE AND ENGINEERING:

தமிழகத்தில் உள்ள 30க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் இந்த பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகளில் நடத்துகின்றது.

**மின்னணுவியல் - தொலைத்தொடர்பு பொறியியல் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN ELECTRONICS AND TELECOMMUNICATION ENGINEERING :

காஞ்சிபுரத்தில் உள்ள பக்தவத்சலம் பாலிடெக்னிக் 3 ஆண்டுகளில் நடத்துகின்றது.

**குளிர்பதன சீர்வளி வசதி பெருஞ்சான்றிதழ் :**
DIPLOMA IN REFRIGERATION AND AIRCONDITIONING :



இப்பட்டயப் படிப்பினை இராஜ பாளையம், சென்னை பாலி டெக்னிக்குகள் நடத்துகின்றன.

**நெசவுத் தொழில்நுட்பவியல் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN TEXTILE TECHNOLOGY:

தமிழகத்தில் உள்ள 25க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் இப்பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகள் நடத்துகின்றன.

**துணி விற்பனை நிர்வாகப் பெருஞ்சான் றிதழ் :**
DIPLOMA IN TEXTILE MARKETING & MANAGEMENT

இப்பட்டய படிப்பினை *S. S. M. Institute of Textile Technology* குமாரபாளையத்தில் நடத்து கின்றது.

**இயந்திரக் கருவி பராமரிப்பு - பழுதுபார்ப்பு பெருஞ்சான்றிதழ் :**
DIPLOMA IN MACHINE TOOL MAINTENANCE AND REPAIR :

3 ஆண்டுகளுக்குரிய இப் பட்டயப் படிப்பினைக் கீழ்க்கண்ட நிறுவனங்கள் நடத்துகின்றன.

1. *C.M. Kothari Technological Institute, Sembarampakkam, Madras.*
2. *Govt. Technical Training Centre, Guindy, Madras.*

   *(Diploma in Tool Engg.)*

3. *Institute of Tool Engg., Dindigul.*

இவை தவிர - *Diploma in Fibre Technology, Diploma in Automobile, Diploma in Textile Manufacturing, Diploma in Automobiles, Diploma in Metallurgy, Diploma in Foundary Technology, Diploma in Pulp Paper Technology* போன்ற பட்டயப் படிப்புகளும் தமிழ கத்தில் உள்ள தொழிற் கல்லூரி களில் நடத்தப்படுகின்றன.

மேலும் தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் *ITI Carpenter, Moulder, Plumber, Painter, Diesel Mechanic, Motor Mechanic, Wireman, Turner, Mechanist, Fitter, Electrician, Draughtsman, Radio-TV Mechanic,* போன்ற பயிற்சிகள் ஓராண்டில் நடத்தப்படுகின்றன. SSLC வரை படித்திருந்தால் மாத்திரம் இப் பயிற்சிகளில் சேரத் தகுதியான தாகும். இந்திய அரசினால் இத்தேர்வுகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. குறிப்பாகக் கிராமப் புறங்களைச் சார்ந்த இளை ஞர்கள் இப் பயிற்சிகளைப் பெற்று, சுயமாக தொழில்களைத் தொடங்கி உள்ளனர்.

**விவசாயத் துறையில்...**
(AGRICULTURE)

இந்திய நாட்டில் விவசாயத் துறைதான் சிறப்பிடம் பெறுகிறது. வேளாண்துறை சார்ந்த படிப்பும், வனத்துறை சார்ந்த படிப்பும், மீன் துறை சார்ந்த படிப்பும், வேளாண்

துறை சார்ந்த பொறியியல் படிப்பும் +2 படிப்பில் அறிவியல் பாடங்களை எடுத்தோர் தமிழக அரசின் நுழைவுத் தேர்வுக்குப் பின்னர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப்படிப்புகளின் பயிற்சிக் காலம் நான்கு ஆண்டுகளாகும்.

## சட்டத்துறை...

(LAW)

+2 படித்து முடித்தவர்கள் ஐந்தாண்டு கால இளநிலை சட்டவியல் (B.L.) பயில தமிழக அரசு நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரிலுள்ள அரசு சட்டக் கல்லூரியிலும், சேலத்திலுள்ள தனியார் சட்டக் கல்லூரியிலும் சட்டவியல் பயிற்றுவிக்கப்படுகிறது.

### ஆசிரியர் பயிற்சி...

(TEACHER EDUCATION)

+2 தேர்வில் அனைத்துப் பாடங் களிலும் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர்கள் ஈராண்டு காலம் படித்துப் பட்டயம் (Diploma) பெற வாய்ப்புள்ளது. ஏறக்குறைய 30 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களும், அரசால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் பல தமிழகத்தில் உள்ளன. தெலுங்கு, மலையாளம், உருது போன்ற பல மொழிகளில் ஆசிரியர் பயிற்சி பெற சென்னை,தருமபுரி, கிருஷ்ணகிரி, விளவங்கோடு ஆகிய நகர்களில் அரசு ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

### இசைத் துறையில்...

(MUSIC AND FINE ARTS)

சென்னையிலுள்ள தமிழக அரசு இசைப்பயிற்சி மையம் ஏழு வகை பட்டயப்படிப்புகளைப் பயிற்றுவிக்கின்றன. 'இசைக்கலைமணி' என்ற பட்டயப் படிப்பு மூன்றாண்டு காலம் பயிற்றுவிக்கப்படுகிறது. எட்டாம் வகுப்புத் தேறியோர் - இசைத் துறையில் ஈடுபாடுடைய 13 முதல் 18 வரை வயதுள்ளோர் வயலின் வீணை பயிற்சி பெறலாம்.

இதே தகுதியும் வயது முடையோர் மூன்றாண்டு காலம் மிருதங்கம், நாதஸ்வரம், தவில், கடம், கஞ்சிரா, புல்லாங்குழல் ஆகிய துறைகளில் 'வாத்தியக் கலைமணி' பட்டயம் பெறலாம். கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் விதம் நிதியுதவி தரப்படுகிறது.



பரத நாட்டியத்தில் ஈடுபாடும் முன் பயிற்சியும் கொண்ட மகளிர் மேற்கூறிய கல்வி தகுதியும், வயது வரம்பும் பெற்றோர் மூன்றாண்டுகள் பயின்று 'ஆடல் கலைமணி' என்றபட்டயத்தினைப் பெறலாம்.

ஆடல் கலைமணி பட்டம் பெற்றவர்கள் மேலும் இரண்டாண்டுகள் பயின்று 'நட்டுவாங்க கலைமணி' பட்டயம் பெறலாம். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் நிதியுதவி உண்டு.

எட்டாம் வகுப்புத் தேறியவர்கள் 15க்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டோர் ஈராண்டு காலம் வாய்ப்பாட்டில் பயிற்சி பெற்று 'இசைக் கலைமணி' என்றபட்டயத்தினைப் பெறலாம்.

பள்ளி இறுதி வகுப்பில் தேறி இசைக்கலைமணி பட்டத்தைப் பெற்றவர்கள் ஓராண்டு இசை பயிற்றுவித்தலில் பட்டயம் பெறலாம். இப்பட்டயப் படிப்பில் 16 வயது முதல் 25 வயதுக்குட்பட்டோர் சேரலாம். எட்டாம் வகுப்பு தேறி 13 முதல் 18 வயதுக்குட்பட்டோர் மூன்றாண்டுகள் பயிற்சி பெற்று 'கிராமிய கலைமணி' என்ற பட்டயத்தைப் பெறலாம்.

பத்தாம் வகுப்புவரை படித்தவர்கள் 16 வயதினை எட்டியவர்கள் இந்த இசைப் பயிற்சி மையத்தில் மாலை நேரங்களில் நடத்தப்படும் வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் மற்றும் வாய்ப்பாட்டுத் துறைகளில் ஈராண்டுகள் பயின்று பட்டயம் பெற வாய்ப்புண்டு.

மதுரை மாநகரிலுள்ள அரசு இசைப்பயிற்சி மையத்திலும் இதுபோன்ற படிப்புகள் நடத்தப்படுகின்றன.

திருவையாற்றில் ராஜா இசைக் கல்லூரியிலும் பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சென்னையிலுள்ள கலாச் சேத்திரா நுண்கலைக் கல்லூரியில் பத்தாம் வகுப்பு தேறியோர் 15 முதல் 20 வயதுடையோர் பரத நாட்டியம், கர்நாடக இசை, வண்ணம் பூசுதல் போன்ற துறைகளில் பயிற்சி பெற்று பட்டயங்கள் பெறலாம்.

திருச்சியிலுள்ள 'கலைக் காவேரி நாட்டியப் பள்ளியில்' பரத நாட்டியத்தின் பட்டய வகுப்பு நடத்தப்படுகிறது.

குடந்தையிலுள்ள கலை, கைவினைப் பொருட்கள் அரசு கல்லூரியில் ஐந்தாண்டு காலம் பயின்று இளநிலை பட்டம் பெற (B.F.A.) வாய்ப்புகள் உள்ளன.

சென்னையிலுள்ள "தமிழக அரசு நுண்கலை கைவினைப்



பொருட்கள் கல்லூரியில்" பத்தாம் வகுப்புத் தேறியவர்கள் ஐந்தாண்டுகள் பயின்று வண்ணம் பூசுதல் மற்றும் சிற்பத் துறையில் இளநிலைப் பட்டங்கள் (B.F.A.) பெறலாம். இக்கல்லூரியில்பத்தாம் வகுப்பில் தேறியவர்கள் ஐந்தாண்டுகள் பயின்று B.Sc., Degree in Visual Communication Design என்ற பட்டத்தினைப் பெற வாய்ப்புள்ளது.

மாமல்லபுரத்திலுள்ள கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலை அரசுக் கல்லூரியில் எட்டாம் வகுப்புத் தேறியவர்கள் 13 முதல் 16 வயதுடையோர் இரண்டாண்டு காலம் பயின்று Pre. Diploma Course in Temple Architecture and Sculpture பெற வாய்ப்புள்ளது.

இசைக் கலை நாட்டியம் போன்ற நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றோருக்கு அனைத்திந்திய வானொலி. தொலைக்காட்சி, சங்கீத சபைகள் இசை அரங்குகளில் அபரிதமான வாய்ப்புகள் அண்மைக் காலங்களில் தோன்றி யுள்ளன. திரைப்படத் துறையிலும் இத்தகைய கலைகளில் தேர்ச்சி பெற்றோருக்கு வாய்ப்புகள் பெருகி வருகின்றன என்று குறிப்பிடத்தக்கது. நுண் கலைகளில் ஈடுபாடு கொண்டு படிக்க நாட்டமுடையவர்கள் கிராமங்களில் இது குறித்த தகவல்களை இன்னும் பலர் அறியா திருக்கின்றனர். மாவட்டங்கள் தோறும் இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப் போவதாக தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கது. இத்துறையில் மகளிர் சேர்ந்து படித்து வருமானம் ஈட்டிக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

### திரைப்படத்துறை

+2தேறியவர்கள் தமிழக அரசின் Film & Television Institute of Tamil Nadu சேர்ந்து பட்டயங்கள் பெற வாய்ப்புக்கள் உள்ளன. விரைவாக வளர்ந்து வரும் திரைப்படத் துறையில் தொழில் நுட்பங்கள், அண்மைக் காலங்களில் மிகுதியாகப் புகுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்தில் +2 படித்தவர்கள் மூன்றாண்டுகள் பயின்று Diploma Cinematography பெறலாம். இதேபோல மூன்றாண்டுகள் பயின்று Diploma in Sound Recording & Sound Engg., Diploma in Film Processing போன்ற பட்டயங்களைப் பெறலாம். இரண்டாண்டுகள் பயின்று Diploma in Film Editing என்ற பட்டயத்தினையும், மூன்றாண்டு பயின்று Direction and Screen Play Writing என்ற பட்டயத்தினையும் பெறலாம். இதே நிறுவனத்தின் பத்தாம் வகுப்பு படித்தோர் ஓராண்டு பயின்று Diploma in Film Acting பெறலாம். தாம்பரத்திலுள்ள சென்னை கிறித்தவக் கல்லூரியிலும் சென்னை ஈஞ்சம் பாக்கத்திலுள்ள V.G.P.Film and Video Institute இதே பட்டயப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஈஞ்சம் பாக்கத்திலுள்ள V.G.P.Film and Video Institute பத்தாம் வகுப்புப் படித்தவர்கள் நான்கு மாதங்களில் Certificate Course in Still Photography, Certificate Course in Video Cameraman பயிற்சியினை அளிக்கிறது.



### நாடகக்கலை பெருஞ்சான்றிதழ் :

DIPLOMA IN DRAMATIC ARTS:

இந்த மூன்றாண்டு படிப்பினை டெல்லியிலுள்ள National School of Drama நடத்துகிறது. +2 படித்தவர்கள் நுழைவுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மராட்டிய மாநிலம் ஔரங்காபாத்தில் மராத்வாடா பல்கலைக் கழகம் மூன்றாண்டு பட்டப் படிப்பினையும், ஓராண்டு பட்டயப் படிப்பினையும், ஓராண்டு சான்றிதழ் படிப்பினையும் நாடகக் கலையில் பயிற்றுவிக்கிறது. பள்ளி இறுதி வகுப்பு படித்தவர்கள் மைசூரிலுள்ள பல்கலைக்கழகத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் பெறலாம். +2 படித்தோர் கல்கத்தாவிலுள்ள இரவீந்திர பாரதி பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டு பட்டப் படிப்பினையும், மூன்றாண்டு பட்டயப்படிப்பினையும் நாடகக் கலையில் பெறலாம்.

குஜராத்தில் உள்ள MS University of Baroda வில் இணைந்துள்ள College of Indian Music, Dance and Dramatics இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பினை 10-ஆம் வகுப்பு படித்தோருக்குப் பயிற்றுவிக்கிறது. ஆந்திர மாநிலம் வால்டேர் நகரில் உள்ள ஆந்திர பல்கலைக்கழகம் +2 தேறியவர்களுக்கு Diploma in Acting என்ற படிப்பினை இரண்டு ஆண்டில் பயிற்றுவிக்கிறது.

திரைப்படத்துறை, நாடகத்துறை, நடிப்புத்துறை ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்கள் இத்தகைய செய்திகளை அறிந்து மேற்படிப்பினை மேற்கொண்டால் அவர்தம் வாழ்க்கை வளம் பெறும்.

### உணவகங்கள், விடுதிகள், நிர்வாகத் துறையில்...

(HOTEL, HOSTEL MANAGEMENT)

அண்மைக் காலங்களில் இத்துறையில் ஏற்பட்டுள்ள விரிவாக்கங்கள், நிர்வாகம் போன்றன இத்துறைப் படிப்புக்களில் பெரியதொரு எழுச்சியினை ஏற்படுத்தி

வருகிறது. +2 தேறியவர்கள் சென்னை நகர் தரமணியில் உள்ள *Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition, Taramani.*

*Asan Memorial Institute of Hotel Management and Catering Technology, Jaladampet, Chennai-601 302.*

- போன்ற நிறுவனங்களில் *Diploma in Hotel Management and Catering Technology* என்ற படிப்பினை 3 ஆண்டுகளில் போதிக்கிறது.

கொடைக்கானலில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று ஈராண்டு *Diploma in Hotel Operational Management* என்ற துறையினைப்பயிற்றுவிக்கிறது.

தரமணியிலுள்ள நிறுவனமொன்று *Certificate Course in Hotel Reception & Book Keeping* என்ற படிப்பினை +2 மாணவர்களுக்கு ஓராண்டு போதிக்கிறது. இதே நிறுவனம் *Certificate Course in Restaurant & Counter Service* என்ற படிப்பினை ஓராண்டு நடத்துகிறது. சென்னை தரமணியிலுள்ள அரசு நிறுவனமொன்று +2 மாணவர்களுக்கு ஓராண்டு பயிற்சியாக *Certificate Course in Canning* என்ற படிப்பினையும் *Certificate Course in Bakery* என்ற படிப்பினையும், *Certificate Course in Cookery* என்ற படிப்பினையும் *Certificate Course in House Keeping* என்ற படிப்பினையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. 10ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு திருச்சி துவாக்குடியில் உள்ள *Food Craft Institute, Certificate course in House Keeping* என்ற படிப்பினையும், கொடைக்கானலில் உள்ள நிறுவனம், *Certificate in Front-Office Management* - யும் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் மேற்காசியா, ஆப்பிரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். நகரங்களில் வளர்ந்துவரும் விடுதிகள், உணவகங்கள், தொழிற்சாலை உணவகங்கள், கல்வி நிறுவன விடுதிகளில் இத்தகையோருக்கு நல்ல வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

**கலை, கைவினை ஆசிரியர்கள் பயிற்சி...**

(ART AND CRAFTS TEACHERS)



அண்மைக் கால பாடத் திட்டங்களில் கலை, கைவினைஞர் ஆசிரியர்கள் பணி சிறப்பிடம் பெற்று வருகிறது. +2 தேறியவர்கள் இத்துறைகளில் இளநிலைப் பட்டங்களைப் பெறுதற்குரிய வாய்ப்புகள் இந்தியப் பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக சென்னையிலுள்ள *Govt.College of Arts and Crafts* இப்படிப்பினை வழங்கிவருகிறது. டெல்லி, பம்பாய், கல்கத்தா, சண்டிகார், பெங்களூர், கோவா ஆகிய நகர்களிலுள்ள அரசுக் கல்லூரிகள் இப்படிப்பினை வழங்கி வருகின்றது. ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக் கழகம், *MS University of Baroda, Banaras Hindu University*, பஞ்சாப் பல்கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம், ஆக்ரா, அஜ்மீர் பல்கலைக்கழகங்கள், சிவாஜி பல்கலைக்கழகம், மீரட், ராஜஸ்தான், ரோகில்கண்ட், ஸ்ரீவெங்கடேஸ்வரா, உட்கல் போன்ற பல்கலைகழங்கள் இப்படிப்பினை வழங்கி வருகின்றன. சென்னைப் பல்கலைக்கழகம ஓவியத்திலும், வண்ணம் பூசுதலிலும் இளநிலைப் பட்டப்படிப்பினை பயிற்றுவிக்கிறது. குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தத்துறை படிப்புகளில் இன்னும் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

*Baroda* வில் உள்ள MS பல்கலை கழகங்களில் நுண் கலைத்துறையில் நான்காண்டு *BFA* படிப்பு, *Painting, Sculpture, Applied Arts, Art History* என்ற துறைகளில் வழங்கப் படுவதோடு, இதே துறையில் பட்டயப் படிப்புகளும் வழங்கப் படுகின்றன. விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் இதே துறைகளோடு *Graphic Art Design* என்ற துறையிலும் பட்டப் படிப்பும் பட்டயப்படிப்பும் 5 ஆண்டுகளில் போதிக்கப் படுகின்றன.

இந்தச் செய்திகள் தமிழக மாணவர்கள் பலரும் அறிந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு தரப்படுகின்றன. ஒவ்வொரு கல்லூரியும் கூட நுண்கலை மன்றங்கள் நிறுவி மாணவர்கள் நுண்கலையாற்றலை வளர்க்கத் திட்டமிடல் வேண்டும்.

**ஆடைகள் வடிவமைப்பு:**

FASHION DESIGN...

அண்மைக் காலங்களில் ஜவுளி உற்பத்தியாளர்கள், ஆயத்த ஆடை ஏற்றுமதியகங்கள், ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள், கவர்ச்சிக் காட்சி அமைப்பாளர்கள், பொருட்காட்சி அமைப்பாளர்கள், வடிவமைப்போருக்குப் பெரியதொரு வாய்ப்பினை நல்கி வருகின்றார்கள். இத்துறை சார்ந்த படிப்பு Fashion Technology என வழங்கப்படுகிறது. இத்துறையின் முன்னோடி நிறுவனங்கள் பல்வேறு படிப்பினை குறிப்பாக



+2 மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர். பெருநகர் களிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. முன்னோடி நிறுவனங்களுள் சில பினவருமாறு:

**ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப தேசிய நிறுவனம் :**

**NATIONAL INSTITUTE OF FASHION TECHNOLOGY (NIFT)**

*East Plaza, I-Gate, Indira Gandhi Indoor Stadium, New Delhi-110 002.*

சோஃபியா பல்திற தொழிற்பயிற்சிப் பள்ளி

**SOPHIA POLYTECHNIC,**

*Bhulabhai Desai Road, Mumbai - 400 026.*

**வடிவமைப்பு தேசிய நிறுவனம் :**

**NATIONAL INSTITUTE OF DESIGN,**

*Paldi,*

*Ahmedabad - 380 007.*

கலைப்பயிற்சிப் பள்ளி :

**SCHOOL OF ARTS,**

*Mumbai.*

சென்னை, பெங்களூர் நகரில் உள்ள சில பாலிடெக்னிக்குகளில் இத்தகைய படிப்புக்கள் நடத்தப் படுகின்றன. குறிப்பாக *NIFT* என்ற நிறுவனம் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் மாணவர் சேர்க்கைக்கு விளம்பரப்படுத்துகின்றது, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நுழைவுத் தேர்வு நடைபெறுகிறது. +2 தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்கள் இந்நிறுவனத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். +2 மாணவர்களுக்கு இந்த நிறுவனம் *Apparel Marketing and Merchandizing (AMM)* என்ற படிப்பினை நடத்துகின்றது. அண்மைக் காலங் களில் இத்துறை விரைந்து வளர்ந்து வருவதால் இத்துறையில் கீழ்க்கண்ட வகையில் மாணவர்கள் பயிற்சி பெறலாம்.

*Designer*

*Assistant Designer*

*Cutting Assistant*

*Sktetcher*

*Stylist*

*Junior Designer*

இத்துறையின் வளர்ச்சி அண்மைக காலங்களில் பிரமிக்கத்தக்க அளவில் இருக்கப் போவதால் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் போனற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குச் சென்று படிப்பவர்



களுக்கு ஒளிமிக்க எதிர்காலம் உண்டு. அமெரிக்காவிலுள்ள *Fashion Institute of Technology, 227, West, 27th Street, Newyork, Ny-10001.* இங்கிலாந்தில் உள்ள பிரபல நிறுவனத்தின் முகவரி *London College of Fashion and Clothing Technology, London.*

பிரான்ஸிலுள்ள நிறுவனத்தின் முகவரி :

*Esmodi, 16, Boulevard Mont Marte, 75009, Paris.*

அண்மைக்காலங்களில் நகைகளை வடிவமைப்பதில் +2 முடித்தவர்களுக்குக் கீழ்க்கண்ட நிறுவனம் நுழைவுத் தேர்வின் மூலம் பயிற்சி அளிக்கிறது. அது *National Institute of Fashion Technology* ஆகும்.

முத்துக்களைப் பட்டை தீட்டும் பயிற்சிக்கான அறிவிப்பினை இந் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டு டிசம்பர் மாதமும் வெளியிடுகிறது.

**அகமனை வடிவமைப்பு :**

INTERIOR DESIGN...

அண்மைக் காலங்களில் மாநகர் களிலும் நகர்களிலும் கட்டப் படுகின்ற வளமனைகளில் உட்புற வடிவமைப்பு சிறப்பிடம் பெறுகின்றன. உட்புற வடிவமைப்புக் கலை சிறப்படைந்து வருகின்றது. +2 தேர்வில் அறிவியல் பகுதியோடு (60%) ஆங்கிலமும் தெரிந்தவர்களுக்கு ஐந்தாண்டு கால முழு நேரப் பட்டயப் படிப்பினை

**அகமனை வடிமைப்புப் பயிற்சிப் பள்ளி :**

**(SCHOOL OF INTERIOR DESIGN,)**

*Centre of Environmental*

*Planning & Technology,*

*University Road,*

*Navrang Pura,*

*Ahmedabad-380009.*

என்ற அமைப்பு வழங்குகிறது.

தமிழகத்தில், திருச்சியிலுள்ள மண்டலப் பொறியியல் கல்லூரி இந்தப்படிப்பினை வழங்குவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் உள்ள பாலிடெக்னிக்குகளும் இத்துறையில் பட்டயப் படிப்பினை வழங்கிட முயல வேண்டும். இத்தகைய கல்வித் தகுதியைப் பெற்றவர்களுக்கு உள்நாட்டில் மாத்திரமல்ல; அரபு நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடு களிலும் வேலை வாய்ப்புக்கள் மிகுதியும் உண்டு.

## இதழியல் துறையில்...

(JOURNALISM)

மக்கள் தொடர்புச் சாதனங்கள் பிரளயமென வளர்ந்துவருகிறது. நாளேடுகள், காலமுறை இதழ்கள், அரசுத்துறை இதழ்கள், தனியார் துறை வெளியீடுகள், மனை இதழ்கள்-இப்படிப் பலப்பல வளர்ச்சிகள். நூற்றுக்கு மேற்பட்ட அனைத்திந்திய வானொலி நிலை

யங்கள், அரசு தொலைக் காட்சிகள், நூற்றுக்கணக்கான செயற்கைக் கோள் தனியார் தொலைக் காட்சிகள் வளர்ந்த வண்ணம் இருக்கின்றன. 'செய்திப் பிரளயம்' தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. இத்துறையிலே, குறிப்பாக இதழியல் துறையில் படைப்பாற்றல் மிக்கவர்கள் முறையான பயிற்சியைப் பெற்று உயரிய வளர்ச்சியை அடைய முடியும். அண்மைக் காலங்களில் *Magazine Journalism* விரைந்து வளர்ந்து வருகின்றது. நிழற்பட பத்திரிக்கையாளர்கள் வளர்ந்து வருகின்றனர். கேலிச் சித்திர வரைபவர்கள் *(Cartoonist)* எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. அரசியல், பொருளாதார, சமூகவியல், பண்பாட்டுவியல் என்று பத்திரிகையாளர்கள் பல்வேறு துறைகளிலும் பண்பட்ட வளர்ச்சியினைப்பெற்று வருகின்னர்.

இயற்கையாகவே எழுத்தாற்றல் மிக்கவர்கள் படைப்புத் திறன் பெற்றவர்கள் பலர் சுதந்திர எழுத்தாளர்களாக *(Freelancers)* இருக்கின்றனர். இந்திய மொழிப் பத்திரிக்கைகள் பன்முகப் படுத்தப் பட்டு வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இளைஞர்கள், குறிப்பாக +2 முடித்தவர்கள் இத்துறையில் இளநிலைப் பட்டங்களையும், பட்டயங் களையும், சான்றிதழ்களையும் பெறுவதற்கான வாய்ப்புக்களை மதுரை காமராஜ், அண்ணா மலை, பூனா, டெல்லி, கல்கத்தா, நாக்பூர், பஞ்சாப், மராத்வாடா, உஸ்மானியா, கேரளா, கோழிக்கோடு முதலிய பல்கலைக் கழகங்கள் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. *Indian Institute of Mass Communication (Delhi), YMCA Institute of Mass Media Studies, Xavier Institute of Communication (Bombay), Symbosis Institute of Journalism of Communication* (பூனே,), *Centre for Media Studies (New Delhi)*, போன்ற நிறுவனங்களும், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களிலுள்ள *Bharathiyar Vidya Bhavan College of Communication* இத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன.

+2 படித்தவர்கள் மூன்றாண்டு பட்டப் படிப்பினை படிப்பதோடு தனிப்பட்ட முறையில் பத்திரிக்கைகளில் பயிற்சி பெற்றால் சிறப்பான வளர்ச்சியை அடையலாம்.

*Centre for Media Studies (Delhi)* இதழியல் துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சியினை அளிக்கிறது. மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வித்துறை தமிழ், ஆங்கிலப் பயிற்றுமொழி வழியாக M.A. வகுப்பினை இத் துறையில் நடத்துவது குறிப்பிடத்தக்கது. 'அறிவியல் துறையில் தகவல்' என்ற இளநிலை பட்டப்படிப்பினையும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் நடத்துவது குறிப்பிடத்தக்கது. வளர்ந்து வரும் இதழியல் துறையில் மேற்படிப்பு மேற்கொண்டால் வேலை வாய்ப்புகள் உறுதியாக உண்டு.



## தொலைக் கல்வித்துறை

+2 தேறியவர்கள் இணைப்புக் கல்லூரிகளில் தங்களின் தகுதிக் கேற்ப இளநிலை பட்ட வகுப்புகளில் சேர்கின்றனர். மாலை நேரக் கல்விகளில் சேர்ந்து படிக்கின்றனர். இத்தகைய வாய்ப்புகள் பெறாதவர்கள் தொலைக்கல்வி துறைகளில் சேர்ந்து படிக்கின்றனர். தமிழகத்தில் சென்னை, அண்ணா மலை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களில் திறந்த நிலை பல்கலைக்கழகப் பகுதியில் நடத்தப்படுகின்ற இளநிலைப் பட்டத் துறைகளில் சேர்ந்து படிக்கலாம். 20-வயது நிரம்பியவர்கள் இந்தப் பிரிவில் சேரலாம். இவர்களுக்கு எந்தக் கல்வித் தகுதியும் தேவை யில்லை. இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப்பல்கலைக்கழகமும் இத்தகைய வாய்ப்பினை நாடு தழுவிய அளவில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜ், அழகப்பா, மனோன்மணியம் சுந்தரனார், பாரதியார், பாரதிதாசன், புதுவை, இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகங்கள் தொலைக்கல்வி இயக்கங்கள் மூலமாக வேலைவாய்ப்புத் திறனை வளர்க்கின்ற பட்டய, சான்றிதழ் படிப்புக்களை வழங்கி வருகின்றது. அவ்வப்போது பல்கலைக்கழகங்கள் வெளியிடுகின்ற அறிக்கைகளை செய்தித்தாள்களைப் பார்த்து பத்தாம் வகுப்பு படித்தவர்களும், +2 படித்தவர்களும் பயனடையலாம். தொலை தூரத்திலுள்ளவரும், மகளிர், கல்வியைத் தொடர முடியாமல் இடையில் நின்றவரும், வேலை பார்ப்பவர்களும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

## ஆயுள் காப்பீடு

(INSURANCE / ACTORIAL SCIENCE)

ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் நாடு தழுவிய அளவில் படர்ந்து வருகின்றன. +2 அளவில் ஆயுள் காப்பீடு பாடத்திட்டம் தொழிற் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் கல்யாணி



பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டபடிப்பில் ஆயுள்காப்பீடு போதிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் +2 தேர்வில் வெற்றி பெற்றோர் இளநிலைப்பட்டப்படிப்பில் ஆயுள் காப்பீட்டினைப் படிக்கின்றனர். மராட்டியத்திலுள்ள மும்பை பல்கலைக்கழகம் பஞ்சாபிலுள்ள குருநானக் பல்கலைக்கழகம் உ.பியிலுள்ள அவாத் *(AVADH)* பல்கலைக்கழகம் ஒரிசாவிலுள்ள பர்காம்பூர் பல் கலைக்கழகம், மணிப்பூர் பல்கலைக்கழகம், கோவா பல்கலைக்கழகம், மராத்துவாஜ பல்கலைக்கழகம் போன்ற இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றும் பல கலைக்கழகங்கள். சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இத் துறையில் பட்டயப்படிப்புகளை நடத்துகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறிப்பாக கணிதவியலில் வல்லமை பெற்றவர்கள் இப்பாடத்தில் சிறப்பாகத் தேர்ச்சியினைப் பெறமுடியும். மேலும் பொதுத்துறையிலுள்ள *L.I.C. General Insurance Corporation* விரைந்து வளர்ந்து வருகின்றன. *Assistance Development Officer, Assistant Administrative Officers* போட்டித் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். *The Institute of Insurance Surveyors and Adjusters, (232, Dr.D.N.Road, Mumbai - 400 001)* +2 தேறியவர்களுக்கு மும்பை சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களில் *Licentiate Examination for Insurance Surveyors and Adjusters* நடத்துகிறது. இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் இந்நிறுவனம் அளிக்கும் பயிற்சி பெற்ற பின்னர் வேலை வாய்ப்பினைப் பெறுவர். நிதி நிறுவனங்கள் பெரிய கம்பெனிகள் தொழில் அதிபர்கள் இத்தகை யோர்கள் இவர்களைப் பணியில் அமர்த்துவார்கள். தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இன்றும் இத்துறையில் போதிய கவனம் செலுத்தவில்லையென்றே தோன் றுகிறது. இது குறித்து சிந்தித்து +2 மாணவர்களை இத்துறையில் ஈடுபடுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

## வேண்டுகோள்



இடைநிலைப் பள்ளி நிலையிலேயே மாணவர்களிடம் புதைந்திருக்கும் ஆற்றலை முறையாக இனங்காணும் பயிற்சியினை இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டும். இனங்கண்ட பின்னர் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்தத் தக்க வகையில் திட்டங்கள் தீட்டி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். வெறும் பாடச்சுமையால் அவதியுறும் மாணவ ஆசிரிய சமுதாயம் இந்தப்பணியில் ஈடுபட அந்தந்தப் பகுதியில் உள்ள தன்னார்வ அமைப்புக்கள், நிதியும் ஆலோசனையும் வழங்கத்தக்க வகையில் அரசும் செயல்பட வேண்டும். உயர் நிலைப்பள்ளி, மேநிலைப் பள்ளிகளில் இத்தகைய சூழ் நிலைகளை உருவாக்குவதோடு மாணவர்தம் ஆற்றலுக்கு ஏற்ப மேற்படிப்பினைக் குறித்த முழு விவரங்களையும் அவ்வப்போது பள்ளிகளில் அறிவிப்பதோடு பெற்றோர்களுக்கும் தகவல் தெரிவிக்கும் முறையை ஆசிரியர்கள் மூலம் செய்ய வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்படிப்பு பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அத்துறை சார்ந்த வல்லுநர்களையும் வரவழைத்து, பெற்றோர்களோடும் கருத்துப் பரிமாற்றம் செய்யத்தக்க வகையில் ஏற்பாடுகள் செய்யலாம். *Career Fairs, Career Exhibition* இவை களையும் நடத்தலாம். தொலைக் காட்சியினர், காண்போம் கற்போம் நிகழ்ச்சியில் இதற்கெனத் தொடர்ந்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம். நாளேடுகளும், காலமுறை இதழ்களும் கல்வி மலரில் இத்தகையச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிடலாம். உயர்நிலைப்பள்ளி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் இதற்கென ஒரு தனிப் பிரிவினைத் தொடங்கலாம். 10ஆம் வகுப்பு, +2 வகுப்பு மாணவர்களுக்குக் கோடை விடுமுறையில் மேற்படிப்பு குறித்த முகாம்களைத் தன்னார்வ அமைப்புகள் ஊர் தோறும் நடத்தலாம். நெறிப் படுத்தினால் வளம்பெறும், மாணவச் சமுதாயம். ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002, தொலைபேசி : [illegible]













ஆசிரியர் மடல்:

## வீடுகளை இல்லங்களாக்குவோம்!

குறைந்த மதிப்பீட்டில் கட்டடங்களை
நிர்மாணிப்பது நாட்டு நலன் குறித்தும், சுற்றுச்சூழல்
குறித்தும் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும்.
குறைந்த மதிப்பீடு என்பது
கட்டடத்தின் தரத்திற்கும், வலுவிற்கும்
எந்த வகையிலும் ஊறு செய்யாது என்பதைப்
புரிந்துகொள்ள வேண்டும்.
கட்டுகிற தன்மையில் சில மாற்றங்களைச் செய்து
செலவைக் குறைப்பது -
விஞ்ஞான ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பம்!
வழக்கமாய் நாம் கட்டித்தருகிற
தொகுப்பு வீடுகளைக் காட்டிலும்
பெரியதாய்க் கட்டித்தர முடியும்.
பள்ளிக்கூடமென்றால் - அதே செலவில்
இன்னொரு வகுப்பறையை இணைத்துக்கொள்ள முடியும்.
நாம் தொகுப்பு வீடுகளைக் கட்டும்போது
அதில் உரிமையாளருக்கும் உரிய பங்கு இருக்கிறது
என்பதை உறுதி செய்யவேண்டும்.
வீட்டு உரிமையாளரே கட்டிக்கொள்ளும்போது
அவை இன்னும் அழகாக உருவெடுக்கின்றன.
பள்ளிக் கட்டடங்களைப் பெற்றோர் ஆசிரியர் கழகமே
கட்டிக்கொள்ளுகிறபோது
அவை அக்கறையோடு பராமரிக்கப்படுகின்றன.
குறைந்த முதலீட்டில் இவற்றையெல்லாம்
உருவாக்கக் கள அலுவலர்கள் முன்வர வேண்டும்.
வகுப்பறை என்பது மாணவர்கள் அமரும் இடம் மட்டுமல்ல;
வீடு என்பது வெறும் வசிக்கும் இடம் மட்டுமல்ல;
அவை - அதற்கும் மேலே!
வீடு எப்போதும் செங்கற்கள் சேர உண்டாகிறது;
இல்லம் என்பது
அவற்றோடு இதயமும் ஒருங்கிணைய உருவாகிறது!






தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.



# தமிழரசு

1-5-1997 ரூ. 3






தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சிறந்த கலைஞர்களுக்கு **கலைமாமணி** விருது வழங்கும் விழா 15.4.1997 அன்று சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் செல்வி **எம். ஃபாத்திமா பீவி** அவர்கள் விழாவிற்கு தலைமை ஏற்று விருதுகளை கலைஞர்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு **முதல்வர் கலைஞர்** அவர்கள் விருதுபெற்ற கலைஞர்களுக்குப் பொற்பதக்கமும், கலைமாமணி விருது பெற்ற அகவை முதிர்ந்த நலிந்த கலைஞர்களுக்கு 'பொற்கிழியும்' சிறந்த நாடகக் குழுவிற்கு சுழற்கேடயமும் சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் வழங்கினார். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள் கலைஞர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.





# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2028
சித்திரைத்திங்கள்-18
மலர் : 27 இதழ் : 21
1.5.1997
ரூ. 3/-


## இந்த இதழில்...


பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால் தான்... 2
**- பேரறிஞர் அண்ணா**

முதல்வரின் மே தினச் செய்தி 3

மேதினி போற்றும் மே தின நாள் 4
**- திரு. அ. ரகுமான்கான்**
தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் 8

வியர்வை
**- முதல்வர் கலைஞர்** 9

தொழிலாளர் துயர் களைவோம் 14

தொழிலாளர் நலன் 18

வளமாகும் தமிழகம்
**-முதல்வர் கலைஞர்** 25

பாவேந்தரும் பறைவைகளும்
**- சிலம்பொலி சு. செல்லப்பன்** 32

நீங்களே சொல்லுங்கள்
**- பாவேந்தர் பாரதிதாசன்** 37

மே நாள்
**- ஞா. மாணிக்கவாசகன்** 42

மே தினம்
**- சி. மகேந்திரன்**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 47

தொழிலும் தொழிலாளர்களும் 50
**- கலீல் கிப்ரான்**

துறைதோறும் தொழிலாளர் நலன் 55



# பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால்தான்....

- பேரறிஞர் அண்ணா

நம்நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள். இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழில் திறனை உண்டாக்குபவர்கள் தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர் உரிமைகளையும் அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பார்க்கின்றோமோ அவ்வளவு விரிந்த அளவில், தொழில் வளம்பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல் படுமானால் தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்கவேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்.

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டினால்கூட சுட்டுவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்; அதுபோலத் தொழிலாளர் நலிவுடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்த பின்பு அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால் அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம்தான் செய்கிறது. நூறில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிலாளர் சமூகம், நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் நெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; செல்வம் வளரும்.

எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும் அது சமூகத்துக்கு ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீன கருவிகளைப் பற்றிக் கூறுகிறார்கள். அதையும் மனிதன்தான் செய்தான் என்பதை மறந்துவிடலாகாது!

உணர்ச்சியால் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி - அவனது கண்களில் கண்ணீர் - அவனது நெஞ்சத்தில் வலி - அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த மனித யந்திரத்திடமிருந்து முழுப்பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்த மனித இயந்திரத்தினைக் கவனித்தால் அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனத்தோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில் நேர்த்தியிருக்காது – தரம் இருக்காது – பயனும் கிடைக்காது.

இயந்திரங்களை எந்த அளவு நேர்த்தியாக வைத்துக் கொள்கிறோமோ அந்த அளவு அவற்றிலிருந்து பயன் பெற முடிகிறது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சியும் பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழ்தலே உடலுக்கு நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வளரும்போது, புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும். அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளரது வாழ்வை பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்!



# முதல்வரின் 'மே தின' வாழ்த்துச் செய்தி

இன்று மே நாள்! உலகெங்கும் வாழும் தொழிலாளர் உள்ளங்களில் உவகை பொங்கிடும் வகையில் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது - இந்நாள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நாட்டிலுள்ள தொழில்களும் வேலைகளும் வரையறுக்கப்பட்டு, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பள விகிதங்களும் விடுமுறை ஓய்வு, கிராச்சுடி போன்ற மற்ற சலுகைகளும் நிர்ணயிக்கப்பட்டு அவற்றைத் திறம்பட அமலாக்கவும் வழிமுறைகாணும் - இந்த அரசு' என்று கூறினார்கள்.

அதன்படி, 1967 முதல் 1976 வரையிலும் பின் 1989-90ஆம் ஆண்டுகளிலும் அமைந்து - தற்போது 1996 மே முதற் கொண்டும் அமைந்துள்ள இவ்வரசு தொழிலாளர் நலம் பேணும் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியுள்ளது.

தொழிலாளர் எழுச்சியை உலகம் உணரச் செய்த 'மே நாள்' மிகுந்த மதிப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காக - அந்நாளை அரசு விடுமுறை நாள் என ஆணையிட்டது - இந்த அரசு.

தொழிலாளர் நலநிதி உருவாக்கி அதனை நிர்வகித்திடத் தொழிலாளர் நல வாரியம் தோற்றுவித்தது இந்த அரசு.

தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை (கிராச்சுடி) வழங்கிடும் திட்டம் கண்டது இந்த அரசு.

தொழிற்சங்க நடைமுறைகளுக்கும் நல்வாழ்விற்கும் வழிகாட்டக் கூடிய தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் கண்டது இந்த அரசு.

ஒப்பந்தத் தொழிலாளர் நலன்காக்கத் தனிச்சட்டம் கண்டது - இந்த அரசு.

மேதின விழாவின் நூற்றாண்டையொட்டி, சென்னை நேப்பியர் பூங்காவிற்கு 'மேதினப் பூங்கா' எனப் பெயரிட்டு - அங்கு நினைவுச் சின்னம் அமைத்தது இந்த அரசு.

குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நலநிதி ஏற்படுத்தி, குழந்தைத் தொழிலாளர் பணியினை நீக்கிடத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது இந்த அரசு.

தற்போது, தொழில் நேயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து - ஒளிவு மறைவற்ற அணுகுமுறைகளுடன் - புதிய பல தொழில்களைத் தொடங்கத் திட்டமிட்டு - தொழிலாளர்களின் வாழ்வை வளப்படுத்திட வழி வகுத்து வருகிறது இந்த அரசு.

இப்படி, இயன்ற வழிகளில் எல்லாம் தொழிலாளர்களின் நலன்களைக் காத்து வரும் இந்த அரசு - மே நாள் விழாவை மிகுந்த ஈடுபாட்டுடன் கொண்டாடுவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறது என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய உணர்வோடு தமிழகம் முழுதும் வாழும் தொழிலாளர்களும்-அவர்தம் குடும்பத்தாரும் வளமும் நலமும் எய்தி வலிவும் பொலிவும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட என் இனிய மே நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சுமை தூக்கும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள்!

- முதல்வர் கலைஞர்

"இந்த மே தின விழாவிலே ஒரு அறிவிப்பினை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். 1989-ஆம் ஆண்டு உங்களுக்காக ஒரு அறிவிப்பைச் செய்தேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் உணவு வழங்குகின்ற துறையிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற சுமை தூக்கும் தொழிலாளர்கள், - பத்தாண்டு காலம் பணி செய்திருந்தால், அவர்களை எல்லாம் நிரந்தரமாக ஆக்கவேண்டும், ஆக்கப்படும் என்று சொல்லியிருந்தேன். சொன்ன குற்றமோ, என்னவோ அப்போது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது! இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கின்ற நான், இந்த மே தின விழாவிலே பிரகடனப்படுத்துகிறேன். பத்தாண்டு காலம் பணிபுரிந்திருந்தால், அவர்கள் எல்லாம் நிரந்தரமாக ஆக்கப்படுகிறார்கள்.

- 'மே தின விழா'வில் (1.5.97) பேசியதிலிருந்து

# உழைக்கும் வர்க்கத்தின் தியாகத் திருநாள் மேதினி போற்றும் மே தின நாள்

திரு. அ. ரகுமான்கான்
தொழிலாளர் நலம் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்

உருண்டோடும் எல்லா நாட்களும்
உன்னத நாட்கள் அல்ல.

சில நாட்கள்தான் சாகா வரம் பெற்ற
சரித்திர நாட்களாக
நம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.
மேதினி எங்கும் கொண்டாடப்படும்
மே முதல் நாள், உழைக்கும் வர்க்கம்
தன் உரிமையை நிலைநாட்டிட
அமெரிக்க மண்ணில் வீரம் சொரிந்த
போராட்டம் நடத்திய தியாகத் திருநாள்!



சுரண்டல் ஒன்றையே குறிக்கோளாகக்
கொண்ட முடைநாற்றம் வீசும்
முதலாளித்துவத்தை எதிர்த்து
எட்டு மணிநேர வேலை, எட்டு மணி
நேர ஓய்வு, எட்டு மணி நேரப்
பொழுதுபோக்கு என்ற கோரிக்கையை
வலியுறுத்திப் பாட்டாளி வர்க்கம்
போர்க்குரல் எழுப்பிய நாள்.

1986-ஆம் ஆண்டு மே முதல் நாள்
சாதாரண நாள் அல்ல. தொழிலாளி
வர்க்கம் அணி திரண்டு ஆர்ப்பரிக்கும்
அலைகடலாய் மாறி எட்டு மணி நேர
வேலை என்ற கோரிக்கைக்காக
சிகாகோ நகரில் ஆர்ப்பாட்டமும்
வேலைநிறுத்தமும் செய்தது.

வரலாற்றில் எட்டு மணி நேர
வேலை கோரிக்கைக்காக முதல் குரல்
சிகாகோ நகரில்தான் ஒலித்தது.
அமெரிக்க மண்ணில்தான் தொழிலாளர்
சமுதாயம் இந்த இலட்சியக் கனவு
நிறைவேற ஒரு குருஷேத்திரத்தையே
நடத்தியது.





ஆனால், தொழிலாளர்களும் மனிதர்கள்
தான் என்ற மனித நேயம் இல்லாமல்
பன்னிரண்டு மணிநேரம், இருபது
மணிநேரம் என்று அவர்களைக்
கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிக்
கொள்ளை இலாபம் சம்பாதித்த
ஆலை நிர்வாகமும், அதற்கு
ஆதரவான அரசும் தொழிலாளர்களின்
வேலை நிறுத்தத்தைத் தடுத்திட
அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து
அராஜகத்தின் அணிவகுப்பை
நடத்தியது.

சிகாகோ நகரில் உள்ள
ஹே மார்க்கெட்டில்
(Hay Market) தொழிலாளர்கள்
தங்களின் நியாயமான கோரிக்கைகளை
வலியுறுத்தி நடத்திய எழுச்சிப்
பேரணியையும், கூட்டத்தையும் கலைத்திட
அரசு காவல்துறையைத்
தூண்டிவிட்டது. தொழிலாளர்களுக்கு
எதிராகப் போலீஸ் துப்பாக்கிப்
பிரயோகம் செய்தது.
துரைத்தனத்தாரின் துப்பாக்கிக்
குண்டுகளுக்குப்
பலியாகிப் பத்துத் தொழிலாளர்கள்
மரணத்தைத் தழுவினார்கள். பலர்
படுகாயமுற்றனர். சிகாகோ
நகரத்து வீதிகள் சிவந்த பூமியாகின.



இது மட்டும் அல்லாது ஹே மார்க்கெட்டில்
தொழிலாளர்கள்
வெடிகுண்டு வீசினர் என்ற
குற்றச்சாட்டைச் சுமத்தி அவர்கள்
மீது அரசு பொய் வழக்குப் போட்டது.
விசாரணை என்பதன் பெயரால்
ஒரு நாடகம் நடத்தி ஏழு
தொழிலாளர் தலைவர்களை
அரசு தூக்கில் இட்டது. ஒருவருக்குச்
சிறைத் தண்டனை வழங்கியது.

இந்த அடக்கு முறைகளைக் கண்டு
தொழிலாளர்கள் சமுதாயம் அஞ்சிடவில்லை.
அலைகள் ஓய்வதில்லை என்பது

போலத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினார்கள். புகையும் எரிமலையாக மாறி தொடர்ந்து போராட்டத்தை நடத்தினார்கள். தங்கள் மீது பூட்டப்பட்ட அடிமைச் சங்கிலியை அவர்கள் தகர்த்து எரிந்தார்கள்.

விளைவு, ஆணவத்தின் கொடு முடியில் இருந்த அரசும் ஆலை முதலாளிகளும் பணிந்தார்கள். இரவு விடிந்தது. பொழுது புலர்ந்தது. எட்டு மணி நேரவேலை, எட்டு மணிநேர ஒய்வு, எட்டு மணிநேரப்பொழுது போக்கு என்ற தொழிலாளர்களின் கோரிக்கை வெற்றி பெற்று அது சட்டப்பூர்வமாக்கப்பட்டது. 1989ம் ஆண்டு பாரிசில் உருவாக்கப்பட்ட இரண்டாவது சர்வதேசிய அமைப்பு (Second International) இந்த மே முதல் நாளைத்தொழிலாளர்கள் நினைவு நாளாக ஆண்டு தோறும் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்து அறிவித்தது. உப்புக்கடல் சூழ்ந்த இந்த உருண்டையுலகில் ஜாதி, மதம், தேச எல்லை இவைகளை எல்லாம் கடந்து மே முதல் நாள் மே தின விழாவாக அகிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.





ஆனால் தொழிற்சங்க வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் 1986-ம் ஆண்டு மே முதல் நாளுக்கு முன்பாக 1856-ம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதி ஆஸ்திரேலியாவில் எட்டுமணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஒய்வு, எட்டுமணி நேரம் பொழுது போக்கு என்ற கோரிக்கை அமல் நடத்தப்படவேண்டும் என்று ஆஸ்திரேலியாவில் தொழிலாளர்கள் போராடி இருக்கிறார்கள்.

இதைப் போலவே இந்தக் கோரிக்கைக்காக மேற்கு வங்கத்தில் உள்ள ஹவ்ரா இரயில் நிலையத் தொழிலாளர்கள் 1862-ஆம் ஆண்டு கல்கத்தாவில் போராட்டமும், வேலை நிறுத்தமும் செய்திருக்கிறார்கள்.

**இவைகள் எல்லாம் வரலாறு நமக்குத் தெரிவிக்கும் செய்திகள்.**





**இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக மே தினம் கொண்டாடப் பட்டது. தொழிற்சங்கத் தலைவர் சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரின் தலைமையில் 1923-ஆம் ஆண்டு சென்னை கடற்கரையில் மே தின விழா நடைபெற்றது. இந்த மே தின விழாவை அரசு விடுமுறையாக அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் மேதின விழாவில் வைக்கப்பட்டது.**

47 ஆண்டுகளுக்குப் பிறகு 1970-இல் பாட்டாளி மக்களின் பாதுகாவலர், உழைக்கும் வர்க்கத்தின் உற்ற நண்பன், முதல்வர் கலைஞர் தலைமையில் உள்ள திமு.க. அரசு, இந்த மேதினத்தைச் சம்பளத்துடன் கூடிய அரசு விடுமுறையாக அறிவித்தது.

சென்னை நேப்பியர் பூங்காவில் மே தின நினைவுச் சின்னத்தை முதல்வர் கலைஞர் நிறுவினார்.
அது மட்டும் அல்லாது, அன்று வி.பி.சிங் தலைமையில் இருந்த மத்திய அரசை வலியுறுத்தி மே தினத்தை சம்பளத்துடன் கூடிய அரசு விடுமுறை நாளாக அறிவிக்கச் செய்ததும் இன்றைய முதல்வர் கலைஞர்தாம்.

கலைஞர் தலைமையில் உள்ள தி.மு.க. அரசு இன்று தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல் நடத்தி வருகிறது.



அமைப்பு ரீதியான தொழிலாளர்கட்கு மட்டும் அல்லாமல், அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கும் காவல் தெய்வமாக இன்று கழக அரசு விளங்குகிறது.

**தொழில்வளத்தைப் பெருக்குவோம்!**
**தொழிலாளர் நலத்தைப் பாதுகாப்போம்!**
**இதுவே கழக அரசின் இலட்சிய முழக்கம்!**

❋❋❋

# வியர்வை

**– முதல்வர் கலைஞர்**



கடல்பெரிது காசினியில்
மழை இனிது மன்பதைக்கே
ஆற்றின் புகழ் மிகவாகும் அவனியிலே
கிணற்றுக்கும் கீர்த்தி பல உண்டென்போமே
குளமெல்லாம் குவலயத்தின் அமுதவாய்கள்; எல்லாம் சரி!
இத்தனைக்கும் முகில் கூட்டம் கண்ணீர் வடித்தால் அன்றோ
மழையாகிக் கடல் பொங்கும்.
ஆறு ஓடும் கேணி ஊறும் குளம் நிரம்பும்?
காரிருள் ஏன் தொலைந்தது?
கனவின்பம் ஏன் கலைந்த தென்று
காலை மலர் வடிக்கும் கண்ணீர் பனித்துளியாம்! தென்னம்
பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச் சாறு.
வாழை வடிக்கும் கண்ணீரே பால் ஆகும்.
ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல் ஆகும் வாள் ஆகும்.

'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

எனக் கூறி; வியர்வைக்கு விரைந்திடுவோம்.
சிப்பியின் வியர்வையிலே முத்து பிறக்கும் - ஒரு
சிற்பியின் வியர்வையிலே சிலை பிறக்கும்.
உழவனின் வியர்வையிலே பசி பறக்கும் - ஒரு
மழவனின் வியர்வையிலே பகை பறக்கும்.
வலியோர்கள் வியர்வையெல்லாம் பன்னீராம்-மிக
எளியோர்கள் வியர்வையெல்லாம் செந்நீராம்.
உலைக்களத்தில் கொட்டுகின்ற வியர்வைதனைத்
தழல் உறிஞ்சும் - காதற்
கலைக்களத்தில் கொட்டுகின்ற
வியர்வையெலாம் சந்தனமாம் சவ்வாதாம்-
அதனை வியர்வை யென்றால் இலக்கியங்கள் ஒவ்வாதாம்!

*- 28.9.68 அன்று பரமத்தி வேலூர், கண்டார் கல்லூரிக் கவியரங்கில் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதையிலிருந்து.*



# தொழிலாளர் துயர் களைவோம்!

**தேபேந்திரநாத் சாரங்கி,** இ.ஆ.ப.,
அரசுச் செயலர், தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை

இவ்வரசு பதவியேற்றது முதற்கொண்டு, இம் மாநிலத்திலுள்ள தொழிலாளர் அனைவருக்கும் குறிப்பாக அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் துயர் களைவதில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நலனுடன் கூடிய தொழில் வளர்ச்சியே தொழில் அமைதிக்கு வழியாகும் என்பதே இவ்வரசின் சீரிய கொள்கையாகும். இந்நிலை பேணி காக்கப்பட்டால், அரசின் பெருமையும், புகழும் வளர்ச்சிப் பாதையில் அமையும் என்பது தெளிவான ஒன்றாகும். அதேவேளையில் பொது அங்கீகாரமும் இவ்வரசிற்குக் கிட்டும்.

இதனடிப்படையில் நீண்டகாலமாக மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்க அரசு முனைப்புடன் செயல்பாடுகளை எடுத்துவருகிறது. இம்முயற்சியால் வசந்தா மில்ஸ் - கோயம்புத்தூர் மற்றும் அழகப்பா மில்ஸ், இராஜபாளையம் ஆகியவை நேரிடையாகப் பயன்பெற்றுள்ளன.

தற்போது மூடப்பட்டுள்ள சுமார் 30 ஆலைகளைத் திறப்பதற்கு முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நிர்வாகத்தரப்பிற்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படவிருக்கின்றன. இம்முயற்சியின் விளைவாக இன்னும் பல ஆலைகள் திறக்கப்பட்டு, பல ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என இவ்வரசு நம்பிக்கையோடு உள்ளது.

தொழிலாளர் நலனிலும், அவர்களின் எதிர்பார்ப்புகளிலும் அக்கறை கொண்ட இவ்வரசு முதல்முறையாக 1997ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் பண்டிகைக்காகக் கருணைத்தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.400 வழங்கியுள்ளது. இதன்மூலம் 16,919 தொழிலாளர்கள் ரூ.67,67,600 பெற்று பயனடைந்துள்ளார்கள். இதுவரை தீபாவளித் திருநாளுக்கு மட்டுமே இவ்வுதவி அரசுகளால் வழங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பி அண்ட் சி மில் இயங்குவது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகளைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதுபோன்ற சிக்கலான பிரச்சினையைக் குறித்த காலத்தில் தீர்ப்பதில் இந்த அரசு பின்தங்கியதில்லை என்பது அறிந்ததே. தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, பி அண்ட் சி மில் நிர்வாகத்திற்கும், தொழிற் சங்கத்திற்கும் இடையே அரசின் முன்னிலையில் பல உடன்பாடுகள் ஏற்பட்டு மில்லை 1.3.97 அன்று வெற்றிகரமாக மீண்டும் திறக்க முடிந்தது. இந்த மில்லின் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் அவர்களின் சம்பளம் முதலியவற்றை வழங்குவது உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு என்பது மற்றொரு முக்கியமான பிரிவாகும். இது அரசின் முக்கியக் கவனத்தைப் பெற்றுவருகிறது. மாநிலங்கள், குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதியினைத் தொடங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது 10.12.1996 நாளிட்ட தீர்ப்பில் வலியுறுத்தி ஆணை பிறப்பிக்கும் முன்பாகவே, அத்தகைய ஒரு நிதியைக் குழந்தைத் தொழிலாளர்களின் கல்வி மற்றும் அவர்கள் நலத்திற்காக இந்த அரசு ஏற்படுத்த ஆணைகள் பிறப்பித்துள்ளது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். பெற்றோர்களின் வறுமை நிலை காரணமாகவே தொழிலில் திணிக்கப்படும் குழந்தைகளின் நலனில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக



மேலும் பல நடவடிக்கைகள் எடுப்பதற்குமுன், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாநில முழுவதிலும் அமைந்துள்ள ஊறுபாடுடைய மற்றும் ஊறுபாடற்ற தொழிற்சாலைகளில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பினை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். முழுமனதுடன் கூடிய விடாமுயற்சியின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை என்னும் இத்தகைய சமூகக் கொடுமையைக் குழந்தைத் தொழிலாளர்கள் உடல்நலம் மற்றும் குழந்தைப் பருவத்திற்குப் பாதிப்பை விளைவிக்கும் தொழிற் சாலைகளில் மட்டுமாவது முற்றிலுமாக நெருங்கிய குறுகிய காலத்தில் ஒழிக்க முடியும் என்பது இந்த அரசின் அசைக்கமுடியாத நம்பிக்கையும், கொள்கையும் ஆகும். மக்களிடையே குழந்தைத் தொழிலாளர் முறையின் கொடுமைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் எந்தவொரு விழிப்புணர்வு இயக்கத்திற்கும் அரசு தனது முழுமையான ஆதரவைக் கொடுத்து வருகிறது. ஏனெனில், இத்தகைய சிக்கலான சமூக பொருளாதார பிரச்சினையைப் பொதுமக்கள், வேலையளிப்போர், தொழிற்சாலைகள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் ஒத்துழைப்பின் மூலமாகவே தீர்க்க முடியும் என்று அரசு நம்புகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை மேலும் சகித்துக் கொள்ள முடியாது என்ற கருத்தை அறிவிக்கும் வகையில் ஒவ்வொரு அமைப்பும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அமைப்பு ரீதியற்ற பிரிவு கவனிக்கப்படாமலே உள்ளது. இப்பிரிவினரின் வாழ்க்கைத் தரம் மற்றும் வேலை நிபந்தனைகள் பெருமளவிற்குச் சுரண்டப் படுகிறது. இந்த அடிப்படை உண்மையினை உணர்ந்து, இந்த அரசு தானே முன்வந்து பாதுகாப்பற்ற, குரல் கொடுக்க இயலாத அவர்களைச் சட்டப்படி பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர ஆய்வு செய்து, பயனுள்ள திட்டங்களை அமலாக்க, அரசுக்குப் பரிந்துரை செய்ய சம்பந்தப்பட்ட முகவர்களைக் கொண்ட தனிக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. கடந்த காலத்தில் யாரும் நினைத்திராத ஒரு புதுமையான திட்டமென இதனைக் குறிப்பிடலாம். இந்த மாநிலத்தில் 90 சதவிகிதம் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிபந்தனைகளின் முன்னேற்றம் ஒரு சுமுகமான மேம்பட்ட சமுதாயத்திற்கு வழிகாட்டுவதாக இருக்கும். அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான சலுகைகளான ஓய்வூதியம்,



காப்புறுதி, மருத்துவ வசதி, வைப்புநிதி ஆகியவைகளைத் தனிக்குழுக்கள் அளிக்கும் அறிக்கையை ஆய்வு செய்தபின் அரசு அறிவிக்க எண்ணியுள்ளது.

குறைந்த அளவு ஊதியம் என்பது அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பிழைப் பூதியமேயன்றி வேறல்ல. சட்டம் மூலம் இத்தகைய ஊதியத்தை வழங்கத் தவறுகின்ற அரசு நிலைத்திருக்க எந்த உரிமையும் இல்லை. இந்தப் பின்புலத்தில்தான் இவ்வரசு 1948-ஆம் ஆண்டின் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்வதையும், மறுநிர்ணயம் செய்வதையும் முறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது மட்டுமல்லாமல் இச்சட்டத்தின் அட்டவணையில் மேலும் நான்கு தொழில்களைச் சேர்த்து அவ்வட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கையை விரிவுபடுத் தவுள்ளதையும் இவ்வரசு அறிவித்துள்ளது.

அத்தொழில்கள் 1. தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் 2. மருத்துவம் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் 3. செக்யூரிட்டி கார்டுகள் மற்றும் 4. இரசாயன உரத்தொழில் ஆகியவையாகும். குறைந்த அளவு ஊதியங்கள் ஐந்தாண்டுகளுக் கொருமுறைமறுநிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று மேற்கூறிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இவ்வரசைப் பொறுத்தவரையில் குறைந்த அளவு ஊதியங்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயம் செய்யும் வழக்கத்தைத் தாமே முன்வந்து ஏற்றுக்கொண்டு, இத்தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே தேவையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வருகின்றது. குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது விலைவாசிக் குறியீட்டு எண்ணுக்கேற்ப மாறுபடும் அகவிலைப்படி நிர்ணயம் செய்வதையும் அதன் ஒரு பகுதியாக இவ்வரசு கட்டாய வழக்கமாகச் செய்துவருகிறது. தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் தொழிலதிபர்களால் தவறாமல் வழங்கப்படுவதையும் அதில் ஏதேனும் குறை காணப்பட்டால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுமாறும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்குக் கண்டிப்பான அறிவுரைகளையும் இவ்வரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு, தொழிற்சாலைகள் மிகுந்துள்ள மாநிலங்களில் ஒன்று என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. துரிதமான, தொழில் மயமாவதனால் தற்போதுள்ள தொழிற்சாலைகளில் பணிகளின் அளவு அதிகரித் துள்ளதோடு புதிய தொழிற்சாலைகள் உருவாக் குதலும் அதிகரித்துள்ளது. மாநிலத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க- மேற்குறிப்பிட்டுள்ளவாறு புதிய தொழிற்சாலைகள் உருவாகும் அதே நேரத்தில், தொழிலாளர்கள் பாதுகாப்பும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இந்த அரசு ஆட்சி ஏற்றபிறகு தொழிற் சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் கணிசமான அளவு குறைந்துள்ளது என்பது தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விதிகள் கண்டிப்பாகக் கடைப் பிடிக்கப்படுகிறது என்பதையே காட்டுகிறது என்று சொல்லிக்கொள்வதில் இந்த அரசு திருப்தி கொள்கிறது.

ஒரு மாநிலத்தை விரைவான தொழில் மயமாக்குவதற்குத் தனித்திறம் வாய்ந்த மனித சக்திகள் தொடர்ச்சியான இயக்கத்திற்குத் தேவைப் படுகிறது. உற்பத்தி அளவு பெருக்கத்திற்காக மேன்மேலும் அதிக அளவில் நவீன இயந்திரங்களும், உபகரணங்களும் மற்றும் தனித்திறம் வாய்ந்த தொழில் நுட்பங்களும் தொழில் உலகத்தில் அறிமுகப் படுத்தப்படுகின்றன. இத்தொழில் மயமாக்குவதில் மேலும் உதவிகரமாக இருப்பதற்கு இவ்வரசு ஒரு முக்கியமான கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி, தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத 218 பஞ்சாயத்து யூனியன்களில் படிப்படியாக மூன்று ஆண்டு காலத்திற்குள் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும். அம்மாதிரியான தொழிற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்குத் தனியார்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன்மூலம் உள்ளூர் இளைஞர் களுக்குப் போதிய வேலை வாய்ப்பு வசதிகள் கிடைப்பதுடன், அதே நேரத்தில் போதிய தனித்துவம் வாய்ந்த மனித சக்திகள் குறைவதால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும் என்ற சூழ்நிலையும் தவிர்க்கப்படும்.

வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு சரியான மற்றும் உடனடித் தகவல்கள் வழங்கும் பொருட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள குறிப்புகளைக் கணிணிமயமாக்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. தங்களுடைய கல்வி முடிந்தவுடன், தங்களுக்கு வேலை கிடைக்க வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உறுதுணையாக இருந்து உதவி புரியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், படித்த இளைஞர்கள் தங்கள் பெயர்களை வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் இதுபோன்று வேலை தேடுபவர்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பதிவு செய்து வருகிறார்கள். தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களின் அடிப்படையில், அவர்களில் பெரும்பான்மையோர் தங்களது பதிவுகளை மறு பதிவு செய்ய (Renewal) தவறிவிடுகிறார்கள். வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கும் அந்த இளைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில், மறுபதிவு செய்ய அளிக்கப்பட்ட அதிகபட்ச காலத்தை 12 மாதங்களிலிருந்து 18 மாதங்களாக உயர்த்தி அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து ஆணைகள் வெளியிட்டது. அவ்வாறே, 1992, 1993, 1994 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் தங்கள் பதிவுகளை மறு பதிவு செய்யத் தவறியவர்களுக்கு ஒருமுறை அவகாசமாக, மூன்று மாத காலம் வரை மறு பதிவு செய்ய அவகாசம் அளித்து அரசு ஆணைகள் வெளியிட்டது.

மேற்சொன்ன நடவடிக்கைகளானது, இந்த அரசு தொழிலாளர்கள் நலத்தையும், வேலைவாய்ப்பு அதிகரித்தலையும் கொள்கையாகத் தனது இதயத்தில் கொண்டு செயல்பட்டு வருவதைத் திண்ணமாக உணர்த்தும். இம்மாதிரி செயல் களினால் பொது மக்கள் நலம்பெற்று, அதன் காரணமாகப் பொருளாதார மேம்பாடு ஏற்பட்டு மாநிலம் வளர்ச்சி அடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ★

சாகாத வானம்நாம்; வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவைநாம்; பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல்நாம்; நிமிர்ந்து நிற்கும்
பொதியம் நாம்; இமயம் நாம்;

- மீ. இராசேந்திரன்




நல்வாழ்த்துகள்

**பவானி தாலுகா பஸ் உரிமையாளர் சங்கம்**

பவானி.





நல்வாழ்த்துகள்

**வீரப்பன் ஏஜென்சீஸ்**

ஈரோடு.


அவன் குடியிருக்க இடமில்லை,
நல்லவேளை
பசி குடியிருக்க
அவன் வயிறுண்டு

- சிற்பி




## தொழிலாளர் நீதிமன்றங்கள்

★ தனியார் தொழிற்சங்கங்களால் தொடரப்படுகின்ற தொழில் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கென, 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

## மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் பஞ்சாலைகள்

★ மூடப்பட்ட தொழிற்சாலைகளுள் 5 தொழிற் சாலைகள் திறக்கப்பட்டு, 2,895 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

## குறைந்த அளவு ஊதியச் சட்டம்

★ குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விதிகளின் படி குறைந்த அளவு ஊதியம் ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை மாற்றி யமைக்கப் படவேண்டும் என்றிருந்த போதிலும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குறைந்த அளவு ஊதியம் மாற்றியமைக்கப்படுகிறது.

★ தற்பொழுது குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்யும்போது நாளொன்றுக்கு ரூ.35க்கும் குறையாமல் நிர்ணயம் செய்யப் படுகிறது.

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

★ 9 மாவட்டங்களில் மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் செயல் திட்டங்கள் அமைத்து அவற்றின் வாயிலாகக் குழந்தைத் தொழிலாளர் களைக் கண்டறிந்து, சிறப்புப் பள்ளிகள் நடத்தி அவர்களுக்கு முறைசாராக் கல்வி புகட்டப்பட்டு வருகிறது.

★ குழந்தைத் தொழிலாளர் முறையின் கொடுந் தன்மைகளை நீக்கிட உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள கட்டளைகளை நிறைவேற்றும் பொருட்டு "குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதி" எனும் நிதியத்தை இவ்வரசு அமைத்துள்ளது.

## பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

★ பீடித்தொழிலாளர்கள் நலத்திட்டத்தின்கீழ் முதற்கண்ணாகத் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடல் ஆகிய கிராமங்களில் முறையே 439 மற்றும் 482 வீடுகள் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டு, அவர்தம் கடன் தொகையைக் குறைக்கும் வகையில் நிலம், கட்டட வரைபடம் தயாரிக்க மற்றும் பத்திரப்பதிவு கட்டணத்திற்கு ரூ.3.69 இலட்சங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

★ மேலப்பாளையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டட மையத்தின் மூலமாகக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை ஏறக்குறைய 100 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.





## ட்டடத் தொழிலாளர்களுக்கான லத் திட்டங்கள்

கட்டுமானத் தொழிலாளர்கள் நலத்திட்டங்களைச் செயற்படுத்த சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு இயங்கிவருகிறது. இவ்வாரியத்தில் பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள். இத்திட்டத்தின் கீழ், 1995-96 மற்றும் 1996-97இல் ஐந்து நபர்களின் வாரிசு தாரர்களுக்கு ரூ.50,000 வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1995-96இல் இரண்டு நபர்களுக்கு ரூ.7,500 வீதமும் 1996-97இல் ஒரு நபருக்கு ரூ.7,000 வழங்கப்பட்டுள்ளது.



## தாழிலாளர் நலம்

தமிழகத்தில் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சிப் பிரிவுகளும், 19 இடங்களில் தையற் பயிற்சிப் பிரிவுகளும் செயல்பட்டுவருகின்றன. இப்பிரிவுகளில் தொழிலாளர்களின் மனைவி மற்றும் திருமணமாகாத மகள்களுக்குத் தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது.பயிற்சிக் காலங்களில் உதவித் தொகையாக ஒவ்வொரு மாதமும் ரூ.40ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும் மேலும் ஒவ்வொரு மாதமும் ரூ.20ம், தேர்வில் தேர்ச்சி பெற்றால் ஒவ்வொரு மாதமும் மேலும் ரூ.20ம், ஆக மொத்தம் ஒவ்வொரு மாதமும் ரூ.80 வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசுத் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும் இதற்கான கீழ்நிலை/மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறு பவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந் தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 13 இடங்களில் இலவசப் படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

★ மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்கென ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

★ ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் வரும் தொழி லாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.1000, ரூ.500 பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்கான ரூ.1.68 இலட்சம் 1997-98ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

216440

உறிஞ்சப் படுகையில்
உறையூர் சுருட்டும் சிவக்கும்
தோழா...பார்

- செ. ஆடலரசன்



நல்வாழ்த்துகள்

**விஸ்வா அக்ரோ எண்டர்பிரைசஸ் லிட்.,**

கோபி.

நல்வாழ்த்துகள்

**கோபி தாலுகா பேருந்து**
**உரிமையாளர் சங்கம்**

கோபி.



தொழில் இன்றேல் அழிவாகும், அழிவதும்தொழிலே
தொழிலில்லா இடமில்லை, சுதந்திரம் தொழிலே,
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே,
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே!

- கவிஞர் கம்பதாசன்

# வளமாகும் தமிழகம்

- முதல்வர் கலைஞர்

### பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சி வலியுறுத்தப்படும்

தமிழகத்தில் தற்போது 20,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டுடன் 13 பொதுத் துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனம், சேலம் உருக்காலை, இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் போன்ற பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் 16,000 கோடி ரூபாய் மதிப்பில், விரிவாக்கல், உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

எனவே, இன்றுள்ள நிலையில், நாம் ஏற்றுக்கொண்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தனியார் தொழில்களை ஊக்கபடுத்துகின்ற - அதே நேரத்தில், ஏற்கெனவே கழக அரசு உருவாக்கிய கூட்டுத்துறை, இணைத் துறை போன்ற துறைகளோடு, பொதுத் துறைக்கும் நிச்சயமாக நல்ல இடத்தைத் தரும் என்ற நம்பிக்கையை அனைவரும் பெறலாம் என்று குறிப்பிட விரும்பு கிறேன்.

### இந்திய ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு

இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்துதான் செய்யப்படுகிறது. இந்தியாவினுடைய மொத்த மக்கள் தொகையிலே, தமிழ்நாட்டு மக்கள் தொகை 6 சதவீதம்தான். ஆனால், இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்து செய்யப்படுகிறது. அதிலும், முக்கியமாக, ''காட்டன் யார்ன்'' ''டெக்ஸ்டைல்ஸ்'', தோல் பொருள்கள், பனியன்கள் ஆகியவை, அந்த ஏற்றுமதியாகின்ற பொருள்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தொழில் துறை வளர்ந்ததா என்பதை ஒரு கேள்விக்குறியாக்கி, வளரவில்லை என்ற ஒரு தவறான பிரச்சாரம், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் அதற்குச் சொல்லக்கூடிய சில விளக்கங்கள், யாரையும் புண்படுத்தாது என்று கருதுகிறேன். ஏனென்றால், 1967-ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வந்த நேரத்தில், தமிழகத்திலே இயங்கிவந்த, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் முதலிய பொதுத்துறை நிறுவனங்கள் விரிவாக ஆக்கப்படவும், உற்பத்தியை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், தக்கவகையில் மத்திய அரசை வற்புறுத்தியதோடு, மாநில அரசின் சார்பில் அத்தகைய ஏற்பாடுகளுக்கான, தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நெய்வேலியிலே, இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவும், சேலம் இரும்பாலை அமைக்கப்படவும், மத்திய அரசோடு தொடர்ந்து போராடி, அவை நிறைவேற்றப்படுவதற்கு வழிவகுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாடு மிக நன்றாக அறியும்.

தூத்துக்குடியிலே, இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு, வளர்ந்திருக்கின்ற, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பீடு என்று சொல்லத்தக்க அளவுக்குள்ள ''ஸ்பிக்'' உரத் தொழிற்சாலை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத் திலேதான் நிறுவப்பட்டது என்பதையும் யாரும் மறந்துவிட இயலாது.

### சிப்காட்டை உருவாக்கியது இந்த அரசு

அதைப்போல, கழக ஆட்சிக் காலத்திலே தான், பொதுத்துறையின் மூலம் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மாத்திரம், தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடியாது என்ற எண்ணத்தோடு, ஆர்வமிக்க தொழில் முனைவர்களை உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த, தொழில் வளாகங்களை அமைத்து, குறைந்த விலையிலே இடங்களை ஒதுக்கீடு செய்திட, தொழில் திட்டங்களுக்குத் தேவையான கடன் உதவியை, மூலதன மானியத்தோடு (Capital Subsidy) வழங்கிட ஒரு முடிவெடுத்து, ''சிப்காட்'' (State Industry Promotion Corporation of Tamilnadu) என்ற புதிய நிறுவனத்தைக் கழக அரசுதான், 1971-ஆம் ஆண்டு தோற்றுவித்தது என்பதையும் யாரும் மறந்திட இயலாது.

### ராணிப்பேட்டை தொழில் வளாகம்

அதைத் தொடர்ந்து ''சிப்காட்'' நிறுவனம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான் இராணிப்பேட்டை என்பதை மாண்புமிகு



உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

1973-ஆம் ஆண்டு 729.78 ஏக்கர் நிலப்பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் கழக ஆட்சிக் காலத்தில் அங்கே உருவாக்கப்பட்டன.

### ஒசூரில் தொழில் வளாகம்

அதேபோல ஒசூரிலே 1974-ஆம் ஆண்டுதான் கழக ஆட்சிக் காலத்திலேதான் 500 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில் 20,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய அளவுக்கு 186 தொழில் நிறுவனங்களை உருவாக்கினோம். இதுவும் கழக ஆட்சிக் காலத்திலேதான். தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்கிடத் திட்டமிட்டு மானாமதுரையில் 225 ஏக்கரிலும், புதுக்கோட்டையிலே 110 எக்கரிலும் தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன. இவை தவிர, இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள ஆனைக்காரன்பட்டி போன்ற பின்தங்கிய பகுதிகளில் தனியார் முயற்சியிலே தொழில் வளாகங்கள் அமைக்கும் முயற்சிகளுக்கும் ''சிப்காட்'' மூலம் அன்றிருந்த கழக அரசு ஊக்கமளித்தது என்பது நிதர்சனமான உண்மைகள் ஆகும்.

### சிட்கோவை உருவாக்கியதும் இந்த அரசே

சிறு தொழில்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவதற்காக 'சிட்கோ' நிறுவனத்தையும் கழக அரசுதான் 1971-ஆம் ஆண்டு தொடங்கியது.

### எல்காட் பிரிவை ஏற்படுத்தியதும் இந்த அரசு

அதேபோல 1972-ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் "எல்காட்", மின்னணுத் தொழில்கள் தமிழகத்திலே வளம்பெற வேண்டுமென் பதற்காக ஒரு தொலைநோக்கான திட்டத்தோடு 1972-லே தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மின்னணுப் பிரிவு ஒன்றை உருவாக்கி அதன் தொடர்பாகப் பல்வேறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியது.

Electronic Corporation of Tamilnadu தான் 1975-ஆம் ஆண்டு ''எல்காட்'' என்று சுருக்கமான பெயரோடு அமைந்தது என்பதையும் அவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ''எல்காட்'' நிறுவனம் வளர்ந்து ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகம் முழுவதும் மின்னணுத் தொழில் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ''சிப்காட்'', ''சிட்கோ'', ''எல்காட்'' போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்ததன் மூலம் தொழில் பெருவாரியாக தமிழ்நாட்டிலே வளருவதற்குக் கழக அரசு வழி வுகுத்தது. தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும் கடன் வசதிகளை அவர்கள் தாராளமாகப் பெறவும் கழக அரசு உதவிடத் தொடங்கியது. மேலும் வரி விலக்கு அளித்தல், விற்பனை வரி• வசூலைத் தள்ளி வைத்தல், மின்கட்டணச் சலுகை அளித்தல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகக் கழக அரசு காரணமாக இருந்தது. 1975-ஆம் ஆண்டு மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் திரு.வில்லியம் வித்தர்ஸ் என்பவர் தமிழ்நாட்டுக்கு வந்து திரும்பிச் சென்றார். அவர் தாயகம் திரும்பியவுடன் மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றத்திலே பேசினார்.

### வெளிநாட்டுப் பாராட்டு

தமிழகத் தொழில் வளத்தைப் பற்றி அங்கே பேசினார், என்ன பேசினார் என்றால், 'தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான பல கவர்ச்சிகரமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிட பெருமுயற்சி செய்வதோடு, பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில், தமிழ்நாட்டில் தொடங்கப்படும் எந்த ஒரு வெளிநாட்டுத் தொழிற்சாலைகளுக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சி காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளன. இவற்றைச் சிறந்த பணிகள் என்று நான் கருதுகிறேன். நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது, அதாவது மேற்கு





ஆஸ்திரேலியாவினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது அவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்' என்று அவர்கள் மனம் திறந்து பாராட்டியது அப்போதே ஏடுகளில் வெளி வந்தி ருக்கிறது.

இப்படி இந்தியாவிலே மாத்திரம் அல்லாமல் வெளிநாட்டுக்காரர்களும் பாராட்டக்கூடிய அளவு நாம் தொழில் வளத்தைப் பெருக்கியிருக்கிறோம்.

### 1996இல் இந்த அரசு அமைந்தபின்:

கனிமங்கள் வெட்டியெடுக்கும் உரிமங்கள் வழங்குவதற்கான கொள்கையை ஒழுங்குப்படுத்தி, டெண்டர் முறை ஏற்படுத்தப் பட்டது. டெண்டர் முறை 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 272 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்புடைய 103 இடங்களில் குவாரிகள் டெண்டர் விட்டதால், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்தது. கடந்த கால ஆட்சியில் இந்த டெண்டர் முறையையே மாற்றி, விதி 39 என்ற ஒரு நடைமுறையைப் புகுத்தி, அதன் பலனாக, 93லிருந்து 96 ஏப்ரல் வரையில் மூன்று ஆண்டு காலத்தில் குவாரி குத்தகை மூலம் அரசுக்குக் கிட்டிய வருவாய் 5.12 கோடி தான். அந்த முறை மாற்றப்பட்ட காரணத்தால், இதன் தொடர்பான விழிப்புப் பணிக் குழு செய்த - 'விஜிலென்ஸ் கமிஷன்' செய்த ஆய்வு ஒன்றில் முந்தைய ஆட்சிக் காலத்தில் குத்தகை விடுவதில் சரியான நடைமுறை பின்பற்றப்படாததாலும், குத்தகைத் தொகை வசூலிக்கப்படாததாலும், அரசுக்கு 70 கோடி ரூபாயிலிருந்து 95 கோடி ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப் பட்டுள்ளது. மீண்டும் கழக அரசு, 1996ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்ற பிறகு, அந்த 39 விதியை நீக்கிவிட்டு மறுபடியும் ஒப்பந்தப்புள்ளி, டெண்டர் முறை கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு இலாபகரமாக, அந்தத் தொழில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதையும் அதிலே எவ்வளவு இலாபம் என்பதை அடுத்து அறிவிக்கின்ற ஒரு கட்டத்திலே அறிவிப்பேன் என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### உயர்நிலைக் குழு

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்குக்கூட ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதிலே அனுபவம் வாய்ந்த தொழில் அதிபர்களும், அரசு அதிகாரிகளும், இளம் தொழில் முனைவோர்களும் இடம்பெற்று, அடிக்கடி அந்தக் குழு கூடி, அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை அது வழங்கி வருகிறது.

### உருவாக்கப்படும் புதிய தொழில்கள்

★ இந்த அரசின் தொழில் நேயம் கொண்ட கொள்கைகள் 'Industry-Friendly Policies' மற்றும் ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான 'transparent approach' அணுகுமுறைகள் காரணமாகப் பல புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. 10 மாத காலத்தில் பல தொழில்கள் தொடங்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கே உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, அவ்வப்போது கேள்விப்பட்டவைகள் என்றாலும், தொகுத்துத் தருவது என்னுடைய கடமை என்பதால் தொகுத்துத் தருகிறேன்.

★ 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய புளூமிங் மீடோன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மலர் வளர்ப்பு (Flori-Culture) திட்டம் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒசூரில் அமைக்கப்படுகிறது.

★ 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரி சாம்பலைப் பயன்படுத்தி பொருள்கள் தயாரிக்கும் திட்டம் ''ப்ளை ஆஷ்பேஸ்ட் ப்ளக்ஸ் கோல்ஸ்'' நிறுவனத்தின் மூலம் எண்ணூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ பொள்ளாச்சிக்கு அருகில் 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய இறைச்சிப் பதப்படுத்தும் திட்டம் ரூ.169 கோடியில் தொடங்கப்படுகிறது.

★ 38.42 கோடி ரூபாய் செலவில் நவீன ஒருங்கிணைந்த தேங்காய்ப் பொருள்கள் உற்பத்தித் திட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் தொடங்கப்பட உள்ளது.

★ இங்கிலாந்து நாட்டு பில் கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிங்கப்பெருமாள் கோவிலில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.



★ 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு டெலிகாம் நிறுவனத்தின் கண்ணாடித் தொழிற்சாலை மறைமலை நகரில் அமைக்கப்பட இருக்கிறது.

★ அசோக் லேலண்டு நிறுவனம் ஒசூரில் உள்ள தனது பிரிவை 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தி ஆண்டுக்கு 10,000 லாரிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

★ சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 35 ஏக்கர் நிலத்தில் ஒரு நிரந்தர வர்த்தக மையம் அமைக்கப்பட உள்ளது.

★ ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் கொரியா நாட்டின் கும்ஹோ டயர்ஸ் நிறுவனம் டயர் தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது.



★ கொரியா நாட்டில் ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் 2450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

★ கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் வளாகத்தில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார்பன் பிளாக் தொழிற்சாலை ஒன்று ஹிடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட இருக்கிறது.

★ ஜப்பான் நாட்டு மிச்சுபிஷி கம்பெனியுடன் இணைந்து இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 300 கோடி ரூபாய் மதிப்பில் லேன்சர் கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திருவள்ளூரில் அமைத்து வருகிறது.

### தமிழகத்தில் தொழில்வளம் பெருக்கிட புதிய அறிவிப்புகள் - தொழில் நகரியங்கள்

தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடத்திலே வழங்கிட வகை செய்யும் 'ஒற்றைச் சாளரம்' - 'சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ்' குறித்து மசோதா ஒன்று ஏற்கெனவே சட்டப்பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது.

### குவாரிகள் நிர்வாகத்தில் உள்ளாட்சி அமைப்பு :

மணல், ஜல்லி, களிமண் குவாரிகள் மாவட்ட ஆட்சியர் புவியியல் துறை அலுவலர்களால் முறைப்படி குத்தகைக்கு விடப்பட்ட பின், குவாரிகளிலே இருந்து கனிமங்களை எடுத்துச் செல்வதில் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல், உள்ளாட்சிக்கு வரவேண்டிய முழு வருவாயும் வந்து சேர ஏதுவாக, குவாரி நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களுக்கே இனிமேல் வழங்கப்படும். இதன்படி குவாரியிலிருந்து 'Load' - சரக்கு ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு முறையும் அதற்குரிய காணிக் கட்டணத்தை (Segniorage fee) உள்ளாட்சி அமைப்பின் கணக்கில் வங்கியில் செலுத்திவிட்டு அதன்பின், உள்ளாட்சி அமைப்பு வழங்கும் வாகன அனுமதியைக் (Transport Permit) கொண்டுதான் லாரி சரக்குடன் செல்ல அனுமதிக்கப்படும். அனுமதி வழங்கும் பொறுப்பை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவருடனோ அல்லது வேறொரு உறுப்பினருடனோ இணைந்து கவனிக்க வேண்டும். ஊராட்சி மன்றத்திற்கு இப்பொறுப்பு வழங்கப்படுவதால், தவறான வழிகளில் மணல், ஜல்லி முதலியன கடத்தப்படுவது தடுக்கப்படுவதோடு, ஊராட்சி மன்றத்திற்கு வருவாயும் பெருக வழியேற்படும்.

### ஒன்றியம்தோறும் தொழிற்பயிற்சி நிறுவனம்

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஐ.டி.ஐ. தொடங்கிட இந்த அரசு ஆவன செய்யும். இதன் விளைவாக ஏராளமான இளைஞர்கள் பல்வேறு தொழிற்பயிற்சிப் பிரிவுகளில் முறையான பயிற்சி பெற்று, உருவாகி வரும் புதிய தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஐ.டி.ஐ. அமைக்க முடிவெடுத்து அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### கூட்டுத்துறையில் கிரானைட் தொழிற்சாலைகள்

கிரானைட் கற்களைப் பயன்படுத்தி கூட்டுத்துறையில் 4 புதிய திட்டங்கள் ஒவ்வொன்றும்

50 ஹெக்டேர் பரப்பளவில், இந்த நான்கும் சேர்ந்து 200 ஹெக்டேர் பரப்பளவில் கிரானைட் கற்களைப் பயன்படுத்தி நடத்துகின்ற தொழில்களைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குரிய விலைப்புள்ளிகள் விரைவில் முறைப்படி கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மின்னணுப் பூங்காக்கள்

மின்னணுப் பூங்காக்கள் என்று சொல்லும்போது, நந்தவனம் என்று கருதிக்கொள்ளக்கூடாது. அதை 'தொழில் பார்க்' என்றும் அழைப்பது உண்டு. அந்த அளவிலே மின்னணு பார்க், மின்னணுத் துறையிலே ஏற்பட்டு வரும் தீவிர வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் சென்னையில் கேளம்பாக்கத்திலும், கோவையிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை (Technology Parks) நிறுவிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அதேபோல சென்னைக்கு அருகில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு இடங்களில் மென்பொருள் நுட்பவியல் பூங்காக்களை (Software Techno Parks) நிறுவுவதற்கும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதிய தொழில் மையங்கள்

வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புக்களைக் கருதி இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்ற நிலையில், சென்னைப் புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும், புதிய தொழில் மையங்களைத் தொடங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தொழில்துறை உருவாக்கும் துணைநகரங்கள்

சென்னையைச் சுற்றியே பல பெருந்தொழில் திட்டங்கள் உருவாகி வருகின்றன என்று ஒரு குறைபாடு இருந்துவருகின்றது. இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தொழில் துறையின் சார்பில், ஹுண்டாய் கார் தொழிற்சாலை அமையும் திருப்பெரும்புதூருக்கு அருகில் 2000 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும், போர்டு கார் தொழிற்சாலை அமையும் சிங்கப்பெருமாள்கோயில் பகுதியில் 500 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும் அமைக்கப்படும். சென்னையிலேயே தொழில்கள் உருவாகின்றன என்பதை ஓரளவுக்கு மாற்றுவதற்காக இந்த இரண்டு துணை நகரங்களும் பயன்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தமிழகத்தில் சிங்கப்பூர் நிறுவனங்களின் முதலீடுகள்

சிங்கப்பூரிலே இருக்கிற சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகம் (Singapore India Chamber of Commerce) - என்கின்ற அமைப்பு, தமிழ்நாட்டில், முதலீடு செய்வதைப்பற்றிச் சிங்கப்பூரில் இருக்கும் தொழில் முனைவோருக்குத் தகவல்கள் கொடுக்கும் ஒரு சாளரமாகச் (Window) செயல்பட ஒத்துக் கொண்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### 7000 ஏக்கரில் பெட்ரோ - கெமிக்கல்ஸ் பூங்கா

டிட்கோவின் புதிய திட்டங்கள் புதிய எண்ணூர் துறைமுகத்தின் சுற்றுப்புறங்களில் சுமார் 7,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெட்ரோ-கெமிக்கல் பூங்கா ஒன்று நிறுவப்படும்.



கழிவு நீரைச் சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்தும் வகையில் நல்ல நீராக மாற்ற சுத்திகரிக்கும் நிலையங்கள் அங்கு அமைக்கப்படும்.

### மேலும் பல தொழில்கள்

★ எஸ்.கே.எம்.குரூப் நிறுவனத்துடன் இணைந்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முட்டை பதப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த சையம்பெல் கெம்ப் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 150 கோடி ரூபாய் செலவில் கரும்புச் சக்கையிலிருந்து சிறு பலகைகள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு, இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.



★ நார்வே நாட்டைச் சேர்ந்த நார்ஸ்கே ஹைட்ரோ நிறுவனத்துடன் இணைந்து பி.வி.சி. குழாய்க்குத் தேவையான மூலப்பொருள்கள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தாகி விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ 7,500 கோடி ரூபாய் முதலீட்டில், நாப்தா கிராக்கர்ஸ் மற்றும் ஒலிபின்ஸ்- (Naphtha Crackers & Olefins) வளாகம் ஒன்று அமைக்கப்படும்.

★ சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய் செலவில் 100 சதவீத ஏற்றுமதியுடன் இணைத் துறையில் செயல்படுத்தக்கூடிய உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

★ ஒசூர் பகுதியில் மலர் வளர்ப்புத் திட்டம் பல நிறைவேற்றப்பட்டு வருவதால், அத்திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அங்கு 75 கோடி ரூபாய் செலவில் குளிரூட்டு வசதி, குளிரூட்டப்பட்ட வாகன வசதி முதலியவைகளைக் கொண்ட மையம் ஒன்று அமைக்கப்படும்.



★ டிட்கோவுடன் இணைந்து ஈஸ்ட் பாலி புரோபிலின் (Biaxially oriented poly-propylene) பிஸ்பினால்-ஏ (Bisphenon-A) மற்றும் சக்தியூட்டப்பட்ட கரி ஆகியவற்றைத் தயாரிக்க 325 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை அமைக்கப்படும்.

★ பெயர் பெற்ற லட்சுமி மெசின் ஒர்க்ஸ் நிறுவனம் மற்றும் டிட்கோவின் இணை நிறுவனமான சிஸ்கால் மூலமாக 450 கோடி ரூபாய் முதலீட்டில் தேனிரும்பு (Siscol) தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. 210 கோடி ரூபாய் மதிப்பில், இரும்புத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் வாக்கில் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



★ 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்டெர்லைட் நிறுவனத்தால் தூத்துக்குடியில் தாமிரத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், அந்த எதிர்ப்பின் காரணமாக அரசு எடுத்த முயற்சிகள்- தொழிற்சாலையும் நடக்கவேண்டும், தொழிற்சாலையிலிருந்து வருகிற கழிவுப் பொருள்கள் காரணமாக மக்களும் பாதிக்கப் படக்கூடாது, மீனவர்களும் பாதிக்கப்படக் கூடாது என்று அரசு எடுத்த முயற்சியின் அடிப்படையில், அந்தத் தொல்லைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மணலியில் கூட்டுத் துறையில் ரூ.50 கோடியில் பல்க்ட்ரக் இண்டர்மீடியட்ஸ் தொழிற்சாலை அமைக்கப்படும்.

★ 70 கோடி ரூபாய் முதலீட்டில் இண்டஸ்ட்ரியல் என்சைம் தொழிற்சாலை தொடங்கப்படும்.

★ "டான்சம்" நிறுவனம் மூலம் விருத்தாசலத்தில் 1.4 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1920 டன் உயர்தர அலுமினியக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடப்பாண்டில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டு தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, சட்டப் பேரவையில் 23-4-1997 அன்று ஆற்றிய பதிலுரையிலிருந்து)*

ஏழை நெசவாளி
கைத்தறியில்
நெய்யும் சிலந்தி

- ஆடலரசன்



நல்வாழ்த்துகள்
ஈரோடு ராஜேந்திரா சில்க்ஸ்
ஈரோடு.



# பாவேந்தரும் பறவைகளும்

முனைவர் 'சிலம்பொலி' செல்லப்பன்

இயற்கைப் பொருள்கள் கவிஞனை மகிழ்வு கொள்ளச்செய்வன அவற்றை நோக்கும்போது கவிஞன் மகிழ்வதோடு மட்டுமல்லாமல், தன் உள்ளத்தின் வெளிப்பாட்டினைக் கவிதையில் வடித்தும் தருகிறான். இயற்கைப் பொருளோடு இயைந்த உயிரினங்களும் கவிஞனை உணர்வு கொள்ளச் செய்கின்றன. பாவேந்தர் பாரதிதாசன், தம் கவிதைகளில் பறவைகளைக் கொண்டு பல அரிய செய்திகளைப் புலப்படுத்தியுள்ளார்.

பறவைகளைத் தனியே அவற்றின் இயல்புகளை விதந்தோதும் முறையிலும், மற்ற இயற்கைப் பொருள்களோடு இணைத்துக் காட்டும் முறையிலும், சமுதாயச் சிந்தனையை உள்ளுறையாகக் கொண்டு கருத்துரைக்கும் முறையிலும் பாவேந்தர் பாடியிருக்கக் காண்கிறோம்!

## சிட்டுக்குருவி

சிறு குழந்தைகட்குச் சிட்டுக்குருவி கூடு கட்டிக் குஞ்சு பொரிப்பதை இயல்பாகவும் சுவையாகவும் எடுத்துரைக்கிறார். இதோ அந்தப் பாடல்:

'கெட்டிக்காரச்
சிட்டுக் குருவி
நெட்டைத்துடைப்பக்
கட்டை உருவி
பட்டுச் சேலை
இழையைச் சேர்த்தும்
கொட்டிய பஞ்சில்
கொஞ்சம் கோத்தும்
எட்டாச் சுவரை
ஒட்டிய வாரையின்
முட்டு முடுக்கின்
நட்ட நடுவில்
கட்டிய கூட்டில்
முட்டையும் இட்டது
ஒட்டிக் காத்துக்
குஞ்சும் பொரித்தது'

இரண்டு சீர்களில், ஒரே மூச்சில், நிறுத்தாமல் படிக்கும் வகையில் சிறப்புறப் பாடியிருக்கிறார்.

## புறாக்களின் நெறி

புறாக்கள் பல நிறத்தன. நிலா, செவ்விதழ் விரியாத தாமரை, மங்கையரின் கருங்கொண்டை, கட்டி ஈயம், காயாம்பூக் கொத்து, வாழைப்பூ ஆகிய நிறங்களுடன் அழகே உயிர்கொண்டு மேய்வதுபோலப் புறாக்கள் வட்டமாய் அமர்ந்து இரை மேய்கின்றன. ஒன்றையொன்று கொத்தித் துரத்துவதும் இல்லை விரட்டுவதும்

இல்லை. இரையுண்ணும் அப்பறவை களிடம் மேல், கீழ் என்ற வேறுபாடுமில்லை.

'இட்டதோர் தாம ரைப்பூ

இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி

இரையுண்ணும்; அவற்றின்
வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை

வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்

கண்மூடி வழக்க மில்லை'.

பறவையிடம் காணப்படும் ஒற்றுமை யுணர்வு - உயர்வு தாழ்வு கருதாத மனப்பாங்கு ஆறறிவு படைத்த மாந்தரிடம் இருப்பதில்லையே என ஏங்குகிறார் பாவேந்தர்.

பெண்புறா தன் ஆணுக்கன்றி வேறொன் றுக்கு இணங்காது! ஒரு பெட்டை ஒளிவீசி நின்றாலும் வேறு சேவல் அதைத் திரும்பியும் பார்ப்பதில்லை. ஓர் இணையில் ஒரு புறா இறந்திட்டால்தான் ஒன்று மற்றொன்றை நாடுமாம்! ஒருவனுக்கு ஒருத்தி என்பது மட்டுமன்று; ஒருவன் ஒருத்தியர் இருவரில் ஒருவர் இறப்பரேல், மற்றவர் மறுமணம் செய்துகொள்ளலாம் எனும் கருத்தையும் புறாக்களைக் கொண்டு பாவேந்தர் மாந்தர்க்குக் கற்பிக்கிறார்.

இத்தகைய ஒழுக்கமுடைய புறாக்களி டையேயும் தவறுகள் நடந்துவிடுகின்றன.



ஒரு பெண் புறா தனித்து இருக்கிறது; அதன் ஆண் அல்லாத மற்றொரு ஆண்புறா அப் பெண்புறா வருந்தும் வண்ணம் தவறி ழைத்து விடுகிறது. இது புறாக்களின் இயல்பும் அன்று, பண்பும் அன்றே! இத் தகாச் செயல் அவ் வாண் புறாவுக்கு எப்படி வந்தது? - பாவேந்தர் கூறுகிறார்:

'...... இந்தத்
தகாச்செயல் தன்னை அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒருசில தறுத லைகள்
கவலைசேர் மக்க ளின்பால்
கற்றுக்கொண்டிருத்தல் கூடும்!'

தவற்றினை மனிதனைப் பார்த்துச் சில தறுதலைப் புறாக்கள் கற்றுக் கொண்டனவாம்! மாந்தரின் ஒழுக்கக் கேட்டினை மிக நுட்ப மாக நையாண்டி செய்கிறார் கவிஞர்.

## பச்சைக் கிளி

அடிமை வாழ்வில் கிடைக்கும் அற்ப சுகங்களுக்காக அதையே பெரிதென்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு, கூண்டுக் கிளியையும் விண்ணிலே தன்னிச் சையாய்ப் பறந்து திரியும் கிளியையும் சுட்டிக்காட்டி விடுதலை உணர்வின் பொருளை விளக்குகிறார் புரட்சிக் கவிஞர். கூண்டுக் கிளியிடம் சொல்வதுபோல் கவிஞர் சொல்கிறார்; உனக்குத் தின்னத் தித்திப்புப் பழம் தருவர்; மதுரப் பருப்பு வழங்குவர்; உன்னைப் பொன்னே மணியே என்று புகழ்வர்; ஆனாலும் வானில் பறக்கும் வண்ணக் கிளியைப் பார்! தன் விருப்பம்போல் வானவீதியில் வலம் வருகிறது; தென்னங் கீற்றிலே அமர்ந்து பொன்னூசல் ஆடுகிறது. உனக்கு அந்த உரிமை உண்டா? தச்சன் கூட்டி னுள்ளேயேதான் அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது. உணவு கிடைத்தால் மட்டும் போதுமா? எனக் கேட்கிறார். வாய்ப் பேச்சால் மட்டும் விடுதலை வருவிடாது பெரும் புரட்சியினாலேயே அதைப் பெற முடியும் என்பதை-





'அக்கா அக்கா என்று நீ
அழைத்தால்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே!'

என அக் கிளிக்குச் சொல்லும் பாங்கில் கவிஞர் உலகுக்குச் சொல்கிறார்.

## அழகிய மயில்

பாவேந்தர் மயிலைப் பார்த்து, 'அழகிய மயிலே! அழகிய மயிலே! நீயும் பெண்களும் நிகர் என்கின்றனர். உனக்கோ நீண்ட கழுத்து உள்ளது! பெண்கள் கழுத்தோ குட்டைக் கழுத்தாய் இருக்கிறதே! அது ஏனோ?' என வினவுகிறார். மயில் பேசவா போகிறது? எனவே, அவரே விடையும் தருகிறார்.

'அயலான் வீட்டில் அறையில்
நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை அன்னை
இப்பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக்
கொடுத்தாள்; உனக்கோ கறை
யான் றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள்கழுத்
தளித்தான்!'

மயிலிடம், 'மயிலே! இதை உன்னிடம் மட்டும்தான் உரைத்தேன். உன் மனத்தி லேயே போட்டு வை. இல்லையேல் மகளிர் கூட்டம் என்னை ஏசும்' என்றும் சொல்கிறார்.

இத்தோடு பாடலை நிறுத்தியிருந்தால், இது ஏதோ வேடிக்கைப் பாடல்போல் இருக்கிறதே! பெண்களை நையாண்டி செய்வதுபோல் இருக்கிறதே? இப்படியா ஒரு புரட்சிக்கவிஞர் பாடுவது? என வினவத் துடிப்போம். ஆனால், இதற்கு



மேல்தான் பாடலின் உயிர்ப்பான கருத்தை உரைக்கிறார். பெண்கள் அயலார் வீட்டில் நடப்பதை எட்டிப் பார்க்கும் சுருங்கிய உள்ளத்தினராக வாழ்வதற்கு ஆண்களே காரணம் என ஆண்கள் கூட்டத்தைப் பாவேந்தர் சாடுகிறார்.

பன்னெடுங்காலமாக ஆடவர் பெண்டிரை அடக்கியாண்டு வீட்டினுள்ளேயே அடை பட்டுக் கிடப்பவர்களாகச் செய்துவிட்டனர். பரந்த உலகைக் காணமுடியாதவாறு சுருங்கிய வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடந்ததால் அவர்கள் உள்ளமும் விரி வின்றிச் சுருங்கியதாயிற்று.

**'புவிக்கொன் றுரைப்பேன் புருஷர் கூட்டம்**
**பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கி**
**திருந்தா வகையிற் செலுத்தலால்**
**சுருங்கிய உள்ளம் விரிந்தபா டில்லையே!'**

நகைச் சுவையாகச் சொல்வதுபோல் ஆணாதிக்கத்தை அழுத்தமாகக் கண்டிக்கிறார். அடிமையுற்றுக் கிடக்கும் பெண் சமுதாயம் விடுதலை பெற்று வீறுநடை போட வேண்டுமென விரும்புகிறார்.

## கோழிகள்

ஆதிக்க சக்திகள், ஏதோ அள்ளிக் கொடுப்பதாய்ச் சொல்லி, எளியவர்களின் உழைப்பின் பயனை விழுங்கி வாழ்கிறார்கள். உழைக்கும் சக்தி, கிடைத்தது கொண்டு நிறைவடைந்து விடலாகாது; உரிமை பெற்ற சக்தியாக விளங்கவேண்டும் என்பதை வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும்



உரையாடுவதன் வாயிலாக உணர்த்துகிறார், பாவேந்தர்.

வீட்டுக்கோழி, "வீட்டுக்காரர் காலையில் எனக்குக் கம்பு போடுவார், மாலையில் தவிடு பிசைந்து தருவார். இட்டளியைப் பிட்டுப் போடுவார்; இரவில் இன்னல் நேராமல் என்னை அடைத்துக் காப்பார். நோய் நொடி வராது வளர்த்து வருவார். அவர்கள் செய்யும் நன்மையை அளவிட்டுச் சொல்லமுடியாது" என்றது.

"உன்னால் அவர்கட்கு நன்மை இல்லையா?" எனக் கேட்டது காட்டுக் கோழி.

வீட்டுக்கோழி, "நான் முட்டை இடுவேன். வெளிவரும் முட்டையை வெடுக்கென்று எடுத்தே அனைவரும் அடைசுட்டு உண்டு மகிழ்வர். மேலும் முட்டைகளை அடைகாப்பேன்; குஞ்சுகள் வெளிப்படும். வீட்டுக்காரர்.

**'பதினைந்து நாளில்என் பசுங்குஞ்'சுகளில்**
**இதுநன்று மற்றையது நன்றென்று**
**வாட்டம் பார்த்தே ஓட்டமாய் ஓடி**
**இரண்டு மூன்றைப் பற்றித் தலையைப்**
**பாளையிற் பாக்குக் காய்போல் திருகிப்**
**பச்சு டம்பின் பஞ்சுமயிர் சிரைத்துக்**
**குருதி கொட்டக் கூறிட்ட சதையை**
**நெய்யோடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்**
**'செய்' யெனத் தாளித்துச் சுப்பென**
**அருந்துவர்;**
**அப்போது நானோ அழுதுகொண்**
**டிருப்பேன்'**

என்றது.

அப்போது காட்டுக் கோழி சொல்லும்- 'முட்டைக்கும் குஞ்சுச் சூப்புக்குமாகவே உனக்கு இரை போடுகிறார்கள். தங்கள் நலத்திற்காக உன்னையும் உன் இனத்தையும் அழிக்கும் அவர்களா உனக்கு நன்மை செய்வார்கள்? நம் சொந்த இருப்பிடமாகிய காட்டிலே பூச்சி புழுக்களை உண்டு நீயும்



உன் உறவும் மகிழ்ந்து வாழலாம். கம்பு போட்டுக் கழுத்தைத் திருகும் வம்பு அங்கில்லை. பற; நம் இருப்பிடம் செல்வோம் என்றது.

'இறக்கை இருந்தும் பறக்க முடியவில்லையே' என்றது வீட்டுக்கோழி!

'அவ்வாறாயின் என் முதுகின் மீது ஏறு; எடுத்துச் செல்வேன் நான்' என்றது காட்டுக்கோழி.

**இது பாவேந்தர் கூறுகின்ற ஓர் உருவகக் கதை. அடிமைப்பட்டவர்கள் தாங்கள் அடிமை என்பதை அறியா நிலையிலும், அறிந்தாலும் உரிமை பெறும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலின் உரிமையோடு வாழ்பவர் அவ்வடிமைகட்குக் கைகொடுத்து உரிமைபெற உதவவேண்டும் என்னும் கருத்தை இக் கதை மூலம் பாவேந்தர் உணர்த்துகிறார்.**

பண்டிருந்த தமிழ்ப் பெயர்கள் பல இடைக்காலத்தில் வடமொழியாக்கப் பெற்றன. தூய தமிழ்ப் பெயர் கொண்டிருந்த பறவைகள், இன்று வடமொழிப் பெயர்களால் அழைக்கப்படுவதை ஒரு பாடலில் பாவேந்தர் சுட்டிக் காட்டுகிறார். கவிஞர் காட்டினுள் செல்கிறார்.

**'முகத்திலே கொடுவாள் மீசை**
**வேடன், என் எதிரில் வந்தான்.**
**அகப்பட்ட பறவை காட்ட,**
**அவற்றின்பேர் கேட்டேன்! வேடன்**
**வகைப்பட்ட 'பரத்து'வாசன்**
**என்பதை 'வலியன்' என்றான்**
**சகோரத்தைச் 'செம்போத்து' என்றான்!**
**தமிழா நீ வாழ்க என்றேன்!**

வேடன் பறவைகட்குத் தூய தமிழ்ப் பெயர் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியால் துள்ளி அவனை மனநிறைவோடு வாழ்த்துகிறார்!

பாவேந்தர் பிறந்த நாள் ஏப்ரல் நாள் 29, அவருடைய நூற்று ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் அவர் காட்டிய தமிழ் வழியில் நடைப்யில்வோம் என உறுதி பூணுவோமாக!



## இறைவனைக் கண்டுகொள்!

உருத்திராட்ச மணிகளை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும், தந்திரமும் ஆடலும், பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து, உன் கடவுளை உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்போரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான் வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைத் தூக்கியெறி! அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் இறைவனைக் கண்டுகொள்!

- தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து



கையெழுத்தை இடுவதற்குக்கூட இன்னும்
கற்கரீத கைகள்தாம் இந்த மண்ணின்
மெய்யெழுத்துச் சரித்திரத்தை எழுதிச் செல்லும்!
மேதினமும் இதையேதான் திருப்பிச் சொல்லும்!

- கவிஞர் வைரமுத்து




நல்வாழ்த்துகள்

ராஜி குரூப் நிறுவனங்கள்

ஈரோடு - 1.


உடல்
காற்றைச் சுவாசிக்கலாம்
உயிர்
சுதந்திரத்தை மட்டுமே சுவாசிக்க முடியும்!

- கவிஞர் மு. மேத்தா




நல்வாழ்த்துகள்

வெள்ளக்கோயில் வட்டார
பஸ் உரிமையாளர் சங்கம்

வெள்ளக்கோயில்





# நீங்களே சொல்லுங்கள்!

சித்திரச்சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே! - முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருந்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே-எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார்-அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?-நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த்தொழிலாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே!-உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?-பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ?-இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை-சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை!

பாவேந்தர்
பாரதிதாசன்





எனக்கு நல்லகாலம் வரும்போது
ஈக்களே! விருந்திற்கு
உங்களையும் அழைப்பேன்

- இசா/ஜப்பான் ஹைக்கூ



அனிபல் கரஷி வரைந்த ஓவியம்

நல்வாழ்த்துகள்
காங்கயம் நல்லெண்ணெய்
உற்பத்தியாளர் சங்கம்
காங்கயம்.

வயல்கள்...நகர்கள்
நடவாள்...சித்தாள்
மாற்றமில்லை வாழ்க்கை

- ஆடலரசன்



ப்ருகல் வரைந்த ஓவியம்

நல்வாழ்த்துகள்
ஈரோடு ஹாய்சரி டையிங்
அசோசியேஷன்
ஈரோடு - 3.

## வாசகர் இதயம்

**வ**ணிக நிறுவனங்களுக்குத் தமிழ்ப்பெயர் இடுவதுபற்றி நீங்கள் வெளியிட்டிருந்த செய்திகள் என்போன்ற ஓவியர்களுக்குப் பெரிதும் உதவுவதாக இருக்கிறது. வருகிற வணிகர்கள் எப்படிப் பெயர் மாற்றுவதுஎனக்குழம்புகிற போது இதன்மூலம் தெளிவு படுத்தி வருகிறேன்.

**கண்.ஸ்ரீராமுலு,**
செம்பொன்னார்கோயில்.

**ஆ**சிரியர் மடலில் பல நல்ல விஷயங்களை எளிமையாகக் காணமுடிகிறது; அதை முதல் பக்கத்திலேயே வெளியிட்டால் என்ன ?

**சி. சிவகோபால்,**
இராமநாயக்கன்பாளையம்.

**த**மிழரசு நல்ல பல தகவல்களை மக்களுக்குக் கொடுத்து வருகிறது நன்றி.

**எம். ஞானசேகர்,**
சென்னை29.

**மா**ணவர்களுக்குத் தவறான செய்திகளைத் தரும் பத்திரிக்கைகளை விடவும்-நல்ல தமிழையும், நல்வழிகளையும் போதிக்கும் தமிழரசு இதழ் தமிழ்போல் சிறக்கட்டும்.

**சத்தியசீலன்,**
இராமானுஜபுரம்.

**எ**ப்போதும் மகிழ்வோடிருக்கப் பெண்கள் அவசியம் படிக்க வேண்டிய இதழ் இது; பணி தொடர எங்கள் ஒத்துழைப்பு எப்பொழுதும் உங்களுக்கு உண்டு.

**ப.ஜெயபாரதி,**
நாவக்குறிச்சி.

**க**ங்கைகொண்டானின் இலக்கிய வெள்ளம் கனவல்ல; காலத்தின் நனவே!

**ப. முருகேசபாண்டியன்,**
நாகூர்.

**த**மிழரசு அரசாங்க இதழாக மட்டுமன்றி அறிவியல் இலக்கிய இதழாகவும் வளரட்டும்; வாழ்க தமிழ்ப்பணி.

**கோ.தமிழ்வேந்தன்,**
சாலய்-சாலினி நூலகம், குடந்தை

'**மா**ணவர்களே வெற்றி நிச்சயம்' பகுதி, படிப்பில் ஆர்வமற்றிருந்த எனக்கு நல்ல ஊக்க மருந்தாக இருந்தது.

**இரா.ஜெயபாலன்,**
பாசார் மேட்டுச்சாலை.

**வே**லை வாய்ப்புச் செய்திகள் வெளியிட்டு வந்ததைத் தொடர்ந்து வெளியிட்டால் என் போன்ற வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

**எம். செல்லையா,**
பாண்டவர்மங்களம்.

**பெ**ரியாரின் விருந்தோம்பல்' இன்றைய இளைஞர்களுக்கு நாளைய வழிகாட்டியாகும்.

**எம். ஏகாம்பரம்,**
பாகாலா.



# மேநாள்



### ஞா. மாணிக்கவாசகன்

மேநாள் மேதினி போற்றும் திருநாள்
உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்தவர்
வாழ்வில் வெளிச்ச விளக்கை ஏற்றிய
வெற்றித் திருநாள் மேநாள் அல்லவா?

குனிந்து குனிந்து கும்பிடு போட்டே
கூன் விழுந்து போனவர் நிமிர்ந்து
உரிமை முழக்கம் எழுப்ப உதவிய
உன்னதத் திருநாள் மேநாள் அல்லவா?

உலகம் தழைக்க உழைத்தவர் நாங்கள்
உருக்குலைந்து கிடப்பது எதனால்?
எங்கள் உழைப்பை உண்டு கொழுப்பவர்
எங்களை ஏய்த்துப் பிழைப்பது எப்படி?

நாயினும் கீழாய் மனிதர்கள் நாங்கள்
நடத்தப்படுவது நியாயமா என்ற
கோரிக்கை முழக்கம் கொடியேற்றம் அல்லவா
மேதின வெற்றித் தேரோட்டம் ஆனது!

கூலிக் காரர்கள் வேலைக் காரர்கள்
என்று தொழி லாளரை எல்லாம்
கேலி பேசிய காலம் மறைந்தது
உழைக்கும் மக்களை உலகம் மதித்தது.

முதலாளி தொழிலாளி என்கின்ற பேதம்
மெதுவாய் மறைந்து இருவரும் இணைந்து
தொழில் உறவு துளிர்த்திடச் செய்தது;
தோழமை உணர்வு வளர்த்திட வைத்தது!

உலகத் தொழி லாளரை எல்லாம்
ஒன்று படுத்திய உற்சாக வாசகம்
மேதினம் எழுதிய சூளுரை என்பதால்
மேநாள் மேதினித் திரு நாளானது!

வயலின் விரித்த பாய்
அமர்ந்து நோக்குவேன்
பளம் மரப்பூக்கள்

- பூசன் - ஜப்பான் ஹைக்கூ



ஈரோப் நாட்டின் பெல்ஜியம் துக்கநாக உருக்காலை

சோளக்காட்டுப் பொம்மை
தொப்பியைக் கழற்றுவதே இல்லை
மன்னர் முன்பும்

- டான்கபா/ஜப்பான் ஹைக்கூ



வெர்மீர் வரைந்த 'தி லேஸ் மேக்கர்'

நல்வாழ்த்துகள்
அண்ணமார் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ்
ஈரோடு.
&
ஸ்ரீ அண்ணமார் ரீரேட்ஸ்,
திருச்செங்கோடு.

நல்வாழ்த்துகள்
மெளர்ல் எக்ஸ்போர்ட்டர்ஸ் ஆர்ட் மெட்டல்
பூந்துறை ரோடு, ஈரோடு - 2.
&
திலகா இரும்புத் தொழிற்சாலை
ஈரோடு - 3.

# திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

**- பேரறிஞர் அண்ணா**



தியாகராயர் பெரிய செல்வந்தர், பணம் படைத்தவர்; தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு இன்றிருப்பதை விட அன்று பல மடங்கு உயர்ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர் நினைத்திருந்தால் சென்னை நகரையே தன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அவர் கூப்பிட்ட நேரத்திலே பணியாற்ற பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக்கூடும். எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டு, களித்து, உல்லாச வாழ்வு வாழ்ந்து, களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதைப் போல், தியாகராயரும் இருந்திருக்கமுடியும்.

மேலும், தியாகராயர் விரும்பியிருந்தால், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலோ, பளிங்கு மண்டபம் கட்டும் வேலையிலோ ஈடுபட்டிருக்கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப் போல் வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்குரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளையெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிட சமூகத்திலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தைவிட்டுத் தாமாகவே கல்லும், முள்ளும், காட்டாறும், கருங்குழியும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார்.

சர். தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைபூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்றுதான், நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கிலும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனை மிகுந்த காட்சியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்ற பிரச்சாரங்களைவிட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப்போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலே பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விஷயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால் முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பி, பின்தான், மத விஷயத்தில் புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்தே அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

தியாகராயர் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். இருட்டறைகளிலும், காட்டு நிலத்திலும், கூட்டம் கூடி, இயேசுநாதர் உபதேசத்தைக் கேட்டு உலகம் உயர்ந்ததுபோல், தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள மெள்ள, ஏழை எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர், மாளிகைகளிலெல்லாம் சென்று, மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன. சர்.தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார்.

தியாகராயர் நம்மைவிட்டுப் பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மை விட்டுப் பிரியாது. சர்.பிட்டி.தியாகராயர் அரும்பாடுபட்டு வளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதினின்றும் வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றிமேல் வெற்றி பெறும்.

(30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தியாகராயர் நினைவுக்கூட்ட உரையிலிருந்து)



நாங்கள்
விசுவரூபத்தின் விதைகள்
கொதிப்படைந்து விட்டாலோ
விசுவரூபங்கள் எங்கள்
வாமன வடிவங்கள்!

- தமிழன்பன்




நல்வாழ்த்துகள்
தாராபுரம் தாலூகா
பஸ் உரிமையாளர் சங்கம்
தாராபுரம்.

# மே தினம்



- சி. மகேந்திரன்

எந்தத் தொழிலாளியும், சூரியன் உதிப்பதற்கு முன்பாகவோ அல்லது மறைவதற்கு முன்பாகவோ தங்கள் குடும்பத்தினரைச் சந்தித்துக் கொண்டதில்லை. பகல் வெளிச்சத்தில் சந்தித்துக் கொள்ள வாய்ப்பற்றவர் மெழுகுவர்த்தியின் மங்கலான வெளிச்சத்தில் ஏக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள். இப்படியாகத்தான் புதிதாகத் தோன்றி, எண்ணிக்கையில் பலவாக உயர்ந்து கொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை அமைந்திருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் இந்த அவலங்களைப் பேசுவதற்குப் பல இலக்கியங்கள் எழுந்தன. மார்க்சிம் கார்க்கியின் தாய், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துன்பம் மிகுந்த சோகங்களைத் தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளவும் புதிய எழுச்சி கொண்டு வர்க்க உணர்வு பெறவும் உதவி செய்தது.

அழுக்கு நிறைந்த இடத்தில் கரப்பான் பூச்சிகள் வசிப்பதைப்போலத் தொழிலாளர்களின் குடியிருப்பு நெருக்கமாகவும், அசுத்தம் நிறைந்ததாகவும் இருந்தது. வயல்வெளிகளில் செழுமையாய் விளைந்து ஆலைக்குள் செல்லும் கரும்பு போலத் தொழிலாளர்கள் ஆலைக்குச் செல்வார்கள். இந்தக் கரும்பு இயந்திரத்தின் பற்சக்கரங்களுக்கிடையே சிக்கி, சாரத்தை எல்லாம் இழந்து சக்கையாக வெளியே தள்ளப்படுவதைப்போல எண்ணெய்ப் பசையும் கரிய புகையும் மிஞ்சிய உடல்களோடு வெளியே தள்ளப்பட்டார்கள்.

மார்க்சிம் கார்க்கியின் 'தாய்' தரும் இந்த விவரங்கள் முற்றிலும் உண்மையைத்தவிர வேறு எதுவுமில்லை என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் நூற்றாண்டு குமுறல் ஒட்டுமொத்தமாக அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் 1886 மே மாதத்தில் வெடித்தது. சிகாகோ நகரம் தொழிலாளர்கள் நிறைந்திருந்தது. சோசலிஸச் சிந்தனை நிறைந்த பலகுழுக்களும் செயல்பட்டன. இந்த முக்கியத்துவம்தான் மே தினப் போராட்டங்கள் தோன்றி உலகையே அதிர்ச்சி கொள்ளச் செய்யக் காரணமாகியது.

சிகாகோ நகரின் எழுச்சிக்கு முக்கிய வழிகாட்டுதல் ஐரோப்பாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இயக்கங்கள் முக்கியக் காரணமாயின. 1848இல் கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை தெளிவுபடுத்தியது. தொழிலாளர்கள் இழப்பதற்கு எதுவுமில்லை - அடிமைச் சங்கிலியைத் தவிர, ஆனால் வெல்வதற்கு ஒரு புது உலகம் காத்திருக்கிறது என்று.

தொழிலாளர்களின் இரண்டாவது அகிலம், தொழிலாளர்களின் மீதான மூர்க்கத்தனமான சுரண்டல் குறித்து, பெரும் கவலையை வெளியிட்டது. 1866ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு 8 மணிநேரம் உழைப்பும், 8 மணிநேரம் உறக்கமும், 8 மணி நேரம் ஓய்வும் தேவை என்றும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அமெரிக்காவின் சிகாகோ நகர் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

சிகாகோ நகரம் மே மாதத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு முன் தயாரிப்புகளாக இருந்தது. உழைக்கும் நேரத்தை 8 மணியாகக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான். மே மாதம் சிகாகோவில் வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது. மே மாதம் முதல் தேதியில் 25 ஆயிரம் தொழிலாளர்கள் குவிந்துவிட்டார்கள்.

தீயைப்போல் எல்லாத் தொழிற்சாலைகளிலும் பற்றிக்கொண்ட இந்தப் போராட்டம் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக சிகாகோவிலுள்ள மைக்ரிப்பேர் தொழிற்சாலையில் நடைபெற்றது. வேறு எந்த சமாதானப் பேச்சு வார்த்தையும் இல்லாமல் வேலை நிறுத்தப் போராட்டத்தை அடக்க முதலாளிகள் போலீஸை முன் நிறுத்தினர். போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் 6 தொழிலாளர்கள் இறந்துபோனார்கள்.

சிகாகோ நகரின் ஹே மார்க்கட் சதுக்கத்தில் தான் தொழிலாளர்கள் அனைவரும், காவல்துறையின் இந்தக் கொடுமையைக் கண்டிக்க, இங்கே கூடிவிட்டார்கள். தொழிற்சங்க அமைப்பு மே மாதம் 3,4 தேதிகளில் பேரணியும், பொதுக்கூட்டம் ஒன்றும் இங்கு நடத்துவது என்று முடிவு செய்தனர்.

தொழிலாளர்கள் மாபெரும் எழுச்சியுடன் திட்டமிட்டபடி எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடைசியாகப் பேச அழைக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் தனது உரையை நிகழ்த்திக் கொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

தொழிலாளர் பெருவெள்ளத்தின் நடுவில் கையால் எறியப்பட்ட ஒரு வெடிகுண்டு வெடித்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் இந்தக் குண்டை வீசியவன் காவல்துறையாலும் முதலாளிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கைக்கூலி என்பது நிரூபிக்கப்பட்டது.





இந்த வெடிகுண்டால் காவல்துறை அதிகாரி ஒருவர் இறந்துபோனார்.கலவரம் வெடித்தது. ஹே மார்க்கெட் சதுக்கமே யுத்த பூமியாக மாறியது. மோதலில் 8 போலீஸ்காரர்களும், 4 தொழிலாளர்களும் கொல்லப் பட்டனர்.

தொழிற்சாலைகளின் செயல்பாட்டை-தொழிலாளர்களைத் தூண்டியதன் மூலம் பெரும் நஷ்டத்தை உருவாக்கியது. சட்டத்திற்குப் புறம்பாக அவர்களைப் பேரணி நடத்தி பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு என்ற பெயரில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச்சதி செய்தது முதலான பல வழக்குகள் தொழிற்சங்கத்தின் முக்கியத் தலைவர்களின் மீது தொடரப்பட்டது. மொத்தம் 27 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் முக்கியத் தலைவர்கள் முறையே 1.பார்சன்ஸ் 2.ஸ்பைஸ் 3.எங்கெல் 4.பிஷர் 5.லிங் 6.பீல்டன் 7.ஷேவ்ரா 8 நிபி ஆகியோர் அடங்குவர். வழக்கு நடைபெற்றதில் முக்கிய தலைவர்களான இவர்கள்தான், இந்த வன்முறையைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதல் ஏழு பேருக்குத் தூக்கு தண்டனையும் பெயர் பட்டியலில் 8வதாக இடம்பெற்ற நிபி இவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

இது அநீதி என்று உலகம் முழுவதும் கண்டனக் குரல் கேட்டது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான கண்டங்களில் கடும் எதிர்ப்பு வெளிப்பட்டது. தண்டிக்கப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக எழுந்தன. இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு விஷயம், உலகின் மாபெரும் சிந்தனையாளர்களான, இங்கர்சால், பெர்னாட்ஷா போன்றவர்களும் இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று குரல் கொடுத்தனர். எழுதியும், பேசியும் இதற்கு ஆதரவு திரட்டினார்கள்.

உலகம் முழுவதும் எழுந்த இந்தக் கண்டன அலையால் அமெரிக்க அரசு சில தலைவர்களின் தண்டனையை மட்டும் குறைக்க முன்வந்தது.

பீல்டன், ஷேவ்ரா ஆகிய இருவரின் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டது. ஆனால் லிங் என்பவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் ஆதாரங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டு சிறைச்சாலையிலேயே அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

உலகத் தொழிலாளி வர்க்கம் எவ்வளவுதான் முயற்சி செய்த போதிலும் அந்த நால்வரின் மரணத்தைத் தடுக்க இயலவில்லை. தோழர்கள் பார்சன்ஸ். ஸ்பைஸ், எங்கெல், பிஷர் ஆகியோர் அமெரிக்க அரசால் தூக்கிலிடப் பட்டார்கள்.

1885 மே1-ல் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக எழுந்த இந்த நாளைத்தான் உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

1890ஆம் ஆண்டு, லண்டனில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் மாமேதை ஏங்கல்ஸ் கீழ்க்கண்டவாறு கூறினார் - ஐரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டுவிட்டார்கள். சட்டப்படி, 8 மணி நேர வேலை என்னும் கோரிக்கையைக் கட்டாயம் பெற்றுவிடுவார்கள்.

1890ல், மே தினம் ரஷ்யாவில் கொண்டாடியபோது, லெனின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தொழிலாளர்களின் உலகம் தழுவிய ஒற்றுமையால் கவனம் கொள்ளாது, ஒரு தனிப்பட்ட தேசமோ அல்லது உலகமோ முன்னேற்றம் பெறுதல் என்பது சாத்தியமில்லை என்று தமது மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

இந்தியாவில் முதன்முதலில் மே தினம் கொண்டாடப்பட்ட இடம் சென்னைதான். தலைசிறந்த சீர்திருத்தவாதியான, ம. சிங்காரவேலர்தான் 1923இல் சென்னை ஐகோர்ட் கடற்கரையில் மே தின விழாவைக் கொண்டாடியுள்ளார்.

1946இல் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் தலைமையில் இயங்கிய இடைக்கால அரசுதான் மே தினத்தை இந்தியத் தொழிலாளர்களின் தினமாக அறிவித்தது.

கலைஞர் தலைமையில் அமைந்த தமிழக அரசும், அதைப் போலவே திரு. வி.பி. சிங் தலைமையில் இயங்கிய மத்திய அரசும்தான் மே தினத்தை அரசு விடுமுறை தினமாக அறிவித்தது.

நாற்று நடும் பெண்கள்
அனைத்திலும் சேறு
அவர்கள் பாடலைத் தவிர!

- ஜப்பானிய ஹைக்கூ




நல்வாழ்த்துகள்

**ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம்**

ஈரோடு.

மனிதனை உழைப்பினை மதிப்போம் - கொடிய
வறுமையை இடரினை மிதிப்போம்
இனியநல் லுலகினைப் படைப்போம் - அங்கே
எதிர்வரும் தடைகளை உடைப்போம்.

- கவியரசு முடியரசன்



நல்வாழ்த்துகள்

**தமிழ்நாடு நல்லெண்ணெய் உற்பத்தியாளர் சங்கம்**

ஈரோடு - 4.

&

**நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

ஈரோடு - 3.

நல்வாழ்த்துகள்

**ஈரோடு தாலுகா பஸ் உரிமையாளர் சங்கம்**

ஈரோடு.



நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே இனி
நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - சம
நீதிக்குப் போர்ப்படை சேர்ப்போம் - இனிப்
பஞ்சை பராரிகள் துஞ்சி இரந்துண்ணும்
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் - நெஞ்சின்
பாரத்தை வேருடன் சாய்ப்போம்!

- கவிஞர் கண்ணதாசன்

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவ்ராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது.

இவ்வாரியம் தமிழகம் முழுமையும் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சி பிரிவுகளும் மற்றும் 19 இடங்களில் தையற் பயிற்சி மட்டும் செயல்பட்டு வருகிறது. மேற்படி தையற்பயிற்சிப் பிரிவுகளில் தொழிலாளர்களைச் சார்ந்த அவர்களது மனைவி, திருமணமாகாத சகோதரிகளுக்கும் தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலங்களில் உதவித் தொகையாக பிரதி மாதம் ரூ.40ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும் மேலும் பிரதி மாதம் ரூ.20ம் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மேலும் ரூ. 20ம் பிரதி மாதமும் ஆக மொத்தம் பிரதி மாதம் ரூ.80 வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்களுக்கான அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும் இதற்கான கீழ்நிலை மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. தவிர, அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 13 இடங்களில் இலவச படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

சென்னையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு / விசாரணை /



பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக வருபவர்கள் தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லம் டி.எம்.எஸ். வளாகம், சென்னை-6ல் கட்டப்பட்டுள்ளது.

காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம், (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிபள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் கீழ்ப்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப்பிரிவினைக் கட்டியுள்ளது.

மேலும் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000/- மற்றும் ரூ.500/- பரிசுத்தொகை வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்காக ரூ.1.68 இலட்சம் 1997-98 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாரியம் 'உழைப்பவர் உலகம்' என்னும் மாத இதழை பிரதி மாதம் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் உழைப்பவர் உலகம் வாசகர்கள், தொழிலாளர்கள் சம்பந்தமாகக்கேட்கும் வினா, அதற்கு ஆசிரியர் அளிக்கும் விடை, தொழிலாளர் நலம் பற்றிய உயர்நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் நலம் பற்றிய செய்திகள், தொழிலாளர் கல்வி நிலையத்தாரால் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் செய்திகள், தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காக அரசு அமைத்த குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் இன்னும் பல செய்திகளைத் தாங்கி இவ்விதழ் வெளிவருகிறது.

**எதிர்காலத் திட்டங்கள்**

தொழிலாளர்கள் சுற்றுலா செல்கையில் தங்குவதற்காக ஊட்டி, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் கட்ட நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1996-97ஆம் நிதியாண்டில் (1.4.96 முதல் 31.3.97 வரை) பயனடைந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட தொகை**

| வரிசை எண் | நலத்திட்டங்களின் விவரம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | 375 | 46,840 |
| 2 | தட்டச்சு / சுருக்கெழுத்துப் பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் வழங்குதல் | 88 | 12,852 |
| 3 | பாடப்புத்தகம் வாங்க உதவித் தொகை | 1244 | 52,675 |
| 4 | தொழிலாளர் ஈமச்சடங்கு உதவித்தொகை | 178 | 53,400 |
| 5 | காது கேட்கும் கருவி வழங்குதல் | 10 | 9,929 |
| 6 | மூன்று சக்கர வண்டி வழங்குதல் (ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு) | 1 | 2,950 |
| 7 | ஊனமுற்ற தொழிலாளர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல் | - | - |
| 8 | பொறியியல் பட்டப் படிப்பு உதவித்தொகை | 47 | 56,400 |
| 9 | மருத்துவப் படிப்பு உதவித் தொகை | 15 | 15,000 |
| 10 | சட்டப் படிப்பு உதவித் தொகை | 2 | 2,400 |
| 11 | பி.எஸ்.ஸி. (விவசாயம்) | 1 | 1,200 |
| 12 | பொறியியல் பட்டயப் படிப்பு | 146 | 1,05,120 |
| 13 | மருத்துவ பட்டயப் படிப்பு | 1 | 720 |
| 14 | தொழிற்பயிற்சி உதவித் தொகை | 62 | 31,000 |
| 15 | மேல்நிலைப் படிப்பு உதவித் தொகை | 65 | 39,000 |



*வயல் விவசாயி*
*படுக்கை...குடை...கடிகாரம்*
*வரப்பில் நிற்கும் மரம்*

*- செ. ஆடலரசன்*



நல்வாழ்த்துகள்
**ஈரோடு நகராட்சி**

# தொழிலும் தொழிலாளர்களும்!

மூலம்: கலீல் ஜிப்ரான்

தமிழில்: முனைவர் நா. அழகப்பன்

எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறித் தனமாக இருப்பது

வாழ்க்கை ஊர்வலத்திலிருந்து வெளியே வருவதற்கு ஒப்பாகும்.

நீங்கள் வேலை செய்கின்ற போது

ஒரு புல்லாங்குழலாக மாறி நல்லிசையை இவ்வுலகிற்குக் கொடுக்கிறீர்கள்!

வேலை செய்பவர்கள் எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து இன்னிசை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்கின்ற போது,

அவர்களிடமிருந்து விலகி நாணல் போல வளைந்து ஊமையாக-சோம்பேறித்தனமாக நீங்கள் இருக்கக்கூடாது.

காலங்காலமாகத் தொழில் என்பது ஒரு சாபக்கேடு என்றும்

அது துரதிர்ஷ்டமானது என்றும் வர்ணிக்கப்பட்டு வருகிறது.

அது தவறான கருத்தாகும்.

இந்த உலகத்தில் உங்களுக்கென்று சில கடமைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

நீங்கள் தொழில் செய்வதன் மூலம்

அந்தக் கடமையைச் செய்த திருப்தியை அடைகிறீர்கள்.

உங்கள் பணியைச் செய்கின்ற போது

நீங்கள் வாழ்க்கையின் இன்பத்தை அறிந்து கொள்வீர்கள்.

அந்த வாழ்க்கை இன்பமே வாழ்வின் இரகசியமாகும்.

பிறப்பு என்பது துன்பமயமானது

என்று கருதுவீர்களேயானால்

அது தவறான கருத்தாகும்.

உங்கள் நெற்றியிலிருந்து விழக்கூடிய வியர்வைத் துளிகள்

உங்களது தலையெழுத்தையே மாற்றியமைக்கும் வல்லமையுடையவை-!

மறந்து விடாதீர்கள்.

வாழ்க்கை என்பது

இருள் மயமானது என

உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

வாழ்வில் ஏற்படும் அலுப்பினாலும், அசதியினாலும்

அதை நீங்கள் சரியென்று எண்ணி இருக்கக்கூடும்.



விருப்பத்தோடு முயற்சி செய்தால் வாழ்வின் இருளைப் போக்கிக் கொள்ளலாம்.

பிரியத்தோடு உங்களது தொழிலை மேற்கொண்டால்

நீங்கள் ஆண்டவனுக்குப் பிரியமானவர்கள் ஆகிறீர்கள்.

ஒரு துணியை நெய்கின்ற போது

உங்களுக்கு மிகப் பிடித்தமான ஒருவர்

அந்தத் துணியை அணிந்து கொள்ளப் போகிறார்

என்ற எண்ணத்துடன் நெய்யுங்கள்.

ஒரு வீட்டைக் கட்டுகின்றபோது

அந்த வீட்டில் உங்களுக்குப் பிடித்தமான

ஒருவர் வாழப் போகிறார் என்று எண்ணுங்கள்.

அன்போடு விதைகளை விதையுங்கள்.

அவை தானியங்களாக வளர்ந்த பின்னர்

அவற்றை மகிழ்ச்சியோடு அறுவடை செய்யுங்கள்;

அந்தத் தானியங்களை

உங்களுக்குப் பிரியமான ஒருவர்

உண்ணப் போகிறார் என எண்ணுங்கள்.

நிலத்தை உழுது பயிர் செய்யும் விவசாயியை விட

சலவைக் கல்லால் கட்டிடம் கட்டும்

கலைஞர் உயர்ந்தவரெனச்சொல்கிறீர்கள்.

உங்கள் கால்களுக்குச்

செருப்புகளைத் தைத்துக் கொடுக்கும் தொழிலாளியை விட

துணிக்கு வண்ணக் கலவையிடும் தொழிலாளி

உயர்ந்தவரெனச் சொல்கிறீர்கள்.

நான் சொல்கிறேன்

எந்தத் தொழிலும் இழிந்தது அல்ல;

எல்லாத் தொழிலாளிகளும் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்களே!

உங்களுடைய தொழிலை

உங்களால் பிரியத்தோடு செய்யமுடியவில்லையா?

அப்படியானால் நீங்கள் உங்கள் தொழிலை விட்டு விட்டு

கோயிலின் வாயிலருகே மகிழ்ச்சியோடு அமர்ந்து கொண்டு

வேலை செய்பவர்களிடமிருந்து பிச்சையே பெறலாம்.

நீங்கள் ஒரு ரொட்டித் துண்டை

வெறுப்போடு சுட்டுத் தயாரிப்பீர்களேயானால்

அந்த ரொட்டித் துண்டு

ஒரு மனிதரின் முழுப் பசியையும் தீர்க்காது.

அது அந்த மனிதரின் அரைப்பசியைத் தான் நீக்கும்.

நீங்கள் வெறுப்போடு

திராட்சை ரசத்தைத் தயாரிப்பீர்களேயானால்

உங்களது வெறுப்பால்

அந்தத் திராட்சை ரசம் விஷமாகவே மாறி விடுகிறது.

ஒரு பாடலை நீங்கள் பாடுகின்றபோது

வெறுப்போடு பாடுவீர்களேயானால்

அந்தப் பாடல், கேட்பவர்களுக்கு ஒரு பிடிக்காத சப்தமாகவே அமையும்!

அந்தச் சப்தம் பகல் - இரவு

ஆகிய இரண்டின் அமைதியையும் கெடுக்கும்.

*(மகிழ்ச்சியான வாழ்விற்கு கலீல் கிப்ரான் அறிவுரைகள்-என, த.நா. இயற்கை மருத்துவ சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவுநிதி, மதுரை - 625 020 தயாரித்த நூலிலிருந்து.)*

பிரம்படிக்குப் பயந்து
மாடுமேய்க்கும் சிறுவன்
கையில்...புல்லாங்குழல்

- செ. ஆடலரசன்



நல்வாழ்த்துகள்

**ஆஸ்ரம் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி**

கொல்லம்பாளையம், ஈரோடு - 2.

நல்வாழ்த்துகள்

**காங்கயம் வட்டம் - வெள்ளக்கோயில் வட்டார பஸ் உரிமையாளர்கள் சங்கம்**

வெள்ளக்கோயில்.



மரக்கிளையில் குழந்தை
வரப்பில் பண்ணையார்
பயிரில் சிந்துகிறது பால்

- அறிவுமதி

# உழைப்பாளர்சிலை

'உழைப்பின் வெற்றி' சிலை 25.1.1959 அன்று சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டது. இந்தச் சிலையினை அப்போதைய ஆளுநர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள், பெருந் தலைவர் காமராஜ் அவர்களது தலைமையில் திறந்துவைத்தார்.

இச் சிலையினை வடிவமைத்தவர் திரு.தேவி பிரசாத் ராய் செளத்திரி. இவர் கிழக்கு வங்கத்தில் பிறந்தவர். ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இந்திய அரசினால் 'பத்மபூஷன்' விருதளிக்கப்பட்டு, கௌரவிக்கப் பட்டவர்.



*இங்கே,*
*உழைப்பாளர்கள்*
*சிலையில் கூட*
*உழைத்துக் கொண்டுதான்*
*இருக்கிறார்கள்!*

**- பொன் செல்வ கணபதி**



# துறைதோறும் தொழிலாளர் நலன்.

### தொழில் துறை

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படாதிருக்கப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITI) தொடங்கப்படும். இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவர்.

வளர்ந்துவரும் தொழில் வாய்ப்புகளைக் கருதி,இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் சென்னை புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ் சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் புதிய தொழில் மையங்களைத் தொடங்கிட அரசு திட்டமிட்டிருக்கிறது.

### தொழிலாளர் நலத்துறை

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக் குறித்து, அண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நிறைவேற்றும் முகத்தான் - 'குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதி' ஒன்றினை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த அரசு முடிவெடுத்திருக்கிறது; அறுவடைக் கூலி பணமாகவோ அல்லது அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் எட்டில் ஒரு பங்காகவோ அளிக்கப்படும்; இது பற்றிய அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

கட்டிடத் தொழிலாளர்கள் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குத் தீர்வுகாணத் தனித்தனியே குழுக்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் நலத்திட்டம் முதல்கட்டமாக - சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியற்ற நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு, அரசின் நலத்திட்டங்கள் சென்றடைய வேண்டுமென்பதால் - திட்டச் சலுகைகள், மாநிலம் முழுதுமுள்ள கட்டிடத் தொழிலாளர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன், தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், நலச்சட்டம் மற்றும் திட்டங்களை மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் வேலை பார்க்கும்போது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகை ரூ.50 ஆயிரம் வழங்கப்படும்; அத்துடன் ஈமச் சடங்கிற்கென ரூ.500 அரசால் அளிக்கப்படும்.

கட்டுமானத் தொழிலில் ஈடுபடுவோர் மக்கட் செல்வங்களுக்குப் பாதுகாப்பளிக்கின்ற வகையில், இந்த ஆண்டு முதல், சென்னை, மதுரை, கோவை மாநகரங்களில் முதல் கட்டமாகக் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்படவிருக்கிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கவும், அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் நலத் திட்டங்களை அமல்படுத்தவும் கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ்வரும் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், தமிழ்நாடு மருத்துவ மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள், இரசாயன உரத்தொழில், செக்யூரிட்டி கார்டுகள் ஆகிய 4 தொழில்களையும் குறைந்தபட்ச கூலிச் சட்ட அட்டவணையில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதனால் 68 என உள்ள அத்தொழில்களின் எண்ணிக்கை 72 ஆக உயரும்.

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், நலத்திட்டம் முதல் கட்டமாகச் சென்னை, மதுரை, கோவை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு (கல் உடைப்பவர்கள், பாரம் தூக்குபவர்கள், கைவண்டி இழுப்பவர்கள்) இ.எஸ்.ஐ.பெறுவதற்கு, அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது.

மூடப்பட்டிருக்கும் 34 ஆலைகளைத் திறப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்தில் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் 2வது இடத்தில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1000 மற்றும் 500 பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திருச்சி, வேலூர், செங்கல்பட்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சி.என்.சி. இயந்திரங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மகளிருக்கான தோல் தைத்தல் குறித்த குறுகிய காலப்பயிற்சி கிண்டி மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் துவக்க அரசு ஆணை வழங்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் புனர்வாழ்வு நிதியை மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கும் பாதிக் கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வனத்துறை**

கடந்த ஆண்டு மட்டும் 11 ஆயிரம் ஏக்கர் அளவில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், புதிய காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன; சமூகக்காடுகள் மற்றும் வனத்துறையில் பணிபுரியும் நிரந்தரமற்ற ஊழியர்கள் 5,200 பேர்களுக்கும் சம்பள உயர்வு அளிப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

தேயிலைத் தோட்டக் கழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டு தினக்கூலிகளாக இருந்த 800 பேர்களைப் பணிநிரந்தரம் செய்து அவர்கள் குடும்பம் வாழ வகை செய்யப்பட்டிருக்கிறது.

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 11,000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இதன் மூலம் 2,244 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வனவரிலிருந்து வனச்சரகராகப் பதவி உயர்வு பெற, வனக் கல்லூரியில் ஓராண்டு பயிற்சி பெறுதல் வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, 51, வனவர்களுக்குப் பதவி உயர்வு தரப்பட்டது.

**வேளாண்மை**

வேளாண் தொழிற்கல்விப் பாடத்தை 1997-98ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தவும், இந்த வேளாண் தொழில் கல்விப் பாடத்தை வேளாண் பட்டதாரிகளைக் கொண்டு நடத்துவதோடு, இப்பணிக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படும் இவர்கள் பள்ளிகளில் இந்த வேளாண் பாடத்தோடு விஞ்ஞானப் பாடங்களான தாவரவியல், விலங்கியல், இரசாயனம், பௌதிகம் போன்ற பாடங்களையும் நடத்த அனுமதிப்பது என அரசு முடிவு செய்திருக்கிறது.

**மீன்வளம்**

மீனவர்களுக்கு, இந்த ஆண்டில் ஒரு விளக்குடன் கூடிய 4000 வீடுகளைக் கட்டித் தர அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கடல் மீனவர்களுக்கு மட்டுமன்றி, உள்நாட்டு மீனவர்கள் 500 பேருக்கு இந்த நிதியாண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மீனவர்களின் இறப்பு, முழு ஊனம் அடையும் நிகழ்வுகளில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.25



ஆயிரத்தில் இருந்து ரூ.35,000 ஆகவும்-பகுதி ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.12 ஆயிரத்திலிருந்து ரூ.17,500 ஆகவும் வழங்க மத்திய அரசு சம்மதித்து இத்திட்டம் 25.3.97 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து வழங்கும் ரூ.35 ஆயிரத்திற்கும் மேலான கூடுதல் காப்பீட்டுத் தொகை ரூ.15 ஆயிரத்தை - மாநில அரசே ஏற்றுக்கொண்டு ரூ.50,000-ஐ இறக்க நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கும், நிரந்தரமான ஊனமுற்றவர்களுக்கும் தமிழக அரசே வழங்கிடும்.

சேதமடைந்துள்ள மீனவர் வீடுகளைப் பழுதுபார்க்க ஒரு வீட்டிற்கு ரூ.5000 வீதம் ரூ.100 கோடியைத் தமிழக அரசு வழங்கியிருக்கிறது.

மீன்பிடிப்பு குறைவாக உள்ள 4 மாதங்களில், மீனவர்களுக்கு நிவாரணமளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினரும் ஒரு மாதத்திற்கு ரூ.45 வீதம் 8 மாதங்களுக்கு ரூ.360 செலுத்துவர்; இதற்கீடாக மத்திய அரசு ரூ.360ம், மாநில அரசு ரூ.360ம் என ஆக மொத்தம் ரூ.1,080 மீன்பிடிப்புக் குறைவாக உள்ள மாதங்களில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 1997-98 முதல் மத்திய அரசு இதில் பங்கேற்க முன்வரவில்லை. ஆகவே, இதை ஒரு மாநில அரசுத் திட்டமாகச் செயல்படுத்தும் வகையில் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ரூ.360 உடன் மாநில அரசின் பங்காக ரூ.360-ஐ சேர்த்து, இனி மொத்தம் ரூ. 720 மீனவர்களுக்கு வழங்கப்படும்.

வங்காள விரிகுடா திட்டத்தின் கீழ், விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள இந்த நிதி ஆண்டில் அரசு ரூ.10 இலட்சம் வழங்க முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாடு அண்மைக் கடல் பகுதியில் இரண்டு இடங்களில் ரூ.8 இலட்சம் செலவில் மீன் உறைவிடங்கள் இரண்டு அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

1996-97ல் பாரம்பரியப் படகுகளை இயந்திர மயமாக்குவதற்காக அரசு ரூ.11 கோடிக்குச் செலவின அனுமதி வழங்கியிருக்கிறது.



தூத்துக்குடி துறைமுகத்தில் பிடிக்கப்படும் மீன்களை ஏலம் விட, கூடுதலாக ஒரு மீன் ஏலக்கூடம் ரூ.13.20 இலட்சம் செலவில் இந்த நிதியாண்டில் அமைக்கப்படும்.

மல்லிப்பட்டினம் துறைமுகத்தைச் சிறப்புப் பழுது பார்க்க ரூ.17.30 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதேபோல், நாகை-காயிதேமில்லத் மாவட்டம் பழையாறு மீன்பிடி துறைமுகச் சீரமைப்பிற்காக ரூ.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மீனவக் கிராமங்களில் 36 இணைப்புச் சாலைகள் அமைக்க அரசு ரூ.100 இலட்சம் செலவிட ஒப்புதல் வழங்கியுள்ளது.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 50-க்கு இயந்திரம் பொருத்திய மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கி 1996-97ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது; அதேபோல் நடப்பு நிதியாண்டில், 50 மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.35,000 விலையில் இயந்திரம் பொருத்திய 50 மூன்று சக்கர சைக்கிள் வாங்கி இனாமாக வழங்க ரூ.17.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

16,350 மீனவர்களுக்கு விரைவில் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களும், வலைகளும் வழங்கப்படும்.

1997-98ல் சென்னை, கடலூர், குமரி ஆகிய இடங்களிலிருந்து இயங்கும் விசைப்படகு மீனவர்களுக்கு 200 தகவல் தொடர்புச் சாதனங்கள் வாங்க 25 விழுக்காடு மானியம் அளிக்க ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**சமூக நலத்துறை**

மகளிர் தொழில் முனைவோருக்குத் தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கும் புதிய திட்டப்படி குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ.50 ஆயிரத்திற்குள் பத்து சதவிகிதத் தொகை மானியமாக வழங்கப்பட உள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்ற ஆண்-பெண் இருபாலருக்கும் முறைப்படி தையல் தொழிலை சுயவேலை வாய்ப்பாகக் கொண்டு தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள 2,000 தையல் இயந்திரங்கள் சென்ற ஆண்டு போலவே வழங்கப்படும்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மாநிலம் முழுவதும் நீட்டிக்க முடிவுசெய்துள்ள நமது அரசு, நடப்பு ஆண்டில் 14 மாவட்டங்களில் ரூ.2.40 கோடி செலவில் மூன்று இலட்சம் மகளிர் பயன்பெறும்படி இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இதற்காக 1,418 மேற் பார்வை யாளர்களும், 144 அமைச்சுப் பணியாளர்களும் ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவர். முழுமைக்கும் இதனை விரிவுபடுத்த ஐந்தாண்டு காலத்திற்கு ரூ.1,440 கோடி நிதி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள் பணியிடங்கள் காலியிருப்பதை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஏழை, எளிய ஊனமுற்ற பெண்களைக் கொண்டு அரசு நிரப்பும்.

மகளிர் தொழில் பயிற்சி மற்றும் பொருள் உற்பத்தி நிலையங்களில் உள்ள பயனாளிகளுக்கு உதவும் வகையில் ஆண்டுக்கு - அரசுக்கு ரூ.10,800 கூடுதல் செலவாகும்.

1996-97ஆம் ஆண்டுக்கு, 3000 ஏழை எளிய பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

**கைத்தறிகள்-கைவினைப் பொருட்கள் துணிநூல் மற்றும் கதர்த்துறை**

மூடிய கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்கவும், நலிந்த நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ரூ.12 கோடி வழிவகை கடனாக நிதியுதவி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் மூலம் குடும்பத்திற்கு ரூ.10,000 வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.




நெசவாளர் சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க ஒரு குழு அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

நெசவாளர்களுக்கு 1.4.1997 முதல் 10 சதவீதம் அகவிலைப்படி உயர்வு கொடுக்கப்பட உள்ளது.

கோஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

கடந்த ஆண்டு பெய்த பெரு மழையினால் பாதிக்கப்பட்ட நெசவாளர் துயர் துடைக்க, இந்த அரசு ரூ.1.02 கோடி வழங்கியுள்ளது.

சேலத்தில் இயங்கிவரும் இந்தியக் கைத்தறித் தொழில் வளர்ச்சி நிறுவனத்திலிருந்து வெளிவரும் சிறந்த மாணவனுக்குப் பரிசுத் தொகையான ரூ.5000ஐ 1997-98 நிதியாண்டு முதல் ரூ.10,000ஆக உயர்த்தித்தர அரசு திட்டமிட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள் இறக்கும்போது வழங்க இருக்கும் கருணைத் தொகையை 3000 ரூபாயிலிருந்து ரூ.5000 ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, காசநோய், புற்றுநோய் போன்ற மருத்துவச் சிகிச்சைகள் மேற்கொள்ள, வரும் நிதியாண்டிலிருந்து ரூ.10 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு**

400 கால்நடை கிளை நிலையங்களில் வேலை இல்லாத கால்நடை மருத்துவப்பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்ப் பண்பாட்டுத் துறை**

சவகர் சிறுவர் இல்லங்களில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு முன்னதாகத் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் இதனை மாற்றம் செய்து, பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தற்பொழுது நாளொன்றுக்கு ரூ.30 வீதம் தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. தினக்கூலி ஊதிய முறையை மாற்றி, தொகுப்பூதியமாகத் திங்கள் தோறும் ரூ.900 வழங்கப்படும். வாரம் ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறையும் வழங்கப்படும். அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 12 நாட்கள் சிறுவிடுப்பு வழங்கப்படும்.

1997-98ஆம் ஆண்டுத் திட்டத்தில் கல் வெட்டாய்வாளர் பதவிகளை உதவி இயக்குநர்களாக நிலை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

ஆறு மாநகராட்சிகளிலும் மொத்தம் 200 ஆதிதிராவிட மகளிருக்கு ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவதில் பயிற்சி அளித்து, ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தந்து, 'தாட்கோ' மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்குவதற்கு மானியமும், கடனுதவியும் அளிக்கப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட-பழங்குடி பட்டதாரி இளைஞர் 50 பேர்களுக்குக் கணினிப் பயிற்சி மையம் அமைக்க மானியமும் கடனும் 'தாட்கோ' மூலம் வழங்கப்படும்.

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷா பழுது நீக்கும் பட்டறைகள் அமைக்க 50 'ஆதிதிராவிடப் பழங்குடியின இளைஞர்களுக்கு, ஒரு நபருக்கு ரூ.7 இலட்சம் மானியமும், கடனும் வழங்கி, இத்திட்டம் 'தாட்கோ' மூலம் செயல்படுத்தப்படும்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழித்து, அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கான நிவாரண நிதியுதவிகளை வழங்குவதற்கு அரசு ரூ.50 இலட்சம் அனுமதித்துள்ளது. கொத்தடிமைகள் கணக்கெடுப்பிற்காக ரூ.15 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்தகைய தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு விடுவிக்கப்படும் குடும்பங்களுக்கு, உடனடி நிவாரணமாக ரூ.1000மும் நிரந்தர வருமானம் ஈட்டித் தரக்கூடிய தொழில்கள் துவங்க 100 சதவீத மானியமாக ரூ.9000மும் வழங்கப்படுகிறது.

**இந்து சமய அறநிலையத்துறை**

பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள திருக்கோயில்களில் நாதசுர மங்கள இசை மீண்டும் முழங்க, முதற்கட்டமாக 25 நிதி வசதியற்ற புராதனத் திருக்கோயில்களுக்கு நாதசுர இசைக் குழுவினருக்கு (நாதசுரம், தவில், தாளம்) முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் சம்பளம் வழங்கத் துறை நிதியிலிருந்து நிதி உதவி செய்து அதற்கான நியமனங்கள் விரைவில் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம் செய்திடவும், அவர்களைத் திருக்கோயில்களில், இலக்கிய சமயச் சொற்பொழிவுகள் நடத்திடவும், நூல்களைக் கண்காணித்தல், தலவரலாறுகளைத் தயாரித்தல் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்த அரசு முடிவு செய்து, முறைப்படி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு, நேர்காணல் தேர்வு நடத்தப்பட்டது. விரைவில் 150 திருக்கோயில்களில் தகுதிபடைத்த புலவர்கள் நியமனம் செய்யப்படுவர்.



**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி**

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில், அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டங்கள் கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 738 அடுக்கு மாடி வீடுகள் சுமார் ரூ.24 கோடி மதிப்பீட்டில் 'ஹட்கோ' நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

சென்னை நகரில் சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 240 அடுக்கு மாடி வீடுகளும், பட்டினப் பாக்கத்தில் உள்ள பழைய அடுக்கு மாடி வீடுகளை இடித்துவிட்டுப் புதிதாக 192 அடுக்கு மாடி வீடுகளும், இரண்டாவது கட்டப் பணியாகக் கூடுதலாக 80 குடியிருப்புகளும், அரசினர் தோட்டத்தில் சுமார் 250 அடுக்குமாடி வீடுகளும் கட்டப்படும். அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் பகுதிகளில் 192 வீடுகளும், மொகப்பேர் பகுதியில் 88 வீடுகளும் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.




அரசு ஊழியர்களின் ஓட்டுநர்கள் மற்றும் கடைநிலைப் பணியாளர்களாக உள்ளவர்களின் வாடகை, வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி போன்ற பெரிய நகரங்களில் ஒரு தனித்திட்டம் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாகச் சென்னையிலும், மதுரையிலும் ரூ.150 இலட்சம் செலவில் 100 அடுக்குமாடி குடியிருப்புகள் இந்த ஆண்டு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு உள்ள வாடகைக் குடியிருப்புகள் போதுமானதாக இல்லை. முதற்கட்டமாக 15 மனைப்பரப்பில் 48 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் கட்ட ரூ.201 இலட்சம் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய நிதி 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.

பணியில் இருக்கும்போது உயிர் நீத்த வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஆறு இளநிலை உதவியாளர்கள் மற்றும் 12 அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவிகளின் பணிநியமனம் அளிக்க வாரியம் முடிவு செய்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

பிற்படுத்தப்பட்டோர் 150 பேருக்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் 100 பேருக்கும் ஆக மொத்தம் 250 பேர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது. இதற்கென ஆகும் முழுச் செலவினத்தையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. 1997-98ஆம் ஆண்டுக்கு ரூ.21.20 இலட்சம் செலவிடப்படும். இதனால் உயர் கல்வி பெறாத ஏழை, நடுத்தர மக்களுக்கு வேலை பெறும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது. தட்டச்சு/சுருக்கெழுத்து மற்றும் தொலைபேசி/தொலையச்சு இயக்கம் ஆகியவற்றிலும் இவ்வகுப்பினர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, குறிப்பாக ஏழைப் பெண்கள் வேலை பெற்றிடும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது.

ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள்ளிருக்கும் 1000 முடி திருத்துவோருக்கு முடிதிருத்தும் கருவிகள் அடங்கிய கைப்பெட்டிகள், 6000 சலவைத் தொழிலாளருக்குப் பணிதேய்ப்புப் பெட்டிகள், 1000 பேர்களுக்கு, கல்லுடைக்கும் கருவிகள் வழங்கப்படும். இவ்வின மக்களுக்கு முடிதிருத்தகங்களும், சலவை நிலையங்களும், நடமாடும் சலவை நிலையங்களும் அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டங்களுக்காக 1997-98ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.85.84 இலட்சம் செலவிடப்படும்.

**கதர் கிராமத் தொழில்கள் வாரியம்**

நெசவாளர்கள் தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் அடிப்படையில், நடப்பு ஆண்டில் மட்டும் 1000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மத்திய, மாநில அரசு மானியமாக ரூ.190 இலட்சம் வழங்க உள்ளது.

நெசவாளர்களுக்குக் காசநோய் மருத்துவச் செலவிற்காக ரூ.1500ம், கண் பரிசோதனைக்கு ரூ.190ம், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும். 50 கைத்தறி நெசவாளர்கள் உள்ள பகுதிக்கு ஒரு ஆழ்துளைக் கிணறும், பெண் நெசவாளர் பேறுகால நிதியுதவியாக ரூ.500ம், நெசவாளர் கருத்தடை உதவித்தொகையாக ரூ.100ம் வழங்கப்பட்டு 150 நெசவாளர் குடும்பங்கள் உள்ள கிராமப் பகுதிக்கு ரூ.1 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதல்முறையாக 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரூ.150 ஒய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதல் கொடுத்துள்ளார்கள்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1997-98ஆம் ஆண்டில் திட்டப் பகுதியிலுள்ள பழங்குடியினருக்குத் தைலம் வடிகட்டும் கருவிகள், தேனீப் பெட்டிகள் வழங்குதல் மற்றும்

பயிற்சியளிக்க ரூ.49.61 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

கோவை மாவட்டம் கலிக்கநாயக்கன்பாளையத்தில் கடந்த 17 ஆண்டு காலமாக மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலை செப்பனிடப்பட்டு, விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் 500 பனைத் தொழிலாளர்களுக்குப் புதியதாக வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

மாதவரத்தில் 6 ஆண்டு காலமாக மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலையினை இன்னும் 2 மாதத்தில் திறக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் அப்பகுதியிலுள்ள 500 பனைத் தொழிலாளர்கள் புதிதாக வேலைவாய்ப்புப் பெறுவர். கடப்பாக்கத்தில் 1993 முதல் செயல்படாமல் மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலையினை வரும் மே மாதத்தில் திறந்து உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 500 பேருக்குப் புதியதாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும். மாத்தூரில் உள்ள பனஞ்சீனி ஆலை சீரமைக்கப்பட்டு, தற்போது முழுவேகத்தில் உற்பத்தியினைச் செய்து வருகின்றது. இத்திட்டத்தில் 500 நபர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

வாரியத்தின் கீழ் செயல்படும் 11 பனந்தும்பு பிரஷ் உற்பத்தி அலகுகளில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி அதன் வாயிலாக 1000 பனைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திட அரசு ஆவன செய்துள்ளது.

பதநீர் விற்பனையை அதிகப்படுத்தி இதன்மூலம் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு, அரசு இலவச வீடுகளைக் கட்டித்தரும் திட்டத்தினைப் போன்று, முதற்கட்டமாக ஒரு வீட்டிற்கான திட்டச்செலவு ரூ.30,000 வீதம் 500 வீடுகளுக்கு ரூ.1.50 கோடிக்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்களின் மூலம், சுமார் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 5 திட்டங்களுக்கு ரூ.19.47 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இதில் பதநீர் பக்குவப்படுத்தும் பிரிவு தொடங்குதல், தூரிகை தயாரிப்புப் பிரிவு தொடங்குதல், சர்க்கரை ஆலை பழுதுபார்க்கும்பணி, ஆகியவை அடங்கும்.

பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமலிருந்த தண்டையார்பேட்டை தொழிலாளர்களுக்கான 300 குடியிருப்பில் பழுது பார்த்து அடிப்படை வசதி ஏற்படுத்தித் தருவதற்கு ரூ.8.36 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தண்டையார்பேட்டை குடியிருப்பில் கழிவு நீர் வெளியேற்றுதல், மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளுக்காக ரூ.2.3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



சேலம் அரசு அச்சகத் தொழிலாளர்கள் பணியாற்றுமிடத்தில் வெப்பத்தின் கடுமையைப் போக்க எக்சாஸ்ட் பேன்கள் பொருத்த ரூ.1.5 இலட்சமும், இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர்களுக்காக சைக்கிள் ஷெட்/உணவருந்தும் இடம் கட்ட ரூ.1.5 இலட்சமும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை**

நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களில் ஆண்களுக்கு வழங்கும் சீருடையுடன் சுகாதாரத்திற்காகத் தலையில் கட்டிக்கொண்டு பணிபுரிய வழங்கப்படும் துணி, பெண் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

**ஊரகத்துறை மற்றும் பதிவுத்துறை**

கிராமப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் மூலப் பொருட்கள் அடிப்படையிலும், மற்ற தேவைகளின் அடிப்படையிலும், அப்பகுதிவாழ் மக்கள் வேலை வாய்ப்புப் பெறும் வகையிலும், இப்பகுதிகளிலும் ஊரகத் தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் நோக்கத்துடனும் குறைந்தது 5 ஏக்கர் அளவு நிலத்தில் சிறு தொழில் கூட்டுறவுப் பேட்டைகள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

**போக்குவரத்துத் துறை**

போக்குவரத்துத் தொழிலாளர்களின் மீதுள்ள சிறிய குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்க, அனைத்துப் போக்குவரத்து நிர்வாக இயக்குநர்களுக்கும் கடிதம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் தொழிலாளரிடம் ரூபாய் 10 பிடித்துக்கொண்டு, குடும்ப நல நிதியை ரூ.1 இலட்சமாக உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறது.

**வருவாய்த் துறை**

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்காக நில அளவர்/வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், பிரிவு எழுத்தர் உள்ளிட்ட பல பதவிகளில் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட பணியாளர்கள், இத்திட்டம் முடிவுறும் தருவாயில், அவர்களுக்குப் படிப்படியாகப் பல துறைகளில் பணி வழங்கப்பட்டது. தற்போது 1175 நபர்கள் தொகுப்பூதியப் பணியாளர்



களாகவே இருந்து வருகின்றனர். இவர்களது அதிகபட்சத் தொகுப்பூதியம் மாதம் ரூ.800 ஆகும். இவர்களது பொருளாதார நிலை, வயது மற்றும் நீண்ட கால அனுபவத்தைக் கருத்திற்கொண்டு அவர்களை முறையான சம்பள ஏற்ற முறைப் பணியிடங்களில் பணியமர்த்த அரசு கருதியுள்ளது. நில அளவை மற்றும் அனைத்துத் துறைகளிலும் அவர்களை நியமிப்பதற்காக மிகைப் பணியிடங்கள் தோற்றுவித்து, அப்பணியிடங்களில், கல்வித் தகுதிக்கேற்ப எல்லாத் தொகுப்பூதியப் பணியாளர்களையும் நியமனம் செய்யலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பால்வளம்**

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையின்படி, தொழிற்சங்கத்




தலைவர் மற்றும் தொழிலாளிகளின் வேண்டுகோளுக்கிணங்க 420 நபர்களுக்கு வேலை தரப்பட்டு, இதுவரை 300 நபர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள்.

**கல்வித்துறை**

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனித்துறையாக இயங்கி வருகின்றது. இந்தத் துறைக்கு இயக்குநர் உண்டு. இங்குள்ள ஆசிரியர்கள் தொடர்ந்து 5 ஆண்டு 10 ஆண்டு காலம் இந்தத் துறையிலேயே இருந்து பணியாற்றும் நிலை இப்போது இல்லை. அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள், அதைவிட உயர்ந்த பதவி கிடைக்கும்போது மாறிச் சென்றுவிடுகின்றார்கள். அதனால், அரசு இப்போது அந்தத் துறையிலே பணியாற்றுகிற ஆசிரியர்களும் தனித்துறையாகவே இருக்கவேண்டுமென்று தீர்மானித்து அந்தத் துறைக்கு யார் யார் விருப்பம் தெரிவிக்கின்றார்களோ, அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அதிலே தகுதியுடையவர்களைத் தெரிந்து அவர்களைக் கொண்டு அந்தத் துறை தனித்துறையாக நடக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறது.

இப்போது Guest Lecturer, Hour Lecturer என்று பல கலை அறிவியல் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே நியமிக்கப்படுகிற முறை விரைவில் மாற்றப்பட்டு நிரந்தரமாகப் பணி செய்யக் கூடியவர்கள் நியமிக்கப்படுவார்கள்-அல்லது அவர்களுக்கு ஊதிய உயர்வு தரப்பட்டு, 50 ரூபாய்க்குப் பதிலாக 80 ரூபாயும், 60 ரூபாய்க்குப் பதிலாக 100 ரூபாயும் தரப்பட்டு அவர்களுடைய பணி மேலும் செம்மைப்படுத்தப்படும்.

ஏற்கெனவே வேலை நிறுத்தம் செய்த ஆசிரியர்களுக்கு அவர்கள் வேலை நிறுத்தம் செய்த அத்தனை நாட்களும் அவர்களுடைய விடுமுறை நாட்களாகக் கருதப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதைமாற்றி, அவர்கள் வேலை செய்த நாட்களிலே 12 நாட்கள் பணியினால் ஈடுசெய்து விட்ட காரணத்தால், அந்த 12 நாட்களை ஈடுசெய்த நாட்களாக ஏற்றுக்கொண்டு மிச்சம் இருக்கின்ற 7 நாட்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய விடுப்புக் கணக்கில் சேர்த்துக்கொள்ளலாம் என்று அரசு தீர்மானித்து அறிவித்துள்ளது.

இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என்று இரு பிரிவு இருந்தது. சுமார் 10,000 இளநிலை ஆசிரியர்கள் தங்களை இடைநிலை ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். 1971ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக இடைநிலை ஆசிரியர்களாக மாற்றி ஏற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில் 5,500

நபர்கள் அப்படி இடைநிலை ஆசிரியர் பணித்தகுதி பெற்றார்கள். விட்டுப்போன 6000 நபர்களுக்கு இப்போது இடைநிலை ஆசிரியர் என்ற தகுதி 1973 முதல், அவர்கள் அந்தப் பணியிலே இருந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஊதிய உயர்வு வழங்கப் படுகிறது. இதனை நடைமுறைபடுத்தப் படுகிறபோது ரூ.3.5 கோடி அரசுக்குச் செலவு ஏற்படும்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் சீருந்து, ஈருருளி இவைகளை வாங்குவதற்கு, அரசு ஆசிரியர்களைப் போலவே, முன்பணம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

நூலகத்துறையில் உள்ள மூன்றாம் நிலை நூலகருக்கான பணித் தகுதிகள் முடிவு செய்யப்பட்டு, காலியாக உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பதவிகள் நிரப்பப்பட உள்ளன.

பள்ளியில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சீருடைப்படி 150 ரூபாய் என்பது போன்று, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் ரூ.150 சீருடைப்படியாக வழங்கப்பட்டது.

**பொதுப்பணித்துறை**

பொதுப்பணித்துறையில், குறிப்பாகப் பாசனப் பிரிவு ஊழியராக இருப்பவர்கள் பாசன உதவியாளர்கள். இவர்களை 'லஸ்கர்' என்றால்தான் யாவருக்கும் புரியும். இந்தத் துறையில் இவர்களின் எண்ணிக்கை 2,502. இதில் 1,424 இடங்கள் பல ஆண்டுகாலமாக நிரப்பப்படாமல் உள்ளது. பொதுப்பணித்துறையில் 3031 மஸ்தூர்கள் உள்ளனர். இந்த மஸ்தூர்களிலிருந்து 1424 நபர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து, பாசன உதவியாளர்களாக அமர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

10 ஆண்டுக்கு மேல் தினக்கூலியாகப் பணியாற்றிவந்த 715 நபர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவித்து ஆணையிடப்படும்.

**உணவுத்துறை**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம், நிலங்களுக்கு மட்டும்தான், விவசாயிக்கு மட்டும்தான் என்றில்லாமல், விவசாயிகள் புதிய இல்லங்களைக் கட்டிக் கொள்வதற்காக, வீட்டு மனை வாங்க ரூ.20,000 கடனும், இருக்கின்ற வீடுகளைப் பழுதுபார்க்க ரூ.50,000 கடனும், புதிதாக வீடுகட்டிக் கொள்ள ரூ.1 இலட்சம் வரை கடனும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் இருக்கும் கிட்டத்தட்ட அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன. மிச்சமிருக்கும் ஓரிரு வங்கிகளின் ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்படும்.

**எச்சரிக்கை**

*மரங்களை வெட்டினான்*
*மனிதன்!*
*சொன்னது பூமி*
*'நீ வெட்டுவது*
*உன்*
*சுவாசப் பைகளை'!*

**சுதந்திர கீதம்**

*கிளி ஜோசியக்காரனிடம்*
*கேட்டேன்*
*'கிடைக்குமோ விடுதலை*
*உன்*
*கிளிக்கு?'*

- பேரா. க. இராமசந்திரன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927



*விடிந்துவிடு இரவே*
*விழித்திருக்கிறான்*
*கூர்க்கா*

- அறிவுமதி



ப்ருகல் வரைந்த ஓவியம்

நல்வாழ்த்துகள்:
குப்பண்ணா புரூ மெட்டல்ஸ்
குருக்கத்தி.
&
ஸ்ரீ கிருஷ்ணா மில்ஸ்
காங்கேயம்.




நடவுநடும் பெண்கள்
எல்லாம் சேறு
அவர்கள் பாடல்களைத் தவிர

- ஜப்பான் ஹைகூ

நல்வாழ்த்துகள்

**பெரியார் மாவட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

காங்கயம்.

&

**காங்கயம் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

காங்கயம்.

&

**வெள்ளக்கோயில் வட்டார தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

வெள்ளக்கோயில்.





**தூய**
பட்டு

**தூய**
சரிகை

கம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்




தமிழரசு
பதிவு எண் M. [illegible]
Licence No.TN/MS(C)[illegible]

## தொழிலாளர் நலம்பெற அரசின் அறிவிப்புகளில் சில....!

[illegible]வாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகை ரூ.25,000/- ஆக [illegible]ர்வு.

நடப்பாண்டில் மீன[illegible]களுக்கு 4000 வீடுகள்.

610[illegible] மீனவர்கள் பயனடைய ரூ.11 கோடி [illegible] இயந்திரங்கள்.

மூடப்பட்டிருக்கும் [illegible] ஆலைகள் [illegible]க்க முயற்சி.

[illegible]குமரி மாவட்டத்தில் 11,000 ஏக்கர் [illegible]ப்பில் அரசு ரப்பர் கழகம். 2,244 [illegible]களுக்கு வேலை வாய்ப்பு.

[illegible]பாண்டில் 14 மாவட்டங்களில் ரூ.2.40 கோடி செலவில் மூன்று இலட்சம் மகளிர் பயன்பெற திட்டம்.

தமிழ்நா[illegible] [illegible]ப்புத் தொழிலாளர் நலச்சட்டம் மாநிலம் முழுமைக்கும் விரிவு.

பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறந்தால் வாரிசுதாரர்க்கு உதவித் தொகை ரூ.50 ஆயிரம்.

# தமிழரசு

16-5-1997



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆய்வகம்
16 ஜூன் 1997
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை 600 008

ஓராண்டு
சாதனை
மலர்

ரூ. 3.00







# கலைஞர் ஆட்சியின்









# 1 ஆண்டு பணிகள் தொகுப்பு



தமிழரசு

திருவள்ளுவராண்டு 2028
வைகாசித் திங்கள் 2
மலர் : 27 இதழ் : 22
16.5.1997
விலை ரூ.3/-



2 & 4ஆம்
அட்டைப்படங்கள் உதவி :
திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.

# சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!

**வேளாண்மைத் துறை**

- விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைத்திடும் வகையில் வாணி பத்தைச் சீரமைத்து மேம்படுத்திட 9 இடங்களில் புதிய வணிக வளாகங்கள். விளை பொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு, விற்பனைக் குழுக்களின் நிதியிலிருந்து இலவச மருத்துவ வசதி வழங்கிட முன்னோடித்திட்டம், முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நடைமுறை படுத்தப்படும்.

- மஞ்சளுக்குப் பெயர் பெற்ற ஈரோடுக்கு அருகில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் மூலம் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசு முடிவு.

- தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் கூட்டு முயற்சியாக ரூ.125 இலட்சம் செலவில் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

- மழை வளத்தைப் பெருக்கவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் சீரமைக்கவும் இவ்வாண்டு 75 ஊராட்சி ஒன்றியங்களில் சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

- இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த உடன் அதன் அடிப்படையில் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

- வேளாண்மையைச் சார்ந்த தொழில்களான மலர், காய்கறி, காளான் வளர்ப்பு மற்றும் அவற்றின் ஏற்றுமதிக்குக் கடனுதவி வழங்க நபார்டு நிறுவனம் ஓர் அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தை நிறுவியுள்ளது. இந்தியாவிலேயே இந்தத் திட்டம் தொடங்கப்படுகிற மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.

- உலக வங்கி உதவியுடன், தமிழ் நாட்டின் வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்காக, ரூ.103.79 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- இராமநாதபுரம், காமராஜர், நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில்-டென்மார்க் நிதி உதவியுடன் ரூ.41 கோடி செலவில் காற்று அரிப்பைத் தடுக்கும் வகையில் புதியதோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.






**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

- கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென நடப்பாண்டில் இலவச வீட்டு மனைத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




- நலிவுற்ற மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பினருக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு, கடந்த ஆண்டில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நடப்பாண்டில் ஒதுக்கீடு ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டது.

- கிராமப்புறங்களில் வாழும் முன்னேறிய வகுப்பினருக்கும் இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 3 கள்ளர் நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

- 10 கள்ளர் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட வசதிகளும் கூடுதலாக 3 கள்ளர் பள்ளிகளில் 10 வகுப்பறைகளும் கட்டப்படும்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய கல்வித் துறையிலும், சமுதாயத் துறையிலும் பின்தங்கியுள்ள மக்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதற்கான முறையில், சட்டரீதியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் தேவையான முயற்சிகள் எடுக்கவும் இந்த அரசு உறுதி ஏற்றுள்ளது.

**பால் வளத்துறை**

- காரைக்குடி பால் பண்ணையில் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டரிலிருந்து 60 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டது.

- சிவகங்கை மற்றும் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையங்களின் குளிரூட்டும் திறன், நாளொன்றுக்கு 20 ஆயிரம் லிட்டரிலிருந்து 30 ஆயிரம் லிட்டராக அதிகரிக்கப்பட்டது.

- திருநெல்வேலி பால் பண்ணையின் திறன் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது.

- சங்கரன்கோயில் பால் குளிரூட்டும் நிலையத்தின் திறன், நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டது.

**பத்திரப் பதிவுத்துறை**

- ரூபாய் ஆயிரத்திற்கு மேற்படாத மதிப்புள்ள சொத்து உரிமை மாற்ற, விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு.

- முத்திரைத் தாள்கள் அதன் முகப்பு விலையில் வழங்கப்படும். முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கான தரகுத் தொகை அதிகரிக்கப்படும்.

- முத்திரைத் தாள்கள் எளிதாக, கட்டுப்பாடு இன்றி, உரிய விலைக்குக் கிடைக்கச் செய்ய சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முத்திரைத் தாள் விற்பனை மையம்.
- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, புதுப்பிக்கப்படும் ஆவண எழுத்தர் உரிமங்களும், ஓராண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் நகல் எழுத்தர் உரிமங்களும் இனி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க நடவடிக்கை. மற்ற மாநிலங்களில் தமிழகத்திலுள்ள சொத்துக்களைப் பதிவு செய்வதன் மூலம் ஏற்படும் வரி இழப்பினைத் தவிர்க்க, பத்திரப் பதிவுச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**ஆதி திராவிடர் நலத்துறை**

- முதுகலைப் பட்டம் பயில்வோருக்கு ஆதி திராவிடர் நலத்துறையின் சார்பில் இதுவரை விடுதி கட்டித் தரப்படவில்லை. சென்னையில் விடுதி கட்டித் தரப்படும்.
- விடுதிகளில் சேர விரும்பும் ஆதி திராவிட மாணவ மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.14 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்படும்.
- ஆதி திராவிட மக்களின் நல்வாழ்வுக்கு அரும் பணியாற்றிய சுவாமி சகஜானந்தாவிற்குச் சிதம்பரத்தில் நூற்றாண்டு விழா நினைவகம் கட்ட ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு.
- அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான காலியிடங்கள் இரண்டு மாத காலத்திற்குள் நிரப்பப்படும்.
- இந்திய ஆட்சிப் பணி தேர்வுக்கான முன்னேற்றத் தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயில்வோருக்காக உணவுக் கட்டணம் ரூ.400-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படும்.
- தமிழ்நாடு தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கான விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் இவற்றைச் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு.
- ஆதி திராவிட மாணவர்களுக்காக நடப்பாண்டில் ரூ.1.70 கோடி செலவில் 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். ஐந்து நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படும்.




**ஊனமுற்றோர் நலன்**

- உடல் ஊனமுற்றோரை சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாகச் செயல் பட வழிவகை செய்ய நடப் பாண்டில் எல்லா மாவட்டங் களிலும் மறுவாழ்வு மையங்கள் தொடங்கப்படும்.
- பேருந்துகளில் சாதாரண வழித் தடங்களில் மாத்திரமல்லாமல் - விரைவுப் பேருந்து வழித் தடங்களிலும், கண்ணற்றோர், கால்முடமானோர் ஆகிய ஊன முற்றோருக்கு இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.



- வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள- ஊனமுற்றவர்களுக்கு செயற்கைக்கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும்.




**சத்துணவு**

- சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை, மத்திய அரசின் ஐந்தாவது நிதிக்குழுவின் அறிக்கை மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு மாநில அரசின் அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும்.
- இந்த ஆண்டு ஐம்பது சத்துணவுக் கூடங்களில் மகளிர் நல மையங்கள் தொடங்கப்படும். இங்கே மகளிர், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், சுயவேலைவாய்ப்பு பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

**சமூக நலம்**

- கிராமப்புறங்களில், பெண்கள் சுகாதாரம், சத்துணவு, குடும்பநலம், சுயவேலை வாய்ப்புப் பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வழி வகை செய்ய, சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு 50 சத்துணவுக் கூடங்களில் மகளிர் நல மையங்கள் தொடங்கப்படும்.
- குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ.50,000 வரம்புக்குள் பத்து சதவீதத் தொகை மானியமாக வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் உதவியுடனான, வாணியம் சார்ந்த பெண் தொழில் முனைவோர் உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் TREAD எனப்படும் திட்டம், முதற்கட்டமாகச் சென்னையில் 5000 பெண்களைத் தேர்ந்தெடுத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் அவர்களுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் மற்றும் வாணிபத்தினைத் துவங்க நிதி உதவி செய்யப்படும்.
- 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தொகை' 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்வு.
- கடந்த ஆண்டு பத்துக் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதற்கு மாறாக-இந்த ஆண்டிற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கி, 20 ஆயிரம் மணமக்கள் உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை 300 ரூபாயிலிருந்து, 500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- கலப்புத் திருமண தம்பதியருக்கு வழங்கப்படும் 'அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்ட'த் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது.

**தமிழ் ஆட்சி மொழி-பண்பாடு**

- ஐந்தாம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (Part-I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2வது பாகமாக (Part-II) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய்மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழி வகை செய்யப்படும்.

- சிறு வயதிலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவிக்கப் புதுமுயற்சியாக 5 மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்படும்.

- தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்கு காப்புநிதி வழங்கவும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**கைத்தறி**

- கடந்த ஆண்டு அரசு பொறுப்பேற்ற நேரத்தில் தமிழகத்தின் 18 கூட்டுறவு நூற்பாலைகளும் இயங்க முடியா நிலையில் நட்டத்தில் இயங்கின. ஆனால் தற்போது 8 கூட்டுறவு நூற்பாலைகள் இலாபத்தில் இயங்கிவருகின்றன.

- நெசவாளர்க்குத் தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் மட்டும் 1000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

- கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் நலன் காக்கப் புதிய ஜவுளிக் கொள்கை ஒன்று விரைவில் அறிவிக்கப்படும்.

- இந்தியாவிலேயே முதன்முறையாக 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரூ.150 ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை.

- கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 1000 வீடுகள் கட்ட நபர் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் என வழங்கி வந்த கடன் தொகை ரூ.45 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. கைத்தறி நெசவாளர் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு கருணைத் தொகை ரூ.3000-லிருந்து ரூ.500-ஆக உயர்த்தப்படும்.

- பருத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க - கைத்தறி, விசைத்தறி, மின்துறை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக விரைவில் தமிழகத்தில் முதல் தடவையாக ஜவுளிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.



- கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.15,000_லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்படுகிறது.

**காதி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை**

- கோவை மாவட்டம் கலிக்க நாய்க்கன் பாளையத்தில் கடந்த 17 ஆண்டு காலமாக மூடிக் கிடந்த பனஞ்சீனி ஆலை செப்பனிடப்பட்டு திறக்க நடவடிக்கை.






- மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான சுமார் 600 பனை மரங்கள் கடந்த 6 ஆண்டு காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்துவந்தன. அப் பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பதநீரை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- மாதவரத்தில் மூடிக் கிடக்கும் பனஞ்சீனி ஆலை அடுத்த 2 மாதத்தில் திறக்கப்படும். இதன் மூலம் அப்பகுதியிலுள்ள 500 பனைத் தொழிலாளர்கள் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவர்.

- கடப்பாக்கத்தில் 1993 முதல் செயல்படாமல் மூடிக்கிடக்கும் பனஞ்சீனி ஆலை வரும் மே மாதத்தில் திறக்கப்படும். இதனால் அப்பகுதியிலுள்ள 500 பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

- நலிவடைந்திருந்த, மத்தூர் பனஞ்சீனி ஆலை சீரமைக்கப்பட்டு தற்போது ஆலை உற்பத்தியினைத் தொடங்கி உள்ளது.

**ஊரகத் தொழில்**

- தொழில் முனைவோர்க்கு நிதி உதவி மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க டி.ஐ.ஐ.சி-சிட்கோ இணைப்புத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

- ரூ.552 இலட்சம் செலவில் மைய அரசின் உதவியுடனும், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும், கோவை மாவட்டம் பல்லடம் பகுதியில் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் கூட்டுறவு தொழிற்பேட்டை.

- கிராமப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் மூலப் பொருட்கள் மற்ற தேவைகளின் அடிப்படையிலும் அப் பகுதிவாழ் மக்கள் வேலை வாய்ப்புப் பெறும் வகையிலும் குறைந்தது 5 ஏக்கர் அளவு நிலத்தில் தொழில் கூட்டுறவுப் பேட்டைகளை, முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் அமைக்க நடவடிக்கை.

- பல்வேறு துறைகளிடமிருந்து சட்டரீதியான அனுமதிகளை விரைவில் பெற, ஒருமுனைத் தீர்வுக்கு மாற்றி அமைக்கப்பட்டு, 'சிறுதொழில் குறை தீர்க்கும் குழு' எனப்படும் புதிய குழுவாக்கப்பட்டது.

- மகளிர் தொழில் முனைவோர், குறிப்பாக முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுவதில் அடையும் சிரமத்தைக் களைய் அவர்களுக்குத் திட்ட மதிப்பில் 10 விழுக்காடு அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் ஈட்டுத் தொகையாக மானியமாக வழங்க முடிவு.

- இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் சுமார் 4000 தொழில் நிலையங்களுக்கு ரூ.21 கோடி உதவியளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.29.04 கோடியில் சுமார் 5000 தொழில் நிலையங்களுக்கு மேலும் உதவியளிக்க முடிவு.

- ஆர்வமுள்ள, தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்க கிண்டியில் ஒரு தொழில் முனைவோர் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

- தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் நிலம் கையகப்படுத்தும் இருங்காட்டுக்கோட்டையில், சுமார் 100 ஏக்கர் நிலம் பெறப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க 'சிட்கோ' நடவடிக்கை.
- ஆவடி அருகே வெள்ளத்தூர் மற்றும் பொத்தூர் அருகே 339 ஏக்கர் அரசு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு தொழிற்பேட்டை ஒன்று உருவாக்கப்படும். நடப்பாண்டில் குறைந்தது 50 தொழிற்கூடங்களும் 100 மேம்படுத்தப்பட்ட மனைகளும் அமைக்கப்படும்.
- ஆவடி மற்றும் ஒசூரில் குறுந்தொழில் முனைவோர்க்குத் தொழிற்கூடங்கள் கட்ட முடிவு. நடப்பாண்டில் 100 தொழிற்கூடங்கள் கட்ட நடவடிக்கை.
- கிண்டி திரு.வி.க.தொழிற்பேட்டையில் 2 இடங்களில் தொழிற்கூடங்கள் கட்ட சிட்கோ முடிவு.

**இந்து சமய அறநிலையத்துறை**

- இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகத்தைச் சீர் செய்யும் முதற்கட்டப் பணியாக, திருக்கோயில் நிர்வாக வாரியத்தையும் மாவட்டக் குழுக்களையும் கலைத்துவிட்டு இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகம் அரசு அலுவலர்களான ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் வகையில் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 1500 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் வழங்க ஆணை.
- இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975ஆம் ஆண்டில் துவக்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் அப்போது 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. ஆனால் இடைக்காலத்தில் அரசு மானியம் வழங்கப்படவில்லை. தற்போது 22 கோயில்களில் 735 ஆதரவற்ற குழந்தைகளுடன் திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன. இந்தக் கருணை இல்லங்களுக்காகும் செலவில் 50 சதவீதத்தை இனி அரசே ஏற்கும். நடப்பாண்டில் மேலும் 875 சிறுவர் சிறுமியர்களைக் கொண்ட 25 கருணை இல்லங்கள் புதிதாக அமைக்கப்பட உள்ளன. இவற்றில் 15 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கானவையாகும்.
- அரசின் கொள்கைக்கேற்ப, இந்து சமயத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த வசதியற்றவர்கள் திருமணத்திற்காகத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து, திருமணம் ஒன்றிற்கு ரூ.3 ஆயிரம் வரை செலவிடப்படுகிறது. இவ்வகையில் 50 திருமணங்கள் இதுவரை நடைபெற்றுள்ளன. மேலும் 157 மணமக்களுக்கு 'இலவசத் திருமணங்கள்' செய்வதற்கான பெயர்ப் பட்டியல் வரப்பெற்றுள்ளது.




- பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் மத நல்லிணக்க

தொடர்ச்சி 54ஆம் பக்கம்



தொகுதிக்கு ஒரு
நவீன கிராமம் -
'அண்ணா மறுமலர்ச்சித்
திட்டம்' காணும்
அரசினை வாழ்த்துகிறோம்!




நல்வாழ்த்துகள்
**சக்தி பீட்ஸ் மாட்டு தீவனங்கள்**
கோபி

# முன்னேற்றப்பாதையில் தமிழகம்

- திரு. ஆலடி அருணா
சட்டத்துறை அமைச்சர்

தமிழக மக்கள், சென்ற ஆண்டு நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவின்பின் அமைந்த இந்த அரசுக்கு அமோக ஆதரவு நல்கி வருவதை அனைவரும் அறிவீர்கள். நாங்களும், எங்கள் அரசும் இந்தத் தீர்ப்பு எங்கள் கொள்கைகள் மீது மக்களுக்குள்ள நம்பிக்கை மீண்டும் உறுதிப் படுத்துவதாகவும், தமிழ்நாடு இழந்த பெருமையை மீண்டும் பெற அளித்த நல்வாய்ப்பாகவும் கருதுகிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தேசிய அளவில் நிலவிய அரசியல் நிலவரத்தைக் கருதிப் பார்ப்பது நலம். பொறுப்பேற்ற நாளில் இருந்தே நாங்கள் இதற்காக எங்களை அர்ப்பணித்துக் கொண்டோம். உண்மையான கூட்டாட்சித் தத்துவக் குறிக்கோளுடன் அமையக்கூடிய ஆட்சியை மத்தியில் ஏற்படுத்த அன்றைய சூழல் நல்லதொரு வாய்ப்பினை நல்கியது. ஐக்கிய முன்னணி என்பது இந்தியாவில் நிலவும் பல்வேறுபட்ட சமூக கூட்டு வார்ப்பாக அமைந்துள்ளது. இந்தியாவில் குறைந்த பட்சத் திட்டம், இப் பரந்த நாட்டின் எண்ணிறந்த சமூக அரசியல் நடப்பியல்களின் ஆவல்களைப் பிரதிபலிக்கிறது. எதிர்பார்த்தபடி தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மத்திய மாநில அரசுகளின் உறவு முக்கிய இடம் பெற்று வருகிறது.

மாநிலங்களுக்கு அதிகத் தன்னாட்சி உரிமைகளை வழங்குவதன் மூலமே பல்வேறு இன சமுதாயங்களின் வேறுபட்ட நலன்களைக் காக்க இயலும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

"செய்வதைச் சொல்வோம்; சொல்வதைச் செய்வோம்" என்ற கொள்கையில் இவ்வரசு நம்பிக்கை கொண்டுள்ளது. அதிகாரப் பரவல் தேவைகளை நாங்கள் நம்புகிறோம். இவ்வரசு, பொறுப்பேற்ற சில தினங்களுக்குள்ளாகவே, உள்ளாட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, தேர்தல் நடத்தியது. உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ளது. இந்த அமைப்புகளுக்குப் போதிய நிதி வழங்கியுள்ளது. திட்டங்களை உருவாக்குதல், நிறைவேற்றுதல், கண்காணித்தல் ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் கிராம சபைகளையும் ஈடுபடுத்த



நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் தமிழ்நாட்டில் உண்மையான உள்ளூர் சுய ஆட்சி மலரும்.

அரசு மீது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால் அரசு அமைப்புகளிலுள்ள ஊழல் பெருச்சாளிகளைக் களையெடுப்பதுடன், அரசு அமைப்பு முறையில் மாற்றங்கள் செய்யவும் வேண்டும் என்பதை உணர்ந்த இந்த அரசு - பல புதிய கொள்கைகள், திட்டங்கள், நடைமுறை மாற்றங்களைச் செய்து வருகிறது. அவற்றில் சில வருமாறு:



1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதன் காரணமாக இனிமேல் பொதுமக்கள் எளிதில் அரசை அணுகி, தகவல்களைப் பெறமுடியும். இதுவரை சிலருக்கு மட்டுமே இது சிறப்புரிமையாக இருந்து வந்தது.
2. கண்ணியமான வாழ்க்கை நடத்த மக்களுக்குத் தேவைப்படும் அடிப்படை உரிமைகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய, மனித உரிமை ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. சாதி மோதல்களை முளையிலேயே கிள்ளி எறிந்து அதனைப் பரவவிடாமல் தடுக்க காவல்துறையில் அதிவிரைவுப்படை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்படிவங்கள் கிடைத்துவந்து, எங்கும் பரவலாக இருந்து வந்த ஊழல் மலிந்த தனி ஒப்பந்தப்புள்ளி முறை ஒழிக்கப்பட்டு விட்டது. ஒளிவு மறைவற்ற ஒப்பந்த நடைமுறை குறித்த சட்டம் ஒன்று நிறைவேற்றப்படவுள்ளது.
4. முன்னாள் ஆட்சியாளர்களின் தங்கச் சுரங்கமாக விளங்கி வந்த நியமன அடிப்படையில் சுரங்கம் வெட்டும் உரிமை அளிக்க வகை செய்யும் சிறு கனிம விதிகளில் 39ஆம் விதி திருத்தப் பட்டுவிட்டது. இனி, இந்தச் சுரங்க உரிமை பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
5. நிருவாகத்தில் புரையோடியுள்ள ஊழல்களை ஆழ்ந்து ஆய்வு செய்யவும், முறையான மாற்றங்களைத் தெரிவிக்கவும் நீதிபதி இராமானுஜம் கமிஷன் நியமிக்கப்பட்டது.
6. நிலவரி நிருவாகத்தைப் புதிரான சிக்கலானதாக இன்றி எளிமையாக்கவும், நடைமுறை திருத்தங்களைத் தெரிவிக்கவும், மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.
7. மாநிலத்தின் புஞ்சை நில மேம்பாட்டிற்கான வழிவகைகளைத் தெரிவிக்க இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமியைத் தலைவராகவும், உலக அளவில் புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளரான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்றவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு, நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.
8. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி நிலையை மேம்படுத்த முதலமைச்சர் தலைமையிலான உயர்நிலைக்குழு அவ்வப்போது நாட்டின் முன்னணி தொழிலதிபர்களுடன் கலந்தாலோசித்து வருகிறது.
9. "தொழில் பகுதி மேம்பாட்டு அமைப்பு" ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் பெறும் ஏற்பாடு, ஆகியவற்றுக்கு, தொழில்களை விரைந்து செயல்படுத்த தேவையான அனைத்து அனுமதிகளையும் உள்ளூரிலேயே வழங்க அதிகாரம் பெற்றுள்ளது. மாநிலத்தின் தொழிற்பேட்டையில் இது இடம்பெற்றுள்ளது.
10. அமைப்பு ரீதியில்லாத துறைகளைச் சேர்ந்த தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
11. இம்மாநிலத்தின் வரி அமைப்பினை எளிதாக்கி முறைப்படுத்த திரு. சி.தங்கராசு, (ஓய்வுபெற்ற இ.ஆ.ப. அதிகாரி) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. விற்பனை வரி அமைப்புகளைத் திருத்தியமைப்பது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துரைகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.
12. இம்மாநிலத்தில் பத்திரப்பதிவு நடைமுறைகளை ஒழுங்குபடுத்த ஒரு நிபுணர் குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் கருத்துரைகள் முனைப்புடன் பின்பற்றப்படுகின்றன.

இந்த அரசு, அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டாகும். இம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் இத்தகைய பல்வேறு திட்டங்கள் இம்மாநிலத்தில் தொழில் வர்த்தகத் துறைக்கு இந்த அரசு மீதுள்ள நம்பிக்கையை வெளிபடுத்துகின்றன.

### ஒரு புதிய தொழிற் சூழல்

தொழில் முனைவோர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் மாநிலத்தின் தொழிற் கொள்கைகள் செம்மையாகவும் தெளிவாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒன்று மின்சக்தி என்பதை உணர்ந்துள்ள காரணத்தால், இருபது சிறு மின் உற்பத்தித் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பதினோரு இடங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் மிகக் குறுகிய காலத்தில் முடிவு செய்யப்பட்டது ஒரு சாதனையாகும்.




ஒருவழி அனுமதி, புதிய பலனுள்ள திட்டம் ஒன்றின் கீழ் முன்னோடியாக மாநிலத்தின் தொழில் நகரியங்களில் ஒரு முனையில் புதிதாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்குத் தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு வகைசெய்யும் ஒரு தனிச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலை மூலப்பொருட்கள் உதிரி பாகங்கள், உற்பத்திக்குத் தேவைப்படுகிற ஏனைய இரு பொருட்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், பணி நிறைவுபெற்ற பொருட்களுக்கான விற்பனை வரியுடன், விற்பனை வரி வீதங்கள் குறைக்கப் பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் பல்வேறு உள்நாட்டு அங்காடிகளில் போட்டியை உருவாக்கும். இதனால் விற்பனை அதிகரிக்கும்.

முடிவெடுக்கும் நடைமுறையை விரைவு படுத்துவதற்கு இயலும் வகையில் பல்வேறு நிலைகளில் அதிகாரம் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

சிறந்த அடிப்படை வசதி, நீண்ட கண்ணோட்டமும், ஒத்துணர்வும் கொண்டதாக உண்மைத் தன்மையுடனும், கடமைப் பற்றுடனும், கடும் பணிபுரியும் திறமை மிக்க தொழிலாளர்கள், பொறுப்பும் - ஆளும் தன்மையுங்கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள், வெளிப்படையாக முடிவெடுப்பதை ஊக்குவிக்கும் விதிகள் நடைமுறைகள் ஆகியவை தமிழ்நாட்டில் பாதுகாப்பாகத் தொழிலில் முதலீடு செய்ய விரும்புகிறவர்கள் தங்களது முதலீடுகளைச் செய்ய ஏற்ற இடம் தமிழ்நாடுதான் என்ற நிலைக்குவர வழி வகுக்கும்.

**பெரிய தொழில் திட்டங்கள்**

கடந்த ஓராண்டில், இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகள் பலனாக, நம் மாநிலத்தில் பின்வரும் பெரிய தொழில் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

1. முதல் ஓராண்டிலேயே 1,25,000 கார்கள் தயாரிப்பதற்கு ஏற்றவாறு தென் கொரியாவின் ஹுண்டாய் மோட்டார்கார் தயாரிப்புத் திட்டம்.
2. ப்ளோட் கிளாஸ் தொழிற்சாலைகள் இரண்டு. இங்கிலாந்தின் பில்கிங்டனிலிருந்து ஒன்று, மற்றொன்று, பிரெஞ்சு நாட்டில் செயின்ட் கோபெயினிலிருந்து.
3. கொரியா நாட்டின் ஹம்ஹோ டயர்கள் திட்டம்.
4. இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தின் உடலுழைப்புடன் கூடிய லான்சர் கார் தயாரிப்புத் திட்டம்.
5. அசோக் லேலண்டின் விரிவாக்கத் திட்டம்.
6. டிஏஎப் விரிவாக்கத் திட்டம்.
7. மோட்டார் வண்டி தயாரிக்கும் மூன்று இடங்களில் மகேந்திரா போர்ட், ஹீண்டாய் மற்றும் மிட்சுபிஷி ஹிந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

நம் அரசு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்து புதிய முதலீடுகளைப் பெறுவதற்குச் சில நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலுள்ள தனியார் துறை, தொழில் பூங்காக்கள், முதல் தரமான நெடுஞ்சாலைகள், நவீன துணை நகரங்கள் மின் உற்பத்தித்





திட்டங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில், தனியார் துறை முதலீட்டைப் பெற்றுத் தருவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

புதிய எண்ணூர் துறைமுகத்தைச் சுற்றியுள்ள சுமார் 7,000 ஏக்கர் நிலத்தில், பெட்ரோலிய இரசாயனத் தொழில்களுக்கான தொழில் அரங்கம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. திரவ இயற்கை எரிவாயு முனையமும், இணைந்த மின் உற்பத்தி நிலையமும் இங்கு தொடங்கப்படும். பெட்ரோலிய இரசாயனத் தொழில்களுக்குத் தண்ணீர் மிக முக்கியமான இடுபொருளாக விளங்குவதால், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை நன்னீராக மாற்றுவதற்கு, சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நன்னீர் புதிய பெட்ரோலிய இரசாயன மற்றும் ஏனைய வளாகங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலும், அண்டை மாநிலங்களிலும் வளர்ந்துவரும், மோட்டார் வண்டி தயாரிப்பாளர்களுக்கு உலக அளவில் தரமான கண்ணாடி, மோட்டார் வண்டி துணைப்பாகங்கள் எளிதில் கிடைப்பதற்கு இயலும் வகையில் சென்னைக்கு அருகில், மோட்டார் வண்டி துணைப்பாகத் தயாரிப்புப் பூங்கா ஒன்றைத் தொடங்கவும் 'டிட்கோ' நிறுவனம் உத்தேசித்துள்ளது. பாரம்பரியமாக மோட்டார் வண்டித் துணைப்பாகங்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு வந்தபோதிலும், புதிய துணைப் பாகத் தயாரிப்புத் தொழிற் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மாபெரும் வாய்ப்பு உள்ளது.

கடலூர், குளச்சல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும், ஏனைய இடங்களிலும் நவீன வசதியுடைய துறைமுகங்களை ஏற்படுத்துவதில் பங்குபெறத்தனியார் துறையை வரவேற்க அரசு கருதுகிறது. சென்னைத் துறைமுகத்திலிருந்து எண்ணூருக்கும், சென்னைத் துறைமுகத்திலிருந்து தாம்பரத்திற்கும் மேனிலை விரைவுப் போக்கு வரத்துச் சாலை அமைக்கும் பணி மேற் கொள்ளப்படும். தனியார் துறை முதலீட்டைக் கொண்டு விரைவுப் போக்குவரத்துச் சாலை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தனியார் துறையினர், சாலையைப் பயன்படுத்தும் வண்டிகளிலிருந்து சுங்கவரி வசூலிக்கலாம். வேளாண்மை சம்பந்தப் பட்ட தொழில்கள் மலர்ச்செடி வளர்ப்பு, உணவு பதப்படுத்தல் ஆகியவை முக்கியத்துவம் அளிக்க



வேண்டிய துறைகளாகக் கண்டறியப் பட்டுள்ளன. இந்தத் துறைகளில் புதிய திட்டங்களை ஏற்படுத்த 'டிட்கோ' நிறுவனம் தீவிர அக்கறை கொண்டுள்ளது.

எஸ்.கே.எம். பிரிவு நிறுவனத்துடன் கூட்டாக ரூ.40 கோடி முதலீட்டில் முட்டை செய்முறைப் படுத்தும்தொழிற்சாலை ஒன்று விரைவில் தொடங்கப்படும்.

ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த சுரங்கம் வெட்டுதல் மற்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சக்தி உற்பத்தித் திட்டத்தை ஏற்படுத்த உலகளாவிய போட்டி விலைப்புள்ளி கோரப்படும்.

**செய்தித்தாள் காகிதம்**

நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் ஜெர்மனி நிறுவனமான 'செயிம்பிளிகேம்ப்' ஆகியவற்றுடன் கூட்டாக ரூ.150 கோடி முதலீட்டில், கரும்புச் சக்கையிலிருந்து அட்டை துகள் தயாரிக்கும் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் "டிட்கோ" நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, கடலூருக்கு அருகில் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இதே போன்ற இன்னொரு தொழிற் சாலையை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ரூ.40 கோடி முதலீட்டில் தரமான ஆணுறைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 'டிட்கோ' நிறுவனம் விரைவில் ஏற்படுத்தும்.

ரூ.27 கோடி செலவில், அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த "அட்வான்ஸ்டு டைட்டிங்

ரிசோர்சஸ்" நிறுவனத்துடன் கூட்டுத்துறையில் 100 சதவீதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மெட்டல் ஹாலிடே லேம்ப் ஏற்படுத்த "டிட்கோ" நிறுவனம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் தொடங்கும்.

இரசாயனத் தொழில் துறையில் கூட மாநிலம் பின்தங்கியதாக இல்லை.

"டிட்கோவின்" கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனம், ஏறத்தாழ ரூ.90 கோடி முதலீட்டில், 'CIBA' நிறுவனத்துடன் கூட்டாக, "எப்பிகுளோரோ ஹைடியின்" தயாரிப்புத் திறனை விரிவுபடுத்தி, "எபாக்ஸிரெசின்" தயாரிக்கப் பல்திறப்படுத்தும்.

ரூ.47 கோடி முதலீட்டில் 'NATCO' பிரிவு கம்பெனிகளுடன் கூட்டாகப் பெருமளவு மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம் ஒன்று, டிட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

ஆல்கஹால் அடிப்படையிலான இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டங்களை ஏற்படுத்த 'டிட்கோ' நடவடிக்கை எடுத்துவருகிறது.

பென்சாயில் இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்று டிட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

நிலக்கரிச் சாம்பலை மூலப்பொருளாகக் கொண்டு கட்டடப் பொருட்களைத் தயாரிப்பதற்காக, "தாபர்" பிரிவு நிறுவனத்துடன் கூட்டாக நிலக்கரிச் சாம்பல் பயன்பாட்டுத் திட்டமொன்றை 'டிட்கோ' நிறுவனம் உருவாக்கி வருகிறது.

நார்வே நாட்டைச் சேர்ந்த 'Det Nolshe Hydro' நிறுவனம் தமிழ்நாட்டைச் சேர்ந்த W.S. பிரிவு நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டாக, எண்ணூரில் பி.வி.சி. குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் "டிட்கோ" நிறுவனம் கையொப்பமிட்டுள்ளது.

நாப்தா வெடிப்பொருள் மற்றும் (ஒலிபைன்ஸ்) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த "டிட்கோ" நிறுவனம் உரிமம் வழங்கியுள்ளது. மண்வெட்டும் பணி தொடங்கப்பட்டது.

நுரைமம், பாலி பிராபலின் (BOPP) பிஸ்பினைல், செறிவூட்டப்பட்ட சார்பன் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான திட்டங்களில் டிட்கோ நிறுவனத்துடன் சேருமாறு புகழ்பெற்ற தொழிற்சாலைகளிடமிருந்து செயற்குறிப்புகள் கோரப்பட்டுள்ளன.

புகழ்பெற்ற LMW தொகுதி நிறுவனம், 'டிட்கோ' நிறுவனமம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகத் தென்னக இரும்பு உருக்கி நிறுவனம் ரூ.450 கோடி முதலீட்டில் தேனிரும்பு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை அண்மையில் தொடங்கியுள்ளது.

கூட்டு மதிப்புப் பொருட்களுடன் அலுமினியம் தயாரிக்கும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் குரூப் அமைத்த ரூ.1000 கோடி செலவிலான தாமிரம் உருக்கும் திட்டம் செயல்படத் தொடங்கியுள்ளது.

இராமநாதபுரம் அருகிலுள்ள வாலிநோக்கத்தில் சிறிய அளவிலான கப்பல் பாகங்களைச் சிதைத்துப் பிரிக்கும் வசதியுள்ள பிரிவு, இவ்வாண்டு முற்றிலுமாகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நன்கு மேம்படுத்தப்பட்ட பல தொழிற்பேட்டைகளை இவ்வரசு உருவாக்கி வருகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய திருவண்ணாமலைசம்புவராயர் மாவட்டத்தில் உள்ள செய்யாறு வட்டத்தில் "சிப்காட்" நிறுவனம், புதிய தொழில் வளாகம் ஒன்றை அமைத்து வருகிறது. இத்தொழில் வளாகத்தை அமைக்க, "சிப்காட்" நிறுவனம் 1,350 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி வருகிறது.

அண்ணா மாவட்டம், பெரும்புதூர் வட்டத்திலுள்ள இருங்காட்டுக்கோட்டையில் புதிய தொழில் வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு 'சிப்காட்' நிறுவனம் 1,829 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்துள்ளது. பெரும்புதூர் அருகில் புதிய தொழில் வளாகங்களாக மற்றும் நகரியங்களாக மேம்படுத்துவதற்காக, வேறு மூன்று இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தில், புதிய தொழில் வளாகம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி வளர்ச்சிக் கழகம் (டாசிட்) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் ரூ.110 கோடி செலவிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டானில் ரூ.39.68 கோடி செலவிலும் தொழில்வளர்ச்சி



மையங்களை அமைத்துவருகிறது. 'டாசிட்' நிறுவனம், அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள மாமண்டூர், பலாமாத்தூர் கிராமங்களிலும் அண்ணா மாவட்டம் பெரும்புதூர் அருகிலுள்ள மற்றொரு இடத்திலும் புதிய தொழில் வளாகங்களை அமைத்துவருகிறது.

தென் சென்னையிலுள்ள கேளம்பாக்கம் அருகில் 200 ஏக்கர் நிலப் பரப்பில் "எல்காட்" நிறுவனம், துணைநகரத்துடன் கணிப்பொறி இடுபொருள் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்கும். எல்காட் நிறுவனம், பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கோயம் புத்தூரில் மற்றுமொரு கணிப்பொறி இடுபொருள் பூங்கா ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. இவ்வரசு பெருந் தொழில்களில் மட்டுமே கவனம் செலுத்த வில்லை. சிறு தொழில்களுக்கும் பெருந் தொழில்களுக்கு நிகராக ஊக்கம் அளிக்கப் படுகிறது. கடந்த ஆண்டில், 1.4 இலட்சம் பேருக்கும் அதிகமாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இம் மாநிலத்தில் 22,000க்கும் அதிகமான சிறுதொழில்கள் தொடங்கப்பட்டன. மேம்படுத்தப் பட்ட தொழிற்சாலை திட்டங்களையும், தொழிற் கூடங்களையும் ஒதுக்குவதில், அரசு, பெண் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கிறது.



மைய அரசின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள மகளிருக்கான வணிகம் தொடர்பான தொழில் முனைப்பு உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக சென்னையில் 5000 மகளிர் தெரிந்தெடுக்கப்படுவர்; அவர்களுக்கு அவசியமான நிருவாக மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், தொண்டு நிறுவனங்கள் நிதி உதவியுடன் மகளிர் வணிகம் மற்றும் தொழில் தொடங்கவும் நிதி உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உணவு செயல்முறைப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், தோல் பொருட்களைத் தயாரித்தல் ஆகிய தொழில் பிரிவுகளை அமைக்க, தொடக்கத்தில் பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கப்படும். இந்நிதி உதவியில் 1/3 பாகம் மானியமாகவும், 2/3 பாகம் கடனாகவும் வழங்கப்படும். 21ஆம் நூற்றாண்டில், தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகிலேயே முன்னோடியாக விளங்கும் வகையில் தகவல் தொழில் நுட்பத்துறைக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இந்தியாவில் முதன்முதலாக சென்னையில் அமைக்கப்படும்.

இந்நிறுவனம் தொடக்கத்தில் பதிவுபெற்ற சுய நிதிச் சங்கமாகத் தொடங்கப்படும்; பின்னர், இது படிப்படியாக, சுயநிதிப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்படும்.

**மின்சக்தித் துறை:**

1996-97ஆம் ஆண்டில் மின்சக்திப் பயன்பாடு 4.54 சதவீதம் அதிகரித்துள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் தமிழ்நாட்டின் மின்சக்தித் தேவை 42,481 மில்லியன் யூனிட் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மின்சாரத்திற்கான தேவையை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நிறைவு செய்வதே நமது முயற்சியாகும். பொதுத் துறையையும், தனியார் துறையையும் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் புதிய மின்சக்தித் திட்டங்கள் பலவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காற்று, கரும்புச் சக்கை, குப்பைக் கூளங்கள், நகராட்சிக் கழிவு, சூரிய ஒளி போன்ற பல்வேறு ஆதாரங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 9,273 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பதினாறு மின் உற்பத்தித் திட்டங்கள் தனியார் துறையில் திட்டமிடப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநில அரசு துறையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பெருங்குளம் எரிவாயு சுழலி, மின் உற்பத்தித் திட்டம் (30 மெகாவாட்).

கோவில் களப்பால் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் (30 மெகாவாட்).

தென் சென்னை அனல் மின் திட்டம் (2000 மெகாவாட்).

மத்திய அரசுத்துறை புதிய மின் திட்டங்களில், மாநில அரசின் பங்கு பின்வருமாறு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது :

(தொடர்ச்சி 49ஆம் பக்கம்)

எண்ணூரில் 7000 ஏக்கரில்
'பெட்ரோ கெமிகல் பூங்கா'
அமைக்கும்
தமிழ்நாடு அரசுக்கு
நல்வாழ்த்து!



ஹோட்டல் சேலம் கேஸ்டில்

ஏ4, பாரதி தெரு,
சொர்ணபுரி,
சேலம் - 636 004.




# தழைத்துவரும் தமிழ் வளர்ச்சி

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற அரசின் கொள்கையினைத் துரிதப்படுத்தும் வகையில், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்குத் தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் ஆட்சிமொழி திட்டச் செயலாக்கத்தைத் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கும் வகையில், ரூ.50 இலட்சம் செலவில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டு, அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்டது. இதன்மூலம் தலைமைச் செயலகத்தில் (தமிழ் ஆட்சிமொழித் திட்ட செயலாக்கம்) 65 விழுக்காடு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இருக்கவேண்டும் என்ற இலக்கை எட்டியுள்ளது.

வணிக நிறுவனங்கள், கடைகள் முதலானவற்றின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுவதற்கு ஏற்ப, 515 தமிழ்ச் சொற்கள் அடங்கிய சொற்பட்டியல் 5000 படிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

**பழங்காலத் தமிழ் இசைக்குப் புத்துயிர்!**

பழமையான சங்ககாலத்தைச் சேர்ந்த பாடல்களை இசை அமைத்துக் கற்பிப்பதன் மூலம், பழந்தமிழ் இசையைப் புத்தாக்கம் பெறச் செய்கிறோம். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் சங்க காலத்தைச் சேர்ந்த பாடல்களான பரிபாடல், க்லித்தொகை ஆகிய பகுதிகளிலிருந்து பாடல்கள் இசை அமைத்துக் கற்பிக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரம், திருக்குறள், தேவாரம், திவ்யபிரபந்தம், திருவாசகம் முதலிய தமிழ்ப் பாடல்களைப் பண்களோடும், இசை அமைத்தும் கற்பிக்கப்படுகின்றன. பழந்தமிழ் வடிவங்கள் எனத் தேவாரம், திவ்யபிரபந்தம் முதலியவை பண்களோடு இருப்பதால் அவை மரபு வழுவாமல் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

கி.பி. முதல் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருக்குறள் இரண்டடி உள்ள பாடல்கள் கருத்துவளம் மிக்கவை; அவற்றை இசையோடு கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் உள்ள ஆரிலய தாளிசைகள், களித்தாளிசைகள், பலவகை வரிப் பாடல்களை இசையோடு கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் பழந்தமிழ் இசை வடிவங்களே. இவற்றுக்கு இசை அமைத்துக் கற்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் இயற்றிய பண் அமைந்த பதிகங்களை இசையுடன் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கி.பி. 7, 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் இயற்றிய தேவாரப் பாடல்கள் முறையோடு கற்பிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய இசை வடிவங்களை இசையுடன் சிறப்பாகக் கற்பிக்க மீள் பயிற்சி நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மறைமலை அடிகளாருக்கு மரியாதை!**

1997-98ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவாகத் தமிழ் வானில் ஒளிவிட்டவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் - தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

மறைமலை அடிகளாரின் வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி சமபங்காகப் பிரித்துப் பகிர்ந்தளிக்கப்படும். இதன் தொடர்பில் அவர் எழுதிய நூல்களின் பதிப்புரிமை, நூலுரிமை யாரிடம் உள்ளது - மற்றும் அன்னாருடைய சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

**திராவிடப் பல்கலைக் கழகம்:**

ஆந்திர மாநிலம், ஆர்.மா.குப்பம் என்ற இடத்தில் திராவிடப் பல்கலைக் கழகம் அமைக்க முதற்கட்டமாக ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம்) வழங்கப்பட்டது!

**சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட நிதியுதவி**

பிற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழில் உள்ள சிறந்த இலக்கியங்களைப்

***"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவாகத் தமிழ் வானில் ஒளிவிட்டவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".***

பட்டதாரியில்லாக் குடும்பத்தில்
முதல் மதிப்பெண் பெறும்
மாணவர்க்கு,
அரசு செலவில், தொழிற்கல்வி
அளிக்க முன்வந்த
அரசுக்கு நல்வாழ்த்து!



[illegible]
[illegible]
&
[illegible]
16-1/6, இந்திரா நகர், நாகல் நகர்,
[illegible] - 624 003.

பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்படும் நூல்களுக்கு ரூ.20,000 அல்லது அச்சிடும் செலவில் 60 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படும்.

1996-97ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நூல்கள் வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு ரூ.1,13,141 வழங்கப்பட்டுள்ளது!

**நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்துதல்:**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், நலிந்த கலைஞர்கள் ஆகியோர் திங்கள்தோறும் பெற்று வந்த நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது!

**தமிழ்மொழிக் காவலர் நிதியுதவி:**

தமிழ்மொழிக் காவலர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்தி, பின்னர் ரூ.500லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

**தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமையாக்கல்:**

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

**புதுதில்லி தமிழ்ச் சங்கத்திற்கு நல்கை:**

புதுதில்லி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர், அச்சங்கத்தில் கட்டப்பட்டுவரும் திருவள்ளுவர் கலையரங்கத்திற்குக் கூடுதல் வசதிகள் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டதற்கேற்ப தமிழக அரசு ரூ.10 இலட்சம் நல்கை வழங்கியுள்ளது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குக் கூடுதல் நல்கை:**

சென்னையில் இயங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 25 ஆண்டுகளைக் கடந்து வெள்ளி விழாக் கொண்டாடுவதனைக் கருதிப் பார்த்து, இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ.14.42 இலட்சம் சிறப்பு நல்கையாக அரசு வழங்கியுள்ளது.

**செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்:**

செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலித் திட்டத்தின்கீழ், உயிரெழுத்துக்கள் வரிசையில் 'அ' கரம் முதல் 'ஈ' காரம் வரையிலான முதல் மடலத்தின் இரு பகுதிகள் வெளியிடப்பெற்றுள்ளன. 'உ' கரம் முதல் 'ஔ' காரம் வரையிலான மூன்றாவது பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் வெளியீட்டுப் பணியை விரைவுப்படுத்தும் பொருட்டு, அகரமுதலித் துறையில் வல்லுநர்களாக விளங்கும் அறிஞர் பெருமக்கள் பதிப்பாசிரியர்களாகவும், உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் துணையுடன் அகரமுதலித் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குள் நிறைவுறுத்திட இலக்கு வரையறுக்கப்பட்டுப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

**திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி:**

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்கு, இதுவரையில் நல்கையாக ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகள் மேலும் சிறந்திட கூடுதல் அரசு நல்கையாக 1996-97ஆம் ஆண்டு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.10 இலட்சம் அரசு நல்கை வழங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனத்தால் நடப்பு ஆண்டு ஜூன் திங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ள சிறப்புக் கருத்தரங்கினை நடத்துவதற்கான செலவினங்களுக்கு நல்கை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்துமாக்கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து, அனைத்து நாடுகளின் முதல் கருத்தரங்கினை 1997ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் 22, 23ஆம் நாள்களில் சென்னையில் தொல்பொருள் ஆய்வுத்துறையும், கோவா தேசியக் கடலாய்வு நிறுவனத்தின் கடலாய்வுக் குழுவும் இணைந்து நடத்துவதற்காக அரசு ரூ.4 இலட்சம் நிதி வழங்கியது. சிறப்பாக நடைபெற்ற இம்மாநாடு பூம்புகார் ஆழ்கடலாய்வுப் பணியினை வலியுறுத்துவதாக அமைந்தது. இம் மாநாட்டினைத் தமிழகத்தில் நடத்தியதால், இம்மாநாட்டில் கலந்துகொண்ட பன்னாட்டு அறிஞர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், தொழில்நுட்பங்களையும், பூம்புகார் கடல் அகழ்வாய்வில் பின்பற்ற வாய்ப்பாக அமைந்தது.

மேலும், பூம்புகார் கடல் அகழாய்வில் வெளிப்படுத்தியிருக்கின்ற பொருட்கள் பற்றியும், அவற்றை வெளிக் கொணர்வது குறித்தும், பாதுகாப்பு முறை குறித்தும் கலந்துரையாடவும் மற்றும் பூம்புகாரின் பண்டைய சிறப்பு பற்றி வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் வருகை புரிந்த அறிஞர் பெருமக்கள் உணர்ந்துகொள்ளவும் இது ஏதுவாக இருந்தது.

சென்னை மற்றும் மதுரை அரசு இசைக் கல்லூரி கடம், கஞ்சிரா, மோர்சிங் துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.100, நட்டுவாங்க வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.150 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இக்கல்லூரிகளில் நாதஸ்வரம், தவில், கடம், கஞ்சிரா நுகர்சங்கம் மற்றும் நட்டுவாங்கத் துறையில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.250 ஆக உயர்த்தி 1997-98ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும். ★

சட்டமன்ற உறுப்பினர்
தொகுதி மேம்பாட்டுத்
திட்டத்திற்கென ரூ.25 இலட்சம்
ஒதுக்கீடு செய்துள்ள
கலைஞர் அரசு வாழ்க!




பட்டு சரணாலயம்
ஸ்ரீசெல்லியம்மா சில்க்ஸ்
எஸ்.கே.சி. டெக்ஸ்டைல்ஸ் காம்ப்ளக்ஸ்
திண்டுக்கல்.



# உயிர்ப்பிக்கப்பட்ட உள்ளாட்சிகள்

உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாயப்பு தமிழநாட்டிறகு நெடுங் காலமாகக் கிடைக்காமல் இருந்தது. ஏனெனில், தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள நீண்ட நாட்களாக நடததப்படாமலேயே போய்விட்டது. தற்போதைய அரசு 1996-ஆம் ஆண்டு மே மாதம ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனியாக நடததுவதென்ற கொள்கை முடிவைத திட்டவட்டமாக அறிவித்தது. அதனபடி, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் (கடந்த அக்டோபர்) திங்களில் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன.

தேர்தல்களில் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு உரிய முறையில் இடஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 25.10.96 அன்று பதவி ஏற்றுக் கொண்டனர். பொறுப்பேற்ற அனைத்து ஊராட்சித்தலைவர்களுக்கும், வட்டார ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு ஊராட்சி நிர்வாகத்தில் பரிச்சயம் பெறும்வகையில் அவர்களின் தலைமையிடங்களிலேயே முறையான பயிற்சிகள் தரப்பட்டன. இதனை அடுத்து, கடந்த நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 1-ஆம் தேதிகளில் சென்னையில் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில், ஊராட்சி ஒன்றியக் குழுவால் தொகுத்தளிக்கப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது அரசால் தேவையான ஆணைகள் வெளியிடப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளுக்குப் படிப்படியாக அதிகப் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் வழங்க இவ்வரசு முன்வந்துள்ளது.




இதில் முதல்படியாக மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரையின் பேரில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர், பொதுப்பகிர்வு முறை, சாலைகள், சிறுபாலங்கள், போக்குவரத்துத் தொடர்பு, கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள், தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வேலைக் கல்வி, நூலகங்கள், ஊரக மின்மயமாக்கல் மற்றும் மரபு சாரா எரிசக்தி வளங்கள் ஆகிய ஒன்பது இனங்கள் மீதான திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**தெருவிளக்குகள்:**

ஊராட்சிகளில், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் பாதரச ஆவிவிளக்குகளைச் சேர்த்து மொத்தம் 9,27,074 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தெருவிளக்குகளைப் பராமரிக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கட்டணத் தொகையைச் செலுத்தவும் அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.3 கோடி நிதியுதவி அளிக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு அயற்பணி மூலம் அனுப்பப்பட்ட ஊழியர்கள், 1.8.96 முதல் திரும்பவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதால், தற்போது தெருவிளக்குகள் பராமரிப்புப் பணியானது ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மின் வினைஞர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவைப்படும் தெருவிளக்கு உபகரணங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அனுமதிக்கப்பட்ட விலையில் வாங்க கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| நகராட்சி நிர்வாக இயக்குநர் | - | தலைவர் |
| ஊரக வளர்ச்சி இயக்குநர் | - | உறுப்பினர் |
| பேரூராட்சிகள் இயக்குநர் | - | உறுப்பினர் |
| முதன்மைப் பொறியாளர் தமிழ்நாடு மின் வாரியம் | - | உறுப்பினர் |

12.3.97 அன்று அமைச்சர் (ஊரக வளர்ச்சி) மற்றும் உள்ளாட்சி மற்றும் அமைச்சர் (சுகாதாரம் & மின்சாரம்) ஆகியோரின் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஊரகப் பகுதிகளில் மொத்தம் 19,072 தெரு விளக்குகள் அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

**ஊரகக் குடிநீர் வழங்கல்:**

ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது 149 இலட்சம் கைப்பம்புகளும் 29,405 விசைப்பம்புகளும் செயல்பட்டு

உள்ளாட்சிகளுக்கு, ஒளியூட்ட
76 ஆயிரம் மின்விளக்குக்
கம்பங்கள் வழங்கிடும்
அரசுக்கு நல்வாழ்த்து!



சக்தி புட்ஸ்
16, கொங்களம்மன் கோயில் வீதி
ஈரோடு-638 001.

வருகின்றன. இதனைப் பராமரிக்க அரசு ரூ.5.65 கோடி நிதியுதவி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு ஆண்டு தோறும் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவைப் படும் குடிநீர் வழங்கல் பராமரிப்புப் பொருட்களை வாங்குவதற்கு அரசு, குழு ஒன்றினை ஏற்படுத் தியுள்ளது .பழுதுபட்ட குழாய்களை மாற்றி சீரிய முறையில் குடிநீர் வழங்குவதற்கு, 1996-97ல் அரசு ரூ.8 கோடியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,500 ஆழ்துளைக் கிணறுகள் போடுவதெனத் திட்டமிடப்பட்டு, ஜூன் '96லிருந்து ஏப்ரல்'97 வரை 2,126 ஆழ்துளைக் கிணறுகள் முடிக்கப்பட்டுவிட்டன.



**உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கக்கூடிய நிதி**

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையினை ஆய்வு செய்யவும் மாநில அரசால் விதிக்கப்படுகின்ற வரிகளை மாநிலம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பகிர்ந்து அளிப்பது பற்றிப் பரிந்துரைக்கவும் அத்தொகையினைப் பல்வகைப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடிய அல்லது ஒதுக்கக்கூடிய வரிகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கவும் 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு மாநில நிதிக்குழுவினை அமைத்தது.

இக்குழு, தமது அறிக்கையினை 1996_ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் நாள் அன்று அளித்தது. மாநில நிதிக்குழு வரிகளை பொதுச்சேர்மம் ஏ (Pool A) மற்றும் சேர்மம் பி (Pool B) என்று இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளது. வரியின் மூல இருப்பிடத்தின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்று உரிமை மூலம் அளிக்கக்கூடிய முத்திரைத்தாள் மேல் வரி, உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல் வரி, மற்றும் கேளிக்கை வரிகள் அளிக்கக்கூடிய சேர்மம் ஏ-ல் சேரும். கேளிக்கை வரியைத் தவிர, இதர அனைத்து வரிகளும், பொதுச்சேர்மம் பி (Pool B) -ல் தொகுக்கப்பட்டு அதில் 8% உள்ளாட்சி அமைப்பு களுக்குப் பகிர்ந்தளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

மாநில நிதிக்குழுவின் மேற்கண்ட பரிந்துரைகளை ஆய்வு செய்த பின்னர், 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேற்கண்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம் என அரசு அறிவித்தது. மேற்கண்ட 8% ஒதுக்கீட்டில் 15% சதவீதத்தினை சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக எடுத்து வைத்து அதனை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 60:40 எனும் விகிதத்தில் ஒதுக்கீடு செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

பொதுச் சேர்மம் பி-ல் எஞ்சியுள்ளவற்றை (85 சதவீதம்) ஊரக மற்றும் நகர்ப்புற அமைப்புகளுக்கு 55:45 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படும்.

1997-98ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் பொதுச் சேர்மம் பி-ல் 8 சதவீதத் தொகையான ரூ.662 கோடியில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதிக்கு ரூ.99.3 கோடியும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.562.7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 55 சதவீதம் - அதாவது ரூ.309.485 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1997-98ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இத்தொகையில் நான்கில் ஒரு பகுதியான ரூ.77.35 கோடியினை 10:45:45 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கிடையே 1997-98ஆம் ஆண்டின் முதல் காலாண்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்துள்ளது.

இது குறித்த ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப் பட்டு விட்டன. மீதமுள்ள மூன்று காலாண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகள் குறித்த ஆணைகள் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

**ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

இத்திட்டம் ஊரக இளைஞர்களுக்குச் சில தொழில்களில் பயிற்சி அளித்து, அவர்கள் தாமே சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவும் திட்டம் ஆகும்.

1996-97ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.619.24 இலட்சங்கள். மைய அரசும், மாநில அரசும் தங்கள் முதல் தவணைத் தொகையாக ரூ.154.805 இலட்சம், ரூ.131.505 இலட்சம் முறையே விடுவித்துள்ளன. இரண்டாம் தவணைத் தொகையாக மாநில அரசு 154.805 இலட்சம் விடுவித்துள்ளது. மைய அரசின் பங்குத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கும் மைய மாநில மற்றும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு அவைகளில் உள்ளமைப்பு வசதிகளை (Infrastructure) பெற்றுக்கொள்ள அரசு நிறுவனங்களுக்கு 100 விழுக்காடு உதவியும் மற்ற நிறுவனங்களுக்கு 50

பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக
ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு
செய்துள்ள
தமிழக அரசுக்கு எங்கள் வாழ்த்து!

ஜே.கே.ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்
53ஏ, காலேஜ் ரோடு,
சுப்பிரமணியபுரம்,
காரைக்குடி 630 002



விழுக்காடு உதவியும் அளிக்கப்படுகிறது. 1996-97ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.1,91,60,000 தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

1996-97ஆம் நிதியாண்டில் இதுவரை இத்திட்டத்தில் 15,877 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். செலவழிக்கப் பட்ட தொகை ரூ.598.22 இலட்சம். பயிற்சி பெற்றபின் இவர்களுக்கு நவீன கருவிகள் அளிக்கப்படுகிறது.

### சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள்:

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP):

இத்திட்டம் மத்திய அரசின் 50 சதவிகித நிதியுடன் நம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஊரக மக்கள், அதாவது ரூ.11,000க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உடைய குடும்பம் ஒவ்வொன்றும் தமக்கென்று வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கிக்கொள்ள அவர்களுக்கு மானியமும் வங்கிக்கடனும் வழங்கியுதவியதன் மூலம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1996-97 நிதியாண்டில் 51,550 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், 46,537 பெண்கள் மற்றும் 1,565 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இந்த நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.37.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் நிதியாண்டில் இதுவரை 70,905 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 65,904 பெண்கள் மற்றும் 2,787 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

### ஊரகப் பகுதி வாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்:

நிலையான அடிப்படையில் சுய வேலை வாய்ப்பிற்குரிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், ஊரகப் பகுதி வாழ் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன், இத்திட்டமானது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு துணைத் திட்டமாக 1983-84ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் ரூ.25,200-ஐ சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1996-97ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 28 மாவட்டங்களில் 18,025 பெண்கள் பயன்பெறும் வகையில் 1,265 குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தது. 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இதுவரை 22,550 பெண்கள் பயன்பெறும் வகையில் 1,549 குழுக்கள் மார்ச் 97 வரை உருவாக்கப்பட்டுள்ளன.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்:

1997-98ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில் இந்த நிதியாண்டு முதல் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் கிராமப்புறத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் நோக்கம், சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும், அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளான குடிநீர் வசதி, தொடக்கக்கல்வி, பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, குடியிருப்பு, கிராமச்சாலைகள் மற்றும் அவைகளின் இணைப்பு, நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றைப் பல்வேறு திட்டங்களிலிருந்து ஒருங்கிணைத்து, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், செயல்படுத்தி ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு அமைத்திடல் வேண்டும் என்பதாகும். கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவது, கழிவறை வசதி செய்துதருவது மற்றும் பள்ளிக்கூடங்களில் கழிவறை ஏற்படுத்துதல், தொடக்க சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மருந்துகள் வழங்குதல் மற்றும் மருத்துவ வசதி அளித்தலுக்கு ஏற்ப எல்லா வசதிகளையும் வழங்குதல், தேவையாயின் சார்பு நிலை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைத்தல், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பரவலாக்குதல் மற்றும் எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய் பரவுதலைத் தடுத்தல், மூன்று வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் 'சத்துணவு வழங்குதல், "ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் எல்லாக் குடிசைகளுக்கும் மின் விளக்கு அளித்தல், எல்லா சாலைகளையும் தார் - கப்பி சாலையாக மேம்படுத்தல், நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்துதல், சமூக நலத்திட்டங்களான மூவலூர் இராமாமிர்த அம்மையார் திட்டம், முத்துலட்சுமி ரெட்டி திட்டம், ஆதரவற்ற வயோதிகர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களில் தகுதிவாய்ந்த அனைவரும் பயன்பெறச் செய்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் இடுகாட்டிற்கான பாதை வசதிகளைச் செய்தல், கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையினை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரத் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் கடன் வசதியினை விரிவாக்குவது, அடிப்படை ஆதார வசதிகளை தொலைபேசி மற்றும் துணை அஞ்சல் நிலையங்கள் ஏற்படுத்துதல், பூரண மதுவிலக்கு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா ஒரு சேமிப்புக் கணக்கு துவக்க ஊக்குவித்தல் அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதி, மரம் நடுதலை சேவை மனப்பான்மையுடன் ஊக்குவித்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயலாக்கத் திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருங்கிணைப்புக்

**நெடுஞ்சாலை மேம்பாட்டுக்கு**
**ரூ.250 கோடி வழங்கிடும்**
**தமிழ்நாடு அரசை**
**நெஞ்சார வாழ்த்துகிறோம்!**

**சூர்யா ஸ்கிரீன் ஆர்ட்ஸ்**

ஈரோடு - 1.



குழு ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் செயல்படும். இத்திட்டத்தின் ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிப்பாளராகச் செயல்படுவார். அரசு நிலையில் ஊரக வளர்ச்சித் துறையும் கண்காணிக்கும். இத்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மார்ச் 1998 இறுதிக்கு முன் முழுமையாக முடிக்கப்பெறும்.

**வேலை உறுதியளிப்புத் திட்டம்:**

வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம் மைய அரசினால் 1.10.93 முதல் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரத்தை மைய அரசும் மாநில அரசும் முறையே 80:20 என்ற விகிதத்தில் பங்கு ஏற்கின்றன. இத்திட்டத்தின்படி, கிராமத்தில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 2 நபர்களுக்கு விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் வட்டார எல்லைக்குள் ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்கு வேலை அளிப்பது ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 18 வயதிற்கு மேற்பட்டும் 60 வயதிற்குள்ளாகவும் ஆண் மற்றும் பெண் இருபாலரும் தங்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டி கிராமப்பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம். அவர்களுக்கு இத்திட்டத்திற்கான குடும்ப அட்டைகள் வழங்கப்படும். 1.1.96 முதல் இத்திட்டத்துடன் தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் இணைக்கப்பட்டதால், இத்திட்டம் 20 மாவட்டங்களில் 198 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1996-97ஆம் ஆண்டில் இத்திட்டம், தமிழ் நாட்டிலுள்ள 384 வட்டாரங்களில்-287 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டில் மைய அரசு தனது பங்காக மொத்தம் ரூ.14,515 இலட்சம் விடுவித்துள்ளது. இதையடுத்து மாநில அரசின் பங்காக (20%) மொத்தம் ரூ.3,628.75 இலட்சம் அனுமதித்துள்ளது. ஆக, மைய மற்றும் மாநில அரசுகள் அனுமதித்துள்ள மொத்தத் தொகை ரூ.18,143.75 இலட்சமாகும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படாத மீதமுள்ள 103 வட்டாரங்களில் 1997-98ஆம் ஆண்டில் விரிவுபடுத்த தற்போது மைய அரசு தமது ஒப்புதலை வழங்கியுள்ளது. எனவே, தமிழ் நாட்டிலுள்ள எல்லா 384 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது.

__1996-97ஆம் ஆண்டில் திட்டம் செயலாக்க விவரம்:__

| | | |
|---|---|---|
| | | (இலட்சத்தில்) |
| 1 அ. பதிவு செய்யப்பட்ட நபர்கள் | : | 11.178 |
| ஆ. வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது | : | 468.424 (இலட்ச மனிதநாட்கள்) |
| இ.மொத்தம் முடிக்கப்பட்ட பணிகள் | : | 23,970 |
| ஈ. செயலாக்கத்தில் உள்ள பணிகள் | : | 8,526 |
| உ) மொத்தச் செலவு | | 17,914.19 (ரூ. இலட்சத்தில்) |

__2. வேலை வாய்ப்புச் செயல்பாடு__

| | | (இலட்சத்தில் மனித நாட்கள்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | : | 212.999 |
| மலைவாழ் மக்கள் | : | 25.464 |
| ஏனையோர் | : | 229.961 |
| மொத்தம் | : | 468.424 |

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**1996-97ஆம் ஆண்டில் சாதனைகள்**

1. கடந்த சில ஆண்டுகளாக, பல்வேறு குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு உள்ளாட்சி அமைப்புகளால் போதுமான நிதி வசதியின்மையாலும், போதுமான தொழில்நுட்ப அனுபவமின்மையாலும் தகுந்த கவனம் செலுத்தப்படவில்லை. இதன் காரணமாகப் பலகோடி ரூபாய் மதிப்பிற்கு உருவாக்கப்பட்ட உடைமைகள் சரிவர உபயோகப்படுத்தப்படவில்லை.

இந்த அரசு பதவி ஏற்றவுடன், குடிநீர்த் திட்டங்களைப் புனரமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, 1996-97ஆம் ஆண்டில், சுமார் ரூ.52 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்களைப் பெருமளவில் புனரமைப்புச் செய்யும் பணியினை உடனடியாக மேற்கொண்டது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் புனரமைப்புத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நான்கே மாதங்களில் முடிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. இதனால் 3,100 தனி விசைப்பம்பு திட்டங்களும் 225 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், ரூ.39 கோடி செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதால், பல ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்துவந்த குடிநீர்த் திட்டங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்ததோடு மட்டு மல்லாமல், இக்குடியிருப்புகளின் குடிநீர் விநியோக அளவும் பெருமளவு அதிகரிக்கப்பட்டது.

இதே அடிப்படையில், நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உருவாக்கப்பட்ட அனைத்து உடைமைகள் பயன்களும் அதன் முழுப் பயனை மக்களுக்குத் தரும் வகையில், வரும் ஆண்டுகளிலும் இதுபோன்ற புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

**தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்**
**தர்மபுரி.**

பிற்படுத்தப்பட்டோர்'
மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு
இலவச வீட்டு மனைக்கு
ரூ.15 கோடி அளிக்கும்
அரசை வாழ்த்தி மகிழ்கிறோம்!




**ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதலில் சாதனைகள்:**

1996-97ஆம் ஆண்டில், புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுடன், ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் சிறப்புக் குடிநீர்த் திட்டங்கள் வாயிலாக, கீழ்க்கண்ட பிரிவுகளின் கீழ், ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| அ. ஊரகக் குடிநீர்த் திட்டம் | : 1600 குடியிருப்புகள் |
| ஆ. குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் | : 49 குடியிருப்புகள் |
| இ. புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கல் | : 70 குடியிருப்புகள் |
| ஈ. உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் | : 4 கலன்கள் |
| உ. ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புப் பகுதித் திட்டம் (ஊரகக் குடிநீர் திட்டத்தின் பகுதியாக) | : 844 குடியிருப்புகள் |

**நகரப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதலில் சாதனைகள்**

1996-97ஆம் ஆண்டில், 3 நகராட்சிகளுக்கும், 8 நகரப் பேரூராட்சிகளுக்கும் மற்றும் 16 ஊரகப் பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வசதியளிக்கப்பட்டது.

**குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அதிகாரப் பகிர்வு:**

முந்தைய அரசின் ஆணைப்படி, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் இவற்றால் எந்த ஒரு வேலைக்கும், உபகரணங்கள் மற்றும் பொருட்களை வாங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தப் புள்ளிகளைப் பொருத்தவரையில் ஒப்பந்தத்தின் மதிப்பு ரூ.1 கோடிக்கு அதிகமாக இருந்தால், அரசின் ஒப்புதல் முன்னமே பெறப்பட வேண்டும். இத்தகைய ஆணையால் பொருட்களை வாங்குவதிலும் வேலைகளை முடிப்பதிலும் பெரும் காலதாமதம் ஏற்பட்டது. இந்த அரசு கடந்த 1996ஆம் ஆண்டு மே மாதம் பதவி ஏற்றபின், முந்தைய அரசின் இந்த ஆணையை ரத்து செய்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கே இதற்கான அதிகாரத்தை அளித்தது. இந்த ஆணையால் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதால் ஏற்படும் காலதாமதம் அறவே அகற்றப்பட்டது மட்டுமல்லாது பொருட்களை உடனடியாக வாங்குவதற்கு வழிகோலியது.

**கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அதிகரித்தல்:**

இதுநாள்வரை இருந்துவந்த விதிகளின்படி எந்த ஒரு ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கும் அதன் நபர் ஒன்றுக்கான செலவு ரூ.1000க்கு அதிகமாக இல்லாமல் மற்றும் 1000 லிட்டருக்கான செலவு ரூ.10க்கு அதிகமாக இல்லாமலும் இருந்தால் வாரியமே அத்தகைய குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம்.

தளவாடங்களின் விலை உயர்வாலும், வேலையாட்களின் செலவின உயர்வாலும் மற்றும் தகுந்த நீராதாரங்களைத் தொலைதூரத்தில் கண்டுபிடிக்க வேண்டி இருப்பதாலும், குடிநீர்த் திட்டங்களின் மதிப்பீட்டுத்தொகை முன்னமே நிர்ணயிக்கப்பட்ட வரையறையை விட அதிகப்படுவதால் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

இதனால் நிர்வாக ஒப்புதல் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாகக் காலக் கெடுவுடன் முடிக்கப்பட வேண்டிய திட்டங்களுக்கு வேண்டிய நிதியைக் குறித்த காலத்தில் பெற்று, திட்டங்களை நிறைவேற்றுவது இயலாததாயிற்று.

தற்போது அரசு ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் நபர் ஒன்றுக்கான செலவின் மதிப்பு முந்தைய வரையறையிலான ரூ.1000க்கு பதிலாக ரூ.2500 வரையிலும், 1000 லிட்டருக்கான செலவின மதிப்பு முந்தைய வரையிலான ரூ.10க்கு பதிலாக ரூ.17 வரையிலும் வாரியமே நிர்வாக ஒப்புதல் வழங்கலாம் என உத்தரவு வழங்கியுள்ளது. இவ்வாறு வரையறை உயர்த்தப்பட்டதால் வாரியமே நிர்வாக ஒப்புதல் அளிக்க ஏதுவாக்கப்பட்டு அரசிடமே இருந்து நிர்வாக ஒப்புதல் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட்டது.



**ஏழைப் பெண்கள்**
**திருமண உதவியை**
**ரூ.10,000 என**
**உயர்த்திய அரசுக்கு**
**உளமார்ந்த வாழ்த்துகள்!**



**ஆர்த்தி திரையரங்கம்**
15ஏ, பழைய திருச்சி ரோடு
திண்டுக்கல்-624 001.

&

**மீன் பிளாஸ்டிக் டிசைனர்ஸ்**
4/14 சப் கலெக்டர் ஆபீஸ் ரோடு
திண்டுக்கல்.

வாரியத்தில் கடந்த 1.10.1996லிருந்து தர உத்தரவாத விழிப்புணர்வுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதால் நீண்ட நாட்களாகப் பயனுக்குக் கொண்டு வரப்படாத சில குடிநீர்த் திட்டங்களின் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டன. இக்குழுவினரால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வினால் தளவாடச் சாமான்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் வேலைகளின் பணிகளின் தரத்தில் மேம்பாடு காணப்பட்டது.

**புதிய ஆழ்துளையிடும் இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்புதல்:**

வாரியத்தில் தற்போதுள்ள ஆழ்துளையிடும் இயந்திரங்கள் நீண்ட காலத்திற்கு முன் வாங்கப் பட்டதால், இவற்றின் வேலைத்திறன் நல்ல நிலையில் இல்லை. அதனால் இவற்றை முழுமையாக உபயோகப் படுத்த முடியவில்லை. அரசு, ஆழ்துளையிடும் இயந்திரங்களின் தேவையின் அவசியத்தை உணர்ந்து உபயோகப்படுத்தமுடியாத பழைய இயந்திரங்களுக்குப் பதிலாகவும், துளையிடும் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் கடினப் பாறையில் துளை யிடக்கூடிய 12 புதிய இயந்திரங்களையும் படிவப் பாறையில் துளையிடக்கூடிய '10' புதிய இயந்தி ரங்களையும் வாங்குவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.



**புதிய வாகனங்கள் வாங்குதல்:**

முந்தைய அரசின் ஆணைப்படி உபயோகிக்க முடியாத பழைய ஈப்புகளுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்குவது 2:1 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள பெரும்பாலான ஈப்புகள் பல ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. இதில் பெரும்பாலானவை உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளன. ஈப்புகளின் இருப்பு குறைவாக உள்ளதால் திட்டங்களை நிறைவேற்றுவதில் - குறிப்பாக மூலை முடுக்குகளில் உள்ள ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் களப் பொறியாளர்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகிறார்கள். இந்த அரசு இந்தக் குறைபாடுகளை உணர்ந்து புதிய ஈப்புகளை வாங்குவது தொடர்பான முந்தைய அரசு ஆணையை மாற்றம் செய்து உபயோகிக்க முடியாத பழைய வாகனங்கட்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்குவதற்கு 1:1 என்ற புதிய விகிதாச்சாரத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**ரூ.10 கோடிக்கு உட்பட்ட திட்டங்களை வாரியமே செயல்படுத்துதல்:**

1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) வகை முறைகளின்படி, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியமானது, சென்னைப் பெருநகரப் பரப்பிடம் நீங்கலாக, தமிழ்நாட்டில் நீர் வழங்குதல் மற்றும் வடிகால் திட்டங்கள் அனைத்தையும் அரசின் நிருவாக ஒப்புதலைப் பெற்றதற்குப் பின்னர் நிறைவேற்றுகின்றது. பத்துக்கோடி ரூபாய்கள் மற்றும் அதற்குக் குறைவானதாக ஆகும் செலவினத்தைக் கொண்ட பணிகளை வாரியத்தின் ஒப்புதலளிப்புடன் நிறைவேற்றுவதற்குத் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தை அனுமதிப்பதெனக் கருதப் பட்டுள்ளது. இதனால், அத்தகைய செயல் திட்டங்களுக்கு அரசின் ஒப்புதலளிப்பினைப் பெறுவதில் ஏற்படும் கால தாமதமானது தவிர்க்கப் படுகிறது. மதுரை, கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மாநகராட்சிகள் மற்றும் நடைமுறையிலுள்ள எந்த ஒரு சட்டத்தின்படியோ அமைக்கப்படும் மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள் ஆகியன வாரியத்தின் அனுமதியின்றி எல்லாவிதமான திட்டங்களையும் ஆய்வுசெய்ய, தயாரிக்க, நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் -கையினால் இயங்கக்கூடிய நீரேற்றுக் குழாய், நீர்க்குழாய்த் தட அமைப்பினை விரிவாக்குதல், நீரேற்று விசைக்குழாய் அமைப்பதன் மூலமாகத் தற்போது இருந்துவருகின்ற நீர்வளங்களை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதெனவும்கூட கருதப்பட்டுள்ளது.

அதற்கிணங்கியவகையில் 4/1971 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தினைத் தக்கவாறு திருத்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்திருத்தங்கள் விரைவில் அரசு இதழில் வெளியிடப்பட உள்ளது.

**மக்கள் நலப்பணியாளர்கள் திட்டம்**

1996-97ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது, 1989-90ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் எனவும் - இதன் மூலம் மாதம் ரூ.500 மதிப்பூதியம் பெறும் வகையில் 25,000 கிராமப்புற

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

1989-91ல் நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் 13.7.91 முதல் கைவிடப்பட்டது.

கிராமங்களில் முதியோர் கல்வித் திட்டங்கள், நூலகங்கள் நடத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்கள் பேணிக் காத்திடத் துணை புரிதல், சிறுசேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல் போன்ற பணிகளைச் செயற் படுத்துவதன் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசாணை (நிலை) எண்:50. ஊரக வளர்ச்சித்துறை, நாள்:24.2.97ல் 25,000 மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடம் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஆனைமலை, மலைவாழ் மக்களின் ஒருங்கிணைந்த இந்திராகாந்தி வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டம்:**

சிறப்பு மற்றும் புதிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மலைவாழ் மக்களுக்கான ஒருங்கிணைந்த இந்திராகாந்தி வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.132 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இத்திட்டம் செயல்படுவதற்காக மாநில அரசு தனது இணை பங்கான ரூ.33 இலட்சம் ஒதுக்கி ஆணை வெளியிட்டுள்ளது.

**ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்:**

1989 ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து இத்திட்டம் செயலாக்கம் பெறுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. 30 விழுக்காடு பெண்களுக்காக வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவில் 80 விழுக்காடு மத்திய அரசும், 20 விழுக்காடு மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஒரு மாவட்டத்திற்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு அம் மாவட்டத்தில் உள்ள சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சிக்கு 65:15:20 விழுக்காடு என்ற வீதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூ.5,806.53 இலட்சங்கள் 1996-97ஆம் நிதியாண்டுக்கு நிதி விடுவித்தது. இதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்கான ரூ.1,451.633 இலட்சங்களை விடுவித்தது.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டங்கள்:**

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் 1.1.96 முதல் தனித் திட்டமாகச் செயலாக்கம் பெறுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஊரகப் பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் நிலையில் உள்ள ஆதி திராவிடர்/பழங்குடினருக்கும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் இலவசமாக 20 சதுர மீட்டர் பரப்புள்ள வீடு கட்டித் தருவதாகும். மேலும் மிகவும் வறிய நிலையில் உள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினத்தவர் அல்லாதவர்களுக்கும் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூ.4,009.44 இலட்சங்கள் 1996-97ஆம் நிதியாண்டுக்கு நிதி விடுவித்தது. இதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்காக ரூ.1002.355 இலட்சங்கள் விடுவித்தது.

வெள்ளத்தின் காரணமாகப்பாதிக்கப்பட்ட விழுப்புரம்







இராம்சாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம், நாகை காயிதே மில்லத், தஞ்சாவூர், திருவண்ணாமலை சம்புவராயர், அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் ஆகிய 7 மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆதி திராவிடர் மக்கள் பலர் வீடுகளை இழந்ததால், மேற்கண்ட 7 மாவட்டங்களுக்கும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 10,000 வீடுகள் கட்ட கூடுதல் நிதியாக ரூ.16 கோடி மத்திய அரசைக் கேட்டதற்கு, மத்திய அரசு இதற்காக ரூ.5 கோடி ஒதுக்கி உள்ளதாகத் தகவல் அனுப்பியுள்ளது.

இத்தொகையை வைத்து, 3,125 தொகுப்பு வீடுகள் கட்ட உத்தேசித்துள்ளது. இதில் மாநில அரசின் பங்கு 1.25 கோடியாகும்.

**தொகுப்பு விடுகள்:**

9.1.1996 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை நிலை எண்.5ல், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்/ ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் - ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு ரூ.15 கோடி ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 11.3.97 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை எண்.45ல் 1989-90க்கு முன்னர் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்/ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட தற்போது குடியிருக்கத் தகுதியற்ற நிலையிலுள்ள ஆதி திராவிடர்களின் தொகுப்பு வீடுகளுக்குப் பதிலாகப் புதியதாக 5,555 வீடுகள் கட்டி அதே பயனாளிகளுக்குக் கொடுக்க, மேலும் ரூ.15 கோடி ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரிசியைத் தூவினேன்;
இதுவும் ஒரு பாவம்தான்!
கோழிகளுக்குள் சண்டை!

- ஐசா/ஜப்பான் ஹைக்கூ

மேற்சொன்ன 30 கோடி ரூபாயை ஊரக வளர்ச்சி இயக்குநர் 28 மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளார். இப்பணிகளைப் பயனாளிகளே செயற்படுத்துவதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும்.

**மில்லியன் கிணறுகள் திட்டம்:**

மில்லியன் கிணறுகள் திட்டம் 1.1.1996 முதல் தனித்திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

ஏழ்மை நிலையிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டோருக்கும் திறந்த வெளிப்பாசனக் கிணறுகள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின் கீழ்; மத்திய அரசு 1996-97ஆம் ஆண்டு நிதியாண்டுக்கு இதுவரை ரூ.1197.68 இலட்சம் நிதி விடுவித்தது. அதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்கான ரூ.299.42 இலட்சங்களை விடுவித்தது.

இத்திட்டத்தின் கீழ் பாசனக் கிணறுகளுக்கு மற்றும் குழாய்க் கிணறுகளுக்கும் (Open Wells and Tube Wells) மின் இணைப்பு வழங்குவதில் ஆதிதிராவிடர்/ பழங்குடி இனத்தைச் சேராத பயனாளிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்க ஆண்டுதோறும் தனியாக 1000 மின் இணைப்பு இலக்கு என்ற அடிப்படையில் வழங்க வேண்டும் என அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ★

**சிங்கிள் டெண்டர் முறை அகற்றி**
**பொது டெண்டர்**
**நடைமுறைப்படுத்திய**
**நல்லாட்சிக்கு எம் வாழ்த்து!**




**[illegible]**
**140, கிழக்கு ரத வீதி, திண்டுக்கல்-1.**



**மா**ண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ், தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டுள்ளதுபோல் கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத் துறைகளிலும் பல மக்கள் நலத்திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் நலன் பேணுவதைப்போல் கால்நடைகளின் நலன் பேணுவதிலும் கலைஞரின் அரசு சளைத்தது அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பல திட்டங்கள் கடந்த ஓராண்டு காலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### கால்நடை பராமரிப்புத் துறை

கால்நடைகளின் சுகாதாரம், நோய்த்தடுப்பு மற்றும் பராமரிப்பினைக் கருத்தில் கொண்டும், ஏழை விவசாயிகளின் நலன் கருதியும் கால்நடைகளுக்குப் போதிய வைத்திய வசதி ஏற்படுத்தும் பொருட்டு 1996-97ஆம் ஆண்டு 10 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனைகளாக உயர்த்தப் பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் மேலும் 20 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக உயர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதேபோல் 1996-97ஆம் ஆண்டு 10 புதிய கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 1997-98ஆம் ஆண்டில் மேலும் 60 இடங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நலன் கருதி, பிராணிகளுக்குக் குடற்புழு நீக்கல் (Deworming) சம்பந்தமாக முந்தைய அரசால் வசூலிக்கப்பட்ட கட்டணம் ரத்து செய்யப்பட்டு, குடற்புழு நீக்கம் இப்பொழுது எந்தவிதக் கட்டணமும் இன்றி இலவசமாக நிறைவேற்றப்படுகிறது. இதே போல் வளர்ப்புப் பிராணிகளின் (Pet Animals )சிகிச்சைக்காக முந்தைய அரசால் வசூலிக்கப்பட்ட மருத்துவக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. தொலைதூரக் கிராமங்களுக்கு உறைவிந்து எடுத்துச்செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, அத்தகைய கிராமங்களுக்கு 300 பொலிகாளைகளை ரூ.15 இலட்சம் செலவில் இலவசமாகக் கொடுத்து அந்தக் கிராம மக்கள் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தஞ்சை காயிதேமில்லத், திருவாரூர் ஏ.டி.பன்னீர் செல்வம், திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டங்களில் உபரியாக உள்ள வைக்கோலை ஊட்டச் சத்தாக மாற்ற 1000 செயல்விளக்கப் பயிற்சிப் பண்ணைகள் ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்துறையில் 1997-98லும் கீழ்க்கண்ட ஆக்கப் பணிகளைச் சீரிய முறையில் செயல்படுத்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன:

"டேனிடா' உதவியுடன் நடைபெறும் கால்நடை வளர்ப்புத் திட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராம்நாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், வ.உ.சிதம்பரனார் மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களில் 27.48 கோடி ரூபாய் செலவில் ஏழு ஆண்டுகளுக்குச் செயல்படும்.

கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய மூன்று மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளைப் பெரு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

2,126 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளின் கால்நடை உபகிளை நிலையங்கள் பணி புரிய ரூ.42.5 இலட்சம் செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

கால்நடை பராமரிப்புத் துறைப் பண்ணைகளில் தினக்கூலிகளாக 10 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணியாற்றி வந்தவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் 834 நபர்கள் பணி நிரந்தரம் பெறுவர்.

அயல்நாட்டு நிதி உதவியுடன் பல மேம்பாட்டுத் திட்டங்களும் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கித் திட்டத்தின் கீழ், நாட்டின் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும், பால் உற்பத்தியினைப் பெருக்கவும், உயரினப் பொலிகாளைகளின் உறைவிந்து 3510 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மூலம் கிராமங்கள் மற்றும் நகர்ப் புறங்களில் வழங்கப்படுகின்றன. உறை விந்தினைப் பாதுகாக்க 906 உறைவிந்துக் குடுவைகள் ரூ.144.86 இலட்சம் செலவில் பல்வேறு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அலுவலகப் பணியமைப்பிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எல்லாப் பணிகளுக்கும் பட்டியல் தயார் செய்யப்பட்டு உயர்பதவிகள் நிரப்பப் பட்டுள்ளன.

### கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தினை நிறுவிய பெருமை மாண்புமிகு தமிக முதல்வரைத்தான் சாரும். கலைஞர் ஆணையின்பேரில், 1989ஆம் ஆண்டில் இப்பல்கலைக்

**கால்நடை பராமரிப்பு-**
**மீன் வளம் -**
**பால் வளம்**

மீனவர்க்கு 4,000
இலவச வீடுகள் அளிக்கும்
எங்கள் அரசுக்கு
இதய வாழ்த்து!



ஸ்ரீ கந்தவிலாஸ் விபூதி ஸ்டோர்
34, அடிவாரம், பழனி.

கழகம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டுவருகிறது. பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு இப் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் பல இலட்ச ரூபாய்கள் அரசால் வழங்கப்படுகிறது.

1996-97ஆம் ஆண்டில் ரூ.1870.95 இலட்சம் வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டு 1929.73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவியர்களின் துயர் துடைக்கும் வகையில் மீன்வளக் கல்லூரி - ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி கால்நடை மருத்துவக் கல்லூரி- ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் ஆகிய இரண்டு கல்லூரிகளில் மாணவியர்களுக்கு விடுதி கட்டப்பட்டு வருகிறது.

இதற்காக அரசு ரூ.35 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

## மீன்துறை

மீன்துறையிலும் கடந்த ஓராண்டு காலத்தில் மீனவர்களின் ஒருங்கிணைந்த சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கும் மீன்வள அபிவிருத்திக்கும் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றுள் சில வருமாறு:

## மீனவர் நலத்திட்டங்கள்:

### ம. சிங்காரவேலர் நினைவு இலவச வீட்டு வசதித் திட்டம்:

மீனவர் சமுதாயத்திலே பிறந்து, மீனவர்களுக்காக உழைத்த திரு ம. சிங்காரவேலர் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில் 1996-97 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் மின்சார இணைப்புடன் கூடிய 4,000 வீடுகள் வீதம், 20,000 வீடுகள் கட்டி இலவசமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடு கட்டுவதற்கும் ரூ.32,000/ செலவிட அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதற்காக 1996-97ஆம் நிதியாண்டில் ரூ.11.80 கோடியும் 1997-98ஆம் நிதியாண்டிற்கு ரூ.12.80 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### மீனவர் வீடுகளைப் பராமரிக்கும் திட்டம்:

1975-76 முதல் ஏற்கெனவே இலவசமாக வழங்கப்பட்ட வீடுகளை ஏழ்மையின் காரணமாகப் பராமரிக்க இயலாத காரணத்தால் ஒரு பழுதடைந்த வீட்டிற்கு ரூ.5,000 வரை மான்யமாக ஒரு கோடி ரூபாய்க்கு 1996-97ல் ஒப்பளிப்பு அளித்து இத் திட்டத்தினை 1997-98லும் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது.

### உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம்:

தமிழகத்தில் முதல் முறையாக உள்நாட்டு மீனவர்களுக்கு ரூ.1.35 கோடி செலவில் 1997-98 ஆண்டில் 500 வீடுகள் கட்டிக்கொடுக்க ஜவகர்



ரோஸ்கர் திட்டத்துடன் இணைந்து செயல்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### மீனவர் கிராமங்களில் தெருவிளக்குப் பொருத்துதல்:

பெரும்பாலும் மீனவ கிராமங்கள் ஊராட்சி எல்லைப் பகுதியில் தனியாக இருப்பதால் அப்பகுதியில் போதுமான தெருவிளக்கு வசதிகள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு 1996-97இல் 158 மீனவர் கிராமங்களில் ரூ.50 இலட்சம் செலவில் 1250 தெரு விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 1997-98லும் இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ், அரசே முழு பிரிமியமும் செலுத்தி, இதுவரை மீனவர்கள் விபத்தில் இறந்தாலும் முழு ஊனமுற்றாலும் ரூ.25,000ம், பகுதி ஊனம் அடைந்தால் ரூ.12,500ம் நிவாரணத் தொகையாக வழங்கி வந்தது.

1996-97ஆம் ஆண்டு 25.3.97 முதல் இந்த நிவாரணத் தொகை ரூ.50,000க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

### ஒருங்கிணைந்த கடன் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்:

ஒருங்கிணைந்த கடன் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தில் முதல் கட்ட திட்டத்திற்கு 1996-97இல் ரூ.165.60 இலட்சம் வழங்கப்பட்டது. 1997-98ஆம் நிதியாண்டில் ரூ.177.729 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்டமாக (II Phase) இத்திட்டத்தின் கீழ், மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்பிடி கலன்கள்



வழங்குவதற்கு ரூ.48 கோடி தேசிய கூட்டுறவு நிதியுதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்துக் கடலோர மாவட்டங்களில் 100 மீனவர் கிராமங்களைச் சேர்ந்த 16,350 பாரம்பரிய மீனவர்கள் பயனடைவர்.

**மீனவர்களுக்குத் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்:**

இயற்கை இடர்ப்பாடுகளால் திசைமாறிச் செல்லும்போது பாதுகாப்பாகக் கரை சேருவதற்கு ஏதுவாக 25% மான்ய விலையில் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்க 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கரையோரத் தகவல் தொடர்பு நிலையங்கள்:**

மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகுகள் கரையுடன் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக சின்னமுட்டம் மற்றும் கடலூரில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.8.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களுக்கு மான்யம் வழங்கும் திட்டம்:**

இத்திட்டத்திற்காக 1996-97இல் இயந்திரத்தின் விலையில் 50% மானியத் தொகை அல்லது உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு முறையே உச்ச வரம்பு ரூ.12,000 அல்லது ரூ.10,000 என நிர்ணயிக்கப்பட்டு 1700 படகுகளுக்கு ரூ.1.70 கோடிக்கு நிதி அனுமதி வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.2 கோடி வழங்கப்பட உள்ளது.

**நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களுக்கு விலை ஏற்றத்தினை ஈடு செய்தல்:**

நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களின் அபரிமிதமான விலையேற்றத்தினைக் கருத்தில் கொண்டு 1997-98ல் மத்திய, மாநில அரசுகள் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரத்திற்கு வழங்கிவந்த மான்யத்துடன், உள்நாட்டு இயந்திரம் வாங்கக் கூடுதல் மான்யம் ரூ.2000 மற்றும் இறக்குமதி செய்யப்படும் இயந்திரம் வாங்க மான்யம்ரூ.3000 வீதம் வழங்க ரூ.49.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**பால்வளத் துறை**

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 24.10.96 முதல், ஏழை பால் உற்பத்தியாளர்களுக்குப் பசும்பால் மற்றும் எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கொள்முதல் விலையை அதிகரித்தது. இதனால் சுமார் 25 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பிஸ்தா மற்றும் ஸ்ட்ராபெர்ரி ஆகிய இரு புதுவகை நறுமணப் பாலும், மாம்பழச்சாறும் 200 கிராம் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விற்கப்பட்டு வருகிறது. சோளிங்கநல்லூர் பால்பண்ணையின் எல்லா கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு சுமார் 275 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் ரூ.705 இலட்சம் திட்ட மதிப்பில் ஒருங்கிணைந்த பால் பண்ணை மேம்பாட்டுத்திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.





இத்திட்டம் ரூ.465.50 இலட்சம் மதிப்பீட்டில் காமராசர் மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை திருவில்லிப்புத்தூரில் கட்டப்பட்டு வருகிறது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் ரூ.107 இலட்சம் மதிப்பீட்டில், அம்பத்தூர் பால்பண்ணையில் பாலைக் குளிர்விக்கத் தற்போது உபயோகப்படுத்தப்படும் பிரியான் வாயுவுக்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பிரியான் வாயுவை விட அம்மோனியா 'வாயு மலிவானதால் பாலைக் குளிர்விக்க ஆகும் செலவு குறைவாக இருக்கும். அம்மோனியா வாயு சுற்றுச்சூழலுக்கு ஏற்றது.

**இந்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்**

இந்த அரசு எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ.245.18 இலட்சங்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ.91.45 இலட்சங்களும் 100 விழுக்காடு மான்யமாக வழங்கியது.

இத்திட்டத்தினால் 1,27,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்தியது:**

1980-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் பணி மறுக்கப்பட்ட தொழிலாளர்களில்- இந்த அரசு 1989-ஆம் ஆண்டில் பதவியில் இருந்தபோது 370 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியது. மறுபடியும் இந்த அரசு 13.05.96இல் பதவியேற்ற பிறகு 1980-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பணி மறுக்கப்பட்ட மேலும் 300 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியது.

★




ஹோட்டல் நியூ ராஜேஸ்வரி
அண்ணா பஸ் நிலையம் அருகில்
மதுரை-20.

*10 ஆண்டுகள் பணிபுரிந்த*
*சுமைதூக்கும் தொழிலாளர்*
*நிரந்தரப் பணி நியமனம்*
*என்றுரைத்த அரசுக்கு*
*இதயபூர்வமான எமது நல்வாழ்த்து!*



**பக்கிரான்ஸ் பட்டு சென்டர்**
**மெயின் ரோடு, திண்டுக்கல்**



# வீட்டு வசதி!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1996-97ஆம் ஆண்டில், ரூ.247 கோடி செலவிட இலக்கு நிர்ணயித்து, ரூ.248.33 கோடி செலவு செய்துள்ளது; இவ்வாண்டில் மொத்தம் 20,500 குடியிருப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயித்து, 20,510 குடியிருப்புகளை உருவாக்கியிருக்கிறது.

### 20 அம்சத் திட்டம்

20 அம்சத் திட்டத்தின் கீழ், 3800 குடியிருப்பு களைப் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கும், 3500 குடியிருப்புகளைக் குறைந்த வருவாய் மக்களுக்கும் உருவாக்கிட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. வாரியத்தின் சாதனைகளாக 3,894 குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கும், 3,824 குடியிருப்புகள் குறைந்த வருவாய் மக்களுக்கும் இவ்வாண்டில் உருவாக்கப் பட்டன.

### சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வீட்டுவசதி

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வசிக்கும் மக்களின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 1996-97ல் 12 நகரங்களில் ரூ.40.83 கோடி செலவில் 4503 குடியிருப்புகளை உருவாக்கிட திட்டமிடப்பட்டது. இதன்படி, தற்போது 12 நகரங்களிலும் 4320 குடியிருப்புகளை ரூ.51.79 கோடி செலவில் உருவாக்கிட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 75 சதவிகித அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் 1997-98ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

### சார்பு நகரங்கள் உருவாக்குதல்

சென்னை நகரில் வளர்ந்துவரும் வீட்டுவசதித் தேவைகளைக் கருத்தில் கொண்டும், சென்னை நகரின் நெருக்கடியைக் குறைக்கவும், வீட்டுவசதி வாரியம், சென்னை நகரைச் சுற்றி-திருமழிசை, ஜமீன் பல்லாவரம், சோழிங்கநல்லூர் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சார்பு நகரங்களை உருவாக்கத் திட்டமிட்டது.

இதன்படி, திருமழிசையில் சுமார் 1450 ஏக்கர் நிலத்தைக் (தனியார் மற்றும் அரசு நிலங்கள்) கையகப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்துவருகிறது. சோழிங்கநல்லூரில் சுமார் 600 ஏக்கர் நிலத்தைக் (தனியார் மற்றும் அரசு நிலங்கள்) கையகப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், மாமல்லபுரத்தில் சுமார் 400 ஏக்கர் நிலம் (தனியார் மற்றும் அரசு நிலம்) கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஜமீன் பல்லாவரத்தில் நிலத்தடி நீர் வீட்டு உபயோகத்துக்கு ஏற்புடையதாக இல்லாமலிருப்பதால், இத்திட்டத்திற்குத் தேவையான நீரைத் தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத் திடமிருந்து பெற, கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்புதல் கிடைத்தவுடன், நிலம் கையகப்படுத்தும் பணிகள் துவங்கப்படும்.

### புதிய மாவட்டங்களில் வீட்டுவசதித் திட்டங்கள்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில் அரசு அலுவலர்களுக்கான வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டத் தலைநகரான பெரம்பலூரில் 276 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.8.21 கோடி செலவிலும், கரூர்-தீரன் சின்னமலை மாவட்டத் தலைநகரான கரூரில் 54 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.1.73 கோடி செலவிலும், திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டத் தலைமையிடமான திருவாரூரில் 36 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.0.86 கோடி செலவிலும் நாகை காயிதே மில்லத் மாவட்டத் தலைமையிடமான நாகப்பட்டினத்தில் 24 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.0.94 கோடி செலவிலும் மற்றும் திரு வண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைமை யிடமான திருவண்ணாமலையில் 138 அடுக்குமாடி





குடியிருப்புகள் ரூ.3.86 கோடி செலவிலும் செயல்படுத்தும் திட்டங்களுக்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**விட்டுவசதி வாரியத்திற்கு**
**ஹட்கோவின் பரிசு**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தான் செயற்படுத்திவரும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஹட்கோவிடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெற்றுவருகிறது.

"இந் நிறுவனம் தன்னிடம் கடன்வசதி பெறுகின்ற நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறமை, அவற்றின் தொழில் நுட்பம், நிர்வாகம், நிதி நிலைமைத் திறமைகளைக் கருத்தில்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ரீதியில் தேர்வுசெய்து பரிசீலனை வழங்கி ஊக்குவிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பரிசினைப் பெற்றுவருகிறது.

1996-97ஆம் ஆண்டில் நகர மேம்பாட்டுத் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தியதற்கு அகில இந்திய ரீதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தேர்வு செய்யப்பட்டு 25.4.97 அன்று பரிசு ஒன்று 'ஹட்கோ'வினால் வாரியத்திற்கு வழங்கப் பட்டது.

**பசுமைக் கால்வாய் முறை:**
**(GREEN CHANNEL)**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், தன்னிடம் கடன் வசதி பெறும் நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறமையை உறுதி செய்வதற்காக, அவற்றின் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் நிதி நிலைத் திறமைகளைக் கண்டறிந்தது.

அதாவது, அவற்றின் செயல்பாடுகளின் விளைவுகள், திறமை, நிர்வாகச் செலவுகள், கணக்குத் தணிக்கை, பணம் வசூல் நிலைமை, கடன்களைத் திருப்பிச் செலுத்தும் திறன், நிதி திரட்டும் திறன் ஆகியவற்றால் கணக்கிடப்படும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தரத்தினை ஆராய்ந்து, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இந்தியாவிலுள்ள வீட்டு வசதி வாரியங்களுக்குள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அதிகக் கணிப்புப் புள்ளிகளை வழங்கி, பசுமைக் கால்வாய் முறையைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்தி வருவதைப் பாராட்டும் விதத்தில் ஹட்கோ நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பசுமைக் கால்வாய் முறையை வழங்கி வாரியத்தைப் பெருமைப்படுத்தியுள்ளது.

**1997-98 ஆம் ஆண்டுக்காக**
**அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மீது**
**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

**நிலவங்கித் திட்டங்கள்**

அரூர், பாலக்கோடு, ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருவில்லிப்புத்தூர், சங்கரி, பெரியகுளம், தேனி, ஒட்டன்சத்திரம், ராஜபாளையம், தென்காசி ஆகிய 12 நகரங்களில், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்காக 1178 மனைகள் உருவாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன, மற்ற 3 நகரங்களில் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**சென்னை வில்லிவாக்கத்தில்**
**பலமாடிக் கட்டிடம்**

சென்னை, வில்லிவாக்கத்தில் மாடி வீடுகள் மற்றும் கடைகள் அடங்கிய பதினோரு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**சேலம் நகரில் வீட்டுவசதித் திட்டம் :**

சேலம் நகரப் பேருந்து நிலையத்திற்கு அருகில் 1.07 எக்டேர் நிலத்தில் உயர் வருமானக் குடும்பங்களுக்கு 93 'ஏ' வகை அடுக்குமாடி வீடுகளும் நடுத்தர வருமான குடும்பங்களுக்கு 75 'ஏ' வகை அடுக்குமாடி வீடுகளும் HDFC நிதியுதவியுடன் கட்டுவதற்கான திட்டம் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



**ஏர்க்காடு மலைப்பகுதியில்**
**வீட்டு வசதித்திட்டம்:**

ஏர்க்காடு வட்டத்தில் உள்ள கக்கம்பாடி கிராமத்தில் 7.18 எக்டேர் நிலத்தில் 72 தொகுப்பு வீடுகளும், நடுத்தர வருமானப் பிரிவினருக்க 58 வீடுகளும் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 259 வீடுகளும் கட்டுவதற்கான தோராய நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வாரியத்தின் ஒப்பு தலுக்காக வைக்கப்படவுள்ளது.

**கோயம்புத்தூர் அருகே**
**பெரியநாயக்கன்பாளையத்தில்**
**பெரிய அளவிலான**
**நில மேம்பாட்டுத் திட்டம்**

கோயம்புத்தூர் அருகே, பெரிய நாயக்கன் பாளையத்தில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான நில - வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**ஒசூரில் நில மேம்பாட்டுத்திட்டம்**

ஒசூரில் பெரிய அளவிலான மனை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவதற்கான பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு வருமானப் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக 1,583 மனைகள் உருவாக்கப்படும்.

**கோயம்புத்தூரில் நில மேம்பாட்டுத்திட்டம்**

கோயம்புத்தூரின் அருகே காளப்பட்டியில் மொத்தம் 926 மனைகள் மேம்படுத்தும் திட்டத்திற்கான தோராய மதிப்பீடு சேலம் சரக மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டு, வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. விரைவில் வாரியக்கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படும்.

**காரைக்குடியில் நில மேம்பாட்டுத் திட்டம்:**

காரைக்குடி அருகே கழனிவாசல் கிராமத்தில், பல்வேறு வருவாய்ப் பிரிவினரும் பயனடையும் விதமாக 484 மனைகள் ரூ.205 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

**அரசின் கடைநிலை ஊழியருக்கான**
**வீட்டு வசதித் திட்டம் :**

அரசுப்பணியிலுள்ள கடைநிலை ஊழியர்களின் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு,சென்னையிலும் மதுரையிலும் 100 அடுக்கு மாடி வீடுகள் ரூ.150 இலட்சம் செலவில் கட்டும் திட்டம் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. முதல் கட்டமாக, சென்னை மேஜர் டிரஸ்ட்புரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நில வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**வாரியப் பணியாளர்களுக்கு**
**சென்னையில் வீட்டு வசதி**

சென்னையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களின் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, ஜாபர்கான்பேட்டையில் 48 அடுக்குமாடி வீடுகள் ரூ.214.68 இலட்சம் செலவில் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, வாரியக்கூட்டத்தின் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளது.


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002

**ஆதிதிராவிட மாணவர்க்கு**
**40 புதிய மாணவர் இல்லம்**
**கட்டித்தர வகை செய்த**
**தமிழ்நாடு அரசுக்குத்**
**தலை வணங்குகிறோம்!**




**சேது இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி**
**393, அண்ணா நகர்,**
**மதுரை - 625 020.**



# குடிசைப்பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி, குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதி மக்களை மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்து மாற்றிடங்களில் குடியமர்த்துதல் போன்ற பணிகளை நிறைவேற்றிவருகின்றது. இத் திட்டப்பணிகள் மாநில மற்றும் மைய அரசின் மானியத்துடனும், 'அட்கோ' நிறுவனத்தின் கடனுதவியுடனும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1996-97ஆம் ஆண்டில் 31,200 குடும்பங்கள் பயனடையும் வகையில் திட்டப்பணிகளுக்காக ரூபாய் 30.95 கோடி செலவிட வாரியம் திட்டமிட்டுள்ளது. 1997-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய திட்டப் பணிகளுக்காக ரூபாய் 23.34 கோடி வாரியம் செலவிட்டுள்ளது.

குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ், ரூபாய்7.48 கோடி செலவில் 2,004 குடும்பங்களும், நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூபாய் 6.34 கோடி செலவில் 140 குடும்பங்களும் பயனடைந்துள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 3.81 கோடி செலவில் 3,293 குடும்பங்கள் பயனடைந்துள்ளன; விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 2,779 கோடி செலவில் 13,500 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரொக்கக் கடன் வசதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 19.97 இலட்சம் செலவில் 231 குடும்பங்களும், நில வங்கித் திட்டத்தின்கீழ் ரூபாய் 27.39 இலட்சம் செலவில் 513 குடும்பங்களும் பயனடைந்துள்ளன.

## 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

1. சென்னை மாநகரில் கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி நல்லா, மெரினா கடற்கரை மற்றும் துரித இரயில் போக்குவரத்துப் பகுதி 2ல் வசிப்பவர்கள் மற்றும் நடைபாதையில் குடும்பம் நடத்தும் ஏழைகள் ஆகியோருக்கு மாற்று இடமாகச் சென்னைக்கு அருகில் ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் செம்மஞ்சேரி ஆகிய பகுதிகளில் ரூ.204 கோடி செலவில் 14,500 குடியிருப்புகள் கட்டுதல்.
2. இந்த நிதியாண்டில் சென்னையில் 18 குடிசை மாற்று வாரியப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல்.

## வீட்டுவசதி கூட்டுறவுச்சங்கங்கள்:

வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் 14.5.96 முதல் 30.4.97 வரை கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் 50,949 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 229.19 கோடி கடனுதவி வழங்கியுள்ளது. அதில், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்காக ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 30,399 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 32.47 கோடி கடனுதவியும், குறைந்த வருவாய்ப் பிரிவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1,398 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 7.23 கோடி கடனுதவியும், நடுத்தர வருவாய்ப்பிரிவு (ஊரகப் பகுதி) வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1,689 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 12.66 கோடி கடனுதவியும், வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் 2,141 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 1.26 கோடி கடனுதவியும் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 13,828 வீடுகளும் கட்டுவதற்கு ரூபாய் 173.79 கோடி கடனுதவியும் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ளன.

இதுதவிர, ஊரக வீடுகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (சுப்ரா) 1,276 வீடுகளுக்கு ரூ.1.48 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி வீடுகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 218 வீடுகளுக்கு ரூபாய் 0.30 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குதல், கடன் வசூல், வைப்புத்தொகை திரட்டுதல், வீடுகள் கட்டி முடித்தல் போன்றவற்றில் இதர மாநில வீட்டுவசதி இணையங்களைக் காட்டிலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதால் 1996-97ஆம் ஆண்டில் சிறந்த வீட்டுவசதி இணையமாகத் தேர்வு செய்யப்பட்டு 'அட்கோ' நிறுவனக் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

## 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்:

1. நகர்ப்புறத்தைச் சுற்றியுள்ள சிறிய மற்றும் பெரிய கிராமங்கள் ஆகியவற்றில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற - பின்தங்கிய மக்கள் வீட்டுவசதி பெறுவதற்குக் கடனுதவி அளிக்கும் திட்டம்.
2. ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்க்கு 45,000 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 63.23 கோடி கடனுதவி அளித்தல்.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

சென்னை-கோயம்பேட்டில் அழகுபொருள் அங்காடி சுமார் ரூ.77 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 28.8.1996ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்த அங்காடியில் கனிகளுக்காக 456 கடைகளும், பூக்களுக்காக 456 கடைகளும், காய்கறிகளுக்காக 1,422 கடைகளும், மொத்தம் சுமார் 65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. இவைதவிர- காவல் நிலையம், தபால்/தந்தி நிலையம், தொலைபேசி நிலையம், வங்கி முதலிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ரயில் வசதியைப் பெருக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரை உள்ள ரயில் பாதையை மேலும் வேளச்சேரி வரை சுமார் 10.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.605 கோடி செலவில் நீட்டிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. 1996-97ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.50 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டம் சுமார் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்படும். சென்னை கடற்கரையிலிருந்து இரயில்கள் சேப்பாக்கம் வரை தற்போது இயங்கிவருகின்றன. மேலும் இரயில்களை சேப்பாக்கம் முதல் திருமயிலை வரை இயக்குவதற்கு வேண்டிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. திருமயிலையிலிருந்து திருவான்மியூர் வரை, சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரயில்பாதை அமைக்க சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கீழ் உள்ள பணி ஒப்பளிப்புக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. இரயில்வே துறையும் பூர்வாங்கப் பணிகளைத் துவக்கியுள்ளது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான மீதமுள்ள 3.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரயில் பாதை அமைக்க ஆய்வுப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

வெளிவட்டச்சாலை அமைக்கும் பணியில் பல்லவன் போக்குவரத்துக்கழக ஆய்வுக்குழு நில எடுப்பு சம்பந்தமான ஆய்வை வண்டலூரிலிருந்து ஆவடி வரை, சுமார் 29 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆய்வுப்பணியை முடித்துள்ளது. இதன் அடிப்படையில் நில எடுப்புக்கான பணிகள் துவக்கப் பட்டுள்ளன.

### 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்:

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் ரூ.326 கோடி செலவில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ரூ.98 கோடி செலவில் கட்டப் படவுள்ள புறநகர் பேருந்து நிலையம் மற்றும் கோயம்பேட்டில் மேம்பாலம், ரூ.44 கோடி செலவில் பெரம்பூர் மற்றும் நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகளில் கட்டப்படவுள்ள மேம் பாலங்கள் ரூ.21 கோடி செலவில் சூளைமேடு மற்றும் ஈக்காடுதாங்கல் ஆகிய பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆகியவை அடங்கும். ரூ.200 கோடிக்கான கூடுதலான திட்டங்களுக்கு 1997-98ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்படும்.

2. குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகள், வணிக வளாகம் தமிழ்நாட்டிலுள்ள நகர உள்ளாட்சி அமைப்புகளில் போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு





நகர உள்ளமைப்பு நிதி வசதி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மாநில அரசின் பங்கு ரூ.120 கோடியாக இருக்கும். மற்றும் அகில இந்திய நிதிநிறுவனங்களின் பங்கு ரூ.50 கோடியாக இருக்கும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்நிறுவனத்திலிருந்து ரூ.60 கோடி வரை கடன்கள் வழங்கப்படும். இவை தவிர, நகர்ப்பகுதியில் உள்ள ஏழைகள் பயன்பெறும் வகையில் திட்டங்களுக்கு மானிய நிதிஉதவி அளிக்கும் வகையில் ரூ.30 கோடிக்கு மான்ய நிதி ஏற்படுத்தப்படும்.

3. மத்திய இரயில்வே வரவு - செலவு ஒதுக்கீட்டில் பெருமளவு விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் 2-வது நிலைக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று மாநில அரசும் 1997-98 வரவு செலவு ஒதுக்கீட்டில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே, லஸ் முதல் வேளச்சேரி வரையிலான 2வது நிலை பெருமளவு விரைவு ரயில் போக்குவரத்துத்திட்டம் நிறைவேற்றும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

## நகர் ஊரமைப்புத்துறை

### 1996-97ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

சிறு நகரங்களுக்கு-அதன் எல்லைக்கும், பெரிய நகரங்களுக்கு-நகர் மற்றும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப் படுகின்றன. நகரப் பகுதிகளில் உள்ள நிலங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்துதல், அவற்றைப் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகளுடன் இணைத்தல் ஆகியவை முழுமைத் திட்டங்களின் நோக்கமாகும். அத்தகைய முழுமைத் திட்டங்கள் 105 நகரங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளன.

விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் வளர்ந்து வரும் நகரத்தில் குறிப்பிட்ட பகுதிகளுக்குத் தயாரிக்கப் படுகின்றன. தற்போதுள்ள நிலப்பயன், உத்தேச நிலைப்பயன், பல்வேறு பயன்களுக்குத் தேவையானதும், சமுக, கல்வி, பொழுதுபோக்கு, செய்தித் தொடர்பு மற்றும் சாலைகள் ஆகிய அடிப்படை கட்டமைப்புக்குத் தேவையான நிலங்களையும் ஒதுக்கீடு செய்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இத்துறை, இதுகாறும் 1,384 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்துள்ளது.

புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மாமல்லபுரம் போன்ற மரபு வழி பெருமையடைந்த பகுதிகளுக்கும், தொழில் துறையில் மிக விரைவாக வளர்ந்து வரும் ஓசூர் போன்ற நகரங்களுக்கும் தயாரிக்கப் படுகின்றன. இதுகாறும், ஐந்து புது நகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஊரகப்பகுதி மக்களுக்குத் தேவையான குறைந்த பட்ச அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றும் வட்டாரத்திட்டங்கள் இதுகாறும் இருபத்தி ஒன்பது தயாரிக்கப்பட்டுள்ளன.

கட்டமைப்புத் திட்டங்கள் நகரங்களில் காணப்படும் கட்டமைப்புகளின் குறைகளை ஆராய்ந்து, அவற்றைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் முதலீடுகளையும் தெளிவுபடுத்து கின்றன. இதுகாறும் 60 கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான திட்டங்கள், மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்பாடு திட்டங்களுக்கும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்ட நிதி உதவியுடன் 30 நகரங்களுக்கு வான்வழிப் புகைப்பட விவரங்கள் பெறப்பட்டுள்ளன. தனித் திட்டமாக நீலகிரி மாவட்டத்திற்கும் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மற்றும் வேலூர் நகரங்களுக்கு அத்தகைய படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடலோரப்பகுதி மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.

26 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் நான்கு பெரு நகரங்களுக்கும் ரூ.58.95 இலட்சம் செலவில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் போக்குவரத்து இயக்கம் மற்றும் மேலாண்மைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 22 நகரங்களுக்குப் போக்குவரத்துச் செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு-திட்டங்களைச் செயலாக்கும் வகையில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1997-98ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

1. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் உள்ளூர் திட்டக்குழுமங்கள் அமைத்தல்,

2. பழனி, திருத்தணி, கும்பகோணம், இராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவண்ணா மலை, காஞ்சிபுரம், பூம்புகார், சிதம்பரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய நகரங்களுக்கு மேம் பாட்டுத்திட்ட அறிக்கை தயாரித்தல்.

3. பொன்னேரி, செங்கம், உளுந்தூர்பேட்டை, தேன்கனிக்கோட்டை, பெருந்துறை, உசிலம் பட்டி, வேடசந்தூர், பாபநாசம், பெரம்பலூர், கொளத்தூர் ஆகிய 10 வட்டங்களில் நடுத்தர நகரங்கள் அமைக்க ஆய்வு செய்தல்.



60 வயதுக்கு மேற்பட்ட நெசவாளர்க்கு
ரூ.150 ஒய்வூதியம்
அளிக்க முன்வந்த
அரசுக்கு நல்வாழ்த்து!


தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்
கனககமுட்லு, அஞ்சல் பெட்டி எண்.13
சேலம் மெயின் ரோடு, கிருட்டிணகிரி.


(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெய்வேலி அனல்மின் நிலையம் ஒன்றை விரிவுபடுத்துவதிலிருந்து 168 மெகாவாட்.

இராமகுண்டத்திலுள்ள கூடுதல் பிரிவிலிருந்து 138 மெகாவாட்.

உத்திரப்பிரதேசத்திலுள்ள "ரிகாண்டு" அனல் மின் நிலையத்திலிருந்து 318 மெகாவாட்.

இவ்வாறு நமது அரசு, இம் மாநிலத்திலுள்ள மின் உற்பத்தி ஏற்ற நிலையிலிருக்க உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

**வரி சீர்த்திருத்தங்கள்:**

தொழில் வளர்ச்சியையும், வணிகத்தையும் ஊக்குவிப்பதற்கு, நிலையான தெளிவான இணக்கமான வரிவிதிப்பை உருவாக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை ஒன்றை அறிவித்தார். அதற்கிணங்க, விற்பனை வரி விதிப்பு முறையில் பல சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டன. பல இனங்களைப் பொறுத்தவரையில் வரிகள் குறைக்கப்பட்டன. இந் நடவடிக்கைகளை வணிக மற்றும் தொழில் நிறுவனங்கள் வரவேற்றுள்ளன. இந்த நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:




வரி வீதங்கள் பெருமளவு தெள்ளத் தெளிவாக இருக்கச் செய்வதற்கும், வரி விதிப்பு மற்றும் வசூல் எளிதாக இருக்கச் செய்வதற்கும், வரிவீதப் படிமுறையையும் சீரமைத்தல்.

வரிவிதிப்பிற்கு அதி நவீன முறையையும், நடைமுறைகளையும் கொண்டுவருதல்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்க உதவி அளிக்க வகை செய்தல்; உள்ளூர் கொள்முதல் உள்ளூர் தயாரிப்பு ஆகியவற்றை ஊக்குவித்தல்.

விலக்களித்த, இணக்கவரி விதித்தல், சுயவரி மதிப்பீடு நடைமுறைகள் ஆகியவைகளில் எண்ணற்ற சிறுதொழில் வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

வீட்டுத் தேவைப் பொருட்கள் மீதான வரிச்சுமையைக் குறைத்தல்.

இதன் பயனாக, பல பொருட்களுக்கு வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஏனைய பல பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டது. மேல்வரி முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டது. வணிகர்களுக்குத் தொடர்ந்து எரிச்சலூட்டிய பல்முனை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. ரூபாய் பத்து இலட்சம் அல்லது அதற்குக் குறைவாக விற்றுமுதலைக் கொண்ட வரிவிதிக்கப் பெறுபவர்களுக்கு சுயவரி மதிப்பீடு நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

**சாலை அடிப்படை வசதி:**

தமிழ் நாட்டிலுள்ள சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும், அவற்றை வலுப்படுத்துவதற்காகவும், "உத்திகளைத் தேர்வு செய்யும் ஆய்வு" என்ற திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. 23 பகுதிகளில் 3,250 கி.மீ. நீளமுள்ள சாலைகள் கண்டறியப்பட்டன. 375 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தொடர்பான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கவும் விரிவான பொறியியல் வடிவமைப்பை உருவாக்கவும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஊரக வளர்ச்சி:**

தொழில் வளர்ச்சி என்பது அரசு முக்கியத்துவம் செலுத்திவரும் ஒரு துறையாக இருந்தபோதிலும், ஊரக வளர்ச்சியிலும் இந்த அரசு இதற்கு நிகராக முக்கியத்துவத்தை அளித்துவருகிறது. "ஊரக வளர்ச்சிக்காக" 1997-98ஆம் ஆண்டில் மாநில அரசுத் திட்டங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்காக ரூ.789.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 74,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு "கான்கிரீட்" கூறைகள் அமைப்பது என்ற தனித்தன்மையைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் சுமார் 5000 கி.மீ. தொலைவுள்ள கிராம மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அமைக்கப்பட்டன.

முதியோர் கல்வியை மேம்படுத்தவும், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதோடு, கிராமங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கிராமப்பகுதியிலுள்ள இளைஞர்கள் பணியைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் மக்கள் நலப் பணியாளர்கள் பதவிகள் 35,000த்தை ஏற்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஊராட்சியிலும், ஆண் பணியாளர் ஒருவரும் பெண் பணியாளர் ஒருவரும் இருப்பர்.

கிராமங்களைப் படிப்படியாக மேம்படுத்தும் நோக்குடன், "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டமன்றப் பேரவைத் தொகுதி ஒவ்வொன்றிலும் ஒரு கிராமம் ஒவ்வோர் ஆண்டிலும் தெரிவு செய்யப்பட்டு, அனைத்து ஊழியர்களுடன் கூடிய நவீன கிராமமாக மேம்படுத்தப்படும்.

''சுய உதவி'' என்ற மனப்பான்மையை மக்களிடையே உருவாக்க வழிகோலும் பொருட்டு "மனு நீதித் திட்டம்" என்ற பொதுமக்கள் தொடர்புத் திட்டம் புத்துயிர் அளிக்கப்படும். இவ்வாறு செய்வதன் மூலம், மக்கள் அவர்களுடைய தேவைகளை அவர்களே நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்கள் முன்வருவர்.

**மனித வள மேம்பாடு:**

300 அல்லது அதற்கு மேற்பட்டு மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலிருந்து ஒன்று முதல் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவுப் பகுதிக்குள் தொடக்கப்பள்ளி, ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. தரமான தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்ற கொள்கைக்




கிணங்க, 1996-97ஆம் ஆண்டில் 85 புதிய தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவும், 21 தொடக்கப்பள்ளிகளை நடுத்தரப் பள்ளிகளாக தரமுயர்த்தவும், 1997-98ஆம் ஆண்டில், 168 தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவும், 41 தொடக்கப் பள்ளிகளை நடுத்தரப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான நடைமுறையைச் சீராக்கி முறைப்படுத்தப்பட்டுள்ளது. 4 முதல் 5 ஆண்டுகளாகக் காலியாக இருந்த 11,652 இடைநிலை ஆசிரியர் பதவிகள் கடந்த ஆண்டில் நிரப்பப்பட்டன.

கல்லூரிப் பட்டப்படிப்பு படித்தவர் எவருமில்லாத குடும்பங்களிலிருந்து அதிக மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு, தொழிற்கல்வி பயிலுவதற்காகும் செலவுத் தொகையை அரசே ஏற்றுக்கொள்ள உறுதி செய்யும் வகையில், அரசு, புதிய திட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்த ஆண்டு முதற்கொண்டு உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்விலும், பிளஸ் 2 வகுப்பு இறுதித் தேர்விலும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடத்தைப் பெறும் மாணவர்களின் உயர்கல்விக்கான செலவை ஏற்றுக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

**சுகாதாரம்**

தொடக்க சுகாதார மையங்களுக்காக 600 கட்டடங்கள் கட்டும் விரிவான திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. இதனால் மாநிலத்திலுள்ள 1420 சுகாதார மையங்களுக்கும் உரிய கட்டடங்கள் இருக்கும். 124 தொடக்க சுகாதார மையங்கள் நாள் முழுவதும் பணிபுரியும் வகையில் அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்குக் குறைந்தது ஒரு மையம் என்ற வீதத்தில் 420 தொடக்க சுகாதார மையங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

**ஊரகக் குடிநீர் வழங்கல்**

இவ்வரசு ஊக்கமிகு திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்கு முன், இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் நாளொன்றுக்கு 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதோடு, தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத கிராமங்களே கிடையாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தும். 1997-98ஆம் ஆண்டிற்கு மட்டும் இந்நோக்கத்திற்காக ரூ.250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**
**மகளிருக்குப் பண உதவித் திட்டங்கள்**

ஏழை விதவைகளின் மகள்களின் திருமணத்திற்கு ரூ.2,000 அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக, 1997-98ஆம் ஆண்டில் ரூ.21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவியை, அரசு ரூ.5000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 8ஆம் வகுப்பும், அதற்கு அதிகமாகவும் படித்துள்ள ஏழைப் பெண்களின் திருமணத்தின்போது ரூ.10,000 அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக இவ்வாண்டில் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 20,000 ஏழைப் பெண்கள் பயனடைவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், அரசு ரூ.5.81 கோடி ஒதுக்கியுள்ளது.

பயனடைவோர் ஒருவருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கருவுற்ற காலத்தில் கடைசி இரு மாதங்களுக்கும், குழந்தை பிறந்த பின்னர் இரு மாதங்களுக்கும் ஏழை மகளிருக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்ய இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

சுய உதவி குழுக்கள் அமைப்பின் மூலம் பெண்களிடையே சுய வேலைவாய்ப்பைப் பெருக்கும் பொருட்டு, இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் படிப்படியாக விரிவாக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. நிறுவன நிதியுதவி உட்பட இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.1440 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் மகளிர் 5 ஆண்டுக் காலத்தில் பயனடைவர்.

முன்னோடி அடிப்படையில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் 50 மகளிர் நல மையங்கள் ஏற்படுத்தப்படும். சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், எழுத்தறிவு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்களை இம்மையம் நடத்தும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடர்களுக்கான திட்டங்கள்

நம்முடைய அரசு, இம் மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர் மற்றும்




பழங்குடியினரின் நலனுக்காக எப்போதும் செயலாற்றிவருகிறது. ஒடுக்கப்பட்ட இந்த வகுப்பினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கல்வி முன்னேற்றம் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு நம்முடைய அரசு உயர் முன்னுரிமை அளித்துவருகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் நலனுக்காக 1997-98ஆம் ஆண்டு மாநில வரவு செலவுத் திட்டத்தில் 334 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்காக நடப்பாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 64.3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகக் கடந்த ஆண்டில் மட்டும் மாணவரில்லங்கள் புதிதாகத் திறக்கப்பட்டன; இந்த மேலும் மாணவர் இல்லங்கள் 40 திறக்கபபட்டுவருகின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகக் கடந்த ஆண்டில் 45 புதிய மாணவரில்லங்கள் திறக்கப்பட்டன. வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் அனைத்திற்கும் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக மாணவரில்லம் ஒன்று புதிதாக இந்த ஆண்டில் திறக்கப்பட இருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்துகின்ற அனைத்து மேனிலைப்பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடக் கட்டிடங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமுதாயத்தில் வறிய நிலையிலுள்ள ஏனைய பிரிவினர் ஆகியோருக்கு இலவச வீட்டுமனைகளை வழங்கும் பெருந்திட்டம் ஒன்று 30 கோடி ரூபாய் மதிப்பீட்டு செலவில், இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் தடவையாக இத்திட்டம் எல்லா வகுப்புப் பிள்ளையையும் சேர்ந்த வறிய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.




**ஓராண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

கடந்த ஓராண்டில் இந்த அரசு கொண்டு வந்துள்ள, புதிய திட்டங்களும், நடைமுறையிலுள்ள திட்டங்களில் செய்துள்ள மேம்பாடுகளும் எண்ணற்றவை. அவையனைத்தையும் நாம் பட்டியலிட முயன்றால், அது மிக நீண்டதாக இருக்கும். நாம் எந்த இலக்கை நோக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதே மேலே விரித்துரைக்கப்பட்டதன் நோக்கமாகும். இந்த அரசு, அதனிடம் அளிக்கப்பட்டுள்ள அளப்பரிய பொறுப்பினையும் நேர்மையான, திறமையான மற்றும் தூய அரசு ஆட்சி புரிய மக்கள் கொண்டுள்ள அதிக எதிர்பார்ப்புகளையும் உணர்ந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் திறமை வாய்ந்த செயலாண்மையின் கீழ் இயங்குகின்ற இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படும் என்பதில் ஐயமில்லை.

# நிதித்துறையின் சாதனைகள்

**போ**னஸ் சட்டத்தில் உச்ச வரம்பு குறித்து எந்தத் திருத்தமும் செய்யாத நிலையிலும், தமிழ்நாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் போனஸ் பெறும் வகையில் 'போனஸ்' சட்டத்திலுள்ள ரூ.3,500 என்ற ஊதிய உச்ச வரம்பினை நீக்கி ஆணை பிறப்பித்தது.

அரசுத் துறை நிறுவனங்களில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (TENDER) மற்றும் கொள்முதல் ஒப்பந்தம் ஆகியவை அரசின் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்பட வேண்டும் என்ற ஆணையினை ரத்து செய்ததன்மூலம், பணிகள் துரிதமாக நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

மாநிலப் பொது நிறுவனங்களில் முதலீட்டு உச்ச வரம்பினை 'அ' இனத்திலுள்ள நிறுவனங்களுக்கு ரூபாய் 2 கோடி ஆகவும், 'ஆ' இனத்திலுள்ள வைகளுக்கு ரூபாய் ஒரு கோடி ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் செய்யும் முதலீட்டுக்கே 'அரசின் திட்ட முதலீட்டுக் குழுவினர்' முன் அனுமதி பெறவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தொழில் முனைவோரின் திட்டங்கள் துரிதமாகச் செயல்படுத்த ஏதுவாகும்.

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து நிறுவனங்களுக்கு, அரசு ரூ.91.50 கோடி அதிக மூலதனமாக வழங்கியும் அரசுக்கு வர வேண்டிய கடன் பாக்கி ரூ.110.94 கோடியை மூலதனமாக மாற்றியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து நிறுவனங்களின் கடன் சுமை குறைந்து, அதிக அளவில் புது வண்டிகள் வாங்கி ஓட்டி மக்களுக்குச் சிறந்த சேவை செய்யும் ஏற்பாட்டினை இவ்வரசு செய்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களைச் சீர்திருத்தி அமைக்கும் பொருட்டு, நான்கு நபர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரை கிடைத்த பிறகு, பொது நிறுவனங்களின் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



அன்னை இந்திரா - சத்தியா சமூகநல மகளிர் மன்றம்
கீழ்க்கண்டனி கிராமம், சிவகங்கை வட்டம்
பசும்பொன் மாவட்டம்




3 பேர் உள்ள குடும்பத்திற்கு
20 கிலோ அரிசி வழங்கிடும்
நல்லாட்சிக்கு எங்கள் நல்வாழ்த்துகள்!

8ஆ-ம் பக்கத் தொடர்ச்சி

மனிதநேய உணர்வுடன் வாழ வேண்டும் என்ற அரசின் கொள்கையின் செயலாக்கத்திற்குத் துணைபுரிய அதிவிரைவுப் படையொன்று காவல் துறையின் ஒரு பிரிவாக அமைக்கப்படும். முதல் கட்டமாக நடப்பாண்டில் கோவையில் இருநூறு பேருடன் இப்பிரிவு தொடங்கப்படும்.

**சுற்றுலா**

- இடைக்காலத்தில் பாழ்பட்டுப்போன பூம்புகாரைப் புதுப்பிக்க முதல் கட்டமாக ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு.

**காவல்துறை**

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 10,000 காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியினை முடித்துள்ளது. இந்த 10,000 காவலர்களில் 3,360 காவலர் பதவிகள் பெண் காவலர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 3,360 பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 1,686 பெண் காவலர்கள் முதல் கட்டமாகப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு உள்ளனர்.
- இனக் கலவரங்கள் குறித்த விவரங்கள் அனைத்தையும் முன்கூட்டியே சேகரித்து, தகுந்த தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அதிவிரைவுப்படை ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு எடுத்து அதற்காக ஆணையினையும் வெளியிட்டு முதல் கட்டமாக 275 காவலர்கள் அடங்கிய அதிவிரைவுப்படை முறைப்படி 28.3.97 அன்று ஆவடியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- வன்முறைக் கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும், அமைதியையும், இன நல்லிணக்கத்தையும்பேணி வருவதற்கும் வகை செய்யும் பொருட்டு, வட்ட அளவிலேயே, சமயத் தலைவர்கள் உட்பட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மூத்த பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய அமைதிக்குழுக்களை ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும் அரசு ஆணையிட்டுள்ளது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் - ஒவ்வோராண்டும் பள்ளி இறுதித் தேர்விலும், 12ஆம் வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.6000, ரூ.4000, ரூ.2000 வீதம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

- 'மக்கள் நலப்பணியாளர்கள்' மற்றும் 'நகர் நலப் பணியாளர்கள்' திட்டத்தினைப் புதுப்பித்து-அதன்படி ஆண், பெண் இருவரிலும் 25,000 பேரைக் கிராமப்புறத்திலும், 10,000 பேரை நகர்ப்புறத்திலும் ஆக மொத்தம் 35,000 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை மக்களிடையே பரப்பி விழிப்புணர்வு வளர்க்கும் பணியை மேற்கொள்ள ஆணையிடப் பட்டுள்ளது.




- உத்தமர் காந்தி பெயரில் காவல்துறைப் பதக்கம் வழங்கும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. கள்ளச் சாராயத்தைத் தடுப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணிபுரிந்த காவல்துறைப் பணியாளர்களுக்கு இப் பதக்கம் வழங்கப்படும்.








**தீயணைப்புத் துறை**

- கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது 21 புதிய தீயணைப்பு நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசு ஆணை உடனடியாக வெளியிடப்பட்டு அனைத்து இடங்களிலும் முப்பதே நாட்களில் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன.
- தீயணைப்புத் துறை இயக்குநர் முதல், தீயணைப்போர் வரையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், பணியில் ஈடுபட்டிருக்கும்போது, இறக்க நேரிட்டால் ஒவ்வொரு குடும்பமும் ரூ.1,00,000 பெறும் வகையில் குழு காப்பீட்டுறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தீயணைப்புப் பணியாளர்களுக்கு அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர், வண்ணாரப்பேட்டை, நந்தனம் ஆகிய இடங்களில் மட்டுமே குடியிருப்புகள் உள்ளன. ரூபாய் 72.47 இலட்சத்தில் தர்மபுரியில் 36 குடியிருப்புகளையும், ரூபாய் 2.17 கோடி செலவில் நாகப்பட்டினத்தில் 30 குடியிருப்புகளையும், பெரம்பலூரில் 31 குடியிருப்புகளையும்.
- சென்னை அண்ணா நகரில் (மேற்கு) 39 குடியிருப்புகளையும் மற்றும் ரூபாய் 2.20 கோடி செலவில் மயிலாப்பூரில் 25 குடியிருப்புகளையும். மணலியில் 27 குடியிருப்புகளையும். தாம்பரததில் 13 குடியிருப்புகளையும், மதுரையில் 36 குடியிருப்புகளையும் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. அவைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. தீயணைப்புப பணியாளர்களுக்கு 177 இடங்களில் ரூ.94.23 கோடி செலவில் 3141 குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சமூகக் காப்பீட்டுத்திட்டங்கள்**

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பாண்டில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 20,000 தம்பதியர் பயனடைவர்.
- இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி அளிக்கப்படும்.
- வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள, ஊனமுற்றவர்களுக்குச் செயற்கைக் கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதல்மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 அளிக்கப்படும்.

**அரசு அலுவலர் நலன்**

- முன்னாள் கிராம அதிகாரிகளின் பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்க்கும் வகையில் 5.12.1986 முதல் மாதந்தோறும் ரூ.175 ஓய்வூதியம் வழங்கவும்,

அவர்களில் சிலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ.100 குடும்ப ஓய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி 60 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது.

  முழு ஓய்வூதியம் பெறும் பணிக்கால வரம்பினை 33லிருந்து 30 ஆகக் குறைக்கவும்-ஓய்வூதியம் கணக்கிடும் முறையிலே சில மாற்றங்களைச் செய்து அவர்களுக்குச் சலுகையும் செய்யப்பட உள்ளது.

**வேலைவாய்ப்புத் துறை**

- வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குக் கால நீட்டிப்பு வழங்கி, பழைய பதிவு மூப்புடன் புதுப்பித்துக்கொள்ளச் சலுகை அளித்ததால் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

**மீன்வளத்துறை**

- மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்திற்கு, மீனவ சமுதாயத்திலே பிறந்து, சிறந்த தொழிற்சங்கத் தலைவராக - சுயமரியாதை இயக்கத் தலைவராகத் திகழ்ந்த ம. சிங்காரவேலர் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது.




- இறக்க நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களுக்கும் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து வழங்கும் ரூ.35 ஆயிரத்திற்கும் மேலான கூடுதல் காப்பீட்டுத் தொகை ரூ.15 ஆயிரத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டு ரூ.50 ஆயிரம் வழங்கும்.

- நடப்பாண்டில் சென்னை மீன்பிடி துறை முகத்திலிருந்து இயங்கும் மீனவர்களுக்கு 850 தகவல் தொடர்பு சாதனங்களும், கடலூர் பகுதி மீனவர்களுக்கு 540 தகவல் தொடர்பு சாதனங்களும், சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு 200 தகவல் தொடர்புச் சாதனங்களும் வழங்கப்படும்.

- கடலூர் மற்றும் சின்ன முட்டத்தில் இரு கரையோரத் தகவல் தொடர்பு நிலையங்கள் அமைக்க ரூ.8.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- மீனவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 4000 இலவச வீடுகளும், இதர அடிப்படை வசதிகளும் செய்து தரும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டிற்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

- மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக 'வாக்கி-டாக்கிகளை' மானிய உதவியுடன் அரசு வழங்க உள்ளது.

**வனத்துறை**

- ஆறு ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடந்த, நாட்ராம்பள்ளித் தொகுதியில் உள்ள தேக்குப்பட்டு சந்தன எண்ணெய் ஆலை, தற்போது இயங்கத் தயாரான நிலையில் உள்ளது.



- வனங்களில் திருட்டுத்தனமாகப் பயிரிடப்பட்ட கஞ்சா பயிர்கள் பெருமளவில் கடந்த ஆண்டு அழிக்கப்பட்டன.

- வனத்துறையில் தற்காலிகத் தினக்கூலிகளாக இருந்து 800 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

- வால்பாறையில், வாசன் தேயிலைத் தொழிற்சாலை கடந்த மாதம் திறக்கப்பட்டுள்ளது.

- தேசிய வனக் கொள்கையைப்போல் தமிழகத்திலும் மாநில வனக் கொள்கைகள் விரைவில் வகுக்கப்படும்.

- சந்தன மரக் கடத்தலைத் தடுத்திட தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், கூடுதலாக வனக்காப்பாளர்கள் நியமிக்கப்பட்டதாலும், சந்தன மர வனங்களிலுள்ள ஊழல்களைக் கண்டுபிடித்ததாலும், சராசரி டன் ஒன்றுக்கு சற்று ஏறக்குறைய 2 மடங்கு வருவாய் கிடைத்துள்ளது.

- ஜப்பான் நாட்டு நிதியுதவிடன் ரூ.423.20 கோடி மதிப்பீட்டில் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப் படவிருக்கும் 'தமிழ்நாடு வன வளத்திட்டத்திற்கு' ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்தில் இருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது.



**தொழிலாளர் நலன்**

- கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர் பிரச்சினைகளைஆய்ந்தறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க, தனித்தனியே குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பணிபுரியும் பொழுது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசு தாரர்களுக்கு 50,000 ரூபாயும், அத்துடன் ஈமச் சடங்கிற்கு உதவியாக மேற்கொண்டு 500 ரூபாயும் வழங்கப்படும்.

**நகராட்சி நிர்வாகம்**

- பலத்த மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்பைத் தவிர்க்க, சென்னை மாம்பலம் வாய்க்கால், பெரம்பூர், பட்டாளம் மற்றும் புளியந்தோப்பில் உள்ள மலேரியா தடுப்பு வாய்க்கால் ஆகியவற்றை ரூ.14.12 கோடியில் தூர்எடுக்க 50 சதவிகித அரசு மானியம்.

- மதுரை மாநகராட்சிப் பகுதியில் மதுரை புறவழிச் சாலையின் முதல் கட்டப் பணிகள் ரூ.27 கோடி செலவிலும், கல் பாலத்தின் மேல் ஒரு புதிய பாலம் ரூ.9 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் சாலையில் புதிய பாலம் ரூ.9 கோடி செலவிலும் அமைக்கப்படும்.

- மதுரை மாநகரின் விசுவாசபுரி, ஹார்வி நகர், சூரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் படிப்படியாக ரூ.1.81 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

**ஏழை எளிய-முன்னேறிய வகுப்பினர்க்கும் இலவச வீட்டு மனைக்காக ரூ.3 கோடி நல்கும் நல்லரசுக்கு நல்வாழ்த்து!**




**தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,**
**தஞ்சாவூர்.**

- கோவை மாநகராட்சியின் புதிய மனைப்பிரிவுகளில் ரூ.2.50 கோடி செலவில் 36 கி.மீ.சாலைகள் அமைக்கவும், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கென ரூ.80 இலட்சமும் ஒதுக்கீடு.
- கோவை மாநகராட்சிப் பகுதியின் புதிய மனைப் பிரிவுகளில் வடிகால் அமைக்க ரூ.15 கோடி ஒதுக்கீடு.
- திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 85 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.1.75 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.




**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்காக ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- வரும் 14.7.97 அன்று தமிழக சட்டமன்றப் பேரவை 60 ஆண்டுகளை முடிக்கும் நிலையில், சட்டமன்றப் பேரவையின் வைர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

**உணவு**

- பொது விநியோக முறையில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய அமைக்கப்பட்ட சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை.
- நியாயவிலைக் கடைகளுக்கு, விற்பனையாளர்களைத் தேர்வுசெய்ய மாவட்ட அளவில் ஆள் எடுப்புச் செயலகம்.
- வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்கப்பட உள்ளது.
- பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கும் பொருட்டு, மூன்று நிறத்தில் குடும்ப அட்டைகள் வழங்க முடிவு.

**போக்குவரத்துத் துறை**

- வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தஞ்சை, நாகை காயிதேமில்லத், இராமநாதபுரம், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.35 கோடி ஒதுக்கீடு.
- அரசு சாலைகளில் பல்லாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த 7 பாலங்களை நடப்பாண்டில் மீண்டும் கட்ட ரூ.2.54 கோடி ஒதுக்கீடு.
- எட்டு மாவட்டங்களில் பழுதடைந்த அரசுச் சாலைகளின் நிரந்தர சீரமைப்பிற்கென ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு.
- நடப்பாண்டில் 108 கிராமங்களுக்குச் சாலை இணைப்புகள் வழங்க அரசின் சார்பில் ரூ.3.08 கோடி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கடன் ஒதுக்கீட்டில் ரூ.40.38 கோடியும் ஒதுக்கீடு.

- சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த நேரங்களில் 100 பேருந்துகள் புதிதாக விடப்பட்டுள்ளன.
- இரவு நேரங்களில் ஆம்னி பேருந்துகளுக்குள்ள அதே வசதிகளுடன் கூடிய 50 பேருந்துகள்.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 2 புதிய வழித்தடங்களில் உடனடியாகப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை.
- நடப்பாண்டில் ரூ.150 கோடி செலவில், 2200 பேருந்துகள், போக்குவரத்துக் கழகங்களுக்காக வாங்கப்படுவதுடன், வரும் ஆண்டிற்கு மேலும் ரூ.292 கோடி செலவில் 3600 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட இருக்கின்றன.
- பேருந்துகள் கட்டுமானத்திற்காக வெளிநாட்டுத் தொழில்நுட்ப உறவுடன் நமது மாநிலத்தில் நான்கு இடங்களில் நவீன தொழில் நுட்பத்துடன் தொழிற்கூடங்கள் நிறுவப்படும்.
- பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்குத் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை இயக்க அனுமதி செய்துள்ளது. 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேம்படாத உரிய வழித்தடங்களில் மட்டும் அவை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.
- பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளில் 16 கி.மீ. தூரத்திற்கு மேற்படாத உரிய வழித் தடங்களில் மட்டும் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை (VAN) இயக்க அனுமதிக்கலாம் என்று முடிவு.
- விருதுநகரைத் தலைமையிடமாகக்கொண்டு வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் புதிதாகத் துவக்கப்படும்.

**சாலைப் பராமரிப்புப் பணி**

- 1997ஆம் ஆண்டிற்குப் பிறகு சாலைப் பணியாளர்களின் புதிய நியமனம் தடை செய்யப்பட்டுவிட்ட காரணத்தால், தற்போது 4,975 பேர்களே இந்தப் பணியில் உள்ளனர். அந்தத் தடையை நீக்கி, இப்பணியை விரிவுபடுத்தி, முன்பு இருந்ததைப்போல 8 கிலோ மீட்டருக்கு இருவர் என்ற அடிப்படையில் 10,000 பேர் சாலைப் பணியாளர்களாக நியமிக்கப்படுவர்.

**கல்வி**

- நடப்பாண்டில் 168 தொடக்கப் பள்ளிகள் துவக்கப்படும். 41 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.
- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நான்கைந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்த 11,652 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.
- நடப்பாண்டில் 60 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.
- ஒவ்வொரு மாவட்ட நூலகத்திலும் குழந்தைகளுக்கெனத் தனிப் பிரிவு - அவர்களுக்கு ஏற்ற வகையில் நூல்களும் தளவாடங்களும் வைக்கப்படும்.






- அறிவியல் தொழில் நுட்பவியல் பயன்பாட்டு உணர்வை மக்களிடையே பரப்ப, சென்னை மாநகரில் அறிவியல் மாநகர் 2000, திருச்சியிலும், கோவையிலும் கோளரங்கத்துடன் வட்டார அறிவியல் மையம், அமைக்க நடவடிக்கை.
- கல்லூரிகளுக்கு ஏற்படும் நன்மையைக் கருத்தில்கொண்டு, வரும் கல்வி ஆண்டில் மேலும் 14 கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி.
- ஆசிரியர் தினத்தில் நல்லாசிரியர் விருது என வழங்கப்பட்ட, பெயர், 'டாக்டர் இராதாகிருஷ்ணன்' விருது எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.
- டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கான ரொக்கத் தொகை ரூ.1000-லிருந்து ரூ.2000 ஆக உயர்த்த நடவடிக்கை.
- டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கெனத் தேர்வுசெய்யப்படும் சிறந்த இரண்டு கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்படும் ரொக்கத் தொகையை ரூ.2500-லிருந்து ரூ.5000 வீதம் உயர்த்த முடிவு.
- பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்கள் ஆண்டுதோறும் தொழிற்கல்வி பயில ஆகும் செலவை அரசு ஏற்கிறது.
- சேலத்தில் தந்தை பெரியார் அவர்களின் பெயரில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று நடப் பாண்டில் தொடங்கப்படும்.
- படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் பிளஸ்2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் அவர்கள் தொடர்ந்து மேல்படிப்பு படிப்பதற்காகும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.




- ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டப்படும். கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்.
- பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நன்கொடைத் தொகையுடன் விளையாட்டு மேம்பாட்டுக்காக ரூ.10 கோடி அளவில் ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். மாநில அரசு இந்த நன்கொடைத் தொகைக்கு ஈடான தொகையை இந்த நிதிக்கு வழங்கும்.
- முதன் முறையாகச் சென்னையில் Information Technology Institute of Tamilnadu(ITIT) என்கிற அமைப்பு நிறுவப்படும். முதலில் பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாகத் (Registered Society) துவக்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை**

- அரசு மருத்துவமனைகளிலே வெளிநோயாளிகளுக்கான சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி ஒன்றிய தொடக்க சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கி பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- சித்த மருத்துவர்கள், வயதுமுதிர்ந்தவர்களுக்கு மாத உதவித்தொகை 150 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக் உயர்த்தப்பட்டது.
- சென்னை மருத்துவக் கல்லூரி நிகர் நிலைப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டுள்ளது.
- 1996-97இல் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 1997-98ஆம் ஆண்டிற்கு 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்டுவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- அரசு மருத்துவமனைகளுக்கு 10 ஆயிரம் படுக்கைகளும், 6 ஆயிரம் கட்டில்களும் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு25,000 ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படும்.
- உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படும் 1000 ஏழைகளுக்கு, தனியார் மருத்துவமனைகள் மூலம் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**செய்தித்துறை**

- திரைப்படத் துறையிலே சண்டைக் காட்சிகளின் போது நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால்-ஒரு இலட்சம் ரூபாயும், ஊனமுற்றால் 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.
- 25 பிரதிகளுக்குக் குறைவாக, குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 1989-ல், தொடங்கப்பட்ட திரைப்பட மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்படும் மானியத் தொகையான ரூ.3 இலட்சம் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்படும். அத்திரைப்படங்களுக்கு அவை முதன்முறையாகத் திரையிடப்பட்ட நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- அண்ணா நினைவிட முகப்பிலும்-காமராஜர் நினைவிட முகப்பிலும்-எம்.ஜி.ஆர்.நினைவிட முகப்பிலும் அவர்களுடைய மார்பளவு சிலைகள் வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் பெயரால் சாலை-இந்த ஆண்டு நினைவு மண்டபம்.
- பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், புகைப்படக்காரர்கள் இயற்கை எய்தினால்-அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை/தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927



சென்னைக்கருகில்
2500 ஏக்கரில்
இரண்டு துணைநகரம்
அமைக்கவிருக்கும்
தமிழக அரசை
வாழ்த்தி மகிழ்கிறோம்!




நல்வாழ்த்துகள்
எஸ். கே. எம். மாடு கோழி தீவனங்கள்
ஈரோடு - 2.

விரைவுப் பேருந்திலும்
ஊனமுற்றோருக்கு
இலவசப் பயணத்திற்கு
வகை செய்த தமிழக அரசுக்கு
நன்றி, நன்றி, நன்றி!




தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை லிட்.,
என்.எஸ்.ஏ.108, அஞ்சல் பெட்டி எண்.2
ஊத்தங்கரை - 635 207.



வணிகர் கோரிக்கையை ஏற்று
ரூ.440 கோடி வரிச்சலுகை
வழங்கிடும் அரசை
வாழ்த்துகிறோம்!










சென்னை-கலைவாணர் அரங்கில் 16.5.97 அன்று நடைபெற்ற 1995ஆம் ஆண்டுக்கான மாநிலத் திரைப்பட விருது வழங்கு விழாவில், மேதகு ஆளுநர் நீதிபதி ஃபாத்திமா பீவி அவர்கள் திருமதி சந்திரலீலா பாரதிராஜாவுக்கு விருது வழங்குகிறார். விழாவில், தென் மாவட்டக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க முதலமைச்சர் நிவாரண நிதிக்கு திரு. ரஜினிகாந்த் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ரூ.5 இலட்சத்துக்கான காசோலை வழங்கினார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் உடன் இருந்தார்.

## இந்த இதழில்...


அன்பு கொள்வோம் ... 2
- முதல்வர் கலைஞர்

அமைதி காத்திடுவீர் ! ... 4
- முதல்வர் உரை

பட்டியல் இனத்தவர்களுக்குப் பிளாஸ்டிக் சிறப்புப் பயிற்சி ... 7

சாதி வேறுபாடு இன்னும் தவிர்ந்திலையோ ? ... 9

ஞானம் - சிறுகதை ... 13
- அகிலன் கண்ணன்

நன்மைகள் கோடியடா ! ... 17
- தஞ்சை பாண்டியன்

பிணி தீர்க்கும் திருநீற்றுப் பச்சிலை ... 18
- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

நூற்புழுக் கட்டுப்பாடு ... 22

எங்கள் ஊர் பிரச்சினை ... 24

சுற்றுப்புறச் சுகாதாரம் ... 33

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் பெறும் கல்வி உதவிகள் ... 42
- திரு.சி.வி. சங்கர், இ.ஆ.ப.,

ஆசிரியர் மடல் ... 48



தமிழரசு
திருவள்ளுவராண்டு : 2028
வைகாசித் திங்கள் : 18
மலர் : 23 இதழ் : 23
1-6-1997
ரூ. 3

# அன்பு கொள்வோம்!

அன்பின் வழியது உயிர்நிலை என்பது
ஆதிமகன் வள்ளுவன் சொல்லாம்!

அன்று சிலுவை சுமந்தவர், நெஞ்சில்
அன்பைச் சுமந்தவரே!

போதி மரத்து நிழல்தானே
மேதினி எங்கும் அன்பாய் மேவியது!

நன்னெறி நாயகம்
நபிகள் நாயகம் அன்புக்கு நாயகமே!

அன்பே சிவம் - இது சைவத் திருமறை!
அன்பின் அடிப்படையே அக்கால வைணவமும்!

அன்புக்குப் பல வழிகாட்டிகள் உண்டெனினும், மத
வம்புக்கு நம்மிடையே பஞ்சமில்லை.

வன்முறைக்கு வாய்க்கால் வெட்டி
நித்த நித்தம் ரத்தத்தால் பாசனம் செய்கின்ற



பாழும் உள்ளங்கள் பக்குவப்படுவதற்கே
"அன்பு கொள்வோம்" எனும் தலைப்பில்
அணை கட்டுகின்றோம்.

அன்புபற்றி அயலார்க்கு அறிவுரை கூறிவிட்டு
அதற்கெதிராய் நடக்கின்ற
என்பு தோல் போர்த்த மனிதர்கள் சிலருண்டு-
அவரையெல்லாம் அடையாளம் கண்டு,
அவனிக்குச் சொல்லிவைத்தல் பெரும் தொண்டு.
நல்லதையும் கெட்டதையும் நன்றாக ஆய்ந்தறிந்து
நாட்டுமக்கள் தெளிவடைந்துள்ள காலமிது - எனினும்

விழித்துக் கொண்ட மக்களையும் - மீண்டும்
வீழ்த்துதற்கு வேடதாரிகள் புறப்படுவர் இன்று! அந்த
மாரீச மான் குட்டிகளை முதலிலேயே மடக்கிப் போடல் நன்று!

- முதல்வர் கலைஞர்



- புத்தாண்டுக் கவியரங்கத்திற்குத்
தலைமை ஏற்று பாடிய கவிதையிலிருந்து
நன்றி : 'சன் டி.வி.'

# அமைதி காத்திடுவீர்!

- முதல்வர் கலைஞர்

‘ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, மிகமிகப் பொதுவான ஒரு பிரச்சினை குறித்து கலந்து பேசி, நல்ல முடிவுகளை எடுக்கவும், மாநிலம் தொடர்ந்து அமைதியாகத் திகழ்ந்திடவும்,



நாம் எல்லாம் இங்கே கூடியிருக்கிறோம். அந்த உணர்வோடு இந்த மன்றத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்; இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இடையிலும் பல்வேறு கொள்கை வேறுபாடுகள், மாறுபாடுகள் உண்டு.

அதைப்போலவே, சமுதாயத் தலைவர்களிடத்திலேகூட அத்தகைய வேறுபாடுகள் மாறுபாடுகள் உண்டு.

அவற்றை எல்லாம் கொள்கை ரீதியாக அரசியல் கட்சிகள் அறவே அகற்றிடவும், அந்தந்தச் சமுதாயத் தலைவர்கள் அந்தச் சமுதாயத்தின் மீதுள்ள பற்றை அறவே நீக்கி விடுவதற்காகவோ, எந்தவிதமான வற்புறுத்தலும் இந்தக் கூட்டத்தில் இருக்கப் போவதில்லை. அமைதி குலைவதற்கான சூழ்நிலைகள் உருவாகாத வண்ணம், எப்படித் தடுப்பது, உருவானவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்பதைப் பற்றித்தான் இங்கே நாம் விவாதிக்க இருக்கின்றோம். விவாதித்து ஒரு நல்ல முடிவை நாம் மேற்கொள்ளவேண்டும் என்ற தூய எண்ணத்தோடு நாம் இங்கே குழுமி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டில், வட மாநிலங்களைப் போல ஜாதி மதக் கலவரங்கள் பெருமளவில் இல்லை என்றாலும்கூட, குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு இடையிடையே, அத்தகைய மோதல்கள், சர்ச்சைகள், கலவரங்கள் அதன் காரணமாகச் சாவுகள், படுகொலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

அது எந்த ஆட்சியிலும் நடைபெற்றிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்திலானாலும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலானாலும், என்னுடைய அருமை நண்பர்





எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலானாலும், கடந்த ஆட்சிக் காலத்திலானாலும் இன்றைக்கும் அத்தகைய ஜாதி மோதல்கள் மதக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

முதுகுளத்தூர் கலவரத்தை நாம் மறந்து விட முடியாது.

கீழ்வெண் மணியிலே நடைபெற்ற கொடிய சம்பவத்தை யாரும் மறந்துவிடஇயலாது.

இவைகள் எல்லாம் ஜாதி வேறுபாடு, ஜாதி ஆதிக்கம், இவற்றின் காரணமாக ஏற்பட்ட கலவரங்கள், கொடுமைகள் என்பதை நாம் என்றைக்கும் நினைவிலே கொண்டுதான் இருக்கின்றோம்.

கடந்த காலத்திலேகூட, 5, 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஜாதி மதக் கலவரங்கள், சம்பவங்கள் என்று எடுத்துப் பார்த்தால், 645 சம்பவங்களும், 293 பேர்கள் அதிலே கொல்லப்பட்ட நிகழ்ச்சியும் அந்த 5 ஆண்டுக்காலத்திலே, கடந்த காலத்திலே நடைபெற்று இருக்கின்றன. நான் ஒப்பிட்டுக் காட்டி இந்த ஆட்சியில், அந்த அளவிற்கு இல்லை என்று வாதாட விரும்பவில்லை. அந்த எண்ணம் எனக்கு இல்லை. இந்த ஆட்சியிலும் ஜாதி மதக்கலவரத்தால் இதுவரையில் 20-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

எனவே, இது, தொடர் சம்பவமாக ஒவ்வொரு ஆட்சியிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இல்லாமல் பார்த்துக் கொள்கின்ற ஒரு பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது என்ற அந்த உள் உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*புராண காலத்திலே, சரித்திரக் காலத்திலே கூட- புத்தகம் எழுதுகின்றவர்கள், புதினம் எழுதுகின்றவர்கள் அந்த நாட்டினுடைய செழுமைகளைப் பற்றி, நேர்மையைப் பற்றி, நலனைப் பற்றி எழுதும்போது - புலியும் மானும் ஒரே குளத்தில், ஒரே துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய நாடு என்று எழுதுவார்கள். இன்றைக்குப் புலியும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்காவிட்டால் கூட -மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்கிறதா என்ற கேள்வி எழுப்பக்கூடிய சங்கடமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்!*

அப்படிக் கேட்டுக் கொள்கின்ற நேரத்தில், பத்திரிகைகளுக்கும் இதிலே பெரும் பொறுப்பு இருக்கிறது. சில நேரங்களிலே ஒன்றிரண்டு வதந்திகளின் காரணமாகப் பெரிய சம்பவங்கள் நடைபெற்று விடுகின்றன. குறிப்பாக-தென் பகுதியிலே உள்ள ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார், அல்லது தாக்கப்பட்டார் என்ற ஒரு வதந்தி கிளம்பி, அதன் காரணமாக அது உண்மையா என்று அறிந்துகொள்ளக்கூட யாரும் முயற்சி செய்யாமல் ஒரு பெரிய கலவரம் உருவாகி, அது இன்றைக்கு அடங்கிப் போயிற்று.

இதுபோன்ற செய்திகள் வரும்போது அவற்றைத் தீர விசாரித்துப் பத்திரிக்கைகளும் வெளியிடுகிற ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தமிழ்நாட்டில் இல்லை. எனவே, இத்தகைய வதந்திகளை, தவறான செய்திகளை வைத்துக் கொண்டுகூட, கலவரங்கள் நடைபெறுகின்றன. எல்லாம் தவறான செய்திகள், வதந்திகள் என்று நான் கூறிவிட மாட்டேன். ஒருசில நிகழ்ச்சிகள் இதுபோன்ற மன அதிர்ச்சியைத் தரக்கூடிய வன்முறைகளுக்கு, கலவரங்களுக்குத் தூபமிட்டு விடுகின்றன என்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. இவைகளைப் பற்றி எல்லாம் தீர ஆலோசித்து, ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காகக் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் உங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகத் தென் பிராந்தியங்களில், தென் மாவட்டங்களில் நடைபெறுகின்ற இந்தக் கிளர்ச்சியில் எல்லாக் கட்சிகளும் மிகுந்த அனுதாபத்தோடு அணுகி, ஆங்காங்கே சென்று தங்களுடைய கட்சி உறுப்பினர்களை அனுப்பி

விவரங்களை அறிந்துகொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றைப் பற்றியும் இங்கே சொல்லலாம்.

ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இப்போது பொதுவாக நடைபெறுகின்ற இந்தப் போராட்டம், கலவரம் - பெரிய ஜாதி என்று கூட அல்ல, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் இடையே நடைபெறுகின்ற ஒரு போராட்டமாக இருக்கின்றது.

புராண காலத்திலே, சரித்திரக் காலத்திலே கூட- புத்தகம் எழுதுகின்றவர்கள், புதினம் எழுதுகின்றவர்கள் அந்த நாட்டினுடைய செழுமைகளைப் பற்றி, நேர்மையைப் பற்றி, நலனைப் பற்றி எழுதும்போது - புலியும் மானும் ஒரே குளத்தில், ஒரே துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய நாடு என்று எழுதுவார்கள். இன்றைக்குப் புலியும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்கா விட்டால் கூட - மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்கிறதா என்ற கேள்வி எழுப்பக்கூடிய சங்கடமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஒரு புறத்திலே அம்பேத்கருடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது. இன்னொரு புறத்திலே தேவர் திருமகனுடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது என்ற அளவில் இந்தச் சிலை பற்றியும் பெரிய பிரச்சினைகள் எழுந்து இருக்கின்றன. இரண்டு சமுதாயத்தினுடைய தலைவர்களும் அம்பேத்கர் ஆக இருந்தாலும், தேவர் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஜாதி வெறியைத் தூண்டி விட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் அல்ல.

> *ஒரு புறத்திலே அம்பேத்கருடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது. இன்னொரு புறத்திலே தேவர் திருமகனுடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது என்ற அளவில் இந்தச் சிலை பற்றியும் பெரிய பிரச்சினைகள் எழுந்து இருக்கின்றன. இரண்டு சமுதாயத்தினுடைய தலைவர்களும் அம்பேத்கர் ஆக இருந்தாலும், தேவர் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஜாதி வெறியைத் தூண்டி விட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் அல்ல!*

குறிப்பாக - 1957ஆம் ஆண்டு மதுரையில் ஜனநாயக காங்கிரஸ் கட்சியினுடைய பேரணியில் கலந்துகொண்டு தலைமை வகித்துப் பேசிய தேவர் திருமகனார் இவ்வாறு குறிப்பிட்டார்:

"எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அமைதியை இழந்து அராஜகத்தில் இறங்கினால், அது என் இதயத்தைப் பிளந்து ரத்தம் குடிப்பதற்குச் சமம்" என்று தேவர் திருமகன் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் மனதில் கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏன் ஏற்படாமல் போயிற்று என்ற கவலை எனக்கு இருக்கின்றது. சிலைப் பிரச்சினைகளால் போக்குவரத்துக் கழகங்களுக்கு, மாவட்டங்களுக்குப் பெயர் வைக்கின்ற பிரச்சினைகளால் உருவாகியிருக்கின்ற இந்தக் கொந்தளிப்புப் பற்றி பலரும் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பெயர்களை மாவட்டங்களுக்கு, போக்குவரத்துக் கழகங்களுக்கு வைப்பதற்குப் பதிலாக ஸ்காலர்ஷிப் போன்ற நல்ல காரியங்களுக்கு இந்தப் பெயர்களைப் பயன்படுத்திச் செய்யலாம் என்ற கருத்தைத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு.மூப்பனார் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து பல கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை அதை வழிமொழிகிற வண்ணம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஏராளமான கடிதங்களும், தந்திகளும்கூட அதை வழி மொழிந்து எனக்கு வந்திருக்கின்றன. அவைகளைப் பற்றியும் நீங்கள் உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கூறி உங்களுடைய மேலான கருத்துக்களை எதிர்பார்த்து இந்த அளவில் என்னுடைய வரவேற்பு உரையை முடித்துக்கொள்கிறேன்'.

*சென்னை ராஜாஜி மண்டபத்தில் 14.5.1997 அன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி - சமுதாயத் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து.* ★



# பட்டியல் இனத்தவர்களுக்குப் பிளாஸ்டிக் சிறப்புப் பயிற்சி

பிளாஸ்டிக்ஸ் தொழிற்பயிற்சியை முதன்மையாக வைத்து, 1968-ல் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் "சிப்பெட்" என்றழைக்கப்படும் மத்திய பிளாஸ்டிக்ஸ் மற்றும் தொழில்நுட்ப கல்விப் பயிலகமாகும் (Central Institute of Plastics and Engineering Technology). தென்கிழக்கு ஆசியாவிலே முதன்மையாகத்திகழும் இந்த நிறுவனம் மத்திய அரசின் உரம் மற்றும் வேதியியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது. நமது நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி தர நிறைய நிறுவனங்கள் இருந்தாலும் பிளாஸ்டிக்ஸ்க்கு எனத் தொழிற்பயிற்சி தரும் நிறுவனம் சிப்பெட் ஒன்றுதான். பொதுவாக பயிற்சி, ஆய்வு, வடிவமைத்தல், செயல்முறை, சோதனை எனப் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுப் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான தொழில்நுட்பம் கற்றுத்தரப்படுகிறது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் மோல்டு குறித்து தொழில் நுட்பத்தில் மூன்றாண்டு பட்டயப்படிப்பு நடத்தப்படுகிறது. இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் தொழில் நுட்பம், வடிவமைத்தல், இயந்திரம் பராமரிப்பு குறித்து ஓராண்டு முதுகலை பட்டயம் வழங்கப்படுகிறது. இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் வடிவமைத்தலில் ஓராண்டு பட்டயப் படிப்பு கற்றுத்தரப்படுகிறது. அதுபோல் இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்கு பிளாஸ்டிக்ஸ் இயந்திரம் பராமரிப்பில் ஓராண்டு பட்டயப் படிப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வேதியியல் மற்றும் இயற்பியல் பட்டம் பெற்றவர்களுக்கு மூன்று ஓராண்டு முதுகலை பட்டயப்படிப்புகள் நடத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பயிற்சி நிலையம் | : | 'சிப்பெட்', கிண்டி, சென்னை - 600 032. |
| தகுதியுடையோர் | : | பட்டியல் இன அறிவியல் பட்டதாரிகள் |
| சிறப்புரிமை | : | 30% பெண்கள் |
| காலம் | : | ஆறு மாதம் |
| பயன் | : | (1) ரூ.20,000 கட்டணத்தில் ரூ.15,000 அரசு மானியம்<br>(2) பயிற்சி முடித்தவர்க்கு ரூ.2000 முதல் ரூ.4000 வரை, ஊதியத்தில் வேலை வாய்ப்பு<br>(3) தொழில் துவங்க நிதியுதவி |

மேற்கூறிய அனைத்து பயிற்சிகளும் நீண்ட நாள் பயிற்சிகளாகும். அதுமட்டுமல்லாது சிப்பெட் பல குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்துகிறது. பிளாஸ்டிக்ஸ் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள், பிளாஸ்டிக்டிக்ஸ் செய்முறைகள், கணிப்பொறியில் ப்ளாஸ்டிக்ஸ் பொருட்கள் வடிவமைத்தல், மற்றும் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான ஐயங்களைத் தீர்ப்பது எனப் பல பயிற்சிகளை அளிக்கிறது. மேலும் தொழில் சார்ந்தோர்க்குப் பிளாஸ்டிக்ஸ் தொழில்நுட்பம் குறித்து உதவிகள் செய்வது மற்றும் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவது என சிப்பெட் பிளாஸ்டிக்ஸ் துறையில் நிறைய பங்கேற்கிறது.

தற்போது முதன்முறையாக சிப்பெட்டானது இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பிளாஸ்டிக்ஸ் செயல்முறையில் 60 ஆதி திராவிட பி.எஸ்.சி. பட்டதாரிகளுக்குச் சிறப்புச் சான்றிதழ் வகுப்புப் பயிற்சி ஒன்றினை நடத்தவுள்ளது. அதில் 30 விழுக்காடு அதாவது 18 பேர்கள் பெண்களாக இருப்பார்கள். இந்தப் பயிற்சிக்கான கால அளவு ஆறுமாதமாகும். இந்தப் பயிற்சிக்கான கட்டணம் ரூ.20000 ஆகும். இதில் ரூ.15000 ஆதிதிராவிடர் நலத்துறை ஏற்க முன்வந்துள்ளது. மீதமுள்ள ரூ.5000 - ஐ பயிற்சியில் பங்கேற்கும் மாணவர் பயிற்சிக்கட்டணமாக சிப்பெட்டிற்குச் செலுத்தவேண்டும்.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப தனியார் பிளாஸ்டிக்ஸ் தொழிற்சாலைகளில் ரூ.2000 முதல் ரூ.4000 வரை சம்பளம் ஈட்டும் வகையில் பணியில் அமர்த்த சிப்பெட் முயற்சிகளை மேற்கொள்ளும். மேலும் இப்பயிற்சியை முடித்தவர்கள் பிளாஸ்டிக்ஸ் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், நிதி நிறுவனங்களிலிருந்து தொழில்துவங்க கடன் வசதி பெற உதவி செய்வது என அனைத்து உதவிகளையும் சிப்பெட் செய்து தரத் தயாராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# சாதி வேறுபாடு இன்னும் தவிர்ந்திலையோ!



யாதும் ஊரே யாவரும் கேளிர்...

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

*- கணியன் பூங்குன்றனார், புறநானூறு.*

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியு மா றதுவே!

*- நரிவெரூஉத் தலையார், புறநானூறு.*



எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நலனே!

*- ஔவையார், புறநானூறு.*

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்!

*- திருக்குறள்.*

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.

*- திருமூலர்.*

சாதியின் தருமம் இன்னும் தவிர்ந்திலை
போலும் தக்கோய்!

*- கம்பர், கம்ப இராமாயணம்.*



குலம் நினையல் நம்பி!

*- திருத்தக்க தேவர், சீவகசிந்தாமணி.*

சமயவேதம் பலவான சாதிபேதங்கள்
சமயத்தோர்க் கேயல்லாது சற்சாதுக்களுக்கோ!

சாதிப் பிரிவினிலே தீமூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோல்நாட்டுவோம்!

சாதியாவது ஏதடா? ஆம் திரண்ட நீறல்லாம்
பூதவாசல் ஒன்றலோ? பூதம் ஐந்தும் ஒன்றலோ!

*- சித்தர் பாடல்கள்.*



சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதோர் இழிகுலத்தார்
பட்டாங்கில் உள்ள படி!

*- ஔவையார்.*



பண்டிதரே, மனத்தில் எண்ணிப் பார்த்தீரோ?
சொல்லும் பார்க்கலாம்.
தீட்டு எங்கிருந்து பிறந்துவந்தது?
தீண்டாமை பார்க்கிறாய்! நாதம், விந்து,
ரத்தம் எல்லாம் சேர்ந்துதானே இருக்கின்றன?
பாண்டத்துக்குள்ளே தானே பாண்டம் தயாராகிறது.
எட்டுத் தளக் கமலம் பூமிக்கு வந்தது; இந்தத் தீட்டு
எங்கே ஏற்பட்டது?

*- கபீர்*

இறைச்சி தோல் எலும்பினில் இலக்கமிட் டிருக்குமோ

*- சித்தர் பாடல்கள்.*



தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிருகங்கள்போல் நடத்தப்
படுகிற பாட்டாளி, கூலி, ஏழை, மக்கள்தான் எனக்குக்
கண்வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சமமனிதர்களாய்
ஆக்குவதுதான் எனது கண்ணோய்க்குப் பரிகாரம்!

*- தந்தை பெரியார்*



சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

*- மகாகவி பாரதியார்*



இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!...

*- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்*

சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்!

*- மகாகவி பாரதியார்*



சாதியின் உணர்வும் தமிழின வாழ்வும்
மோதும் தகையின்; முன்னது வாழின்
என்னரும் தமிழுக்கு எதிர்வரு நாட்களில்
உன்னதப் பெருநிலை உறுதியாய் இல்லை!

*- கவிஞர் குலோத்துங்க சோழன்*



சாதி மதபேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!

*- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்*



இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்குள்
பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்;
பேதமற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை
தர்மத்தை நாம் நாடவேண்டுமானால்
முதலில் சாதி தொலைந்தாக வேண்டும்!

*- அறிஞர் அண்ணா*

தீண்டாமை என்பது ஏணி மரப்படிபோல், இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கின்றது. தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று பேசும் இந்தியத் தலைவர்கள் வர்ணாசிரம தருமத்தை ஒழிக்க விரும்புவதில்லை.

*- தந்தை பெரியார்.*

தொகுப்பு : கவிஞர் இன்குலாப்



# ஞானம்

**- அகிலன் கண்ணன்**

காற்றில் கலைந்து முன்விழும் முடியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கொள்கிறான் இவன். சாலையின் ஒருபக்கம் கடல்; மறுபக்கம் வாழை, தென்னை, நெடுஞ்சாலைத் தார் ரோடைக் கிழித்துச் செல்லும் பேருந்தில் ஜன்னலோர இடம் தரும் சுகம். கடலைக் கோபித்துக் கொண்டு சடாரென வலப்பக்கம் திரும்பி விட்டது தார்ச்சாலை. கரம் பிடிக்கும் அகல் விளக்கைச் சதங்கையாய்க் கால்களில் கட்டிய பால் கிண்ணங்களுடன் ரப்பர் மரங்கள்.

குளுமையும் இனிமையும் பசுமை யும் மனசுக்குள் வண்ணக் குமிழ் களாய்க் கொப்புளிக்க, இவன் பரவசப்பட்டு ஒவ்வொரு துளி யையும் ரசித்து உள் வாங்குகிறான்.

நகர நாகரிகத்தின் நச்சுக்காற்றால் அதிகம் பாதிப்புக்குள்ளாகாத ஊரின் உட்புகுந்து பெருமூச்சுடன் நிற்கிறது பேருந்து. கையில் சிறு பெட்டியுடன் கீழிறங்கி விலாசம் விசாரித்து நடக்கிறானிவன்.

விரைவும் மலையாள மணமும் தமிழின் உருவம் மாறி, பிடிபட இவன் உன்னிப்பாகக் கவனங் கொள்கிறான்.

பெருமாளின் வீட்டைக் கண்டு பிடிக்க சிரமமிருக்கவில்லை. தெருவின் முதல் வரிசை மட்டும் சற்று பரபரப்பும், ஊரின் தோற்றமும் காட்ட அடுத்த உள் தெருக்கள் பசுமையுடன் தோட்டந்துரவுமாக அமைதியைச் சுவாசிக்கிறது.

கதவுச் சத்தம் கேட்டவுடனேயே பெருமாள் வாசலுக்கு வந்து இவனைக் கட்டிக் கொள்கிறான். பெட்டியை வாங்கி உள்ளே அழைத்துச் செல்கிறான்.

வீட்டின் முன்னே இரு புறமும் முடிச்சு முடிச்சாய் முள் பூத்த பலா மரங்கள்.

''வா! வா! ஒரு மணிக்கரு லேட்டானதால நான் கொஞ்சம் சம்சயப்பட்டேன், எங்கே பயணத்தை 'ட்ராப்' செய்துட்டியோன்னு!"

"அதெப்பிடி! எவ்வளவு நாளா ஆசை அலை மோதக் காத்திருக்கேன். குளிச்சிட்டுக் கொளம் பீடலாம்ல? சீனிவாசன் சாரை மொத மொதலாப் பாக்கப் போறேன். அவரோட முத நாவலைத் தேடிப் பிடிச்சுப் படிச்சேன்.



சமீபத்தில் அவர் எழுதின 'அண்டவெளி' நாவலுக்கும் முதல் நாவலுக்கும்தான் எத்தனை வித்தியாசம்! எவ்வளவு பெரிய வீச்சு!"

"அவர் எழுதினதே ரெண்டு நாவல்தானே? இங்க பாரு, இப்பிடியே சீனிவாசனை சிலாகிச்சு நின்னா 'லேட்'டாயிடும். மொதல்ல குளிச்சு, டிபன் சாப்பிடு".

"பெருமாள்! சீனிவாசன் என் ஸ்கிரிப்ட்டைப் படிச்சுட்டாரா? என்ன சொன்னார்? மனசு கெடந்து அடிச்சுக்குது. நாலஞ்சு வருஷமாத் தான் எழுத ஆரம்பிச்சிருக்கிற என்னோட மொத நாவலை அவர் படிக்கணும்னு ஆசைப்பட்டு..."

"ஐயோ, போறும் நிறுத்துப்பா. உன் நாவலை அவரிடம் குடுத்து ஒரு மாசமாச்சு. போன வாரம் போனப்ப கேட்டுட்டேன். நீர் இங்க வந்து அவரைப் பார்க்க விரும்பறீர்ன்னு சொல்லிட்டேன். 'வரட்டும்'ன்னு சீனிவாசன் சொன்ன பிறகுதான் உமக்கு எழுதினேன். நீர் வந்துருக்கீர். இன்னும் கொஞ்ச நேரத்தில அவரைப் போய்ப் பாக்கப் போறோம்".

"ஓ! பெருமாள். நீ மட்டும் இல்லாட்டி..."

"இதானே வேணாங்கறது; நாந்தானிருக் கேனே கல்லாட்டம். பெறகென்ன? உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் இப்பிடி உணர்ச்சிவசப்பட்டே உன் வாழ்க்கையைப் பொங்க விட்டுடாதப்பா!"

பெருமாள் தன் மனைவிக்கு இவனை அறிமுகம் செய்விக்கிறான். பழைய ஹிந்தி சினிமாவில் வரும் பித்தளை டம்பளரின் உயரத்தில் எவர்சில்வர் டம்பளர் - டபராவில் காப்பி.

இவன் ருசித்துப் பருகியபின் குளிக்கச் செல்கிறான்.

குழாய்ப் புட்டு, இடியாப்பம், செவ்வாழை என அமர்க்களமாய் காலைப் பலகாரம் முடிகிறது.

''கெளம்பலாமா பெருமாள்?"

"இரப்பா. இப்பத்தானே ஒம்பதாகுது. கொஞ்சம்

போட்டும். காலங் கார்த்தால கதை பேசப் போக் கூடாது."

"அப்புறம்? நான் எப்பிடியும் சாயங்காலமே மெட்ராஸ் கெளம் பணுமே?"

"பொறு, பொறு. சீனிவாசன் கறாரான வியாபாரி. பல வருஷமாப் பாத்திரக் கடை நடத்துறாரு. இந்த ஊர் வீட்லருக்க சாமான்கள்லாம் இவர் கடை சாமான்ங்கதான். மொதல்ல ஒரு பாத்திரக்கடை. பெறகு எலக்ட்ரிகல். அதன்பெறகு எலக்ட்ரானிக்ஸ்ன்னு இப்பம் ஐஞ்சு கடை மொதலாளியாக்கும் அவர்! காலை பத்து மணிக்கு வந்து கல்லால உக்காந்தார்னா மதியம் 'லஞ்சு'க்கு ஒரு மணிக்கு வீட்டுக்குத் திரும்புவார். சாப்பாடு - சுகமான நித்திரை. நாலு மணிக்கு வந்தார்னா ராத்திரி எட்டோ, ஒன்பதோ ஆகும் வீடு திரும்ப."



"எப்ப எழுதுவாரு?"

"இந்த பாரு. இப்பம் என்கிட்டக் கேட்டமாதிரி அவர்ட்ட இந்த அரிச்சுவடிக் கேள்வில்லாம் டி.வி. பேட்டி மாதிரிக் கேட்டுடாத. அவர் எழுதுவார்; எழுதாமலு மிருப்பார்."

"அது சரி. இனிப் புதுசாத் த்'ான்ா எழுதணும்னு இல்லையே. அவர் எழுதின ரெண்டு நாவல், அம்பது சிறுகதை, நாலு குறுநாவல், கொஞ்சம் கவிதை இதைப் படிச்சாவே போதுமே!"

"என்ன, எண்ணிக்கையா, தரமா? எதை எதிர்பார்க்கிற?"

"ஐயோ! நான் கொறையாச் சொல்லலை. வாத்தியார்ன்னாவே இந்தப் பட்டிமன்ற புத்தி வந்துடுது பார்!"

"ம்... உன்னைப் பெறகு பேசிக்குறேன். கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் பக்கத்துல காலேஜ் போய் கையெழுத்துப் போட்டுட்டு வந் துடறேன். அப்புறம் சீனிவாசன் சார் கடைக்குப் போயிடலாம். அப்பம் நா வரேன்!" என்று கூறிப் பெருமாள் கைநிறையப் பத்திரிகை, செய்தித் தாள்களை கொணர்ந்து தருகிறான்.

சிவப்புச் சாந்து பூசிய தரையில் கால் குளுமை உணர பக்கத்து மரம் செடிகள் காற்று முகத்தில் வருட பிரம்பு நாற்காலியில் சரிகிறான் இவன்.

★★★

நெளிவு சுளிவுகளுடன் கூடிய அழகிய தேக்குமர மேஜையெதிரே சுழல் நாற்காலியில் சீனிவாசன். கதர்ச் சட்டை. கறுப்பு ப்ரேம் போட்ட கண்ணாடி. செவ்வக முகம். வெள்ளிக் கம்பிகளாய் தலைமுடி. அறுபது வயதிருக்கலாம்.

'ரசவாதம் செய்த எழுத்துக்குச் சொந்தக்காரர் இவர்தானா?"

இவனுள் விஸ்வரூபமெடுக்கிறார் சீனிவாசன்.

சிரித்துப் பேசியபடியே தொலை பேசித் தொடர்பைத் துண்டிக்கிறார்.

"வாங்கோ பெருமாள்!"

உட்கார்ந்தபடியே எதிர் இருக் கையைச் சுட்டிக் கை நீட்டுகிறார்.

பெருமாள் இவனை அவருக்கு அறிமுகம் செய்கிறான். இவனைப் பற்றி, இவன் எழுத்தைப் பற்றி, இவனது ரசனை பற்றிப் பிரஸ் தாபிக்கிறான்.

"ஓ!"

"நான் உங்க வாசகன். உங்க எழுத்து எல்லாத்தையும் தேடிப் படிச்சிருக்கேன்". இவன் சீனிவா சனிடம் மெதுவாகப்பேசுகிறான்.

"நல்லது எதுவுமே தேடத்தான் கிடைக்கும்"

"உங்க ஆரம்ப கால சில சிறுகதைகளை நீங்க இப்ப "டிஸ் ஓன்" பண்றேன்னு சொல்றீங்களே, நியாயமா இது?"

"என்ன தப்பு? எழுதின எனக்கு அதைத் திரும்பப் பெற உரிமை யில்லையா? சுயமா உள் தேடல்



நடைபெறும் போது ஆத்மா அண்ட வெளியில் நர்த்தனம் செய்ற அனுபவத்தை நாமும் பெறணும். அப்பத்தான் அது நெஜமான எழுத்து".

"அஜானுபாகுவான இவர் எழுந்து ஆடினால்?" இவன் சிலிர்த்துக் கொண்டு நடப்புலகுக்குத் திரும்பு கிறான்.

மேஜையின் கீழிருந்த அழைப்பு மணியை சீனிவாசன் அழுத்தியதும் ஓடிவருகிறார் நாற்பது வயதுக்காரர்.

"ஐயா கூப்பிட்டீங்களா?"

"கந்தசாமி! ஸ்பெஷல் டீ வாங்கிட்டு வா".

இவனும் பெருமாளும் வேண்டாம் எனக் கூறியதை லட்சியம் செய்ய வில்லை சீனிவாசன்.

"பெருமாள், அப்புறம்? உங்க காலேஜ் பிரின்ஸி பல் போஸ்ட் பிரச்னை என்ன முடிவாச்சு?"



பெருமாள் பொறுமையாகப் பதில் சொல் கிறான்.

இவன் பெரு மாளைப் பார்க்கிறான்.

பெருமாள் சீனிவாசனிடம் கேட்கிறான்.

"இவரோட நாவல் ஸ்கிரிப்ட் தந்திருந்தேனே? படிச்சுட்டீங்களா?"

"ஆமா, மெட்ராஸ்ல பறக்கும் ரயில் எந்த நிலைல இருக்கு?"

பெருமாளின் கேள்வியைக் காதில் விழுந்த தாகவே காட்டிக் கொள்ளாமல் இவனிடம் கேட்கிறார்.

சிந்தாதிரிப்பேட்டையில் பறக்கும் ரெயில் நிற்கும் கதையில் ஆரம்பித்து விரைவில் லஸ்வரை வந்துவிடும் என்று விவரிக்கிறான் இவன்.

கூறிமுடித்து ஆவலுடன் சீனிவாசனின் முகத்தைப் பார்க்கிறான்.

கந்தசாமி பவ்யமாகத் தேத் தண்ணீரைக் கொணர்ந்து தருகிறார்.

சீனிவாசன் எடுத்துப் பருகுகிறார். சைகை காட்டி இவர்களைப் பருகச் சொல்கிறார்.

டீயைக் குடித்தபடியே இவன் பெருமாளைப் பார்க்க, பெருமாள் புருவத்தாலும் கண்களாலும் பதில் சொல்கிறான்; "பொறுமையாயிரு".

"இவர் உங்களைப் பார்க்கணும்னே மெட்ராஸ்லேர்ந்து நேரா கெளம்பி வந்துருக்கார். நீங்க அவரோட நாவலைப் பத்தி உங்க அபிப்ராயம் சொன்னா"...

"பெருமாள்! உங்க காலேஜீக்கு இந்த வருஷம் யூ.சி.ஜி. கிராண்ட் எதுவும் வந்துதோ?" பதில் சொல்கிறார் பெருமாள்; "வழக்கம் போல சயின்ஸ், மேக்த்ஸ், கம்யூட்டர் சயின்ஸ், இங்கிலீஷ், ஹிஸ்ட்ரி டி பார்ட்மெண்டுங்க தான் பெரும் பகுதியை எடுத்துக்கிட்டாங்க. தமிழுக்குக் கடைசிலதான்..."

இவன் பொறுமை இழந்து பெருமாளை வேதனையுடன் பார்க் கிறான்.

கந்தசாமி காலி யான டீ டம்ளர் களை எடுத்துச் செல்கிறார்.

"கந்தசாமி! பெருமாள் சார் தந்த ஸ்கிரிப்டை அன்னைக்கு 'பீரோ'வில் வைக்கச் சொல்லித் தந்தனே, அதைக் கொண்டா!"

இவன் ஆர்வத்துடன் கந்த சாமியின் பின்னே பார்வையைப் பாயவிடுகிறான். அவர் சீனிவாசன் முன் கையெழுத்துப் பிரதியைக் கொணர்ந்து வைக்கிறார்.

பளபளக்கும் மேஜைமேல் வெளிர்ப் பச்சைக் காகித உறையில் இவனது நாவல்.

திரைச்சீலை விலகித் தரிசனம் காணத் தவிக்கும் பக்தனாய்ப் படபடக்கும் நெஞ்சோடு இவன் சீனிவாசனின் முகத்தையே கண்ணிமைக்காது பார்த்துத் தவிக்கிறான்.

சீனிவாசன் வலக்கரத்தால் அந்த உறையை இவனை நோக்கி நகர்த்து கிறார்.

பெருமாள் அதை எடுத்து வைத்துக் கொள்கிறான். இவன் பெருமாளைப் பார்க்கிறான். இவனது பார்வையைத் தவிர்த்திட சீனி வாசனை நோக்குகிறான் பெருமாள். சீனிவாசன் இவனை விசாரிக்கிறார்.

"என்னைக்குக் கௌம்புறீங்க?"

இவன் எதிர்பார்க்கவில்லை இக் கேள்வியை.

"இன்னிக்கே."

"உங்க சொந்த ஊரெது?"

பதில் சொல்கிறான்.

"அப்பா, அம்மா?"

இதற்கும் பதில் கூறுகிறானிவன்.

இவனது ஆசைப்பட்டம் நூலறுந்து தாழ்கிறது.

"நீங்க ஆபீசுக்கு எப்படிப் போவீங்க?"

"கார்லதான்."

இவன் பதில் சொல்லியபடியே பெருமாளைப் பார்க்க, பெருமாள் தோளைக் குலுக்குகிறான்.



"வர்றேன் சார்?"

இவன் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளியபடியே எழுந்து வெளியேறுகிறான்.

ஓட்டமும் நடையுமாய் கையில் பச்சை உறையுடன் இவனைப் பின் தொடர்கிறான் பெருமாள். அருகே வந்து இவனின் தோள் தொட்டு "என்ன இப்புடிப் பண்ணிட்டாரு இந்த ஆளு? படிச்சேன். நல்லாருக்கு; நல்லால்ல..."

"பெருமாள்! மனசெல்லாம் வேதனையாயிருக்கு. நீயெல்லாம் ஏண்டா எழுத வந்தேன்னு நேரடியாக் கேட்ருக்கலாமே?"

"வருத்தப்படாதே..."

"ஹ¯ம்...இப்பிடியும் ஒரு மனுஷரா?"

"சார்! சார்!"

குரல் கேட்டுத் திரும்பிப் பார்க் கிறான். வேட்டி கட்டிய மனிதர் ஓடி வருகிறார். மூச்சு வாங்க, பேச முடியாமல் இவனது கரம் பற்றிப் பேசுகிறார்.

"சார், நான் உங்க கதையெல்லாம் அப்பப்ப பத்திரிகைல படிச்சி ருக்கேன், சார்! நான் படிச்சு ரசிச்சு, வீட்லருக்கவுங்களையும் படிக்கச் சொல்லிருக்கேன். உங்க எழுத்து ரொம்ப உணர்வு பூர்வமாயிருக்கு. இன்னிக்கு உங்களை நேர்ல பாக்க முடிஞ்சதில எனக்கு ரொம்ப சந்தோஷம்."

இவனுக்கு மூச்சு முட்டியது.

"யாரிவர்?"

"அட, சீனிவாசன் கடையில டீ கொணாந்து தந்த கந்தசாமி!"

இவன் கந்தசாமியின் கரம் பற்றித் தோளை இறுகத் தழுவுகிறான்.

"சார், இந்த நாவல் பத்திரிகையில எதும் வரப் போகுதா?"

"ஹ¯ம், இதெல்லாம் பத்திரிகைல வராது. ஒருவேளை புத்தகமாவா?"

"அப்ப, புத்தகம் வந்ததும் எனக்கு ஒரு பிரதி வீ.பீ.பீ.ல அனுப்பிவையுங்க சார். படிச்சுப் பாக்கணும். தான் படிச்சு முடிச்ச உடன் மொதலாளி என்கிட்ட குடுத்துத்தான் உள்ள வைக்கச் சொன்னாரு. ஆனா, நான் படிக்கக் கெடைக்கலை இந்த நாவல்".

இவன் பெருமாளைப் பார்க் கிறான்.

முகத்தில் ரோஜாப்பூ.

இவன் கந்தசாமியின் கரத்தில் பச்சைக் கவரைத் திணிக்கிறான்.

"கந்தசாமி, நீங்க படிங்க. படிச்சிட்டு எதுவும் எழுதணும்னு தோணினா எழுதிக் குடுங்க. அதுதான் இந்த நாவலுக்கு முன்னுரை".

பொட்டல் வெளியில் தாழப் பறந்த பட்டம் 'சர் சர்'ரென மேல் எழும்பி சீறிப் பாய்ந்து வானைப் பிளந்து உயரே உயரே பறக்கிறது.





# நன்மைகள் கோடியடா!

**கவிஞர் தஞ்சை. பாண்டியன்**



கோடை விடுமுறை விட்டாச்சு-தம்பி
கொடிய வெப்பம் வந்தாச்சு!
பாடும் வண்டாய்த் திரியாமல்-வீட்டில்
பணிவாய் அடங்கி இருந்திடடா!

மாலை முழுதும் விளையாடு-உன்
மனமும் மகிழப் பலரோடு!
பாலைப் போன்ற மனமோடு-நீ
பண்புடன் வந்தால் துயரேது?

ஊரை எங்கும் சுற்றாமல்-அறிவை
ஊட்டும் நூல்கள் கற்றிடடா!
பேரைப் புகழை இழக்காமல்-நீ
பெரியோன் ஆனால் நன்மையடா!

நாளைக் குடிமகன் உன்னாலே-நம்
நாடே செழித்திட வேண்டுமடா!
வேளை தோறும் கடமைகளை-நீ
விரும்பிச் செய்திட வேண்டுமடா!

சோம்பல் உள்ளவன் உயர்வானா? - நீ
சுறுசுறுப் பாகச் செயல்படுவாய்!
தாம்வரும் வழியில் வெற்றிகளை - நீ
தந்திட நித்தம் முயன்றிடுவாய்!

காலம் பொன்னைப் போன்றதடா-நம்
கடமை கண்ணைப் போன்றதடா!
நாளும் இதனை உணர்ந்திட்டால்-வரும்
நன்மைகள் வாழ்வில் கோடியடா!





மருத்துவம் :

# பிணிதீர்க்கும் திருநீற்றுப் பச்சிலை

- டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

இந்தத் திருநீற்றுப் பச்சை இலை என்பது, துளசியின் கதிர்களைப் போலவே பெரிய அளவில் கதிர்களாகக் காட்சி அளிக்கும். ஆனால், துளசி இலைக்கும் இதற்கும் நறுமணம் இருப்பினும் இதற்கு நெடிசல் வரும் குணமுண்டு. இலையைக் கிள்ளி நுகர்ந்தால் கார மணமும், ஒரு வித நெடிசலும் விறுவிறுப்பான வாசனையும் வீசும்.

கதிர் முதிர்ந்தால் எள் விதைபோல, உருண்டையானதும் கருமைநிறமுமான விதை உதிரும். இவ்விதையை நாட்டு மருந்துக் கடைகளில் விற்பனை செய்வதுண்டு.

தமிழ்நாட்டுக்கே உரிய மூலிகை என்றாலும், இது பாரசீகம், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களிலும் பயிராக்கப்படுகிறது.

**தீரும் நோய்**

சிறுநீர் பெருக்கு, வெப்பம் தணிக்க, வாதநோய், கபநோய், காது - மூக்கு - தொண்டைகளில் காணும் நோய்களுக்கெல்லாம் சிறந்த நிவாரணியாகும். மற்றும் நுரையீரல், சளி, காசம், சீதள ஜுரம், இழுப்பு, கபவாந்தி, ரத்தவாந்தி, வெட்டை சூடு, கண்களில் காணும் கட்டி, மருவு, பருவு, காது வலி, வீக்கம், மண்டை பீனிச நோய், கணுக்களில் ஏற்படும் வலி - அதாவது, முழங்கால்வலி, முதுகுவலி, கீழ்வாய்வு மற்றும் பல.

**பயன்படுத்தும் முறை**

**நுரையீரல் சளி காசநோய்களுக்கு :**

திருநீற்றுப் பச்சை இலையின் சாறு 10 துளி, தூதுவளை இலையின் சாறு 10 துளி இவைகளை ஒன்று கலந்து ஒரு கஸ்தூரி மாத்திரையைத் தேனில் இழைத்து, அச் சாற்றில் கலந்து கலக்கி வைத்துக்கொண்டு, காய்ச்சிய பசும்பால் 100 மிலி அதில் கொஞ்சம் கற்கண்டுகள் சேர்த்து, அச்சாற்றில் கலந்து ஒரு வேளை மட்டும் அருந்திவரும் பட்சம், நாளடைவில் நுரையீரல் சளி காசநோய் அனைத்தும் நீங்கிவிடும்.

**காது - மூக்கு - தொண்டை நோய்களுக்கு :**

திருநீற்றுப் பச்சை இலை 100 கிராம், கற்பூர வள்ளி இலை 100 கிராம், சுக்கு 15 கிராம், மிளகு 15 கிராம், திப்பிலி 15 கிராம் - இவைகள் அனைத்தையும் அம்மியில் வைத்து நன்கு மை போல் அரைக்கவேண்டும். மெழுகுபோல் ஆனதும் அதனைச் சிறிய சுண்டைக்காய் அளவு உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்தி, நன்கு காய்ந்த பிறகு ஒரு புட்டியில் சேமித்து வைத்துக்கொள்ளவும். தினமும் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் வாயிலிட்டு, காய்ச்சிய பசும்பால் கொடுத்து வரவும். சிறுவர்களுக்கும் கொடுக்கலாம்.

குறிப்பு - தொண்டையில் சதை வளர்தல், மூக்கில் சதை வளர்தல், டான்சில் ஆபரேஷனே இன்றி 40 நாட்களில் நீங்கும்.

சீதள ஜுரம், கபத்தால் வரும்

சளிஜுரம், சளி ஜுரத்தால் வரும்

**இழுப்பு, கபவாந்தி, ரத்தவாந்தி இவைகளுக்கு:**

தேவையான திருநீற்றுப் பச்சை இலை, கதிர் வேர் காம்பு இவை அனைத்தையும், சிறிய மண்பாண்டத்தில் போட்டு ஒரு துண்டு சுக்கு 10 மிளகு அம்மியில் வைத்து நசுக்கி, இரண்டு சிட்டிகை சீரகம் எடுத்து



இவைகளைத் தட்டிப் போட்டு, ஒரு லிட்டர் தண்ணீர்விட்டு நன்கு கொதிக்கச் செய்து 12 லிட்டர் ஆகச் சுண்டிய பிறகு எடுத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**பயன்முறை**

பெரியவர்கட்கு 100 மிலி.

சிறியவர்கட்கு 50 மிலி.

குழந்தைகட்கு ஒரு சங்கு அளவும், காலை-மாலை கொடுத்து வர, நீங்காத சீதள ஜுரம் நீங்கும்.

**கண்களில் காணும் கட்டிக்கு :**

திருநீற்றுப் பச்சை இலையைக் கொஞ்சம் எடுத்துக் கசக்கினால் சாறுவரும். அந்தச் சாற்றை எடுத்து அடிக்கடி கண் கட்டியின்மேல் தடவிவரும் பட்சம், கட்டி அமுங்கும். அல்லது, பருத்து, பழுத்து உடையும். உடைந்த பிறகு இந்தச் சாற்றையே போட்டு வர ரணம் ஆறி நலம் ஆகும்.

**வெட்டைச்சூடு நீங்க :**

தேவையான இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து இடித்து கசக்கிப்பிழிந்து, சுமார் இரண்டு அவுன்ஸ் சாறெடுத்து, 200 மிலி பசும்பாலில் கலந்து காலையில் மட்டும் ஒரு வாரம் அருந்திவரும் பட்சம் மேற்கண்ட வெட்டைச் சூடு தணியும்.

**முகத்தில் காணும் மருவு நீங்க :**

1.தேவையான இதன் சாற்றுடன் வசம்பு சேர்த்து அரைத்து முகத்தில் தோன்றும் மருவுக்கு லேசாகப் போடவும்; நாளடைவில் நீங்கிக் கரையும்.

2.ஆரம்பத்தில் காணும் மருவுக்கு, தோல் உரித்த வெள்ளைப் பூண்டு ஒரு பல், ஒரு பொட்டு சுண்ணாம்பு இவைகள் மூலம், முதலில் அந்த மருவுமேல், சுண்ணாம்பு வைத்து, பூண்டினால் லேசாகத் தேய்க்க மருவு தோல் விலகி இரத்தம் வரும், துணி கொண்டு துடைக்கவும். எளிதில் நீங்கும். பயம் வேண்டாம்.

**விக்கமுற்ற கால்களுக்கும், குடல் வாதம் உள்ளவர்களுக்கும் சிறந்த எளிய முறை :**

திருநீற்றுப் பச்சை இலை தேவையானதை எடுத்து சுத்தம் பார்த்து, ஓர் மண் பாண்டத்தில் இட்டு, அத்துடன் தகுந்த தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி எடுத்து, வடிகட்டி, வடிகட்டியதை, எடுத்து 20 முதல் 30 மில்லி வரை அருந்த நாளடைவில் குடல் வாதம் நீங்கி, மற்றும் வீக்கம் தணிந்து குணமாகும்.

**காதுவலி:**

இந்த இலைச் சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி, சாறு சுண்டிய பிறகு எடுத்து புட்டியில் சேமித்து வைத்துக்கொண்டு, தேவையானபோது எடுத்து வலியுள்ள காதுகளில் இரண்டு துளி விட்டு, பஞ்சு அடைக்க நாளடைவில் வலி நீங்கும்.

**மண்டை பீனிச நோய்களுக்கு - நஸ்யம் :**

இந்த இலைச் சாற்றில் மிளகு தேவையானதைப்



போட்டு ஊறவைத்து உலர்த்தி, உலர்த்தியதை - அதாவது காய்ந்ததை எடுத்துத் தூள் செய்து வைத்துக்கொள்க.

வேண்டும்போது இத்தூளை எடுத்துப் பொடி போடுவது போல் செய்தால் ஓயாது நீர் ஒழுகும். மூக்கில் சளி ஒழுகும். பீனிச நோய்களில் தும்மல் இருமல் யாவும் நீங்கும். பெரியோர்கள் இதே தூளைக் காலை வேளையில் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வரலாம்.

**வாந்தி நிற்க :**

திருநீற்றுப் பச்சை இலையின் சாறெடுத்து, வெந்நீரில் கலந்து அருந்த, சகலவிதமான வாந்தியும் நிற்கும்.

**முகத்தில் காணும் பருவு நீங்க :**

பருவத்தில், முகத்தில் காணப்படும் பருவைத் தெரிந்தோ, தெரியாமலோ நகத்தால் கிள்ளி விடுவதுண்டு. அது கடைசியில் புரையோடு சீழ்வைத்து சில சமயங்களில் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடும் மற்றும் முகம் வீங்கிக் காணப்படும். எனவே, இத்தகைய விஷப் பருக்கள் தோன்றினால், உடனே திருநீற்றுப் பச்சை இலையைக் கசக்கிச் சாறெடுத்து, அந்தச் சாற்றோடு வசம்பு வைத்து நன்கு அரைத்து, அப்பருக்கள் மீது சுமார் 3 அல்லது 6 வேளை தடவிவரும் பட்சம் பருவு காய்ந்து கொட்டிவிடும்.

குறிப்பு: பருவு வேறு, மருவு வேறு என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

**அறிவு வளர :**

திருநீற்றுப் பச்சிலையைக் கைப்பிடி எடுத்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து அதன் மேல் பசும்பால் ஊற்றி அரைத்து, அரைத்ததை எடுத்து மீண்டும் 200 மிலி பசும்பாலில் கலந்து கலக்கி அருந்திவரும் பட்சம், நாளடைவில் அறிவு விருத்தியாகும்; மற்றும் கப வாந்தியை நீக்கும் சக்தி படைப்பவை.

**விதை :**

திருநீற்றுப் பச்சை விதைக்குத்தான் சப்ஜா விதை என்பார்கள். கோடையில் சர்பத் அருந்தும்பொழுது இந்த சப்ஜா விதையைப் போடுவார்கள். விற்பனை செய்யும் கடைக்காரர், ஏற்கெனவே சப்ஜா விதையை வேண்டிய் அளவில் எடுத்துத் தண்ணீரில் போட்டு வைப்பார். சிறிது நேரத்தில் உப்பி வெள்ளையாகவும், குழகுழப்பாகவும் நீரில் மிதக்கும். குளிர்ச்சியான பாணங்களுக்கு இந்த சப்ஜா விதையைத் துணையாகச் சேர்ப்பதுண்டு.

கணுக்களில் ஏற்படும் வலி, முழங்கால் வலி, முதுகுவலி, கீழ் வாய்வு அனைத்தும் நீங்க தைலம் செய்முறை:

தேவையானதும் அதிகமாகவும் உத்தேசமாகத் திருநீற்றுப் பச்சிலைகளைக் கொண்டுவந்து சுத்தம் பார்த்து உரலில் போட்டு, சிறிது தண்ணீர் ஊற்றி இடித்து, எடுத்து, பிழிந்த சாறு சுமார் 2 லிட்டர் எடுத்துக் கொள்ளவும்.

பின், சுத்தமான நல்லெண்ணெய் 1¼ கிலோ, பசுவின் பால் 1½ லிட்டர் - இந்த மூன்று சரக்குகளையும் ஒரு மண்பாண்டத்தில் இட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கி வடிகட்டிச் சேமித்து வைத்துக்கொண்டு, நோய் தீரும் வரை கொடுத்தால் ரொம்பவும் நல்லது.

உபயோக முறை அளவு 5 முதல் 10 கிராம் எடுத்து, காலை மாலை இருவேளை உபயோகிக்கலாம்.

குறிப்பு : இத் தைலத்தை 5 கிராம் முதல் 10 கிராம் வரை உள்ளுக்கு அருந்தலாம். மற்றும் இத் தைலத்தை எடுத்து முழங்கால், முதுகு போன்ற இடங்களில் மேல் பூச்சிற்கும் தடவலாம்.

இத் தைலம் காலை மாலை அருந்தும்போது 10 நிமிடம் கழித்து, சீரகக் குடிநீர் சுமார் 10 கிராம் எடுத்து துணை மருந்துடன் அருந்தவேண்டும்.

பத்தியம்-புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது
பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப
வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002




# உன் விருப்பமாவது



அமைதியின்றி அலைகிறேன்
வந்துவிடேன் காதலே;
பறிக்கப்பட்ட ஆற்றல்
காத்திருத்தலோடு கரைகிறது!

புவியை ஸ்வர்க்கமாக்கும்
வியாபாரம் விட்டுவிட்டு
போதையில் புத்திவரும்
வாழ்வின் சூட்சுமம் பற்றி



உன் அணிவகுப்பினின்றும்
விடை தந்துவிடாதே!

இறுக்கி வைத்திருக்கிறேன்
கட்டுப்பாடுள்ள அழுகைகளை!

மனத்திரையில் காணும்
கணநேரக் காட்சிகள்
பூக்களின் அழகுத் துள்ளலாய்
அவ்வப்போது வந்துபோகும்!

உனது விருப்பமாவது
என் சிரச்சேதமெனில்
நான் திருப்தியுறுவேன்
அந்த உறுதிமொழிக்கு!



ஆங்கில மூலம் : எம்.ஏ.கான் காலிஃப்
தமிழில் : திருவாரூர் ஜெயகிருஷ்ணன்

வேளாண்மை

தாவர நூற்புழுக்கள் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள். இவை தாவர வேர்களில் இருந்து சாற்றை உறிஞ்சி உண்டு வாழ்கின்றன. தமிழ்நாட்டில் இந்த நூற்புழுக்களால் ஏற்படும் இழப்பு ஒரு ஆண்டுக்கு 2 கோடி ரூபாயாகும். கார்போயூரான் மற்றும் போரேட் போன்ற நூற்புழுக்கொல்லி மருந்துகள் இருந்தாலும் இவற்றை வாங்கி உபயோகிப்பது அதிகமாகச் செலவாவதுடன் முறையாகக் கையாளப் படவில்லை எனில், ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. இந்த நிலைமையில் ஒருங்கிணைந்த நூற்புழுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியமானதாகிறது.

அங்ககப் பொருட்கள் மக்கும்போது வெளியாகும் அமிலங்கள் நூற்புழுக்களுக்கு நச்சுக்களாகச் செயல்படுவதுடன், மண்ணின் சூழ்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் நுற்புழு எதிரி நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இவை நூற்புழு ஒட்டுண்ணிகளாகவும் நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் தன்மை உடையனவாகவும் இருப்பதால், மண்ணில் நூற்புழுக்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது.

**பூஞ்சாள அளவு**

மண்ணில் இடும் பிண்ணாக்குகள் மக்கும்போது வெளியாகும் வேதிப்பொருட்கள், ஒய்வுநிலையில் உள்ள பூஞ்சான வித்துக்களைத் தூண்டி அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன. மண்ணில் பசுந்தாள் உரமிடும்போது, பயிர்களைத் தாக்காத மற்ற நூற்புழுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, இதனால் நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் பூஞ்சான அளவை அதிகரிக்கச் செய்கின்றது.

நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் பூஞ்சைகளான ஆர்த்ரோபோட்ரிஸ், டேக்டைலெல்லா நூற்புழு முட்டை ஒட்டுண்ணிகளான பேசில்லோமைசஸ் லில்லாசினஸ், வெர்டிசிலியம் கிளாமிடோஸ்போரியம், கிளையோகிலேடியம் ரோசியம், பியூசேரியம் ஆக்ஸிஸ்போரம் மற்றும் சிலின்ரோ கார்பான் டெஸ்ட்ரக்டன்ஸ் ஆகியவற்றின் செயல்பாடு இந்த அங்ககப் பொருட்கள் மட்கும்போது அதிகரிக்கின்றது.

1. தாவர நூற்புழுக்கள் : வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

   பயிர் : காய்கறிகள்.

2. தாவர நூற்புழுக்கள் : மொச்சை வடிவ மற்றும் வேரழுகல் நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : தொழு உரம் எக்டருக்கு 25 டன் இடுதல்.

   பயிர் : பருத்தி.

3. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் முட்டைக்கூடு நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு அல்லது 70 டன் தொழு உரம் இடுதல்.

   பயிர் : உருளைக்கிழங்கு.



4. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் வேர்கருகல் நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

   பயிர் : கனகாம்பரம்.

5. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள்.

   அங்கசுப் பொருட்கள் : தொழுஉரம் எக்டருக்கு 25 டன் இடுதல்.

   வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 1 டன் இடுதல்.

   பயிர் : வெற்றிலை.

   பசுந்தாள் உரமான சணப்பைப் பயிரிட்டு மடக்கி உழுதல்.

6. தாவர நூற்புழுக்கள் : வேர்கருகல் நூற்புழுக்கள்.

   எக்டருக்கு 25 டன் எருக்கு இலை உலர்த்தி இடுதல். வேப்பம்பிண்ணாக்கு மரத்துக்கு 2 கிலோ வீதம் தொழு உரத்துடன் கலந்து இடுதல்.

   பயிர் : தென்னை, பாக்கு.

7. வேர்கருகல் நூற்புழுக்கள் : எலுமிச்சை நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : மரத்திற்கு 250 கிராம் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

   பசுந்தாள் உரமான சணப்பு, கொளுஞ்சி, செண்டுமல்லி ஊடுபயிராகப் பயிரிடுதல்.

   பயிர் : சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, மற்றும் நாரத்தை.

8. தாவர நூற்புழுக்கள் : வேர் முடிச்சு நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : கவாத்து செய்தபின் உரமிடும்போது கொடிக்கு 250 கிராம் வீதம் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

   பசுந்தாள் உரமான சணப்பைப் பயிரிட்டு, பூ பிடிக்குமுன் வெட்டி மண்ணின்மீது இடவும்.

   பயிர் : திராட்சை.



**நூற்புழுவைத் தாங்கும் சூரியகாந்தி**

தமிழ்நாட்டின் முக்கிய எண்ணெய் வித்துப்பயிரான சூரியகாந்தி தாவர நூற்புழுக்களில் முக்கியமான மொச்சை வடிவ நூற்புழுவினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்த மொச்சை வடிவ நூற்புழுவின் தாக்குதலுக்குட்பட்ட பயிர் சோலையடைந்து வளர்ச்சியற்றுக் காணப்படும் சில இடங்களில் செடி நுனியிலிருந்து காய்ந்து கொண்டுவரும். பகலில் நீரிருந்தும் செடி வாடியது போன்று காணப்படும். இவ்வாறாகப் பயிர் சேதமடைந்து மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

இந்த நூற்புழுவைத் தாங்கி வளரக்கூடிய சூரியகாந்தி வகை ஒன்றைத் தேர்ந்தெடுக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழு இயல் துறை மேற்கொண்ட ஆய்வில், மொத்தம் 7 வகைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அவைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) 915 என்ற வீரிய வகையில் குறைந்த அளவில் நூற்புழுப் பெருக்கம் ஏற்படுவதுடன், நூற்புழு நோயை நன்கு தாங்கும் திறனுடன் இருப்பதாகத் தெரிந்தது. இந்த இரகத்தைப் பயிர் செய்வதன் மூலம் சூரியகாந்திப் பயிரிலும் இதனைத் தொடரும் மற்ற பயிர்களிலும் நூற்புழுவினால் ஏற்படும் சேதத்தைப் பெரிதும் தவிர்க்கலாம்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள பெரிய நாகப்பூண்டி என்ற கிராமத்தில் திருத்தணி - சித்தூர் சாலையிலிருந்து சின்னநாகப்பூண்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து பெரியநாகப்பூண்டி கிராமம் வழியாக, சுமார் 15 கிராமங்களுக்குச் செல்லும் வழியில், வீரமங்கலம் ஏரிக்கு - ஆந்திர மாநிலத்தில் உற்பத்தி யாகிவரும் கால்வாயில் கட்டப்பட்டிருந்த பாலம், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெய்த பெருத்த மழையில் உடைப்பு ஏற்பட்டுச் சீரழிந்துவிட்டது. அது போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. இதை அனைத்துத் தரப்பு அதிகாரிகளும், பார்வையிட்டுச் சென்றார்கள். அதோடு சரி. அதன் பிறகு உரிய நடவடிக்கைக்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு மூலமாகவும், நேரடியாகவும் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

- **ஏ. பெருமாள்,**
*பெரியநாகப்பூண்டி*
*செங்கை எம்.ஜி.ஆர்.மாவட்டம்.*



**தீர்வு :**

*திருத்தணி உட்கோட்டம், இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் சித்தூர்-திருத்தணி சாலையிலிருந்து பெத்தநாகப்பூண்டி செல்லும் சாலையில், கி.மீ.0/6ல் (வீரமங்கலம் கிராமம் அருகில்) பாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி தலைமைப்பொறியாளர் (நெ) வடிவமைப்பு மற்றும் புலானாய்வு, சென்னை அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றுவருகிறது. மதிப்பீட்டுத் தொகையை ஊராட்சி ஒன்றியம் இத்துறையிடம் செலுத்தியவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

- **பு. பாலகிருஷ்ணன்,**
*தலைமைப் பொறியாளர்*
*நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை,*
*சென்னை.*

**பிரச்சினை:**

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது மாவட்டக் கிளை நூலகம். சுதந்திரப் போராட்டத் தியாகி டி.ஏ.ஆதிமூலம் அவர்களின் பெயரில் உள்ள இந்த மாவட்டக் கிளை நூலகத்தில் பல புத்தகங்கள் உள்ளன. குடியாத்தம் நகரம் மற்றும் குடியாத்தம் சுற்றியுள்ள அனைத்துப் பொதுமக்களுக்கும் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த மாவட்டக் கிளைநூலகத்திற்குத் தினமும் ஆயிரத்திற்கு உட்பட்ட பல தரப்பட்ட பொதுமக்கள் வந்து நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த நூலகத்தில் குறைந்த மின்சார அழுத்தமே உள்ளது. அதாவது போதிய மின்சார அழுத்தம் இல்லை. தக்க





அதிகாரிகள் தலையிட்டுக் கவனிப்பார்களா என்று பொதுமக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**-கோ.அரங்கநாதன்**
*குடியாத்தம்.*

**தீர்வு :**

*வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் கிளை நூலகத்திற்குப் போதிய மின்சார வசதி செய்துதர மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

- **இரா.கண்ணன்,**
*பொது நூலக இயக்குநர்*
*சென்னை.*

**பிரச்சினை:**

நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில் "காந்திஜி நூற்றாண்டு நினைவுப் பூங்கா" உள்ளது. இந்தப் பூங்கா சீர்காழி நகராட்சிக்குச் சொந்தமானது ஆகும். பூங்காவின் உள்ளே பொதுமக்கள் அமருவதற்கு நிறைய சிமெண்டு கட்டைகள் புதிதாகச் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுவினார்கள். ஆனால் பொதுமக்கள் உள்ளே அமர்ந்து ஓய்வு எடுப்பதற்குத் தற்போது அனுமதி அளிப்பது கிடையாது. இதே போன்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பொது மக்களுக்காகத் தினசரி செய்தித் தாள்களை அமர்ந்து படிப்பதற்காக ரூ.70 ஆயிரம் செலவில் வாசகசாலை கட்டிடம் கட்டப்பட்டு, பணிகள் முடிந்துவிட்டன. மூன்று ஆண்டு காலமாக இந்தப் புதிய கட்டிடத்தில் பொது மக்கள், வாசகர்கள் அமர்ந்து படிக்க அனுமதிக்கவில்லை.

இதனால் 70 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் பாழ்; யாரும் உபயோகிக்க முடியாமல் புதிய கட்டிடம் இருக்கிறது. மேலும், பூங்காவின் வாசக சாலைக்கு எத்தனை நாளிதழ்கள் தினமும் வருகிறது? என்ற விவரம் எழுதி வைக்கப்படவில்லை. மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்பட்ட பூங்கா வாசகசாலை, தற்போது செயல்படுவது இல்லை. பூங்காவிற்காக வாங்கப்படும் நாளிதழ்களில் காலையில் சில நாளிதழ்களும் மாலையில் சில நாளிதழ்களும் பூங்கா வாசக சாலைக்கு வராமல், சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் போடப்பட்டு, அங்குள்ள ஊழியர்கள், அலுவலர்கள், நகராட்சி மன்றத்தலைவர் படிக்கப் பயன்படுத்தப் படுகிறது. இதனால் பொது மக்கள், வாசகர்கள் நாளிதழ்களைப் படிக்க முடியாமல் பாதிப்பை அடைகிறார்கள். பூங்காவில் உள்ள பொது வானொலிப் பெட்டி பொது தொலைக்காட்சிப் பெட்டி பல ஆண்டுகளாக இயங்கவில்லை.

பூங்காவின் நுழைவு வாயிலில் இருந்த "காந்திஜி நூற்றாண்டு பூங்கா" என்ற போர்டும், வாசக சாலை திறக்கும் நேரத்தை அறிவிக்கும் சிறிய போர்டும் தற்போது அடியோடு இல்லை. உடனே அவை நிறுவப்பட வேண்டும். பூங்காவின் திருமஞ்சன வீதி பக்கத்தில், பூங்காவின் உள்ளே குப்பைகள் நிறையக் கொட்டப்பட்டுவருகிறது. இரவில் பூங்கா இருளடைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் பூங்காவில் மின்விளக்கு வசதிகள் இல்லாதததுதான். எனவே, மின் விளக்குகள் போடவேண்டும். எப்போதாவது ஒருமுறை தான் பூங்காவில் இருக்கும் சங்கு ஊதப்படுகிறது. சங்கு வைக்கப்பட்டுள்ள டவரை பள்ளமான இடத்தில் வைத்து இருக்கிறார்கள். இதனால் சங்கின் ஒலி குறைவாக ஒலிக்கிறது. மேடான இடத்தில் சங்கு டவரை வைக்க வேண்டும்.



பூங்காவில் இருக்கும் மோட்டார் பம்பு செட் காயில் வீணாகிவிட்டதால் மோட்டார் பம்பு செட் பல ஆண்டுக ளாக இயங்கவில்லை. இதனால் செடி மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சமுடியவில்லை. பூங்காவைச் சுற்றி வேலி அமைக்காத காரணத்தினால் ஆடு, மாடுகள் மேய்கிறது. வேலி

அமைக்கவேண்டும். சீர்காழி நகராட்சி நிர்வாகம் இக் குறைகளைப் போக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*- ஊர்ப் பொதுமக்கள்*
*சீர்காழி*

**தீர்வு :**

*சீர்காழி நகராட்சியின் காந்திபூங்காவில், மின் விளக்குகள் நல்ல நிலையில் எரிய விடப்பட்டுள்ளன. அன்றாடம் பொதுமக்கள் படிப்பதற்காக நாளிதழ்கள் வெளியிலேயே வைக்கப்பட்டுள்ளது. சங்கு சரியான நேரத்தில் ஒலிக்கப்பட்டு வருகிறது. பூங்காவில் பெயர்ப் பலகை, காலஅட்டவணை விரைவில் எழுதி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*- த. குமார்,*
*ஆணையர், சீர்காழி நகராட்சி.*



**பிரச்சினை:**

1.12.96 அன்று வந்த 'தமிழரசு' புத்தகத்தில் எங்கள் ஊர் பிரச்சினை என்று எஸ். முருகேசன், புளியந்துறை எழுதியதற்குத் தீர்வு என்று போட்டு ஆணையர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் என்று எழுதியிருந்தீர்கள். ஆனால் இதுவரை எந்தவிதமான தீர்வும் ஏற்பட்டதில்லை. பழுது பார்க்காமலேயே தீர்வு என்று ஆணையர் அவர்கள் எப்படி பதில் எழுதி இருந்தார்கள்? அதனால் பிரச்சினைக்கு உடன் தீர்வு ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*- ஊர்ப் பொதுமக்கள்*
*புளியந்துறை அஞ்சல், சீர்காழி வட்டம்.*

**தீர்வு :**

*கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, காட்டூர் ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகஸ்ட் 96 வரை இயங்கிக் கொண்டிருந்தது. மேற்படி நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பில்படுகை என்ற கிராமத்திலிருந்து பம்ப் செய்யப்பட்டு கொண்டுசெல்லப்படுகிறது. அவ்வாறு செல்லும்போது தண்ணீர் செல்லும் பி.வி.சி.பைப் போக்குவரத்தின் காரணமாகவும், நீர் அழுத்தம் காரணமாகவும், நெடுகிலும் அடிக்கடி உடைந்து தண்ணீர் இடையிலேயே கசிவு ஏற்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏறமுடியாத நிலை ஏற்படுகிறது. இக்குறையை நீக்கச் சில இடங்களில் பி.வி.சி.பைப் லைனுக்குப் பதிலாக ஜி.ஐ. பைப் லைனாக மாற்றி அமைத்தால்தான் தண்ணீர் தடையின்றி மேல்நிலைத் தொட்டிக்கு ஏறும். இதனைச் சீர்செய்து இயங்கும்படி செய்ய, கோட்ட வளர்ச்சி அலுவலக விசைப் பம்பு பராமரிப்பு உதவிப்பொறியாளர் மூலம் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. மிக விரைவில் இக்குறைபாடு களையப்பட்டு, நிரந்தரமாகத் தண்ணீர் பெற ஏற்பாடு செய்யப்படும், இது தவிர, இவ்வூராட்சியில் மொத்தம் 20 குடிநீர் கைப்பம்புகள் உள்ளன. இவற்றில் இரண்டில் நல்லநீர் குடிநீர் கிடைக்கிறது. மீதி 18-ல் சிறிது உவர் நீர் வருகிறது. இதைத் தவிர, நல்ல தண்ணீர் கிடைக்கும் பகுதியில் புதியதாக ஒரு 'தாரா கைப்பம்பு' அமைப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.*

*மேலும், மூன்று பேஸ் மின்சப்ளை அடிக்கடி இப்பகுதியில் துண்டிக்கப்படுவதால் மோட்டார், மின்சப்ளை இல்லாத தினங்களில் மட்டும் இயக்க முடியாத நிலையில் இருந்துவந்தது. இது குறித்து 7.3.97ல் மின்வாரியத்தினை அணுகி மூன்றுபேஸ் மின்சப்ளை தொடர்ந்து வழங்கக் கேட்டுக்கொண்டதன் பேரில் 8.3.97ஆம் தேதியிலிருந்து மூன்று பேஸ் மின்சப்ளை தொடர்ந்து, வழங்கப்பட்டு, தற்சமயம் மின்மோட்டார் நல்ல நிலையில் இயங்கி அனைத்துத் தெருக்களிலும் உள்ள பைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- வீ. குருமூர்த்தி*
*ஆணையர்.*
*ஊராட்சி ஒன்றியம், கொள்ளிடம்.*



**பிரச்சினை:**

எங்கள் ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை தாலுகாவிலுள்ள ஊனையூர். இவ்வூரைச் சுற்றிலும் சுமார் 10,000 மக்கள் வசிக்கின்றனர். புகழ்பெற்ற திருநீலியம்மன் ஆலயமும் இங்குதான் உள்ளது. வாரம் ஒருமுறை வாரச் சந்தை சிறப்பாகக் கூடுகிறது. இவ்வூருக்கு அருகே உயர்நிலைப்பள்ளியோ, மருத்துவமனையோ கிடையாது. இவ்வூருக்குத் துவரங்குறிச்சியிலிருந்து 4 முறையும், புதுக்கோட்டையிலிருந்து 2 முறையும் பஸ் வந்து செல்கிறது. ஆனால் இவ்வூர் மக்கள் மருத்துவமனை, அத்தியாவசியப் பொருட்கள் வாங்கவும், திருமணம் போன்ற வைபவப் பொருட்கள் வாங்கவும் பொன்னமராவதி செல்ல வேண்டி இருக்கிறது. மாணவர்களும் இவ்வூரிலிருந்து மேலத்தானியம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுமார் 200 பேர் 5 கி.மீ. தூரம் நடந்தே செல்கின்றனர். பொன்னமராவதி காரையூர், மேல்தானியம், கீழ்த்தானியம் ஆகிய ஊர்களில் இருந்து வணிகர்களும், சிறுவிவசாயிகளும் தங்கள் விளைபொருட்களை தலைச் சுமையாகவே சந்தைக்குக் கொண்டு வருகின்றனர். ஆகவே பள்ளி மாணவர்கள் பயன்பெற, வணிகர்கள், விவசாயிகள், சந்தைக்கு வந்து செல்ல, பக்தர்கள் நீலியம்மனைத் தரிசனம் செய்யவும், நோயாளிகள் மருத்துவமனை சென்று வரவும், அரசு ஊழியர்கள் அலுவலகம் சென்று வரவும் பொன்னமராவதியிலிருந்து மேலத்தானியம் வரும் டவுன்பஸ் சூரப்பட்டி வழியாக ஊனையூருக்கு விட நடவடிக்கை எடுக்கவேணுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*-அ.சின்னத்தம்பி*
*ஊனையூர் அஞ்சல்,*
*இலுப்பூர் வழி, திருச்சி மாவட்டம்.*

**தீர்வு :**

*மனுவில் குறிப்பிட்டுள்ள ஊனையூர் கிராமத்திற்குத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்து ஒன்று மூலம் துவரங்குறிச்சி - ஊனையூர் வழித்தடத்தில் தினசரி 5 முறை (10 தனி நடைகள்) சென்றுவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*- மேலாண்மை இயக்குநர்*
*தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்.*

*தற்பொழுது பொன்னமராவதி கிளையிலிருந்து இயங்கும் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத் திட்டத்தில், கீழ்க்கண்ட வழித்தடங்களில் நேர நெருக்கடியுடன் இயங்கி வருகின்றது.*

*பொன்னமராவதி - மேலத்தானியம் - 4 நடைகள் (வழி) ஆலவயல், மரவாமதுரை, சடையம்பட்டி.*

*பொன்னமராவதி - மேலத்தானியம் - 2 நடைகள் (வழி) காரையூர்.*

*பொன்னமராவதி - சிங்கம்புணரி - 2 நடைகள் (வழி) திருக்களம்பூர்.*

*பொன்னமராவதி - சடையம்பட்டி - 2 நடைகள் (வழி) பாலக்குறிச்சி.*

*பொன்னமராவதி - திருப்பத்தூர் - 4 நடைகள் (வழி) வேலங்குடி.*

ஊனையூர் என்ற கிராமம், ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ள ஊராகும். கோரிக்கைப்படி பொன்னமராவதி - மேலத்தானியம் நடைகளைப் பொன்னமராவதியிலிருந்து சுமார் 6.1 கிமீ. தொலைவில் உள்ள ஊனையூர் வரை நீட்டித்து இயக்கினால் நடைகளின் இயக்க நேரம் அதிகரித்து, அடுத்தடுத்த நடைகளை உரிய நேரத்திற்கு இயக்கிட இயலாத நிலையும், மேற்படி நகரப் பேருந்தின் அனைத்து நடைகளையும் இயக்கிட இயலாத நிலையும் ஏற்பட்டு, பலதரப்பினரிடமிருந்தும் புகார்களுக்கு வாய்ப்பளிக்கும்.

எனவே, புதிதாக நகரப் பேருந்து வழித்தடங்கள் துவக்கும் போது, மேற்கண்ட வழித்தடத்தில் பேருந்து செல்லாத் பகுதியில் உள்ள சாலையின் தகுதி மற்றும் நீளம் பற்றிய சான்றிதழ் நெடுஞ்சாலைத் துறையினரிடம் பெற்று, பேருந்து செல்லாத பகுதியில் உள்ள கிராமங்களில் அரசு ஆணையின் படி போதிய மக்கள் தொகை இருப்பின், முன்னுரிமை கொடுத்து அரசு விதிமுறைகளுக்குட்பட்டு நகரப் பேருந்து இயக்கிடப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பொது மேலாளர்,
வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக்கழகம்.

**பிரச்சினை:**

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் வசிக்கும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் திட்டப்பகுதிகளான கங்கை யம்மன் கோவில் தெரு மற்றும் லட்சுமி புரத்தில் அரசு ஆணை எண்.1117 (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தித் துறை) நாள் 27.6.79ன்படி குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை யிலும் மனைதாரர் வசிக்கும் மனையை அவருக்கே உரிமையாக்கும் பொருட்டு வீட்டு மனைகளுக்குக் கிரயத்தொகையினை நிர்ணயம் செய்து, மனையில் வீடு கட்டுவதற்கு முன்பணமாக ரு.3000 (மனையின் கிரயத் தொகை ரு.3000) இரண்டையும் பத்தாண்டு காலத்திற்குள் மாதத் தவணைகளாக செலுத்துமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆணை பிறப்பித்தது. அதனை ஏற்றுக்கொண்டு ஒதுக்கீடு பெற்றவர்களில் 90% பேர் கட்டி முடித்து வாரியம் வழங்கும் "தடையின்மைச் சான்றிதழ்" பெற்றுவிட்ட நிலையில் இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. இது அரசு பரிசீலனையில் உள்ளதாக முந்தைய அரசாங்கங்கள் காலதாமதம் செய்து வந்தது. மேற்படி பட்டா இல்லாமல் மக்கள் மனையின் பெயரில் மேலும் கடன் பெற்று வீடுகட்ட முடியாமலும் விற்பதற்கும் வாங்குவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் மக்கள் பிரச்சினைகளைப் போக்கும் அரசாகச்செயல்படும் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு மேலும் காலதாமதம் செய்யாமல் உடனே பட்டா வழங்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

- ஊர்ப்பொதுமக்கள்
லட்சுமிபுரம், திருவான்மியூர்.



**தீர்வு:**

கங்கையம்மன் கோவில் தெரு மற்றும் லட்சுமிபுரம் ஆகிய இரண்டு திட்டப்பகுதிகளும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் இடம் பெறும் திட்டப்பகுதிகள் ஆகும். அரசு ஆணை எண்.1117 வீ.வ. (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:27.6.79 மற்றும் அரசு ஆணை எண்.1100 வீ.வ. (ம) ந.வ. துறை நாள் 29.8.80 ஆகிய ஆணைகளின்படி மேற்படி பகுதிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்து ஆக் கிரமனதாரர்களுக்குக் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாடு முறையில் இவ்வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி இரண்டு திட்டப்பகுதிகளும் அரசுக்குச் சொந்தமான நிலங் களாகும். மேற்படி இரண்டு நிலங்களையும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நில மாற்றம் செய்து உத்தரவு வழங்கக்கோரி சென்னை மாவட்டாட்சியருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து நில மாற்ற உத்தரவு ஏதும் இதுவரை வரப்பெறவில்லை, எனவே மேற்படி நிலங்களை வாரியத்தின் பெயருக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட பின்னர் மனை ஒதுக்கீடுதாரர்களுக்குக் கிரயப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
சேப்பாக்கம், சென்னை-5

**பிரச்சினை:**

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் சிதம்பரம் தாலுக்காவில் உள்ள ஸ்ரீ. மானம்பாடி கிராமத்தில் அருள்வாக்கு கூறும் வெற்றிவேல் முருகன் திருக்கோயில் அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த இத்திருக் கோவிலுக்கு வந்து செல்லும் பக்தர்களின் வசதிக்காகக் கோவிலின் எதிர்புரம் பஸ் நிலையம், மின் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் இவ்வழித்தடங் களில் செல்லும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் கடந்த 16 ஆண்டுகளாக நின்று வந்த பேருந்துகள் கடந்தசில நாட்களாகக்கோவிலின் அருகில் நிற்பதில்லை. அதனால் பக்தர்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். ஆதலால் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் மீது நட வடிக்கை எடுத்து மீண்டும் கோவிலின் அருகில் பஸ்கள் நிற்க ஆவன செய்ய உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.

சி. தேவநேசன்
சி. மானம்பாடி
பொன்னந்திட்டு அஞ்சல்



**தீர்வு:**

சி. மானம்பாடி வெற்றிவேல் முருகன் கோவில் அருகில், கூடுதலாக ஒரு பேருந்து நிறுத்தம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அவ்வழித்தடத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு மேற்படி முருகன் கோவில் அருகில் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல மீண்டும் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுத்திப் பயணிகளை ஏற்றி, இறக்காத ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தகுந்த நெறிமுறைகள் கிளை மேலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எங்கள் பரிசோதகர்களைக் கொண்டு அந்த இடத்தில் அவ்வப்பொழுது ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் (இயக்கம்)
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.

**பிரச்சினை:**

நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில், கடைவீதி அருகே நான்கு சாலைகள் சந்திக்கும் மிக முக்கியமான இடத்தில் "மணிக்கூண்டு" உள்ளது. இந்த மணிக்கூண்டு சீர்காழி நகராட்சிக்குச் சொந்தமானது ஆகும். மணிக்கூண்டில் உள்ள கடிகாரம் கடந்த ஐந்து வருட கால மாக ஓடாமலேயே நின்று கொண்டு இருக்கிறது. 4.25 மணியையே பல வருடங் களாகக் கடிகார முள் காட்டிக்கொண்டு இருக்கிறது. நான்கு பக்கமும் இருக்கும் கடிகாரங்கள் ஓடாத காரணத்தினால் பொதுமக்கள், வியாபாரிகள் சரியான நேரத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் மிகுந்த பெரிய பாதிப்பை அடைந்து வருகிறார்கள்.

தற்போது மணிக்கூண்டில் சினிமா போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, மணிக்கூண்டு பெயிண்ட அடிக்காமல் பாழ் அடைந்து போய் கிடக்கிறது. மணிக்கூண்டில் இருந்த கல்வெட்டும் அழிந்து போய் விட்டது. மணிக்கூண்டின் உயரத்தில் மேலே இருக்கும் பல்பைக் காணவில்லை. புதிய பல்பு பொருத்தப்பட வேண்டும்.

மணிக்கூண்டைச் சுற்றியுள்ள ஆக்கிர மிப்புகளை அகற்றி விட்டு, மணிக்கூண்டின்

கீழே உள்ள இரும்பு கேட்டை நேராக, சரியாக அடைத்து வைக்க வேண்டும். மணிக்கூண்டை தினமும் பராமரித்து, லைட் போட ஒரு நகராட்சி ஊழியரை உடனே நியமனம் செய்ய வேண்டும். முன்பு-பல வருடங்களுக்கு முன்பு மணிக்கூண்டு ஓடிக்கொண்டு இருந்தபோது, ஒரு நகராட்சி ஊழியர் மணிக்கூண்டை பார்த்துக் கொள்ள பணிபுரிந்து வந்தார் என்பது இங்கே குறிப் பிடத் தக்கது ஆகும். எனவே, இப்போதும் ஒரு ஊழியரை பணிபுரிய நியமனம் செய்வது மிக அவசியம்.

எனவே, சீர்காழியில் பல வருடங்களாக ஓடாமல் இருக்கும் மணிக்கூண்டை மீண்டும் ஓடச் செய்ய உடனே நடவடிக்கை எடுக்குமாறு தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன்.

– ஆர். ராஜதுரை
சீர்காழி



**தீர்வு:**

சீர்காழி நகராட்சியில் கடைத்தெருவிலுள்ள மணிக்கூண்டைப் பழுது பார்க்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, சென்னை பி.ஆர். & சன்ஸ் நிறுவனத்தினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அந்நிறுவனத்தினர் வந்து பார்வையிட்டு, பழுதுநீக்கம் செய்து கடிகாரம் ஓடவிடச் செய்யப்படும். மேலும், மணிக்கூண்டைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை விரைவில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்கப்படுகிறது.

– த. குமார்,
ஆணையர்
சீர்காழி நகராட்சி

**பிரச்சினை:**

எங்கள் ஊரில் 150 வீடுகள் உள்ளன. 400 பேர்கள் வசித்து வருகின்றனர். எங்கள் ஊருக்கு ஒரு குழந்தைகள் சத்துணவுக்கூடம், இங்கு ஆற்றுக்கால் பாசனம் வருகிறது. ஆகையால் நெற்கள் விரிப்பதற்குக் களமும் ஒரு கைப்பம்பு குடிதண்ணீரும் தேவை. இதைத் தமிழக அரசு மூலம்-இந்த பிரச் சினையை நிறைவேற்றித் தரும் உங்கள் பத்திரிகைக்கு எங்கள் கிராமப் பொது மக்களுக்கு என்றும் மறவா ஒரு தொண் டாகும்.

– கே. சௌந்திரபாண்டியன்,
எ. சுந்தரராஜபுரம், எட்டிமங்கலம் அஞ்சல்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

**தீர்வு:**

குடிநீர் வசதி ஏற்கெனவே உள்ளது. இருப்பினும் போதிய அளவு வழங்குமுகத்தான், பைப்லைன் விஸ்தரிப்பு அல்லது ஒரு கையழுத்தக்குழாய் அமைக்கும் பணி பரிசீலனையில் உள்ளது. விரைவில் அமைக்கப்படவுள்ளது. ஏனைய கோரிக்கைகள் குறித்து காலப்போக்கில் நிதி வசதிகள் வரப்பெற்றதும் விதி முறைகளின்படி ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– சு. முத்துராமலிங்கம்
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
கொட்டாம்பட்டி
மதுரை மாவட்டம்








'சோறு' சிறுகதை, என் உள்ளத்தை நெருடி கண்ணீர் விடச் செய்துவிட்டது.

- பி.எம்.வேலப்பன்
பொமாண்டையூர்.

அரசின் சாதனைகள், திட்டங்களை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தொகுத்தளித்த தமிழரசுக்குப் பாராட்டுகள்.

- எம்.என்.குபேந்திரன்
வடகாடு, புதுக்கோட்டை

குறைந்த முதலீட்டில் கட்டடங்கள் - தரமான யோசனைகள் தந்த தமிழரசை வாழ்த்துகிறேன்.

- கா.நா.ராஜசேகர்
மங்களபுரம்.

தமிழரசில் கையாளப்படும் சீரிய நடையும், யதார்த்தமான - தெளிவான கவிதைகளும் இதழுக்கு மெருகேற்றிவருகின்றன. தொடரட்டும் தமிழ்ப்பணி.

-க.கோடீசுவரன்
நக்கலூர்.

'காலமெல்லாம் கானான் வாழ்க' ஒரு பயனுள்ள கட்டுரை; காலமெல்லாம் தமிழரசு வாழ்க!

-மாடப்பள்ளி ஜெயசீலன்
மடவளம்.

16.4.97 இதழை 'மாணவர் சிறப்பு மலர்' என்றே குறிப்பிடலாம்; கல்வி-மேற்படிப்பு-வேலைவாய்ப்பு எல்லாம் கொடுத்து இளம் நெஞ்சங்களை அசத்திவிட்டீர்கள்.

- கு.சகந்நாதன்
சேலம்.

'உயிர்த்திரவம் இரத்தம்' பற்றிய மருத்துவக் கட்டுரை, நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் நல்லபல செய்திகளைக் கொண்டிருந்தது; அதை வெளியிட்டமைக்கு நன்றி.

- எஸ்.நாகராசன்
மேலப்பாதி.

அரசின் செய்திகளை அறிந்துகொள்ளவும், மேலும் பல, அரிய செய்திகளைப் படித்து உதவவும் 'தமிழரசு' துணை செய்கிறது.

- கே.பிரஷ்னேவ்
பாக்கம்கோட்டூர்.

தாங்கள் தனிப்பட வெளியிட்ட 1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பலவகைகளில் எமக்கு உதவி - பாதுகாத்து வைக்கச் செய்துவிட்டது.

- என்.டி. முருகேசன்
ஆனைக்குப்பம்

தமிழகச் சுற்றுலாத் தலங்கள் பற்றிய சிறப்பிதழ் அருமையாக அமைந்திருந்தது; ஆனால் கோயில்கள் குறைந்த எங்கள் குடந்தை அதில் குறிப்பிடப் படவில்லையே - ஏன்?

- க. தியாகராசன்
வெறநாட்டுக்குப்பூர்.

தமிழரசில் இடம்பெறும் சிந்திக்கத் தூண்டும் சிறுகதைகள், மருத்துவக் கட்டுரைகள் எல்லாமே படித்து இன்புறத்தக்கதாக உள்ளன - மகிழ்ச்சி.

- எம். ராஜேஸ்வரி

அட்டைப் படங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன; வடிவமைப்பாளருக்குப் பாராட்டு.

- குடவாசில் சுந்தரவேலு
புளியம்பேட்டை

☎ : 42343

# உதகமண்டலம் கூட்டுறவு பண்டகசாலை

எண். K. 505, உதகமண்டலம்

தலைவா் :
**அ. ம. கதிர்காமம்**

துணைததலைவா் :
**ஜே. பிரபு**

பதிவான நாள் : **22-4-1927** ஆரம்ப நாள் : **9-5-1927**

## தற்போதைய பண்டக இயக்குநர்கள் குழு

1. திரு. **அ.ம. கதிர்காமம்** தலைவா
2. திரு. **ஜே. பிரபு** துணைத் தலைவா்
3. திரு. **பி. ராஜு** இயககுநா்
4. திரு. **எ. முனுசாமி** "
5. திரு. **என். சீனிவாசன்** "
6. திரு. **ஓ. பாலன்** "
7. திருமதி. **ம.க. இராசாமணி** "
8. திருமதி. **ஆர். பிரேமா** "

பொருளாளா் : திரு. **கே. போரைய்யா**

தலைமை எழுத்தா் : திருமதி. **சி.கிரிஜா**

| | | |
|---|---|---|
| மொத்த அங்கத்தினா்கள் | : | 2322 |
| ஆண | : | 2092 |
| பெண | : | 230 |
| அரசுப் பங்குத தொகை | : | 92,580.00 |
| மொத்த பங்குத தொகை | : | 1,67,826,69. |
| நியாய விலைக கடைகள் | : | 12 |
| இதில் இணைககப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | : | 10535 |
| காபி கிரைண்டிங் பிரிவு | : | 1968 முதல் இயங்கி வருகிறது.சுத்தமான கலப்படமற்ற காபிதூள் எங்களிடம் கிடைக்கும். |
| மளிகைப் பிரிவுகள் 4 | : | இந்நான்கிறகும் பொது மக்கள் விலை மற்றும் தரத்தைப் பார்த்து பயனடைவீா். |

நமது சங்க உறுப்பினா்கள் 100 ரூபாய்க்கு மேல் பொருட்கள் தலைமையக மளிகைப்பிரிவில் வாங்குவோருக்கு ரூ. 2 வீதம் தள்ளுபடி செய்து தருகிறோம்.

| | | |
|---|---|---|
| நவீன விற்பனை நிலையம் | : | 1 |
| பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையம் | : | 1 |

மேலும எங்களுககு ஆதரவு கொடுததுவரும அனைதது சங்க உறுப்பினா்களுக்கும், அரசு அலுவலா்களுககும் மற்றும பொது மககளுககும உளமாா்ந்த நன்றியைத் தெரிவிததுக் கொள்கிறோம.



# சுற்றுப்புறச் சுகாதாரம்

சுற்றுப்புறச் சுகாதாரம் என்பது நம்முடைய ஆரோக்கியம் மற்றும் நிலைநிற்புக்கான நம்முடைய சுற்றுச் சூழ்நிலை கட்டுப் படுத்தக் கூடியதாகும். வேறு விதத்தில் சொன்னால்-நல்ல சுகாதாரம் என்பது அசுத்தப்பொருட்களை அப்புறப்படுத்துதல் ஆகும். கீழ்கண்டவை அதில் அடங்கும்.

1. மனிதக்கழிவுப்பொருளை அப்புறப்படுத்துதல
2. கழிவு நீர் அப்புறப்படுத்துதல்
3. குப்பைகளை அப்புறப்படுத்துதல்
4. பசுஞ்சாணம் அப்புறப்படுத்துதல்
5. வீடு சுத்தம் மற்றும் புகையில்லா அடுப்பு
6. தன் சுத்தம்
7. உணவு சுத்தம்
8. பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**சுற்றுப்புறச் சூழ்நிலைக்குப் பொறுப்பு யார்**

சுகாதார நிலையை இரு கோணங்களில் பார்க்கவேண்டியுள்ளது. ஒன்று தனிப்பட்ட மற்றும் குடும்ப சமுதாய நபர்களின் நேர்மையற்ற மற்றும் பழக்க நடத்தையினால் எற்பட்டுள்ளது. உதாரணம்-கையை அலம்புதல், நகம் வெட்டுதல், பூமியில் துப்புதல், சிறுநீர் கழித்தல், தனியார் நடத்தையில் சேரும் குடும்ப சுகாதாரம் - குடும்பத்திற்குக் குடும்பம் சுகாதாரம் என்பது சமுதாயத்தின் பொறுப்பாகும்.

வேறு கோணத்தில் பார்த்தால் சுகாதார மின்மையால் வரும் நோய்களைக் குறிக்கும்.



**சுகாதாரத்தின் நன்மைகள்**

உதாரணம் - கழிப்பறையைப் பயன்படுத்தினால் குழந்தைகளுக்கு வரும் வயிற்றாலையைக் கணிசமாக குறைக்கலாம்.

2. கழிவறை உள்ள வீட்டிலுள்ள குழந்தையாவது அவை இல்லாத வீட்டிலுள்ள குழந்தைகளைக் காட்டிலும் மும்மடங்கு உயிர் வாழ்வார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

ஒரு குடும்பத்தின் சுகாதாரச் சீர்கேடு மற்ற எல்லாக்குடும்பத்தையும் பாதிக்கும்.

**எதனால் ?**

ஏன் சுற்றுப்புறச் சுகாதாரம் முக்கியத்துவம் வாய்ந்தது ?

மோசமான சுகாதாரம் தண்ணீர் மற்றும் உணவு வகைகள் கலப்படம் செய்து மக்களை நோயாளி ஆக்கும். மோசமான சுகாதாரம் கொசு, ஈ, எலி இவைகளுக்கு உணவு மற்றும் உற்பத்தி இடம் கொடுக்கும். மோசமான சுகாதாரம் வறுமைக்குக் காரணமாகும்.

**வறுமையின் சுற்று**

வறுமையினால் மோசமான சூழ்நிலை உருவாகி உடல் பாதிக்கும், உடல் பாதிப்பால் உற்பத்தித்திறன் குறைவு, உற்பத்தித்திறன் குறைவால் குறைவான பணம் கிடைக்கும். இச்சுற்று உடைப்பதற்கு நல்ல சுகாதாரமும் நோய்க்கட்டுப்பாடும் வேண்டியுள்ளது. இந்திய அரசு 2000-க்குள்ளாக 'எல்லாவற்றிற்கும் ஆரோக்கியம்' என்ற இலக்கு வைக்கப்பட்டுள்ளது. நல்ல சுகாதாரம் இல்லையெனில் அவ்விலக்கை ஒருக்காலும் பெறமுடியாது.

ஜனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, நகர்புறங்கள் குடிசைப் பகுதி மற்றும் நகர்புற பணிகள் இல்லாத இடத்திலும், விஸ்தரிக்கப்பட்டு விடுகின்றன. அதனால் சுற்றுச் சூழ்நிலை சுகாதாரத்திற்குச் சமுதாய சேவை வேண்டியிருக்கிறது.

**நோய்களின் சாதனம்:**

1. ஒட்டுண்ணிகள்
2. நுண்ணுயிர்கள்

**நோய்வாய்ப்படுவதற்கு உள்ள வழிகள்:**

1. உணவு

2. குடி தண்ணீர்
3. அழுக்குக் கைகள்
4. நடத்தல்
5. ஈ

**சுற்றுப்புறச் சுகாதாரத்தில் பெண்களின் பங்கு**

மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் சுகாதாரச் சூழ்நிலைக்குக் கேடுகள் ஒருபுறம், இதன் மூலம் பல நோய்கள் ஏற்படுகின்றன. அரசாங்கமும் மற்ற சுகாதார நிலுவனங்களும் இதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறது. ஒவ்வொரு பெண்ணும் இம்முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டால் சுகாதார முறையில் மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழமுடியும் என்பதில் ஐயமில்லை.



**பெண்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை:**

1. சிறு குழந்தைப்பராமரிப்பு
2. குடி தண்ணீர் மூலம் நோய், அதைத் தடுக்கக்கூடிய முறைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும்.
3. பழங்கள், காய்கள் முதலியவற்றைச் சாப்பிடுவதற்கு முன்பு கழுவ வேண்டும். அதன் பயனையும் தெரிந்துகொள்ள வேண்டும்.
4. வீட்டில் உள்ள கழிவு திடப்பொருள்கள் மீண்டும் பயன்படுத்தக்கூடியதைப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்த முடியாததைச் சுகாதார முறைப்படி குப்பைத் தொட்டியில் போடவேண்டும்.
5. வீட்டைச் சுகாதாரமான முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். கழிப்பறையைக் கழுவவேண்டும். தரையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஜன்னல் வழியாகக் கொசுக்கள் வராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. சமையல் அறையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எலி, ஈ, போன்றவை வராமல் எல்லா உணவுப் பொருட்களையும் மூடி வைக்கவேண்டும்.
7. வீட்டின் அமைப்பு காற்று, ஒளியுமாக இருக்க வேண்டும்.
8. புகையில்லா அடுப்பு உபயோகிக்கவேண்டும்.
9. வயிற்றுப்போக்கு, சரிவிகித உணவு தெரிந்து பராமரிப்பு பற்றி பயிற்சி கொடுக்கவேண்டும்.

**அசுத்த நீரின் மூலம் பரவும் வியாதிகள்**

இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. அசுத்த நீரை உட்கொள்வதால் ஏற்படும் வியாதிகள்
2. அசுத்த நீர் தேங்குவதால் ஏற்படும் வியாதிகள்

**அசுத்த நீரை உட்கொள்வதால் ஏற்படும் வியாதிகள்**

பாதுகாப்பற்ற குடிநீரைப் பருகுவதால் கீழே குறிப்பிட்டுள்ள வியாதிகள் ஏற்படுகின்றன.

1. வாந்திபேதி
2. காலரா
3. மஞ்சள்காமாலை
4. டைபாய்டு
5. இளம்பிள்ளை வாதம்
6. குடற்புழுக்கள்
7. நரம்புச் சிலந்தி

**வாந்தி பேதி**

வாந்திபேதி எந்தக்கிருமியினால் ஏற்பட்டாலும் உடலிலிருந்து அதிக நீர் இழப்பு ஏற்படுகிறது.

- வயிற்றுப்போக்கு வாந்தியின் காரணங்கள்
- மலத்தினால் அசுத்தப்பட்ட நீரை உட்கொள்ளுதல்
- ஈக்கள் மொய்த்த பண்டங்கள் உட்கொள்ளுதல்
- சுத்தம் செய்யாத கைகளினால் உணவைத் தயாரித்து உட்கொள்ளுதல்

**காலரா**

அதிக வாந்தி வயிற்றுப்போக்குடன் ஏற்படும் இந்த நோய் நீர்நிலையங்களிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் பரவலாம்.



நோயாளியின் மலத்திலும், வாந்தியிலும் வெளிவரும் காலரா கிருமிகள் நீர் நிலையங்களில் பாதிப்பால் பெரிய அளவில் அந்த நோய் பரவக்கூடும்.

**மஞ்சள் காமாலை**

இந்த நோய் அசுத்தமான நீரைப் பருகுவதாலும், ஈக்கள் மொய்த்த பண்டங்களை உட்கொள்வதாலும் ஏற்படுகிறது. இந்த வியாதி வந்தவர்களுக்குக் கண்கள், நகம், உடல் மஞ்சள் நிறத்தில் இருக்கும். டைபாய்டு மற்றும் பாரா டைபாய்டு காய்ச்சல் கூட மற்றவைகளைப்போல அசுத்த நீரால் பரவுகிறது.

**இளம்பிள்ளை வாதம்**

இது குழந்தைகளைப் பாதிக்கும் ஒரு கொடிய நோய். இந்நோயினால் குழந்தை இறந்தும்போகலாம் அல்லது வாழ்க்கை முழுவதும் கை மற்றும் கால்களை நிரந்தரமாகச் செயலிழக்கச் செய்யலாம். இந்த வியாதியும் அசுத்த நீரினால் பரவுகிறது.

**குடற்புழுக்கள்**

வயிற்றுப்போக்கு, பசியின்மை, பலவீனம், இரத்தச்சோகை இந்நோயின் அறிகுறிகள். அசுத்த நீர் உபயோகித்தல், காலணி அணியாமல் நடப்பது போன்றவைகளால் நோய் ஏற்படுகிறது.

**நரம்புச் சிலந்தி**

மக்கள் குடிநீரினை, படிக்கட்டுக்கிணறுகள், ஆறு, ஏரி குளங்களிலிருந்து கொண்டுவரும்போது நரம்புச் சிலந்தி என்ற கடும் வியாதிகளினால் பாதிக்கப்படுகிறார்கள்.

**தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் வியாதிகள்**

அசுத்த நீர் தேங்குவதால் கொசு வளர்ச்சி அடையும். இதனால் ஏற்படும் வியாதிகள்.

1. யானைக்கால்
2. மலேரியா
3. மூளைக்காய்ச்சல்

இந்த வியாதிகள் உள்ள மனிதனைக் கடித்த கொசு ஆரோக்கியமான மனிதனைக் கடிப்பதால் இந்த வியாதிகள் பரவுகிறது.

2. பாதுகாக்கப்பட்ட கைப்பம்புகளிலிருந்து எடுத்துவரும் குடிநீர் சுகாதார முறைப்படி வீடுகளில் கையாளாவிட்டால அவை அசுத்தமடைவதற்கும் வாய்ப்பு உண்டு. இதைத் தவிர்க்க,

1. குடிநீர் எடுக்கும் பாத்திரங்களைத் தினமும் சோப்பு அல்லது சாம்பல் போட்டுச் சுத்தமாகக் கழுவ வேண்டும்.
2. குடிநீரைச் சுத்தமான கெட்டித் துணியினாலோ அல்லது வடிகட்டியினாலோ வடிகட்டி எடுக்கவேண்டும்.
3. வடிகட்டி எடுத்த நீரைக் கைப்படாமல் மூடிபோட்டு மேடையின்மேல் வைக்கவேண்டும்.
4. குடிநீரைக் காய்ச்சிக் குடித்தல் சிறந்தது.
5. நீரைக் குடத்திலிருந்து எடுக்கும்போது கைகொண்டு, பாத்திரம்போட்டு மொண்டு எடுக்காமல் குடத்தைச் சரித்து எடுக்கவேண்டும்.

**நுண்ணுயிர்களால் பரவும் நோய்கள்**

நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்களுக்கும் (பூச்சிகள்) சுகாதாரத்திற்கும் சம்பந்தம் உள்ளன. ஏனென்றால் அழுக்கு நிறைந்து தேங்கிய நீரில் பூச்சிகள் உற்பத்தியாகின்றன. மற்றும் சுகாதாரமற்ற நிலத்திலுள்ள கழிவுகளிலிருந்து வரும் பூச்சிகள் வீட்டுக்குள் நுழைகின்றன. பூச்சிகளினால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, முறையான சுகாதார நடவடிக்கைகள் உள்ளன. இவற்றுள் வீட்டில் செய்யப்படக்கூடியவை மற்றும் சமுதாயத்தில் செய்யப்படக்கூடியவையும் உள்ளன.



**கீழ்கண்ட பூச்சிகளினால் பரவும் நோய்கள்**

1. கொசுக்களினால் பரவும் நோய்கள் :
   1. மலேரியா
   2. என்செப்ளலிட்டிஸ்
   3. டிங்கு காய்ச்சல்

**மணல் பூச்சியினால் பரவும் நோய்கள்**

1. கலாஜார்

- முறையான சுகாதார முறை மூலம் எளிதாக இந்நோயைத் தடுக்கலாம்.

2. மலேரியா

- இந்தியாவில் மூன்று விதமான மலேரியா காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீரினால் பரவும் நோய்கள், நோய்களின் விவரங்கள், அறிகுறிகள் மற்றும் அவைகளைத் தடுப்பதற்கான சுகாதார முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கொசுக்களால் ஏற்படும் நோய்கள் மரணத்திற்குக் காரணமாக இல்லை என்றாலும் அவைகள் நம்மைப் பலவீனமாக்கி வேலை செய்வதற்குக் கடுமையாக்கி இதர வியாதிகள் வருவதற்குக் காரணமாகும்.

**மலேரியா அறிகுறிகள்**

தலைவலி
குளிர்ச்சி
உடம்புவலி
மிக அதிகமான காய்ச்சல்
வேர்வை

**சிகிச்சை**

குளோரைகுயின் பாஸ்பேட்

கலாஜார் நோய் வந்தால் நாம் பலகீனம் மற்றும் நோய்கள் வருவதற்கு ஏதுவாகும். காய்ச்சல், இடை குறைத்தல், கல்லீரல், கணையம் பெரியதாகும்.

**சிகிச்சை**

கலாஜார் மருத்துவர்களிடமிருந்து சிகிச்சை பெறலாம்.

## மனித கழிவுப் பொருட்கள்

வெளியில் மலம் கழிப்பதனால் 50-க்கும் மேற்பட்ட வித்தியாசமான நோய்கள் பரவ வாய்ப்புள்ளன. இவற்றில் டைபாய்டு காய்ச்சல், வயிற்றோட்டம், காலரா, வயிற்றுக்கடுப்பும் அடங்கும். மனித (கழிவுப் பொருள்) மலத்தின் மூலமாக 80 சதம் நோய் நோயாளியிடமிருந்து நோயற்றவர்களுக்குப் பரவுகிறது.

**பெண்களின் தனிப்பண்பு**

வெளியில் மலம் கழிப்பது தனிப்பிரச்சனையைப் பெண்களுக்கு உருவாக்குகிறது. அவர்களின் அனுபவங்கள் :

1. வெளியில் செல்வது நாட்டுப் பண்பாகிவிட்டது.
2. தனியில் செல்வது குறைவு.
3. அவர்கள் ஒடுக்கப்படுவதால் இருட்டில் கழிப்பது எதிர்பார்க்கப்படுகிறது.
4. இருட்டில் போவதால் வரும் ஆபத்து.
5. எதிர்பாராமல் விழுவது.
6. பாலியல் உறவின் ஆபத்து.
7. மோசமான வெப்பநிலை.

சுற்றுப்புறச் சூழ்நிலையை முன்னேற்ற மடைவதற்குச் சில நடவடிக்கை எடுக்க வேண்டும். மனிதக் கழிவை வெளியேற்ற முறையான கழிப்பறை வசதி மற்றும் வெளியில் செல்வது தவிர்ப்பது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

**மனிதக்கழிவை முறையாக வெளியேற்றுதல்**

மனிதக்கழிவை வெளியேற்ற நிறைய வகைகள் உள்ளது. இவற்றில் கீழ்க்கண்டவை சிறப்பானவை.

1. கழிவு நீர்க்குழாய் (Sewerage)
2. செப்டிக் டேங்க்
3. சுலோப் சச்சலோயா
4. எலக்ட்ரிக் டாய்லெட்
5. போர்டபில் டாய்லெட்

**தண்ணீர் மூடியுள்ள கழிப்பிடம்** (Flushout)

கீழ்க்கண்ட பகுதிகள் உள்ள கையால் சுத்தம் செய்யப்படும் கழிப்பிடங்கள்.

1. 90 செ.மீ.சதுரமான 5 செ.மீ.கனமான தகடு அல்லது பலகை.





2. பேசினுக்கும் கழிவுகளுக்கும் உரிய வாட்டம் (slope) கொடுத்து நீர் தேங்காமல் இருக்க வேண்டும். டிரேப்பை பேனில் சேர்க்க வேண்டும். நீர் கசியாமல் இருக்க, அதற்கான சீர் தடவவேண்டும். 1.8 செ.மீ.வட்டமுள்ள குழாயை அதற்குள் பொருத்தவேண்டும். 7.5 செ.மீ. வட்டமுள்ள மற்றும் 3 செ.மீ.நீளமுள்ள குழாயை அது உபயோகப்படுத்தவேண்டும். 5 செ.மீ. வட்டமுள்ள அல்லது சதுரமாயுள்ள மேலும் 15 செ.மீ.முதல் 22.5 செ.மீ. ஆழமுள்ள நீர்த்தேக்கத்தில் பொருத்தவேண்டும்.

**அழுகச்செய்யும் அறை** (Septic Tank)

தண்ணீர் கசியாத அறையாகக் கட்டி அதில் கழிவறையிலிருந்து வரும் குழாயை இணைக்க வேண்டும்.

## வயிற்றுப்போக்கு

**வயிற்றோட்டம்**

வயிற்றாலை என்பது பல நோய்களின் பெரிய பிரச்சனை. இது மலங்களுடன் தொடர்பு கொண்டதன் மூலம் பரவுகிறது அல்லது கலப்படமான உணவு அல்லது கலப்படமான தண்ணீராலும் பரவும். இவற்றுள் பல நோய்கள் பாக்டீரியாவினால்தான். காலரா மற்றும் பல பூச்சிகளினாலும் வரலாம்.

**வயிற்றுப்போக்கு**

வயிற்றுப்போக்கு என்பது ஒருநாளில் மூன்று அல்லது ஏராளமான நீரிழப்பு ஏற்படுவது ஆகும். இது அரிசி தண்ணீராகவோ அல்லது இரத்தமாகவோ, அல்லது சளியாகவோ இருக்கலாம். வயிற்றுக்கடுப்பு இரத்தச்சளிபோல் இருக்கும். ஆனால் அடிக்கடி அதிகமாகாது.

**வயிற்றுப்போக்கிற்கான காரணங்கள்**

**அ. தண்ணீர்**

1. அசுத்தமான குடிநீர்
2. தூய்மையான குடிநீரை உபயோகப்படுத் தாமையும், சுகாதாரமின்மையுமே.

**ஆ. உணவு**

1. ஈக்களால் சாப்பிடும் உணவு கெடப்பட்டிருப்பதால்
2. பாதியாக வேகவைக்கப்பட்ட உணவு என்பதால்
3. பழங்களையும் காய்கறிகளையும் தண்ணீரால் கழுவாமல் உண்பதால்

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**அடிப்படை**

பொதுவாகக் கீழ்கண்ட அடிப்படைத்தன்மை உடையவையாக இருக்கவேண்டும்

1. சுத்தம் மற்றும் ஒளி பரவும்படியாக இருக்க வேண்டும்.
2. வண்ணம் இல்லாதவாறு இருக்கவேண்டும்.
3. நாற்றம் இல்லாது இருக்கவேண்டும்.

மேற்கண்ட விபரங்கள் இல்லாமல் இருந்தாலும், சுத்தமான தண்ணீர் என்று சொல்ல முடியாது. தண்ணீரிலுள்ள நீர் கிருமிகளினால் தண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

**தண்ணீரின் முக்கியத்துவம்**

மக்களின் அன்றாடத் தேவைக்குத் தண்ணீர் முக்கியமாகும். ஆனால் தண்ணீர் குறிப்பிட்ட அளவிற்குத்தான் கிடைக்கும். எனவே, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மேலும் குடிநீர் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே தண்ணீரைச் சுத்தப்படுத்தி குடிதண்ணீராக மாற்றவேண்டும். மேல்மட்டத்திலுள்ள தண்ணீர் கெடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் தண்ணீரை மாற்ற இயலாது.

இந்தியாவில் 15,00,000 ஐந்து வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகள் வயிற்றுப் போக்கினாலும் மாசு படிந்த குடிநீரினாலும் இறக்கின்றனர்.



# திரவ கழிவுப் பொருள்

### திரவக்கழிவுப்பொருள் என்றால் என்ன ?

திரவக்கழிவுப்பொருள் கீழ்கண்டவற்றிலிருந்து வருகின்றன;

1. வீட்டிலிருந்து (சமையல், குளியல், துவைத்தல், வீட்டை கழுவிவிடும்போது).
2. தண்ணீர் இருக்கும் இடங்களில் (பொது கிணறு மற்றும் துவைக்கும் இடங்கள்).
3. கால்நடைகள் மற்றும் மற்ற மிருகங்களின் இருப்பிடம் (செட்).
4. சந்தைகள், மாமிசக்கடை (Slaughter house) மற்றும் பொதுபண்ணை
5. குடிசைத் தொழில்களும் மற்ற தொழில்கள்.
6. குளியல் மற்றும் சலவைத்தொழில் நடைபெறுமிடங்களிலிருந்து.

### திரவ கழிவின் அபாயம்

1. மனிதக்கழிவுடன் கலந்த குடிதண்ணீர்.
2. தேங்கிய நீரின் உருவாக்கம்.
3. கொசு, ஈ, மற்றும் இதர பூச்சிகள் ஈரக்கசிவான இடங்களில் உருவாதல்.
4. தேங்கிய தண்ணீர் 20 மீட்டர் தொலைவிற்குள் கிணற்றுக்கு அருகில் இருப்பதால் கிருமிகள் உருவாவதற்குக் காரணமாக உள்ளது.

தொழிற்சாலைகள் அல்லது வயல்களில் இருந்து குடிதண்ணீர், மருந்துகள் மற்றும் சூழ்நிலைச் சீர்கேட்டால் சுகாதாரச்சீர்கேடு ஏற்படுகின்றன.

## திரவக்கழிவை வெளியேற்றுதல்

### வெளியேற்றும் முறைகள்

திரவக் கழிவை வெளியேற்றுவதற்குப் பல முறைகள் உள்ளன. அவையாவன:

**1. சாக்கடை**

1. வீட்டுக் கழிவு நீர், தோட்டம் ஆகியவற்றிலுள்ள கழிவு நீரைச் சாக்கடை மூலம் வெளியேற்றலாம்.
2. உறுஞ்சுக்குழி அமைக்கலாம்.
3. கழிவு நீரைக் குடிப்பதைத் தவிர, மற்றவைகளுக்குப் பயன்படுத்துமாறு செய்யலாம்.

### உறிஞ்சுக்குழி

உறிஞ்சுக்குழி மிகக்குறைந்த செலவில் அமைக்கலாம்.

குழி தோண்டுவதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் செங்கற்கள் மற்றும் வாளிகள். நீர்வளம் மிக்க பகுதிகளில் உறிஞ்சுக்குழி சரிவரச் செயல்படாது.

மழைக்காலங்களில் உறிஞ்சுக்குழி கட்ட வேண்டிய வழி முறைகள் :

இரண்டு மீட்டர் ஆழமுள்ள குழியின் விட்டம் 1.5 மீட்டராக இருக்கவேண்டும். குழியில் கற்களாலும் 3 பாகம் அளவு கற்கள் குழியின் அடிப்பாகத்தில் நடுப்பகுதியிலும் மற்றும் கால்பாகம் கற்கள் குழியின் மேற்பாகத்தில் இருக்கவேண்டும். குழியின் மேல்பாகத்தில் மணல்கொண்டு மூடவேண்டும். வீட்டுக்கழிவு நீர்ப் பாதையை இக்குழியில் சேர்க்கவேண்டும்.

6 அங்குலம் விட்டமுள்ள சிறிய தொட்டியின் அடிப்பகுதியில் ஓட்டையில் போடவேண்டும். அப்பொழுதுதான் வடிகட்டும்பணி நடைபெறும்.

உறிந்த குழாய்த்தொட்டியைச் சுற்றிலும் 10 செ.மீ.உயரத்தில் தடுப்புச்சுவர் கட்டினால் (parapets) மழைத்தண்ணீர் உறிஞ்சுக்குழிக்கு வர இயலாது.

சில காலங்கள் கழித்து, கற்கள் மற்றும் செங்கற்களைச் சுத்தம் செய்து உறிஞ்சு குழியினைப் பராமரிக்கலாம்.

### திடக்கழிவு

**1. மூடியுடன் கூடிய குப்பைத்தொட்டி**

குப்பைத்தொட்டி பிளாஸ்டிக் அல்லது உலோகம் மூடியோடு இருக்கவேண்டும்.

குப்பைத்தொட்டி பெரிய அளவில் இருக்க வேண்டும்.

கொண்டுசெல்லக்கூடிய அளவிற்குக் குப்பைத் தொட்டி இருக்க வேண்டும். எலிகள், பூனைகள் மற்றும் நாய்களால் எளிதில் உடையாத குப்பைத்தொட்டிகளாக இருக்கவேண்டும்.

**2. போக்குவரத்து**

**இருசக்கர குப்பையை அள்ளிச்செல்லும் வண்டி**

குறைந்த அளவில் குப்பைகளைக்கொண்டு செல்லக்கூடிய இரு சக்கர குப்பை வண்டி பயன்படுத்தவேண்டும்.







### திடக்கழிவினால் ஏற்படும் சுகாதார ஆபத்துக்கள்

1. கொசுக்கள் இனப்பெருக்கத்திற்கான இடங்கள், ஈக்கள், எலிகள் மற்றும் இதர vermins மூலம் நோய்கள் பரவும்.
2. மண்புழுவுக்கு உணவு மற்றும் சுற்றித்திரிகிற மிருகங்களுக்கு
3. தீ விபத்து.

### திடக்கழிவுகளை அகற்றும் முறையான வழிமுறைகள்

1. நகர்ப்புறங்களில் திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகள் உள்ளன.

   பின்வரும் நான்கு முறைகளைக் கையாளவும்.

   1. குடும்பங்களே திடக்கழிவுகளைச் சேர்த்து வைக்கலாம்.
   2. நகராட்சித் திடக்கழிவு சேகரிப்பு மையங்களுக்கு மாற்றலாம்.
   3. நகராட்சித் திடக்கழிவு சேகரிப்பு மையங்களில் சேகரித்துவைக்கலாம்.
   4. நகராட்சியினால் அகற்றலாம்.

### குடும்பங்கள் கடைப்பிடிக்கவேண்டிய கலவை உரம்

இலைகள், புல், மாட்டு சாணம், பாசிகள் கலவை உரம் தயாரிக்கத்தேவைப்படுகிறது.

1. நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் சமையல் கழிவுப் பொருட்களைச்சிறிய பள்ளங்களில் சேகரித்து வைக்கலாம்.
2. தேவையற்ற உணவுப் பொருட்கள், இலைகள், புல்கள் மற்றும் மிருகங்களுக்குரிய உணவுப் பொருட்கள் பெரிய அளவில் கலவை உரம் (NADEP) தயாரித்தல்.

### குப்பையை அகற்றுதல்

குப்பைகளை வண்டிகள் மற்றும் டிராக்டர்களின் மூலம் அகற்றுதல் அல்லது சைக்கிள் ரிக்ஷா, குறைந்த அளவில் உள்ள குப்பைகளைச் சக்கர வண்டி மூலம் அகற்றலாம்.

### குப்பைகளை எரித்தல்

எரிப்பதற்குப் பயற்சிக்கொடுக்க வேண்டும். மாசுக்கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் தெரிவிக்க வேண்டும். மருத்துவக்கூடங்களில் குப்பைகளை எரிக்கும் முறையைப் பயன்படுத்தலாம்.

## தன் சுத்தம்

தன் சுத்தம் தனிப்பட்ட நபர் ஒருவரின் சுகாதாரத்தைப் பற்றியும் மற்றும் அத்தனிப்பட்டவர் சுகாதாரத்தைப் பராமரிப்பதைப் பற்றிக் கூறும் ஒரு விஞ்ஞானம் ஆகும். பொதுவாக-தாயானவள் ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் தன்சுத்தத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

### தன்சுத்தம் எதையெல்லாம் அடக்கியுள்ளது ?

உடம்பின் தலையிலிருந்து பாதம்வரையுள்ள சுகாதார நலம் ,அதாவது தலைமயிர், கண்கள், தொண்டை, காது, பல், தோல் போன்றவற்றின் நலம் பேணுதல் ஆகும். உணவுப்பழக்கம், சுகாதாரப்பழக்கம், தகுந்தாற்போல் துணி மற்றும் உடற்பயிற்சி போன்றவைகள் ஒருவரின் நல்ல சுகாதாரத்திற்கு நெருக்கமாகும்.

### நலம்

நமது கண்கள் நம்மைச்சுற்றியுள்ள உலகத்தைப் பார்க்கப் பார்வையைக் கொடுக்கிறது.

### சமமற்ற பார்வைக்குரிய காரணங்கள்

அ வைட்டமின் குறைவால் இரவு குருட்டு நோய் அல்லது மாலைக்கண் மற்றும் வெள்ளைப்பூ இருப்பது.

**ஆ. கண்களுக்கான ட்டிராமாவின் காரணங்கள்**

தூசி மற்றும் புகை, கல்லின் ஒரு துண்டு அல்லது கண்ணாடி தம்ளர் தூள் கண்ணுக்கு அல்லது வெளிச்சமான ஒளி, ஊதாநிறக்கதிர்கள், வெல்டிங் மிசின் பற்றவைக்கும்போது.

## ஆரோக்கியம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் மாசு படிந்த கீழ்க்கண்ட காரணங்களினால் மாறுபடுகிறது.

1. கெட்ட ரசாயன பொருட்கள் தண்ணீரில் வந்துள்ளது.
2. கனிம உப்பு.
3. தண்ணீரில் மிதக்கும் தூசுகள்.
4. நுண்கிருமிகள்.



**கீழ்க்கண்ட உதாரணங்கள்**

1. மண் பாத்திர வண்ணப்பூச்சில் உள்ள காரீயம்.
2. சீருந்தில் உள்ள பழைய மின்கலம் இவை தண்ணீரில் கலந்திருந்தால் குழந்தைகளின் சாதாரண அறிவு வளராது. மேலும் பெரியவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.
3. நகராட்சி வழங்கும் குடிதண்ணீரில் குளோரைடு கலந்திருந்தால் அதனால் உடல் நலத்திற்குக்கேடு விளைவிக்கும்.

கீழ்கண்ட காரணங்களினால் தண்ணீரின் தன்மை கெடுகிறது.

1. நில மட்டத்திலுள்ள நீர் ஆதாரத்திற்கு அருகிலேயே அசுத்தம் செய்தல்.
2. குளிப்பது மற்றும் ஆடை துவைப்பது.
3. இறந்த கால்நடைகளைத் தண்ணீரில் மிதக்க விடுவது.
4. சாக்கடை நீரைச்சுத்தம் செய்யாமல் நீர் ஆதாரத்தில் கலப்பது.
5. தொழிற்சாலைக்கழிவுகள் ஆதாரத்தில் கலப்பது.
6. விவசாயப்பொருட்கள் தண்ணிரில் கலந்துவிடுவது, பறவைகளினால் மாசுபடிதல்.

நிலத்தடி நீர் ஆதாரத்தில் தண்ணீர் கெடுவதற்கான காரணங்கள் :

1. பாதுகாப்பு இல்லாத கிணற்றில் உள்ள தூசுகள்.
2. அழுக்குப்படிந்த கைகள் மற்றும் கயிற்றினால் தண்ணீர் இரைத்தல்
3. கழிவறை, உலர் கழிவறை மற்றும் அழுகச் செய்கின்ற அறை (septic tank) இவை 20 மீட்டருக்குக் குறைவான இடத்தில் இருத்தல்.

சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் ஆரோக்கியமாக வாழ வழிமுறைகள்

சுற்றுப்புறச் சூழ்நிலை பராமரிப்புக்குப் பொறுப்பாளி யார்?

1. அரசாங்கம்
2. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி
3. யாரேனும் ஒருவர்
4. குடும்பம்

ஒவ்வொரு நகரமும் சுத்தமாக வைப்பதற்குப் பொறுப்பேற்றுள்ளது. ஆனால் ஒத்துழைப்பு இல்லாமல் அரசால் எல்லாவற்றையும் செயல்படுத்த முடியாது. நமது நகரங்கள் தொடர்ந்து சுத்தமில்லாமலிருப்பதால், இது சுகாதாரக்கேட்டை விளைவிக்கும்.

**சுற்றுப்புறத்தின் வகைகள்**

1. சுத்தமான சுற்றுப்புறச்சூழ்நிலை
2. அழகான சுற்றுப்புறச் சூழ்நிலை
3. ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலை
4. அறிவுப்பூர்வமான சுற்றுப்புறச் சூழ்நிலை
5. பொருளாதாரம் உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை

**சுத்தமான சுற்றுப்புக் கமிட்டி**

ஒவ்வொரு வீட்டிற்கும் சொந்தமாகக் கழிப்பிட வசதி இருக்க வேண்டும். இதற்கு அரசு கடன் உதவி அளிக்கிறது. சிறப்புத் திட்டங்களும் இதற்காக உள்ளன.

**தனிப்பட்ட முயற்சிகள்-நான் என்ன செய்யலாம்**

பிளாஸ்டிக் பை சாக்கடையைத் தடைப்படுத்தவதால், இதனைச் சாக்கடையில் போடக்கூடாது.



நாம் பிளாஸ்டிக் பைக்குப் பதிலாக பேப்பர் மற்றும் பருத்தியால் செய்யப்பட்ட பையை உபயோகப்படுத்த வேண்டும். நாம் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்.

தெருவில் ஒன்றும் போடக்கூடாது. குப்பைகளை நாம் நம் கையில் வைத்திருந்து பக்கத்தில் உள்ள குப்பைத் தொட்டியில் போடவேண்டும்.

நாம் நம்முடைய வீடு அதுக்குச் சுற்றிலுமுள்ள மற்றும் வீட்டுக்கு முன்புறம் உள்ள தெரு சுத்தமாய் வைக்கவேண்டும்.

**நமது அண்டை வீட்டுக்காரர்களுக்கு என்ன செய்யலாம்?**

அண்டை வீட்டு பெண்கள், இளைஞர்கள், மற்றுமுள்ள ஆண்களும் ஒரு குழு அமைத்து, ஜீவித நிலவரம் முயற்சிகள் எடுக்கலாம். நான் மட்டும் மற்றும் எனது குடும்பத்தினர் கழிவறையை உபயோகித்தல், மலங்கழித்தபிறகு மற்றும் சாப்பிடுவதற்கு முன் கை அலம்பல் என்ற நற்குணங்கள் கடைப்பிடிக்கலாம். அண்டை வீட்டுச் சுற்றுப்புறம் மேம்பாடு செய்வதற்கு மற்றவர்களோடு சேர்ந்து பாடுபடலாம்.

**அழகான அண்டை வீட்டுச் சுற்றுப்புறம்**

1. ஒரு காலி மனையைச் சமப்படுத்தி, சிறுவர் பூங்கா அமைக்கலாம்.
2. ஒவ்வொரு வீட்டிலும் சிறு மரங்களை வளர்க்கலாம்.
3. தண்ணீர் தேங்கும் இடங்களை நிரப்பலாம்.
4. அருகாமையிலுள்ள பள்ளிக்கூடத்தில் அழகாகவும், தூய்மையுள்ளதாகவும் வைக்கலாம்.
5. மரக்கன்றுகள் இருந்தால் அவைகளைப் பாதுகாத்து வளரவிடலாம்.

**சுகாதாரமுள்ள அண்டைவீட்டுச் சுற்றுப்புறம்**

சில பெண்களைச் சுகாதார மற்றும் சுத்தம் என்பவைகளில் பயிற்சி கொடுத்து, சமுதாய நலப்பணியாளர்களாக வேலை செய்ய அமர்த்தலாம். ஒவ்வொரு தொண்டர்களும் அவசரத்தேவைக்குத் தேவைப்படும், ஒ.ஆர்.எஸ்.பாராசிட்டமல், ஆண்டி வோம்ஸ் ஆகிய மருந்துகளை வைத்து, விநியோகிக்கலாம். நடமாடும் சுகாதாரக்குழு நமது கிராமத்திற்கு வரும்பொழுது நமது குடும்பத்தினர்களை முகாமிற்கு அழைத்துச்செல்லலாம்.

எய்ட்ஸ், குடும்பக்கட்டுப்பாடு மற்றும் போதைப் பொருட்கள் உபயோகித்தல் சம்பந்தமான விவரங்களை ரகசியமாக மருத்துவர்களுக்குத் தெரிவித்து, அவர்களைக்கொண்டு தேவையான அறிவுரைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கலாம். ஒவ்வொரு பெண்களும் பயிற்சி பெற்ற தாயைக் கொண்டு பாதுகாப்புள்ள பிரசவத்திற்கு ஏற்பாடு செய்து தேவைப்படும் என்றால் அடுத்துள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவேண்டிய வாகன வசதி ஏற்பாடு செய்யலாம்.

அயோடின் உப்பு மட்டும் பயன்படுத்தவதற்கு ஆவண செய்யலாம்.





**பொருளாதாரத் தன்மையுள்ள அண்டை வீட்டுச் சுற்றுப்புறம்**

1. நியாயவிலைக்கடை ஏற்பாடு செய்யலாம்.
2. சிக்கன மற்றும் கடன் வழங்கும் திட்டங்களை ஏற்படுத்தி மற்றும் நபார்டு நிறுவனங்களிலிருந்து அங்கத்தினர்களுக்குக் கடன் பெற ஏற்பாடு செய்யலாம்.
3. யுபி.எஸ்.பி. என்ஆர்எஸ். ஆர்எம்கே. எஸ்.எஸ்.டி திட்டங்களின்கீழ் பயன்பெறக் குடும்பத்தினர்களைக் கண்டுபிடிக்கலாம்.
4. அண்டை வீட்டுக்குழு கலாப், எக்ஸ்னோரா மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து சமுதாயத்துக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு அரசாங்க அலுவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். ★

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் பெறும் கல்வி உதவிகள்

- சி.வி. சங்கர், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல இயக்ககம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

காலத்தால் அழியாதது கல்வி. தீயினால் அழியாததும் கள்வரால் அபகரிக்க முடியாததும், வெள்ளத்தால் அடித்துச் செல்ல இயலாததுமான கல்வி யாவரும் பெற்று அறிவுடைய மக்களாகத் திகழச் செய்யும் மிகப் பெரிய ஊற்று கல்விவள ஊற்று.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாக அமையும்.

எனவே, கல்வி அறிவு தமிழகத்திலுள்ள அனைத்து தரப்பு மக்களும் பெற்று உலக அரங்கில் தமிழ்ச்சமுதாயம் ஓங்கி நிற்க வேண்டி தமிழக அரசு கல்விக்கு முக்கியவத்துவம் கொடுப்பதோடல்லாமல் பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும், கல்வியிலும் மிகவும் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களான ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்குச் சிறந்த பல கல்விச் சலுகைகளை அவ்வப்போது நிறைவேற்றி வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் இச்சலுகைகள் ஒவ்வொரு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**கல்வி**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனங்களில் கல்வி பெற்றோர் முறையே 46.74 விழுக்காடும் 27.89 விழுக்காடும் மட்டுமே உள்ளனர். இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் முன்னேற கல்வி மிகவும் அடிப்படை தேவை என்று கருதி ஆதிதிராவிட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குக் கல்வி அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

**அவைகள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக இத்துறையால் 1251 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 1017 ஆதிதிராவிடர் பள்ளிகள், 234 பழங்குடியினர் பள்ளிகள் அடங்கும். தற்போது இப்பள்ளிகளில் 2.38 இலட்சம் மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**பள்ளிகளை மேல்நிலைப்படுத்துதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகாமையிலேயே அவர்களுக்கு உயர் கல்வி அளிக்க வேண்டியது அவசியம் என்று கருதி, இத்துறை பள்ளிகள் அதற்கு அடுத்த மேல்நிலைக்கு படிப்படியாக நிதி நிலைமையினையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு உயர்த்தப்பட்டு வருகின்றன.

**கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள்**

ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர்களின் பள்ளிப் படிப்பை இடையில் விட்டுவிடுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதற்கு முக்கியக் காரணம் அவர்களுடைய பொருளாதார நிலையே. இவர்களின் பெற்றோர்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பதற்கும், பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்லும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையைப் பெருமளவு குறைக்கும் நோக்கத்துடன் கல்வி பயிற்று வித்தலையும், மிகவும் பயனுள்ளதாகவும், ஆர்வமுள்ளதாகவும் ஆக்குவதற்குச் சலுகைகள், உதவிகள் மற்றும் ஊக்கத் தொகைகள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.



**புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் கரும்பலகைகள் வழங்குதல்**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் அனைத்து வகுப்புகளில் மாணவ, மாணவியருக்கும் (சாதி வேறுபாடின்றி) பாடபுத்தகங்கள், குறிப்பேடுகள் பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் இலவசமாக வழங்கப்படுகிறது. 1 முதல் 3ம் வகுப்புகளில் பயிலுபவர்களுக்குக் கரும்பலகைகள் வழங்கப் படுகின்றன.

**சீருடைகள்**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளி/விடுதிகளில் 12ம் வகுப்பு வரையில் பயிலும் அனைவருக்கும் 2 இணைச் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**கல்வியின் தரத்தினை உயர்த்த வழிகள்**

இத்துறையின் மூலம் நடத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித் தரத்தினை உயர்த்த பல வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சிறப்புப் பயிற்சி**

பத்தாம் வகுப்பு மற்றும் பனிரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களில் சராசரி மற்றும் சராசரிக்கும் குறைவான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்காகத் தனிக் கவனம் அளிக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு ஏதுவாக அரசு பள்ளி இறுதித்தேர்வு போன்ற வகையில் மாதிரி பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.



சிறப்பு வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

**பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி**

முதன் முறையாக இத்துறையில் உள்ள 40 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் கணிப்பொறி பயிற்சி ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**விடுதிகள்**

பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு விடுதியில் தங்கிப்பயிலும் வசதி தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இம்மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000க்கு மிகாமல் இருக்கவேண்டும்.

**உணவுக் கட்டணங்கள்**

அரசு விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டண வீதங்கள் கீழே கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:

| விடுதியின் வகை | மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்று ரூ. பை |
|---|---|
| 1. சென்னை மாநகரிலுள்ள கல்லூரி மற்றும் தொழில்பயிற்சி மாணவ, மாணவியர்கள் அரசு விடுதி | 202.50 |
| 2. வெளியூர் பகுதியிலுள்ள கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மாணவ, மாணவியர் அரசு விடுதிகள் | 197.50 |
| 3. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளி | 180.00 |

**தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்குப் பயிற்சி**

மத்திய அரசின் பயிற்சி மற்றும் தொடர்புடைய திட்டங்களின் கீழ் தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு எழுத ஆதிதிராவிட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சிறப்புப் பயிற்சி வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையினரால் 25 நாட்களுக்கு 19 மையங்களில் நடத்தப்படுகின்றன.




1. இந்த நுழைவுத் தேர்வுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.
2. மூன்று முறை இந்நுழைவுத் தேர்வு எழுதலாம்.
3. வயது வரம்பு ஏதும் இல்லை.

**ஊக்கத் தொகை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தவும் அவர்களிடையே படிப்பில் போட்டி மனப்பான்மையை உருவாக்கவும் கீழ்க்கண்ட ஊக்கப்பரிசுகள் வழங்கப்படுகிறது.

**மாநில அளவில்**

1. ப்ளஸ் 2 தேர்வு - ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ரூ.5000
2. எஸ். எஸ். எல். சி. (பத்தாம் வகுப்பு) ஒரு மாணவர் மற்றும் மாணவி ரூ.3000

**மாவட்ட அளவில்**

1. ப்ளஸ் 2 தேர்வு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ரூ.3000
2. எஸ்.எஸ்.எல்.சி.(பத்தாம் வகுப்பு) மூன்று பரிசுகள்

முதல் பரிசு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.1000

இரண்டாம் பரிசு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.500

மூன்றாம் பரிசு-ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.300

**அறிவுக்கூர்மைப் பரிசு**

ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் இரண்டு ஆதிதிராவிட மாணவர்கள், இரண்டு மாணவிகள், மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவ மாணவர்கள் இரண்டு, மாணவிகள் இரண்டு மற்றும் பழங்குடியின இருமாணவர்கள் மற்றும் இரு மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மேற்படிப்பினைத் தொடர அரசு உதவி செய்கிறது. இத்திட்டத்தில் வருமான வரம்போ விடுதியில் தங்கியிருத்தல் போன்ற நிபந்தனைகள் ஏதும் இல்லை. இப்பரிசுத் தொகை முதலாண்டுக்கு ரூ.800 வீதமும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.960 வீதமும் வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகை அம்மாணவர் படிப்பினைத் தொடர்ந்தால் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

**காந்தி நினைவு பரிசுத் தொகை**

காந்தி நினைவு பரிசுத் தொகை மேல்நிலைப் பள்ளித்தேர்வில்,தேர்ச்சி பெற்று மேற்படிப்பினைத் தொடரும் இந்து ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. கல்வி உதவித் தொகையுடன் இப்பரிசுத் தொகை கூடுதலாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியும் இந்தத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பரிசுத் தொகை முதல் ஆண்டுக்கு ரூ.1500-ம் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.1000 வீதம் வழங்கப் படுகின்றன.

**தகுதிவழிவகை பரிசுத்தொகை**

தகுதி வழிவகை பரிசுத்தொகை, காந்தி நினைவுப் பரிசுத் தொகையைப் போல் ஒவ்வொரு



மாவட்டத்திலும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவ மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் பழங்குடியினரைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கும் வழங்கப்படுகிறது.

**முதமைச்சரின் தகுதிப் பரிசு**

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிறித்துவ மாணவர்களில் முதல் 1000 பேருக்கும், மாணவிகளில் 1000 பேருக்கும் அவர்களின் மேல் படிப்பினைத் தொடர ஆண்டுக்கு ரூ.1500 வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. முறைப்படி பெறும் கல்வி உதவித் தொகையுடன் இப்பரிசுத் தொகையும் கூடுதலாக வழங்கப்படும்.

**கல்வி உதவித்தொகை மற்றும் சலுகைகள், பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல்**

பொதுப் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு திட்டத்தின் கீழ் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவ மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு இத்துறை மூலம் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



பொதுப் பள்ளிகளில் 4-வது முதல் 10-வது வகுப்பு வரையில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவர் இன மாணவர்களுக்கு இலவசமாகக் குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**10ஆம் வகுப்பு படிப்புக்கு முந்தைய படிப்பிற்கான கல்வி உதவித் தொகைகள்**

6 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்பு கல்வி கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேலும் இக்கல்வி நிறுவனங்களுடன் இணைந்த மாணவ ரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

இவ்விடுதி வசதி கல்வித் தொகைகள் வழங்குவதற்கு அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் வருட வருமானம் ரூ.50,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இவ்விடுதி கல்வி உதவித்தொகைகள் ஆண்டொன்றுக்கு ரூ.250 முதல் ரூ.300 வரை மாணவர்களுக்கும், ரூ.300 முதல் ரூ.350 மாணவியர்களுக்கும் அவரவர்கள் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு வழங்கப் படுகிறது.

**கல்வி உதவித் தொகைகள்**

சுகாதாரமற்ற தொழில்களில் அதாவது, உலர் கழிப்பிடம் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோலுரித்தல் மற்றும் துப்புரவுத் தொழில் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் சாதி, மத வேறுபாடின்றி மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. வருமான வரம்பு இல்லை. விடுதியில் தங்கி பயிலாதோர் மற்றும் விடுதியில் தங்கி பயில்வோர் ஆகியவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு :

| | விடுதியில் தங்கி பயிலாதோர் | விடுதியில் தங்கி பயில்வோர் |
|---|---|---|
| 1. முதல் 5 வகுப்பு வரை | மாதம் ரூ. 25 | 3-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை மாதம் ரூ.200 |
| 2. 6 முதல் 8 வகுப்பு வரை | மாதம் ரூ. 40 | |
| 9 மற்றும் 10 வகுப்பு வரை (10 மாதங்களுக்கு மட்டும்) | மாதம் ரூ. 50 | 9 மற்றும் 10-ம் வகுப்பு வரை மாதம் ரூ. 250 |

மேலும் அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒட்டு மொத்த மானியமாக ரூ.500 வழங்கப்படுகிறது.

### 10ஆம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கான உதவித் தொகை (மத்திய அரசு உதவித் தொகை திட்டம்)

விடுதியில் தங்கிப்பயிலும் மற்றும் விடுதியில் தங்கிப்பயிலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்புக்குக் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. மாணவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.44500க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே இச்சலுகைகள்பெறத் தகுதியுடைவர்கள். பெண்களுக்கு இத் தடை நீக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்குப் பராமரிப்புப்படி, கல்வி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் முதலியவை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலாதவர்களுக்கு மாதம் ரூ.90 முதல் ரூ.190 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.150 முதல் ரூ.425 வரையிலும் பராமரிப்புப்படி வழங்கப்படுகிறது.

### மாநில அரசின் சிறப்புப் படிப்புதவித் திட்டம்

10-ஆம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்பு பயிலுகின்ற ஆதிதிராவிட, பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000க்குக் குறைவாக இருப்பின், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படியாக மாதம் ரூ.65 முதல் ரூ.125 வரை விடுதியில் தங்கி பயிலாதவர்களுக்கும், மாதம் ரூ.115 முதல் ரூ.280 வரையில் விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கும் வழங்கப்படுகிறது. பட்டப் படிப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கு வழங்கப்படும் மத்திய அரசு கல்வி உதவித் தொகைகள் மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்கு அந்தந்தக் கல்வி நிலையத் தலைவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### இலவச கல்வி

மத்திய அரசு கல்வி உதவித் தொகைகள் மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படாவர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் கணக்கில் கொள்ளாமல் அவர்களது பட்டப்படிப்பிற்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வு கட்டணம் ஆகியவைகள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது. தொழில் கல்வி பயில்வோரின் பெற்றோரின், பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கு மிகாத குடும்பத்தில் முதல் பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### கடன் உதவித் தொகை

தொழில் கல்வி பயிலும் மாணவர்கள் (அதாவது பொறியியல், மருத்துவம் மற்றும் வேளாண்மை) அவர்கள் தங்கிப் பயிலும் விடுதிகளுக்கு அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தொகைகளை விட அதிகமாகச் செலவு செய்திருந்தால் அவர்களுக்கு இத்தொகை வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பு படிப்போர்களுக்கு ஆண்டுக்கு ரூ.6500-ம் தொழில் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயில்வோர்க்கு ரூ.7000-ம் கடனாக வழங்கப்படும். கல்விக் கடன் உதவித் தொகை வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வெ. இறையன்பு,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927



### பரிசுத்தொகை திட்டம்

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் முதல் தடவையிலேயே 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட, பழங்குடியின மாணவ, மாணவியருக்குப் பரிசுத் தொகையாக ரூ.1000 முதல் ரூ.1500-ஆக மொத்தம் 1000 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஊக்கத் தொகை

படிப்பறிவில் பின் தங்கிய மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், தென்னாற்காடு வள்ளலார், காமராஜர், அண்ணா எம்.ஜி.ஆர்., வடாற்காடு அம்பேத்கர், சேலம், ராஜாஜி, திருச்சிராப்பள்ளி, பெரும்பிடுகு முத்திரையர், கரூர் தீரன் சின்னமலை, பெரம்பலூர் திருவள்ளுவர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், திருவாரூர் ஏ. டி. பன்னீர்செல்வம் ஆகிய மாவட்டங்களில் பெண் கல்விக்கு முன்னுரிமை அளிக்கவும், ஆதிதிராவிட பெண் குழந்தைகள் இடையில் நின்று விடுவதைத் தடுக்கவும் அங்குள்ள பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 20,000 ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஒட்டு மொத்த மானியமாக ரூ.500 வீதம் வழங்கப்படுகிறது. மாநிலம் முழுதும் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிக்கும் 30,000 ஆதிதிராவிட மாணவியர்க்கு மாதம் ரூ.100 வீதம் வழங்கப்படுகிறது.

### புத்தக வங்கி

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி படிப்பு ஆகிய தொழில் நுட்ப படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்கள் பயன்பெறும் வகையில் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை பெற்று மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் தொழில்நுட்பப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு இரண்டு மாணவர்களுக்கு ஒரு செட் புத்தகம் வீதம் வழங்கப்படுகிறது.

இப்போது விற்பனையில்...
படித்து மகிழுங்கள்
தமிழரசு
இலக்கிய மலர்
260 பக்கங்கள்
விலை ரூ.10 மட்டும்
கிடைக்கும் இடங்கள்:
- தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 2.
- பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி.
- வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம்.
- அண்ணா சதுக்கம், (நூலகம்)

விரைவில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களில் கிடைக்கும்.
அஞ்சல் செலவு தனி



## ஆசிரியர் மடல்

பிறக்கும் பொழுதே ஒருவன் மனிதனாகப் பிறந்து விடுவதில்லை.

இறப்பதற்குள்ளாவது அவன் மனிதனாகப் பரிணாம வளர்ச்சி அடைவதுதான் மிகப் பெரிய சாதனையாக இருக்கமுடியும்.

பரிணாம வளர்ச்சி என்பது ஒவ்வொரு நொடியிலும் நமக்குள்ளே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நம்மை மனிதனாக மாற்றுவதும் நமக்குள் ஒளிந்து இருக்கும் மனிதத்தை தேடிக் கண்டுபிடிப்பதும் அன்பு என்கிற மொழியினால் மட்டுமே அகப்படுகிறது.

நமக்குள் எதைப் பிடிக்கிறதோ அதற்குக்காரணங்கள் சொல்வது இல்லை.

பிடிக்காததைப் பற்றித்தான் காரணங்களைத் தேடி கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது.

பிடிப்பதும் அன்பு கொள்வதும் இயல்பானவை.

வெறுப்பு கொள்வதற்கும் கோபம் அடைவதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்பு கொள்ளும்போது சக்தி சேருகிறது.

கோபம் கொள்ளும்போது சக்தி விரயமாகிறது. எல்லோரும் புன் சிரிப்போடு ஒன்று கூடும்பொழுது, காற்று மண்டலமே நறுமணமாக மகிழ்ச்சிப் பூக்களை நம் மீது அட்சதைகளாகத் தூவுகிறது.

அன்பு இருதரப்பினரையும் உயர்த்துகிறது; மேன்மைப் படுத்துகிறது.

பகிர்ந்துகொள்ளப் பகிர்ந்துகொள்ள அதிகம் ஆகிற தன்மை அன்புக்கு மட்டுமே உண்டு.

நாம் அன்போடு பார்க்கிறபோது, பாறை கூட சிற்பமாகி விடுகிறது.

கோபத்தோடு நோக்குகிறபோது பஞ்சு கூட திடமாகி விடுகிறது.

இந்த வாழ்க்கையை இன்னொரு முறை நாம் வாழப் போவது இல்லை.

வேகமாக சுழலும் புவியை நிறுத்தச்சொல்லி அதிலிருந்து எகிறிக் குதிக்க நம்மால் முடியாது. ஆனால் நம்மால் ஒரு புன்னகையைச் சிந்த முடியும். அதற்குச் செலவு ஏதும் இல்லை. அதனாலேயே அது விலைமதிக்க முடியாததாக இருக்கிறது!





தூய
பட்டு

தூய
சரிகை



...கம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்


தமிழரசு
மழைவளம் சேர்ப்போம்!
பத்மவாசன்






## இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| அரசின் கொள்கை கோட்பாடுகள் | --- | 2 |
| மரம் - திறம் | --- | 7 |
| மரங்களைப் பாடுவேன் - கவிஞர் வைரமுத்து | --- | 9 |
| மரம் வளர்ப்பும் பயன்களும் - சி.கே. ஸ்ரீதரன் ப.அ. மணி | --- | 11 |
| அது ஏன்? -கவிஞர் வாலி | --- | 13 |
| இலக்கியத்தில் மரங்கள் | --- | 14 |
| மரங்கள் -கவிஞர் மு.மேத்தா | --- | 17 |
| ஆறில் ஒரு பங்கு -மகாகவி பாரதியார் | --- | 18 |
| மகிழ்ச்சி செய் -கவிஞர் அறிவுமதி | --- | 30 |
| மண்ணின் பண் -சிபிச்செல்வம் | --- | 31 |
| சூழலியல் | --- | 33 |
| மாதுளை மரம் | --- | 35 |
| துன்ப சினேகிதன் -கவிஞர் கண்ணதாசன் | --- | 39 |
| ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் ஒப்பற்ற உதவிகள் -மைதிலி கே. ராஜேந்திரன் | --- | 40 |
| ஆசிரியர் மடல் | --- | 48 |



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028

ஆனித் திங்கள் : 2

மலர் : 27 இதழ் : 24

16.6.1997

விலை ரூ.3

# அரசின் கொள்கை கோட்பாடுகள்

*14.6.1997 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைத் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:*

இந்த அரசில் என்னையும், அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் யாரும் எவரும் எளிதில் சந்தித்துக் குறைகளைக் கூறவும், அவர்களின் நியாயமான கோரிக்கைகள் இந்த அரசினால் விரைந்து கவனிக்கப்படவும் நல்ல சூழ்நிலைகள் உருவாகியுள்ளன என்று தமிழகம் முழுவதும் பரவலாகப் பேசப்படுகின்றது.

கடந்த ஓராண்டாக, தமிழகத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கான பல திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்காகவும், ஊரக வளர்ச்சிக்காகவும், ஏழை எளிய நடுத்தரப் பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

அரசின் மேல்மட்டங்களில் காணப்படும் நிர்வாகத் தூய்மையும் செயல் திறனின் வேகமும் கீழ்மட்டங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய விழைவாகும். எனவே தமிழகம் முழுவதும் அனைத்துத் துறைகளிலும் அனைத்து மட்டங்களிலும் தூய்மையான - திறமையான நிர்வாகம் நடத்திட நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சீரழிந்த நிலையில் இருந்த நிர்வாக இயந்திரத்தைச் சரிசெய்து, தூய்மையான நல்ல நிர்வாகம் அமைந்திட இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒற்றை ஒப்பந்தப்புள்ளி முறை ஒழிக்கப்பட்டு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான ஒப்பந்த நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



கனிமத் துறையில் தவறுகளைத் தடுத்திட-முந்தைய அரசினால் புகுத்தப்பட்ட விதி 39 நீக்கப்பட்டு, பல கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்திட நிர்வாகத்தில் ஊழலைத் தடுத்திட இந்த அரசினால் நீதிபதி இராமானுஜம் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

வருவாய் நிர்வாகத்தைச் சீர்படுத்திட முன்னாள் தலைமைச் செயலாளர் திரு.சபாநாயகம் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பத்திரப்பதிவு நடைமுறைகளை ஒழுங்குபடுத்திட அதிகாரிகளைக் கொண்ட நிபுணர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்குச் சாதாரண குடிமகனுக்கும் உரிமை வழங்கக்கூடிய "தகவல் உரிமைச் சட்டம்" என ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாதிருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களையும் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிய அதிகாரங்களையும் கூடுதல் நிதி ஆதாரங்களையும் உருவாக்கித் தந்துள்ளோம். மேலும் அதிகாரங்களை வழங்குவதற்கான வழி வகைகளை மாநிலத் திட்டக்குழு வாயிலாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் மட்டும் முந்தைய அரசு பல ஆண்டுகளாக முடிக்காமல் பல்வேறு நிலைகளில் விட்டுச் சென்ற ரூ.150 கோடி மதிப்புடைய ஒரு இலட்சத்து பதினான்காயிரம் பணிகள் இந்த அரசினால் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தரிசு நிலங்களையும் மானாவாரி நிலங்களையும் மேம்படுத்திட முன்னாள் துணைவேந்தர் திரு. வி. சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அக்குழு தரவிருக்கும் பரிந்துரைகளை ஏற்று விரைந்து செயல்படுத்திடத் திட்டமிட்டுள்ளோம்.

## தொழில் வளம்

தொழில்துறையில் மிகப்பெரிய வளர்ச்சியை எதிர்நோக்கிப் பல்வேறு வெளிநாட்டுத் தொழில் முனைவர்களுடன் இந்த அரசு ஒப்பந்தங்கள் செய்து கொண்டதன் காரணமாகப் பல பெரிய தொழிற்சாலைகள் தமிழகத்திலே உருவாகி வருகின்றன. தொழில் வளாகங்களில் ஒருமுனைத் தீர்வு மையம் (Single Window Clearance) செயல்பட சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புதிதாக உருவாக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கூடுதலாக 6,000 மெகாவாட் மின்உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். புதிய தொழில் பேட்டைகள், இரசாயனத் தொழில் வளாகம், கணினி தொழில் நகரம், கணினி தகவல் சாதனத் தொழில் வளாகம் என்று தமிழகம் தொழில் மயமாகத் திகழத் திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

ரூ.450 கோடி செலவில் 5 ஆயிரத்து 800 புதிய பேருந்துகளை வாங்கிட ஆணையிடப்பட்டு படிப்படியாக வாங்கப்பட்டு வருகிறது.

மனைவரி ரத்து செய்யப்பட்டு நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ரூ.24 கோடி செலவில் பட்டா பாஸ் புத்தகம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

நிர்வாக வசதிகளுக்காக நான்கு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் 174 பேருக்கு மேல் படிப்புக்கான செலவுகளை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

பட்டதாரிகளாக இதுவரை யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் மொத்தம் 300 மதிப்பெண்களில் முதல் பத்து இடங்களைப் பெறுவோர்களின் கல்விக்கான முழுச் செலவையும் பொறியியல் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ, பல் மருத்துவக் கல்லூரியிலோ, வேளாண்மைக் கல்லூரியிலோ, கால்நடை மருத்துவக் கல்லூரியிலோ அவர்கள் விரும்பும் தொழிற் கல்விப் படிப்பினை படிக்க ஆகும் கல்விச் செலவை இந்த அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

கிராமப்புறப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்புப் பதிவு முன்னுரிமைப்படி, கடந்த ஆண்டில் 11 ஆயிரத்து 652 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும், முதுகலை பட்ட ஆசிரியர்களும் இந்த அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த ஆண்டில் மேலும் பல்வேறு வகை ஆசிரியர்கள் ஏறத்தாழ 14 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பைப் பெற இருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

திருச்சியில் புதிய மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு துவங்கப் படவிருக்கிறது.

சேலத்தில் புதிய பல்கலைக் கழகம் இந்த ஆண்டு துவங்கப் படுகிறது.

சொந்தக் கட்டடம் இல்லாத 600 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்களைக் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

1996-97ஆம் ஆண்டில் ரூ.250 கோடி செலவில் நபார்டு நிதி உதவியுடன் சாலைகளை மேம் படுத்தும் பணிகளை நிறை வேற்றி வருகிறோம். மேலும் 1997-98ஆம் ஆண்டுக்கு இதுவரை 148 கோடி ரூபாய் சாலைகள் மேம்படுத்தும் பணிக்காக ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

இது தவிர நகர்ப்பகுதி சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.35 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக நியமிக்கப்படாமல் இருந்த சாலைப் பணியாளர்கள் பதவிகளில் இந்த ஆண்டில் 10 ஆயிரம் பேர் நியமிக்கப்பட உள்ளனர்.

முன்னாள் கிராம அதிகாரிகள் 15,000 பேருக்கு ஓய்வூதியம் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளதோடு, ஓய்வூதியம் மட்டுமின்றி, பத்தாண்டு கால நிலுவைத் தொகையாக ஒவ்வொருவருக்கும் 23,000 ரூபாய் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் நலன்

நிரப்பப்படாமல் உள்ள ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்குரிய 18+1 சதவிகிதப் பணியிடங்கள்

### முதல் பக்க அட்டைப்படம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பிறந்த நாளான **3.6.97**இல் நாடெங்கும் மரங்கள் நடுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

### இரண்டாவது பக்க அட்டைப்படம்

"எல்லா மார்க்கங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; அதுதான் மதச்சார்பற்ற தன்மையின் உண்மையான அர்த்தம்!" - என்றுரைத்த கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் 102வது பிறந்த நாள் **5.6.97.**

### கடைசிப் பக்க அட்டைப்படம்

சிற்பக் கலைமட்டுமல்ல; ஓவியமும் உள்ளம் கவரும் நுண்கலையே என்பதை உணர்த்தியிருக்கிறார் ஓவியர் திரு, பத்மவாசன்.

அனைத்தையும் மிக விரைவில் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட வகுப்பினரில் ஆசிரியப் பணிக்குத் தகுதி பெற்றவர்கள் கிடைக்காத காரணத்தால், தமிழகம் முழுவதும் 17 ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் ரூ.5 கோடி செலவில் ஆதிதிராவிட மாணவர்களுக்கெனத் தனி ஆசிரியப் பயிற்சிப் பிரிவுகள் இந்த ஆண்டில் தொடங்கப்படுகின்றன.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியைப் போக்க 42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கிடும் திட்டத்தை நீட்டித்து ஏழை எளிய, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் வீட்டுமனை வழங்க ரூ.10 கோடி.

பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.5 கோடி.

முன்னேறிய வகுப்பில் எளியவர்களுக்கு ரூ.3 கோடி.

ஆபத்தான நோய்களுக்கு ஏழைகள் செய்துகொள்ளும் மருத்துவ அறுவை சிகிச்சைக்கு ரூ.15 கோடி.

என அரசு அறிவித்துள்ள திட்டங்களை நிறைவேற்ற உங்கள் ஆர்வமிக்க பணியை எதிர்பார்க்கின்றேன்.

சென்ற ஆண்டைப்போல் இல்லாமல், இந்த நிதியாண்டில் உரிய காலத்தில் வரவு-செலவுத் திட்ட அறிக்கை பேரவையில் நிறைவேற்றப்பட்டு வரலாற்றிலே இதுவரை இல்லாத வகையில் திட்ட செயலாக்கங்களுக்குத் தேவையான ஆணைகள் மே திங்களிலேயே வெளியிடப்பட்டு விட்டன. மேலும் பகுதி II திட்டங்களின் (Part II Schemes) கீழ் அறிவிக்கப்பட்ட 588 திட்டங்களுள், இதுவரை 571 திட்டங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தில் நானும் அமைச்சர்களும் உயர்நிலை அலுவலர்களும் ஆணைகளை வெளியிடுவதில் காட்டியுள்ள விரைவையும் வேகத்தையும் துறைத்தலைவர்களும் மாவட்ட ஆட்சியர்களும் கடைப்பிடித்திட வேண்டுமென்று விரும்புகிறேன்.

நாம் நமக்குரிய திட்டங்களை நிறைவேற்றி முடித்து விடுவோமேயானால், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை நம்மால் பெற்றிட முடியும்.

## பொது விநியோகம்

பெரும்பாலான மக்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருள்கள் குறித்தகாலத்தில் குறித்த அளவில் கிடைத்திட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அரசு மீது மக்கள் வைக்கும் நம்பிக்கைக்கு ஓர் ஆதாரத் திட்டமாக இந்தப் பொது விநியோகத் திட்டம் விளங்குகிறது. அந்த நம்பிக்கையைக் காத்து, அதனை மேலும் வளர்க்கும் வகையில் இந்தப் பொது விநியோகத் திட்டத்தைத் தமிழகம் முழுவதிலும் சீராகச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

1 யூனிட் உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசியும்.

1½ யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசியும்.

2 யூனிட் உள்ள குடும்பத்திற்கு 16 கிலோ அரிசியும்.

2½ யூனிட் உள்ள குடும்பத்திற்கு 18 கிலோ அரிசியும்.

3 யூனிட்டும் அதற்கு மேலும் உள்ள குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசியும் (ஒரு யூனிட் என்பது பெரியவர்களையும் ½ யூனிட் என்பது குழந்தைகளையும் குறிக்கும்)

வழங்கப்பட வேண்டுமென்ற இந்த அரசின் எண்ணம் முழுமை யாக நிறைவேறும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து செயல்படுத்திட வேண்டும்.

குறைகள் நிகழா வண்ணம் மாவட்ட ஆட்சியர்கள் இதில் நேரடியாகக் கவனம் செலுத்தி, பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் முழுமையாய் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திட வேண்டுகிறேன்.

ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பல்வேறு திட்டங்களுக்குச் செலவிடப்படுகின்றது. மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா வீட்டுவசதித்திட்டம் போன்ற திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படும் இந்த வேலை வாய்ப்புத் திட்டங்களால், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள், கூலி வேலை செய்பவர்கள், நிலமற்ற ஏழை எளியவர்கள் பெருவாரியாகப் பயன்பெறமுடியும்.

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென்றே இந்த ஆண்டு ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும், குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பல பகுதிகளிலும் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்திட அரசு ஆவன செய்துள்ளது.

குடிநீர் வசதியற்ற 154 குடியிருப்புகளுக்கு இந்த ஓராண்டில் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது. வரும் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள் அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்சம் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு சராசரி 40 லிட்டர் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு, 2,700-க்கு மேற்பட்ட விசைப்பம்புகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் மின்விசைப் பம்புகள், கைப்பம்புகள் ஆகியவற்றில் சிறுசிறு பழுதுபார்க்கும் பணிகளில் கூட மிகவும் காலதாமதம் ஏற்பட்டு, மக்களுக்குக் குடிநீர் வசதிகள் கிடைப்பதில் பிரச்சினைகள் தோன்றுவதாகக் கூறப்படுகின்றது. மாவட்ட ஆட்சியர்கள் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்து, முனைப்புடன் செயல்பட வேண்டும்.

## நலிந்தோர் நலன்

நலிந்த பிரிவினருக்கான நலத் திட்டங்களைத் தீட்டுவதில் இந்த அரசு எப்போதுமே சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதையும் பலராலும் பாராட்டப்பெற்றுள்ள பின்வரும் நல்வாழ்வுத் திட்டங்கள் இந்த அரசால் உருவாக்கப்பட்டவை தாம்!

1967-68ஆம் ஆண்டில் சிறப்பான மகளிர் மன்றங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்.

1968ஆம் ஆண்டில் தொண்டு நிறுவனங்கள்/சேவை இல்லங்கள் நடத்த மானியம் வழங்கும் திட்டம்.

1971ஆம் ஆண்டில் தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லத் திட்டம்.

1972ஆம் ஆண்டில் கண்ணொளி வழங்கும் திட்டம்.

1973ஆம் ஆண்டில் கை ரிக்‌ஷாவை அகற்றி சைக்கிள் ரிக்‌ஷா வழங்கும் திட்டம்.

1974-75ஆம் ஆண்டில் பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் கட்ட தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டம்.

1975ஆம் ஆண்டில் ஆதரவற்ற சிறுவர்களுக்கான கருணை இல்லம் அமைக்கும் திட்டம்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித்திட்டம்.

1989-90 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம்.

அதே ஆண்டில் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித்திட்டம்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டம்.

வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள அனைவருக்கும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்.

இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய நேரடிக்கவனம் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் எவ்வித முறைகேடுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாவட்டங்களில் இத்தகைய திட்டங்களைச் செயல் படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள சமூக நலத்துறை அலுவலர்களைக் கண்காணித்து, முறைகேடுகள் ஏதும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

## நமக்கு நாமே!

"நமக்கு நாமே" எனும் திட்டத்தைப் பற்றி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

கிராமத்திலே ஒருங்கிணைந்த மனித ஆற்றலை உருவாக்கி, அரசின் உதவிக்கரத்தைக் கொண்டு அந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் "நமக்கு நாமே" என்ற திட்டம் செயற்படுத்தப்பட இருக்கிறது. பஞ்சாயத்துராஜ் சட்டத்திலே கிராமச் சபைகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

ஊராட்சியில் உள்ள வாக்காளர்கள் ஒன்றுகூடி "ஊர்மக்கள் மன்றம்" ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அந்த மன்றம் கூடி அந்த ஊரினுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் விவாதித்து எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்றலாம் என்பனவைகளையெல்லாம் வரையறுப்பதோடு அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அந்த மக்களே பங்கு பெற வேண்டும். இதுதான் "நமக்கு நாமே திட்டம்".

இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கான முயற்சிகளில், அரசு அதிகாரிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, இத்திட்டம் வெற்றி அடைந்திட ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பயிற்சியிலுள்ள இரண்டு இளம் அரசு அலுவலர்கள் அண்மையில் என்னைச் சந்தித்து தாங்கள் சென்று வந்த இரண்டு கிராமங்களில் உள்ள நிலையை நேரில் விளக்கியதோடு இந்த "நமக்கு நாமே" திட்டத்தை கிராம மக்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

ஒவ்வொரு பணியையும் நிறைவேற்றிட ஒரு செயல்முறைத் திட்டத்தைத் (Action Plan) தயாரித்து, அதன்படி திட்டப் பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும். நில மாற்றம் செய்வதில் காலதாமதம், நிலம் ஒப்படை செய்வதில் கால தாமதம், கையகப்படுத்துவதில் காலதாமதம், பிற துறைகளில் ஒப்புதல் கிடைப்பதில் காலதாமதம் என்ற நிலையெல்லாம் மாற வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்றொரு துறையோடு ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். துறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்கு இடையூறாய் அமைந்திடக் கூடாது.

## பணிகளை விரைவுபடுத்திட...

திட்டப் பணிகளை நிறைவேற்றும்போது, எந்தத் துறையிலாவது முன்னேற்றம் இல்லாமல் சுணக்கம் காணப்பட்டால் அதுகுறித்து அத்துறை அலுவலருக்கு அறிவுரை கூறிப் பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். மேலும், 'முதலமைச்சர் வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு'விற்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் காவல்

துறையினர் உறுதியுடன் செயல் பட்டாக வேண்டும்.

அண்மைக் காலமாய்த் தவறான வழி காட்டுதல்கள் காரணமாகத் தென் மாவட்டங்களில் சாதிகளின் பெயரால் இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு, தங்களுக்குள் இழைத்துக் கொள்கிற வன்முறைகளை எண்ணும்போது தமிழ்ச்சமுதாயத்தின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள எவரையும் அது வேதனைப்படுத்தாமல் இருக்க முடியாது.

மாவட்டங்களைப் பொறுத்தவரை அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள்தாம் அரசின் பிரதிநிதிகளாக மக்களால் கருதப்படுகிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் பதற்றத்திற்குள்ளாகின்ற பகுதிகளை அடையாளம் கண்டு, அடிக்கடி பார்வையிட்டு, அமைதிக் குழுக்களை அமைத்து அப்பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பையும் நல்ல நம்பிக்கையையும் ஏற்படுத்திட வேண்டும். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், அப்பகுதிகளில் ரோந்துப் பணிகளுக்கு ஏற்பாடு செய்து கண்காணிக்க வேண்டும்.

### காவல்துறைப் புகார்

காவல் நிலையத்திற்கு வருபவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு, பாதுகாப்பு உதவி நாடி வருபவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களிடம் பரிவு காட்டி-அவர்கள் தரும் புகார் ஒவ்வொன்றையும் பதிவு செய்து, அவற்றின் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலம் மக்களிடையே பாதுகாப்பு உணர்வு வளர்க்கப்படவேண்டும்.

சில இடங்களில் சிலர் தரும் வழக்குகளைப் பதிவு செய்வதே இல்லை எனும் குற்றச்சாட்டுகள் அடிக்கடி வருகின்றன. இத்தகைய குற்றச்சாட்டுகள் தடுக்கப்பட்டாக வேண்டும். இதன் பொருட்டு, பெறப்படும் புகார் அனைத்தையும் பதிவு செய்து அதற்கு அடையாளமாக ஒப்புதல் அட்டை ஒன்றைப் புகார் செய்தவர்க்கு வழங்கிட வேண்டும் என்றும், ரெயில் மற்றும் பேருந்தில் பயணம் செய்யும்போது ஏற்படுகிற குற்றங்கள் குறித்து புகார் மனுக்களை பொதுமக்கள் எந்தக் காவல் நிலையத்தில் கொடுத்தாலும், அங்கே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், புகார் மனு கொடுக்கப்பட்ட காவல்நிலையத்திற்கு அதிகாரம் இல்லாமல் இருந்தால்-எந்த காவல் நிலையத்திற்கு அதிகாரம் உள்ளதோ, அந்தக் காவல் நிலையத்திற்கு அந்தப் புகார் மனுவை அனுப்பி வைக்க வேண்டியது, புகார் மனுவைப் பெற்றுக்கொண்ட காவல் நிலையத்தின் பொறுப்பு என்றும் அறிவுரைகளை அரசு அண்மையில் வழங்கியுள்ளது.

காவல்துறை, பொதுமக்களின் நண்பனாக விளங்கவேண்டும் என்பதும், பொதுமக்களைக் கண்ணியமாக நடத்திட வேண்டும் என்பதும், காவல் நிலையம் வருகின்ற அனைவருமே குற்றவாளிகள் என்ற வகையில் நடத்தப்படக்கூடாது என்பதும் இந்த அரசின் அணுகுமுறையாகும். இதை உணர்ந்து, உதவிகோரி காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களை ஒழுங்காக நடத்தி, வேண்டிய உதவிகளைச் செய்திட வேண்டுமென்பது காவல்துறையினரின் கடமையாகும்.

அதேபோல், காவல்துறை அலுவலர்கள்-எல்லா மட்டத்திலேயும்-தங்களைப் பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் பணியாற்றிட வேண்டும் என்பதும், அதிலேயும் குறிப்பாக மாவட்டங்களில் பணிபுரிகின்ற காவல்துறை அதிகாரிகள் காவல் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் களைவதற்கு உதவுபவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும், காவல்துறை கண்காணிப்பாளரும், சரகக் காவல்துறைத் துணைத் தலைவரும் (D.I.G.) தலைமையிடத்தில் பொதுமக்களைச் சந்திக்க வேண்டுமென்று, ஏற்கனீவே அரசு ஆணை உள்ளது. இதுமட்டுமல்லாது, காவல்துறை அதிகாரிகள் தலைமை இடத்தில் இருக்கின்ற மற்ற நாட்களிலும், வெளி ஊர்களுக்கு முகாம் செல்கின்ற போதும் பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கின்ற முக்கியமான பணியில் வருவாய்த் துறையும் காவல்துறையும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது மிகமிக அவசியம்.

### கண்ணியமான அணுகுமுறை

காவல்துறை அலுவலர்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மக்களுக்கு நண்பர்களாக இருப்பதோடு, நல்ல வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். நல்ல குணநலன்களும், கட்டுப்பாடு மிக்க கடமை உணர்வும் கொண்டவர்களாகக் காவல்துறை அலுவலர்கள் இருந்தால்தான், எந்த விமர்சனத்திற்கும் 'ஆளாகாமல் அவர்களால் குற்றம் புரிவோர் மீது தக்க நடவடிக்கை எடுக்க முடியும். எனவே காவல்துறை அலுவலர்களுக்குக் கண்ணியமான அணுகுமுறையும், கட்டுப்பாடான செயல்முறையும் மிக அவசியம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை ஒரு மக்கள் இயக்கமாக (Mass Movement) நடத்த வேண்டும். அதற்கு மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் துறை அதிகாரியும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கள்ளச் சாராயத்தை ஒழிக்க மக்களே முன்வரும்போது அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து சமுதாயத்திற்காக நடத்தப்படும் அந்த நல்ல பணியினை ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் யாராக இருந்தாலும், அந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது அச்சமின்றி நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரிகளை இந்த அரசு உரிய முறையில் பாராட்டும். ★



# மரமும் திறமும்!

*ஒட்டடைக் குச்சி போன்ற உருவமைப்போடு, விண்தொடும் அளவுக்கு ஓங்கி நிற்கிறது பனைமரம். அதன் நிமிர்ந்த தோற்றமே அதற்கொரு கம்பீரத்தை - அகம்பாவத்தை - ஆணவத்தைக் கொடுக்கிறது.*

*ஆற்றங்கரையிலே நிற்கின்ற அந்தப் பனைமரம், கீழே தன் காலடியில் இளைத்துப்போய் நிற்கின்ற சின்ன நாணலைப் பார்த்துக் கேலி செய்து சிரிக்கிறது; ஆற்று நீரின் வேகத்தைக் கூடத் தாளாமல் நடுங்கிக் கொண்டிருக்கிற நாணல் வாயடைத்துப் போகிறது.*

*ஒருநாள் பலத்த புயலடிக்கிறது. நிமிர்ந்து நின்ற பனைமரம் வேரோடும் - வேரடி மண்ணோடும் கீழே சாய்ந்து விடுகிறது!*

*காற்றடிக்கும் திசையிலெல்லாம் வளைந்து கொடுத்த மெல்லிய நாணல், அந்தப் புயலுக்குப் பின்னாலும் வீழ்ந்து விடாமல், எப்போதும்போல அடக்கமும் ஒடுக்கமுமாக நின்று, அனுதாபத்தோடு அந்தப் பனைமரத்தைப் பார்க்கிறது. 'திமிரடித்தனத்தின் முடிவு இப்படித்தான் இருக்கும்!'.*

*என்னதான் வலியவர்களானாலும் எளியவர்களைக் கேலி பேசக்கூடாது!*

*என்னதான் உயர்ந்தவர்களானாலும் தாழ்ந்தவர்களை ஏளனம் செய்யக்கூடாது!*

*அகம்பாவமும் ஆணவமும் ஒருவரை வீழ்த்திவிடும்!*

*அடக்கமும் பணிவுமே ஒருவரை நிமிரச் செய்திடும்!*

*-இந்தக் கருத்துடைய பாடலொன்றை நாமெல்லாம் பாலபாடத்திலே படித்திருக்கிறோம். அதேபோல், நமக்கெல்லாம் பாடம் புகட்டும் முத்தான பாடல் ஒன்றினை-*

*'வெற்றிவேற்கை' மூலம் அதிவீரராம பாண்டியனார் தம் பேரப்பிள்ளைகளாகிய நமக்கெல்லாம் சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறார்.*

*அந்தப் பாடலின் கருப்பொருள்-*

**ஒரு பனை மரம்;**
**ஒரு ஆல மரம்!**

*கரிய நிறத்தோடு, வாட்டசாட்டமாக உள்ள, ஒருவனை-'ஆளைப்பாரு நனைந்த பனை மர மாட்டம்!' என்று; கேலி செய்வது தென்மாவட்ட மக்கள் வழக்கம்.*

*அப்படியொரு பனைமரம் நிற்கிறது. வேகாத வெய்யிலில் அவ்வழியே வருகின்ற கவிஞர் அம்மரத்தின் தலை நிழலில் களைப்பாற நிற்கிறார்; சிறிது நேரந்தானிருக்கும். அந்த நிழல் நகர்ந்து விடுகிறது. அவரும் அதற்கேற்ப நகர்ந்து கொள்கிறார்!.*

*அடுத்த சிறிது நேரத்தில் மீண்டும் அந்த நிழல் சூரிய ஒளிக்கேற்ப விலகிவிடுகிறது; புலவர் பெருமானுக்கோ எரிச்சலாகி விடுகிறது!*

*பரட்டைத் தலையோடு நிற்கும் அந்தப் பனை மரத்தைக் கழுத்து வலிக்குமளவுக்கு நிமிர்ந்து பார்க்கிறார்; ஏளனச் சிரிப்போடு கீழே பார்க்கிறார்.*

*ஒரு பனங்கொட்டை கரேலென்று - கிடக்கிறது; கையிலெடுக்கிறார் - 'நெடுநெடுவென நிமிர்ந்து நிற்கும் பனைமரத்தின் விதைதான் எத்தனைப் பெரிதாக இருக்கிறது! இருந்து என்ன பயன்..? இந்த ஒரு மரத்தால் என் ஒருவனுக்கே நிரந்தர நிழல் தரமுடியவில்லையே!*

*பெருமூச்சால் ஏறி இறங்குகிறது நெஞ்சு. அடுத்த வினாடியே அவருடைய சிந்தனை ஆல மரமொன்றைக் கற்பனை செய்து பார்க்கிறது. மீனின் சினையை விடச் சிறிய விதைதான் ஆலமரத்திற்கு! விழுதுக் கரங்களை ஊன்றி விரிந்து நிற்கும் அந்தக் கனத்த மரத்தின் படர்ந்த நிழலில்-தமது குதிரைப் படை, தேர்ப்படை, யானைப் படையோடு ஒரு மன்னவனே தங்கி இளைப்பாற முடியுமே!..*

*பனை விதை பெரிது-அதன் மூலம் வளரும் மரம் தரும் நிழல் கொடுக்கும் பயன் சிறிது! ஆலின் விதை சிறிது - அதன் மூலம் வளரும் மரம்தரும் சுகமோ பெரிது!*

*-இவ்வாறு இரண்டையும் ஒப்பிட்டு பார்த்து உவகை கொள்ளுகிறது அவருடைய மனம்; அந்த உவகை, ஒப்பற்றதோர் கவிதையாக வெளிப்படுகிறது; இதோ அந்த இன்தமிழ்ப் பாடல்;*

***'தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை***
***வான்உற ஓங்கி வளம்பெற வளரினும்***
***ஒருவர்க் கிருக்க நிழல்ஆ காதே!***
***தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை***
***தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்***
***நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை***
***அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு***
***மன்னர்க் கிருக்க நிழலா கும்மே!'***

★★★

*'பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும்' என்பதுண்டு; அதைக் கேட்கும் மங்கையர் சினப்பதுண்டு-வெகுண்டு சிவப்பதுண்டு!*



அப்படிப் பேய் இரங்குமோ இரங்காதோ, நமக்குத் தெரியாது! வெள்ளையாகச் சொன்னால் - அதற்குச் சரியான பொருள் என்ன - புரியாது!

ஆனால், பூத்துக் குலுங்கிடும் ஒரு மரம்; முன்னழகும் பின்னழகும், முத்தான சொல்லழகும் கண்ணழகும் கழுத்தழகும் கட்டான உடல் அழகும் கொண்ட கன்னியொருத்தியின் ஸ்பரிசத்திற்காகத் தானே தலை தாழ்ந்து விடுகிறதாம்!

இதயம் வருடும் இனிய அந்தக் காட்சியினை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது நளவெண்பா!

வசீகரம் மிக்க வண்ணப்பூக்கள்-இலைகளைவிட அதிகம் பூத்துள்ள தலையினை உடைய மரம் அது!

மாலை வேளை; சற்று தூரத்திலே தன் மனதுக்கினியவள் வருவதைக் காண்கிறான் அந்தக் காளை!

'ஒரு பூங்கொத்தை ஒடித்துக் கொடுத்தால், காதல் மணக்கும் நம் எண்ணமும் இதயமும் அவளால் இன்னும் உணரப்படுமே! நெஞ்சின் நெருக்கம் மேலும் வலுப்படுமே!' - இப்படி நினைத்தது அவன் மனம்.

அந்தக் கிளைநோக்கித் தாவினான்; எட்டவில்லை; அவன் அவசரத்திற்குப் பூங்கொத்து கிட்டவில்லை!

மறுமுறையும் தாவினான்; மீண்டும் அதே நிலை!

இதற்குள் அவளே அவனருகே வந்துவிட்டாள்; அவனோ, எண்ணியது முடியவில்லையே என்று நொந்துவிட்டான்!

அவனைப் புரிந்து கொண்டு, மெள்ளச் சிரித்தது அந்தப் பருவநிலா! வெட்கித்துப்போய் நிற்கும் அவனைப் பார்த்தாள் அவள்; பிறகு, அந்த மரத்தின் கிளையைப் பார்த்தாள். காந்தளாகச் சிவந்திருந்த தனது மென் கரத்தை அதைநோக்கி ஏந்தினாள்.

என்ன விந்தை! மலர்கள் பூத்துக் குலுங்கிய அந்தக் கிளை அவளுக்கு எட்டும்படி பணிந்தது; தானே வளைந்தது! அது மட்டுமல்ல; நோய் செய்யும் பார்வைக் காரியான பஞ்சின் மெள்ளடிப் பாவையின் பாதத்தையே தொடுமளவில் தாழ்ந்ததாம் அது!

நளவெண்பா நாயகன் மெச்சிடும் பூச்சொரியும் அந்த ஆச்சரியப் பாடல் இதோ;

**பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே?**
**பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு - மேவியவர்**
**பொன்னடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்**
**மின்னெடுவேற் கையான் விரைந்து!**

**- பி.எல்.இராசேந்திரன்**



# மரங்களைப் பாடுவேன்

**- கவிஞர் வைரமுத்து**

வாரும் வள்ளுவரே
மக்கட் பண்பில்லாதவரை
என்ன சொன்னீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அவ்வளவு
மட்டமா?
❐
வணக்கம் ஔவையே
நீட்டோலை வாசியான்
யாரென்றீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அத்தனை இழிவா?
❐



பக்கத்தில் யாரது?
பாரதிதானே
பாஞ்சாலி மீட்காத
பாமரரை என்னவென்றீர்?
நெட்டை மரங்கள் என்றீர்
மரங்களென்றால் அவ்வளவு கேவலமா?
❐
மரம்
சிருஷ்டியில் ஒரு சித்திரம்
பூமியின் ஆச்சரியக்குறி
நினைக்க நினைக்க
நெஞ்சூறும் அனுபவம்

விண்மீனுக்குத் தூண்டில்போடும்
கிளைகள்
சிரிப்பை ஊற்றிவைத்த
இலைகள்
உயிர் ஒழுகும்
மலர்கள்
மனிதன் தரா ஞானம்
மரம் தரும் எனக்கு
❐
மனிதன் தோன்றுமுன்
மரம் தோன்றிற்று
மரம் நமக்கண்ணன்
அண்ணனைப் பழிக்காதீர்
❐
மனித ஆயுள்
குமிழிக்குள் கட்டிய கூடாரம்
மரம் அப்படியா...?

வளரும் உயிர்களில்
ஆயுள் அதிகம் கொண்டது
அதுவேதான்
❐
மனித வளர்ச்சிக்கு
முப்பது வந்தால்
முற்றுப்புள்ளி
மரம்
இருக்கும்வரை பூப்பூக்கும்
இறக்கும்வரை காய்காய்க்கும்
❐
வெட்டி நட்டால்
கிளை மரமாகுமே
வெட்டி நட்டால்
கரம் உடம்பாகுமா?

மரத்தை அறுத்தால்
ஆண்டு வளையம்
வயது சொல்லும்
மனிதனை அறுத்தால்
உயிரின் செலவைத்தான்
உறுப்பு சொல்லும்

மரத்திற்கும் வழுக்கைவிழும்
மறுபடி முளைக்கும்
நமக்கோ
உயிர் பிரிந்தாலும்
மயிர் உதிர்ந்தாலும்
ஒன்றென்றறிக

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கேபோய்ச்
சலவை செய்வது?

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கேபோய்
மனுச் செய்வது?

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி?

பறவைக்கும் விலங்குக்கும்
மரம்தரும் உத்தரவாதம்
மனிதர்நாம தருவோமா.

மனிதனின் முதல் நண்பன்
மரம்

மரத்தின் முதல் எதிரி
மனிதன்

ஆயுதங்களை மனிதன்
அதிகம் பிரயோகித்தது
மரங்களின் மீதுதான்

உண்ணக்கனி-ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து-உணர்வுக்கு விருந்து
அடையக்குடில்-அடைக்கக் கதவு
அழகு வேலி-ஆடத்தூளி
தடவத் தைலம்-தாளிக்க எண்ணெய
எழுதக் காகிதம்-எரிக்க விறகு

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்!

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்!

பிறந்தோம்
தொட்டில்
மரத்தின் உபயம்

நடந்தோம்
நடைவண்டி
மரத்தின் உபயம்

எழுதினோம்
பென்சில் - பலகை
மரத்தின் உபயம்

மணந்தோம்
மாலை சந்தனம்
மரத்தின் உபயம்

புணர்ந்தோம்
கட்டில் என்பது
மரத்தின் உபயம்

துயின்றோம்
தலையணைப் பஞ்சு
மரத்தின் உபயம்

நடந்தோம்
பாதுகை ரப்பர்
மரத்தின் உபயம்

இறந்தோம்
சவப்பெட்டி பாடை
மரத்தின் உபயம்

எரிந்தோம்
கட்டை விறகு
மரத்தின் உபயம்

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்!

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்!

மனிதா

மனிதனாக வேண்டுமா?
மரத்திடம் வா.

ஒவ்வொரு மரமும்
போதிமரம்.

"இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல"
என்ற நூலிலிருந்து.
வெளியீடு : தூர்யா இலக்கிய வெளியீடு
4வது குறுக்குத் தெரு, சென்னை-24



# மரம் வளர்ப்பும் அதனால் ஏற்படும் பயன்களும்

"எந்த வகை மரங்களுக்கு ஊறு விளைவித்தாலும் அபராதம் விதிக்க வேண்டும். அந்த மரம் பயன்படும் தன்மைக்கு ஏற்ப அபராதம் அதிகரித்து இருக்க வேண்டும். இதுவே விதியாகும். ஒவ்வொரு வகை மரமும் ஒவ்வொரு வகை பயன் உள்ளதாகும்".

*- மனுதர்ம சாஸ்திரம்*

ஆதி மனிதன் விலங்குகளைப் பழக்கப்படுத்தி விவசாயத்தை விரிவாக்கம் செய்யும் பொழுதே காடுகள் அழியத் தொடங்கிவிட்டன. மேலும் மனிதன் "நாகரீகம்" ஆனவுடன் "வளர்ச்சி" என்ற பெயரில் லாப நோக்கத்திற்காக வனங்கள் அழிக்கப்பட்டு வந்தன.



வனங்கள் என்பது மரங்களோடு மட்டுமல்லாமல் காளான்கள், செடி கொடிகள் மூலிகைகள் போன்ற பல்லுயிர்களும் செறிந்த அமைப்பாகும். வனப் பிரதேசத்தின் சீரழிவைச் சீரமைக்க முடியாது என்று தெரிந்திருந்தும் வனங்கள் அழிவதைத் தடுக்க இயலாதது வருந்தத் தக்கதாகும்.

பண்டைய நாட்களில் பரந்து விரிந்துள்ள ஓர் ஆலமரத்தின் அல்லது அரச மரத்தின் அல்லது மரங்கள் அடர்ந்த நிழலார்ந்த தோப்புகளின் அடியில்தான் கிராமப் பஞ்சாயத்தும், கிராமச் சந்தைகளும் திருவிழாக்களும் நடைபெற்றன. கிராமக் குல தெய்வங்களான ஐயனார், பிடாரி போன்ற தெய்வங்கள் கிராமக் கோடியில் ஏதாவது ஒரு தோப்பில்தான் கொலு வீற்றிருந்தன. நாளடைவில் நாகரிக வளர்ச்சி காரணமாகச் சாலைவசதிகள், கட்டுப்பாடற்ற நகர்மயமாக்குதல், எரிவிறகுத் தேவைகள், தொழிற்சாலை மயமாக்கல் போன்றவற்றால் மரங்கள் வெட்டப்பட்டுக் கட்டடங்களாகவும், சாலைகளாகவும் கோயில்களாகவும் இன்னபிற தேவைகளாகவும் மாற்றப்பட்டு மனிதச் சமுதாயத்திற்கு உற்ற துணையாக இருந்துவரும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய தினம் மரங்கள் பணம் காய்க்கும் பொருளாக விளம்பரம் செய்யப்பட்டு தனியார் நிறுவனங்களால் பொதுமக்களைக் கவர்ந்திழுக்கும் பொருளாக மாற்றப்பட்டு ஆங்காங்கே ஓரினப் பயிர்கள் தோட்டங்களாக உருவெடுத்து வருகின்றன. இவற்றில் பொதுமக்கள் முதலீடு செய்யுமுன் அந்நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் நன்கு அறிந்துகொண்டு அதன்பிறகு முதலீடு செய்வது புத்திசாலித்தனமாகும். மேலும் மரங்கள் மீது முதலீடு செய்ய நிறுவனங்களை நாடுவதைத் தவிர்த்து தனிநபர் மரங்களை வீடுகளிலும் விவசாய நிலங்களிலும் நட்டுப் பயன்பெறுவது சாலச்சிறந்தது.

நாட்டின் இயற்கை அமைப்பைக் கவினுறு பூம்பொழிலாகவும், நிழல் மரச் சோலைகளாகவும் மாற்றும் முயற்சியாக அன்றைய இந்தியப் பேரரசின் விவசாய அமைச்சர் திரு.கே.எம். முன்ஷி அவர்களால் 1950-ஆம் ஆண்டு மரம் நடும் விழா அல்லது வன மகோத்சவம் தேசியப் பெருவிழாவாகத் தொடங்கப்பட்டு 47 ஆண்டுகளுக்குப் பிறகும், நாம் மரங்கள் அழிக்கப்பட்டு வரும் வேகத்திற்கு ஈடாக மரக்கன்றுகளை நட்டபாடில்லை. பொதுமக்கள் விழிப்புணர்வு கொண்டு மரம் நடும் இயக்கத்தைப் பேரியக்கமாகவும், மக்கள் தொண்டாகவும் கருதி வருங்காலச் சந்ததியினர் வளமுடன் வாழ வழிசெய்ய வேண்டும்.

இந்தியாவின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்கக் குறைந்தபட்சம் 33% மரங்களால் நிலப்பரப்பு மூடப்பட வேண்டும் என சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஆனால் தற்பொழுது 23% நிலப்பரப்பு மட்டுமே வனங்களாகவும் மரங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. அதிலும் 14.4% நிலப்பரப்பு மட்டுமே அடர்ந்த காடுகளும் மரங்களும் உள்ளடக்கிய பகுதியாகும் என விண்கோள் மூலம் எடுக்கப்பட்டு படங்களின் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் தமிழகத்தில் 17% நிலப்பரப்பு மட்டுமே வனங்களாகும். தமிழகத்தில் இயற்கைக் காடுகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் பெரும்பகுதி உள்ளன. இயற்கை வனப்பகுதிகளை நீக்கி எஞ்சி உள்ள சமவெளிப் பகுதிகளில் மரங்களைப் பெருமளவில் நட்டால்தான் 33% குறியீட்டை நாம் அடைய இயலும். சமவெளியில் மரங்களை நடும்பொழுது நமது தேவை, சுற்றுச்சூழல் சமநிலை, வருங்காலச் சேமிப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இயற்கை வனங்களில் காணப்படும் பல்லுயிர்கள் செறிந்த அமைப்பாகச் சமவெளிகளை மாற்றவேண்டும்.

---

திரு **சி.கே. ஸ்ரீதரன்,** இ.வ.ப.,
திரு **ப.அ. மணி,** இ.வ.ப.,

ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு, ஏலகிரி போன்ற கோடை வாசஸ்தலங்கள் சுற்றுலா அபிவிருத்தி என்ற பெயரில் கான்கிரிட் வனங்களாக மாறிவருவது வருந்தத்தக்கதாகும். கொல்லிமலை போன்ற சிறிய மலைகளில் அணைகள் கட்டுதல் என்ற பெயரில் அரிய மூலிகைகள் அழிந்துவிடும் அபாயத்தில் உள்ளன. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளில் வறண்ட காற்றுடன் கூடிய மண் மழையால் விலை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே பாலைவனங்கள் பரவுவதைத் தடுக்கவும், நிலத்தடி நீர் குறைவதைத் தடுக்கவும் மரங்களை அதிக அளவில் நட்டு மழைவளத்தைப் பெருக்கலாம்.

மரங்கள் மூலம் வருமானம் கிடைப்பதுடன் அவை ''இயற்கை'' வங்கியில் ''வைப்பு நிதியாக'' விளங்குகின்றன. மேலும் மரங்கள் நடுவது பூமித்தாய்க்கு நாம் செய்யும் உயர்ந்த அஞ்சலியாகும். மரங்களே உண்மையான யோகிகளாகும். மரங்களே தன்னலமற்ற பணிக்கு அடையாளங்களாகவும் விளங்குகின்றன.

ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தைக் கணக்கிட அந்த நாட்டில் எந்த அளவு வெட்டுமரம் பயன்படுகிறது என்பதும் ஓர் அளவுகோளாகக் கொள்ளப்படுகிறது. உலகில் தனி நபர் ஒருவருக்கு ஜப்பான் நாடு 0.38 க.மீ., பிரான்ஸ் 0.45 க.மீ., பிரிட்டன் 0.53 க.மீ, அமெரிக்கா 0.80 க.மீ., ஆஸ்திரேலியா 2.14 க.மீ., கனடா 4.04 க.மீ., இந்தியா 0.04 க.மீ. என்ற அளவில் வெட்டுமரங்களைப் பயன்படுத்துகிறது. இந்தியாவில் தனியார் பயன்படுத்தும் வெட்டுமரத்தில் 70% விறகாக இருக்கிறது. முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் மோசமான நிலைமையாகும். போதிய அளவு விறகு கிடைக்காததால் இந்திய கிராமிய மக்கள் மாட்டுச் சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் ஆண்டுதோறும் 8 கோடியே 10 லட்சம் டன் அளவு சாணம் எரிபொருளாக எரிக்கப்படுகிறது.

இதனால் வயல்களில் எருவாகப் பயன்படும் உரம் வீணடிக்கப்படுவதுடன் உணவு உற்பத்தி குறையவும், யூரியா போன்ற இரசாயன உரங்கள் அதற்கு ஈடாகப் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. பெருமளவு உரங்கள் இறக்குமதியால் நாட்டின் அந்நியச் செலாவணி வீணாகிறது.

தென் மாநிலங்களில் குறைந்த வனப்பரப்பை உடையது தமிழகம் தான். இதனால் கடும் வறட்சியை நமது மாநிலம் அடிக்கடி சந்திக்க நேரிடுகிறது. அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் வனப்பரப்பு அதிக அளவில் உள்ளதால் அங்கு 50 ஆண்டுகட்கு ஒருமுறை மட்டும் வறட்சி தாக்குகிறது. மேலும் மரங்களினால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் மழையினால் ஏற்படும் நீரோட்டத்தால் மண் அரிமானம், மண்சரிவு இல்லாமல் பாதுகாக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் 300 மில்லியன் கி.மீ.க்கு மேலாக மரம் எரிபொருளாகப் பயன்படுகிறது. இதில் பெரும்பகுதி வனங்களிலிருந்து பெறப்படுவதால் வனம் சீரழிந்து விடுகிறது. இதனைச் சரிசெய்ய இயற்கை வனத்திற்கு வெளியே எரிமரங்கள் உற்பத்தி செய்வதுடன், மாற்று எரிசக்தி வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

பூமிக்கோளத்தை, குளோரோ-புளோரோ கார்பன் போன்ற மாசு வாயுக்கள் விண்வெளி ஓசோன் படலத்தில் ஏற்படுத்திய ஓட்டையால் புற ஊதா கதிர்களின் தாக்குதலினின்று காப்பாற்ற, மரங்கள் நிறைந்த வனங்களில் மட்டுமேதான் முடியும், மரங்களை வெட்டுவதால், நச்சுக்காற்றுகள் பூமியை வெப்பமடையச் செய்வதுடன் பசுமை அகவிளைவை (Green House Effect) உருவாக்கி, அமில மழையை பூமியில் பெய்யச் செய்து உயிரினங்களுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்துகின்றது. இதனைச் சரிசெய்ய பசுமை நிறைந்த வனங்களாலும் மரங்களாலும் தான் முடியும்.

தமிழகத்தின் மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட, ஒளிமயமான எதிர்காலத்திற்கும் ஒவ்வொரு குடிமகனும் தம்மால் இயன்ற மரக்கன்றுகளை நட்டு பாரதி கண்ட வலிமையான பாரதத்தை உருவாக்குவோம்!

*"பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா! - உன்*
*பச்சை நிறம் தோன்றுதையா நந்தலாலா!"*

*- பாரதியார்*

ஒரு மரத்தை நட்டு வளர்க்கும்போது நீங்கள் மரத்தை மட்டும் வளர்க்கவில்லை.

| | | |
|---|---|---|
| நீங்கள் | உணவை | வளர்க்கிறீர்கள் |
| " | உடையை | வளர்க்கிறீர்கள் |
| " | வீட்டை | வளர்க்கிறீர்கள் |
| " | அறிவை | வளர்க்கிறீர்கள் |
| " | ஆரோக்கியத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | வேலைவாய்ப்பை | வளர்க்கிறீர்கள் |
| " | சேமிப்பை | வளர்க்கிறீர்கள் |
| " | எரிபொருளை | வளர்க்கிறீர்கள் |
| " | கால்நடைகளை | வளர்க்கிறீர்கள் |
| " | தொழிற்சாலையை | வளர்க்கிறீர்கள் |
| " | மண்வளத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | நீர்வளத்தை | வளர்க்கிறீர்கள் |
| " | வருவாயை | வளர்க்கிறீர்கள் |

நீங்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையை வளர்க்கிறீர்கள்!

இதைவிடச் சிறந்த பணி - மனதிற்கு நிறைவு தரும் பணி எதுவும் இல்லை! ★



# அது ஏன்?

- கவிஞர் வாலி

மரங்கள்
தமக்குள்
முனகிக்கொண்டன
இந்த மனிதர்கள்
நம்மைக் கொண்டு
பல
சிலுவைகளைச்
செய்து விடுகிறார்கள்
ஆனால்
தம்மைக் கொண்டு
அவர்களால்
இன்னமும்
ஓர்
ஏசுவைத்
தயாரிக்க
இயலவில்லையே.
அது ஏன்?



"பொய்க்கால் குதிரைகள்"
என்ற நூலிலிருந்து
வெளியீடு : கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன் சாலை,
சென்னை - 17.

# இலக்கியத்தில் மரங்கள்



வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி
யாரஃது அறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!

- குறுந்தொகை.

பூத்தாலும் காயா மரமுமுள; மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் - பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா துணர்வு.

- பழமொழி நானூறு.

வளையும்வேய் நிமிரும்; வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில்!

- மனோன்மணியம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்!

- திருமந்திரம்.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் பாழ்படும் - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு!

- ஔவையார்.

கானரணும் மலையரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தான்அரணம் உடைத்தென்று கருதாது
வருவதும்அத் தண்டு போலும்!

- கலிங்கத்துப்பரணி.

கட்டி யணைத்திடும் பெண்டிரும்
மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல்
சரீரத்தை விழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார்
மயானம் குறுகியப்பால்
எட்டி அடிவைப்ப ரோஇறை
வாகச்சி ஏகம்பனே!

- பட்டினத்தார்.

நாக்கு உணருதின்னு நடுக்காடு போனாலும் - நீங்க
நாக்கிலிடும் பச்சைத்தண்ணி-எனக்கு
நடுக்காடு தீர்த்தமல்லோ!
பல்லு உணருதின்னு பழனிமலை போனாலும் - நீங்க
பல்லிலிடும் பச்சைத்தண்ணி
பழனிமலைத் தீர்த்தமல்லோ!

- நாட்டுப்புறப் பாடல்

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ வகையறியேன்!...

- வடலூரார்

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்!

-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



## எச்சம்

ஒரு வாகன உற்பத்தியாளன்
பூமியைப் பிளப்பவன்
காகிதத் தயாரிப்பாளன்
பாறை உடைப்பவன்
கசாப்பு வெட்டுபவன்
இரும்பு இளக்குபவன்
மீன் பதப்படுத்துபவன்
ஆகியோரின் கனவுகள்
இயற்கையின் கனவை விட
'மாற்றுக்' குறைந்தது
என்று யார் கூறுவது?

"நாங்கள் இல்லாமல் நீங்கள் வாழ இயலாது"
அவர்கள் இறுமாப்புடன் கூறுகின்றனர்.
"உங்களோடு சேர்ந்து வாழ்வதும் முடியாது"
அமைதியைக் கிழித்துக்கொண்டு வருகிறது பதில்.

உலகத்தின் வளத்தினிடையே
மௌனமாக
பஞ்சம் கால்நீட்டிப் படுத்திருக்கிறது.
ஒட்டி உலர்ந்த குழந்தையின் பசிக்குரல் போல
அது தீனமாக ஒலிக்காதுதான்.
ஆனால் அதற்காக அதன் கொடூரத்தைக்
குறைத்து மதிப்பிட்டு விட
முடியாது.

ஒரு நாள்
அது விசுவரூபமெடுக்கும்.
உலகம் முழுவதையும் தன் காலடியில் போட்டு
நசுக்கும்
குரூரமாகச் சிரிக்கும்.

சுரங்கங்கள் சுரண்டி முடிக்கப்பட்டிருக்கும்போது,
காட்டுமரங்களின் அடித்தண்டுகள்
கல்லறைக் கற்களாக மாறி இருக்கும்போது,
கடைசிப் புள்ளிமானும் ஒருஜோடிக் காலணிகளாக
உருமாறி இருக்கும்போது,
செத்த மண்ணில் பூவின் விதைக்காக
ஒரு சிட்டுக்குருவி அலைந்து தவிக்கும்போது,
ஓங்கி வீசும் புழுதிக் காற்று
நிலத்தை மூடி விழுங்கிக் கொண்டிருக்கும்போது,
அந்தப் பச்சை ஏரியின் குழம்பிய சேறு
கடைசிக் கொக்கையும் பிடித்திழுத்துச் சுருட்டிக்
கொள்ளும்போது-

இயற்கையை விட மனிதன்
"மாற்றுக்" குறைவாகவே கனவுகளைக் கண்டு
கொண்டிருந்தான்
என்றுகூற யார் மிஞ்சி இருப்பார்?

## இயற்கை அன்னையை அங்கவீனப்படுத்தும் இழி செயல் தொடரலாமா?

மனிதனுக்கு எதுவுமே போதுமானதாக
இருக்கவில்லை.
இரும்பை உருக்கிய உலைகள்
மரத்தை அறுத்த ஆலைகள்
எண்ணை வடித்த இயந்திரங்கள்
எதிரியைக் கொன்ற துப்பாக்கிகள்
மீன்களைப் பிடித்த வலைகள்
எல்லாமே
பெரிதாக இருக்க ஆசைப்பட்டான்.
அவன் கற்பனைக்கு மிஞ்சிப் பெரியதாய்.
அவனது இந்த 'லட்சியத்தி' ற்குக் குறுக்கே வரும்
எதையும்
அழித்து நொறுக்கி நிர்மூலமாக்க அவன்
தயங்கவேயில்லை.

ஆனால்

பிரபஞ்ச விதிகள் எளிமையானவை.
மீறுவோர் அதற்கான விலைகளைக் கொடுத்தே
ஆகவேண்டும்.
இயற்கையைப் பொறுத்தவரை
டினோசாரும், மனிதனும் ஒன்றுதான்.

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்வும்
ஏனைய மரம், செடி, கொடி மற்றும் பிற
உயிரினங்களோடு பின்னணிப் பிணைந்துள்ளது.
ஒன்றின் அழிவில் மற்றது வளர முடியாது.
மனிதன் மீன் இனத்தையே ஒட்டுமொத்தமாக
அழிக்கும்போது
அங்கு மீன் இனம் மட்டும் பாதிக்கப்படுவதில்லை;
ஏனைய உயிரினங்களும் மெல்லச் சாகின்றன.
மனிதன் காடுகளை சகட்டுமேனிக்கு அழித்து
நிர்மூலமாக்கும்போது
அங்கு மரங்கள் மட்டும் அழிவதில்லை;
மற்ற உயிரினங்களும் கடுமையாகப்
பாதிக்கப்படுகின்றன.
இயற்கை அன்னையை அங்கவீனப்படுத்தும் இந்த
இழிசெயல்
இன்னும் எவ்வளவு காலம் தொடரும்?
நம் தலைமுறை கடைசியா?
நமக்கு அடுத்த தலைமுறை கடைசியா?

216440
216440



## பூவுலகே!

நீ விடைபெறப் போகிறாயா?
சாகும் தருவாயில் இயற்கை அன்னை.
வளர்ச்சிப் பொன்னாடையில் குதறப்பட்ட பூமி
வெளிச்ச புள்ளிகளுக்கிடையே எமனின் அழைப்பு
நலிந்த குடிசைகளிலிருந்து தீன ஒலங்கள்
சுற்றுலாப் பயணிகள் இறைத்த வெள்ளி நாணயங்கள்
மாசுப்பட்ட நீரால் செத்துக் கரை ஒதுங்கும் சீல்கள்
இன்றைய உலகின் கண்ணாடியாய்
"இயற்கை அள்ள அள்ளக் குறையாது"
என்ற தத்துவத்தைக் கேலி செய்யும்
நடைமுறையாய் நீ!

ஆனால் முன்பு அப்படி இல்லை.
பிரம்மாண்டமான காட்டெருமை,
சீறிப்பாயும் புலி,
கோரப்பல்லுடைய ஓநாய்
ஆளுயரக் கழுகு
ஆகியவை
இன்னும் வலிமையாய்
ஏராளமாய்ப் பெருகி
பூவுலகில் அலைந்து கொண்டிருந்தன.
அவைகள்
பருவகாலங்கள் தழுவி அனுப்பிய
மலர்மரங்கள் வாசனை தூவி அனுப்பிய
காற்றை மட்டும் சுவாசித்தன.

அப்பொழுது
எதுவும் 'எடுக்க'ப்படவில்லை
எல்லாம் 'கொடுக்க'ப்பட்டது
பூமி மரத்திற்குக் கொடுத்தது.
மரம் பூமிக்குக் கொடுத்தது.
வாழ்வின் இழைகளைத் தெள்ளிய நீர் நனைத்துச்
சென்றது.
பெய்த மழை தெளிவாய் இருந்தது.
வீசிய காற்றும் "என்னைத் தூய்மைப்படுத்து" என்று
கெஞ்சிக் கொண்டிருக்கவில்லை
அமைதிதான் இருந்த ஒரே இசை
மழைதான் விழுந்த ஒரே கண்ணீர்
யாருக்கும் தீங்கு விளைவிக்காத விலங்கினங்கள்
முதலில் வந்தன.

ஆனால் முதல் என்பது முடிவானதல்ல.

-*"இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை"*
*என்ற நூலிலிருந்து...*
*வெளியீடு : பூவுலகின் நண்பர்கள்*
*306/6, பெல்லி ஏரியா,*
*அண்ணாநகர், சென்னை-40.*



## மரங்கள்

- கவிஞர் மு. மேத்தா



மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள்!

நாங்கள்-
சிறகுத் துடிப்புகள்
செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்!

எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்!
அதனால்தான்...
தராதரம் அறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுச் செல்கின்றன!

நாங்கள்
சூடு படுகின்ற
சொந்தக்காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண்கொற்றக் குடைகள்!
மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்!

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் விசிறிகள்!

❑

மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள்...
அதனால்தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டி வைக்கிறார்கள்!

❑

நாங்கள் -
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங்காரர்கள்!

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது!

இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம்
உலராத எச்சிலைப்
பனித்துளி யாக்கிப்
பரிசளிக்கின்றோம்!

❑

தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்;
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக்காரர்கள்!

❑

சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்
ஆதலால்
காலந்தோறும்
ஒரே உடையை
உடுத்தியிருக்கிறோம்!

காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது.

எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ
மாற்றவோ வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம்.

❑

வெட்டி யெடுத்தால்
விறகாவோம்...வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்!

நாங்கள்
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்!

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள்!

❑

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!

-*"கண்ணீர்ப் பூக்கள்"*
*என்ற நூலிலிருந்து*
*வெளியீடு : திருமகள் நிலையம்*
*55, வெங்கட் நாராயணா தெரு,*
*சென்னை-17.*

# ஆறில் ஒரு பங்கு

- மகாகவி பாரதியார்

## முகவுரை

*ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது; வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.*

*இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத்தன்மையும் கொடுக்கும். "நாந்ய; பந்தா வர்த்ததே அயநாய" வேறு வழியில்லை.*

*இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.*

*- ஆசிரியன்.*

*அத்தியாயம் - 1*

மீனாம்பாள் வீணை வாசிப்பதிலே ஸரஸ்வதிக்கு நிகரானவள். புரசை வாக்கத்திலுள்ள எங்கள் வீட்டிற்கு அவள் வரும் சமயங்களிலெல்லாம் மேல் மாடத்து அறையை அவளுடைய உபயோகத்துக்காகக் காலி செய்து விட்டு விடுவது வழக்கம். நிலாக் காலங்களில் இரவு எட்டு மணிக்கெல்லாம் போஜனம் முடிந்துவிடும். ஒன்பது மணி முதல் நடுநிசி வரையில் அவள் தனது அறையில் இருந்து வீணை வாசித்துக் கொண்டிருப்பாள். அறைக்கு அடுத்த வெளிப் புறத்திலே பந்தரில், அவளுடைய தகப்பனார் ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு கட்டிலின்மீது படுத்துக்கொண்டு, சிறிது நேரம் வீணையைக் கேட்டுக் கொண்டிருந்து, சீக்கிரத்திலே குறட்டைவிட்டு நித்திரை செய்யத் தொடங்கிவிடுவார். ஆனால், மகாராஜன் குறட்டைச் சத்தத்தால் வீணைச் சத்தம் கேளாதபடி செய்துவிடமாட்டார்; இலேசான குறட்டைதான். வெளிமுற்றத்தின் ஓர் ஓரத்திலே நான் மட்டும் எனது "பிரம்மச்சாரி" படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்திருப்பேன். வீணை நாதம் முடிவுறும் வரை, என் கண்ணிமைகளைப் புளியம் பசை போட்டு ஒட்டினாலும் ஒட்டமாட்டா. மீனாம்பாளுடன் அறையிலே படுத்துக் கொள்ளும் வழக்கமுடைய எனது தங்கை இரத்தினமும் சீக்கிரம் தூங்கிப்போய் விடுவாள். கீழே, எனது தாயார், தமையனார், அவரது மனைவி முதலிய அனைவரும் தூங்கிவிடுவார்கள். எனது தமையனார் மனைவி, வயிற்றிலே சோற்றைப் போட்டுக் கைகழுவிக் கொண்டிருக்கும்போதே, குறட்டை விட்டுக் கொண்டிருப்பாள். இடையிடையே குழந்தைகளின் அழுகைச் சத்தம் மட்டிலும் கேட்கும். தமையனாருக்குக் கோட்டையில் ரெவினியூ போர்டு ஆபீஸிலே உத்தியோகம். அவருக்கு நான்கு வருடங்களுக்கொரு முறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் "ப்ரமோஷன்".

வஸந்த காலம்; நிலாப்பொழுது; நள்ளிரவு நேரம், புரசைவாக்கம் முழுதும் நித்திரையிலிருந்தது. இரண்டு ஜீவன்கள்தான் விழித்து இருந்தன. நான் ஒன்று; மற்றொன்று அவள்.

கந்தர்வ ஸ்திரீகள் "வீணை" வாசிப்பதுபோல மீனாம்பாள் வாசிப்பாள். பார்ப்பதற்கும் கந்தர்வ ஸ்திரீயைப் போலவே இருப்பாள். அவளுக்கு வயது பதினாறு இருக்கும். கதையை வளர்த்துக்கொண்டு ஏன் போகவேண்டும்? மன்மதன் தனது அம்பொன்றின் முனையிலே என் பிராணனைக் குத்தி எடுத்துக்கொண்டு போய் அவள் வசம் ஒப்புவித்து விட்டான். அடடா! அவளது இசை, எவ்வளவு நேரம் கேட்ட போதிலும், தெவிட்டாது. தினந்தோறும் புதுமை தோன்றும், அவள் முகத்தில் தோன்றுவது போல. அவளுடைய தந்தையாகிய ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு எனது தாயாருக்கு ஒன்றுவிட்ட அண்ணன். தஞ்சாவூர் முதலிய பல ஜில்லாக்களில் நெடுங்காலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து ஸர்க்காருக்கு நன்றாக உழைத்ததினால் "ராவ் பகதூர்" என்ற பட்டம் பெற்றவர். சுதேசியம் தொடங்கும் முன்பாகவே இவர் வேலையிலிருந்து விலகி விட்டார். இதை எதன் பொருட்டாகச் சொல்லுகிறேன் என்றால் அவருக்குக் கிடைத்த பட்டம் வெறுமே சில சுதேசியத் தலைவர்கள், மீது "ரிப்போர்ட்" எழுதிக் கொடுத்துச் சுலபமாகச் சம்பாதித்த பட்டமன்று; யதார்த்தத்திலேயே திறமையுடன் உழைத்ததினாற் கிடைத்த பட்டம். குழந்தை முதலாகவே மீனாம்பாளை எனக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து. அந்தக் கருத்து நிறைவேறுவதற்கு நேர்ந்த விக்கினங்கள் பல. அவ்விக்கினங்களில் பெரும்பான்மையானவை என்னாலேயே உண்டாயின.

நான் சுமார் பதினாறு பிராயம்வரை சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். "வேத கால முதலாக இன்று வரை பாரத தேசத்திலுள்ள ரிஷிகள் எல்லோரும் ஒன்றும் தெரியாத மூடர்கள், அர்ஜுனனும், காளிதாஸனும், சங்கராசாரியாரும், சிவாஜியும், ராமதாஸரும், கபீர்தாஸரும், அதற்கு முன்னும் பின்னும் நேற்றுவரையிலிருந்த பாரத தேசத்தார் அனைவரும் நெஞ்சில் வளர்த்து வந்த பக்திகளெல்லாம் இழிந்த அநாகரீகமான "மூடபக்திகள்" என்பது முதலான ஆங்கிலேய "சத்தியங்கள்" எல்லாம் என் உள்ளத்திலே குடிபுகுந்து விட்டன. ஆனால், கிறிஸ்துவப் பாதிரி ஒரு விநோதமான ஜந்து. ஹிந்து மார்க்கத்திலும், ஹிந்து நாகரீகத்திலும் பக்தி செலுத்துவது பேதைமை என்று ருஜுப்படுத்திக் கொண்டு வரும்போதே, அவர் கொண்டாடும் கிறிஸ்து மார்க்கமும் மூடபக்தி என்று வாலிபர் மனதில் படும்படி ஏற்பாடு செய்துவிடுகிறார். மத விஷயங்களைப் பற்றி விஸ்தாரமான விவகாரங்கள் எழுதி, படிப்பவர்களுக்கு நான் தலைநோவு உண்டாக்கப் போவதில்லை; *சுருக்கம் : நான் எனது பூர்வ மதாசாரங்களில் பற்று நீங்கி, "ஞான ஸ்நாநம்" பெறவில்லை; பிரம்ம ஸமாஜத்திலே சேர்ந்துகொண்டேன்.*

சிறிது காலத்திற்கு அப்பால், பட்டணத்தில் படிப்பை நிறுத்திவிட்டு, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போய், அங்கே பிரம்ம ஸமாஜத்தாரின் மார்க்க போதனை கற்பிக்கும் பாடசாலையொன்றிலே சேர்ந்து சில மாதங்கள் படித்தேன். பிரம்ம ஸமாஜத்தாரின் "உபதேசி"களில் ஒருவனாக வெளியேற வேண்டும் என்பது என்னுடையநோக்கம். அப்பால் அங்கிருந்து பஞ்சாப், ஹிந்து ஸ்தானம் முதலிய பல பிரதேசங்களில் யாத்திரை செய்து கொண்டு, கடைசியாகச் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தேன். நான் ஹிந்து மார்க்கத்தைவிட்டு நீங்கியதாக எண்ணி, எனது ஜாதியார் என்னைப் பல விதங்களில் இம்சை செய்தார்கள். இந்த இம்சைகளினால் எனது சித்தவுறுதி நாளுக்கு நாள் பலம் அடைந்ததேயல்லாமல், எனக்கு மனச்சோர்வு உண்டாகவில்லை.

எனது தகப்பனார்- இவர் பெயர் துபாஷ் ராமசந்திர நாயுடு-வெளிவேஷ மாத்திரத்தில் சாதாரண ஜனங்களின் ஆசார விவகாரங்களை வைத்துக் கொண்டிருந்தார்; எனினும், உள்ளத்தில் பிரம்மஸமாஜப் பற்று உடையவர். ஆதலால், நான் வாஸ்தவமான பரமாத்ம பக்தியும், ஆத்ம விசுவாஸமும், எப்போதும் உபநிஷத்துக்கள் படிப்பதில் சிரத்தை கொண்டிருப்பது கண்டு, அவருக்கு அந்தரங்கத்தில் மிகுந்த உவகையுண்டாயிற்று. வெளி நடப்பில் என் மீது கோபம் பாராட்டுவது போலிருந்தாரேயன்றி, எனது பந்துக்கள் சொற்படி கேட்டு என்னைத் தொல்லைப்படுத்தவில்லை. ஸகல ஸௌகரியங்களும் எனக்கு முன்னைக் காட்டிலும் அதிகமாக நடக்கும்படி வீட்டில் ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

ஆனால், எனது தமையன் மாத்திரம் என்னிடம் எக்காரணம் பற்றியோ மிகுந்த வெறுப்பு பாராட்டினான். நான் தலையிலே பஞ்சாபிகளைப் போலப் பாகை கட்டிக் கொள்வது வழக்கம். "15" ரூபாய்க் குமாஸ்தாக்களுக்கென்று பிரத்தியேகமாக அழகு, அந்தம், ஆண்மை எதுவுமின்றி ஏற்பட்டிருக்கும் கும்பகோணத்துப் பாகை நான் கட்டிக் கொள்ளுவதில்லை. இதுகூடத் தமையனுக்குக் கோபம் உண்டாக்கும். "ராஜபுத்ருடு வீடு, தொங்க விதவா! தலலோ மகா ஆடம்பரமு பகடி வீடிகி!"



என்று எதெல்லாமோ சொல்லி ஓயாமல் திட்டிக் கொண்டிருப்பான். இப்படியிருக்க ஒருநாள் எனது தகப்பனார் திடீரென்று வாயுக்குத்தி இறந்து போய்விட்டார். அவருக்குப் பிரம்மஸமாஜ விதிப்படி கிரியைகள் நடத்த வேண்டும் என்று நான் சொன்னேன். எனது தமையன் சாதாரண ஆசாரங்களின்படிதான் நடத்தவேண்டும் என்றான். பிரமாத கலகங்கள் விளைந்து, நானூறு மத்தியஸ்தங்கள் நடந்த பிறகு, மசானத்தில் அவன் தனதிஷ்டப்படி கிரியைகள் முடித்த பின்பு நான் எனது கொள்கைப்படி பிரம்ம ஸமாஜ குரு ஒருவரை வைத்துக்கொண்டு கிரியைகள் செய்தேன். இதுவெல்லாம் எனது மாமா ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடுக்கு என்மீது மிகுந்த கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்துவிட்டது. ஆதலால், விவாகம் தடைப்பட்டுக்கொண்டே வந்தது. ஆனால், இறுதிவரை, என்னை எப்படியேனும் சீர்திருத்தி, எனக்கே தனது மகளைப் பாணிக்கிரஹணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது அவருடைய இச்சை.

வஸந்தகாலம், நிலாப்பொழுது, நள்ளிரவு நேரம். புரசைவாக்கம் முழுமையும் நித்திரையிலிருந்தது. விழித்திருந்த ஜீவன்கள் இரண்டே. ஒன்று நான்; மற்றொன்று அவள். இன்பமான காற்று வீசிக் கொண்டிருந்தது. மேல் மாடத்தில், மீனாம்பாளுடைய அறையிலிருந்து, முறைப்படி வீணைத் தொனி கேட்டது. ஆனால், வழக்கப்படி குறட்டை கேட்கவில்லை. ராவ்பகதூர் குறட்டை மாமா ஊரிலில்லை. வெளியே ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார். நான் நிலா முற்றத்தில் எனது கட்டிலின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தேன். என் உள்ளத்திலோ, இரண்டு எரிமலைகள், ஒன்றையொன்று சீறியெதிர்த்துப் போர் செய்து கொண்டிருந்தன. இவற்றுள்ளே, ஒன்று காதல்; மற்றொன்று-பின்பு தெரியவரும். வீணைத் தொனி திடீரென்று நின்றது. சிறிது நேரத்தில், எனது பின்புறத்தில் ஒரு ஆள் வந்து நிற்பது உணர்ந்து, திரும்பிப்பார்த்தேன். மீனாம்பாள்!



இப்பொழுதுதான் நாங்கள் புதியதாகத் தனியிடத்திலே சந்தித்திருக்கிறோமென்றும், அதனால் இங்கு நீண்டதோர் காதல் வர்ணனை எழுதப்படுமென்றும் படிப்பவர்கள் எதிர்பார்க்க வேண்டாம். இவ்விதமாக நாங்களிருவரும் பலமுறை சந்தித்திருக்கிறோம். மீனாம்பாள் மஞ்சத்தின் மீது உட்கார்ந்தாள்.

''மீனா! இன்று உன்னிடத்திலே ஒரு விசேஷம் சொல்லப்போகிறேன்'' என்றேன். ''எனக்கு அது இன்னதென்று ஏற்கனவே தெரியும்" என்றாள்.

"என்னது, சொல்லு ?"

''நீ பிரம்மச்சரிய சங்கற்பம் செய்து கொள்ளப்போகிறாய் என்ற விசேஷம்".

''ஏன் ? எதற்கு ? எப்படி ? உனக்கு யார் சொன்னார்கள் ?" என்று கேட்டேன்.

"வந்தே மாதரம்" என்றாள்.

மீனாம்பாளுடைய அறிவுக்கூர்மை எனக்கு முன்னமே தெரியுமாதலால், அவள் சொல்லியதிலிருந்து அதிக வியப்புண்டாகவில்லை.

அதன்பின், நான் அவளிடம் பின்வருமாறு கூறலாயினேன்: ''ஆம், பாரத தேசத்தை இப்போது பிரம்மசாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிக உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்து போய்விட்டது. இமயமலையிருந்த இடத்தில் முட்செடிகளும், விஷப்பூச்சிகளும் நிறைந்த ஒரு பாழுங்காடு இருப்பதுபோல் ஆய்விட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வௌவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதைப் பிரம்மசாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனாகவேனும் ராஜா ஸர் ஸவலை ராமசாமி முதலியார் மகனாகவேனும் பிறவாமல் நம் போன்ற சாதாரண குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்து கொண்டால், இந்தப் பஞ்ச'நாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப்போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பதுபோல, இந்த நரிக்கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தைச் சுமத்தும்போது, அவனுக்குக் கண் பிதுங்கிப் போய்விடுகிறது. அவனவனுடைய அற்பக் காரியங்கள் முடிவு பெறுவதே பகீரத ப்ரயத்தனம் ஆய்விடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள் ? பிரம்மச்சாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று. இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரம்மச்சரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன்.ஆனால்-

மீனா:- "ஆனால், நான் அதற்கு ஒரு சனியாக வந்து குறுக்கிட்டிருக்கிறேன் என்று சொல்லுகிறாய் ?"

''பார்த்தாயா, பார்த்தாயா! என்ன வார்த்தை பேசுகிறாய் ? நான் சொல்ல வந்ததைக் கேள். எனது புதிய சங்கற்பம் ஏற்படு முன்னதாகவே, என் உயிரை உனக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இப்போது எனது உயிருக்கு வேறொரு கடமை ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் உனது கட்டளையை எதிர்பார்த்திருக்கிறேன்'' என்றேன். அவள் ஏதோ மறுமொழி சொல்லப்போனாள். அதற்குள் வாயிற்புறத்தில் ஒரு வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

"நாயன்னா வந்துவிட்டார், நான் போகிறேன்" என்று சொல்லி ஒரு முத்தத்துடன் பிரிந்தாள்.

குறட்டை நாயுடு கதவை உடைத்து, உள்ளிருக்கும் குறட்டைகளை யெல்லாம் எழுப்பி, மேலே வந்து படுத்து அரை நாழிகைக்கெல்லாம் தமது தொழிலை ஆரம்பித்துவிட்டார். இரண்டு ஜீவன்கள் அன்றிரவு முழுதும் விழித்திருந்தன. ஒன்று நான்; அவள் மற்றொன்று.

## அத்தியாயம் - 2

மேல் அத்தியாயத்தின் இறுதியில் குறிக்கப்பட்ட செய்தி நிகழ்ந்ததற்கு அப்பால், சில மாதங்கள் கழிந்து போயின. இதற்கிடையே எங்களுடைய விவகாரத்திற் பல மாறுபாடுகள் உண்டாயிருந்தன. ''வந்தே மாதாம்'' மார்க்கத்தில் நான் பற்றுடையவன் என்பதை அறிந்த ராவ் பகதூர் எனக்குத் தமது கன்னிகையை மணஞ்செய்து கொடுப்பது" என்ற சிந்தனையை அறவே ஒழித்துவிட்டார். சில மாதங்களாக, அவர் தமது சாச்வத வாஸஸ்தானமாகிய தஞ்சாவூரிலிருந்து புரசைவாக்கத்துக்கு வருவதை முழுவதும் நிறுத்திவிட்டார். இதனிடையே, மீனாம்பாளுக்கு வேறு வரன்கள் தேடிக் கொண்டிருந்ததாகவும் பிரஸ்தாபம் ஏற்பட்டது. அவளிடமிருந்தும் யாதொரு கடிதமும் வரவில்லை. ஒருவேளை முழுதும் மறந்துபோய் விட்டாளா ? பெண்களே வஞ்சனையின் வடிவம் என்று சொல்லுகிறார்களே, அது மெய்தானா ? "பெண்ணெனப் படுவகேண்மோ, உள் நிறைவுடைய வல்ல, ஓராயிரமனத்தவாகும்'' என்று நான் சீவகசிந்தாமணியிலே படித்தபோது, அதை எழுதியவர் மீனாம்பாளைப் போன்ற ஸ்திரீயைக் கண்டு அவளுடைய காதலுக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பெறவில்லை போலும் என்று நினைத்தேனே. இப்போது, அந்த ஆசிரியருடைய கொள்கைதான் மெய்யாகி விட்டதா ? நான் இளமைக்குரிய அறிவின்மையால், அத்தனைப் பெருமை வாய்ந்த ஆசிரியரது கொள்கையைப் பிழையென்று கருதினேன் போலும்!

''அடா மூடா! உனக்கு ஏன் இதில் இவ்வளவு வருத்தம் ? நீயோ பிரம்மச்சரிய விரதத்திலே ஆயுளைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாள்தோறும் மேன்மேலும் வளர்த்து வருகின்றாய் ? மீனா மற்றொருவனை மணஞ்செய்து கொண்டால் உனக்கு எளிதுதானே ? நீயோ வேறொரு பெண் மீது இல்வாழ்க்கையில் மையல் கொள்ளப் போவதில்லை. இவளொருத்திதான் உனது விரதத்திற்கு இடையூறாக இருந்தாள். இவளும் வேறொருவனை மணஞ்செய்து கொண்டு அவன் மனைவியாய் விடுவாளாயின் உனது விரதம் நிர்விக்கினமாக நிறைவேறும். ஈசனன்றோ உனக்கு இங்ஙனம் நன்மையைக் கொண்டு விடுகிறான் ? இதில் ஏன் வருத்தமடைய வேண்டும் ?" என்று சில சமயங்களில் என்னுள்ளம் தனக்குத்தானே நன்மதி புகட்டும்.

மீண்டும், வேறொரு விதமான சிந்தை தோன்றும்:- ''அவள் நம்மை மறந்திருக்கவே மாட்டாள். மாமா சொற்படி கேட்டு அவள் வேறொருவனை மணஞ்செய்து கொள்ளவே மாட்டாள். எனது பிராணனோடு ஒன்றுபட்டவளாதலால், எனது நெஞ்சத்திலே ஜ்வலிக்கும் தர்மத்தில் தானும் ஈடுபட்டவளாகி அந்த தர்மத்திற்கு இடையூறு உண்டாகும் என்று அஞ்சி, எனக்கு ஒன்றும் எழுதாமலிருக்கிறாள். ஆமடி, மீனா! உன்னை நான் அறியேனா ? எதுவரினும் நீ என்னை மறப்பாயா ? அந்தக் கண்கள் "உன்னை மறக்க மாட்டேன்" என்று எத்தனை முறை என்னிடம் பிராமாணம் செய்து கொடுத்திருக்கின்றன! அந்தக் கண்கள்! அந்தக் கண்கள்! ஐயோ, இப்பொழுதுகூட என் முன்னே நிற்கின்றனவே! அவை பொய் சொல்லுமா ?"

அப்பால் ஒரு உள்ளம்... ''அடா! நல்ல துறவடா உன் துறவு! நல்ல பக்தியடா உன் பக்தி! நல்ல தர்மம்! நல்ல சிரத்தை! ஆரிய நாட்டை உத்தாரணம் செய்வதற்கு இப்படியன்றோ பிள்ளைகள் வேண்டும் ? பீஷ்மர் வாழ்ந்திருந்த தேசமல்லவா ? இப்பொழுது அதற்கு உன்னைப் போன்றவர்கள் இருந்து ஒளி கொடுக்கிறார்கள்! சீச்சி! நாய் மனமே! அமிருத வெள்ளத்தை விட்டு வெறும் எலும்பைத் தேடிப் போகிறாயா ? லோகோத்தாரணம் பெரிதா ? உனது புலனின்பம் பெரிதா ? தர்ம சேவை பெரிதா, ஸ்திரீ சேவை பெரிதா ? எதனைக் கைக்கொள்ளப் போகிறாய் சொல்லடா சொல் ?"

பிறகு வேறொரு சிந்தனை: - ''எப்படியும் அவளிடமிருந்து ஓர் உறுதி கிடைத்தால், அதுவே நமக்குப் பெரியதோர் பலமாயிருக்கும். நீ தர்ம பரிபாலனம் செய். என் பொருட்டாகத் தர்மத்தைக் கைவிடாதே. நான் மரணம் வரை உன்னையே மானஸிகத் தலைவனாகக் கொண்டு நோம்புகள் இழைத்துக் காலம் கழிப்பேன். ஸ்வர்க்கத்திலே நாம் இருவரும் சேர்ந்து வாழலாம் என்று அவள் உறுதி தருவாளானால், இந்த ஜன்மத்தில் ஜீவ்யம் வெகுசுலபாமாய் இருக்கும்''.

அப்பால் ''ஒரே அடியாக, இவளுக்கு இன்னொருவனுடன் விவாகம் நடந்து முடிந்துவிட்டது என்று செய்தி வருமானால், கவலை விட்டிருக்கும். பிறகு, இகத்தொடர் ஒன்றுமேயில்லாமல், தர்ம சேவையே தொழிலாக நின்றுவிடலாம்''.

பின் மற்றொரு சிந்தை:- "ஆ! அப்படி ஒரு செய்தி வருமானால் பின்பு உயிர் தரித்திருப்பதே அரிதாய்விடும். அவளுடைய அன்பு மாறிவிட்டது என்று தெரிந்தபின், இவ்வுலக வாழ்க்கை யுண்டோ ?"

அப்பால் பிறிதொரு சிந்தை: - அவள் அன்பு! மாதர்களுக்கு அன்பு என்றதோர் நிலையும் உண்டா ? வஞ்சனை, கோபம் இரண்டையும் திரட்டிப் பிரம்மன் ஸ்திரீகளைப் படைத்தான்.

இப்படி ஆயிர விதமான சிந்தனைகள் மாறி மாறித் தோன்றி எனது அறிவைக் கலக்கின. ஆன்ம வுறுதியில்லாதவனுடைய உள்ளம், குழம்பியதோர் கடலுக்கு ஒப்பாகும். இதனைப் படிக்கின்றவர், ஒரு கணம் சாக்ஷி போல் நின்று தமது உள்ளத்தினிடையே நிகழும் புரட்சிகளையும், கலகங்களையும், பார்ப்பாராயின், மிகுந்த வியப்பு உண்டாகும். மனித வாழ்க்கையிலே இத்தனைத் திகைப்புகள் ஏன் உண்டாகின்றன ?

"மறப்பும் நினைப்புமாய் நின்ற வஞ்ச மாயா மனத்தால் வளர்ந்தது தோழி"-

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் திடீரென்று எனது கையில் மீனாம்பாளின் கடிதமொன்று கிடைத்தது. அதனை இங்கு தருகின்றேன். அதைப் படித்துப் பார்த்த பொழுது என்னுள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்-

ஓம்.

தஞ்சாவூர்.

உடையாய்,

இக்கடிதம் எழுதத் தொடங்கும் போதே எனது நெஞ்சு பதறுகிறது. எனக்கு எப்படி எழுதுகிறது என்று தெரியவில்லை. ஐயோ இது என்னுடைய கடைசிக்கடிதம்! உன் முகத்தை நான் இனி இவ்வுலகில் பார்க்கப் போவதில்லை.

''நாயன்னா'' வருகிற தைமாதம் என்னை இவ்வூரில் புதிய இன்ஸ்பெக்டராக வந்திருக்கும் மன்னார் என்பவனுக்குப் பலியிட வேண்டுமென்று நிச்சயம் செய்துவிட்டார். கலியாணத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் தயாராகின்றன. உனது பெயரைக் கேட்டால், வேட்டை நாய் விழுவதுபோல் விழுந்து, காதால் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகள் சொல்லி நிந்திக்கிறார். நான் தப்பியோடி விடுவேன் என்று



நினைத்து என்னை வெளியேறாதபடி காவல் செய்து வைத்திருக்கிறார். நீ ஒரு வேளை இச்செய்தி கேட்டு இங்கு வருவாய் என்று கருதி, நீ வந்தால் வீட்டுக்கு வரமுடியாமல் செய்ய, இவரும் மன்னாரென்பவனும் சேர்ந்து நீசத்தனமான ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறார்கள். அவன் நாயன்னாவின் பணத்தின் மீது கண் வைத்து, இந்த விவாகத்தில் ஆசை மூண்டிருக்கிறான். என்னுள்ளத்திலே அவனிடம் மிகுந்த பகைமையும், அருவருப்பும் உள்ளனவென்றும், இப்படிப்பட்ட பெண்ணைப் பலவந்தமாகத் தாலி கட்டினால் அவனுக்கு வாழ்நாள் முழுதும் துக்கமிருக்குமேயல்லாது சுகமிருக்காது என்றும் சொல்லியனுப்பினேன். அதற்கு அந்த மிருகம், "எனக்கு அவளுடைய உள்ளத்தைப் பற்றி லக்ஷ்யமில்லை. அதைப் பின்னிட்டு சரிப்படுத்திக் கொள்வேன். முதலாவது, பணம் என்கையில் வந்து சேர்ந்தால், பிறகு அவள் ஓடிப்போய் அந்த ஜெயிலுக்குப்போகிற பயலுடன் சேர்ந்து கெட்டுத் திரிந்துவிட்டுப் பிறகு சமுத்திரத்தில் விழுந்து சாகட்டும்" என்று மறுமொழி கொடுத்தனுப்பிவிட்டது.

அநேக தினங்களாக எனக்கு இரவில் நித்திரை என்பதே கிடையாது. நேற்றிரவு படுக்கையின் மீது கண் மூடாமல் படுத்துப் புரண்டு கொண்டிருந்தேன். அப்போது கனவு போன்ற ஒரு தோற்றமுண்டா யிற்று. தூக்கமில்லாத போது, கனவு எப்படி வரும்? அஃது கனவு மில்லை, நினைவுமில்லை; ஏதோ ஒரு வகையான காட்சி. அதில் அதி பயங்கரமான ரூபத்துடன், இரத்தம் போன்ற சிவந்த விழிகளும் கரிய மேகம் போன்ற மேனியும், வெட்டுண்ட தலைகளின் மாலையும் கையில் சூலமுமாகக் காளிதேவி வந்து தோன்றினாள். நான் நடுங்கிப் போய், ''மாதா என்னைக் காத்தருள் செய்ய வேண்டும்" என்று கூறி வணங்கினேன். உடனே திடீரென்று அவளுடைய உருவம் மிக அழகியதாக மாறுபட்டது. அந்த ஸௌந்தர்யத்தை என்னால் வருணிக்க முடியாது. அவளுடைய



திருமுடியைச் சூழ்ந்து கோடி சூரியப் பிரகாசம் போன்ற தேஜோ மண்டலம் காணப்பட்டது. கண்கள் அருள்மழை பொழிந்தன. அப்போது தேவி எனக்கு அபயப் பிரதானம் புரிந்து பின்வருமாறு சொல்லலாயினள்! "குழந்தாய், உனது அத்தான் கோவிந்தராஜனை எனது சேவையின் பொருட்டாக எடுத்துக்கொள்ளப் போகிறேன், உனக்கு இம்மையில் அவனைப் பெற முடியாது. நீ பிறனுக்கு மனைவியாகவும் மாட்டாய். உனக்கு இவ்வுலகத்தில் இனி எவ்வித வாழ்வுமில்லை; உங்கள் வீட்டுக் கொல்லையில், வடமேற்கு மூலையில், தனியாக ஒரு பச்சிலை படர்ந்திருக்கக் காண்பாய். நாளைக் காலை ஸ்நானம் செய்து பூஜை முடிந்தவுடனே அதில் இரண்டு இலைகளை எடுத்துத் தின்றுவிடு. தவறாதே!'' மேற்கண்டவாறு கட்டளை கொடுத்துவிட்டுப் பராசக்தி மறைந்து போயினள்.

காலையில் எழுந்து அந்தப் பச்சிலையைப் பார்க்கப் போனேன். வானத்திலிருந்து ஒரு காகம் இறங்கிற்று. அது அந்தப் பச்சிலையைக் கொத்தி உடனே தரையில் மாண்டு விழக் கண்டேன். தேவியின் கருத்தை அறிந்துகொண்டேன். இன்று பகல் பத்து நாழிகைக்கு அந்த இலைகளை நான் தின்று பரலோகம் சென்று விடுவேன். நின் வரவை எதிர்பார்த்து அங்கும் கன்னிகையாகவேயிருப்பேன். நீ உனது தர்மங்களை நேரே நிறைவேற்றி மாதாவுக்கு திருப்தி செய்வித்த பிறகு அவள் உன்னை நான் இருக்குமிடம் கொண்டு சேர்ப்பாள். போய் வருகிறேன். ராஜா! ராஜா! என்னை மறக்காதே. வந்தே மாதரம்".

இக் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

## அத்தியாயம் - 3

மீனாம்பாளுடைய "மரண ஓலை" கிடைத்ததின் பிறகு இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. இதனிடையே எனக்கு நிகழ்ந்த அனுபவங்களை யெல்லாம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு போனால் பெரிய புராணமாக வளரும். சுருக்கமாகச் சொல்லுகிறேன். அந்த ஆற்றாமையால் வெளியேறிய நான் அப்படியே காஷாயம் தரித்துக்கொண்டு துறவியாக வடநாட்டிலே ஸஞ்சாரம் செய்து வந்தேன். "வந்தே மாதர" தர்மத்தை மட்டிலும் மறக்கவில்லை. ஆனால் என்னை சர்க்கார் அதிகாரிகள் பிடித்துச் சிறையிடும் படியான முயற்சிகளிலே நான் கலக்கவுமில்லை; ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால், ஸ்வதந்திரம் தானே சித்தியாகும் என்பது என்னுடைய கொள்கை. காரணத்தை விட்டுப் பயனைச் சீறுவதில் என் மனங்குவியவில்லை. அங்கங்கே சில சில பிரசாரங்கள் செய்ததுண்டு. இதுபற்றி, சில இடங்களில் என்னைப் போலீஸார் தொடரத் தலைப்பட்டார்கள். இதனால் நான் ஜனங்களிடையே நன்றாகக் கலந்து நன்மைகள் செய்துகொண்டு போக முடியாதபடி பல தடைகள் ஏற்பட்டன. ஆகவே, எனது பிரசங்கங்களிலிருந்து எனது நோக்கத்திற்கு அனுகூலத்திலும் பிரதிகூலமே அதிகமாக விளையலாயிற்று. இதையும் தவிர எனது பிரசங்கங்களைக் கேட்டு ஜனங்கள் மிகவும் வியப்படைவதையும் மற்றவர்களைக் காட்டிலும் எனக்கு அதிக உபசாரங்கள் செய்வதையும் கண்டு உள்ளத்திலே கர்வம் உண்டாகத் தலைப்பட்டது.

"இயற்கையின் குணங்களிலிருந்து செய்கைகள் பிறக்கின்றன. மூடன் "நான் செய்கின்றேன்" என்று கருதுகின்றான்" என்ற பகவத்கீதை வாக்கியத்தை அடிக்கடி மனனஞ் செய்து கொண்டேன். இந்த வீண் கர்வம், நாளுக்கு நாள் மிகுதியடைந்து என்னை விழுங்கி, யாதொரு காரியத்திற்கும் பயன்படாமற் செய்து விடுமோ? என்ற அச்சம் உண்டாயிற்று. வெளிக்குத் தெரியாமல் எவருடைய மதிப்பையும், ஸன்மானத்தையும் எதிர்பார்க்காமல் ஸாதாரணத்தொண்டு இழைப்பதற்கு என்னை மாயா வைத்திருக்கிறாள் என்பதை அறிந்து கொண்டேன். எனவே, பிரசங்கக் கூட்டங்களில் சேர்வதை நிறுத்தி விட்டேன். சில தினங்களுக்கு அப்பால், எனக்குப் போலீஸ் சேவகர்கள் செய்யும் உபசாரங்களும் நின்று போய்விட்டன. பாதசாரியாகவே பல இடங்களில் சுற்றிவிட்டு, பலபல தொழில்கள் செய்துகொண்டு லாஹூர் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கே லாலா லஜபதிராய் போன்ற பலரைப் பார்க்க வேண்டுமென்ற இச்சை ஜனித்தது. அவரைப் போய்க் கண்டதில், அவர் என்னிடம் நம்பிக்கை கொண்டவராகி, கோசல நாட்டுப் பிரதேசங்களில் கொடிய பஞ்சம் பரவியிருக்கிறதென்றும், பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்குச் சோறு-துணி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் தாம் நிதிகள் சேர்த்து வருவதாகவும், பல வாலிபர்கள் தம்மிடமிருந்து திரவியங் கொண்டுபோய்ப்



பஞ்சமுள்ள ஸ்தலங்களில் இருந்து உழைத்து வருவதாகவும் தெரிவித்துவிட்டு, "நீரும் போய் இவ்விஷயத்தில் வேலை செய்யக் கூடாதா?" என்று கேட்டார்.

ஆ! ராமச்சந்திரன் அரசு செலுத்திய நாடு! வால்மீகி முனிவர் புகழ்ந்து போற்றிய நாடு! அங்கு, ஜனங்கள் துணியும் சோறுமில்லாமல், பதினாயிரக் கணக்காகத் தவிக்கிறார்கள்! அவர்களுக்கு உதவி செய்யப் போவாயா என்று என்னைக் கேட்கவும் வேண்டுமா? அவர்களெல்லோரும் எனக்குத் தெய்வங்களல்லவா? அவர்களுக்கு வேண்டியன செய்ய முடியாவிட்டால், இந்தச் சதையுடம்பை எதன் பொருட்டாகச் சுமக்கிறேன்? லாலாவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போய்ச் சிறிது காலம் அந்தக் கடமையைச் செய்துகொண்டு வந்தேன். அங்கு கண்ட காட்சிகளைப்பற்றி எழுத வேண்டுமா? எழுதுகிறேன். கவனி. தேவலோகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி. நரகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி. தேவலோகம் நரகலோகமாக மாறியிருந்தால் எப்படி தோன்றுமோ, அப்படித் தோன்றியது, பகவான் ராமச்சந்திரன் ஆண்ட பூமி. நான் அங்கிருந்த கோரங்களையெல்லாம் உங்களிடம் விரித்துச் சொல்ல வேண்டும், புண்ணிய பூமியைப் பற்றி இழிவுகள் சொல்வதினால் ஒருவேளை சிறிது பாவம் உண்டாகக்கூடும். அந்தப் பாவத்தைத் தவிர வேறென்ன பயன் கிடைக்கப்போகிறது? உன்னால் எனது தாய் நாட்டிற்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? எழுந்திருந்துவா, பார்ப்போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப்போகிறீர்களோ? அட பாப ஜாதியே, பாப ஜாதியே! இது நிற்க. ஓரிரண்டு மாதங்களுக்கு அப்பால், லாலா லஜபதிராய் எங்களுக்குக் கடிதம் எழுதி, இனி அந்த வேலை போதும் என்று கட்டளை பிறப்பித்துவிட்டார்.

கோசல நாட்டுப் பிரதேசங்களில் பஞ்சத்தின் சம்பந்தமாக நான் வேலை செய்த சில மாதங்களில், ஏற்கனவே என் மனதில் நெடுங்காலமாக வேரூன்றியிருந்த ஒரு சிந்தனை பலங்கொண்டு வளரலாயிற்று. தணிந்த வகுப்பினரின் நன்மை-தீமைகளிலே, நமதுநாட்டில் உயர்ந்த வகுப்பினரென்று கூறப்படுவோர் எவ்வளவு தூரம் அசிரத்தையும், அன்னியத் தன்மையும் பாராட்டுகிறார்கள் என்பதை நோக்குமிடத்து எனது உள்ளத்தில் மிகுந்த தளர்ச்சி உண்டாயிற்று. தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும் கடைசி வகுப்பினர் என்பதாகச் சிலர் கருதப்படுகின்றனர். தென் நாட்டைப்போலவே வடநாட்டிலும், இந்த வகுப்பினர் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே கைக்கொண்டிருக்கிறார்கள். உழவுத் தொழில் உடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்கள் ஆகவேண்டும். ஆனால் இவர்களிலே பலர் மாட்டிறைச்சி தின்பது முதலிய அனாசாரங்கள் வைத்துக் கொண்டிருப்பதால், ஹிந்து ஜாதி இவர்களைத் தாழ்வாகக் கருதுகின்றது. ஹிந்து நாகரிகத்திலே, பசுமாடு மிகப் பிரதானமான வஸ்துக்களிலே ஒன்று. ஹிந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொறுத்து நிற்கின்றது. விவசாயத் தொழிலுக்குப் பசுவே ஜீவன். ஆதலால், ஹிந்துக்கள் புராதனகால முதலாகவே கோ மாம்ஸத்தை வர்ஜனம் செய்துவிட்டார்கள். ஒரு சிறு பகுதி மட்டும் வர்ஜனம் செய்யாதிருப்பதுகண்டு, ஜாதிப் பொதுமை அப்பகுதியைத் தாழ்வாகக் கருதுகின்றது. இது முற்றிலும் நியாயம். ஆனால், பஞ்சம் நோய் முதலிய பொதுப்பகைவருக்கு முன்பு, நமது உயர்வு-தாழ்வுகளை விரித்துக்கொண்டு நிற்பது மடமை. தாழ்ந்த ஜாதியாரை நாம் மிதமிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பயன்களை நாம் அனுபவிக்கிறோம். "ஹிருதயமறிந்திடச் செய்திடுங் கர்மங்கள் இகழ்ந்து பிரிந்துபோமே?"

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" நாம் பள்ளர் பறையருக்குச் செய்வதை யெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும் நெட்டால், திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால் ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். ஸாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. பிரத்யேகமாக விலகி நடக்கவேண்டும். பல்லக்குகள், வண்டிகள், இவற்றைப்பற்றி யோசனையே வேண்டியதில்லை. சுருக்கம்; நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம்; இப்போது நம்மெல்ரோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகிறார்கள். நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினர் என்று விலக்கினோம்; இப்போது வேத மார்க்கஸ்தர் மகம்மதியர் என்ற இருபகுதி கொண்ட நமது ஹிந்து ஜாதி முழுதையுமே உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புக்கள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்பலப்படுத்தி விடுமானால், அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது. "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்".

1200 வருடங்களுக்கு முன்பு, வடநாட்டிலிருந்து மகம்மதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்த போது நம்மவர்களின் இம்சை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர்-பறையர் பேரிகை கொட்டி, மணிகள் அடித்துக் கொண்டுபோய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்துகொண்டதாக இதிஹாஸம் சொல்லுகின்றது. அப்போது நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. பஞ்சத்தில் பெரும்பாலும் பள்-பறை வகுப்பினரே மடிந்து போகிறார்கள். இதைப்பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமலிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்து ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து, நூற்றுக்கணக்கான மனிதர்களையும், முக்கியமாக திக்கற்ற குழந்தைகளையும், கிறிஸ்து மதத்திலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்த மடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்-ஹிந்து ஸ்தானத்து ஜனங்கள்-ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப்பிணியால் மாய்ந்து போகின்றனர்.

கோ மாமிசம் உண்ணாதபடி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, அவர்களை நமது ஸமூகத்திலே சேர்த்து அவர்களுக்குக் கல்வியுந் தர்மமுந் தெய்வமும் கொடுத்து நாமே ஆதரிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களெல்லோரும் நமக்குப் பரிபூர்ண விரோதிகளாக மாறிவிடுவார்கள். இந்த விஷயத்திலே எனது சிறிய சக்திக்கு இயன்றவரை முயற்சிகள் செய்யவேண்டும் என்ற அவா எனது உள்ளத்தில் வளரலாயிற்று. வங்கநாட்டில் அசுவினி குமார தத்தர் என்ற தேச பக்தர் ஒருவர் இருப்பதாகவும், அவர் இந்தப் பிரதேசங்களில் நாம் "சூத்திரர்" (பெயர் மட்டில் சூத்திரர்) என்று கூறப்படும் பள்ளர்களை ஸமூக வரம்பினுள்ளே சேர்த்து உயர்வுபடுத்த முயற்சிகள் செய்வதாகவும் கேள்விப் பட்டேன். அவரைப் பார்க்க ஆசை உண்டாயிற்று.

## அத்தியாயம் - 4

கல்கத்தாவுக்கு வந்து சில தினங்கள் இருந்துவிட்டு பாரிஸாலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு போய் வழி விசாரணை செய்துகொண்டு அசுவினிகுமார தத்தருடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வீட்டு வாயிலில் ஒரு வங்காளி பாபு நின்று கொண்டிருந்தார். அவரிடம் "அசுவினி பாபு இருக்கிறாரா?" என்று கேட்டேன். "இல்லை நேற்றுத்தான் புறப்பட்டுக் காசிக்குப் போயிருக்கிறார்" என்றார், "அடடா?" என்று சொல்லி திகைத்து நின்றேன். காஷாய உடையைக் கண்ட அந்த பாபு உபசார மொழிகள் கூறி உள்ளே அழைத்துப்போய், தாகசாந்தி செய்வித்துவிட்டு, "யார்" "எவ்விடம்" என்பதையெல்லாம் விசாரணை செய்தார். நான் எனது விருத்தமெல்லாம் தெரிவித்துவிட்டு, என் மனதிலிருந்த நோக்கத்தையும் சொன்னேன். "பாரும் பாபு, நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானால் நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?" என்று என் வாயிலிருந்து வாக்கியம் கேட்டவுடனே அவர் முகத்தில் மிகுந்த வருத்தம் புலப்பட்டது. முகத்தைப் பார்த்தால் கண்ணீர் ததும்பி விடும்போலிருந்தது. தீண்டாத வகுப்பினரின் நிலையைக் கருதித்தான் இவ்வளவு பரிதாபமடைகிறார் போலும்என்று நான் நினைத்து "ஐயா உம்முடைய நெஞ்சு போல் இன்னும் நூறு பேருடைய நெஞ்சு இருக்குமானால் நமது நாடு செம்மைப் பட்டுவிடும்" என்றேன்.



"ஸ்வாமி, தாங்கள் நினைக்கிறபடி, அத்தனை கருணையுடைய நெஞ்சம் எனக்கு இன்னும் மாதா அருள் புரியவில்லை. ஹீன ஜாதியாரைக் காக்க வேண்டும் என்ற விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் சிரத்தையுண்டு என்பது மெய்யே. அசுவினி பாபுவுடன் நானும் மேற்படி வகுப்பினருக்கு நன்மை செய்வதில் சிறிது உழைத்திருக்கிறேன். ஆயினும், என் முகத்தில் தாங்கள் கவனித்த துக்கக் குறி நம்மில் ஆறிலொரு பங்கு ஜனங்கள் இப்படி அவலமாய் விட்டார்களே என்பதைக் கருதி ஏற்பட்டதன்று. தாங்கள் சொன்ன வாக்கியம் சில தினங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்த ஒரு மந்த்ராஜி('மந்த்ராஜியம்மாள்' என்பது மதராஸ் பிரதேசத்து ஸ்தீரீ என்று பொருள்படும். 'மதராஸ்' என்பதற்கு வடநாட்டார் மந்த்ராஜ் என்பார்கள்) யம்மாளின் வாயிலிருந்து அடிக்கடி வெளிவரக் கேட்டிருக்கிறேன். தாம் அது சொன்னவுடனே எனக்கு அந்த அம்மாளின் நிலை ஞாபகம் வந்தது. அவளுடைய தற்கால ஸ்திதியை நினைத்து வருத்தமுண்டாயிற்று. அடடா! என்ன குணம்! என்ன வடிவம்! இவ்வளவு பாலியத்திலே நமது தேசத்தினிடம் என்ன அபரிமிதமான பக்தி!" என்று சொல்லி திடுக்கென்று பேச்சை நிறுத்தி விட்டார். அப்பால் என் முகத்தை ஓரிரண்டு தடவை நன்றாக உற்று நோக்கினார். அவருடைய பெயர் ஸதீச சந்திரபாபு என்பதாக ஏற்கனவே சொல்லியிருக்கிறார்.

"ஸதீச பாபு, ஏன் இப்படிப் பார்க்கிறீர்?" என்று கேட்டேன்.

"ஸ்வாமீஜீ, க்ஷமித்துக் கொள்ள வேண்டும். நீங்கள்

ஸந்யாஸீ எந்த தேசத்தில் பிறந்தவரென்பதைக் கூட நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும், உங்கள் முகத்தைப் பார்க்கும்பொழுது, அதில் எனக்கு அந்த யுவதியின் உருவம் கலந்திருப்பது போலத் தோன்றுகிறது. உங்களிருவருடைய முகமும் ஒன்று போலிருப்பதாக நான் சொல்லவில்லை. உங்கள் முகத்தில் எப்படியோ அவளுடைய சாயல் ஏறியிருப்பது போலத் தோன்றுகிறது" என்றார்.

மதராஸ் பக்கத்து யுவதியென்று அவர் சொன்னவுடனேயே என் மனதில் ஏதோ ஒருவிதமான பதைபதைப்பு உண்டாயிற்று. அதன் பின்னிட்டு, அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன், அந்தப் பதைபதைப்பு மிகுதியுற்றது. ஸந்யாஸி உடை தரித்து இருந்தேன். நெடுநாளாகத் துறவையே ஆதரித்து வந்திருக்கிறேன். வேஷத்திலென்னடா இருக்கிறது கோவிந்தா, வேஷத்திலென்ன இருக்கிறது?

"மீனாம்பா?-அட, போ! மீனாம்பாள் இறந்துபோய் இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறதே?-ஐயோ, எனது கண்மணி என்ன கஷ்டத்துடன் இறந்தாள்?"-என்பதாக, ஒரு க்ஷணத்திலே மனப்பேய் ஆயிரம் விதமாகக் கூத்தாடிற்று.

''ஸதீச பாபு! நானும் மதராஸ் பக்கத்திலே ஜனித்தவன் தான். நீர் சொல்லிய யுவதியைப் பற்றிக் கேட்கும்போது, எனக்குத் தெரிந்த மற்றொரு பந்துவைப் பற்றி ஞாபகம் வருகிறது, நீர் சொல்லிய பெண் யார்? அவள் பெயரென்ன? அவள் இப்போது எங்கே இருக்கிறாள்? அவள் இங்கே என்ன நோக்கத்துடன் வந்திருந்தாள்? அவளுடைய தற்கால ஸ்திதியைக் குறித்து உமக்கு வருத்தமுண்டாவதேன்? அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? எனக்கு எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்" என்றேன்.

கதையை விரிக்கத் தொடங்கினார் ஸதீச சந்திர பாபு. ஒவ்வொரு வாக்கியமும் என் உள்ளத்திலே செந்தீக் கனலும் இரும்புத் துண்டுகளை எறிவது போல் விழுந்தது. அவர் சொல்லிய கதையினிடையே என்னுள்ளத்தில் நிகழ்ந்தனவற்றையெல்லாம் இடையிட்டுக் கொண்டு போனால் படிப்பவர்களுக்கு விரஸமாயிருக்கும் என்று அஞ்சி, இங்கு அவர் சொல்லிய விஷயங்களை மட்டிலும் குறிப்பிடுகிறேன். என் மனத் ததும்புதல்களைப் படிப்பவர்கள் தாமே ஊகத்தாற் கண்டுகொள்ள வேண்டும். ஸதீச பாபு சொல்லலாயினர்:-

"அந்த யுவதிக்குத் தாஞ்சோர்". அவள் பெயர் எனக்குத் தெரியாது. நாங்கள் எல்லோரும் அவளைத் "தீன மாதா" என்று பெயர் சொல்லியழைப்போம். அவளுடைய உண்மைப் பெயர் அகவினி பாபுவுக்கு மாத்திரந்தான் தெரியும். ஆனால், அந்த தேவியின் சரித்திரத்தை எங்களுக்கு அகவினி பாபு அடிக்கடி சொல்லியிருக்கிறார். அதை உம்மிடம் சொல்லுகிறேன் கேளும். அவள் ஒரு போலீஸ் பென்ஷன் உத்தியோகஸ்தருடைய குமாரியாம். அவளது அத்தை மகனாகிய ஒரு மந்த்ராஜ் நகரத்து வாலிபனுக்கு அவளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருந்ததாம். அவ்வாலிபன் "வந்தே மாதரம்" கூட்டத்திலே சேர்ந்துவிட்டான். அதிலிருந்து, அவள் தகப்பன் அவளை வேறொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு மணம்புரிவிக்க ஏற்பாடு செய்தான். கடைசித் தருணத்தில் அவள் கனவில் ஏதோ தெய்வத்தின் கட்டளை பெற்று ஒரு பச்சிலையைத் தின்றுவிடவே, அவளுக்குப் பயங்கரமான ஜ்வர நோய் கண்டு விவாகம் தடைப்பட்டுப் போய்விட்டது. அப்பால், தகப்பனாரும் இறந்து போய்விட்டார். இதனிடையே அவளுடைய காதலனாகிய மந்த்ராஜ் வாலிபன், என்ன காரணத்தாலோ, அவள் இறந்துவிட்டதாக எண்ணி, ஸந்யாஸம் வாங்கிக்கொண்டு வெளியேறி விட்டானாம்-"

"ஏழை மனமே, வெடித்துப்போய்விடாதே, சற்றுப் பொறு" என்று என்னால் கூடியவரை, அடக்கிப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லை. "ஐயோ!, மீனா! மீனா!'' என்று கூவினேன். பிறகு ''ஸதீச பாபு, அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? சொல்லும், சொல்லும்" என்று நெரித்தேன்.

ஸதீச சந்திரனுக்கு உளவு ஒருவாறு துலங்கிவிட்டது. ''இப்போது ஒன்றுமில்லை. சௌக்கியமாகத்தானிருக்கிறாள்" என்றார்.

"இல்லையில்லை. என்னிடம் நீர் உண்மை பேசத் தயங்குகிறீர். உண்மை தெரிந்தால் நான் மிகத் துன்பப்படுவேன் என்று எண்ணி நீர் மறைக்கிறீர். இதுவே என்னை நரக வேதனைக்கு உட்படுத்துகிறது. சொல்லிவிடும்" என்று வற்புறுத்தினேன்.

மறுபடியும் ஸதீச பாபு ஏதோ பொருளற்ற வார்த்தைகளைப் போட்டு குழப்பி எனக்கு ஸமாதான வசனம் சொல்லத் தலைப்பட்டார்.

"பாரத தேவியின் ஹிருதயத்தின் மீதும், பகவத் கீதையின் மீதும் ஆணையிட்டிருக்கிறேன். என்னிடம் உண்மையை ஒளியாமல் சொல்லும்" என்றேன். இந்த ஸத்தியம் நவீன வங்காளத்தினரை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தும் என்பது எனக்குத் தெரியும். இங்ஙனம் நான் ஆணையிட்டதிலிருந்து அவருக்குக் கொஞ்சம் கோபம் உண்டாயிற்று.

"போமையா, மூட ஸந்யாஸி, என்ன வார்த்தை சொல்லி விட்டீர்! இதோ, உண்மை தெரிவிக்கிறேன். கேட்டுக் கொள்ளும். அந்தப் பெண், இங்கு நாமசூத்திரர்களைப் பஞ்சத்திலிருந்து மீட்கப் பாடுபட்டதில், தீராத குளிர் ஜ்வரங்கண்டு, வைத்தியர்கள் சமீபத்தில் இறந்துவிடுவாள் என்று சொல்லி விட்டனர். அதற்குமேல் அவள் காசியில் போய் இறக்க விரும்பியது பற்றி, அகவினி பாபு அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். உண்மை சொல்லிவிட்டேன். போம்" என்றார்.

"காசிக்கா?"

"ஆம்".

"காசியில் எங்கே?"

"அஸீ கட்டத்தில்"

"அஸீ கட்டத்தில் எந்த இடம்?"

"அஸீக்குத் தெற்கே "நர்வா"என்ற இடமிருக்கிறது. அதில் பல தோட்டங்களும் பங்களாக்களும் உண்டு. அதில் தைப்பூர் மஹாராஜா பங்களாவில் "அகவினி பாபு" இறங்கியிருக்கிறார்.

"ரயில் செலவுக்குப் பணம் கொடும்" என்றேன். ஒரு பத்துரூபாய் நோட்டை எடுத்து வீசியெறிந்தார்; மானத்தைக் கண்டதார், மரியாதையைக் கண்டதார்; அங்கிருந்து அந்த க்ஷணமே வெளியேறி விட்டேன். வழியெல்லாம் தின்பதற்கு நெஞ்சத்தையும் அருந்துவதற்குக் கண்ணீரையுமே கொண்டவனாய்க் காசிக்குப் போய்ச்சேர்ந்தேன்.

## அத்தியாயம் - 5

காசியில் ஹனுமந்த கட்டத்திலே எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். எனது நண்பர் ஒருவருடைய பந்துக்கள் அங்கு வாசஞ் செய்கின்றார். இதைப் படிக்கும் தமிழர்கள் காசிக்குப் போயிருப்பதுண்டானால், நான் சொல்லப்போகிற இடம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். தமிழர்களெல்லோரும் பெரும்பாலும் ஹனுமந்த கட்டத்திற்கே போய் இறங்குவதுண்டு. அங்கு கீழ் மேற்சந்து ஒன்றிருக்கிறதல்லவா? அதில் கீழ் மேற்கு மூலையிலிருந்து மூன்றாம் வீடு. அந்த வீட்டிற்குச் சிவமடம் என்று பெயர். யாத்திரைக்காரர்கள்போய் இறங்கக் கூடிய வீடுகளைக் காசியிலே மடங்கள் என்கிறார்கள். சிவமடத்தில் போய் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு, மடத்தார் கொடுத்த ஆகாரத்தை உண்டபிறகு, அப்பொழுதே அந்த மடத்துப் பிள்ளைகளில் ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு நர்வா கட்டத்திற்குப்போனேன். அங்கே தைப்பூர் ராஜா பங்களா எது என்று விசாரித்து, பங்களாவிற்குப் போய்ச் சேரும்போது இரவு ஏழு மணியாகிவிட்டது. வாயிலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அந்த வண்டி புறப்படுந் தருவாயில் இருந்தது. வண்டியின்மேல் ஆங்கிலேய உடை தரித்த ஒரு வங்காளி உட்கார்ந்து கொண்டிருந்தார். வண்டிப்பக்கத்திலே ஒரு கிழவரும் வேறு சிலரும் நின்று கொண்டிருந்தார்கள். அகவினி குமார தத்தரின் படத்தை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறபடியால், அந்தக் கிழவர்தான் அகவினி பாபு என்று தெரிந்துகொண்டேன். நான் போனவுடனே அகவினி பாபு பக்கத்திலிருந்த மனிதனை நோக்கி, ''யாரோ ஒரு ஸந்யாஸி வந்திருக்கிறார். அவரைத் தாழ்வாரத்தில் வரச்சொல். நான் இதோ வருகிறேன்" என்றார். தாழ்வாரத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் நானும் என்னுடன் வந்திருந்த வாலிபனும் போய் உட்கார்ந்தோம். அகவினி பாபுவும் வண்டிக்குள்ளிருந்தவரும் பேசியது என் செவியில் நன்றாக விழுந்தது.

அகவினி பாபு: ''டாக்டர் ஸாஹப்! நேற்றைக் காட்டிலும் இன்று சிறிது குணப்பட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. உமது கருத்தென்ன?"

டாக்டர்: ''மிகவும் துர்ப்பல நிலையிலேதான் இருக்கிறாள். இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் இருப்பது கஷ்டம், அந்த நேரம் தப்பினால், பிறகு விபத்தில்லை" என்றார்.

காதில் விஷந்தடவிய தீயம்புபோல இந்த வார்த்தை கேட்டது; "மீனா! மீனா! மீனா!" என்று அலறினேன். வண்டி புறப்பட்டுவிட்டது. அதற்குள் நான் என்னை மீறி அலறிய சத்தம் கேட்டு, அகவினி பாபுவும் அவரைச் சேர்ந்தவர்களும் நான் இருந்த பாரிசமாக விரைந்து வந்தார்கள். அவர் வருதல் கண்டு, நான் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து நின்று வணங்கினேன். அவர் "ஸ்வாமிக்கு எவ்விடம்? இங்கு வந்த கருத்தென்ன? ஏன் சத்தம் போட்டீர்கள்?" என்று ஹிந்துஸ்தானி பாஷையிலே கேட்டார்.

"பாபு, நான் ஸந்யாஸியல்ல. நான் திருடன், நான் மஹா நிர்பாக்கியமுடைய பாவி.மீனாம்பாள் தம்மிடம் கோவிந்தராஜன் என்ற பெயர் சொல்லியிருப்பாளல்லவா? அந்தப் பாவி நான்தான்" என்றேன்.

உடனே அவர் என்னை மேன்மாடத்திலுள்ள ஒரு அறைக்குத் தனியாக அழைத்துச் சென்றார். அங்கு என்னை நோக்கி, ''நேற்றெல்லாம் நான் உம்மை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்தேன். நீர் இங்கு வரக்கூடும் என்ற சிந்தனை எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது" என்றார்.

பிறகு என்னிடம் ''கிழக்கு முகமாகத் திரும்பி உட்காரும் என்றார். அப்படியே உட்கார்ந்தேன். ''கண்ணை மூடிக்கொள்ளும்'' என்றார். இரண்டு கண்களையும் மூடிக்கொண்டேன். பிறகு எனது நெற்றியைக் கையாலே தடவி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். எனக்கு உறக்கம் வருவது போலிருந்தது.

"அடடா! இன்னும் மீனாம்பாளைப் பார்க்கவில்லை. எனது உயிரினுமினியாள் மரணாவஸ்தையிலிருக்கிறாள். அவளைப் பாக்கும் முன்பாக உறக்கம் வருகிறதே! இவர் என்னை ஏதோ மாயமந்திரத்துக்கு உட்படுத்துகிறார். எனது பிராணரத்தினத்தைப் பார்க்காதபடி கெடுத்துவிட முயலுகிறார். இந்த மாயைக்கு உட்படலாகாது. கண் விழித்து எழுந்து நின்றுவிட வேண்டும்" என்று சங்கற்பம் செய்து கொண்டு, எழுந்து நிற்க முயன்றேன். "ஹூம்" என்றொரு சத்தம் கேட்டது! விழித்து விழித்துப் பார்க்கிறேன்; கண்ணைத் திறக்க முடியவில்லை. மயக்கம் மேன்மேலும் அதிகப்பட்டது. அப்படியே உறங்கி விழுந்துவிட்டேன்.

விழித்த பிறகு, நான் இரண்டுநாள் உறங்கிக்கிடந்ததாகத் தெரிந்தது. பக்கத்திலிருந்த ஒரு



சேவகன் சொன்னான். ''மீனா எங்கே? மீனா சௌக்கியமாயிருக்கிறாளா?'' என்று அந்தச் சேவகனிடம் கேட்டேன். எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று மறுமொழி கூறினான். சாதாரணமாக எப்போதும் போல இருந்தேனாயின் அந்தச் சேவகனை உதைத்துத்தள்ளி, இடையே வந்தவர்களையெல்லாம் வீழ்த்திவிட்டு மீனாளிருக்குமிடம் ஓடிப்போய்ப் பார்த்திருப்பேன். ஆனால் இந்த நேரம் என்னுடலில் மிகுந்த அயர்வும், உள்ளத்தில் மிகுந்த தெளிவும், அமைதியும் ஏற்பட்டிருந்தன. மனதிலிருந்த ஜ்வரமும் நீங்கிப் போயிருந்தது. "பாரிஸால் கிழவன்" செய்த சூது என்று தெரிந்துகொண்டேன். அரை நாழிகைக்கெல்லாம், அகுவினி பாபு தாமே நானிருந்த அறைக்குள் வந்து, என் எதிரே ஒரு நாற்காலியின் மீது வீற்றிருந்தார். என்னை அறியாமல், எனது இரண்டு கைகளும் அவருக்கு அஞ்சலி புரிந்தன.

"ஓம்" என்று கூறி ஆசீர்வாதம் செய்தார். "பால ஸந்யாஸி, கபட ஸந்யாஸி, அர்ஜுன ஸந்யாசி, உன்பக்கம் சீட்டு விழுந்தது" என்றார். மீனா பிழைத்து விட்டாள் என்று தெரிந்துகொண்டேன்.

''முற்றிலும் சௌக்கியமாய் விட்டதா?'' என்று கேட்டேன்.

"பூரணமாக சௌக்கியமாய் விட்டது. இன்னும் ஒரைம்பது வருஷத்திற்குச் சமுத்திரத்திலே தள்ளினாலும் அவளுக்கு எவ்விதமான தீங்கும் வரமாட்டாது" என்றார்.

"அப்படியானால் நான் போகிறேன், அவள் இறந்து போகப்போகிறாள் என்ற எண்ணத்தினாலேதான் என் விரதத்தைக்கூட மறந்து, அவளைப் பார்ப்பதற்காகப் பறந்தோடி வந்தேன். இனி, அவளைப் பார்த்து அவளுடனிருக்க வேண்டும் என்ற வண்ணம் எனக்கில்லை. நான் போய் வருகிறேன்'' என்று சொன்னேன்.

அகுவினி பாபு கடகடவென்று சிரித்துவிட்டு, பக்கத்திலிருந்த சேவகனை நோக்கி, ''இவருக்கு கொஞ்சம் பால் கொணர்ந்து கொடு" என்று ஏவினார். அவன் முகம் கழுவ நீரும் அருந்துவதற்குப் பாலும் கொணர்ந்து கொடுத்தான். அந்தப் பாலை உட்கொண்டவுடனே, திருக்குற்றாலத்து அருவியில் ஸ்நானம் செய்து முடித்ததுபோல, எனது உடலிலிருந்து அயர்வெல்லாம் நீங்கிப்போய் மிகுந்த தெளிவும் சௌக்கியமும் அமைந்திருக்கக் கண்டேன்.

''இப்பொழுது என்ன சொல்லுகிறாய், புறப்பட்டுப் போகிறாயா?'' என்று அகுவினிபாபு புன்னகையுடன் கேட்டார்.

"அவளை ஒருமுறை பார்த்துவிட்டு, அவளிடம் விடைபெற்றுக் கொண்டு செல்லுகிறேன்" என்றேன்.

திடீரென்று அகுவினிபாவுவின் முகத்தில் இருந்த புன்னகை மாறி சிரத்தா ரூபம் தோன்றியது. அப்பால் என்னிடம், ''மகனே, நீ மீனாம்பாளை மணஞ்செய்து கொள்வாய், நீங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்து முற் காலத்தில் ரிஷியும் ரிஷிபத்தினியுமாக வேத யக்ஞம் செய்ததுபோல, உங்கள் வாழ்நாள் முழுதும் மாதாவின் ப்ரீத்யர்த்தமாக ஜீவயக்ஞம் புரியக் கடவீர்கள்" என்றார்.

"காளி தேவியின் கட்டளை என்னாகிறது?" என்று கேட்டேன். இந்த ஜன்மத்தில் 'நீ கோவிந்தராஜனை மணஞ்செய்து கொள்ளலாகாது'' என்று காளிதேவி மீனாம்பாளுக்குக் கூறி, அவளை விஷம்



# மகிழ்ச்சி செய்!

- கவிஞர் அறிவுமதி



ஆலைகள்
பெருக்கு

கனி
வளம்
உருக்கு

தொழில்
நிலை
உயர்த்து

அனைத்தும்
சரிதான்

இயற்கையை
மகிழ்ச்சி
செய் !'

தின்னும்படியாகக் கட்டளையிட்ட செய்தியை அவருக்கு நினைப்புறுத்தினேன்.

அதற்கு அவர், "அந்த செய்தியை யெல்லாம் நான் அறிவேன். மஹாசக்தியின் கட்டளையை மீனாம்பாள் நன்கு தெரிந்துகொள்ளாமல் உனக்குக் கடிதம் எழுதிவிட்டாள். மீனாம்பாளுடைய ஜன்மம் மாறுபட வேண்டுமென்று அம்மை சொல்லியதின் பொருள் வேறு. அவள் பச்சிலை தின்னும்படி கட்டளையிட்டது, மீனாம்பாளுக்கு ஜ்வரமுண்டாய் தந்தை எண்ணிய விவாகம் தடைபடும் பொருட்டாகவே, அதற்கு முன்பு அவளுடைய ஜன்மம் வேறு. மாதா தெளிவாகத்தான் சொல்லினாள். ஆனாள், மீனாம்பாள் தனக்கு வேண்டாத ஒருவனுடன் விவாகம் நடக்கப்போகிறது என்ற தாபத்தால் படப்படப்புண்டாகி, உனக்கு ஏதெல்லாமோ எழுதிவிட்டாள். நீயும் அவசரப்பட்டு; காஷாயம் தரித்துக் கொண்டுவிட்டாய். உனக்கு ஸந்நியாஸம் குருவினால் கொடுக்கப்படவில்லை. ஆயினும் இதுவெல்லாம் உங்களிருவருடைய நலத்தின் பொருட்டாகவே ஏற்பட்டது. உங்களிருவருக்கும், பரிபூரணமான ஹிருதய சுத்தி உண்டாவதற்கு இப்பிரிவு அவசியமாயிருந்தது. இப்போது நான் போகிறேன். இன்று மாலை நான்கு மணிக்கு பூஞ்சோலையிலுள்ள லதா மண்டபத்தில் மீனாம்பாள் இருப்பாள். உன் வரவிற்குக் காத்திருப்பாள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

மாலைப் பொழுதாயிற்று. நான் ஸந்யாஸி வேஷத்தை மாற்றி, எனது தகுதிக்கு உரிய ஆடை தரித்துக் கொண்டிருந்தேன். பூஞ்சோலையிலே லதா மண்டபத்தில் தனியாக நானும் எனது உயிர் ஸ்திரீ ரூபங்கொண்டு பக்கத்தில் வந்து வீற்றிருப்பது போலத் தோன்றியவளுமாக இருந்தோம். நான்கு இதழ்கள் கூடின.. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது.

வந்தே மாதரம்!

- "பாரதியார் கதைகள்"
தொகுப்பிலிருந்து..
வெளியீடு : வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
திநகர், சென்னை-17.

# வாசகர் இதயம்



'முத்தமிழ்க் கலைஞரின் 'வியர்வை' எழுத்தோவியம், முனைவர் 'சிலம்பொலியாரின்' இலக்கியக் கட்டுரை-எல்லாமே அமுதாய்ச் சுவைத்தது.

- *செங்கை பாலதா*
*சின்னக் கலையம்புத்தூர்.*

'தமிழரசு' மே நாள் இதழில் - உழைப்பின் மேன்மை உணர்த்தும் கவிதை, கட்டுரை, கருத்துரை எல்லாமே குவித்துத் திகட்டச் செய்துவிட்டீர்கள். நன்றி.

- *சோலைப்பிரியன்*
*சோலையா நகர்.*

அவ்வப்போது கரும்புநிகர் கலைஞர் எழுதியவை களையும் வெளியிட வேண்டுகிறேன்.

- *சூலூர் பாரதி*
*கோயம்புத்தூர்-20.*

வெளியே சொல்ல வெட்கப்படுகிற செய்தி களையும் மிக லாவகமாக வெளியிட்ட 'பிள்ளைப் பேறு' மருத்துவக் கட்டுரை பிரமாதம்.

- *சு. நாகராசன்*
*மேலப்பாதி.*

அரசாங்கச் செய்திகளையும், இன்னும் பல சுவையான செய்திகளையும் சேர்த்து 'தமிழரசு'க்கு மேலும் மெருகூட்டலாமே!

- *எம். செந்தில்குமார்*
*சந்தை புதுப்பாளையம்.*

பாவேந்தர் கண்ட பறவைகளைப் பற்றிய கட்டுரை தேனாய் இனித்தது.

- *கே. கோடீஸ்வரன்*
*தக்களூர்.*

பல வருஷமாகத் 'தமிழரசு' படித்து வருபவன் நான்; இப்போது அரசு மட்டுமல்ல - 'தமிழரசும்' புதிய பொலிவோடு இருக்கிறது; போற்றுகிறேன்!

- *கே. கோபாலன்*
*தொட்டியபாளையம்.*

'தமிழரசு' ஏன் வருகிறது என்றிருந்த நிலையை மாற்றி, எப்போது வரும் என்று ஏங்க வைத்து விட்டீர்களே!

- *தமிழ்ப்பரிதி*
*நெல்லிக்குப்பம்.*

திரு. வி.க.வுக்கு' திருநீறு கொடுத்து உபசரித்த பெரியாரின் விருந்தோம்பும் பண்பு வியக்கவைத்தது.

- *ஆரூர் அசோக்மேத்தா,*
*தேவர்கண்ட நல்லூர்.*

'தமிழரசைத்' தமிழிலேயே முகவரி எழுதி அனுப்புகிறீர்கள்; இதுகண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன்!

- *வே. இராசவேலன்*
*வாழியூர்.*





# மண்ணின் பண்

- சபிச் செல்வம்







வனம் முழுதும் ரணம்
காற்றின் பாடல் காதுகளில் வலிக்க
எரிந்து கரிந்த மரங்களின் மீதம்
புல் வெளி யாவும் பாழ்.
காட்டெருமை துள்ளி வர
பதறி
விலகி ஓடும் மனிதக் கூட்டம்.
சோலைக் காடுகளில் சுந்தர மௌனம்.
கூவியழைக்கும் குயில்
குரல்களிடையில் நெரியடும்
அடர் வனம் செயற்கை
பார்சன் பள்ளத் தாக்குகளில்
நீர் கசியும் புதர்களிடையே



பெரணி செஞ்சிவப்புக் காளான்

விஷம் விரல் படா

ஏக்கம் பிடுங்கி ரசிக்கும்.

மரம் வளர்

வளர் வனம்

வா.

ரேயான் கூழ் விற்க.

டாலர்க்கு கரன்சி மாறு கொள்வோம்.

## ஆறு

மிதந்து வரும் பிணங்கள்

சுழன்றோடி வரும் கழிவுகள்

திதிக்கு விட்ட இலைகள்

கரைந்தோடும் சாம்பல்கள்

குளித்துத் துவைத்தவர்களின்

ஆண்கள் பெண்கள்

அழுக்கு உள் வாங்கி

கரை யொதுக்கித்

தன் வழியே

தான் ஓடும் ஆறு.

## இலையுறங்கும் நேரம்

காட்டின் அடர் அமைதியில்
கவுதாரி விதவித ராகமிசைக்கும்
பறவைகளின் குரல்களில் பரவசம்
பூச்சிகள் சப்திக்கும் வெளி
எருக்கம் பஞ்சு பறந்து போகிறது
வரப்பில் புதுமண் தள்ளி எலிவளை
இலைகள் உறங்கும் நேரம்
வண்ணாத்திப் பூச்சி படபடத்து
சிறகசைத்தவாறே பூக்களுறிஞ்சி
காற்றின் வாசிப்பில் பனையோலை
துணையிருக்கும் காவல் பொம்மை.

## மைனாப் பாடல்

போதும்.
மனிதர்கள் நொறுக்கும் இறுக்கும்.
இந்தப் பாறை பிளந்து உள்ளிழுத்து மூட
அந்த மலை விழுங்கிச் செரிக்க
கடல் ஆழத்தில் அமிழ்த்தப்
போகு முன்;
ஒரு முறை யேனும்
மஞ்சள் மூக்கழகு மைனா
வாலாட்டிசைத்த பாடல் கேள்.
போதுமா யிவை?

காலடியோசை காதுகளில் அதிர
குழி முயல் குதித் தோடி மறைய
வேட்டை நாய் பாய்ந்து துரத்த
சப்பாத்திக் கள்ளி மலரிதழ் விரிக்க
அயல் மகரந்தப் பொடி பறக்க
வேலிக் கள்ளியில் படர்ந்த கொடி
குன்றிமணி வெடித்து மண்ணில் புதைய
பச்சைப் பனையோலை இசைக்கும்

நுங்கும் பதநீரும் தாகம் தீர்க்க
கள்ளும் கவிதையும்
சொல்லும் சுகமும் துளிர்க்கின்றன.
இலையுதிர்த்த மரக்கிளை நுனியிலை
தூரி யாட்ட
இன்னமும் ஒட்டியிருக்கிறது
உயிர்!

-திருஞி
பெரிய கொல்லப்பட்டி
மல்ல சமுத்திரம் (அஞ்சல்)
சேலம் - 637 503.
வெளியீட்ட "சாம்பல் காடு"
புத்தகத்திலிருந்து.

படிக்க...பயன்பெற...பாதுகாக்க
தமிழரசு
சந்தா விவரம்
'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டு சந்தா ... ரூ.72
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டு சந்தா ... ரூ.36
சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது
பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம், சென்னை - 600 002



# சூழலியல்!

இயற்கை அன்னையும் மற்ற அன்னையரைப் போலத்தான். பிள்ளைகளின் தவறைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவள்தான். ஆனால் குழந்தைகளின் குறும்பு எல்லை மீறும்போது இயற்கை அன்னை அவைகளைத் தண்டிக்கத் தயங்க மாட்டாள்.

குழந்தைகள் இன்று அன்னையையும் சேர்த்து அழிக்கக்கூடிய அணுகுண்டை வைத்தல்லவா விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!

மனிதனுக்குத் தான் வாழும் தலைமுறை பற்றித்தான் கவலை. இயற்கை அன்னைக்கோ தமக்குப் பின்னும் வரப்போகும் பல ஆயிரம் தலைமுறைகள் பற்றிய கவலை.

அதனால் அவளது சீற்றங்களை, சமயங்களில் நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

இதைப் புரிந்துகொள்ளாததால்தான் மிகப்பெரிய நாகரீகங்கள் கூடச் சுவடு தெரியாமல் அழிந்துவிட்டன.

மரங்கள் பெருவாரியாக வெட்டப்பட்டதால், பெரும் வெள்ளங்கள் ஏற்பட்டன. பைபிள் இதைக் கடவுளின் கோபம் என்று வர்ணித்தது. இதுபோலவே பல நாடுகளில் ஏற்பட்ட வெள்ளங்களுக்கு ஆங்காங்கு உள்ள கடவுளின் கோபம் என்ற காரணம் பல புராணங்கள் மூலம் கற்பிக்கப்பட்டன.



அப்பொழுது—

ரோமாபுரியில் ரோமப் பொறியியலின் அற்புதத்தால் மனிதக் கழிவுகள் கண்களுக் கெட்டாத் தொலைவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவைகள் நகருக்கு வெளியே உள்ள நீர்வழிகளில் கலந்தன. இறந்த உடல்கள் நகருக்கு வெளியே உள்ள திறந்த குழிகளில் வீசியெறியப்பட்டன.

விளைவு?

ரோம சாம்ராஜ்யமே நாறத்துவங்கியது; பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் தலைவிரித்து ஆடின.

### சுற்றுச் சூழல் நிர்மூலம்

எதைச் சுற்றுச்சூழல் அழிப்பு என்று வர்ணிக்கலாம்?

இப்பொழுது இருக்கும் அல்லது வரப்போகும் தலைமுறைகள் இயற்கையின் உதவியைப் பெற்று, அதோடு இணைந்து வாழும் ஒரு நம்பிக்கைக்கு அபாயம் விளைவிக்கும் எந்தவொரு செயலுமே சுற்றுச்சூழல் அழிப்புதான்.

இந்தக் கோணத்தில் பார்த்தால் வேளாண்மைச் சமுதாயங்களைத் தென்றலுக்கும், தொழில் மயமான சமுதாயங்களைப் புயலுக்கும் ஒப்பிடலாம்.

உலகப் போர்களுக்குப் பிந்தைய வளர்ச்சி கட்டுமுறையற்ற தொழில் நுட்பத்திற்கும், வரைமுறையற்ற உற்பத்திக்கும், ஏகபோக நுகர்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும், கிழக்கு ஐரோப்பியக் கம்யூனிச நாடுகளும் ஒரேமாதிரி பாதிக்கப்பட்டன. அவை இரண்டின் உற்பத்திக் குறிக்கோள்களிலும், செயல்முறைகளிலும் பலத்த வேறுபாடு இருக்கவில்லை. அவை இயற்கையை அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகக் கருதின; அவைகளுக்குக் கழிவுகள் ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை. அவைகளுக்கிடையே இருந்த ஒரே வேறுபாடு-யார் அதைக் கைப்பற்றுவது என்பதுதான்.

மொத்தத்தில்-

மனிதன் தனது குறுகியகால நலன்களுக்காக எதிர்

காலத்தையே அடகு வைக்கத் துணிந்து விட்டான்.

நாம் விரைந்து செயல்படாவிட்டால் அதை மீட்கவே முடியாது.

### செயற்கை உரம்

மனிதன் வேதியல் பொருட்களுக்குத் தான் அடிமையானதோடு திருப்தியடையவில்லை. தனது நிலங்களையும் செயற்கை உரங்களுக்கு அடிமையாக்கி அழகு பார்த்தான். இது பொருளாதார ரீதியாக செலவு மிக்கது மற்றுமல்லாமல், சூழலியல் ரீதியாகப் பெருங்கேடு விளைவிப்பதும் ஆகும். இவைகளை அடிமைத் தளையிலிருந்து மீட்பதும் கடினம். குறுகிய காலத்தில் செயற்கை உரங்கள் அபரிதமான அறுவடையைத் தரலாம். அதனால் சோம்பேறியாகும் விவசாயி மண் வள பாதுகாப்பை அசட்டை செய்கிறான். அதனால் மண் அரிப்பு அதிகமாகி விடுகிறது. அமெரிக்காவில் 1947ல் விளைந்த அதே தானியங்களை விளைவிக்க இன்று, 5 மடங்கு அதிகமான செயற்கை உரம் தேவைப்படுகிறது.

இது போதாதென்று அடுத்துள்ள சூழலமைப்பு களையும் பாதிக்கும் பக்க விளைவுகளையும் இது ஏற்படுத்துகிறது.

### ஆரோக்கியமான உணவுச் சங்கிலிகள்

ஆரோக்கியமாக இயங்கிவரும் ஒரு சூழலமைப்பில், தூய-வாழ்வு வாழ்ந்து வரும் ஒரு தனித்துவமான தாவரத்திற்கு என்ன நேர்கிறது? மண்நுண்ணு யிர்களிடமிருந்து சக்தியைப் பெற்று சாதாரணமாக வளரும் ஒரு புல், பின்னர் மடிந்து, மக்கி நுண்ணுயிர்களால் துகள்துகளாக்கப்படுகிறது.

நுண்ணுயிர்கள் தாவரக் கழிவுகளை உணவாகக் கொள்கின்றன.

தாவரங்கள் நுண்ணுயிர்களைத் தீர்த்துவிடுகின்றன.

சிறுபறவை மற்றும் விலங்கினங்கள் தாவரங்களைக் கடித்துச் சுவைக்கின்றன.

சிறு விலங்கினங்களை மீன் போன்றவை விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

சிறு மீனைப் பெருமீன் பிடிக்கிறது.

மனிதன்?

அவன் இதில் எதையுமே விட்டு வைப்பதில்லை!

ஆனால்... அவன் அந்த உணவுச் சங்கிலியை அறுத்து எறிகிறான்.

இறந்த உடல்களை எரிப்பதன் மூலமாகவும், சவப்பெட்டிகளில் போட்டுக் கல்லறைகளில் புதைப்பதன் மூலமாகவும் மனிதன் இந்தச் சங்கிலியை அறுத்து எறிகிறான். புல்லின் இதழ் மண்ணில் இருந்து "கடன்" வாங்கிய சத்து திரும்பவும் மண்ணிற்குப் போகாமல், தடை செய்வதன் மூலம் மனிதன் இயற்கைக்குத் துரோகம் இழைக்கிறான்.

### ஆரோக்கியமற்ற உணவுச் சங்கிலிகள்

டிடிடி (DDT) போன்ற வேதியல் பூச்சிக் கொல்லிகள், பயிர்களைக் கொல்வதைக் காட்டிலும் அப்பூச்சிகளை உணவாகக் கொள்ளும் உயிரினங்களையே அதிகமாகக் கொல்கின்றன. மேலும் பூச்சிகளின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் இருப்பதால், நாளடைவில் பூச்சிக்கொல்லிகளுக்குத்தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறது. ஆனால் அதை உணவாகக் கொள்ளும் உயிரினங்கள், எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் அவைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இதனால் உணவுச் சங்கிலியில் ஒரு சில கண்ணிகள் அறுபடுகின்றன.

பூச்சிக் கொல்லிகள் இயற்கையான "உயிரியல் தடுப்புகளை அழித்துவிடுவதால், புதிய பூச்சியினங்கள் உருவாகின்றன. ஒரு பூச்சியினத்தைத் தின்று வாழும் ஆபத்தில்லாத பூச்சியினங்கள் பூச்சிக்கொல்லிகளால் அழிக்கப்படுவதால், தொல்லை தரும் பூச்சியினங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவு பெருகிவிடுகின்றன.

செயற்கை உரங்களைப்போலவே, பூச்சிக் கொல்லிகளும் விவசாயிகளின் வேதியல் சார்புத் தன்மையை அதிகமாக்குகிறது. இது சூழலமைப்பைப் பாதிப்பதோடு மட்டுமல்லாது. உணவுச் சங்கிலிகள் மூலமாக மனித உடம்பில் கலந்துவிடுகின்றன. பூச்சிக்கொல்லியான டிடிடி (DDT) தாய்ப்பாலில் கலந்து இருப்பதாகச் சமீபத்திய ஆய்வுகள் நிரூபித்து உள்ளன.

பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளில் டிடிடி (DDT) தடை செய்யப்பட்டு உள்ளது. ஆனாலும் அதன் ஒட்டு மொத்த உபயோகம் தினமும் அதிகரித்து வருகிறது. அதனுடைய விளைவுகள் காற்று மற்றும் நீர் மூலமாக உலகெங்கும் பரவி வருகிறது.

-"சூழலியல் - ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து—
வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்,
6, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை-2





# மாதுளை மரம்

**- திருமலை நடராசன்**

மாதுளை மரம், பிஞ்சும், காயும், பழமும், மரப்பட்டையும், வேரின் பட்டையும் மருத்துவப் பயனுடையவை.

### பேதி நிற்க-பிஞ்சு

*மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்*
*சலக்கழிச்சல் சோரியாற் சாரும்-பலகழிச்சல்*
*மாறும் புளிப்பான மாதுளம் பிஞ்சையுண்ண*
*ஆறுமுகன் மாதே அறி!.*

*- அகத்தியர் குணபாடம்.*

பூ உதிராத மாதுளம் பிஞ்சை அரைத்து தயிரில் கலக்கி உட்கொள்ள பேதி நிற்கும். மூன்று பிஞ்சு, இருநூறு கிராம் தயிர். இரண்டு வேளைகள்.

### வயிற்றுப் புண் குணமாக

விதை முற்றாத காயை அரைத்து இளநீர் விட்டுப் பிசைந்து அடை போல் தட்டி இரண்டு மணிநேரம் நிழலில் வைத்திருந்து, இரண்டு தேக்கரண்டி அளவு இருநூறு கிராம் தயிரில் குழைத்து வெறும் வயிற்றில் உண்ணவும்.

### வயிறு தொடர்பான நோய்களுக்கு மாதுளம் பூ

*வாந்திபித்த தோடமொடு மாறாக் கடுப்பலைஞ்*
*சேர்ந்து நின்ற மூலரத்தந்*
*தீர்க்குங்காண்-மாந்தளிர்க்கை*
*மாதே! யிரத்தபுஷ்டி வல்லபலன் உண்டாக்கும்*
*பூதலத்துள் மாதுளையின் பூ.*

*- அகத்தியர் குணபாடம்.*

மாதுளம் பூவை பாலில் போட்டுக் கொதிக்க வைத்து, பூ வெந்ததும் எடுத்துவிட்டு ஆறவிட்டு, பாலில் சிறிது தேன்விட்டு, காலையில் வெறும் வயிற்றில் அருந்தவும். தொடர்ந்து எட்டு நாட்களுக்கு மட்டும். இம் மருந்துண்ணும் நாட்களில் காரப்பண்டங்கள் கிழங்குளை நீக்கவும்.

### உடல் வலுவாக

மாதுளம் பூவை நிழலில் உலர்த்தி இடித்துக் கொள்ளவும். காலை உணவு முடித்து அரைத் தேக்கரண்டித் தூளை உட்கொண்டு சிறிது வெந்நீர் அருந்தலாம். தொடர்ந்து உட்கொண்டு வர உடல் நலமும் வலுவுமடையும்.

### இரத்த வாந்திக்கு மாதுளம்பூ

ஐம்பது கிராம் மாதுளம் பூவை முந்நூறு மில்லி லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி, சிறு தீயாக எரித்து பாதி சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு அருந்த, வாந்தி, இரத்த வாந்தி நிற்கும். மூன்று வேளைகள்.

### இரத்த விருத்திக்கு மாதுளம் பூ

காலையில் நான்கு மாதுளம் பூவைத் தின்று சிறிது பால் அருந்தவ்ும். தொடர்ந்து நாற்பது நாட்கள் உட்கொண்டு வர இரத்தம் சுத்தமாவதோடு, விருத்தியுமேற்படும்.

### கழிச்சல் நிற்க மாதுளம் பிஞ்சுக் குடிநீர்

*மாதுளங் கடம்பு புன்கின்*
*வாய்த்த வேர் திப்பிலியத்தித்*
*தீதறுங் கொழுந்து சுக்கு*
*திரி பலை விரும்பிக் கூட்டி*
*நீதியா யிரண்டு நாழி*
*நீருழக் காக்கிக் கொண்டால்*
*சுரதினை முலையி னாளே*
*சுரமதி சாரம் போமே.*

*- அகத்தியர் குணபாடம்.*

*முக்மாதுளைப் பிஞ்சதிவிடயம் முத்தக்காசு*
*பெருமரத்தோர்*
*தகைசேர் சுக்கு விளங்காயின் சதையோ*
*ரொன்று*
*கழஞ்சிரண்டு*
*வகையாய்க் கூட்டியிருந்தாழி யுழக்காய்க்*
*கா்ய்ச்சிப் போதருந்த*
*பகையாய் வருமதிசார சுரம் போகும் பாரிற்*
*பாரீரே!*

மாதுளம் பிஞ்சு ஐந்து கிராம், அதிவிடயம், முத்தக்காசு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய்த்

தோல் இவைகளை ஐந்தைந்து கிராம் எடை எடுத்து எல்லாவற்றையும் ஒன்றிரண்டாகத் தட்டி ஒரு மண்பானையில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு மூடி சிறு தீயாக எரித்து இருநூற்றைம்பது மி.லிட்டர் அளவுக்குச் சுண்டியதும், இறக்கி ஆறவிட்டு, இரண்டு பங்காக்கி காலை வெறும் வயிற்றிலும், மாலை ஆறு மணி அளவிலும் பருகவும். மூன்று நாட்கள். மூன்று நாட்களும் மருந்தைப் புதிதாக செய்து உட்கொண்டு வர, தீராக் கழிச்சல் நிற்கும். மருந்துண்ணும் நாட்களில் கிழங்குகள், கடலைகள், வாழைக்காய் உட்கொள்ளக்கூடாது.

**கழிச்சல் நிற்க மாதுளம் பிஞ்சுக் குடிநீர்**

மாதுளம் பிஞ்சு ஐந்து கிராம். ஆலமரத்துப்பட்டை ஐந்து கிராம், மாமரத்துப் பட்டை ஐந்து கிராம், வெந்தயம் ஐந்து கிராம், சீரகம் ஐந்து கிராம், பட்டைகளைக் காய்ந்த பகுதியை நீக்கி, பச்சையாக எடுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து மண்பானையில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் ஊற்றி மூடி சிறுதீயாக எரித்து கால் லிட்டர் அளவுக்குச் சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு இரண்டு பங்காக்கி, காலை, மாலை வெறும் வயிற்றில் உட்கொள்ளவும். மூன்று நாட்கள், ஒவ்வொரு நாளும் புதிதாக மருந்தைச் செய்துகொள்ளவும். கிழங்குகள், கடலைகள், வாழைக்காய் இவைகளை நீக்கவும்.

**சீதபேதிக்கு மாதுளம் பிஞ்சு**

இருபத்தைந்து கிராம் மாதுளம் பிஞ்சை இடித்து இரண்டு லிட்டர் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பங்காக எரித்து இறக்கி, ஆறவிட்டு - காலை, மாலை இரண்டு வேளையாக, மூன்று நாட்கள் தொடர்ந்து உட்கொண்டால் சீதபேதி குணமாகும்.

கடலைகள், கிழங்குகள், வாழைக்காய் இவைகளை உண்ணக்கூடாது.

**வாந்தி நிற்க மாதுளம் பிஞ்சு**

ஒரு பிஞ்சை நான்காக வெட்டி, இரண்டு மணி நேரத்துக்கு ஒரு துண்டாக மென்று விழுங்கினால் வாந்தி நிற்கும்.

**உடல் நலத்திற்கு மாதுளம் பழச்சாறு**

*சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சற்றியா சஞ்சர்த்தி*
*யங்கையதி தாகஉம்மைச் சாருமோ-கங்கை*
*இருந்தாடி மக்கட் கிரத்தலைச் செய்நோய்போம்*
*இருந்தாடி மக்கனிவட் கெண.*
*வாய் நீருறகசப்பு வாந்திவிக்கல் மந்தமிகக்*
*காய்வெப்பம் நெஞ்செரிவு காதடைப்பும்-ஓயா*
*மயக்க முந் தீர்ந்துவிடும் மாதுளம் பழத்தால்*
*தயக்க மறத்தே மொழியே! சாற்று.*
*வெடித்துவிழ் பழத்தை வாங்கி*
*மெல்லிய சீலைகட்டி*
*கடுக்கெனப் பிழிந்து கொண்டு*
*கண்டுசர்க் கரையுங் கூட்டி*
*குடித்திட வெப்பு மாறுங்*
*குளிர்ந்திடும் அங்க மெல்லாம்*
*வடித்தநன் மொழியினாளே!*
*மாதுளம் பழத்தினாலே.*

*- தேரையர் குணபாடம்.*

உடல்நலம் பெற மாதுளம் பழச்சாறு மிகவும் சிறந்ததாகும். மாதுளம் பழச்சாற்றை முறையாக அருந்த வேண்டும்.

மாதுளம் பழ விதைகளை மெல்லிய துணியில் வைத்துப் பிழிந்து நான்கு தேக்கரண்டிச் சாறுக்கு அரைத் தேக்கரண்டித் தேனைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள வேண்டும்.

அல்லது காலை உணவு முடித்து முப்பது நிமிடங்கள் கழித்தும் அருந்தலாம். உணவுக்கு முன் அருந்தினால் பசி ஏற்படும். உணவுக்குப் பின்அருந்தினால் உணவு எளிதில் சீரணிக்கும்.

**குழந்தைகளுக்கு (ஒரு வயதிற்கு)**

குழந்தைகளுக்கு அரைத் தேக்கரண்டிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி வெந்நீர்க் கலந்து கொடுக்க வேண்டும்.

மாலை ஆறு மணிக்கு மேல் மாதுளம் பழச்சாற்றை அருந்துவது பலருக்கு ஒத்து வருவதில்லை.

**தூரக் கோளாறுகளுக்கு**

விதை இல்லாத மாதுளம் பழத்தை உணவுக்கு முன் உட்கொள்ளலாம். மூன்று தேக்கரண்டிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேனைக் கலந்தும் அருந்தி வரலாம்.

இம்மருந்தை உட்கொள்ளும் போது, எண்ணெய்ப் பண்டங்கள் கிழங்குகள் உண்பதைத் தவிர்ப்பது மிகவும் நல்லதாகும்.

பெண்களுக்கு தூரக் கோளாறும் நீங்கும். தூரத்திற்கு முன் ஏற்படும் வயிற்று வலியும் குணமடையும்.

**வயிறு தொடர்பான நோய்களுக்கு**
**மாதுளை மரத்தோல்**

மாதுளை மரத்தைச் சீவி எடுத்து நூறு கிராம் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி கொதிக்க வைத்து முக்கால் பகுதி சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு காலை உணவுக்கு முன் பாதியும், மாலை ஆறுமணி அளவில் மீதியைப் பருகி வர வயிறு தொடர்பான நோய்கள் நீங்குவதுடன், பேதி நிற்கும், தோலில் ஏற்படும் அரிப்பும் குணமடையும்.



தொடர்ந்து இருபது நாட்களுக்கு உட்கொண்டால், வயிற்றுப்புண் குணமடையும்.

**மூலநோய்க்கு மாதுளை மரத்தின்**
**வேரின் பட்டை**

*மாதுளை வேர் பிஞ்சினுக்கு வாந்தியதி*
*சாரம்போம்*
*தாதுவுமாம் அக்கனிக்குத்*
*தாகம்போம்-சரதைநிகர்*
*வண்ண முலையாய்! இலைகாய்மா*
*மலர்களுக்கு சொன்னவையெலாம் போகுஞ்*
*சொல்.*

*- அகத்தியர் குணபாடம்.*

மரத்தின் வேரின் பட்டை நூறு கிராம் இடித்து ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு மூடி சிறு தீயாக எரித்து முக்காலும் சுண்டியதும், இறக்கி ஒரு தேக்கரண்டி சோற்றுப்பைப் போட்டு மூடி ஆறவிட்டு, இரண்டு பங்காக்கி காலை, மாலை உணவுக்கு முன் அருந்தி வர, தள்ளு மூலம், நீர்மூலம், இரத்த மூல நோயும் குணமடையும்.

இம்மருந்தை உட்கொள்ளும் நாட்களில், கிழங்குகள், வாழைக்காய், கடலைகள் மற்றும் எண்ணெய்ப் பண்டங்களைக் கண்டிப்பாக நீக்கவும்.

குறைந்தது இருபது நாட்களுக்குத் தொடர்ந்து மருந்தை அருந்தி வரவேண்டும்.

**விரை**

*சுக்கிலத்தைக் கட்டுமந்தச் சுக்கிலதோ*
*டம்போக்கும்*
*அக்கனமே சுக்கடுப்பை*
*ஆற்றுங்காண்-எக்காலுங்*
*கோதுளத் தெண்ணாத மலர்க் கொம்பனைய*
*மாதே! செம்மாதுளத்தின் பீசவலி.*

*- அகத்தியர் குணபாடம்.*

**மாதுளம் பழம்**

| | |
|---|---|
| உண்ணத் தக்கது | 68% |
| ஈரம் | 78.0 கிராம் |
| புரதம் | 1.6 " |
| கொழுப்பு | 0.1 " |
| தாது உப்புக்கள் | 0.7 " |
| நார் | 5.1 " |
| சர்க்கரைச் சத்து | 14.5 " |
| சக்தி | 65 கலோரி |
| சுண்ணாம்புச் சத்து | 10 மி.கி. |
| பாஸ்பரஸ் | 70 " |
| இரும்பு | 0.3 " |
| மாவுப் பொருள் | – |
| தையமின் | 0.6 " |
| ரிபோஃபிளேவின் | 0.1 " |
| நியாசின் | 0.3 " |
| வைட்டமின்-சி | 16 " |



***மாதுளம் பழம்***

உமிழ்நீரைச் சுரக்க வைக்கும்; வாய் நாற்றத்தைப் போக்கும்; சீரணத்தை ஒழுங்காக்கும்; எளிதில் சீரணிக்கும்; வயிற்றுப் புண்ணை நீக்கும்; மூத்திர எரிவை நீக்கும்; அன்னத்தோஷத்தை நீக்கும்; பேதியை நிறுத்தும்; இருமலை ஒழிக்கும்; மார்பு வலியை நீக்கும்; வயிற்றுக் கனத்தை நீக்கும்; இருதயத்திற்குப் பலம் தரும்; தொண்டைக் கட்டுதலை நீக்கும்; வியர்வை நாற்றத்தை நீக்கும்; தோலை மென்மையாக்கும்; ஆண்மையைப் பெருக்கும்; பெண்மை அதிகரிக்கும்; பெண்கள் மாதவிடாய் நாட்களிலும் உண்ணலாம்; பெரும்பாடு குறையும்; மூல எரிவை நீக்கும்; நீரிழிவைக் குணமாக்கும்; ஆஸ்த்துமாவை நீக்கும்; மாரடைப்பை நீக்கும்; வாய்வுப் பிடிப்பு ஏற்படாது; விந்துவைக் கட்டும்; முகம் அழகாகும்; சீதபேதியைக் குணமாக்கும்; கோழையை அகற்றும்; தொண்டைக் கம்மல் நீக்கும்; இரத்தத்தைச் சுத்தியாக்கும்; இரத்த சோகையை நீக்கும்; பாண்டு ரோகத்தைத் தணிக்கும்; பித்தப் பாண்டு நோயைக் குணமாக்கும்; பெரு வயிற்றைக் குறைக்கும்.

மாதுளம் பழத்தைக் கண்ட கண்ட நேரங்களில் உண்ணக்கூடாது. அப்படி உண்டால் தனிப்படப் பெரிய பலன் கிடைக்காது.

***-'மரங்களின் மருத்துவப் பயன்கள்'***
*என்ற நூலிலிருந்து*
*வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்,*
*14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,*
*மயிலாப்பூர், சென்னை-4.*

# மரமொழிகள்!



- ★ தனிமரம் தோப்பாகாது!
- ★ மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்!
- ★ வெயிலின் அருமை நிழலில் தெரியும்!
- ★ காடு செழித்தால் நாடு செழிக்கும்!
- ★ தன்னை வெட்டும் கோடாரிக்குத் தானே பிடியாகும் மரம்போல!
- ★ பழுத்த மரத்தில்தான் கல்லடி விழும்!
- ★ ஒதியமரம் பெருத்தாலும் உத்திரத்துக்காகாது!
- ★ எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன!
- ★ பனைமரத்தின் கீழேயிருந்து பாலைக் குடித்தாலும் கள்தான்!
- ★ ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி

## குறளில் மரங்கள்

✇ பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

✇ நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்த தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

✇ மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

✇ உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலர்
மரம்மக்கள் ஆதலே வேறு.

✇ மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழல்
காடும் உடையது அரண்.

✇ கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

✇ இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

✇ அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

✇ நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.

✇ நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

✇ இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.





# துன்ப சிநேகிதன்

- கவிஞர் கண்ணதாசன்



ஒரு சோலைக்கு இலையுதிர் காலத்தில் மட்டுமே ஒரு குயில் வந்து கொண்டிருந்தது.

"சோலை இழந்த இந்தக் காலத்தில் ஏன் வருகிறாய், குயிலே?" என்று ஒரு மரம் கேட்டது.

"நான் வசந்த காலத்தை என் நண்பர்களுக்காக ஒதுக்கிவிடுகிறேன்".

"என் பகைவர்கள் கோபம் தணிந்ததற்காகக் கோடைக் காலத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.

எவரும் தேடா இலையுதிர் காலத்தை நான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், ஏ! மரங்களே! உங்கள் துன்பத்தை நான் பகிர்ந்து கொள்கிறேன். தொல்லையில்லாத தனிமையையும் நான் அனுபவிக்கிறேன்.

இருக்கும்போது எல்லாரும் வருவார்கள்; இல்லாதபோது யார் வருவார்கள்?"

ஒரு மரம் சொன்னது :

"கனி கொய்யும் காலத்தில் ஒருநாள் நீ வரவேண்டும். உனக்காகப் பசுமையோடு காத்திருப்போம்".

அதன் வேண்டுகோளுக்கு இணங்கக் கனி கொய்யும் காலத்தில் குயில் வந்தது.

சோலை முழுவதையும் பறவைகள் சூழ்ந்து கொண்டிருந்தன.

குயிலைப் பார்த்ததும், "யாரோ அந்நியன் வருகிறான்" என்று ஒரு பறவை சத்தம் போட்டது.

எல்லாப் பறவைகளும் தாக்கத் தொடங்கின.

தங்கள் நண்பனுக்கு ஏதும் செய்ய முடியாமல் மரங்கள் கண்ணீர் வடித்தன.

''குப்'' பென்று குயில் வானத்தில் பறந்தது. பறந்தபடியே சொன்னது :

''பார்த்தீர்களா, வாழும் காலத்தில்கூட நாம் துன்பத்திலேதான் கலந்துகொள்ளுகிறோம்! வழக்கம் போல, நான் இலையுதிர் காலத்திலேயே வருகிறேன்!"

- 'கவிஞர் கண்ணதாசன்
குட்டிக் கதைகள்' தொகுப்பிலிருந்து
வெளியீடு : வானதி பதிப்பகம்,
சென்னை-17.

# ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் ஒப்பற்ற உதவிகள் !

**ஊ**னமுற்றோருக்கு உறுதுணை புரிதலில் தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது; அவர்களின் இடுக்கண் களைவதில், நம்முடைய அரசு, உடுக்கை இழந்தவன் கைபோல உடனுக்குடன் உதவி வருவதை நாடறியும்.

இந்த ஓராண்டு கால ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு அரசு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலம் ஆற்றப்பட்டு வரும் அரிய பணிகள் விவரம் அவ்வுதவியினைப் பெற யாரை அணுக வேண்டும் என்கிற விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

<u>திட்டத்தின் பெயர்</u> : <u>சிறப்புக்கல்வி</u>

<u>பெறும் பயன்கள்</u> : சிறப்புக்கல்வி, இலவச உணவு, தங்கும் விடுதி, இலவசச்சீருடை - ஆண்டுக்கு 2 முறை



<u>தகுதிகள்/ நிபந்தனைகள்</u>: 5 வயதிற்கு மேற்பட்ட ஊனமுற்ற சிறுவர், சிறுமியர்

<u>அணுக வேண்டிய அலுவலர்</u> : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>புத்தகங்கள் வாங்க உதவி(1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை)</u>

பெ.ப : புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வாங்க உதவித்தொகை ரூ.25லிருந்து ரூ.100 வரை (ஓராண்டிற்கு ஒருமுறை)

த/நி : 1ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற சிறுவர் சிறுமிகள் (பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும்)

★ ———————— ★

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>கல்வி உதவித்தொகை (9ஆம் வகுப்பும் அதற்கு மேலும்)</u>

பெ.ப. : ரூ.85லிருந்து ரூ.240 வரை

த/நி : 9ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ மாணவியருக்கு மற்றும் தொழில் பயிற்சி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவியர்கள் (பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.24,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும்)

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>பேசும் திறன் இழந்த காது கேளாத குழந்தைகளுக்கான முன்பருவக் கல்வி</u>

பெ.ப. : இலவசச் சிறப்புக்கல்வி, இலவசத் தங்கும் விடுதி வசதி மற்றும் உணவு

த/நி 3 வயதிலிருந்து 5 வயதிற்கு மேற்பட்ட பேசும் திறன் இழந்த காது கேளாத சிறுவர் சிறுமியர்

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உதவி</u>

பெ.ப. பார்வையற்ற மாணவ, மாணவிகள் அரசு பொதுத்தேர்வுகளில் வினாக்களுக்கு வாய் மூலம் அளிக்கும் பதிலினை அவ்வாறே எழுதும் உதவியாளருக்கு ஒரு தாளுக்கு ரூ.15 வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

த/நி பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள்.

- மைதிலி கே. ராஜேந்திரன்
இயக்குநர்,
ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்.



அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>"பிரெய்லி" புத்தகங்கள்</u>

பெ.ப. : அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ-மாணவிகளுக்கு இலவசமான "பிரெய்லி" புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

த/நி : பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ-மாணவிகள்

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்

தி.பெ. : <u>பார்வையற்றோருக்கான தொழிற் பயிற்சி(ஆண்கள்)</u>

பெ.ப. : இலவச விடுதி, உணவு வசதியுடன் ஆண்டிற்கு இரண்டு ஜதை சீருடை இலவசத் தொழிற்பயிற்சி(கீழ்க்கண்ட பிரிவுகளில்)

(அ) பொருத்துநர் (ம) அடிப்படை இயந்திரம் இயக்குநர் (1 ஆண்டு காலம்)

(ஆ) புத்தகம் கட்டுபவர் (6 மாத காலம்)

(இ) மின் கம்பி சுற்றுபவர் (1 ஆண்டு காலம்)

த/நி : 8ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த பார்வையற்ற நபர்கள் 18 வயதுக்குமேல் இருக்கவேண்டும்.

அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்(அ) மேலாளர், பார்வையற்றோர்க்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், பூவிருந்த வல்லி, சென்னை-56.

தி.பெ : <u>பார்வையற்ற பெண்களுக்கான தொழிற் பயிற்சி</u>

இலவச விடுதி, உணவு வசதியுடன் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் பார்வையற்ற பெண்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(அ) கைத்தறி நெசவு (6 மாத காலம்)

(ஆ) சாக்கட்டி செய்தல் (6 மாத காலம்)

த/நி : பார்வையற்ற ஆதரவற்ற பெண்கள் 18 வயதிலிருந்து 40 வயதுக்குட் பட்டவர்களாக இருக்கவேண்டும். (தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை ஜாதியினருக்கு 45 வயதுவரை)

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர் (அ) கண்காணிப்பாளர் பாரவையற்ற பெண்களுக்குத் தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி, சென்னை-56.

தி.பெ. : <u>பேசும் திறனிழந்த காது கேளாதவர்களுக்குத் தொழிற் பயிற்சி</u>

பெ.ப. : இலவசத் தொழிற் கல்வி 'பொருத்துநர்' பிரிவில் பயிற்சிக்காலம் 2 ஆண்டுகள். மாத உதவித்தொகை ரூ.150.

த/நி : 18 வயதிற்குமேற்பட்ட பேசும் திறனிழந்த காது கேளாதவர்கள் 8ஆம் வகுப்பிற்கு மேல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் (அ) முதல்வர், அரசு தொழிற் பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32.



தி.பெ. : <u>கை, கால் ஊனமுற்ற பெண்களுக்கான பயிற்சி</u>

பெ.ப. : அழகுக்கலை மற்றும் உடல்வளக் கலையில் கை, கால் ஊனமுற்ற பெண்களுக்கு இலவசமான பட்டயப் பயிற்சி அளித்தல்

த/நி : 18 வயதிற்கு மேற்பட்ட கை, கால் ஊனமுற்ற பெண்கள்

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் (அ) இயக்குநர், அழகு மற்றும் உடல் வள பயிற்சிக்கூடம் எஸ்.டி.டிரஸ்ட் தென்காசி வட்டம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.



**வேலை வாய்ப்பு**

திபெ : <u>இட ஒதுக்கீடு</u>

பெ.ப : அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் எழும் காலியிடங்களில் 3% இடங்களை ஊனமுற்றோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3% இடங்களில் 1% இடங்கள் பார்வையற்றோருக்காகவும், 1% இடங்கள் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்காகவும், 1% இடங்கள் கை, கால் ஊனமுற்றோருக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

த/நி : தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணை வாரியம், தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம் (ம) வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றினால் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்குத் தேவையான கல்வித் தகுதிகள், வயது பெற்றிருத்தல் வேண்டும்.

அ-அ : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம், சென்னை-2.

உறுப்பினர்-செயலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம், கல்லூரி சாலை, சென்னை-6.

உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ : <u>கல்வி நிறுவனங்களில் பார்வையற்றோருக்கான இடஒதுக்கீடு</u>

பெ.ப : கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியப் பணியிடங்களில், 2% பணியிடங்களைப் பார்வையற்றோரைக் கொண்டே நிரப்பப்பட வேண்டும்.

த/நி : ஆசிரியர் பணிக்குத் தேவையான கல்வித் தகுதி பெற்றுள்ள பார்வையற்ற நபர்கள் வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அ-அ : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ : <u>கல்வி நிறுவனங்களில், பேசும் திறன் இழந்த-காது கேளாதவர்களுக்கு இட ஒதுக்கீடு.</u>

பெ.ப கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியப் பணியில்லாத பணியிடங்களில் 2% பணியிடங்களைப் பேசும் திறன் இழந்த காது கேளாதோரைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

த/நி : ஆசிரியர் பணியில்லாத பணியிடங்களுக்குத் தேவையான கல்வித் தகுதி பெற்றுள்ள பேசும் திறன் இழந்த காது கேளாத நபர்கள் வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அ-அ : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ : <u>சிறப்புப் பழகுநர் பயிற்சி.</u>

பெ.ப : பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையம் பூவிருந்த வல்லியில் பயின்று தேர்ச்சி பெற்ற பார்வையற்றோருக்கும், அரசு தொழிற் பயிற்சி மையம், கிண்டியில் பயிற்சி பெற்றுத்தேறிய-பேசும் திறன் இழந்த காதுகேளாதோருக்கும் அரசு சார்பு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களில் சிறப்புப் பழகுநர் பயிற்சி ஓராண்டிற்கு அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சியின்போது மாதம் ஒன்றுக்கு ரூ.400/ வீதம் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படும்.

சிறப்புப்பழகுநர் பயிற்சிக்குப் பின்பு-பயிற்சி பெற்று, தொழில் நிறுவனத்திலேயே பணியிடம் காலி ஏற்படும்போது பணிவழங்கப்படும்.

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லி, பயிற்சி பெற்ற பார்வையற்றர்கள் அல்லது அரசு தொழிற் பயிற்சி நிலையம், கிண்டியில் பயின்ற பேசும் திறன்இழந்த காது கேளாதோரும் பயிற்சியில் தேறியிருக்க வேண்டும்.

அ-அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : <u>பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பு அற்றோர் நிவாரணத் தொகை</u>

பெ.ப. : பார்வையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

(அ) பள்ளியிறுதி வகுப்பிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.150.

(ஆ) புகுமுக வகுப்பு & மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200.

(இ) பட்டதாரிகள் மற்றும் அதற்குமேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் ரூ.250.

த/நி : (அ) பார்வையற்றவராக இருக்க வேண்டும். வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டிற்குமேல் இருக்க வேண்டும்.

(ஆ) பார்வையற்றவரின் வயது 18க்கு மேல் 40க்குள் இருத்தல் வேண்டும்.

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலை ஜாதியினர் வயது 45 வரை

அ-அ. : உதவி இயக்குநர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்.

தி.பெ. : <u>சுய வேலைவாய்ப்பு</u>

பெ.ப. : கல்வித் தகுதி குறைவாக உள்ளவர்கள் மற்றும் சுய தொழில் புரிய விரும்பும் ஊனமுற்ற நபர்களுக்கு, தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வங்கிக் கடன் அளிக்கப்பரிந்துரை செய்யப்படும்.

வங்கிக் கடன் அளித்த பிறகு அரசு மான்யமாகக் கடன் தொகையில் 3இல் 1 பங்கு அல்லது ரூ.1000 இதில் எது குறைவோ அது அளிக்கப்படும்.

த/நி : ஊனமுற்ற மனுதாரரின் வயது 18க்கு மேல் 45 வயதுவரை இருக்க வேண்டும். வேறு எந்த நிரந்தரப்பணியிலோ இருக்கக்கூடாது.

அ-அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

**உதவி உபகரணங்கள்**

தி.பெ. : <u>மூன்று சக்கர சைக்கிள்</u>

பெ.ப. : இரண்டு கால்களும் இல்லாத ஊனமுற்றோருக்கு இலவசமாக 3 சக்கர சைக்கிள் வழங்கப்படுகிறது.

த/நி : மனுதாரரின் வயது 10க்கு மேல் இருத்தல் வேண்டும். இரண்டு கால்களும் ஊனம் அடைந்திருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.30,000க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அ-அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>சக்கர நாற்காலி</u>

பெ.ப. : தான் வசிக்கும் இருப்பிடத்திலேயே சென்று வர விரும்பும், கை, கால் ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக சக்கர நாற்காலி வழங்கப்படுகிறது.

த/நி : கை, கால் ஆகிய உறுப்புக்கள் செயலிழந்து இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். தக்க மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.



அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>காது கேட்கும் கருவி</u>

பெ.ப. : இலவசமாக, காது கேட்கும் கருவி பேசும் திறன் இழந்து காது கேட்காதவர்களுக்கு வழங்கப்படுகிறது.

த/நி : காது கேட்கும் திறன் குறைந்து இருக்க வேண்டும். மருத்துவ நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு, அதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும்.

அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>கறுப்புக் கண்ணாடி</u>

பெ.ப. : பார்வையற்றோருக்கு இலவசமாக ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலமாகக் கறுப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

த/நி : பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>சூரிய சக்தியினால் இயங்கும் பாட்டரி</u>

பெ.ப. : காது கேளாதோர் உபயோகப்படுத்தும் செவித்துளைக் கருவியில் உபயோகப் படுத்த சூரிய சக்தியினால் இயங்கும் பாட்டரி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

த/நி : செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவிகள் மற்றும் இதர செவித்திறன் குறையுடையோர்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

**இளம்பிள்ளைவாத மறுவாழ்வுத்திட்டம்**

தி.பெ. : <u>அறுவை சிகிச்சை</u>

பெ.ப. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட உறுப்பை அறுவை சிகிச்சையின் மூலம் சரி செய்து, ஊனத்தின் கடுமை குறைக்கப்படுகிறது. இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவ சிகிச்சையின்போது பயனாளியுடன் இருக்கும் குடும்ப நபருக்கான உணவுக்கான செலவிற்குப்



பணம் அளிக்கப்படுகிறது. மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான மருத்துவப் பொருட்கள் இலவசமாக இத்துறையால் அளிக்கப்படுகிறது.

த/நி : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்டவராக இருக்கவேண்டும். இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : தசைப் பயிற்சி

பெ.ப. : மருத்துவ சிகிச்சைக்குப் பின்போ இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட அறுவை சிகிச்சை தேவைப் படாதவருக்கோ தசைப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் நன்கு நடந்து செயல்புரிய உதவப்படுகிறது.

த/நி : அறுவை சிகிச்சை பெற்றவராக இருத்தல் வேண்டும். தசைப் பயிற்சியின் மூலம் அவரது நடக்கும் திறன், இயக்கத் திறன் மேம்படும் வகையில் இருக்கவேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>காலிஃபர், அக்குள் குச்சி, 3 சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி</u>

பெ.ப. : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உபயோகப்படும் காலிஃபர், 3 சக்கர சைக்கிள் மற்றும் சக்கர நாற்காலி போன்ற உதவி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.



த/நி : இளம்பிள்ளை வாத மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளாக இருத்தல் வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>பள்ளியில் சேர்க்கை, கல்வி உதவித் தொகை, தொழிற் பயிற்சி, சுய வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பு, இடை மாறுபாட்டுப் பள்ளியில் சேர்க்கை, முதியோர் ஒய்வூதியம் (ஊனமுற்றோருக்கானது) கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித்தொகை</u>

பெ.ப. : இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களில் தேவைக்கேற்றவாறு பள்ளிகளில் சேர்க்கைக்கும், பள்ளியில் படிப்போருக்கும் கல்வி உதவித் தொகையும் பள்ளிப் படிப்பு முடித்தவர்களுக்குத் தொழிற் பயிற்சியில் சேர உதவியும், வயது அதிகமாக உள்ளோருக்கு ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் முதியோர் ஒய்வூதியமும், கடுமையான ஊனத்தினால் பாதிக்கப்பட்டோருக்குப் பராமரிப்பு உதவித்தொகையாக மாதா மாதம் பெறுவதற்கும் தக்க வகையில் உதவி செய்யப்பட்டு வருகிறது.

த/நி : இளம்பிள்ளை வாத மறுவாழ்வுத் திட்டம் அமலாக்கவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

**இதர உதவிகள்**




தி.பெ. : <u>பார்வையற்றோருக்கு ரூ.10,000 திருமண உதவி</u>.

பெ.ப. : தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.7000மும், திருமணச் செலவிற்காக ரூ.3000மும் ஆக மொத்தம் ரூ.10,000 திருமண உதவியாக அளிக்கப்படுகிறது.

த/நி : பார்வையுள்ளவர் பார்வையற்றவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். தம்பதியரில் ஒவ்வொருவரின் வயதும் 18 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ. : <u>கடும் ஊனமுற்றோருக்குப் பராமரிப்பு உதவித்தொகை</u>

பெ.ப. : மாதமொன்றுக்கு ரூ.150 வீதம் கடுமையாக ஊனமுற்றோருக்குப் பராமரிப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

த/நி : ஊனத்தின் சதவிகிதம் 75%க்கு மேற்பட்டிருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருக்கவேண்டும். அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அ.அ. : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : <u>இலவசப் பேருந்து பயணச் சலுகை</u>

அனைத்து உடல் ஊனமுற்றோரும் வயது வரம்பின்றி 100 கி.மீ.தூரம் வரை சென்று வர அனுமதி (திருவள்ளுவர் மற்றும் ராஜீவ் காந்தி போக்குவரத்துக் கழகம் தவிர)

அரசு போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் பார்வையற்றோரும் இதர ஊனமுற்றோரும் இலவசமாகப் பயணம் செய்ய ஆண்டிற்கொருமுறை இருவழி பயணத்திற்கு இலவசப்பயணம் சலுகை அளிக்கப்படுகிறது.
(தமிழ் நாட்டிற்குள் மட்டும் பயணம் செய்ய)

பெ.ப. : பார்வையற்றோர் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்

இலவசமாகச் சென்று வர இலவசப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது.

மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டோருக்கு:

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி/பயிற்சி பெற்றுவரும் மன வளர்ச்சி குன்றியோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் ஆகியோர் உதவியாளர் ஒருவருடன் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யச் சலுகை வழங்கப்படுகிறது.

பேசும் திறன் இழந்த காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு இலவசப் பயணச் சலுகை:

பேசும் திறன் இழந்த காது கேளாதோர்களுக்கும், கை, கால் ஊனமுற்றோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப்பேருந்துகளில் பள்ளி / கல்லூரி / பயிற்சிக்கூடம் / மருத்துவமனை / பணியிடம் ஆகிய இடங்களுக்கு இலவசமாகச் சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

த/நி : பார்வையற்றவராக இருத்தல் வேண்டும்.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து கல்வி/பயிற்சி பெற்று வருவதற்கான சான்றிதழை அளிக்க வேண்டும்.

தன் இருப்பிடத்திலிருந்து செல்ல விரும்பும் பள்ளி/கல்லூரி/மருத்துவமனை/பயிற்சி மையம்/பணியிடம் ஆகியவற்றின் ஏதாவது ஒரு நிறுவனத்தின் தலைவரிடம் இருந்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்.

தி.பெ : <u>அரசுப் பணிக்கு வயது வரம்பு விதிவிலக்கு</u>

பெ.ப. : மாநில அரசுப் பணிகளைப் பொறுத்த வரை ஊனமுற்றோர் அரசுப் பணிகளில் நுழைய மற்றவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வயது வரம்பைவிடக் கூடுதலாக 10 ஆண்டுகள் தளர்த்தப்பட்டுள்ளது.




த/நி : ஊனமுற்றோர் தனது கல்வித் தகுதி மற்றும் ஊனத்தின் தன்மை குறித்து வேலை வாய்ப்புக் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம் மூலம் விளம்பரப்படுத்தப்படும் பணிகளுக்கு விண்ணப்பம் செய்து, தேர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும்.

அ.அ. : உதவி இயக்குநர்/மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (அ) செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம் (அ) உறுப்பினர் - செயலர் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணை வாரியம், சென்னை.

தி.பெ. : <u>பார்வையற்றோர் பொதுத் தேர்வுகள் எழுதக் கட்டண விலக்கு</u>

பெ.ப. : பத்தாம் வகுப்பு, மேல்நிலைத் தேர்வு மற்றும் பட்ட வகுப்புகளுக்கான பொதுத்தேர்வுகளுக்குக் கட்டவிருக்கும் கட்டணங்களில் இருந்து பார்வையற்றோருக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

த/நி : பார்வையற்றோர் பொதுத் தேர்வுகள் எழுதத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

அ.அ. : தலைமையாசிரியர் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள்/முதல்வர், கல்லூரி/பல்கலைக்கழகம்/அஞ்சல் வழி கல்வித்துறை நிலையம்



தி.பெ : <u>பார்வையற்றோர் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும்போது தேர்வுக் கட்டணங்களில் இருந்து விதிவிலக்கு</u>

பெ.ப : தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் விளம்பரப்படுத்தும் பணியிடங்களுக்குத் தகுதி வாய்ந்த பார்வையற்றோர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்கள் செலுத்தவேண்டிய தேர்வுக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுவருகிறது.

த/நி : தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளம்பரப்படுத்தும் பணிகளுக்கான கல்வித் தகுதி, வயது ஆகியன பெற்றிருக்கும் பார்வையற்ற நபர்கள்.

அ.அ : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை வாரியம், சென்னை-2.

தி.பெ : <u>போக்குவரத்துப் படி</u>

பெ.ப : மாநில அரசு, அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரியும் ஊனமுற்றோர் அனைவருக்கும் அவரவர் இருப்பிடங்களிலிருந்து அலுவலகம் சென்றுவர, போக்குவரத்துப்படியாக மாதமொன்றுக்கு ரூ.75 வீதம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

த/நி : ஊனத்தின் தன்மை குறித்த மருத்துவச் சான்றிதழைக் குடிமுரிமை மருத்துவ வல்லுநரிடமிருந்து பெற்றுச் சமர்பிக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும்.

அ.அ : சம்பந்தப்பட்ட துறையின் தலைவர்/நிர்வாக அலுவலர்



தி.பெ : <u>ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை</u>

பெ.ப : ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் வழங்கப்படும் வெவ்வேறு உதவிகளைப் பெறுவதற்காக அவ்வப்போது மருத்துவச் சான்றிதழ் பெறும் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டும் அடையாள அட்டையை ஊனமுற்றோர் பத்திரமாக வைத்திருக்கும்வண்ணம் நிலையான அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

த/நி : 40%க்கும் கூடுதலான ஊனத்தைப் பெற்றிருப்பவராக இருக்க வேண்டும்.

அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

தி.பெ. : <u>பெட்ரோல் மான்யம்</u>

பெ.ப : ஊனமுற்றோர் தமது சொந்தப் பெயரில் வைத்துள்ள இரண்டு/நான்கு சக்கர வாகனங்களுக்கு ஆகும் பெட்ரோல்/டீசல் செலவில் 50% மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது. 2 குதிரைச் சக்தி மற்றும் அதற்குக் குறைவாக சக்தி உள்ள வாகனங்களை வைத்திருப்பவர்களுக்கு அதிகபட்சமாக மாதமொன்றுக்கு 15 லிட்டர் பெட்ரோல் அல்லது டீசல், 2 குதிரைச் சக்திக்கு மேல் உள்ள வாகனங்களை வைத்திருக்கும் ஊனமுற்ற நபர்களுக்கு அதிகப்படசமாக மாதமொன்றுக்கு 25லி.பெட்ரோல் அல்லது டீசல் மான்யமாக வழங்கப்பட்டுவருகிறது.

த/நி : ஊனமுற்ற நபர் தனது பெயரில் வாகனத்தை வைத்திருக்க வேண்டும். பெட்ரோல் மான்யம் பெற விண்ணப்பிக்கும் ஊனமுற்ற நபரின் மாத வருமானம் ரூ.2500க்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் பெட்ரோல் மான்யம் பெறுவதற்கான விண்ணப்பத்தில் அனைத்து இணைப்புகளையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். பெட்ரோல்/டீசல் மான்யம் பெற விரும்பும் ஊனமுற்ற நபர்கள் தான் பணி புரியும் துறையிலிருந்து எந்தப் போக்குவரத்துப் படியோ, உதவியோ பெறாதவராக இருக்கவேண்டும்.

அ.அ : மாவட்ட மறுவாழ்வு அலுவலர் ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

ஆசிரியர் மடல்

# சுற்றுச் சூழலைச் சற்று சிந்திப்போம்!



இயற்கை எவ்வளவு அழகானது!
அதன் ஒவ்வொரு அசைவிலும்
ஒருநூறு அழகிய உச்சரிப்புகள்!

தென்றல் அதன் சுவாசக் காற்றென்றால்
புயல் அதுவிடும் பெருமூச்சு!

மொட்டாகி இருக்கும் செடி இதழ்கள்
கொட்டாவி விடுவதால் மலர்கின்றனவோ!

வேர் வேர்க்காவிட்டால்
கிளை பூவாய்ப் புன்னகைக்க முடியுமா?

அருவி அதன் போக்கில் விழுகிறது;
ஏகப்பட்ட மின்சாரத்தையும் வாரி வழங்கிக்கொண்டே!

கடல் அலைகளாய்க் கைநீட்டுகிறது;
பூமியின் கால்களை ஈரமாய் நனைத்துக்கொண்டே!

ஆற்றின் நடையை யாராவது மாற்றமுடியுமா?

காற்றுமண்டலத்தில் கரியமிலவாயு கச்சிதமாய் 0.03% கலந்திருக்கிறது -
அதில்கொஞ்சம் அதிகரித்தாலும்
பனிமலைகள் கரைய ஆரம்பிக்கின்றது;
கடல் கரையை நீளம் தாண்டி ஊருக்குள்
கண்ணாமூச்சி விளையாடிவிடுகிறது-

வனம் சேதப்படும் பொழுதெல்லாம் வளமான மண்ணை
வாரிக்கொண்டு போய்விடுகிறது!

ஒரு மி.மீ.உயரத்திற்கு மண் உருவாகவோ
ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுகிறது!

வரவேற்பறைகளில் மரங்களைப்
படங்களாய்ப் பார்க்கிற காலம் வருமுன்
விதைகளோடு விரைவோம்!




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23




